கருப்பொருள் அடிப்படையில்

# திருக்குர்ஆன் விரிவுரை

முஹம்மது அல்கஸ்ஸாலி

தமிழில்:
ஷாஹுல் ஹமீது (உமரீ)

தொகுதி 2
ஸூரா 25 அல்ஃபுர்கான் முதல் ஸூரா 114 அந்நாஸ் வரை

கருப்பொருள் அடிப்படையில்

# திருக்குர்ஆன் விரிவுரை

தொகுதி 2

கருப்பொருள் அடிப்படையில்

# திருக்குர்ஆன் விரிவுரை

முஹம்மது அல்கஸ்ஸாலி

தமிழில்

ஷாஹுல் ஹமீது (உமரீ)

தொகுதி 2

ஸூரா 25 அல்ஃபுர்கான் முதல் ஸூரா 114 அந்நாஸ் வரை

**Karupporul Adippadaiyil Thirukkuruaan Virivurai (Vol-2)**

Tamil edition of

**A Thematic Commentary on The Qur'an**

by Shaykh Muhammad Al-Ghazali

Originally published (1421 AH/2000 CE) and
reprinted (1433 AH/2011 CE) by
THE INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT (IIIT)
P.O.Box 669 Herndon,VA 20172 U.S.A.
www.iiit.org
London office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 978-1-56564-260-7 Paperback
ISBN 978-1-56-564502-8 Hardback

All rights reserved

Tamil edition - 2020
Translated by
Shahul Hameed (Umari)

Vol 2 – Surah 25 Al-Furqan - Surah 114 Al-Naas
ISBN 978-955-8398-68-5

Published by Fuzin Texts
23/3 Market Road, Dharga Town 12090, Sri-Lanka
Cover design by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama.

**நன்றி**

*சமரசம்* ஸிராஜுல் ஹஸன், ஆம்பூர் நதீம் அஹ்மத்,
*சீர்மை* உவைஸ் அஹ்மத், கோட்டாறு ஸம்மில் மஜீத், இர்ஷாத்
இஸ்மாயீல் (நளீமி), அஸார் வஸீர் ஆகியோர்க்கு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பதிப்புரை | | 11 |
| முன்னுரை | | 13 |
| அத்தியாயம் 25 | அல்ஃபுர்கான் | 17 |
| அத்தியாயம் 26 | அஷ்ஷுஅறா | 28 |
| அத்தியாயம் 27 | அந்நம்ல் | 38 |
| அத்தியாயம் 28 | அல்கஸஸ் | 48 |
| அத்தியாயம் 29 | அல்அன்கபூத் | 63 |
| அத்தியாயம் 30 | அர்றூம் | 73 |
| அத்தியாயம் 31 | லுக்மான் | 83 |
| அத்தியாயம் 32 | அஸ்ஸஜ்தா | 89 |
| அத்தியாயம் 33 | அல்அஹ்ஸாபு | 94 |
| அத்தியாயம் 34 | சபா | 108 |
| அத்தியாயம் 35 | ஃபாத்திர் | 117 |
| அத்தியாயம் 36 | யாசீன் | 126 |
| அத்தியாயம் 37 | அஸ்ஸாஃப்பாத் | 135 |
| அத்தியாயம் 38 | ஸாத் | 145 |
| அத்தியாயம் 39 | அஸ்ஸுமர் | 155 |
| அத்தியாயம் 40 | காஃபிர் | 169 |
| அத்தியாயம் 41 | ஃபுஸ்ஸிலத் | 180 |
| அத்தியாயம் 42 | அஷ்ஷூறா | 190 |

| | | |
|---|---|---|
| அத்தியாயம் 43 | அஸ்ஸுஃஃக்றுஃஃப் | 200 |
| அத்தியாயம் 44 | அத்துஃஃகான் | 210 |
| அத்தியாயம் 45 | அல்ஜாஸியா | 215 |
| அத்தியாயம் 46 | அல்அஹ்காஃஃப் | 220 |
| அத்தியாயம் 47 | முஹம்மது | 230 |
| அத்தியாயம் 48 | அல்ஃஃபத்ஹ் | 236 |
| அத்தியாயம் 49 | அல்ஹுஜுறாத் | 245 |
| அத்தியாயம் 50 | காஃஃப் | 250 |
| அத்தியாயம் 51 | அத்தாரியாத் | 255 |
| அத்தியாயம் 52 | அத்தூர் | 260 |
| அத்தியாயம் 53 | அந்நஜ்ம் | 266 |
| அத்தியாயம் 54 | அல்கமர் | 271 |
| அத்தியாயம் 55 | அர்றஹ்மான் | 276 |
| அத்தியாயம் 56 | அல்வாகிஆ | 281 |
| அத்தியாயம் 57 | அல்ஹதீது | 307 |
| அத்தியாயம் 58 | அல்முஜாதலா | 316 |
| அத்தியாயம் 59 | அல்ஹஷ்ர் | 321 |
| அத்தியாயம் 60 | அல்மும்தஹினா | 326 |
| அத்தியாயம் 61 | அஸ்ஸஃஃப் | 331 |
| அத்தியாயம் 62 | அல்ஜுமுஆ | 336 |
| அத்தியாயம் 63 | அல்முனாஃஃபிகூன் | 339 |
| அத்தியாயம் 64 | அத்தகாபுன் | 342 |
| அத்தியாயம் 65 | அத்தலாக் | 347 |
| அத்தியாயம் 66 | அத்தஹ்ரீம் | 351 |
| அத்தியாயம் 67 | அல்முல்க் | 355 |

| | | |
|---|---|---|
| அத்தியாயம் 68 | அல்கலம் | 360 |
| அத்தியாயம் 69 | அல்ஹாக்கா | 363 |
| அத்தியாயம் 70 | அல்மஆரிஜ் | 366 |
| அத்தியாயம் 71 | நூஹ் | 369 |
| அத்தியாயம் 72 | அல்ஜின்னு | 372 |
| அத்தியாயம் 73 | அல்முஸம்மில் | 377 |
| அத்தியாயம் 74 | அல்முத்தஸ்ஸிர் | 380 |
| அத்தியாயம் 75 | அல்கியாமா | 383 |
| அத்தியாயம் 76 | அல்இன்சான் | 386 |
| அத்தியாயம் 77 | அல்முர்சலாத் | 389 |
| அத்தியாயம் 78 | அந்நபா | 393 |
| அத்தியாயம் 79 | அந்நாஸியாத் | 396 |
| அத்தியாயம் 80 | அபச | 399 |
| அத்தியாயம் 81 | அத்தக்வீர் | 402 |
| அத்தியாயம் 82 | அல்இன்ஃபிதார் | 405 |
| அத்தியாயம் 83 | அல்முதஃப்பிஃபீன் | 407 |
| அத்தியாயம் 84 | அல்இன்ஷிகாக் | 411 |
| அத்தியாயம் 85 | அல்புரூஜ் | 414 |
| அத்தியாயம் 86 | அத்தாரிக் | 417 |
| அத்தியாயம் 87 | அல்அஃலா | 419 |
| அத்தியாயம் 88 | அல்காஷியா | 422 |
| அத்தியாயம் 89 | அல்ஃபஜ்ர் | 424 |
| அத்தியாயம் 90 | அல்பலது | 429 |
| அத்தியாயம் 91 | அஷ்ஷம்ஸ் | 432 |
| அத்தியாயம் 92 | அல்லைல் | 434 |

| | | |
|---|---|---|
| அத்தியாயம் 93 | **அள்ளுஹா** | 436 |
| அத்தியாயம் 94 | **அஷ்ஷர்ஹ்** | 439 |
| அத்தியாயம் 95 | **அத்தீன்** | 442 |
| அத்தியாயம் 96 | **அல்அலக்** | 445 |
| அத்தியாயம் 97 | **அல்கத்ர்** | 448 |
| அத்தியாயம் 98 | **அல்பய்யினா** | 450 |
| அத்தியாயம் 99 | **அஸ்ஸில்ஸால்** | 454 |
| அத்தியாயம் 100 | **அல்ஆதியாத்** | 456 |
| அத்தியாயம் 101 | **அல்காரிஆ** | 458 |
| அத்தியாயம் 102 | **அத்தகாஸுர்** | 460 |
| அத்தியாயம் 103 | **அல்அஸ்ர்** | 462 |
| அத்தியாயம் 104 | **அல்ஹுமஸா** | 464 |
| அத்தியாயம் 105 | **அல்ஃபீல்** | 466 |
| அத்தியாயம் 106 | **குறைஷ்** | 468 |
| அத்தியாயம் 107 | **அல்மாஊன்** | 470 |
| அத்தியாயம் 108 | **அல்கவ்ஸர்** | 472 |
| அத்தியாயம் 109 | **அல்காஃபிறூன்** | 474 |
| அத்தியாயம் 110 | **அந்நஸ்ர்** | 476 |
| அத்தியாயம் 111 | **தப்பத்** | 478 |
| அத்தியாயம் 112 | **அல்இஃக்லாஸ்** | 480 |
| அத்தியாயம் 113 | **அல்ஃபலக்** | 483 |
| அத்தியாயம் 114 | **அந்நாஸ்** | 485 |

# பதிப்புரை

*பேரறிஞர் அஷ்ஷெய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி அவர்களின்* نحو تفسير موضوعي لسور القرآن الكريم *நூலின் தமிழாக்கத்தை வெளிக்கொணர் வதில் நாம் காண்பது அளவிறந்த மகிழ்வு. 2000 மாம் ஆண்டு இந்நூலின் ஆங்கிலப்பதிப்பு வெளிவந்த வேளை ஆங்கிலம் வழங்கும் நாடுகளி லெல்லாம் அது பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டது. ஆங்கில மொழிபெயர்ப்பைச் செய்தவர்* Ashur A. Shamis. *அதனைச் செம்மை யாக்கம் செய்தவர்* Zaynab Alawiye.

نحو تفسير موضوعي لسور القرآن الكريم *நூலினை நேரடியாக அரபு மூலத்திலி ருந்தே தமிழாக்கம் செய்து தந்துள்ளார் ஷெய்க் ஷாஹுல்ஹமீது (உமரீ).*

*இரண்டு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றது தமிழ்ப் பதிப்பு. முத லாம் தொகுதி ஸூரா அல் பாத்திஹா முதல் 24 வது ஸூரா அந்நூர் வரையான விரிவுரையைக் கொண்டுள்ளது. இரண்டாம் தொகுதி 25 வது ஸூரா அல் புர்கான் முதல் இறுதி ஸூரா அந்நாஸ் வரையாக அமைந் துள்ளது.*

*பேராசிரியர் முஹம்மது அல் கஸ்ஸாலி அவர்களின் இந்த விரிவுரை அறிவுத் தேட்டத்தில் ஈடுபாடு கொண்டார் அனைவருக்கும் பெரு விருந் தாய் அமைவது. தமிழ் கூறும் நல்லுலகத்தாரும் அதன் பயன்களை ஈட்டிக் கொள்ள ஷெய்க் ஷாஹுல் ஹமீது (உமரீ) அவர்கள் ஆற்றியுள்ள பணி மதிப்பிடற்கரியது.*

*எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக*

**பூஸின் டெக்ஸ்ட்ஸ்**

**டிசம்பர் 2020**

# முன்னுரை

இது திருக்குர்ஆனைப் புதியதொரு முறையில் அணுகுவதற்கான ஒரு வழிமுறை. இதற்கு முன்பு நான் எழுதிய சில புத்தகங்களில் இந்த வழிமுறையைக் கடைப்பிடித்துள்ளேன். நான் இந்தப் பணியில் ஈடு பட்டுக்கொண்டிருந்தபோது மிக உன்னதமான படித்தரம் கொண்ட திருக்குர்ஆனுக்கு என்னைப் போன்றவர்கள் என்ன செய்துவிட முடியும் என்ற உணர்வு என்னை ஆட்கொண்டிருந்தது. ஆனாலும் குர்ஆனைப் புரிந்துகொள்ள வேண்டும், அதன் பொருள்களை ஆழ்ந்து கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்தப் பணியில் என்னை நான் ஈடுபடுத்திக் கொண் டேன்.

எனக்கு நானே கூறிக்கொண்டேன், இதற்கு முன்பு நான் சென்றிராத ஒரு வழியைத் தேர்ந்தெடுப்பேன். அதன் மூலம் நன்மையின் வாசல்களில் ஒன்றைத் திறந்துவைப்பேன். குர்ஆனின் அற்புதங்கள் என்றும் முடி வடையாதவை. நாம் எவ்வளவுதான் முயற்சிசெய்தாலும் அதன் சிகரத்தை அடைந்துவிட முடியாது.

மகத்தான இந்த வேதத்தின் ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் கருப் பொருள் அடிப்படையிலான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்ப தையே என் நோக்கமாக ஆக்கிக்கொண்டேன். கருப்பொருள் அடிப் படையிலான விளக்கம் என்பது அத்தியாயத்தின் மையக் கருத்தையும் அதன் வசனங்களை ஒன்றுக்கொன்று இணைக்கும் மறைவான தொடர்பு களையும் அதன் ஆரம்பம் எப்படி அதன் முடிவுக்கு முன்னுரையாக அமைந்துள்ளது என்பதையும் அதன் முடிவு எப்படி அதன் ஆரம்பத்தை உண்மைப்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்து வதாகும்.

ஒரு அத்தியாயத்தில் பல்வேறு விவகாரங்கள்குறித்து பேசப்பட்டி ருந்தாலும் அவை ஒரு தலைப்பில் ஒன்றிணையும் என்பதை அறிய மிகுந்த கவனம் செலுத்தினேன். இந்த விசயத்தில் நான் ஷைஃக் முஹம்மது அப்துல்லாஹ் தர்ராஸின் வழிமுறையைப் பின்பற்றினேன். அவர் குர்ஆனின் மிக நீளமான அத்தியாயமான அல்பகறாவைக் கொண்டு

இந்த விசயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். அவர் எழுதிய புத்தகம் அந்நபவுல் அழீம் என்ற பெயரில் அறியப்படுகிறது. நான் அறிந்தவரை யில் அதுதான் கருப்பொருள் அடிப்படையில் ஒரு அத்தியாயத்தை முழுமையாக அணுகிய முதல் விளக்கவுரை.

முஸ்லிம்களுக்கு இந்த வடிவிலான விளக்கவுரை மிகவும் அவசியம் என்பதை நான் உணர்ந்தேன். சிறு வயதிலிருந்தே நான் குர்ஆனோடு தொடர்பில் இருக்கிறேன். என்னுடைய பத்து வயதில் நான் குர்ஆனை மனனம்செய்துவிட்டேன். இப்போது எண்பது வயதை அடைந்த பின்பும் நான் அதைப் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனாலும், நான் அதிலிருந்து வெளிப்படுத்திய பொருள்கள் மிகக் குறைவானவை என்றும் எனது அறிவு இலகுவான பொருள்கள், மீண்டும்மீண்டும் வரக்கூடிய வாசகங்கள் ஆகியவற்றைத் தாண்டிச்செல்லவில்லை என்றும் எனக்குத் தோன்றியது. ஆகவே, வசனத்தில் மூழ்கி, அதற்கு முன்னால் வந்துள்ள வசனத்துடனும் பின்னால் வந்துள்ள வசனத்துடனும் அது எந்த வகையில் இணைகிறது என்பதையும் அத்தியாயம் முழுமையையும் இணைக்கின்ற நுண்ணிய இழைகளையும் அறிவதை நான் அவசியமெனக் கருதினேன்.

என்னால் இந்தப் பணியைச் செய்ய முடியுமா என்று தயங்கிநின்றேன். பின்னர், இயலாமல் நின்றுவிடுவதைவிடக் குறைந்தபட்சம் இந்தப் பாதையில் ஓரிரு அடிகளாவது கடந்துவிட வேண்டும் என்று எனக்கு நானே முடிவுசெய்துகொண்டு முன்னேறினேன். அல்லாஹ் எனக்கு உதவிசெய்தான். பாதையில் இறுதியை அடையும் பெரும் பாக்கியத்தை அவன் எனக்கு வழங்கினான்.

முதல் நூற்றாண்டில் அருளப்பட்ட வஹீயின் சாராம்சமே திருக்குர் ஆன். அதற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதற்கு நிரந்தரத்துவத்தை வழங்கிவிட்டது. முந்தையவர்களிடமும் பிந்தையவர்களிடமும் இது போன்று கொஞ்சம்கூட மாற்றம் இல்லாமல் உள்ளங்களால் மனனம் செய்யப்பட்ட, ஏடுகளால் பதிவுசெய்யப்பட்ட, பாதுகாக்கப்பட்ட எந்த வேதமும் இல்லை. இதற்கு முன்னிருந்தும் பின்னிருந்தும் அசத்தியம் வர முடியாது.

இந்தக் காலத்தில் வஹீ எங்கே இருக்கிறது என்று யாரேனும் கேட் டால் இந்தக் குர்ஆனைத் தவிர, அழிவை வென்றுவிட்ட அதன் வார்த் தைகளைத் தவிர வேறு எதைச் சுட்டிக்காட்ட முடியும்? பாதுகாக்கப் பட்ட சத்தியமும் நேரான வழியும் இதில்தான் அடங்கியுள்ளன.

நான் மிகக் குறைவாகவே வெளிப்படுத்தியுள்ளேன் என்பதை நான் மீண்டும்மீண்டும் சொல்வேன். நான் நீர் பருகிய நீரோடையில் நீர்

*பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனாலும், எனது இந்தப் பணி நீங்கள் முன்னேறிச்செல்வதற்குத் தூண்டுகோலாய் அமையும். அறிவுடையோர் திருக்குர்ஆனுக்குச் சேவையாற்றுவதில், அதன் மீது படிந்துள்ள திரைகளை அகற்றுவதில், அதன் அழகை வெளிப்படுத்துவதில் வெகுதூரம்வரை செல்ல முடியும்.*

*இந்தப் புத்தகம் மிக நீண்டுவிடக் கூடாது என்பதற்காக நான் வசனங்களிலிருந்து அவற்றின் வெளிப்படையான வடிவங்களையே தேர்வு செய்துள்ளேன். மற்றவற்றை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டுவிட்டேன். சுருக்கமாக எடுத்துரைப்பதே என் நோக்கமாகும்.*

*இந்த வடிவிலான விளக்கவுரை பிற விளக்கவுரைகளைவிட்டும் உங்களைத் தேவையற்றவர்களாக ஆக்கிவிடாது என்பதையும் இங்கு நான் கூறிக்கொள்கிறேன். மாறாக, இது மற்ற வடிவிலான விளக்கவுரைகளை முழுமைப்படுத்தக்கூடிய ஒரு விளக்கவுரைதான்.*

*இங்கு ஒரு தலைப்பில் அமைந்துள்ள வசனங்களைத் தொகுத்து நான் பேசவில்லை. இது கருப்பொருள் அடிப்படையிலான ஒரு விளக்கவுரை. நான் எழுதிய அல்முஹாவிர் அல்ஃகம்சா லில்குர்ஆனில் கரீம், நழ்றாத் ஃபில்குர்ஆன் என்ற இரு நூல்களிலும் தலைப்புவாரியாக வசனங்களைத் தொகுத்துத் தெளிவுபடுத்தியுள்ளேன்.*

*நிச்சயமாகத் திருக்குர்ஆன் இந்த முறையிலும் அணுகப்பட வேண்டும். சிலர் இந்த அணுகுமுறை எதிர்காலத்தில் நல்ல வரவேற்பைப் பெறும் என்று கருதுகிறார்கள். எப்படியிருந்தாலும் திருக்குர்ஆன் இஸ்லாத்தின் சட்டமாகவும் அதன் நிரந்தரமான அற்புதமாகவும் இருக்கிறது. நாம் பருகக்கூடிய இந்த ஊற்றிலிருந்து இறுதிநாள்வரை மக்கள் பருகிக் கொண்டே இருப்பார்கள் என்று கருதுகிறோம்.*

*தன் அடியார்மீது வேதத்தை அருளி அதை அறிவுடையோருக்கு வழிகாட்டியாக ஆக்கிய, அதைத் தவறுகளிலிருந்து பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.*

**ஸஃபர்** 1413 | **முஹம்மது அல்கஸ்ஸாலி**

**ஆகஸ்ட்** 1992

## வாசகர் கடன்

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும் அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு அன்ஹா, அன்ஹும் (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.*

அத்தியாயம் 25

# அல்ஃபுர்கான்

(பிரித்து அறிவித்தல்)

அல்லாஹ்வுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்று, நாம் அவனை அறிவதாகும், அவன் நமக்காகத் தூதர்களை அனுப்பாமல் இருந்திருந்தாலும் சரியே. ஏனெனில், அவனுடைய இருப்பை, வல்ல மையை அறிவிக்கும் சான்றுகள் நிரம்பவே காணப்படுகின்றன. நம் முடைய இயல்பும் அவற்றை நோக்கவே செய்கிறது. அவ்வாறு இருந்தும் அவன் நம் இனத்திலிருந்தே ஒரு தூதரை அனுப்பியுள்ளான், நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக.

நம்மை நோக்கி வந்துள்ள தூதர்களின் எண்ணிக்கையையோ பெயர் களையோ நாம் அறிய மாட்டோம். ஆயினும், இறுதித் தூதரைக் கொண்டு தூதுத்துவம் நிறைவடைந்துவிட்டது என்பதையும் அவருக்கு வழங்கப் பட்ட வேதம் தூதர்களுடைய போதனைகளின் சாராம்சம் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது என்பதையும் நாம் அறிவோம். மனித வாழ்க்கையின் இறுதிவரை அவருடைய தூதுத்துவம் நிலைக்க வேண்டும் என்று அல்லாஹ் நாடிவிட்டான். அவர்தாம் முஹம்மது இப்னு அப்தில்லாஹ். ‘உலக மக்கள் அனைவரையும் எச்சரிக்கைசெய்வதற்காகத் தன் அடியார் மீது சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவிக்கக்கூடிய வேதத்தை அருளியவன் மிகவும் பாக்கியமுடையவன். (1)’

முஹம்மது நம்மைப் போன்ற ஒரு மனிதர்தான். ஆனால், மனிதனின் கண்ணியங்கள் அனைத்தும் அவரிடம் ஒன்றுசேர்ந்திருந்தன. தலைமைத் துவத்துக்கான தகுதி அவரிடம் மட்டுமே நிலைபெற்றிருந்தது. இந்த உலகில் உள்ள மனிதர்களின் நேர்வழி அவருடைய நிரந்தரமான தூதுத் துவத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. விலக்கப்பட்டவரைத் தவிர வேறு யாரும் அவரைப் புறக்கணிக்க மாட்டார்.

அல்லாஹ் அவரைத் தூதராக அனுப்பியபோது தனக்கு மட்டுமே உரிய பண்புகளைக் கொண்டு தன்னை வர்ணித்தான்.

வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது. அவன் தனக்கு யாரையும் மகனாக ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அவனது ஆட்சியில் யாருக்கும் பங்கு இல்லை. அவனே ஒவ்வொன்றையும் படைத்து அதன் விதியை நிர்ணயம்செய்தான். (2)

அல்லாஹ்வை அறியாமல் இருந்தவர்கள், அறிந்தும் அவனை நிரா கரித்தவர்கள் இந்தப் பண்புகளை அறிந்திருக்கவில்லை. ஆனாலும், இறுதித் தூதர் இவற்றின் மீது நம்பிக்கை கொண்ட, இவற்றுக்காகப் போரிடக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்கிக் காட்டினார்.

இந்த அத்தியாயத்தில் அவரை எதிர்த்த இணைவைப்பாளர்களின் ஆட்சேபணைகளும் கூற்றுகளும் குறிப்பிடப்பட்டு அவற்றுக்குப் பதில் களும் வழங்கப்பட்டுள்ளன.

1. ‘இது அவரே புனைந்துகொண்ட ஒரு பொய்தான். இதில் அவருக்கு வேறு சிலரும் உதவியாக இருக்கிறார்கள்.’ என்று நிராகரிப்பாளர்கள் கூறுகிறார்கள். இவர்கள் அக்கிரமக்காரர் களாகவும் பொய்யர்களாகவும் இருக்கிறார்கள். (4)

   தூதர்களை நிராகரிப்பது முற்காலத்திலிருந்தே மக்களிடம் பரவியிருந்த ஒரு பழக்கம்தான். ஆகவே, இணைவைப்பாளர் கள் முஹம்மதை நிராகரித்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. அவர்கள் தவ்ஹீதை நோக்கிய அவரது அழைப்பை நிராகரித் தார்கள். அல்லாஹ்வுக்கு எந்தப் பிள்ளைகளும் இல்லை என்று அவர் கூறியது அவர்களை நெருக்கடியில் ஆழ்த்தியது.

   அவர்களுக்கு உதவிசெய்தவர்கள் யார்? ஏன் அவர்கள் தூதுத் துவத்தைத் தங்களோடு இணைக்கவில்லை?

2. ‘இது முன்னோர்களின் கட்டுக்கதைகளாகும். இதனை அவர் எழுதச் சொல்கிறார். இது காலையிலும் மாலையிலும் அவ ருக்குப் படித்துக்காட்டப்படுகிறது’ என்றும் அவர்கள் கூறு கிறார்கள். (5)

   அவர்களின் கூற்றுப்படி வேதக்காரர்கள்தாம் அவருக்குக் கற்றுக் கொடுப்பவர்கள். திரித்துவத்துக்கு எதிரானவற்றைக் கற்றுக் கொடுத்து கிறிஸ்தவர்கள் உதவிசெய்தார்களா? அல்லது, தங் களைத் தாங்களே இழிவுபடுத்தி யூதர்கள் உதவிசெய்தார்களா? நிச்சயமாக இது பைத்தியக்காரத்தனமான கூற்று.

3. அவர்கள் கூறுகிறார்கள், 'இந்தத் தூதருக்கு என்னவாயிற்று? உண்ணவும் செய்கிறார்; கடைவீதிகளில் உலவவும் செய்கிறார். எச்சரிக்கை செய்வதற்காக இவருடன் ஒரு வானவர் இறக்கப் பட்டிருக்கக் கூடாதா?' ... (7)

   ஒரு தூதர் உண்ணக்கூடியவராக இருப்பது ஒன்றும் குறை யுடைய பண்பு அல்ல. மாறாக, இது மனித இயல்பு. மனிதர்கள் இந்த இயல்பில்தான் படைக்கப்பட்டுள்ளார்கள்.

   அவருடன் வானவர் வந்து என்ன செய்யப்போகிறார்? அவ ருக்குப் பதிலாக அழைப்புப் பணி செய்யப்போகிறாரா? வான வர்களால் மனிதர்களுக்குப் புரியவைக்க முடியாது எனில் ஏன் அல்லாஹ் அவர்களைத் தூதர்களாகத் தேர்வுசெய்ய வேண்டும்? மக்கள் தூதரை நிராகரிக்கும்போது அவரை வலுப்படுத்தவா? அல்லாஹ் எந்தத் தூதரையும் உன்னதமான உதவியை அளிக் காமல் விட்டுவிடுவதில்லை.

4. அந்த அநியாயக்காரர்கள், 'நீங்கள் சூனியம்செய்யப்பட்ட ஒரு மனிதரைத்தான் பின்பற்றுகிறீர்கள்,' என்றும் கூறுகிறார்கள். பாரும், அவர்கள் எவ்வாறெல்லாம் உம்மை வர்ணிக்கிறார்கள் என்பதை. அவர்கள் வழிகெட்டுவிட்டார்கள். இனி அவர்களால் நேர்வழியை அடைய முடியாது. அவன் பாக்கியம்மிக்கவன். அவன் நாடினால் அவர்கள் கூறியதைவிடச் சிறந்தவற்றை உமக்கு வழங்குவான். ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனங் களையும் மாடமாளிகைகளையும் உமக்காக ஏற்படுத்தித் தரு வான். (8-10)

5. இந்த அத்தியாயம் நிராகரிப்பாளர்களின் கூற்றுகளை, அவர் களின் ஆட்சேபணைகளை எண்ணிக்கொண்டே செல்கிறது:

   நம் சந்திப்பை நம்பாதவர்கள், 'எங்களிடம் ஏன் வானவர்கள் வரவில்லை?' அல்லது, 'எங்களின் இறைவனை நாங்கள் காண வேண்டாமா?' என்று கேட்கிறார்கள். அவர்கள் தங் களைத் தாங்களே பெரிதாக எண்ணி ஆணவம் கொண்டார்கள்; மிகவும் வரம்புமீறிவிட்டார்கள். அவர்கள் வானவர்களைக் காணும் நாளில் குற்றவாளிகளுக்கு எந்த நற்செய்தியும் இருக் காது. 'காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!!' என்றுதான் குற்ற வாளிகள் கதறுவார்கள். (21,22)

   விசாரணையின்போது வானவர்கள் இணைவைப்பாளர்களைச் சந்திக்கும்போது அவர்களிடம் கூறுவார்கள், 'உங்களுக்கு எந்த

*நற்செய்தியும் இல்லை. அது உங்களுக்குத் தடைசெய்யப் பட்டுள்ளது. நீங்கள் செய்த நற்செயல்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. அல்லாஹ் அவையனைத்தையும் வீணாக்கி விட் டான்.' குறைஷிகளில் உள்ள இணைவைப்பாளர்கள் நூஹின் சமூகத்தில் உள்ள இணைவைப்பாளர்களைப் போன்று இருந் தார்கள் என்று தெரியவருகிறது. அவர்களும் வானவர்களை இறக்குமாறு வேண்டினார்கள். தங்களில் உள்ள ஒரு மனித ருக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். இந்தக் கர்வம்தான் அவர்களை அழித்தது.*

6. *பின்னர் மற்றுமொரு ஆட்சேபணை இடம்பெறுகிறது:*

   *'இந்தக் குர்ஆன் அவருக்கு ஒட்டுமொத்தமாக அருளப்பட்டி ருக்க வேண்டாமா?' என்று நிராகரிப்பாளர்கள் கேட்கிறார்கள்.* (32)

   *ஏன் இந்தக் குர்ஆன் நிகழும் நிகழ்வுகளுக்கேற்ப அருளப்படு கிறது? ஒரேயடியாக அருளப்பட்டிருக்க வேண்டாமா? பதில் வருகிறது:*

   *இதன் மூலம் உமது உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்காகத் தான் நாம் இதைப் பகுதிபகுதியாக அருளியுள்ளோம்.* (32)

   *ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு செய்தி இருக்கிறது. ஒவ்வொரு கேள்வியும் புதியதொரு பதிலை வேண்டிநிற்கிறது. முந்தைய வேதங்கள் ஒரேயடியாக அருளப்பட்டன என்பது மக்களிடம் பரவியிருக்கும் தவறான கருத்தாகும். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டும் பல நூற்றாண்டுகள்வரை அருளப்பட்டுக் கொண்டிருந்தன. ஏன் குர்ஆன் ஒரேயடியாக அருளப்பட வேண்டும்?*

7. *அவர்கள் உம்மைக் கண்டால் பரிகாசமாக எடுத்துக் கொள்கி றார்கள். 'இவரைத்தான் அல்லாஹ் தூதராக அனுப்பியுள்ளானா? நாம் நம் தெய்வங்களின் மீது கொண்ட நம்பிக்கையில் உறுதி யாக இல்லை என்றால் இவர் அவற்றை விட்டும் நம்மை வழிகெடுத்திருப்பார் ...'* (41,42)

❖ ❖ ❖

*இந்தக் குர்ஆன் அவர்களின் கொள்கையில் தடுமாற்றத்தை ஏற்படுத்தி யது என்பதற்கும் அவர்களின் வழிகேட்டைத் தெளிவுபடுத்தியது*

என்பதற்கும் இந்தக் கூற்றே வலுவான சான்றாகும். ஆதாரத்தின் தெளிவால் இணைவைப்பாளர்கள் சத்தியத்தை ஒத்துக்கொள்வதற்கு நெருக்கமாக வந்துவிட்டார்கள். ஆனாலும், இப்றாஹீமின் சமூகத்துக்கு நிகழ்ந்ததே இவர்களுக்கும் நிகழ்ந்தது. அவர்கள் உடைக்கப்பட்டிருந்த தங்களின் சிலைகளைக் கண்டவுடன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ள நெருங்கிவிட்டார்கள். ‘அவர்கள் தங்களுக்குள் சிந்தித்து நீங்கள்தாம் அநியாயக்காரர்கள் என்று தங்களையே கூறிக்கொண்டார்கள். (21:64)’ பின்னர் கர்வமும் இனவெறியும் அவர்களை மிகைத்தன. அவர்கள் பின்வாங்கி அசத்தியத்திலேயே நிலைத்தார்கள்.

இவ்வாறே மக்காவின் நிராகரிப்பாளர்களும் சத்தியம் தெளிவான பின்னரும் அதைவிட்டுப் பின்வாங்கினார்கள். தூதரைப் பரிகாசம் செய்யத் தொடங்கினார்கள். ‘வேதனையைக் காணும்போது வழிகேட்டில் இருப்ப வர்கள் யார் என்பதை விரைவில் அவர்கள் அறிந்துகொள்வார்கள். (42)’

பின்னர் அல்லாஹ், தங்களின் மன இச்சைகளுக்கு அடிமையாகிக் கிடப்போருக்கு எதிராக ஒரு பொதுவான கட்டளையை அருளினான். அவர்கள் கால்நடையைப் போன்றவர்கள்.

> மனஇச்சையைத் தன் கடவுளாக ஆக்கிக்கொண்டவனை நீர் பார்த் தீரா? அவனுக்கு நீர் பொறுப்பாளியாக ஆவீரா என்ன? அல்லது, அவர்களில் பெரும்பாலோர் செவியுறுகிறார்கள் அல்லது புரிந்து கொள்கிறார்கள் என்று நீர் எண்ணுகிறீரா? அவர்கள் கால்நடையைப் போன்றவர்கள். ஏன், அவற்றைவிடவும் வழிகெட்டவர்கள். (43,44)

உண்மையைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, அதன் கண்ணியத்தைக் காக்கும் பொருட்டு எதிரியை இழிவுபடுத்தலாம். அதிலும் குறிப்பாக, அந்த எதிரிகள் தங்களின் குறைபாட்டைக் கொண்டு, பாவத்தைக் கொண்டு பெருமையடிக்கும் சூழலில்.

பட்டாடை உடுத்தியிருக்கும் இழிவானவனைவிடப் பழைய ஆடை உடுத்தியிருக்கும் கண்ணியமானவன் சிறந்தவனாவான்.

நம் காலத்தில் சத்தியத்தைத் தோல்விகள் சூழ்ந்துள்ளன. சிலை வழி பாடு செய்பவன் விமானத்தில் இலகுவாகப் பயணம்செய்வதையும் அல்லாஹ்வை மட்டுமே வணங்கக்கூடியவன் பயணம் செய்ய சிரமப்படு வதையும் காண முடிகிறது. இதனடிப்படையில்தான் நாம் இந்த ஆட் சேபணையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

> ‘அளவிலாக் கருணையாளனுக்குச் சிரம்பணியுங்கள்.’ என்று அவர் களிடம் கூறப்பட்டால் அவர்களின் வெறுப்பு இன்னும் அதிகமாகி,

'அளவிலாக் கருணையாளன் என்றால் யார்? நீர் கூறுபவருக்கெல் லாம் நாங்கள் சிரம்பணிய வேண்டுமா?' என்று அவர்கள் கேட்கி றார்கள். (60)

அர்றஹ்மான் அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்று. இந்தப் பண்பு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தான பண்பு. 'நீர் கூறும், நீங்கள் அல்லாஹ் என்று அழையுங்கள் அல்லது அர்றஹ்மான் என்று அழை யுங்கள். (17:110)' தாங்கள் பழக்கப்பட்ட சிலைகளை விட்டுவிட்டு அர்றஹ்மானான அல்லாஹ் ஒருவனுக்குச் சிரம்பணிவது இணை வைப்பாளர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. அவர்கள் தூதரிடம் கூறினார்கள், 'உமக்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம்.' அவரை வெறுத்த வர்களாக அவரைவிட்டுச் சென்றார்கள்.

❖ ❖ ❖

இந்த அத்தியாயத்தில் இணைவைப்பாளர்கள் இரு வழிமுறைகளைக் கொண்டு அணுகப்பட்டுள்ளார்கள். முதல் வழிமுறை, முந்தைய சமூகங் கள் அடைந்த விளைவுகளைக் கொண்டு அவர்களை எச்சரிக்கிறது. ஃபிர்அவ்னின் சமூகம், ஆது, ஸமூது சமூகங்கள், லூத்தின் சமூகம் ஆகியோர் அடைந்த விளைவுகளை அத்தியாயம் எடுத்துரைக்கிறது. 'தீய மழை பொழியப்பட்ட அந்த ஊரைத்தான் அவர்கள் கடந்துசெல்கிறார்கள். அவர்கள் அதனைப் பார்க்கவில்லையா? ஆயினும், அவர்கள் மீண்டும் எழுப்பப்படுவதை நம்பவே இல்லை. (40)'

இந்த அச்சமூட்டுதல் சில சமயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக் கிறது. ஆனாலும், இதைவிடத் தாக்கத்தை ஏற்படுத்தும் நிரந்தரமான ஒரு வழிமுறை இரண்டாவது வழிமுறைதான். திருக்குர்ஆன் பல இடங்களில் அந்த வழிமுறையைப் பயன்படுத்தியுள்ளது. அது அறிவைச் சிந்திக்கத் தூண்டுவதாகும். அதனைக் குறித்து நாம் விரிவாகப் பேசலாம்.

இந்த அத்தியாயத்தில் வானங்கள் மற்றும் பூமியின் படைப்புகளைக் குறித்து சிந்திக்கத் தூண்டும் வசனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது வசனம் நிழலைக் குறித்து பேசுகிறது. 'உம் இறைவன் நிழலை எவ்வாறு பரப்புகிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவன் நாடினால் அதை ஒரே நிலையில் வைத்திருப்பான். பின்னர், நாம் நிழலுக்குச் சூரியனை வழிகாட்டியாக ஆக்கியுள்ளோம். பின்னர், அதைச் சிறுகச்சிறுக நம் பக்கம் இழுத்துக்கொள்கிறோம். (45,46)'

சில சமயங்களில் நான் என் நிழலை என் உயரத்தைவிட இரு மடங் காகக் காண்கிறேன். சிறிது நேரத்துக்குப் பிறகு அது கொஞ்சம் கொஞ்ச

*மாகக் குறைந்து என் காலுக்குக் கீழே வந்துவிடுகிறது. அது எப்படிப் பெரிதாகியது, எப்படிச் சிறிதாகியது? விமானம் தரையிறங்கும்போது அதன் நிழல் அதனை முந்திவிடுகிறது. நட்சத்திரங்களுக்கும் நிழல்கள் இருக்கின்றன. அவை சூரிய, சந்திர கிரகணங்களாக வெளிப்படுகின்றன. ஒவ்வொரு பொருளையும் அதன் நிழல் பின்தொடர்கிறது. 'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ் வுக்குச் சிரம்பணிகின்றன. அவற்றின் நிழல்களும் காலையிலும் மாலை யிலும் சிரம்பணிகின்றன. (13:15)' சூரியன் நிழலை அகற்றிவிடும்போது நாம் வேறொரு இடத்தை நோக்கி மாறிவிடுகிறோம். ஒரு கவிஞர் கூறு கிறார்:*

*''தெள்ளிய சிந்தையும் ஞானமும் இருப்பினும் - அதை*
*சூர்ய ஜோதியின் பிரவாகம் மாற்றி விடுமல்லவா?''*

*நிழல் எங்கே சென்றது என்று அவர் சிந்தித்தாரா? எவ்வளவு வேகத்தில் அது பூமியின் மீது அல்லது வானவெளியில் சென்றது? எவ்வித சிரமமுமின்றி இவை எல்லாவற்றையும் நிகழ்த்தும் இறை வல்லமையின் நுணுக்கங்கள்குறித்து அவர் சிந்தித்தாரா?*

*நிழலை விட்டுவிட்டு இரவு, பகல் ஆகியவற்றின் இயக்கத்தின் பக்கம் திரும்புவோம். தூக்கம் நம்மைத் தழுவும்போது இரவு அதன் திரைக்குள் சென்றுவிடுகிறது. நான் என் படுக்கைக்குச் செல்லும்போது ஓய்வெடுப்ப தாக உணர்கிறேன். என் கண்களை நான் மூடிக்கொள்கிறேன். ஆனாலும், என் இதயம் துடித்துக்கொண்டே இருக்கிறது. என் நெஞ்சு உயர்ந்து கொண்டும் தாழ்ந்துகொண்டும் இருக்கிறது. ஜீரண மண்டலம் தொடர்ச்சி யாக, இடைவெளியின்றிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.*

*என் உடலில் இறைவனின் செயல்பாடுகள் நான் மரணிக்கும்வரை நிற்பதில்லை. இவ்வாறு இருந்தும் நாம் குறைவாகவே அல்லாஹ்வை நினைக்கிறோம். நாம் படைப்பாளனின் விரல்களுக்கு இடையில்தான் இருக்கிறோம். ஆனாலும், நம்முடைய அலட்சியம்தான் எவ்வளவு நீளமானது!*

*நாங்கள் நைல் நதியின் அருகில் வசிப்பதால் மழையைக் குறைவாக எதிர்பார்க்கிறோம். நமக்குத் தேவையான நீரை அந்த நதியிலிருந்து நிறைவாகவே பெற்றுக்கொள்கிறோம். ஆனாலும், இந்த நதி எங்கிருந்து வந்தது? இந்தியப் பெருங்கடலிலிருந்து வரக்கூடிய மேகங்கள் இங்கு இரவும் பகலும் மழையாகப் பொழிகிறது. அது சிறுசிறு ஓடைகளாக வழிந்து, பின்னர் ஆறாக உருவெடுக்கிறது. அது நம்முடைய பூமியைச் செழிப்பான பூமியாகவும் ஆக்குகிறது. வருடம் முழுவதும் நமக்கு நீரைத் தருகிறது.*

பின்வரும் வசனம் இதனைத்தானே குறிப்பிடுகிறது:

அவனே தன் கருணைக்கு முன்னால் காற்றுகளை நற்செய்தியாக அனுப்புகிறான். வானத்திலிருந்து நாம் தூய்மையான நீரை பொழியச் செய்கிறோம். அதன் மூலம் நாம் உயிரற்ற பூமியை உயிர்ப்பிக்கிறோம். அதிலிருந்து நாம் படைத்த கால்நடைகளுக்கும் ஏராளமான மனிதர்களுக்கும் நீர் புகட்டுகிறோம். (48,49)

நம்முடைய நகரங்களிலும் ஊர்களிலும் பைப்கள் இருக்கின்றன. எவ்வித சிரமமுமின்றித் தண்ணீர் அவற்றிலிருந்து வழிகிறது. நவீன மோட்டார்களைக் கொண்டு அதை நாம் விரும்பும் இடத்துக்குக் கொண்டு செல்கிறோம். 'அவர்கள் சிந்திக்கும் பொருட்டு நாம் அவர்களிடையே பல்வேறு விதமாக இதனைத் தெளிவுபடுத்துகிறோம். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் நன்றிகெட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். (50)'

ஈமான் கொள்வது மிக எளிதானது. அது நம் கண்களுக்கு முன்னால்தான் இருக்கிறது. ஆனாலும், பலர் நாத்திகர்களாக இருக்கிறார்கள்.

தன் வல்லமையின் வெளிப்பாட்டைக் கூறியபின்னர் பிரபஞ்சத்தில் பரவியிருக்கும் தன் சான்றுகளைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'அவன் பெரும் பாக்கியமுடையவன். அவன்தான் வானத்தில் கோள்களை அமைத்து அதில் ஒரு விளக்கையும் பிரகாசமான சந்திரனையும் ஏற்படுத்தினான். (61)' அவனுடைய அருள் எங்கும் பரவிக் காணப்படுகிறது. இந்தக் கிறாஅத்தின்படி சூரியனும் அதன் குடும்பமும் அங்கு குறிப்பிடப்படுகின்றன. இன்னொரு கிறாஅத்தும் இருக்கிறது. அந்தக் கிறாஅத்தின்படி 'சிறாஜா' என்பதற்குப் பதிலாக 'சுறுஜா' என்று வாசிக்கப்படுகிறது. அது வேறுபல உலகங்களைக் குறிக்கிறது. நம்முடைய இந்த உலகம் எண்ண முடியாத பல்வேறு உலகங்களில் ஒன்றுதான் என்பதை அறிவியலும் நிறுவுகிறது. இந்தப் பெரும் பிரபஞ்சத்தில் நாம் அற்பமான பொருள்தான். துல்லியமான சோதனைகளை எதிர்கொள்வதற்காகவே நாம் படைக்கப்பட்டுள்ளோம். 'நாம் நினைவுகூர்கிறோமா அல்லது மறந்துவிடுகிறோமா? நாம் நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்கிறோமா அல்லது நன்றி செலுத்துகிறோமா?' என்று நாம் சோதிக்கப்படுகிறோம். இந்த அத்தியாயம் கூறுவதுபோன்று நம்மில் சிலர் சிலரைக் கொண்டு சோதிக்கப்படுகிறார்கள். 'நாம் உங்களில் சிலரைச் சிலருக்குச் சோதனையாக ஆக்கியுள்ளோம். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பீர்களா? உமது இறைவன் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். (20)'

இந்தச் சோதனையில் வெற்றிபெறுபவர்கள் யார், தோல்வியடைபவர்கள் யார் என்று பார்க்கப்படுகிறது. றஹ்மானின் அடியார்கள் இந்தச்

சோதனையில் வெற்றிபெறுவார்கள். ஷைத்தானின் அடியார்கள் இந்தச் சோதனையில் தோல்வியடைவார்கள். இந்த அத்தியாயம் ரஹ்மானுடைய அடியார்களின் தனித்தன்மைகளாகப் பத்து அறிவுரைகளைக் குறிப்பிடுகிறது. வேறுபல அத்தியாயங்களிலும் இதுபோன்ற அறிவுரைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் ஒன்றிணைந்தே இஸ்லாமிய ஒழுக்கவியலாகத் தோற்றம்பெறுகிறது.

1. அல்லாஹ் கூறுகிறான்: அளவிலாக் கருணையாளனின் அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள்; அறிவீனர்கள் அவர்களுடன் உரையாடினால் சாந்தி உண்டாகட்டும் என்று கூறி விலகிவிடுவார்கள். (63)

   பணிவான நடத்தை என்பது சோம்பேறித்தனத்தையோ இழிவையோ குறிப்பதல்ல. அது நடுநிலையைக் குறிக்கிறது. மூடர்களுடனான உரையாடல் தீங்கை உள்ளடக்கியது. சலாம் கூறிவிட்டு அவர்களைக் கடந்துவிடுவதே நமக்குச் சிறந்தது.

   அதை ஒரு கவிதை இப்படி பேசும் :

   ''குரைக்கும் நாய்க்கெல்லம் எறிந்துதான் ஆக
   வேண்டுமென்றால்
   கல் துண்டுகளெல்லாம் பொற்காசுகளாகிவிடும்''

2. அவர்கள் தங்கள் இறைவனுக்குச் சிரம்பணிந்தவாறும் நின்று வணங்கியவாறும் இரவுகளைக் கழிப்பார்கள். (64)

   நம் உடலுக்கு ஓய்வைத் தரக்கூடிய, நாம் வேலைசெய்வதற்கு உதவிசெய்யக்கூடிய தூக்கம் மிகமிக அவசியம். இங்கு கவனிக்க வேண்டியது, நாம் இஷாவையும் அதன் சுன்னத்துகளையும் தொழுதபிறகு தூங்கி, அதிகாலை அழைப்புக்கு முன்னரே எழுந்து பகலை உற்சாகத்துடன் எதிர்கொள்வதுதான். ஒருவர் இஷாவையும் ஃபஜ்ரையும் ஜமாஅத்துடன் நிறைவேற்றிவிட்டால் அவர் இரவு முழுவதும் நின்று தொழுதவராவார்.

3. அவர்கள், 'எங்கள் இறைவா, நரக வேதனையைவிட்டும் எங்களைக் காப்பாயாக!' என்று பிரார்த்திப்பார்கள். நிச்சயமாக அதன் வேதனை நிலையான அழிவைத் தரக்கூடியதாகும். (65)

   நிச்சயமாக அது நிரந்தரமான இழிவையும் அழிவையும் தரக்கூடியது. ஒவ்வொரு நம்பிக்கையாளனும் இப்படிப்பட்ட நரகத்தை விட்டுத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

இழிவான செயல்களின் பக்கம் தன்னைத் தள்ளக்கூடிய, கடமைகளைவிட்டுத் தன்னை மறக்கடிக்கக்கூடிய நவீன ஜாஹிலிய்யாவின் முயற்சிகளை முறியடிப்பதற்குத் தன்னை அவன் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

4. அவர்கள் செலவுசெய்யும்போது வீண்விரயம் செய்ய மாட்டார்கள். கஞ்சத்தனமும் செய்ய மாட்டார்கள். ஆயினும், அவற்றுக்கிடையே நடுநிலையைப் பேணுவார்கள். (67)

   கஞ்சனத்தனம் இழிவான பண்பு. வீண்விரயம் செய்வது மடத்தனமாகும். ஒரே கவிதையில் மூன்று தத்துவங்களை உள்ளடக்கிய பின்வரும் முதநப்பியின் கவிதை என்னை ஆச்சரியப்படுத்துகிறது:

   மரணம் கழிந்து பின் ஒரு மறு வாழ்வுண்டு என்று
   இளமையில் அறிந்தால் - மனிதன்
   சொத்தும், சுகமும் சேர்ப்பதிலா சோலியாய் இருப்பான் ?

5. அவர்கள் அல்லாஹ்வை விடுத்து வேறெந்த இறைவனையும் அழைக்க மாட்டார்கள் ... (68)

6. அல்லாஹ் தடைசெய்த எந்த உயிரையும் அநியாயமாகக் கொல்ல மாட்டார்கள் ... (68)

7. விபச்சாரத்திலும் ஈடுபட மாட்டார்கள். (68)

   இந்த மூன்று குற்றங்களும் பலதரப்பட்ட மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது, விபச்சாரமாகும். பின்னர், அல்லாஹ்வை விடுத்து தன் மனஇச்சையையோ மற்றவர்களையோ வணங்குவது. பின்னர், கொலை செய்வது. 'இவ்வகையான காரியங்களைச் செய்பவர் அதற்குரிய தண்டனையைப் பெற்றே தீருவார். மறுமைநாளில் அவனுக்கு வேதனை அதிகரித்துக் கொண்டே இருக்கும். அங்கு இழிவடைந்தவனாக அவன் என்றென்றும் வீழ்ந்துகிடப்பான். (68,69)'

   தீய செயல்களில் ஈடுபடுபவர்களால் நற்செயல்களிலும் ஈடுபட முடியும். வருத்தப்படுபவர்களால் பாவமன்னிப்பு கோரவும் முடியும். மனிதர்கள் உயிரோடு இருக்கும்வரை அவர்களுக்காகப் பாவமன்னிப்பின் வாசல்களும் திறந்தே இருக்கும். அவர்கள் தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்ளும்போதுதான் மாற்றமடைகிறார்கள்.

8. அவர்கள் பொய்சாட்சி கூற மாட்டார்கள். வீணானவற்றைக் கடந்து செல்ல நேர்ந்தால் கண்ணியமான முறையில் கடந்து சென்று விடுவார்கள். (72)

அவர்கள் சரியானவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதால், சத்தியத்துடன் தங்களை இணைத்துக்கொள்வதால் பொய்சாட்சி கூற மாட்டார்கள்; வீணான காரியங்களில் ஈடுபட மாட்டார்கள்.

9. அவர்களிடம் தங்கள் இறைவனின் வசனங்கள் நினைவூட்டப் பட்டால் அவற்றைக் குறித்து செவிடர்களாகவும் குருடர்களாகவும் இருக்க மாட்டார்கள். (73)

குர்ஆனை ஓதுவதற்கு உள்ளத்தின் விழிப்பும் ஆழ்ந்த கவனமும் அதன் பொருள்களை உணர்தலும் பேசக்கூடியவனைக் கண் முன்னால் நிறுத்துவதும் அவசியம். பொடுபோக்கான நிலையில் குர்ஆனை வாசிப்பவர் அதனால் எந்தப் பயனையும் அடையப் போவதில்லை, வெறுமனே நாவசைப்பதைத் தவிர.

10. 'எங்கள் இறைவா, எங்கள் மனைவியரிடமிருந்தும் குழந்தை களிடமிருந்தும் எங்களுக்குக் கண்குளிர்ச்சியை அளிப்பாயாக. எங்களை இறையச்சமுடையோருக்கு வழிகாட்டியாகவும் ஆக்கி வைப்பாயாக.' என்றும் பிரார்த்திப்பார்கள். (74)

இது தலைமைத்துவத்துக்கான கோரிக்கை அல்ல. கணவனின் கண்ணுக்கு மனைவி குளிர்ச்சியாகத் தெரிவது தூய்மையாக இருப்பதற்கு உதவும் அடிப்படையான அம்சமாகும். அவருடைய பிள்ளைகள் விசயத்தில் அவர் திருப்தியடைவது அவரைப் பொறாமையிலிருந்து பாதுகாக்கும் கேடயமாகும்.

இத்தகைய மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்ததால் மாளிகை களைப் பெறுவார்கள். அங்கு வாழ்த்துகளுடனும் முகமனுடனும் அவர்கள் வரவேற்கப்படுவார்கள். (75)

சுவனத்தில் உயர்ந்த இடத்தை அவர்கள் பெறுவார்கள். அல்லாஹ் நம் அனைவரையும் மன்னித்து அங்குள்ளவர்களாக ஆக்குவானாக.

❖ ❖ ❖

அத்தியாயம் 26

# அஷ்ஷுஅறா

(கவிஞர்கள்)

*அல்லாஹ் ஒருவனே என்பதையும் முஹம்மது அவனுடைய தூதர் என்பதையும் ஏற்றுக்கொள்ள மறுத்த இணைவைப்பாளர்கள் இஸ்லாமிய அழைப்பை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள்.*

*அவர்கள் வஹீயை அறியாத, மறுமையை நம்பாத வாழ்க்கைக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். இழிவான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த எஞ்சிய வேதக்காரர்களின் பக்கம் அவர்களின் பார்வை இருந்தது. ஆகவே, அவர்கள் ஈமானையும் இறுதித் தூதுத்துவத்தையும் எதிர்த்து நின்றார்கள். தூதர் அந்த மக்களை அழைப்பதற்கு ஆர்வம் கொண்டபோதெல்லாம் அவர்கள் அவரை நிராகரித்தார்கள்; கர்வம் கொண்டார்கள். தூதர் தாங்கள் நம்பிக்கை கொள்வதை அதிகமாக விரும்புகிறார் என்பதை உணர்ந்த இணைவைப்பாளர்கள் அதனைப் புறக்கணித்து அவரைக் கவலைக்குள்ளாக்க நாடினார்கள்.*

*அல்லாஹ் அவரிடம் கூறினான்:*

இவை தெளிவான வேதத்தின் வசனங்களாகும். அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்பதற்காக உம்மை நீரே அழித்துக்கொள்வீர் போலும். (2,3)

*அவர்களுக்காக உம்மை நீரே அழித்துக்கொள்வீரா?*

நாம் நாடினால் அவர்கள் தலைகுனிந்து பணியும்படியான ஓர் அத்தாட்சியை வானத்திலிருந்து அவர்கள்மீது இறக்குவோம். (4)

❖ ❖ ❖

*ஆனாலும், முந்தையவர்களுக்கும் பிந்தையவர்களுக்கும் ஓதிக் காட்டப்படும் வஹீயை முஹம்மதுக்கு வழங்கப்பட்ட சான்றாக ஆக்க*

வேண்டும் என்று அல்லாஹ் நாடிவிட்டான். அது மனித அறிவை விளித்து உரையாடுகிறது. மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் போரிடுகிறது.

அவர்கள் என்ன வேண்டினார்கள்? அவர்களை வியப்பில் ஆழ்த்தும் உலக இன்பங்கள் ரீதியான ஒரு சான்றை வேண்டினார்கள்.

இடத்தின் அடிப்படையிலும் காலத்தின் அடிப்படையிலும் எத்தனை யெத்தனை சான்றுகள் இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படுகின்றன. அவர்கள் அகப்பார்வை உடையவர்களாக இருந்திருந்தால் நிச்சயம் அவற்றைக் கண்டிருப்பார்கள்.

இடத்தின் அடிப்படையிலான சான்றுக்குத் திருக்குர்ஆன் வெட்ட வெளியான ஒரு பூமியை உதாரணமாகக் குறிப்பிடுகிறது. சில காலத்துக்குப் பிறகு அது பசுமையான பூக்களும் கனிகளும் நிரம்பிய பூமியாக மாற்றம்பெற்றுவிடுகிறது.

> அவர்கள் பூமியைப் பார்க்கவில்லையா? எத்தனை வகையான உயர்ந்த தாவரங்களை அதில் நாம் முளைக்கச்செய்துள்ளோம்! நிச்சயமாக அதில் சான்று இருக்கிறது. ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். நிச்சயமாக உம் இறைவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (7-9)

இதில் இறுதியாக இடம்பெற்றுள்ள வசனம் இந்த அத்தியாயத்தில் எட்டு முறை இடம்பெற்றுள்ளது. ஒரேயொரு முறை மட்டும், நாம் வாழும் பூமியில் இடத்தின் அடிப்படையிலான சான்றைக் குறிப்பிட்ட பிறகு இடம்பெறுகிறது. மற்ற ஏழு முறையிலும் முந்தைய சமூகங்கள் அடைந்த விளைவுகளைக் குறிப்பிட்டபிறகு இடம்பெறுகிறது. அந்தச் சமூகங்களின் பக்கம் தூதர்கள் வந்தார்கள். ஆனாலும் அவை அவர்களை நிராகரித்தன. இறுதியில் அவை பேரிழப்பையும் பெரும் அழிவையும் சந்தித்தன. அறபுகளும் இதுபோன்ற விளைவையா விரும்புகிறார்கள்?

❖ ❖ ❖

தூதர்கள் மனிதர்களின் சிந்தனையை நேர்வழியின் பக்கம் செலுத்தக் கூடியவர்கள். மனிதர்களில் அவர்களே தூய உள்ளம் கொண்டவர்களாகவும் அல்லாஹ்வுக்காக மட்டும் செயல்படக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எந்த உலகியல் ஆதாயத்தையும் மரியாதையையும் மனிதர்களிடம் வேண்டவில்லை.

மாறாக, அந்த முதல் தூதர் நூஹ் என்ன கூறினாரோ அதைத்தான் அனைவரும் கூறினார்கள். அவரைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

*நூஹின் சமூகம் தூதர்களை நிராகரித்தது. அவர்களிடம் அவர்களுடைய சகோதரர் நூஹ், 'நீங்கள் அஞ்ச மாட்டீர்களா? நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதராவேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். எனக்குக் கட்டுப்படுங்கள். இதற்காக நான் உங்களிடம் எந்தக் கூலியையும் கேட்கவில்லை. எனது கூலியோ அகிலங்களின் இறைவனிடமே உள்ளது.' என்று கூறினார்.* (105-110)

இறைத்தூதர்கள் தங்களின் சமூகங்களிடம் இறையச்சத்தையே வேண்டினார்கள். தங்களின் தூதுத்துவத்துக்காக அவர்கள் எந்தக் கூலியையும் மக்களிடம் கேட்கவில்லை. அவர்களில் ஒருவர்கூடப் பூமியில் உயர்வைப் பெற வேண்டும் என்றோ குழப்பம்செய்ய வேண்டும் என்றோ நாடியதில்லை.

ஆனாலும் மனிதர்கள் அவர்களுடன் மிகக் கடுமையான முறையில் நடந்துகொண்டார்கள். அவர்களில் சிலர் கொல்லப்பட்டார்கள். முடிவு என்ன ஆனது?

*நாம் அவர்களைச் சில ஆண்டுகள்வரை அனுபவிக்கச்செய்து, பின்னர் அவர்கள் எச்சரிக்கப்பட்டது அவர்களிடம் வந்துவிடுமானால் அவர்கள் அனுபவித்த இன்பங்கள் அவர்களுக்குப் பயனளிக்காது என்பதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? நாம் எந்த ஊர் மக்களையும் அவர்களுக்கு எச்சரிக்கைசெய்பவர்களை அனுப்பி நினைவூட்டாமல் அழித்ததில்லை. நாம் அநீதி இழைப்போர் அல்லர்.* (205-209)

இந்த அத்தியாயம் ஃபிர்அவ்னுடன் மூசாவுக்கு நிகழ்ந்த சம்பவம், இப்றாஹீமுக்கு அவரது சமூகத்துடன் நிகழ்ந்த சம்பவம், ஆது, ஸமூது, லூத்தின் சமூகம், தோப்புவாசிகள் ஆகியோரின் வரலாறு என முந்தைய சமூகங்களின் ஒரு தொகுதி வரலாற்றை உள்ளடக்கியுள்ளது.

எந்தவித உள்நோக்கமும் இலாப வெறியுமின்றித் தூய அழைப்பை விடுப்பதிலும் மோசமான முறையில் கர்வத்தைக் கொண்டும் துரோகத்தைக் கொண்டும் எதிர்கொள்ளப்பட்டதிலும் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுள்ளார்கள்.

முதலில் நாம் மூசாவின் சம்பவத்தைக் காணலாம். இங்கு நம் கவனத்தைக் கவர்வது, ஃபிர்அவ்ன் மூசாவிடம் அல்லாஹ்வின் உள்ளமையைக் குறித்து கேள்வி கேட்பதுதான். அவனுடைய உள்ளமையை மனிதர்களால் அறிந்துகொள்ள முடியாது. நம்மால் நம்முடைய உள்ளமையைக்கூட அறிந்துகொள்ள முடியவில்லை. பிறகு எப்படி நம் படைப்பாளனின் உள்ளமையை அறிந்துகொள்ள முடியும்?

ஆகவே, சாத்தியமான முறையில் பதிலும் அளிக்கப்படுகிறது.

> 'அகிலங்களின் இறைவன் என்பது என்ன?' என்று ஃபிர்அவ்ன் கேட்டான். அதற்கு மூசா, 'வானங்களுக்கும் பூமிக்கும் அவற்றுக்கு இடையில் உள்ள அனைத்துக்கும் அவனே இறைவன். நீங்கள் உறுதியாக நம்புவோராக இருந்தால் (அவனையே நம்புங்கள்).' என்று கூறினார். ஃபிர்அவ்ன் தன்னைச் சுற்றி இருந்தவர்களிடம், 'நீங்கள் செவியேற்கிறீர்கள், அல்லவா?' என்று கேட்டான். அதற்கு மூசா, 'அவன்தான் உங்களுக்கும் இறைவன், முன்சென்ற உங்கள் மூதாதையர்களுக்கும் இறைவன்.' என்று கூறினார். அதற்கு ஃபிர்அவ்ன், 'உங்களிடம் அனுப்பப்பட்டுள்ள உங்கள் தூதர் பைத்தியக்காரர்' என்று கூறினான். (23-27)

இங்கு அளிக்கப்பட்ட பதிலும் தாஹா என்ற அத்தியாயத்தில் அளிக்கப்பட்ட பதிலும் கிட்டத்தட்ட ஒன்றுதான். ஃபிர்அவ்ன் இறைவனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். அவன் மூசாவிடம் கூறினான்: 'நீ என்னைத் தவிர வேறு இறைவனை ஏற்படுத்திக்கொண்டால் உன்னைச் சிறையில் அடைத்துவிடுவேன். (29)'

பின்னர், மூசா சூனியக்காரர்களுடன் மோதும் பொருட்டு ஒரு பொதுவான நாள் நிர்ணயிக்கப்பட்டது. பொதுமக்கள் அந்தப் போட்டியைக் காண வர வேண்டும் எனக் கோரப்பட்டார்கள். இங்கு நம்முடைய கவனத்தை ஈர்ப்பது, சூனியக்காரர்கள் தோற்றுவிட்டால் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து மக்கள் பேசவில்லை. மாறாக, அவர்களிடமிருந்து வெளிப்பட்டது இதுதான்: 'நீங்கள் ஒன்றுகூடுவீர்களா என்று மக்களிடம் கேட்கப்பட்டது. சூனியக்காரர்கள் மேலோங்கிவிட்டால் நாம் அவர்களையே பின்பற்றலாம். (39,40)'

மூசாவைப் பின்பற்ற வேண்டும் என அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. சூனியக்காரர்கள் தோல்வியடைந்து மூசாவைப் பின்பற்றுவார்கள் என்பது சாத்தியமற்ற ஒன்றாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதுதான் நிகழ்ந்தது. ஃபிர்அவ்ன் கோபத்தின் உச்சிக்கே சென்றான். தன் போலியான கடவுள்தன்மையை வெளிப்படுத்தியவாறு அவன் கூறினான்:

> 'நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன்பே நீங்கள் அவரை ஏற்றுக்கொண்டுவிட்டீர்களா? நிச்சயமாக அவர்தான் உங்களுக்குச் சூனியத்தைக் கற்றுக்கொடுத்த உங்கள் குரு. ஆகவே, நீங்கள் விரைவில் அறிந்துகொள்வீர்கள். நான் உங்கள் மாறுகை, மாறு கால்களைத் துண்டித்து உங்களைச் சிலுவையில் அறைவேன்.' (49)

*உண்மையில் இந்தச் சூனியக்காரர்களின் நிலை மிகவும் ஆச்சரிய மானது. அவர்கள் சில நிமிடங்களிலேயே வழிகேட்டின் பாதாளத்தி லிருந்து தியாகத்தின் உச்சத்துக்குச் சென்றார்கள். வெகுவிரைவாக முன் னேறிச் சென்றார்கள்.*

*ஆனாலும் ஃபிர்அவ்ன் தன்னுடைய கர்வத்திலும் பிடிவாதத்திலும் நிலைத்திருந்தான். மடத்தனமாக அவர்களிடம், 'என் அனுமதியின்றி எப்படி நீங்கள் நம்பிக்கை கொள்ளலாம்?' என்று கேட்டான். அவர்களின் உள்ளங்களும் அவனுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன என்று நினைத்துக்கொண்டான் போலும்.*

*காலங்கள் ஓடின. மூசா தம் சமூகத்துடன் எகிப்தைவிட்டுத் தப்பிச் செல்ல வேண்டும் என்று முடிவுசெய்தார். அவர்களைப் பிடித்து மீண்டும் அடிமைப்படுத்தும் பொருட்டு ஃபிர்அவ்ன் தம் படைகளோடு அவர் களைப் பின்தொடர்ந்து சென்றான். இரு படைகளும் ஒன்றையொன்று பார்க்கும் தூரத்துக்கு நெருங்கிவிட்டன. அப்போது யூதர்கள் கூறினார்கள், 'நாம் பிடிபடப்போகிறோம்.* (61)*'*

*யூதர்கள் அடைந்த பதற்றமும் பயமும் ஓலமும் தவ்றாத்தில் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளன. மூசாதான் அவர்களை அமைதிப்படுத்தினார். அவர் கூறினார், 'ஒருபோதும் இல்லை. நிச்சயமாக என் இறைவன் என்னுடன் இருக்கிறான். அவன் எனக்கு வழிகாட்டுவான்.* (62)*' பாதையில் செங்கடல் குறுக்கிட்டது. இங்கு இறைவனின் கருணை அவர்களைத் தழுவிக்கொண்டது. மூசா தம் கைத்தடியால் கடலை அடித்தார். தண்ணீர் வலப்பக்கமும் இடப்பக்கமும் பிரிந்து ஒரு பாதையை உருவாக்கியது. இஸ்றாயீலின் மக்கள் அந்தப் பாதை வழியாகக் கடந்து மறுகரையை அடைந்தார்கள்.*

*ஃபிர்அவ்னும் அவனுடைய படையினரும் அந்தப் பாதையை கடக்க முயற்சிசெய்தார்கள். நாலாபுறமும் அலைகள் வந்து அவர்களை மூடிக் கொண்டன. தனக்கு கடவுள்தன்மை இருப்பதாக வாதிட்டவனின் கதை முடிந்தது. அவன் நீருக்கும் நிலத்துக்கும் மத்தியில் தன் இறுதி மூச்சை விட்டான்.*

❖ ❖ ❖

*இப்றாஹீமுக்கு வழிகாட்டியவன் அவருக்கு எவ்வித சிக்கலும் மூடு மந்திரமும் இல்லாத ஈமானை வழங்கினான்.*

*மெய்யிலாளர்களின் புத்தகங்களைப் படிக்கும்போதும் அவற்றில் உள்ள சிக்கல்களைக் காணும்போதும் நாம் இந்த விசயத்தை மிகத் தெளிவாகவே உணர்கிறோம்.*

*இப்றாஹீம் தன் இறைவனைக் குறித்து கூறினார்:*

*'அவன்தான் என்னைப் படைத்தான். அவனே எனக்கு வழிகாட்டு கிறான்; எனக்கு உண்ணவும் பருகவும் தருகிறான். நான் நோயுற் றால் அவனே எனக்குக் குணமளிக்கிறான். அவனே என்னை மரணிக்கச் செய்வான். பின்னர், அவனே என்னை உயிர்ப்பிப்பான். கூலி கொடுக்கப்படும் நாளில் அவன் என் பாவங்களை மன்னித்து விடுவான் என நான் நம்பிக்கை வைக்கிறேன்.'* (78-82)

*நம்முடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களோ இப்றாஹீமுக்கு மிக நெருக்கமானவர்.*

*தவ்ஹீதின் பக்கம் அழைப்பு விடுப்பது தூதர்கள் அனைவருடைய வழிமுறையாகும். அவர்கள் அனைவரும் ஷிர்க்கின் எதிரிகளாக இருந் தார்கள்.*

*இப்றாஹீம் சிலை வழிபாட்டுடன் போரிட்டவராகப் பல பகுதி களுக்குச் சென்றார்.*

*மக்கள் அல்லாஹ்வுக்கு இணையானவர்களை ஏற்படுத்திய போதிலும் அவனைப் பெரிய கடவுளாகத் தனித்துவமான இடத்தில் வைத்திருந் தார்கள். மற்ற கடவுள்களை அவனிடம் பரிந்துரைசெய்யக்கூடியவர் களாக, இடைத்தரகர்களாக ஆக்கினார்கள். விரைவிலேயே அவர்கள் அனை வரையும் சமமானவர்களாக ஆக்கினார்கள். அவனை விடுத்து மற்றவர் களை நினைவுகூரத் தொடங்கினார்கள்.*

*ஆகவே, இப்றாஹீமின் சம்பவத்தில் நரகத்தில் இணைவைப்பாளர் களுக்கு மத்தியில் நடைபெறும் உரையாடலும் இடம்பெறுகிறது:*

*அங்கு அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டே கூறுவார்கள், 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, நாங்கள் பகிரங்க மான வழிகேட்டில் இருந்தோம். நாங்கள் உங்களைப் படைப்புகள் அனைத்தையும் பராமரிக்கும் இறைவனுக்குச் சமமாக ஆக்கி யிருந்தோம். குற்றவாளிகள்தான் எங்களை வழி கெடுத்துவிட் டார்கள். இப்போது எங்களுக்காகப் பரிந்துபேசுபவரோ உற்ற நண்பரோ யாரும் இல்லை.'* (96-101)

*தற்கால நாகரிகத்தை மறதி என்னும் நோய் ஆட்கொண்டுவிட்டது. ஷிர்க் அவர்களின் கொள்கைகள் அனைத்திலும் கலந்துவிட்டது. ஆரம் பத்தில் அவர்கள் உலக வாழ்வில் அல்லாஹ்வை நினைவுகூராதவர் களாக, அவனுக்கு எந்த முக்கியத்துவமும் வழங்காதவர்களாகத்தான் இருந்தார்கள்.*

திருக்குர்ஆன் நூஹின் வரலாற்றுக்கு முன்னால் மூசாவின் வரலாற்றுக்குப் பிறகு இப்றாஹீமின் வரலாற்றைக் குறிப்பிடுகிறது. ஏனெனில், அது வரலாற்றின் அடிப்படையில் வரிசையாகச் சம்பவங்களைக் குறிப்பிடவில்லை. அது மனிதர்கள் பெறக்கூடிய படிப்பினைகளையே முக்கிய நோக்கமாகக் கொள்கிறது.

நூஹின் வரலாற்றில் அவருடைய சமூகத்தார் ஏழைகளையும் பலவீனர்களையும் இழிவாகக் கருதுவதைக் காண முடிகிறது. செல்வந்தன் ஏழையை வெறுத்தான். பலமானவன் பலவீனனை இழிவாகக் கருதினான். சமூக ஏற்றத்தாழ்வுகள் மனிதச் சமூகத்தின் ஆரம்பக் காலத்திலிருந்தே தொடங்கிவிட்டன.

ஏழைகள் தூதர்களை மிக விரைவாகவே பின்பற்றத் தொடங்கி விடுகிறார்கள். ஏனெனில், அவர்கள் தூதர்களிடத்தில் நீதியையும் கண்ணியத்தையும் தேடுகிறார்கள். இதுதான் கர்வம் கொண்டவர்களைக் கோபத்தில் ஆழ்த்தியது. ஆகவே அவர்கள் நூஹிடம் கூறினார்கள்,

> ‘நாங்கள் உம்மை ஏற்றுக்கொள்வதா? இழிவான மக்கள்தானே உம்மைப் பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள்.’ அதற்கு அவர் கூறினார், ‘அவர்கள் செய்துகொண்டிருப்பது குறித்து எதையும் நான் அறிய மாட்டேன். அவர்களை விசாரிப்பது என் இறைவன்மீது உள்ள பொறுப்பாகும். நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? நான் நம்பிக்கையாளர்களை விரட்டுபவன் அல்லன். நானோ பகிரங்கமாக எச்சரிப்பவனே.’ (111-115)

மக்காவின் இணைவைப்பாளர்களும் நீண்ட காலத்துக்குப் பிறகு நபியவர்களிடம் இதைத்தான் வேண்டினார்கள். அல்லாஹ் அவரிடம் கூறினான்: ‘அல்லாஹ்வின் திருப்தியை நாடி காலையிலும் மாலையிலும் தங்கள் இறைவனை அழைப்பவர்களை நீர் உம்மைவிட்டு விரட்டி விடாதீர். (6:52)’

இந்த ஒற்றுமைக்குக் காரணம் என்ன? ‘அவர்கள் தங்களுக்குள் உபதேசித்துக்கொண்டனரா என்ன? மாறாக, அவர்கள் வரம்புமீறும் மக்களாவர். ஆகவே, நீர் அவர்களைப் புறக்கணித்துவிடும். உம்மீது எந்தக் குற்றமும் இல்லை. (51:53,54)’

ஈமானுக்கும் நிராகரிப்புக்குமான வரலாறு செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமான வரலாறு அல்ல. செல்வந்தர்கள், ஏழைகள் என இரு தரப்பாரும் நபியவர்களை நம்பிக்கை கொண்டிருந்தார்கள். தொழுகை அவர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தியது. அவர்கள் அனைவரும்

வேறுபாடுகள் மறந்து தொழுகையில் ஒரே வரிசையில் நின்றார்கள். ஒவ்வொருவரும் தனக்கு இறைவன் வழங்கியதைக் கொண்டு திருப்தி யடைந்தார்.

ஆது, ஸமூது சமூகங்களின் வரலாறு தற்கால இயல்புக்கு நெருக்க மான வரலாறாகும். இரண்டு சமூகங்களுக்கு மத்தியில் தூரம் இருந்த போதிலும் அவர்கள் நெருக்கமானவர்கள்தாம். ஆது சமூகத்தினர் நல்ல உடற்கட்டு பெற்றவர்களாகவும் உயரமானவர்களாகவும் ஆரோக்கிய மானவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் அதிபுத்திசாலிகளாகவும் இருந்தார்கள். எந்த அளவுக்கெனில், அவர்களின் அறிவு முன்மாதிரியாகச் சொல்லப்பட்டது.

உலகியல் ரீதியாக அவர்கள் அடைந்த இந்த முன்னேற்றமும் உயர்வும் அவர்களைக் கர்வத்தில் ஆழ்த்தியது. அவர்கள் கர்வத்துடன் கேட்டார்கள், ‘எங்களைவிட வலிமையானவர்கள் யார்?’

உலக வாழ்வை ஆடம்பரமாக அனுபவிக்கத் தொடங்கினார்கள். பெரும்பெரும் கட்டடங்களை எழுப்பினார்கள். யாரேனும் ஒரு பலவீனன் அவர்களிடம் அகப்பட்டால் அவனைக் கடுமையான முறையில் பிடித்தார்கள். பழிவாங்கப்படுவோம் என்று அவர்கள் அஞ்சவில்லை. ‘நம்மை எதிர்க்க யாருக்கு வலிமை இருக்கிறது?’ என்று எண்ணினார்கள்.

அவர்களிடம் அவர்களின் தூதர் ஹூது கூறினார்:

> ‘நீங்கள் உயரமான இடங்களிலெல்லாம் வீணான நினைவுச் சின்னங்களை எழுப்புகிறீர்களே! என்றென்றும் வாழ்பவர்களைப் போல மாபெரும் மாளிகைகளை நிர்மாணிக்கிறீர்களே! நீங்கள் யாரையேனும் தண்டித்தால் கொடூரமாகத் தண்டிக்கிறீர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். எனக்குக் கட்டுப்படுங்கள்.’ (128-131)

அவர்கள் எழுப்பிய உயரமான நினைவுச் சின்னங்கள் என்பது மணற் பாங்கான இடங்களில் பாதைகளை அறிந்துகொள்வதற்காக அவர்கள் எழுப்பிய அடையாளங்களாகும். அவை உயரமான கோட்டைகளைக் குறிக்கும் என்றும் கூறப்படுகிறது. நீரைத் தேக்கிவைப்பதற்காகக் கட்டப் பட்ட அணைகள் என்றும் கூறப்படுகிறது.

கவனித்துப்பார்க்கும்போது உயரமான கட்டடங்களும் நீரைத் தேக்கி வைப்பதற்கான அணைகளும் தண்டனைக்குரிய குற்றங்கள் அல்ல என் பது தெளிவாகிறது. ஆகவேதான் அறிஞர்கள் கூறுகிறார்கள், ‘அவர்கள் தண்டிக்கப்பட்டது அளவுக்கு அதிகமான ஆடம்பரத்தாலும் உலக

*மோகத்தாலும் அல்லாஹ்வை மறந்ததாலும் மற்றவர்களின் உரிமைகளைப் பறித்ததாலும்தான்.'*

*தற்காலத்தில் நாம், ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் விண்ணைத் தொடுமளவு உயரமான கட்டடங்களை எழுப்பிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் தங்களின் மனஇச்சைகளுக்குப் பின்னால் ஓடு கிறார்கள். தங்கள் இறைவனின் அறிவுரைகளை மறந்துவிட்டார்கள்.*

*மற்றவர்களுடன் போரிட்டால் அணுகுண்டு வீசிப் பொதுமக்களைக் கொல்கிறார்கள். தங்களின் எதிரிகள் அடையக்கூடிய அழிவுகளையும் இழிவுகளையும் குறித்து எதுவும் அவர்கள் சிந்திப்பதில்லை.*

*ஆதும் ஸமூதும் அவர்களைப் போன்றவர்களும் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானார்கள். அல்லாஹ்வைக் குறித்த அறியாமையும் அவனது சந்திப்பைக் குறித்து அலட்சியமாக இருந்ததும் அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கியது.*

*பின்னர் லூத்தின் சமூகத்தார் வந்தார்கள். விசித்திரம் என்னவென்றால், அவர்களைப் போன்று தற்கால நாகரிகமும் இன்பங்களிலும் விசித்திரமான காரியங்களிலும் மூழ்கிக்கிடக்கிறது. இறையச்சம், தூய்மையான வாழ்வு ஆகியவற்றின் அவசியம்குறித்து யாரும் பேச முன்வரவில்லை. மாறாக, தடைசெய்யப்பட்ட இச்சைகளைப் பொதுவெளியில் நிலைநிறுத்து வதற்கான உலகளாவிய முயற்சிகள் பெருகிவிட்டன.*

*இது வரம்புமீறலின் ஒரு வகையாகும். இதன் மூலம் ஒரு சமூகம் தன்னைத்தானே அழிவில் ஆழ்த்திக்கொள்கிறது. 'உலக மக்களில் நீங்கள் இச்சையைத் தணிக்க ஆண்களிடம் செல்கிறீர்களா? உங்கள் இறைவன் உங்களுக்காகப் படைத்துள்ள உங்கள் மனைவியரை விட்டுவிடுகிறீர்களா? நீங்கள் வரம்புமீறும் மக்களாக இருக்கிறீர்கள். (165,166)'*

*அல்லாஹ் அந்த ஊர்களை அழித்தான். நிராகரிப்பாளர்களுக்கும் அதுபோன்ற முடிவே நேரும்.*

*பின்னர் இந்தச் சம்பவங்கள் ஷுஐபின் சமூகத்தையும் தோப்பு வாசி களின் சம்பவங்களையும் கொண்டு நிறைவடைகின்றன. அவர் களிடம் கூறப்பட்டது:*

> *'நீங்கள் நிறைவாக அளந்து கொடுங்கள்; நஷ்டம் இழைத்து விடாதீர்கள். சரியான தராசைக் கொண்டு எடைபோடுங்கள். மக்களுக்கு அவர்களின் பொருள்களைக் குறைத்து வழங்காதீர்கள்.*

பூமியில் குழப்பம்செய்துகொண்டு திரியாதீர்கள். உங்களையும் முந்தைய தலைமுறையினரையும் படைத்தவனை அஞ்சுங்கள்.' (181-183)

ஆனாலும் ஷுஐபின் சமூகத்தார் மற்றவர்களின் உரிமைகளைப் பறித்தார்கள். அநியாயம் இழைப்பதை அனுமதியளிக்கப்பட்ட ஒன்றாகக் கருதினார்கள். ஆகவே அழிந்துபோனார்கள்.

முந்தைய சமூகங்களுக்கு வழங்கப்பட்ட எல்லா வகையான நன்மைகளும் முஸ்லிம் சமூகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன. மனிதர்கள் அனைவருக்கும் உரிய அதன் பொதுவான தூதுத்துவம் முந்தைய அழைப்பாளர்கள் விட்டுசென்றவற்றுக்கு உரிமையாளர்களாக அவர்களை ஆக்கியது. வேதக்காரர்கள் தங்களிடம் உள்ள போதனைகளை மறந்துவிட்டார்கள் அல்லது மறந்துவிட்டதுபோன்று நடிக்கிறார்கள் என்றால் நாம் முஹம்மதுக்கு வழங்கப்பட்ட பொதுவான, நிரந்தரமான தூதுத்துவத்தை நினைவுகூர்வோம். அது முந்தைய சமூகங்கள் பெற்ற பாடங்கள், படிப்பினைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. இறுதிநாள்வரை ஓதப்படும் வஹீயாக நம்மிடையே நிலைத்திருக்கிறது.

❖ ❖ ❖

அத்தியாயம் 27

# அந்நம்ல்

(எறும்பு)

*இந்த அத்தியாயம் மக்காவில் அருளப்பட்ட அத்தியாயமாகும். விலங்குகள் உலகம் குறித்து பல ஆச்சரியமான தகவல்களை இது உள்ளடக்கியுள்ளது. மிக விரைவிலேயே மனிதர்கள் அவற்றைக் கண்டடையவும் செய்யலாம். இந்த அத்தியாயத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள இந்த வசனம் அதன் பக்கம் சுட்டிக்காட்டுகிறது: 'நீர் கூறும், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. தன் சான்றுகளை அவன் விரைவில் உங்களுக்குக் காண்பிப்பான். நீங்கள் அவற்றை அறிந்து கொள்வீர்கள். நீங்கள் செய்பவற்றை அவன் கவனிக்காமல் இல்லை. (93)'*

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்களும் அடைந்த விளைவுகள் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றன. நம்பிக்கையாளர்கள் நேர்வழியையும் நற்செய்தியையும் நிராகரிப்பாளர்கள் இழப்பையும் அழிவையும் பெற்றார்கள்.*

*இந்தச் சுருக்கமான முன்னுரைக்கான விளக்கம் அத்தியாயத்தின் இறுதியில் இடம்பெறுகிறது. ஆனாலும் மூசா, சுலைமான், ஸமூது சமூகத்தார், லூத்தின் சமூகத்தார் ஆகியோர்குறித்த நான்கு சம்பவங்கள் கூறப்பட்டபிறகே இடம்பெறுகிறது.*

*அதே போன்று, இந்த அத்தியாயத்தில் மறுமைநாளுக்கு முன்னர் அதன் பெரும் அடையாளங்களில் ஒன்றாக வெளிப்படும் விலங்கைக் குறித்த சுருக்கமான குறிப்பும் இடம்பெறுகிறது.*

❖ ❖ ❖

முதலில் நாம் இந்தச் சம்பவங்களை மேலாட்டமான ஒரு பார்வையில் அலசிவிடலாம். மூசாவுடைய வரலாற்றில் தம் கைத்தடி பாம்பாக

மாறியதைக் கண்டு அவர் வெருண்டோடிய சமயத்தில் அல்லாஹ் அவரிடம் கூறினான்:

‘மூசாவே, அஞ்சாதீர்! தூதர்கள் என்னிடத்தில் அஞ்ச மாட்டார்கள், தவறிழைத்தவர்களைத் தவிர. ஆயினும் அவர் தீமைக்குப் பின்னர் அதை நன்மையாக மாற்றிக்கொண்டால், நான் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறேன்.’ (10,11)

அல்லாஹ் மன்னிப்பாளன் என்ற வார்த்தை மூசாவுக்குப் பெரும் ஆறுதலாக அமைகிறது. எகிப்தில் அவர் செய்த கொலையை அல்லாஹ் மன்னித்துவிட்டான். அவர் தம் எதிரி இனத்தைச் சேர்ந்த ஒருவனைக் கொன்றபிறகு கூறினார்: ‘என் இறைவா, எனக்குநானே தீங்கிழைத்துக் கொண்டேன். ஆகவே, என்னை மன்னித்துவிடுவாயாக. இறைவன் அவரை மன்னித்துவிட்டான். நிச்சயமாக அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (28:16)’ இங்கு அவரை மன்னித்து, தூதுத்துவத்தைக் கொண்டு அவருக்கு நற்செய்தி கூறுகிறான்.

பின்னர், வேண்டுமென்றே பிடிவாதமாக அல்லாஹ்வை நிராகரித்த ஃபிர்அவ்ன்களைக் குறித்து அத்தியாயம் பேசுகிறது. மூசா சத்தியத்தில் இருக்கிறார் என்பதை அவர்கள் உறுதியாக அறிந்திருந்தார்கள். அவரை எதிர்ப்பதற்கு அவர்களிடம் எந்தக் காரணமும் இருக்கவில்லை. ‘அவர்களின் உள்ளங்கள் அவற்றை உறுதியாக நம்பிக்கொண்டிருந்தும் அக்கிரமத்தாலும் ஆணவத்தாலும் அவற்றை நிராகரித்தார்கள். குழப்பவாதிகளின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பாரும். (14)’

சுலைமானின் சம்பவத்தை நாம் பார்ப்பதற்கு முன்னால் பின்வரும் வசனத்தை நினைவூட்டிக்கொள்கிறோம்: ‘பூமியில் ஊர்ந்து செல்லும் பிராணிகளும் தமது இரு இறக்கைகளால் பறந்து செல்லும் பறவைகளும் உங்களைப் போன்ற இனங்கள்தாம். (6:38)’

அவை தங்களுக்குள் தனித்துவமான மொழியில் புரிந்துகொள்கின்றன. இந்தப் புரிதலின் இரகசியத்தை அறிந்துகொள்ளும் ஆற்றலும் மனிதர்களுக்குள் இருக்கிறது.

பறவைகள், ஊர்வன ஆகியவற்றின் மொழிகளைச் சுலைமான் நன்கறிந்தவராக இருந்தார். மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்காததை அல்லாஹ் அவருக்குக் கற்றுக்கொடுத்தான். அவர் கூறினார், ‘எங்களுக்குப் பறவைகளின் மொழி கற்றுத்தரப்பட்டுள்ளது. அனைத்து வகையான

பொருள்களும் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நிச்சயமாக இது வெளிப்படையான அருளாகும். (16)'

ஓர் எறும்பு தன் கூட்டத்துடன் பேசியதை அல்லாஹ் அவருக்குக் கேட்கச்செய்தான்:

> 'எறும்புகளே, உங்கள் புற்றுகளில் நுழைந்துகொள்ளுங்கள். சுலைமானும் அவரது படைகளும் தெரியாமல் உங்களை மிதித்து விடக் கூடாது.' அதனைக் கேட்ட சுலைமான் புன்னகைத்தவாறு சிரித்துவிட்டார். 'என் இறைவா, என்மீதும் என் பெற்றோர் மீதும் நீ புரிந்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதற்கும் நீ விரும்புகின்ற நற்செயல்களைச் செய்வதற்கும் நீ எனக்கு அருள் புரிவாயாக. உன் கருணையால் உன் நல்லடியார்களில் என்னையும் சேர்த்துவிடுவாயாக!' என்று அவர் பிரார்த்தித்தார். (18,19)

ஹூத்ஹூத் பறவை — கொண்டலாத்திப் பறவை — சுலைமானிடம் வந்து சூரியனை வணங்கிக்கொண்டிருந்த ஸபாவின் பல்கீஸ் அரசியைக் குறித்த செய்தியைக் கூறியதாக அத்தியாயம் குறிப்பிடுகிறது. அவளும் அவளுடைய சமூகத்தினரும் அல்லாஹ்வை விடுத்து சில படைப்புகளை வணங்கிக்கொண்டிருந்ததைக் கண்ட கொண்டலாத்திப் பறவை வியப் படைந்தது.

> ஆகவே, அவர்கள் நேர்வழியில் இல்லை. வானங்களிலும் பூமி யிலும் மறைந்துள்ளவற்றை வெளிப்படுத்துபவனும் நீங்கள் மறைப்பதையும் வெளிப்படுத்துவதையும் நன்கறிந்தவனுமாகிய அல்லாஹ்வுக்கு அவர்கள் சிரம்பணிய வேண்டாமா? (24,25)

சுலைமான் அந்த அரசிக்குக் கடிதம் ஒன்று எழுதினார். 'அளவிலாக் கருணையாளனும் இணையிலாக் கிருபையாளனுமாகிய அல்லாஹ்வின் பெயரால், என்னிடம் ஆணவம் கொள்ளாதீர்கள். கட்டுப்பட்டவர்களாக என்னிடம் வந்துவிடுங்கள். (30,31)'

இஸ்லாம்தான் தூதர்கள் அனைவரின் மார்க்கம். யாரும் அதிலிருந்து விதிவிலக்கானவராக இருக்கவில்லை. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதும் அவனுக்குக் கட்டுப்படுவதும் அவனது சந்திப்புக்காகத் தயார்படுத்திக்கொள்வதுமே அதன் அடிப்படையாகும்.

இப்றாஹீம், மூசா, ஈசா, முஹம்மது அனைவரும் இந்த விசயத்தில் சமமானவர்கள்தாம்.

அரசி பல்கீஸ் உடனே பதிலளிக்காமல் கொஞ்சம் அவகாசம் எடுத் துக்கொண்டார். சுலைமான் செல்வத்தையும் பதவியையும் விரும்பும்

அரசர்களில் ஒருவரா அல்லது அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் உன்னதமான அழைப்பாளர்களில் ஒருவரா என்பதை சோதிக்க அவர் விரும்பினார். தூதுக்குழு சுலைமானிடம் பரிசுப் பொருள்களைக் கொண்டுவந்தபோது அங்குள்ளதை அவர் உணர்ந்துகொண்டார். அவர் தூதுக்குழுவிடம் கூறினார், 'செல்வத்தைக் கொண்டு நீங்கள் எனக்கு உதவிசெய்ய விரும்புகிறீர்களா? அல்லாஹ் எனக்கு வழங்கியிருப்பது உங்களுக்கு வழங்கியிருப்பதைவிடச் சிறந்ததாகும். உங்கள் அன்பளிப்பைக் கொண்டு நீங்களே மகிழ்ச்சியடைந்துகொள்ளுங்கள். (36)'

அவர் அரசிக்குத் தம்முடைய உண்மைத்தன்மையை நிறுவும் சான்று ஒன்றைக் காட்ட விரும்பினார். தம் அவையோரிடம் கேட்டார்: 'அவையோரே, அவர்கள் அடிபணிந்து என்னிடம் வருவதற்கு முன் அவளது அரியணையை உங்களில் யார் என்னிடம் கொண்டுவருவார்கள்? (38)' அல்லாஹ்வின் வல்லமையால் யமனிலிருந்து பைத்துல் முகத்தஸுக்குக் கண்சிமிட்டும் நேரத்தில் அரியணை கொண்டுவரப்பட்டது.

நிகழ்ந்ததைப் பார்த்தபோது சுலைமான் கூறினார்:

> 'இது என் இறைவனின் அருளாகும். இதன் மூலம் நான் நன்றி செலுத்துகிறேனா செலுத்தாதிருக்கிறேனா என்பதை அவன் சோதிக்கிறான். யார் நன்றி செலுத்துகிறாரோ அவர் தமக்காகவே நன்றி செலுத்துகிறார். யாரேனும் நன்றி மறந்தால் அவர் அறிந்து கொள்ளட்டும், என் இறைவன் தேவையற்றவனாகவும் கண்ணியம் மிக்கவனாகவும் இருக்கிறான்.' (40)

நிகழ்வுக்கு விளக்கமாக நான் கருதுவது, அந்தப் பொருள் ஒளியின் வேகத்தில் பயணிக்கக்கூடிய பெரும் ஆற்றலாக மாறியது. பின்னர், தனது முந்தைய வடிவத்தின் பக்கம் அரசி அமரும் சிம்மாசனமாகத் திரும்பியது.

திகைப்புடன் பல்கீஸ் அதனை நோக்கினாள். 'அவள் வந்தபோது, உம் அரியணை இவ்வாறுதான் இருக்குமா என்று கேட்கப்பட்டது. அவள் கூறினாள், ஆம். அது இதைப் போன்றுதான் இருக்கும். (42)' இந்தப் பதில் அவளது அறிவு முதிர்ச்சியைக் காட்டுகிறது. பின்னர், சுலைமானின் நிலையைக் கண்டு அவர் அல்லாஹ்வின் தூதர் என்பதை அவள் அறிந்து கொண்டாள். ஆகவே நம்பிக்கை கொண்டாள். 'நான் சுலைமானுடன் சேர்ந்து படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அடிபணிந்துவிட்டேன் என்று கூறினாள். (44)'

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஸமூது சமூகத்தாரின் சம்பவம் இடம்பெறுகிறது. இவர்களும் ஆது சமூகத்தினரைப் போன்று கர்வமும் பிடிவாதமும் கொண்டவர்கள்.

*ஸாலிஹ் அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தபோது அவரைத் துர்ச்சகுனமாகக் கருதினார்கள். அவரைக் கொலைசெய்யத் திட்டம் தீட்டினார்கள். அவர்கள் கூறினார்கள், 'நீங்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டுக் கொள்ளுங்கள். நாம் அவரையும் அவருடைய மக்களையும் இரவோடு இரவாகக் கொன்றுவிடுவோம். பின்னர் அவருடைய பொறுப்பாளரிடம், உங்கள் குடும்பத்தினர் கொல்லப்பட்டபோது நாங்கள் அங்கு இருக்கவில்லை. நாங்கள் உண்மையைத்தான் சொல்கிறோம் என்று கூறிவிடுவோம்.* (49)'

*அவர்கள் அவரைக் கொல்வதற்குப் பதிலாக அல்லாஹ் அவருக்குச் சான்றாக அருளிய பெண் ஒட்டகத்தைக் கொன்றார்கள். ஆகவே, கடுமையான வேதனையைச் சுவைத்தார்கள்.*

> *அவர்கள் திட்டம் தீட்டினார்கள். அவர்களுக்குத் தெரியாமல் நாமும் திட்டம் தீட்டினோம். ஆகவே, அவர்களது திட்டத்தின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பாரும். நாம் அவர்களையும் அவர்களுடைய சமூகத்தினர் அனைவரையும் அழித்துவிட்டோம். இதோ அவர்களது வீடுகள், அவர்கள் செய்த அக்கிரமத்தால் பாழடைந்து கிடக்கின்றன ...* (50-53)

*பின்னர், பாவிகளால் சூழப்பட்ட நகரத்துக்கு அனுப்பப்பட்ட லூத்தின் சம்பவம் இடம்பெறுகிறது. அங்குள்ளவர்கள் இயல்பு சிதைந்து கீழான காரியங்களில் மூழ்கிக்கிடந்தார்கள். அந்த இழிவான காரியங்களைத் தங்களின் சபைகளிலும் வெளிப்படையாகச் செய்யத் தொடங்கினார்கள்.*

*இஸ்றாயீலின் சமூகத்தைச் சேர்ந்த லூத் அந்த நகரத்துக்குப் புலம்பெயர்ந்துசென்றார். இந்த மானக்கேடான காரியத்தைக் கண்டு திடுக்கிட்ட அவர் அவர்களைத் தடுத்தார். அவர்களோ தங்களின் ஊரிலிருந்து அவரைத் துரத்த நாடினார்கள். அவர்களின் பாவங்கள் அவர்களின் உள்ளத்திலும் சமூகத்திலும் ஆழமாக வேரூன்றியிருந்தன.*

> *லூத்தையும் நாம் அனுப்பினோம். அவர் தம் சமூகத்திடம், 'நீங்கள் அறிந்துகொண்டே வெட்கக்கேடான காரியத்தைச் செய்கிறீர்களா? பெண்களை விட்டுவிட்டு ஆண்களிடமா உங்கள் இச்சையைத் தீர்த்துக்கொள்கிறீர்கள்? உண்மையில் நீங்கள் அறிவற்ற சமூகமாக இருக்கிறீர்கள்.' என்று கூறினார். 'லூத்தின் குடும்பத்தினரை உங்கள் ஊரிலிருந்து வெளியேற்றிவிடுங்கள், அவர்கள் பரிசுத்தவான்களாம்.' என்பதுதான் அவருடைய சமூகத்தின் பதிலாக இருந்தது.* (54-56)

*அல்லாஹ் அந்த ஊர்வாசிகளை அழித்தான். அந்த ஊரைத் தலைகீழாகப் புரட்டினான்.*

*லூத்தின் சமூகத்தினர் செய்த செயலையும் அவர்கள் அடைந்த மோசமான விளைவையும் வேதக்காரர்கள் நன்கறிவார்கள். ஆனாலும் அவர்கள் அதனை அனுமதிக்கப்பட்ட ஒன்றாகக் கருதுகிறார்கள். அதில் ஈடுபடுவோரைத் தண்டிப்பதைத் தடுக்கிறார்கள். இது தெளிவான நிராகரிப்பன்றி வேறென்ன?*

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இந்த நிகழ்வுக்கான முன்னுரையையும் இதனால் ஏற்படும் விளைவைக் குறித்த எச்சரிக்கையையும் காண்கிறோம்:*

> *மறுமையை நம்பாதோருக்கு அவர்களின் செயல்களை நாம் அழகாக்கிக் காட்டியுள்ளோம். ஆகவே, அவர்கள் தடுமாறித் திரிகிறார்கள். அவர்களுக்கு மோசமான தண்டனை உண்டு. அவர்கள் தாம் மறுமையில் பெரும் இழப்புக்குரியவர்கள்.* (4,5)

*தம் தூதர்களை நிராகரித்த சமூகங்கள் அடைந்த மோசமான விளைவுகளைக் கூறியபிறகு அல்லாஹ் தன் தூதரிடம் கூறுகிறான்: 'நீர் கூறும், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே, அவன் தேர்ந்தெடுத்துக்கொண்ட அவனுடைய அடியார்களின் மீது சாந்தி நிலவட்டும் ...* (59)'

*வரம்புமீறுவோரை அழித்து பூமியைத் தூய்மைப்படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்அன்ஆம் என்ற அத்தியாயத்திலும் இதேபோன்று இடம்பெற்றுள்ளது: 'ஆகவே, அக்கிரமக்கார மக்கள் அடியோடு அழிக்கப்பட்டார்கள். படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.* (6:45)'

*பூமியில் அநியாயக்காரர்களை அழிப்பதும் சத்தியத்தின் அடித்தளங்களை உறுதிப்படுத்துவதும் நன்றி செலுத்துவதற்குரிய மாபெரும் அருட்கொடையாகும். அதே போன்று, களத்தில் நிலைகுலையாமல் இறுதிவரை உறுதியாக நின்று போராடிய கண்ணியம்மிக்க தூதர்களும் வாழ்த்துக்குரியவர்கள். பின்னர், மகத்தான ஓர் உண்மை இந்தக் கேள்வியின் மூலம் நிறுவப்படுகிறது: 'அல்லாஹ் சிறந்தவனா அல்லது அவர்கள் இணைவைத்து வணங்கும் தெய்வங்களா?* (59)'

*இது இறைத்தூதர் யூசுஃப் கேட்ட பின்வரும் கேள்வியைப் போன்றதுதான்: 'என் சிறைத் தோழர்களே, பல்வேறு தெய்வங்கள் சிறந்தவையா அல்லது அடக்கியாளும் ஏகனான அல்லாஹ்வா?* (12:39)'

*தவ்ஹீதை நிலைநிறுத்துவது இறைவனிடமிருந்து வந்த தூதுத்துவங்கள் அனைத்திலும் இருக்கின்ற அடிப்படையான அம்சமாகும். ஏனெனில்,*

பலதெய்வ வழிபாடு வழிகெட்ட சூழலின் வெளிப்பாடாகும். அறபுகளுக்கு மத்தியில் இந்த வழிகேடு பரவியிருந்ததால் திருக்குர்ஆன் அவர்களிடம் தவ்ஹீதின் அடித்தளங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஐந்து கேள்விகளை முன்வைக்கிறது. அறிவுடையோர் அனைவருக்கும் அதன் உண்மைநிலையைத் தெளிவுபடுத்துகிறது.

1. வானங்களையும் பூமியையும் படைத்து, மேகத்திலிருந்து உங்களுக்கு மழையைப் பொழிவிப்பவன் யார்? அதன் மூலம் எழில்மிக்க தோட்டங்களை நாம் உண்டாக்குகிறோம். மரங்களை உங்களால் முளைக்கச்செய்ய இயலாது. அல்லாஹ்வுடன் வேறு இறைவனும் இருக்கிறானா? மாறாக, அவர்கள் நேர்வழியை விட்டும் விலகிச்செல்லும் மக்களாக இருக்கிறார்கள். (60)

   அவர்கள் அல்லாஹ்வையும் சிலைகளையும் சமமானவர்களாக ஆக்கிவிட்டார்கள். நேரான வழியைவிட்டுப் பிறழ்ந்துவிட்டார்கள். 'வானத்தின் படைப்பாளன், மழையை இறக்குபவன், மரம், செடிகொடிகளை முளைக்கச்செய்பவன் அல்லாஹ் அல்ல. அவற்றையெல்லாம் செய்வது மனிதர்கள்தாம் அல்லது கற்கள்தாம்.' என்று கூறுவதற்கு யாரும் முன்வரவில்லை.

2. பூமியைத் தங்குவதற்குத் தகுந்த இடமாக்கி, அதனிடையே ஆறுகளை ஓடச்செய்து, அதற்கு மலைகளையும் ஏற்படுத்தியவன் யார்? இரு கடல்களுக்கு மத்தியில் திரையை ஏற்படுத்தியவன் யார்? அல்லாஹ்வுடன் வேறு இறைவனும் இருக்கிறானா? மாறாக, அவர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (61)

   இந்தப் பூமியையும் இதில் உள்ளவர்களையும் ஆட்டம் காணாதவாறு அவன் நிலைப்படுத்தியுள்ளான். உண்மையில் இது ஆச்சரியமான ஒன்றாகும். ஏனெனில், பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் சூரியனையும் சுற்றிக்கொண்டும் இருக்கிறது. இவ்வாறு அது சுற்றிக்கொண்டிருந்தாலும் உங்களின் கையில் இருக்கின்ற ஒரு குவளை தண்ணீர்கூட அசைவதில்லை.

   பூமிப் பந்தில் ஐந்தில் நான்கு பகுதி உப்புநீரால்தான் ஆனது. ஆறுகளும் சுவையான நீரையுடைய ஓடைகளும் இருக்கின்றன. உப்புநீர் நன்னீரோடு கலப்பதில்லை. ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் அப்படியே இருக்கிறது. இவையனைத்தும் அல்லாஹ்வின் பக்கம் நம்மை இட்டுச்செல்லவில்லையா?

3. *துன்பத்துக்குள்ளானவனின் அழைப்பைச் செவியுற்று அவனது துன்பத்தைப் போக்குபவன் யார்? பூமியில் உங்களைச் சந்ததி களாக ஆக்கியவன் யார்? அல்லாஹ்வுடன் வேறு இறைவனும் இருக்கிறானா? நீங்கள் மிகக் குறைவாகத்தான் படிப்பினைப் பெறுகிறீர்கள்.* (62)

   *இந்த வசனம், இடத்தை விட்டுவிட்டு அங்கு வசிப்பவர்களை நோக்கித் திரும்புகிறது. அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் வலிகள் அவர்களைப் பிரார்த்தனையின் பக்கம் அடைக்கலம் தேடக்கூடியவர்களாக ஆக்குகின்றன. அவர்கள் விடுதலையை வேண்டி மன்றாடுகிறார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரால் அவர்களுக்கு விடுதலையளிக்க முடியும்?*

4. *தரை மற்றும் கடலின் இருள்களில் உங்களுக்கு வழிகாட்டு பவன் யார்? தன் அருளுக்கு முன்னால் காற்றுகளை நற்செய்தி யாக அனுப்புபவன் யார்? அல்லாஹ்வுடன் வேறு இறைவனும் இருக்கிறானா? அவர்களின் இணைவைப்பை விட்டும் அல்லாஹ் மிக உயர்ந்தவன்.* (63)

   *மனிதர்கள் தரை வழியாக, கடல் வழியாக, வான் வழியாக பயணம் செய்யும்போது அல்லாஹ்தான் அவர்களுக்கு வழி காட்டுகிறான். அவன்தான் காற்றுகளைத் தான் விரும்பும் திசையில் வீசச்செய்பவன்.*

   *அவர்கள் அழைக்கும் போலியான கடவுள்கள் இவற்றில் எதை யாவது செய்கிறார்களா என்ன?*

5. *ஆரம்பத்தில் படைத்தவனும் பின்னர் மீண்டும் படைப்பவனும் யார்? வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உண வளிப்பவன் யார்? அல்லாஹ்வுடன் வேறு இறைவனும் இருக் கிறானா? நீர் கூறும், 'நீங்கள் உண்மையாளர்களாயின் உங்கள் ஆதாரத்தைக் கொண்டுவாருங்கள்.'* (64)

   *அவர்களிடம் எந்த ஆதாரமும் இல்லை. நிராகரிப்பிடம் கேட் கப்படத்தக்க எந்த ஆதாரமும் கிடையாது.*

*நாத்திகம் என்பது ஒரு நோயாகும். அது சிந்தனை அல்ல. அறிவு ஏற்றுக்கொள்ளாத யூகங்களின் மீது கர்வம் அவர்களை நிலைநிறுத்தி விடுகிறது.*

*இப்போது பரவலாகக் காணப்படுகின்ற சடவாதக் கோட்பாடு, 'கர்ப்பப்பை அதை வெளியேற்றுகிறது. பூமி அதை விழுங்கிவிடுகிறது.'*

என்ற சிந்தனையை அடித்தளமாகக் கொண்டதுதான். இது ஆரம்பக் காலச் சிலை வணக்கத்தின் பாதிப்பே ஆகும்.

விசித்திரம் என்னவென்றால், அது ஒரு அறிவியல் கோட்பாடாக உருமாறியதுதான். அது கூறுகிறது, 'ஆற்றல் அழியவும் செய்யாது; இல்லாமையிலிருந்து உருவாகவும் செய்யாது.'

இதன் தாக்கத்தால்தான் மனிதர்கள் பூஜ்யத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். மிருக நடத்தை எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

> நிராகரிப்பாளர்கள் கூறுகிறார்கள், 'நாங்களும் எங்கள் முன்னோர் களும் மண்ணோடு மண்ணாகிவிட்டாலும் மீண்டும் எழுப்பப்படு வோமா? இதற்கு முன் நாங்களும் எங்கள் முன்னோரும் இது குறித்து எச்சரிக்கப்பட்டிருந்தோம். இது முன்னோர்களின் கட்டுக் கதைகளே ஆகும்.' நீர் கூறும், 'குற்றவாளிகளின் முடிவு என்ன வாயிற்று என்பதைப் பூமியில் சுற்றித்திரிந்து பாருங்கள்.' (67-69)

இந்த வழிகேட்டை எதிர்கொள்ளும்படியும் மனிதர்களுக்கு மறுவுலக வாழ்க்கையைக் கண்முன்னால் சித்தரித்துக் காட்டும்படியும் அல்லாஹ் வின் மீது நம்பிக்கை கொண்ட, அவனுடைய வஹீயோடு தொடர்பு கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கும்படியும் கூலி கொடுக்கப்படும் நாளுக்காக அவர்களைத் தயார்படுத்தும்படியும் அறபியான முஹம்மது நபி பொறுப்பு சாட்டப்பட்டார்கள்.

இஸ்லாம், மறுமையை நோக்கமாகக் கொண்டு செயல்படக்கூடிய, தம் இறைவனுக்கு முன்னால் ஐந்து வேளையும் வரிசையாக நிற்கக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்கிக் காட்டியது.

❖ ❖ ❖

இந்த அத்தியாயத்தில் இறுதி நாளின் பெரும் அடையாளங்களில் ஒன்றாக, விலங்குகள் உலகிலிருந்து ஒரு விலங்கு வெளிப்பட்டு மனிதர் களிடம் பேசும் என்றும் கூறப்பட்டுள்ளது. அது மனிதர்களிடம் கேட்கும், 'உங்கள் இறைவனை எப்படி மறந்தீர்கள்? உங்களின் அறிவை நிராகரித்து உங்களின் படைப்பாளனை ஏற்க மறுத்தீர்களா? இது என்ன வகையான நிராகரிப்பு?'

நான் இவ்வாறு கற்பனைசெய்கிறேன்: அது அறிவுடையோரையும் பெரும் பதவிகளில் இருப்போரையும் எதிர்கொண்டு கூறும், 'விலங்குகள் உலகம் உங்களைவிட மேலானது. உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவு

*அவற்றுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, அவற்றின் அறியாமையால் அவை பழிக்கப்பட மாட்டா. ஆனால், உங்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்கினான். நீங்களோ அதற்கு எதிராகப் போரிட்டுவிட்டீர்கள். எவ்வளவு மோசமான மனிதர்கள் நீங்கள்!'*

*'மறுமைநாள் அவர்களை நெருங்கிவிட்டால் நாம் அவர்களுக்குப் பூமியிலிருந்து ஒரு பிராணியை வெளிப்படுத்துவோம். மக்கள் நம் வசனங்களை நம்பாமல் இருந்ததுகுறித்து அது அவர்களிடம் பேசும்.* (82)*'* *இந்தப் பிராணிகுறித்து பல கட்டுக்கதைகள் அறிவிப்புகளில் காணப்படுகின்றன. உறுதியான செய்திக்கு நமக்கு இந்த அளவே போதுமானது.*

*மறுமைநாளையும் விசாரணையையும் குறித்த செய்தியோடு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது. அது நியாயத்தின் அடிப்படையில்தான் நிலைபெறும்.*

> *நன்மை செய்பவருக்கு அதைவிடச் சிறந்த கூலி கிடைக்கும். அந்நாளின் திடுக்கத்தை விட்டும் அவர் பாதுகாக்கப்படுவார். தீமைசெய்பவர் முகங்குப்புற நரகத்தில் வீசப்படுவார். உங்களின் செயல்களுக்குத்தான் நீங்கள் கூலி கொடுக்கப்படுகிறீர்கள்.* (89,90)

*அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பெரும் பணிக்கான பொறுப்பு இறுதிநாள்வரை தூதரின் வசம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்தான் இந்தக் குர்ஆனைக் கொண்டு வஹீயை எடுத்துரைக்கக்கூடிய, அதனடிப்படையில் பல சமூகங்களை உருவாக்கக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்கினார்.*

> *'இந்நகரத்தைப் புனிதமாக்கிய இறைவனையே நான் வணங்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளேன். எல்லாப் பொருள்களும் அவனுக்கே உரியன. அவனுக்கு அடிபணிய வேண்டும் என்றும் குர்ஆனை எடுத்துரைக்க வேண்டும் என்றும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்.'* (91)

*காலம் நிர்ணயிக்கப்பட்ட இந்த உலகத்தில் இஸ்லாத்தின் எதிர்காலமும் நிராகரிப்பின் எதிர்காலமும் விரைவில் வெளிப்பட்டுவிடும். 'நீர் கூறும், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. தன் சான்றுகளை அவன் விரைவில் உங்களுக்குக் காண்பிப்பான். நீங்கள் அவற்றை அறிந்து கொள்வீர்கள். நீங்கள் செய்பவற்றை அவன் கவனிக்காமல் இல்லை.* (93)*'*

❖ ❖ ❖

அத்தியாயம் 28

# அல்கஸஸ்

(வரலாறுகள்)

*இந்த அத்தியாயம் நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் எதிர் காலம் குறித்து நம்பிக்கையூட்டியவாறும் அநியாயத்தின் விளைவு மிக மோச மானது என்பதையும் பொறுமையின் முடிவு அழகானது என்பதையும் பலவீனர்கள் தங்களைப் பிணைத்திருக்கும் தளைகளை அறுத்தெறிந்து இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றே தீருவார்கள் என்பதையும் அழுத் தம் திருத்தமாகக் கூறியவாறும் தொடங்குகிறது.*

*வரலாறு மீண்டும் திரும்பும் என்பதற்கு மூசாவுக்கும் அவருடைய சமூகத்தாருக்கும் நிகழ்ந்த சம்பவம் உதாரணமாக எடுத்துரைக்கப்படு கிறது.*

*'தா, சீம், மீம். இவை தெளிவான வேதத்தின் வசனங்களாகும். நம்பிக்கை கொண்ட மக்களுக்காக மூசா மற்றும் ஃபிர்அவ்னின் சில செய்திகளை நாம் உமக்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறோம்.* (1-3)' *ஃபிர்அவ்ன் என்பவன் கன்ஜ் நதிக்கரையிலிருந்து தானூப் நதிக்கரை வரை பரந்துவிரிந்திருந்த பேரரசின் இரண்டாவது அரசனாவான். அவன் அடைந்த இந்த உயர்வு தன்னைக் கடவுள் என அறிவிக்கவும் அநியாயம் செய்யவும் அவனைத் தூண்டியது.*

> *நிச்சயமாக ஃபிர்அவ்ன் பூமியில் வரம்புமீறினான். அதில் உள் ளோரைப் பல பிரிவினர்களாக்கி, அவர்களில் ஒரு பிரிவினரை அடக்கியொடுக்கியிருந்தான். அவர்களின் ஆண் குழந்தைகளைக் கொன்றுவிட்டுப் பெண் குழந்தைகளை உயிருடன் விட்டுக் கொண்டிருந்தான். உண்மையில் அவன் குழப்பம் விளைவிப்ப வனாக இருந்தான்.* (4)

ஆண் குழந்தைகளைக் கொன்றுவிட்டு, அவர்களின் எந்தக் கண்ணியமும் மீதமிருக்காமல் இருக்க பெண்களை மட்டும் உயிருடன் விடுவது, அவர்களைத் தங்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்வது நிச்சயமாகப் பெரும் வேதனையும் நிம்மதி இழக்கச் செய்யும் குழப்பமுமாகும்.

ஆனாலும் இறுதிவரை இப்படித்தான் நிலைமை நீடிக்குமா? நிச்சயமாக இல்லை. இரவை அடுத்து பகல் வந்தே தீரும், அல்லவா?

பூமியில் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது நாம் கிருபைசெய்து அவர்களை வழிகாட்டிகளாக்கவும் வாரிசுகளாக்கவும் நாடினோம். (5)

இது கடந்தகாலச் செய்தியாக இருந்தாலும் இணைவைப்பாளர்களால் துன்பங்களையும் தொல்லைகளையும் அனுபவித்துக்கொண்டிருந்த முஸ்லிம்களுக்கு ஆறுதலாகவும் நற்செய்தியாகவும் அமைந்தது. அவர்கள் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த அத்தியாயத்தின் இறுதியில், 'இப்போது முஸ்லிம்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்கள் விரைவில் ஒன்றுமில்லாமல் மறைந்துவிடும்.' என்று நற்செய்தி கூறப்படுகிறது.

இந்தக் குர்ஆனை உம்மீது கடமையாக்கியவன் உம்மை ஒரு நல்ல முடிவின் பக்கம் கொண்டுசேர்த்தே தீருவான். நீர் கூறும், 'யார் நேர்வழியைக் கொண்டுவந்துள்ளார், யார் வெளிப்படையான வழிகேட்டில் இருக்கிறார் என்பதை என் இறைவனே நன்கறிவான்.' (85)

குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள், முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவை நோக்கிப் புலம்பெயர்ந்த சமயத்தில் இந்த வசனம் அருளப்பட்டது. ஒடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட முஹாஜிர்கள் பின்னர் வெற்றியாளர்களாக மக்காவுக்குத் திரும்பிச் சென்றார்கள்.

மூசாவையும் அவருடைய சமூகத்தாரையும் குறித்த செய்தியோடு தொடங்கும் இந்த அத்தியாயம், முந்தைய இரு அத்தியாயங்களிலும் இல்லாத பல தகவல்களைக் கொண்டுள்ளது.

1. மூசாவின் பிறப்பும் வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தில் அவர் கடந்துவந்த சோதனைகளும்:

   நாம் மூசாவின் அன்னைக்கு, 'நீர் அவருக்குப் பாலூட்டும். இவ்விசயத்தில் உமக்கு அச்சம் ஏற்பட்டால் அவரை ஆற்றில் விட்டுவிடும். நீர் அச்சப்படவோ கவலைப்படவோ வேண்டாம்.

நாம் அவரை உம்மிடம் திரும்பக் கொண்டு வருவோம். அவரைத் தூதர்களில் ஒருவராகவும் ஆக்குவோம்.' என்று உள்ளுதிப்பு ஏற்படுத்தினோம். (7)

தம் குழந்தையைக் ஆற்றில் போடுமாறு மூசாவின் தாயார் பணிக்கப்பட்டது உண்மையில் மிகப் பெரும் விசயமாகும். ஆனாலும் அவர் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு, தமக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றினார்.

இந்த வசனத்தில் கவனம் செலுத்துபவர் இரண்டு கட்டளை களையும் இரண்டு விலக்கல்களையும் இரண்டு நற்செய்தி களையும் காண்பார்.

அந்தப் பெட்டி விலைமதிக்க முடியாத அந்தப் பொருளுடன் சென்றபோது அலைகள் அதனை ஃபிர்அவ்னின் கோட்டைக்கு முன்னால் கொண்டுபோய் சேர்த்தன. மூசாவின் தாயாருடைய உள்ளம் பயத்தினால் வெறுமையாகிப் போயிருந்தது. ஆனாலும் அவர் அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டி ருந்தார். 'மூசாவுடைய அன்னையின் உள்ளம் வெறுமையாகி விட்டது. அவள் நம்பிக்கை கொண்டவளாக ஆக வேண்டும் என்பதற்காக அவளது உள்ளத்தை நாம் உறுதிப்படுத்தியிரா விட்டால் அவள் அக்குழந்தையைப் பற்றிய விசயத்தை வெளிப்படுத்தியிருப்பாள். (10)'

2. அல்லாஹ் அந்தக் குழந்தையிடம் பார்ப்பவர்கள் விரும்பும் அளவுக்கு, அன்பு செலுத்தும் அளவுக்கு ஈர்ப்பாற்றலை ஏற் படுத்தினான்.

இதுதான் ஃபிர்அவ்னின் மனைவியை அவனிடம் இவ்வாறு கூறவைத்தது: 'இந்தக் குழந்தை எனக்கும் உங்களுக்கும் கண் குளிர்ச்சியாக உள்ளது. நீங்கள் இதனைக் கொன்றுவிடாதீர்கள். இது நமக்குப் பயனளிக்கலாம் அல்லது இதனை நம் மகனாகத் தத்தெடுத்துக்கொள்ளலாம். (9)' குழந்தை உயிருடன் விடப் பட்டது. குழந்தையின் நிலையை உளவறிந்துகொண்டிருந்த அதன் சகோதரி ஃபிர்அவ்னின் வீட்டுக்குச் சென்று பாலூட்டும் செவிலித்தாய் ஒருத்தியை ஏற்பாடுசெய்வதாகக் கூறினாள். ஏனெனில், அந்தக் குழந்தை அவர்கள் ஏற்பாடுசெய்திருந்த செவிலித்தாய்மார் யாரிடமும் பால் குடிக்க மறுத்துவிட்டது.

அந்தக் குழந்தை தன் தாயாரிடமே பாலூட்டுவதற்காக ஒப் படைக்கப்பட்டது. ஒருவரும் அதன் வரலாற்றை அறியவில்லை.

3. ஃபிர்அவ்னின் கோட்டையில்தான் மூசா வளர்ந்தார். சமூகத்தின் இழிவான நிலையால் எந்த வகையிலும் அவர் பாதிக்காதவாறு அல்லாஹ் அவருக்கு வசதிகளை ஏற்படுத்தியிருந்தான். எதிர்காலத்தில் அவர் நிறைவேற்றப்போகும் பெரும் பணிக்காக அவர் தயார்படுத்தப்பட்டார். ‘மூசா தம் வாலிபத்தை அடைந்து பக்குவமடைந்தபோது நாம் அவருக்கு ஞானத்தையும் அறிவையும் வழங்கினோம். நன்மைசெய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி வழங்குகிறோம். (14)’

இந்தக் காலகட்டத்தில்தான் ஒரு சம்பவம் நிகழ்ந்து எகிப்தில் அவரது இருப்புக்கு ஆபத்தாக அமைந்தது. ஒருநாள் தம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் எகிப்தியர்களில் ஒருவரும் சண்டையிட்டுக்கொண்டிருப்பதை அவர் கண்டார். ‘அவரது சமூகத்தைச் சேர்ந்தவர் தமது எதிரிக்கு எதிராக அவரிடம் உதவி கோரினார். ஆகவே, மூசா அவரை ஓங்கி ஒரு குத்து குத்தினார். அதனால் அவர் இறந்துவிட்டார். (15)’

மூசா பெரும் பலசாலியாக இருந்தார். ஆனாலும் தமது குத்து கொலைசெய்யும் அளவுக்கு வலிமையானது என்பதை அவர் அறியவில்லை. அவர் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்: ‘என் இறைவா, எனக்குநானே தீங்கிழைத்துக்கொண்டேன். ஆகவே, என்னை மன்னித்துவிடுவாயாக! (16)’

தம்மை அல்லாஹ் மன்னித்துவிட்டான் என்பதை அவர் உணர்ந்தபோது அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு இனி அநீதி இழைக்கப்பட்டோருக்கு உதவுவதாகவும் குற்றவாளிகளை எதிர்த்துச் சண்டையிடுவதாகவும் அவனிடம் வாக்குறுதியளித்தார்.

ஃபிர்அவ்னின் சபையினர் இந்தச் சம்பவத்தை அறிந்துகொண்டார்கள். அவரைக் கொலைசெய்வதற்குத் திட்டம் தீட்டினார்கள். அதனை அறிந்துகொண்ட மூசாவின் நலன் விரும்பிகளில் ஒருவர் அதனை மூசாவிடம் அறிவித்தார். மூசா எகிப்தை விட்டுவிட்டு மத்யனை நோக்கிச் செல்ல வேண்டும் என முடிவுசெய்தார்.

4. மூசாவின் கதையைக் கேட்டுவிட்டு மத்யனில் அவருக்கு அடைக்கலமளித்த நல்ல மனிதரின் மகளை மூசா மணமுடித்துக்கொண்டார். அவர் மூசாவிடம் கூறினார், ‘பயப்படாதீர்.

*அல்லாஹ் உம்மை அநியாயக்கார மக்களிடமிருந்து காப்பாற்றி விட்டான். (25)' யூதர்கள் மூசாவின் மீது சொல்லும் குறைகளில் அவர் இப்றானிய பெண் அல்லாத வேறு பெண்ணைத் திரு மணம் செய்துகொண்டார் என்பதும் ஒன்றாகும்.*

*அந்த நல்ல மனிதர் எதனடிப்படையில் தம் பிரியமான பெண்ணை மூசாவுக்கு வழங்கினார் என்பதை நாம் அறிய மாட்டோம். அவர் ஷுஐபு நபிதான் என்று நாம் கருதவுமில்லை. எவ்வாறு இருப்பினும் அவர் மூசாவிடம் கூறினார்:*

*'நீர் எட்டு ஆண்டுகள் என்னிடம் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் என்னுடைய இவ்விரு பெண்களில் ஒருத்தியை உமக்குத் திருமணம் செய்து தர நான் விரும்பு கிறேன். நீர் பத்து ஆண்டுகள் நிறைவுசெய்தால் அது உமது விருப்பமாகும். நான் உம்மைச் சிரமத்தில் ஆழ்த்த விரும்ப வில்லை. அல்லாஹ் நாடினால் நீர் என்னை நல்லோர்களில் ஒருவராகக் காண்பீர்.' (27)*

*இவ்வாறு கோட்டையின் தலைவராக இருந்தவர் ஆடு மேய்ப்பவராக மாற்றமடைந்தார்.*

*மகத்தான மனிதர்கள் இந்தப் பதவிகளால் சிறப்படைவதுமில்லை, தாழ்ந்துவிடுவதுமில்லை. அவர்களின் ஆளுமைதான் அவர்களை அலங் கரித்துக் காட்டுகிறது. அதனைக் கொண்டு மக்கள் அவர்களை அறிந்து கொள்கிறார்கள்.*

*இந்தக் காலகட்டத்தில் மூசா தமக்கும் தம் சமூகத்தாருக்கும் நிகழ்ந்த வற்றை நினைத்துப் பார்த்துச் சிந்தனை செய்தார். எதிர்காலத்தில் அவர் மீது சுமத்தப்படவிருக்கும் பெரும் பணிக்காக விதி அவரைத் தயார் செய்வதுபோல் இருந்தது.*

*மூசா தம் தவணையை நிறைவுசெய்துவிட்டுத் தம் குடும்பத்துடன் சென்றபோது தூர் மலையின் பக்கம் ஒரு நெருப்பைக் கண்டார். அவர் தம் குடும்பத்தாரிடம், 'நீங்கள் இங்கேயே இருங்கள். நான் நெருப்பைக் காண்கிறேன். நான் அங்கிருந்து ஏதேனும் செய்தி யையோ நீங்கள் குளிர்காய்வதற்காக ஒரு நெருப்புக் கொள்ளி யையோ உங்களிடம் கொண்டுவரக்கூடும்.' என்று கூறினார். (29)*

*மகத்தான அந்தப் பணிக்காக மூசாவை ஈர்க்கக்கூடியதாக அந்த நெருப்பு இருந்தது. அவர் அங்கு சென்றதும் பள்ளத்தாக்கின் வலது கரையின்*

அருள்வளம்மிக்க பகுதியில் உள்ள ஒரு மரத்திலிருந்து, 'மூசாவே, நான் தான் அல்லாஹ், அகிலங்களின் அதிபதி என்று அழைக்கப்பட்டார் ... (30)'

இவ்வாறு ஆடுமேய்ப்பர், தூதுத்துவத்தோடு தம் சமூகத்தை விடு விக்கும் பொறுப்பும் வழங்கப்பட்ட கண்ணியம்மிக்க தூதராக மாற்ற மடைந்தார். ஆனாலும் மூசா ஃபிர்அவ்ன்களுடன் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை எண்ணிப்பார்த்து, தம் சகோதரரைக் கொண்டு தம்மை வலுப்படுத்தும்படி அல்லாஹ்விடம் கோரிக்கை வைத்தார். அல்லாஹ் அவருக்குக் கூறினான்: 'நாம் உம் சகோதரர்மூலம் உம்மைப் பலப்படுத்து வோம். உங்கள் இருவரையும் மேலோங்கச் செய்வோம். அவர்களால் உங்களை நெருங்க முடியாது. நீங்களும் உங்களைப் பின்பற்றியோரும் தாம் வெற்றிபெறுவீர்கள். (35)'

மூசா, சந்திப்பு நிச்சயிக்கப்பட்ட நாளில் சூனியக்காரர்களை எதிர் கொண்டார். அவர்களின் சூழ்ச்சிகள் அனைத்தையும் முறியடித்து ஃபிர்அவ்னின் கர்வத்தை இழிவடையச் செய்தார். இந்தச் சந்திப்பு குறித்து அல்அஃறாஃப், தாஹா, ஷுஅறா ஆகிய அத்தியாயங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மூசாவின் வெற்றி மக்களால் முன்மாதிரியாக நினைவுகூரப்படும் சொல்லாக மாறிவிட்டது. ஒரு கவிஞர் கூறுகிறார்:

'மூசா தம் கைத்தடியைப் போட்டவுடன் சூனியமும்
சூனியக்காரர்களும் ஒன்றுமில்லாமல் ஆகிவிட்டனர்.'

சூனியக்காரர்களின் சம்பவம் இந்த அத்தியாயத்தின் பின்வரும் வச னத்தில் சுருக்கமாக உணர்த்தப்பட்டுள்ளது: 'மூசா அவர்களிடம் நம் முடைய தெளிவான சான்றுகளுடன் சென்றபோது அவர்கள், இது புனை யப்பட்ட சூனியம்தான், எங்களுடைய முன்னோர்களிடம் இதுகுறித்து எதுவும் நாங்கள் கேள்விப்பட்டதில்லை என்று கூறினார்கள். (36)'

ஆனாலும் வேறொரு செய்தி இங்கு குறிப்பிடப்படுகிறது. ஃபிர்அவ்ன் தன் அமைச்சர் ஹாமானிடம் மூசாவின் இறைவனைக் குறித்து வானத்தில் தேடிப்பார்க்குமாறு கட்டளையிடுகிறான்.

'அவையோரே, நான் உங்களுக்கு என்னைத் தவிர வேறு இறை வனை அறிந்திருக்கவில்லை. ஹாமானே, நான் மூசாவின் இறை வனை எட்டிப்பார்ப்பதற்காகக் களிமண்ணைச் சுட்டு ஓர் உயர்ந்த கட்டடத்தை எனக்காக எழுப்பு. நான் அவரைப் பொய்யராகத்தான் கருதுகிறேன்.' (38)

அல்லாஹ் வானவெளியில் பறவைகளுடன் இருக்கிறான் அல்லது மேகத்தின் மீது அமர்ந்திருக்கிறான் என்று அந்த மூடன் நினைத்துக் கொண்டான் போல.

நம்முடைய இந்தக் காலத்திலும் இதுபோன்ற மடத்தனத்தைக் காண்கிறோம். விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ரஷ்யாவைச் சேர்ந்த ஒருவன் அங்கு அல்லாஹ்வைக் காணவில்லையாம். தன்னுடன் வந்த மற்றொருவனை மட்டும்தான் அங்கு கண்டானாம்.

அங்கு சென்ற மூவரையும் கொல்ல வேண்டும் என அல்லாஹ் நாடிவிட்டான். இறங்கும் வழியில் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் மூவரும் மூச்சுத் திணறிச் செத்துவிட்டார்கள்.

நிராகரிப்பு என்பது மாபெரும் வழிகேடாகும். இவர்கள் வானவெளி யில் சென்று ஏன் இறைவனைத் தேடுகிறார்கள்? நாம் உண்ணும் உணவை விளையச்செய்பவன், நாம் சுவாசிக்கும் காற்றை உருவாக்கியவன் அந்த இறைவன்தானே!

வானத்தில் இருக்கும் சான்றுகளைவிடப் பூமியில் இருக்கும் சான்று களே நமக்கு நெருக்கமானவை. ஆனாலும் உள்ளங்களில் படிந்திருக்கும் குருட்டுத்தனம்தான் அவற்றைக் காணவிடாமல் அவர்களைத் தடுக்கிறது. ‘நாம் நரகத்தின் பக்கம் அழைக்கும் தலைவர்களாக அவர்களை ஆக்கி னோம். மறுமைநாளில் அவர்கள் உதவிசெய்யப்பட மாட்டார்கள். இவ் வுலகில் நாம் அவர்கள்மீது சாபத்தைத் தொடரச் செய்தோம். மறுமை நாளில் அவர்கள் அருவருப்பானவர்களாக இருப்பார்கள். (41,42)’

❖ ❖ ❖

வசனங்கள் மூசாகுறித்த செய்தியிலிருந்து அறிவின், ஒளியின் தூதர் முஹம்மதுகுறித்த செய்தியின் பக்கம் இடம்பெயர்கின்றன. அவருக்கு வழங்கப்பட்ட இந்த வேதத்தின் மீதான நம்பிக்கை சிந்தனையையும் ஆய்வையும் அடித்தளமாகக் கொண்டது.

மத்யன் பிரதேசத்தில் நிகழ்ந்த மூசாவின் சம்பவத்தையும் அவர் அங்கு எவ்வாறு ஒரு குடும்பத்தைப் பெற்றார் என்பதையும் எவ்வாறு தூதுத் துவத்தைப் பெற்றார் என்பதையும் ஃபிர்அவ்ன்களுக்குச் சத்திய அழைப்பு விடுப்பதற்காக மீண்டும் அவர் எகிப்து சென்றதையும் முஹம்மது எடுத் துரைத்தார்.

இந்தச் செய்திகள் அவருக்கு எங்கிருந்து கிடைத்தன? அவர் சிலை வழிபாட்டுச் சூழலில் வளர்ந்த, எழுதவோ படிக்கவோ தெரியாத ஒரு மனிதர்தானே?

‘நாம் மூசாவுக்குக் கட்டளைகளை வழங்கியபோது நீர் மலையின் மேற்குப் பகுதியில் இருக்கவில்லை; அதனைப் பார்த்துக்கொண்டி

ருந்தவர்களில் ஒருவராகவும் இருக்கவில்லை. ஆயினும் நாம் பல்வேறு சமூகங்களைப் படைத்தோம். அவர்களின் வாழ்நாள் நீண்டுவிட்டது. மத்யன்வாசிகளுடன் வசித்து, நமது வசனங்களை எடுத்துக்கூறுபவராக நீர் இருக்கவில்லை. ஆயினும் நாம் தூதர்களை அனுப்புகிறோம்.' (44,45)

அல்லாஹ் தன் தூதரை ஒரு வேதத்தைக் கொண்டு வலுப்படுத்தினான். அது முந்தைய தூதுத்துவங்கள் அனைத்தையும் புதுப்பித்தது. அவற்றைத் தவறுகளிலிருந்து சீர்படுத்தியது. மக்கள் அவரோடு எப்படி நடந்துகொண்டார்கள்? மூசா நிகழ்த்தியது போன்று அற்புதங்களை நிகழ்த்துமாறு அவரிடம் கோரினார்கள். மூசா அற்புதங்களை நிகழ்த்தியபோது அவர்கள் நம்பிக்கை கொண்டார்களா என்ன?

கடலில் மூழ்கடிக்கப்படாமல் காப்பாற்றப்பட்ட யூதர்கள் அதன் பிறகு மற்ற சிலை வழிபாட்டாளர்களைப் போன்று தங்களுக்கும் ஒரு சிலையை உருவாக்கித்தரும்படி மூசாவிடம் வேண்டினார்கள். இதுதானா ஈமான்?

இந்தக் குர்ஆனை ஆராய்ந்துபார்த்தவர்களும் வஹீயைக் கொண்டு பயனடைந்தவர்களும் சிலைகளை உடைத்தார்கள். தவ்ஹீதின் கீர்த்தியை உலகெங்கும் கொண்டுசென்றார்கள். அற்புதங்கள் நிகழ்த்துமாறு வேண்டுவோரைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

ஆயினும் நம்மிடமிருந்து சத்தியம் அவர்களிடம் வந்தபோது, 'மூசாவுக்கு வழங்கப்பட்டது போன்று இவருக்கும் ஏன் வழங்கப்படவில்லை.' என்று கேட்கிறார்கள். இதற்கு முன்னர் மூசாவுக்கு வழங்கப்பட்டதை அவர்கள் நிராகரிக்கவில்லையா? அப்போது அவர்கள் கூறினார்கள், 'இவர்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கின்ற சூனியக்காரர்கள். நாங்கள் இருவரையுமே நிராகரிக்கிறோம்.' (48)

❖ ❖ ❖

சரியான பார்வையை இழப்பதும் மனஇச்சையைப் பின்பற்றிச் செல்வதும் அழிவின் பக்கமே இட்டுச்செல்லும். ஆரம்பக் கட்ட சிலை வழிபாடு தனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்கள் அனைத்தையும் கொண்டு இஸ்லாத்தை எதிர்த்தது. ஆனால், வஹீயைக் குறித்து நன்கறிந்திருந்த வேதக்காரர்கள் நியாயமாக நடந்துகொள்ளும்படி வேண்டப்பட்டார்கள். அவர்களில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் நல்ல முறையில் வரவேற்கப்பட்டார்கள். அவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

யாருக்கெல்லாம் நாம் இதற்கு முன்னர் வேதம் வழங்கியிருந்தோமோ அவர்கள் இந்தக் குர்ஆனின் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். அவர்களிடம் இது ஓதிக்காட்டப்பட்டால் 'நாங்கள் இதன் மீது நம்பிக்கை கொண்டோம். இது எங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையாகும். நாங்கள் முன்னரே இதனை ஏற்றுக் கொண்டுள்ளோம்.' என்று கூறுவார்கள். அவர்கள் உறுதியாக இருந்ததால் அவர்களுக்குரிய கூலி இரு மடங்காக வழங்கப்படும். (52-54)

வேதக்காரர்களிலிருந்து யார்யாரெல்லாம் நம்பிக்கை கொண்டார்களோ அவர்களைக் குறித்து நபியவர்கள் கூறினார்கள், 'மூன்று மனிதர்கள் இருமடங்கு கூலியைப் பெறுவார்கள். ஒரு மனிதர், தம் தூதர்மீது நம்பிக்கை கொண்டு, பின்னர் என்னை அடைந்து என்மீதும் நம்பிக்கை கொண்டு என்னைப் பின்பற்றி உண்மைப்படுத்தியவர். அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு. மற்றொருவர் தன்னிடம் உள்ள அடிமைப் பெண்ணுக்கு நல்ல முறையில் உணவளித்து, ஒழுக்கம் கற்பித்து, பின்னர் அவளை விடுதலைசெய்து மணமுடித்துக்கொண்டவர். அவருக்கும் இரண்டு கூலிகள் கிடைக்கும். மூன்றாமவர், அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் தன் எஜமானனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் நிறைவேற்றிய அடிமை. அவருக்கும் இரண்டு கூலிகள் உண்டு.'

ஆசியாவின் மேற்குப் பகுதி, வடக்கு ஆப்பிரிக்கா ஆகிய ரோமானிய பேரரசுக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த ஏராளமான கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை அறிந்துகொண்டு, அது சொல்லக்கூடிய அடிப்படையான கொள்கைகளில் திருப்தி கொண்டு முஸ்லிம்களாக ஆகியிருக்கிறார்கள்.

ஆனால், அறபு தீபகற்பத்தின் சிலை வழிபாட்டாளர்கள் ஆரம்பத்தில் இஸ்லாத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள். புதிய மார்க்கத்துக்கு எதிராகப் பெரும் போரை அறிவித்தார்கள். அவர்களின் இந்த நிலைப்பாடு நபியவர்களை வேதனைப்படுத்தியது. அல்லாஹ் நபியவர்களிடம் கூறினான், 'நீர் விரும்புவோருக்கு நேர்வழி அளிக்க உம்மால் முடியாது. ஆயினும் தான் நாடியோருக்கு அல்லாஹ் நேரான வழியை அளிக்கிறான். நேர்வழி பெறக்கூடியவர்களை அவன் மிகவும் நன்கறிந்தவன். (56)'

இந்த வசனம் அபூதாலிபு குறித்து அருளப்பட்டது என்று கூறப்படுகிறது. அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நபியவர்கள் பேரார்வம் கொண்டிருந்தார்கள். அவரும் தம் சகோதரர் மகன் உண்மையாளர் என்பதை அறிந்திருந்தார். ஆனாலும் அன்று பரவியிருந்த குல வழக்கம் இஸ்லாத்தை ஏற்கவிடாமல் அவரைத் தடுத்தது. அவர் கூறினார்,

'முஹம்மதின் மார்க்கம் இந்த உலகில் உள்ள எல்லா மார்க்கங்களை விடவும் சிறந்த மார்க்கம் என்பதை நான் அறிந்துகொண்டேன். பழிசொல் மட்டும் இல்லையெனில் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்பவராக நீர் என்னைக் காண்பீர்.'

குறைஷி குலத்தைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவரிடமிருந்தும் இவ்வாறு அறிவிக்கப்படுகிறது, 'நீர் கூறுவது சத்தியம் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால், நாங்கள் உம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு உம்மைப் பின்பற்றினால் அறபுகள் எங்களை மக்காவிலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்று நாங்கள் அஞ்சுகிறோம்.' பின்வரும் வசனம் இதனையே சுட்டிக்காட்டுகிறது:

'உம்முடன் சேர்ந்து நாங்களும் இந்த வழிகாட்டுதலின்படி நடந்தால் எங்கள் ஊரிலிருந்து நாங்கள் வாரிச்செல்லப்பட்டு விடுவோம்.' என்று அவர்கள் கூறுகிறார்கள். நாம் அவர்களுக்கு அமைதியான, பாதுகாப்பான புனித பூமியை அளிக்கவில்லையா? அங்கு நம்மிடமிருந்துள்ள உணவாக அனைத்துக் கனிகளும் கொண்டுவரப்படவில்லையா? ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் அறிய மாட்டார்கள். (57)

இந்த நிராகரிப்பின் மோசமான விளைவுகளைக் கூறி திருக்குர்ஆன் அவர்களை எச்சரிக்கிறது: 'தங்களது வாழ்க்கை வசதிகள் குறித்து கர்வம் கொண்டிருந்த எத்தனையோ ஊர்வாசிகளை நாம் அழித்துவிட்டோம். இவைதான் அவர்கள் வாழ்ந்திருந்த இடங்கள். மிகக் குறைவானவர்களைத் தவிர அவர்களுக்குப் பின் யாருமே அங்கு குடியிருக்கவில்லை. அதற்கு நாமே வாரிசானோம். (58)'

அவர்களைச் சத்தியத்தின் பக்கம் இட்டுச்செல்லும், உலக மோகங்களிலிருந்து எச்சரிக்கைசெய்யும் அறிவுரைகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. 'உங்களுக்கு வழங்கப்பட்டிருப்பவையெல்லாம் உலக வாழ்வின் இன்பங்களும் அதன் அலங்காரமும்தான். அல்லாஹ்விடம் இருப்பதுதான் மிகச் சிறந்தது; நிலையானது. நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? (60)'

வேதனையான விசயம் என்னவென்றால், பலர் அற்ப ஆதாயத்துக்காகச் சத்தியத்தை விற்றுவிடுகிறார்கள். அதன் மோசமான விளைவுகளைக் குறித்து எதுவும் அவர்கள் சிந்திப்பதில்லை.

கர்வம் கொள்வதற்கும் அக்கிரமம் புரிவதற்கும் பதிலாக நேர்மையாக, பணிவாக நடந்திருந்தால் ஃபிர்அவ்னுக்கு என்ன இழப்பு

ஏற்பட்டிருக்கும்? சூனியக்காரர்களைப் பின்பற்றியவர்கள் தங்கள் மன இச்சையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக நேர்மையாக நடந்திருந்தால் அவர்களுக்கு என்ன இழப்பு ஏற்பட்டிருக்கும்? சிலைவழிபாடு செய்து கொண்டிருந்த இந்த இரு பிரிவினரையும் திருக்குர்ஆன் பழிக்கிறது. அவர்களில் முதல் பிரிவினருக்கு அது கூறுகிறது:

அவன் அவர்களை அழைக்கின்ற நாளில், 'எனக்கு இணையான வர்கள் என்று நீங்கள் கூறிக்கொண்டிருந்தீர்களே அவர்கள் எங்கே?' என்று கேட்பான். எவரெவர்மீது வேதனை உறுதியாகிவிட்டதோ அவர்கள், 'எங்கள் இறைவா, இவர்களைத்தான் நாங்கள் வழி கெடுத்தோம். நாங்கள் வழிகெட்டவாறே இவர்களையும் வழி கெடுத்தோம். இவர்களைவிட்டும் நாங்கள் விலகிக்கொள்கிறோம். இவர்கள் எங்களை வணங்கிக்கொண்டிருக்கவில்லை.' என்று கூறுவார்கள். (62,63)

மற்றொரு பிரிவினருக்கு அது கூறுகிறது:

பின்னர், 'நீங்கள் எனக்கு இணையாக்கிய தெய்வங்களை அழை யுங்கள்!' என்று அவர்களிடம் கூறப்படும். அப்போது அவர்கள் அவற்றை அழைப்பார்கள். ஆனால், அவை அவர்களுக்குப் பதி லளிக்காது. அவர்கள் வேதனையைக் காண்பார்கள். அந்தோ! அவர்கள் நேர்வழி பெற்றிருக்கக் கூடாதா! (64)

இது மறுமைநாளின் காட்சிகளில் ஒன்று. ஏமாறுபவரும் ஏமாற்று பவரும் அச்சமடையும் பொருட்டு அதன் சில பகுதிகள் இப்போதே எடுத்துரைக்கப்படுகின்றன.

அந்தக் காட்சிகளுக்குப் பிறகு அல்லது அவற்றின் நடுவில் உண்மை யாளனாகிய அல்லாஹ்வைக் குறித்த செய்தி இடம்பெறுகிறது. அவன்தான் மனிதர்களைப் படைத்தவன். அவர்களிடையே வெவ்வேறு வகையான தனித்தன்மைகளையும் உருவாக்கியவன். அதனடிப்படையில் தான் விரும்பியவர்களை அவன் தேர்ந்தெடுக்கிறான். தான் விரும்பியவர்களை அவன் பிற்படுத்துகிறான். 'உம் இறைவன் தான் நாடியதைப் படைக்கி றான்; தான் நாடியவர்களைத் தேர்ந்தெடுக்கிறான். தேர்ந்தெடுப்பது அவர்களின் பணியன்று. அவர்களின் இணைவைப்பைவிட்டும் அல்லாஹ் மிகத் தூயவன்; மிக உயர்ந்தவன். (68)'

பின்னர் அவன், இந்தப் பிரபஞ்சத்தில் ஏற்படுத்திய ஒழுங்குமுறையைக் குறித்துப் பேசுகிறான். அதன் வானத்துக்கும் பூமிக்கும் மத்தியில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். 'நீர் அவர்களிடம் கேளும், நீங்களே

கூறுங்கள், அல்லாஹ் இரவை உங்கள்மீது மறுமைநாள்வரை நிரந்தர மாக ஆக்கிவிட்டால் அல்லாஹ்வைத் தவிர வேறெந்த இறைவனால் உங்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டுவர முடியும்? நீங்கள் செவியேற் கவே மாட்டீர்களா? (71)'

அல்லாஹ் இருள்களையும் ஒளியையையும் ஏற்படுத்தியது மனிதர் களைச் சோதிப்பதற்காகவே. ஒவ்வொரு மனிதனும் தாம் செய்த செயல்கள் குறித்தும் செய்யாமல் விட்டவைகுறித்தும் விசாரிக்கப்படுவான். அரசர்கள், அடிமைகள் அனைவரும் இந்த விசயத்தில் சமமானவர்கள்தாம்.

இறுதியில் சர்வாதிகாரம்குறித்து பேசப்படுகிறது. முதலாளித்துவத்தின் வரம்புமீறிய தன்மைகொண்டு அது தொடங்குகிறது. இந்த இரண்டு பண்புகளைவிட்டு நீங்காமல் அல்லாஹ்விடத்தில் வெற்றியைப் பெற முடியாது என்பதே இந்தச் சம்பவம் கூறும் அடிப்படையான அம்சமாகும்.

பின்னர் குர்ஆன், காறூனின் சம்பவத்தை எடுத்துரைக்கிறது. அவன் பெரும் செல்வந்தனாக இருந்தான். செல்வம் தன்னளவில் நன்மை யானதோ தீமையானதோ அல்ல. அது புகழப்படுவதும் இகழப்படுவதும் அது பயன்படுத்தப்படும் வழிமுறைக்கேற்பவே. திருடனின் கையில் உள்ள ஆயுதம் கொலைசெய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு இராணுவ வீரனின் கையில் உள்ள ஆயுதம் பாதுகாப்பதற்காக அல்லது பழிவாங்கு வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

ஆகவே தங்கம், வெள்ளியின் பெரும் குவியல்களைக் கொண்டிருந்த காறூனுக்குச் சொல்லப்பட்டது:

> அல்லாஹ் உனக்கு வழங்கியுள்ளதைக் கொண்டு மறுமையின் வீட்டைத் தேடிக்கொள். உலகில் உனது பங்கையும் மறந்துவிடாதே. அல்லாஹ் உனக்கு நன்மைபுரிந்தவாறே நீயும் மக்களுக்கு நன்மை செய். உலகில் குழப்பத்தை நாடாதே. நிச்சயமாக அல்லாஹ் குழப் பம் செய்வோரை நேசிக்க மாட்டான். (77)

மனமுவந்து தம் செல்வங்களை வாரி வழங்கும் எத்தனையோ செல் வந்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அடைப்பதற்காகவே ஓட்டைகளைத் தேடுகிறார்கள். ஏழைகளை இன்முகத்தோடு வரவேற்கிறார்கள். அவர்கள் வாய்திறந்து கேட்பதற்கு முன்பே இவர்கள் கொடுத்துவிடுகிறார்கள்.

அத்தகைய செல்வந்தர்கள் அல்லாஹ் தங்களுக்கு வழங்கியவற்றுக்காக நன்றி செலுத்துகிறார்கள். கர்வம் கொள்வதற்கோ மற்றவர்களின் மீது வரம்புமீறுவதற்கோ அவர்கள் செல்வத்தை ஒரு கருவியாகப் பயன் படுத்தவில்லை.

*நிச்சயமாக இது அல்லாஹ் தங்களுக்கு அளித்த சோதனை என எண்ணி தங்களின் கடமைகளை நிறைவேற்றுகிறார்கள்.*

*ஆனால் காறூன் தன் சம்பாத்தியத்தைத் தன் திறமையின் விளைச்சலாகக் கருதினான். அதன் காரணமாக மற்றவர்களை இழிவாகக் கருதவும் அவர்கள்மீது வரம்புமீறவும் தனக்கு உரிமை உண்டு என்று அவன் கருதினான். 'இச்செல்வங்கள் அனைத்தும் என் அறிவால்தான் எனக்குக் கிடைத்துள்ளன என்று அவன் கூறினான். இதற்கு முன்னர் அவனைவிட அதிக பலமும் எண்ணிக்கையும் கொண்ட எத்தனையோ சமூகங்களை அல்லாஹ் அழித்துள்ளான் என்பதை அவன் அறிந்துகொள்ளவில்லையா? குற்றவாளிகளிடம் அவர்கள் புரிந்த குற்றங்கள் குறித்து விளக்கம் கேட்கப்பட மாட்டாது. (78)'*

*அல்லாஹ்வின் தூதர்களில் செல்வந்தர்களும் ஏழைகளும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் அரசர்களாக இருந்திருக்கிறார்கள். சிலர் போதுமென்ற மனப்பான்மையோடு எளிய வாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களில் உள்ள செல்வந்தர்கள் கஞ்சத்தனம் செய்யவில்லை; வரம்புமீறவில்லை. அவர்களில் உள்ள ஏழைகள் இயலாமையை வெளிப்படுத்தவில்லை; தாழ்ந்துவிடவுமில்லை.*

*பல நாகரிகங்களில் செல்வத்தால் ஏற்படும் குழப்பம் கடுமையானதாக இருந்திருக்கிறது. தற்கால நாகரிகத்தில் அது குழப்பத்தின் ஊற்றாகவே இருக்கிறது. அவர்களிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் பல அமைப்புகள் தோன்றிவிட்டன.*

*வானத்தின் வஹீயைக் கொண்டு பூமியைச் சீர்படுத்த முயலும் இஸ்லாத்தின் போதனைகளில் அதற்கான சரியான தீர்வு காணப்படுகிறது. அது மனிதர்களுக்கு ஓர் உண்மையை அழுத்தம்திருத்தமாகக் கூறுகிறது:*

> *பூமியில் பெருமையையோ குழப்பத்தையோ விரும்பாதவர்களுக்குத்தான் நாம் மறுமையின் வீட்டை ஏற்படுத்தியுள்ளோம். இறுதி முடிவு இறையச்சமுடையோருக்கே. (83)*

*இந்த அத்தியாயத்தில் உள்ள இந்த வசனம், ஆட்சி செலுத்திய ஃபிர்அவ்னியம், செல்வங்களைச் சேகரித்துவைத்த காறூனியம் ஆகியவற்றின் வரலாற்றை இறைவன் எடுத்துரைத்த பிறகு இடம்பெறுகிறது. பின்னர், அவன் சரியான வழிமுறையைக் குறித்து கூறுகிறான்:*

> *யார் நன்மையைக் கொண்டுவருகிறாரோ அவருக்கு அதைவிடச் சிறந்த கூலி உண்டு. யார் தீமையைக் கொண்டுவருகிறாரோ,*

> *தீமைசெய்தோர் அவர்களின் தீமைகளின் அளவுக்குத்தான் கூலி வழங்கப்படுவார்கள்.* (84)

*மனித வாழ்க்கை சரியான ஒரு மார்க்கமின்றிச் சீரடையாது என்பதையும் தூய உள்ளமின்றி அது நிலைபெறாது என்பதையும் சட்டங்களும் விதிமுறைகளும் மறுமைநாள்மீது கொள்ளும் நம்பிக்கையை விட்டும், நற்செயல்களைக் கொண்டு அதற்காக நம்மைத் தயார்படுத்துவதை விட்டும் நம்மைத் தேவையற்றவர்களாக ஆக்கிவிடாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

*எனக்குக் கவலையை ஏற்படுத்தும் விசயங்களில் ஒன்று, முஸ்லிம்களில் சிலர் நன்னடத்தையைக் கொண்டு தங்களின் ஈமானை அலங்கரித்துக் கொள்ளாமல், அவர்களுக்குக் கட்டளையிட்டபடி நீதியை நிலைநிறுத்தாமல் வெறுமனே தவ்ஹீதின் கோஷத்தை உயர்த்துவது போதுமானது என்று எண்ணிக்கொள்கிறார்கள். அவர்களின் இந்தக் கொள்கை முர்ஜிஆ கொள்கையுடைய கவிஞரின் பின்வரும் கூற்றைப் போன்றதுதான்: 'முஸ்லிமாக இரு. பாவங்களை எண்ணிப் பயப்படாதே. கண்காணிப்பாளனான அல்லாஹ் நன்மைசெய்யாமல் இருப்பதை விட்டும் தூய்மையானவன். அவன் உன்னை நரக நெருப்பில் புகுத்த நாடியிருந்தால் உன் உள்ளத்துக்குத் தவ்ஹீது என்னும் பேரொளியை வழங்கியிருக்க மாட்டான்.'*

*முஸ்லிம்களிடையே நீண்ட காலமாக இந்தக் கொள்கை வேரூன்றிக் கிடக்கிறது. செயல்படுவதை அவர்கள் உபரியான ஒன்றாகக் கருதுகிறார்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்ட ஒருவன் எப்படித்தான் செயல்பட்டாலும் வெற்றிபெறுவான் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இந்தச் சிந்தனை பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய அரசை அரித்துக் கொண்டிருக்கிறது.*

*ஈமானுடன் நற்செயல்களையும் அவர்கள் இணைத்துக்கொள்ளாத வரை தங்களின் முந்தைய நாகரிகத்தின் பக்கம் முஸ்லிம்கள் திரும்ப முடியாது. இறுதியாக, உள்ளங்களை உலுக்கும் வகையில் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் விளித்து உரையாடப்படுகிறார்கள். மனிதர்களில் தூதுத்துவம் வழங்கப்பட்டவர் கடினமான பொறுப்பு வழங்கப்பட்டவராவார்.*

> *இந்த வேதம் உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப்படும் என்பதை நீர் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆயினும் இது உம் இறைவனின் அருளாகும். ஆகவே, நீர் நிராகரிப்பாளர்களுக்குத் துணைபுரியாதீர். அல்லாஹ்வின் வசனங்கள் உமக்கு அருளப்*

பட்டபின் அதனைவிட்டு அவர்கள் உம்மைத் தடுத்துவிட வேண்டாம். உம் இறைவனின் பக்கம் அழைப்பீராக. இணைவைப்பாளர்களுடன் ஒருபோதும் இணைந்துவிடாதீர். அல்லாஹ்வுடன் வேறெந்த இறைவனையும் அழைக்காதீர். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை ... (86-88)

அல்லாஹ் ஒருவன் என்ற கண்ணோட்டரீதியான அறிவு மட்டும் போதுமானதல்ல. இப்லீஸும் அல்லாஹ் ஒருவனே என்பதை நன்கறிந்திருந்தான். ஆனாலும் அவன் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்படவில்லை. அதன் காரணமாக நரகத்தில் வீழ்ந்தான்.

நம் சமூகம் தெளிவான ஈமானையும் நற்செயலையும் ஒருசேரப் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அதற்கு வாய்ப்புகள் வழங்கப்படும். தம் மறுமை வாழ்வுக்காக அதனால் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள முடியும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 29

# அல்அன்கபூத்

(சிலந்திப் பூச்சி)

*சோதனை இவ்வுலக வாழ்வின் இயல்புதான். அதனை நாம் கடந்தே தீர வேண்டும். அதற்குப் பிறகு நாம் செய்த செயல்களின் விளைவுகளைக் காண்பதற்காக மறுவுலக வாழ்வை நோக்கி இடம்பெயர்கிறோம். அங்கு சுவனத்தையோ நரகத்தையோ நாம் பெறலாம்.*

*இந்தச் சோதனை மனிதனின் இயல்பு, அவனுக்கு வழங்கப்பட்ட பணிகள், அவனுடைய ஆற்றல் ஆகியவற்றுக்கேற்ப மாறுபடலாம். தன்னுடைய ஒட்டகத்தை இழந்ததால் அழுகின்ற பெண்ணும் போர்க் களத்தில் தன் கண்ணியத்தையும் மகனையும் இழந்ததால் அழுகின்ற ஆணும் சமமாக மாட்டார்கள்.*

*மனிதர்களின் தேவைகளுக்கும் அவர்களின் களைப்புகளுக்கும் மத்தியில் உள்ள வேறுபாடுகள்தான் எவ்வளவு பெரியவை. அபூதய்யிபு மிக அற்புதமாக இதனை வர்ணிக்கிறார்: 'உறுதியானவர்களின் ஆற்றல்களுக் கேற்பவே அவர்களுக்குச் சோதனைகள் வருகின்றன. கண்ணியவான் களின் கண்ணியத்துக்கேற்பவே அவை வருகின்றன. சிறியோரின் பார்வைக்குச் சிறியவை பெரியவையாகத் தெரிகின்றன. மகத்தானவர் களின் பார்வைக்குப் பெரியவைகூடச் சிறியவையாகத் தெரிகின்றன.'*

*ஒரு வயலை உழுது பண்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்ட ஒரு விவசாயியும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து உலகைப் பண்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்டவரும் சமமாக மாட்டார்கள்.*

*முஹம்மது (ஸல்) அவர்கள் தூதராக வந்தபோது இந்த உலகம் இருந்த நிலையை எண்ணி நான் ஆச்சரியமடைகிறேன். பெரும்பாலான மனிதர் கள் சிலைகளை வணங்கிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சிலை வழிபாட் டின் நிழலில் தங்களின் மனஇச்சைகளுக்குப் பின்னால் ஓடிக்கொண்டி ருந்தார்கள்.*

*யஅகூபின் குடும்பத்தினருக்குப் பணிவிடைசெய்வதே யூதர்களின் நோக்கமாக இருந்தது. அந்தக் குடும்பத்தை இறைவனால் தேர்ந்தெடுக் கப்பட்ட குடும்பம் என்றும் உலக மக்கள் அனைவரைக் காட்டிலும் அவர்கள் தூய மரபை உடையவர்கள் என்றும் அவர்கள் வாதிட்டுக் கொண்டிருந்தார்கள்.*

*ஈமானின் பக்கமோ அல்லாஹ்வின் பக்கமோ அழைப்பதே அவர்கள் தாமதப்படுத்தப்பட வேண்டிய இரண்டாம்தரப் பணியாகக் கருதினார்கள்.*

*கிறிஸ்தவர்களோ கண்ணியமான மனிதரான ஈசாவைக் கடவுளாக ஆக்கியிருந்தார்கள். நம்பிக்கைக்குரிய வானவரான ஜிப்ரீலையும் கடவுளாக ஆக்கியிருந்தார்கள். பின்னர், படைப்பாளனை மூன்றாவது கடவுளாக ஆக்கியிருந்தார்கள். பின்னர் கூறினார்கள், 'அனைவரும் ஒன்றிணைந்து ஒரே கடவுள்தான்'.*

*உலகம் பல்வேறு வகையான இருள்களால் சூழப்பட்டிருந்தது. அவை ஒன்றன் மீது ஒன்றாகப் பெரும் குவியலாக மண்டிக்கிடந்தன.*

*இந்தப் பெரும் குவியலுக்கு முன்னால்தான் முஹம்மது (ஸல்) அவர் கள் வந்தார்கள். அவர்களிடம் கூறப்பட்டது: 'இந்த இருள்களை அகற் றும் பொறுப்பு, தட்டழிந்துகொண்டிருக்கும் மனிதச் சமூகத்தைத் தம் இறைவனின் பக்கம் திருப்பும் பொறுப்பு உமக்கு வழங்கப்பட்டுள்ளது.'*

*ஒரு ஹதீஸ் குத்சீயில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:*

> *நான் என் அடியார்கள் அனைவரையும் ஓரிறைக் கொள்கையாளர் களாகப் படைத்தேன். ஷைத்தான்கள் அவர்களிடம் வந்து அவர் களின் மார்க்கத்தைவிட்டு அவர்களைத் திருப்பினார்கள். நான் அவர்களுக்கு அனுமதித்ததைத் தடைசெய்யப்பட்டதாக ஆக்கி னார்கள். நான் அவர்களுக்குத் தடைசெய்ததை அனுமதிக்கப்பட்ட தாக ஆக்கினார்கள். எனக்கு இணையானவர்களை ஏற்படுத்தும் படி அவர்களைத் தூண்டினார்கள். நான் அதற்கு எவ்வித ஆதாரத்தை யும் இறக்கிவைக்கவில்லை.*

*அல்லாஹ் பூமியில் உள்ளவர்களைப் பார்த்தான். வேதக்காரர்களில் எஞ்சியவர்களைத் தவிர அறபுகள், அறபு அல்லாதவர்கள் என அனை வரையும் அவன் வெறுத்தான். அவன் கூறினான்: 'நான் உம்மை அனுப்பியுள்ளேன், உம்மைச் சோதிப்பதற்காகவும் உம்மைக் கொண்டு சோதிப்பதற்காகவும்.'*

*எவ்வளவு கடினமான சோதனை இது! உலகைச் சீர்படுத்துமாறும் மனிதச் சமூகம் முழுமையையும் நேரான வழியில் நடத்துமாறும் ஒரு தனிமனிதர் பொறுப்பு சாட்டப்படுகிறார்.*

அவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு தம்மீது சுமத்தப் பட்ட பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். மலைகளால்கூடச் சுமக்க முடியாத அளவு கடினமானது. ஆனாலும் அவர் அதனைச் சுமப்பதற்காக எழுந்தார். தமக்கான தோழர்களை உருவாக்கிக்கொண்டார். அவர்கள் நிராகரிப்பாளர்களின் மீது கடுமையானவர்களாகவும் தங்களுக்கிடையே கருணையாளர்களாகவும் இருந்தார்கள். கஷ்டங்களிலும் துன்பங்களிலும் தொடர் போர்களிலும் அவர்கள் அவருடன் இருந்தார்கள். வேரூன்றிப் போன பழக்கங்களை, பேரரசுகளை எதிர்த்தார்கள். இறுதிவரை அவர்கள் பின்வாங்கவில்லை. அல்லாஹ்வின் மார்க்கத்தில் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக நுழைந்தார்கள்.

❖ ❖ ❖

சிலர் இந்தக் கடினமான பணியால் பதற்றமடைவதும் துன்பங்களுக்கு முன்னால் துவண்டுவிடுவதும் இயல்பானதுதான். ஆனாலும் வஹீ அரு ளப்பட்டுக்கொண்டிருந்தது.

> அலிஃப், லாம், மீம். 'நாங்கள் நம்பிக்கை கொண்டோம்' என்று கூறியதால் மட்டும் தாங்கள் சோதிக்கப்படாமல் விட்டுவிடப் படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக்கொண்டார்களா? அவர் களுக்கு முன்னிருந்தவர்களையும் நாம் சோதித்தே இருக்கிறோம். உண்மையாளர்கள் யார் என்பதையும் பொய்யர்கள் யார் என்பதை யும் அல்லாஹ் அறிந்தே தீருவான். (1-3)

இன்றைய இரவும் நேற்றைய இரவைப் போன்றதுதான்.

இந்த உலகம் தம் இறைவனை மறுத்து தடுமாறித்திரிந்தது. முஹம்ம தின் தோழர்கள் பழமையான எதிரிகளை எதிர்கொண்டார்கள். மனிதர் களில் பெரும்பாலோரை 'அல்லாஹ் ஒருவனே வணக்கத்துக்குரியவன்!' என்பதன் பக்கம் திருப்பினார்கள். இந்தப் பாதையில் ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தையும் சகித்துக்கொண்டார்கள்.

இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'யார் முயற்சி செய்கி றாரோ அவர் தமக்காகவே முயற்சிசெய்கிறார். நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தார் அனைவரைவிட்டும் தேவையற்றவன். (6)' அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் அவன் ஒரு வாக்குறுதியளிக்கிறான்: 'நம் வழியில் முயற்சிசெய்பவர்களுக்கு நிச்சயம் நாம் நம் வழிகளைக் காண்பிப்போம். நிச்சயமாக அல்லாஹ் நன்மைசெய்வோருடன் இருக்கிறான். (69)'

நபியவர்களின் பெயர்களில் அல்முதவக்கில் - அல்லாஹ்வை முழுமையாகச் சார்ந்திருப்பவர் - என்பதும் ஒன்று. தம் இறைவனை

விட்டுவிட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கும் மனிதச் சமூகத்தை நேரான வழியின் பக்கம் கொண்டுவருவது இலகுவான காரியமா என்ன?

பெரும் பேரரசுகளை எதிர்த்துப் போரிடுவது சாதாரண போராகுமா? நிச்சயமாக அதற்கு அல்லாஹ்வை முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டியது மிக அவசியமாகிறது.

பெரும் வலிமையும் நிலைகுலையாத உறுதியும் அதற்கு அவசிய மாகிறது.

> மனிதர்களில் சிலர், 'நாங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்.' என்று கூறுகிறார்கள். ஆயினும், அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் துன்புறுத்தப்பட்டால் மக்களால் ஏற் படும் துன்பங்களை இறை வேதனையைப் போல் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், உம் இறைவனிடமிருந்து ஏதேனும் உதவி வந்துவிட்டால், 'நாங்கள் உங்களுடன்தான் இருந்தோம்.' என்று கூறுவார்கள். மனிதர்களின் உள்ளங்களில் உள்ளவற்றை அல்லாஹ் அறிந்தவன், இல்லையா? (10)

அவர்களில் இந்தப் போராட்டத்தின் விளைவுகளை உடனடியாகக் காண வேண்டும் என்று விரும்புவோரும் இருந்தார்கள்.

அவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு இந்த அத்தியாயம் தொள்ளா யிரத்து ஐம்பது ஆண்டுகள்வரை அழைப்புப் பணி செய்த நூஹின் வர லாற்றை நினைவூட்டுகிறது.

அவர்களில் அல்லாஹ்வைக் குறித்த விசயங்களில் அறிவற்ற மூடர் களும் இருந்தார்கள். அவர்களுக்குப் போதிக்கும் பொருட்டுத் திருக் குர்ஆன் இப்றாஹீம் பின்பற்றிய வழிமுறையையும் எடுத்துரைக்கிறது.

> அல்லாஹ் எவ்வாறு முதலில் படைப்பைத் தொடங்கினான் என் பதை அவர்கள் பார்க்கவில்லையா? பிறகும் அவன் மீண்டும் படைப்பான். நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக எளிதானது. நீர் கூறும், 'பூமியில் சுற்றித்திரிந்து அல்லாஹ் எவ்வாறு படைப் பைத் தொடங்கி, மீண்டும் அதனை உருவாக்குகிறான் என்பதைப் பாருங்கள்.' (19,20)

அவர்களில் தங்களின் மிருக இச்சைக்கு அடிமையாகி, வரம்புமீறிப் பாலியல் இச்சைகளில் ஈடுபடுவோரும் இருந்தார்கள். அவர்கள் கண் ணியமான மணஉறவைப் புறக்கணித்து, விசித்திரமான பாலியல் இச்சை களில் மூழ்கினார்கள். லூத் அவர்களிடம் கூறினார்:

'நிச்சயமாக உலக மக்களில் யாருமே உங்களுக்கு முன் செய்திராத மானக்கேடான காரியத்தை நீங்கள் செய்கிறீர்கள். நீங்கள் ஆண்களிடம் செல்கிறீர்களா? வழிப்பறியில் ஈடுபடுகிறீர்களா? உங்கள் சபைகளில் வைத்தே தீய காரியங்களைச் செய்கிறீர்கள்.' அதற்கு அவருடைய சமூகத்தார், 'நீர் உண்மையாளராயின் இறை வேதனையை எங்களிடம் கொண்டுவாரும்!' என்று பதிலளித்தார்கள். (28,29)

இன்று மேற்குலகம் இதே பாதையில்தான் நடைபோடுகிறது. அச்சுப் பிசகாமல் முந்தையவர்களை அவர்கள் பின்பற்றுகிறார்கள். விளைவாக, இன்று அவர்களிடையே எய்ட்ஸ் என்னும் நோய் பரவலாகக் காணப்படுகிறது. இஸ்லாம் ஏற்படுத்திய வரம்புகளை மீறி தடுக்கப்பட்ட வழியில் அவர்கள் தங்களின் பாலியல் இச்சைகளைத் தணித்துக்கொள்வதுதான் அதற்கான முதன்மையான காரணம். இஸ்லாம் திருமணத்தையும் ஒரு வணக்க வழிபாடாகக் கருதுகிறது. அது தவறான வழிகளிலிருந்து மனிதனைக் காக்கும் பெரும் கேடயமாக இருக்கிறது.

அல்லாஹ் அளித்த வழிமுறையைப் பின்பற்றாமல் வரம்புமீறிய சமூகங்கள் அடைந்த விளைவுகளை குறிப்பிட்டவாறு இந்த அத்தியாயம் கடந்துசெல்கிறது. ஏன் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்? 'அவர்களில் ஒவ்வொருவரையும் அவரவர் செய்த பாவத்தால் நாம் தண்டித்தோம். அவர்களில் சிலர்மீது நாம் கல்மாரி பொழியும் காற்றை அனுப்பினோம். அவர்களில் சிலரைப் பேரிடி முழக்கம் தாக்கியது. அவர்களில் சிலரைப் பூமியினுள் அழுந்தச் செய்தோம். அவர்களில் சிலரை மூழ்கடித்தோம். (40)'

இறைத் தண்டனைகளுக்கு முன்னால் அவர்களால் என்ன செய்ய முடிந்தது? பெரும் சூறாவளி சிலந்தி வலையை ஒன்றுமில்லாமல் ஆக்குவதுபோல அவை அவர்களை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டன.

இந்த உதாரணங்களை நாம் மனிதர்களுக்காகவே எடுத்துரைக்கிறோம். ஆயினும், அறிவுடையோர்தாம் அவற்றைப் புரிந்துகொள்வார்கள். (43)

முஜாஹிதுகள் தங்கள்மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உலகத்திலோ கூலி கொடுக்கப்படும் நாளிலோ தங்களுக்கான கூலியைப் பெற்றே தீருவோம் என்று அவர்கள் உறுதியாக நம்ப வேண்டும்.

❖ ❖ ❖

*வேதக்காரர்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர், நம் வாழ்க்கைக்கோ வணக்க வழிபாட்டுக்கோ அழைப்புப் பணிக்கோ எந்த இடையூறும் அளிக்க மாட்டார்கள். மாறாக, நம்முடைய பாதையில் நம்மை விட்டுவிடுவார்கள். இவர்களுக்கு நாம் அளிக்க வேண்டிய உரிமைகளை அளித்துவிட வேண்டும். இவர்களுடனான ஒப்பந்தங்கள் முறிக்கப்பட மாட்டாது.*

*மற்றொரு பிரிவினர், நம் தூதருக்கும் வேதத்துக்கும் நெருக்கடியளிப்ப வர்கள். நம் கட்டமைப்பைச் சிதைக்க, நம் கொடியைத் தாழ்த்த முயல்பவர்கள். இவர்களின் விசயத்தில் நாம் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.*

*இந்த இரு சாராருடனும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு பொதுவான அறிவுரையை இந்த அத்தியாயம் உள்ளடக்கியுள்ளது.*

> *வேதக்காரர்களுடன் அழகிய முறையில் அன்றி நீங்கள் விவாதம் புரிய வேண்டாம், ஆயினும் அவர்களில் யாரேனும் வரம்புமீறிவிட்டால் (அதற்குத் தக்கவாறு நீங்கள் பதில் கூறுவது உங்கள்மீது குற்றம் ஆகாது). நீங்கள் கூறுங்கள், 'எங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் உங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம். எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஒருவனே. அவனுக்கே நாங்கள் கீழ்ப்படிந்தவர்களாவோம்.' இவ்வாறே நாம் உம்மீது வேதத்தை அருளினோம். யாருக்கெல்லாம் நாம் வேதம் வழங்கியுள்ளோமோ அவர்கள் இதன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். உங்களிலும்கூடச் சிலர் இதன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். நிராகரிப்பாளர்கள்தாம் நம் வசனங்களை மறுக்கிறார்கள்.* (46,47)

*நடுநிலையான அறிவுஜீவிகளின் குழு ஒன்று கடந்த நூற்றாண்டுகளிலும் இந்த நூற்றாண்டிலும் மேற்குலகத்துக்கும் கிழக்குலகத்துக்குமான தொடர்பை ஆராய்ந்துபார்க்குமானால், இரண்டுக்கும் மத்தியில் கடுமையான போர்கள் ஏற்படக் காரணமாக இருந்த காரணிகளை வெளிப்படுத்தலாம். அதிலும் குறிப்பாக, ரோமப் பேரரசு வல்லரசாக உலகை அச்சுறுத்திக்கொண்டிருந்த காலகட்டத்தில் நிகழ்ந்தவற்றையும் மேற்கு ஆசியாவிலும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் அது நிகழ்த்தியவற்றையும் வெளிப்படுத்தலாம்.*

*இந்த நாடுகளை இஸ்லாம் வென்றபோது இப்படித்தான் வரம்பு மீறியதா? பின்னர், அவர்களின் வாரிசுகளும் கூட்டத்தினரும் சிலுவைப்*

போர்களில் மூர்க்கமான தாக்குதலை நிகழ்த்தினார்கள். பல ஆண்டு களுக்குப் பிறகே போரைத் தொடர முடியாமல் பின்வாங்கினார்கள்.

தற்காலத்திலும் அவர்களின் தாக்குதல்கள் தொடர்ந்தன. எகிப்தின் மீது நெப்போலியன் தொடுத்த தாக்குதல், லிபியாவின் மீது முசோலினி தொடுத்த தாக்குதல், இஸ்லாமிய நாடுகளின் மீது காலனித்துவவாதி களின் ஆதிக்கம் எனப் பல்வேறு வடிவங்களில் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இஸ்லாமிய நாடுகள் வேதக்காரர்களின் கைவசம் ஆகிவிட்டன. இந்தப் போர்களில் நாம் வரம்புமீறினோமா என்ன?

இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் தங்களின் மார்க்க வழிகாட்டு தலின்படி வாழ விரும்புகிறார்கள். ஆனாலும் அதனைவிட்டு அவர்கள் தடுக்கப்படுகிறார்கள். அவர்கள்மீது பல விதமான அவதூறுகள் சுமத் தப்படுகின்றன. இந்த விசயத்தில் எங்கே இருக்கிறது நீதி?

முஸ்லிம்கள் தங்களின் வேதத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தை யையும் நம்புகிறார்கள். அதன்படி செயல்பட விரும்புகிறார்கள். ஏன் அவர்கள் அதனைவிட்டும் தடுக்கப்படுகிறார்கள்? ஏன் அவர்களின் தூதருக்கு எதிராக வேதக்காரர்கள் வரம்புமீறிப் பேசுகிறார்கள்? அவரைப் பொய்யர் என்று குற்றம்சாட்டுகிறார்கள்?

> இதற்கு முன்னர் நீர் எந்த வேதத்தையும் படித்ததில்லை. உம் கையால் அதனை எழுதியதுமில்லை. அவ்வாறு இருந்திருந்தால் அசத்தியவாதிகள் சந்தேகம் கொண்டிருப்பார்கள். மாறாக, இது அறிவு வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் தெளிவான சான்று களாகத் திகழ்கிறது. அக்கிரமக்காரர்கள்தாம் நம் வசனங்களை நிராகரிப்பார்கள். (48,49)

வேதக்காரர்கள் செய்யும் குழப்பங்கள் கடுமையானவை.

தற்காலத்தில் முஸ்லிம்களை அவர்களின் மார்க்கத்தை விட்டுத் திருப்புவதற்காக, அதன்படி செயல்படவிடாமல் அவர்களைத் தடுப்ப தற்காக, அவர்களை ஒட்டுமொத்தமாக இல்லாமல் ஆக்குவதற்காக வேதக்காரர்கள் தொடர்ந்து பல தாக்குதல்களை வெவ்வேறு வடிவங்களில் நிகழ்த்திக்கொண்டே இருக்கிறார்கள்.

❖ ❖ ❖

சிலை வழிபாட்டாளர்கள் பல காலமாக எழுப்பிக்கொண்டிருக்கும் ஓர் ஆட்சேபணைக்கு இந்த அத்தியாயம் பதிலளிக்கிறது. அவர்கள்

முஹம்மதிடம் அற்புதங்களை நிகழ்த்துமாறு வேண்டியபோது அவர்களிடம் கூறப்பட்டது:

> ‘அவருடைய இறைவனிடமிருந்து அவருக்கு ஏன் சான்றுகள் அருளப்படவில்லை?’ என்று அவர்கள் கேட்கிறார்கள். நீர் கூறும், ‘அல்லாஹ்விடமே சான்றுகள் உள்ளன. நானோ வெளிப்படையாக எச்சரிப்பவன்தான்.’ அவர்கள்மீது எடுத்துரைக்கப்படும் இவ்வேதத்தை நாம் உமக்கு அருளியிருப்பது அவர்களுக்குப் போதுமானது, இல்லையா? நிச்சயமாக நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு இதில் அருட்கொடையும் நினைவூட்டலும் அடங்கியுள்ளது. (50,51)

திருக்குர்ஆன் காலம்காலமாக நிலைத்திருக்கும் மகத்தான அற்புதம். மனித மனதிலும் சமூகத்திலும் அது ஏற்படுத்தும் தாக்கம் ஆழமானது. நம் சமூகத்தைத் தாக்கிய பெரும் துன்பங்களிலிருந்து அது சமூகத்தைப் பாதுகாத்திருக்கிறது. மனிதனுக்கும் அவனுடைய இறைவனுக்கும் மத்தியில் இறையச்சம், உறுதியான நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வலுவான தொடர்பை ஏற்படுத்துவதில் இதற்கு நிகரான எந்த வேதத்தையும் நான் கண்டதில்லை.

பிரபஞ்சத்தைக் கவனிப்பதினூடாக அல்லாஹ்வை அறிந்துகொள்ளும் விசயத்தில், அறிவியலாளர்களைக் கேளுங்கள், இந்த அறிதலில் அவர்கள் ஆச்சரியங்களையும் இரகசியங்களையும் தவிர வேறென்ன கண்டு கொண்டார்கள்? ஏன் அவ்வாறு? ‘வானங்களின், பூமியின் இரகசியங்களை அறிந்தவன்தான் இதனை அருளினான். அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (25:6)’

வாடிகனின் முக்கியமான போதகர்களில் ஒருவர், தடுக்கப்பட்ட உறவுகளின்போது எய்ட்ஸ் வராமல் இருக்க ஆணுறை பயன்படுத்துங்கள் என்று மக்களிடம் கூறியதை நான் செவியேற்றபோது உண்மையில் திகைப்படைந்துவிட்டேன்.

இதுதான் ஒரு மார்க்கத்தின் நோக்கமா? இதுதான் அவர்களுடைய முயற்சியின் நோக்கமா?

நம்பிக்கையோடும் அச்சத்தோடும் தம் இறைவனுடன் தொடர்பு கொள்ளக்கூடிய பல தலைமுறைகளைத் திருக்குர்ஆன் உருவாக்குகிறது. இந்தத் தொடர்பையே வாழ்க்கையின் வழிமுறையாகவும் கண்ணியமான நடத்தையின் வழிமுறையாகவும் ஆக்குகிறது.

இவை திருக்குர்ஆனின் சில அற்புதங்கள்.

சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான மோதல் நீண்டுகொண்டே செல்லும். அவசரப்படக்கூடியவர்கள் எப்போது உதவி வரும் என்று கேட்பார்கள்.

நிராகரிப்பாளர்கள் கேட்பார்கள், 'நீர் எங்களை அச்சுறுத்தும் வேதனை எப்போது வரும்?' அவர்கள் வேதனைக்காக உம்மிடம் அவசரப்படுகிறார்கள். குறிப்பிட்ட ஒரு தவணை நிர்ணயிக்கப் படாதிருந்தால் வேதனை அவர்களை வந்தடைந்திருக்கும். அது அவர்கள் அறியாத விதத்தில் திடீரென அவர்களைத் தாக்கிவிடும். (53)

சோதனைகள் முஸ்லிம்களைத் தாக்கிக்கொண்டே இருந்தன. மக்காவில் உள்ள சிறிய வியாபாரியிடம் கூறப்பட்டது: 'உம்முடைய கடையை அடைத்துவிட்டு இஸ்லாமிய அரசை நிலைநிறுத்தும் பொருட்டு இங்கிருந்து புலம்பெயர்ந்து செல்லும்.'

ஏழையாக இருந்த அந்த வியாபாரி கேட்டார்: 'அங்கு நான் எப்படி வாழ்வது?' இந்த வசனத்தைக் கொண்டு அவருக்குப் பதிலளிக்கப்பட்டது: 'எத்தனையோ உயிரினங்கள் இருக்கின்றன. அவை தம் உணவைச் சுமந்துகொண்டு திரிவதில்லை. அல்லாஹ்தான் அவற்றுக்கும் உங்களுக்கும் உணவளிக்கிறான். அவன் செவியேற்பவனாகவும் நன்கறிபவனாகவும் இருக்கிறான். (60)' புலம்பெயர்ந்து சென்றார்கள். முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டார்கள். கடினமான சோதனைகளுக்குப் பிறகு இறையுதவியும் வந்தது.

குர்ஆன் உருவாக்கிய ஈமான் அற்புதங்களை நிகழ்த்தியது. அது இன்றும் நிகழ்த்திக்கொண்டுதான் இருக்கிறது.

நம் காலத்தில் நவீன நாகரிகத்தால் தாக்கமடைந்தவர்கள், உலகியல் தத்துவங்களால் கவரப்பட்டவர்கள் இவ்வுலக வாழ்க்கையை வழிபடுகிறார்கள். அதற்குப் பின்னால் இருக்கும் மறுவுலக வாழ்க்கையை நிராகரிக்கிறார்கள். முஸ்லிம்களோ இவ்வுலகையும் மறுவுலகையும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். இந்த உலகில் குறிப்பிட்ட காலம்வரைதான் நீடித்திருப்போம் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்களின் பார்வை கூர்மையாக இருக்கிறது. செவிப்புலன் வலுவாக இருக்கிறது. அவர்கள் எந்தத் திரையாலும் மறைக்க முடியாத சாட்சிகளாக இருக்கிறார்கள். 'இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும் வேடிக்கையுமே ஆகும். மறுமையின் வீடுதான் உண்மையான வாழ்க்கைக்குரிய இடமாகும். அந்தோ, அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே! (64)'

*சோதனை என்னும் பெயரையும் கொண்ட இந்த அத்தியாயம் இந்தக் கேள்வியோடு நிறைவடைகிறது:*

*அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைபவனைவிட அல்லது தன்னிடம் சத்தியம் வந்துவிட்டபின்னரும் அதனை மறுப்பவனை விட மிகப் பெரிய அக்கிரமக்காரன் யார்? நரகம் நிராகரிப்பாளர் களின் தங்குமிடம், இல்லையா? நம் வழியில் முயற்சிசெய்ப வர்களுக்கு நிச்சயம் நாம் நம் வழிகளைக் காண்பிப்போம். நிச்சய மாக அல்லாஹ் நன்மைசெய்வோருடன் இருக்கிறான்.* (68,69)

❖ ❖ ❖

அத்தியாயம் 30

# அர்றூம்

(ரோம் அரசு)

*இஸ்லாத்துக்கும் கிறிஸ்தவத்துக்குமான தொடர்பை சித்தரித்துக் காட்டுவதில் திருக்குர்ஆன் எவ்வித விட்டுக்கொடுத்தலுக்கும் இட மின்றி ஓரிறைக் கொள்கையை நிறுவி, பலதெய்வ வழிபாட்டை முற்றி லுமாக நிராகரிப்பதை நாம் காண்கிறோம். அல்லாஹ் ஒருவன்தான். அவனுக்குத் தந்தையும் இல்லை; பிள்ளைகளும் இல்லை. அவன் இரண்டு வெவ்வேறு அம்சங்களின் ஒருங்கிணைப்பு அல்ல, ஆக்ஸிஜனும் நைட்ரஜ னும் சேர்ந்து நீராக ஆவதைப் போல. அல்லாஹ்தான் தந்தையும் மகனும் என்ற கூற்றை அது முற்றிலுமாக நிராகரிக்கிறது. 'அல்லாஹ் ஒரே இறை வன்தான். (4:171)'*

*இதனடிப்படையில் இரண்டாமவரோ மூன்றாமவரோ இறைவனாக ஆக முடியாது. இரண்டாமவரும் மூன்றாமவரும் அல்லாஹ்வின் படைப்பு கள்தாம்.*

> *நீர் கூறும், 'மூடர்களே, அல்லாஹ்வை விடுத்து மற்றவர்களையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள்?' உமக்கும் உமக்கு முன்னி ருந்தவர்களுக்கும் இவ்வாறே வஹீ அறிவிக்கப்பட்டது: அல்லாஹ் வுக்கு இணைகளை ஏற்படுத்தினால் உம் செயல்கள் யாவும் அழிந்து, நீர் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராகிவிடுவீர். ஆகவே, நீர் அல் லாஹ்வையே வணங்குவீராக. நன்றி செலுத்துவோருடன் இணைந்து விடுவீராக. (39:64-66)*

*இந்த வசனங்கள் மக்காவில் அருளப்பட்டவை. இஸ்லாம் தன் முதல் நாளிலிருந்தே திரித்துவம் குறித்த தன்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவு படுத்திவிட்டது.*

ஆனாலும் அரசியல் ரீதியாக இஸ்லாம் கிறிஸ்தவர்களுடன் நல்ல உறவை மேற்கொண்டிருந்தது. தம் தோழர்கள் துன்புறுத்தப்பட்டபோது ஹபஷாவை நோக்கிப் புலம்பெயர்ந்து செல்லுமாறு அவர்களுக்கு நபி யவர்கள் அறிவுறுத்தினார்கள். அப்போது ஹபஷா கிறிஸ்தவ நாடாக இருந்தது. அவர்கள் ஈசாவையும் அவருடைய தாயாரையும் அல்லாஹ்வின் நல்லடியார்களாகக் கருதியபோதிலும் ஹபஷாவை நோக்கிப் புலம் பெயர்ந்து சென்றார்கள்.

பின்னர் நெருப்பு வணங்கிகளான பாரசீகர்களிடம் ரோமர்கள் தோல்வி யைத் தழுவினார்கள். அதனால் முஸ்லிம்கள் கவலையடைந்தார்கள். சிலை வழிபாட்டாளர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். அந்தத் தோல்வியால் ரோமர்கள் எகிப்து, யமன், ஷாம் ஆகிய நாடுகளை இழந்தார்கள். இழி வடைந்து பாரசீகர்களுக்குத் தண்டம் செலுத்தினார்கள்.

ரோமின் சூரியன் மறைந்துவிட்டது, அதன் எதிர்காலம் பாழாகிவிட்டது என்றே பலரும் நம்பினார்கள்.

அதற்கு மாறாக ஒலித்த ஒரே குரல் மக்காவில் ஒலித்த திருக்குர்ஆனின் குரலேயாகும். அது 'இந்தத் தோல்வி தற்காலிகமானதுதான். சில வருடங் களுக்குப் பிறகு அவர்கள் மீண்டும் வெற்றியடைவார்கள்.' என்று உறுதி யாக அறிவித்தது.

> அண்டை நாட்டில் ரோமர்கள் தோல்வியடைந்துவிட்டனர். தோல் விக்குப் பின் விரைவில் அவர்கள் வெற்றியடைவார்கள், சில ஆண்டுகளுக்குள்ளேயே. முன்னரும் பின்னரும் அதிகாரம் அல் லாஹ் வுக்கே உரியது. அந்நாளில் நம்பிக்கையாளர்கள் மகிழ்ச்சி யடைவார்கள், அல்லாஹ்வின் உதவியால். அவன், தான் விரும் பியோருக்கு உதவிசெய்கிறான். அவன் யாவற்றையும் மிகைத்த வனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். இது அல்லாஹ் வின் வாக்குறுதி. ஒருபோதும் தன் வாக்குறுதிக்கு அவன் மாறு செய்வதில்லை. ஆயினும், மனிதர்களில் பெரும் பாலோர் அறிந்து கொள்வதில்லை. (2-6)

இந்த வசனங்கள், கிறிஸ்தவர்கள் இழிவடைந்து நெருப்பு வணங்கிகள் மேலோங்கியிருந்த அந்தச் சூழலைச் சித்தரித்துக் காட்டுகின்றன. அதில் யாரும் சந்தேகிக்கவில்லை. ஆனாலும் அருளப்பட்ட வஹீ, இந்தச் சூழல் சில வருடங்களுக்குள் மாறிவிடும் என்று மிக உறுதியாக அறிவித்தது.

காலம் திருக்குர்ஆனின் இந்த முன்னறிவிப்பை உண்மைப்படுத்திக் காட்டியது.

விசித்திரம் என்னவென்றால், ரோமானியர்கள் இஸ்லாத்தைப் புகழ்வதற்குப் பதிலாக, 'முஹம்மது பாரசீகர்களை வெறுக்கிறார். அதனால்தான் இவ்வாறு கூறுகிறார்.' என்றார்கள். இந்த முன்னறிவிப்பைக் குர்ஆனின் நம்பகத்தன்மைக்கு ஒரு சான்றாக எடுத்துக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

அவர்களின் சாட்சியம் நமக்குத் தேவை இல்லை. ஆனாலும் அன்றைய முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களுடன் கடைப்பிடித்த அரசியல் நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டவே நாம் இதனை எடுத்துரைக்கிறோம். இதற்கான காரணம், இஸ்லாம் கூறும் ஓரிறைக் கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கு மிக நெருக்கமானவர்களாக நாம் கிறிஸ்தவர்களைக் காண்கிறோம் என்பதேயாகும். இஸ்லாம் அடைந்த வெற்றிகள் இதனை மெய்ப்பித்துக் காட்டின. அவர்களின் இயல்பும் இதற்கு உதவியாக அமைந்தது. அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் கூட்டம்கூட்டமாக நுழைந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் முரண்பாட்டை விட்டுவிட்டு அறிவுபூர்வமான இஸ்லாத்தின் விளக்கத்தைத் தெரிவுசெய்தார்கள். அவர்கள் மனப்பூர்வமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்களே அன்றி கட்டாயத்தின் அடிப்படையில் அல்ல.

மனித இயல்பில் பொதிந்துள்ள வாக்குறுதிகள் அல்அஃராஃப் என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுவிட்டன. இந்த அத்தியாயத்தில் இன்னும் விளக்கமாக அவை இடம்பெறுகின்றன. இஸ்லாம்தான் நேரான மனித இயல்புக்கு உகந்த மார்க்கம் என்பதையும் அதுதான் மூடநம்பிக்கைகளிலிருந்தும் மனஇச்சைகளிலிருந்தும் விடுபட்ட அறிவின் செயல்பாடு என்பதையும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

> 'முழு மனதுடன் உம் முகத்தை நேரான மார்க்கத்தின் பக்கம் திருப்பிக்கொள்ளும். அல்லாஹ் மக்களுக்காகப் படைத்த இயற்கை அமைப்பில் நிலைத்திருங்கள்.' அல்லாஹ்வின் படைப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. இதுவே நேரான மார்க்கம். ஆயினும், மனிதர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (30)

வானங்களிலும் பூமியிலும் உள்ள படைப்புகள் அனைத்தும் முன்னோக்கும் நித்திய ஜீவன் இணைவைப்பை விட்டும் தூய்மையானவன். கண்ணியத்துக்கும் புகழுக்கும் உரியவன். மனிதர்கள், ஜின்கள், வானவர்கள் என அனைவரும் அவனுக்குச் சிரம்பணிகிறார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் அவனுடைய அதிகாரத்தை எதிர்க்கக்கூடிய ஒருவரும் இல்லை. 'ஆகவே, நீங்கள் மாலையிலும் காலையிலும் அல்லாஹ்வின் தூய்மையைப் போற்றிக்கொண்டிருங்கள். வானங்களிலும் பூமியிலும் புகழ

னைத்தும் அவனுக்கே உரியன. பிற்பகலிலும் நண்பகலிலும் அவனைப் புகழுங்கள். (17,18)'

தவ்ஹீது என்ற வார்த்தைக்கு இஃக்லாஸ் என்ற பெயரும் உண்டு. ஏனெனில், அது இணைவைப்பின் அழுக்குகள் அனைத்தையும்விட்டுத் தூய்மையானது. அது அல்லாஹ்வைத் தவிர மற்ற அனைவரையும் அவனுக்குக் கட்டுப்படும் அடிமைகளாக ஆக்குகிறது. கட்டுப்பட மறுப்பவர்கள் அழிந்துபோவார்கள். 'அவன் உயிரற்றதிலிருந்து உயிருள்ளவற்றை வெளிப்படுத்துகிறான்; உயிருள்ளவற்றிலிருந்து உயிரற்றவற்றை வெளிப்படுத்துகிறான். பூமியை அது வறண்ட பின்னரும் செழிப்பாக்குகிறான். இவ்வாறே நீங்களும் (மறுமைநாளில்) வெளிப்படுத்தப்படுவீர்கள். (19)'

இந்த உலகத்தில் படைப்புகள் அனைத்தையும் சோதிக்க அல்லாஹ் நாடிவிட்டான். பின்னர், அவர்கள் வழிகெட்டுவிடாமல் இருக்க, குறிப்பிட்ட தவணைக்குப் பிறகு அவர்கள் செய்தவற்றைக் குறித்து அவர்களிடம் விசாரணை செய்யப்படும் என்று விதித்துவிட்டான். தன்னுடைய இருப்பை, வல்லமையை அறிவிக்கக்கூடிய சான்றுகள் பலவற்றை அவன் அவர்களுக்காக அமைத்துள்ளான். அவை இந்தப் பிரபஞ்சத்தில் பரவிக் காணப்படுகின்றன. பின்னர், தன் வேதத்தில் அவற்றின் பக்கம் நம் கவனத்தைத் திருப்பிவிட்டான். ஆறு சான்றுகள் தொடர்ச்சியாகவும் ஏழாவது சான்று தனித்தும் குறிப்பிடப்படுகின்றன. அல்லாஹ் கூறுகிறான்:

❖ அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும் பின்னர் நீங்கள் மனிதர்களாகிப் பரவியதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். (20)

❖ நீங்கள் நிம்மதியடைய வேண்டும் என்பதற்காக அவன் உங்கள் இனத்திலிருந்தே உங்களுக்குத் துணைகளைப் படைத்திருப்பதும் உங்களிடையே அன்பையும் இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் சிந்திக்கக்கூடிய மக்களுக்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. (21)

❖ வானங்கள், பூமியின் படைப்பும் உங்களின் நிறங்களும் மொழிகளும் மாறுபட்டிருப்பதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். நிச்சயமாக அறிந்துகொள்ளும் மக்களுக்கு இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன. (22)

❖ இரவிலோ பகலிலோ நீங்கள் உறங்குவதும் அவனது அருளைத் தேடுவதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். செவியேற்கும் மக்களுக்கு இதில் பல சான்றுகள் அடங்கியுள்ளன. (23)

- ❖ அச்சமும் நம்பிக்கையும் ஏற்படுத்தும் மின்னலை அவன் உங்களுக்குக் காட்டுவதும் மேகத்திலிருந்து மழையை இறக்கி அதன் மூலம் அவன் இறந்த பூமியை உயிர்ப்பிப்பதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். நிச்சயமாக அறிந்துகொள்ளும் மக்களுக்கு இதில் ஏராளமான சான்றுகள் அடங்கியுள்ளன. (24)
- ❖ வானமும் பூமியும் அவனது கட்டளைப்படி நிலைபெற்றிருப்பதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். பின்னர், அவனது ஒரே அழைப்பில் நீங்கள் பூமியிலிருந்து உடனே வெளிப்பட்டு விடுவீர்கள். (25)
- ❖ தன் கருணையை (மழையை) உங்களைச் சுவைக்கச் செய்வதற்காகவும் அவனது கட்டளைப்படி கப்பல் செல்வதற்காகவும் அவனது அருளை நீங்கள் தேடுவதற்காகவும் நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் அவன் காற்றுகளை நற்செய்தியாக அனுப்புகிறான். இது அவனது சான்றுகளில் ஒன்றாகும். (46)

விழிப்புடைய ஒவ்வொருவரும் இந்தப் பிரபஞ்சத்தில் அல்லாஹ்வைக் குறித்து திருக்குர்ஆன் மிகச் சிறந்த முறையில் எடுத்துரைக்கிறது என்பதை உணர்ந்துகொள்வார். திருக்குர்ஆன் உருவாக்கும் அறிவுச் சூழல் ஈமானின் பக்கம் தூண்டுவதோடு நாத்திகத்தின் கிருமிகளை அடியோடு அழிக்கிறது. ஆனாலும் சிலர் இப்படியும் இருக்கிறார்கள்: 'அவர்கள் உலக வாழ்வின் வெளித்தோற்றத்தைத்தான் அறிவார்கள். மறுமையைப் பற்றி அவர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள். (7)' தற்காலத்தில் இவர்களைப் போன்றவர்கள் அதிகரித்துவிட்டார்கள். இவர்கள் அதிகரித்ததற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று உண்மையான வஹீயை எடுத்துரைப்பவர்கள் காணாமல்போனதும் அவர்களின் இயலாமையும் மெய்யியலின், பூமியில் உருவாகிய மதங்களின் ஆதிக்கமும்தான். அந்த மதங்களால் அறிவின் தேவையையோ இயல்பின் ஆசையையோ நிறைவேற்ற முடியாது.

சரியான, ஆரோக்கியமான உள்ளம் தன் இறைவனை அறிந்துகொள்ளும். அவனுடைய அருட்கொடைகளை ஒத்துக்கொள்ளும். ஷைத்தான் அதனை வழிகெடுக்க முயன்றாலும் அது இறைவனின் பக்கமே மீளும். ஆனாலும் பழம் அழுகிவிடலாம். நோய் மனித மனதை அரித்துவிடலாம். சுயநலமும் பிளவும் அல்லாஹ்வைவிட்டு அலட்சியமாக இருப்பதும் மனிதர்களை அழிவின் பக்கமே இட்டுச்செல்லும்.

அவர்கள் இப்படியே அழிந்துவிடட்டும் என்று திருக்குர்ஆன் விட்டுவிடுமா என்ன? நிச்சயமாக இல்லை. இயல்பின் பக்கம் திரும்பும்படி அது மனிதர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

*அவன் பக்கமே திரும்பியவர்களாக அவனையே அஞ்சுங்கள். தொழுகையைக் கடைப்பிடியுங்கள். இணைவைப்போருடன் இணைந்துவிடாதீர்கள். அவர்கள் தங்கள் மார்க்கத்தைத் துண்டு துண்டாக்கிப் பல பிரிவுகளாக ஆக்கிவிட்டார்கள். ஒவ்வொரு கூட்டமும் தம்மிடம் இருப்பதைக் கொண்டு பெருமிதமடைகிறது.* (31,32)

பிரிந்துசெல்வது மனித இயல்பில் உள்ளதுதான். சுயநலமும் மற்றவர்களை மிகைக்க வேண்டும் என்ற ஆர்வமுமே அதன் அடித்தளங்கள். மார்க்கத்தைப் பின்பற்றுவோர், உலகமே நிரந்தரம் என்று வாழ்வோர் என அனைவரிடமும் இந்தப் பண்பு காணப்படுகிறது. பெரும்பாலும் இதனுடன் உயர்வு மனப்பான்மையும் தன்னிடம் உள்ளவற்றைக் கொண்டு பெருமையடிக்கும் பண்பும் இணைந்தே காணப்படுகின்றன.

முந்தையவர்கள், பிந்தையவர்கள் என அனைவரிடமும் இந்தப் பண்பு பரவிக் காணப்படுகிறது. அது இறுதிநாள்வரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். இதுவும் இஸ்லாமிய இஜ்திஹாதின் விளைவாகத் தோன்றும் ஃபிக்ஹுரீதியான கருத்து வேறுபாடுகளும் முற்றிலும் வேறுவேறு.

ஃபிக்ஹு ரீதியான கருத்து வேறுபாடுகள் சமூகத்தைப் பிளக்காது. மனித மனங்களில் பகைமையை ஏற்படுத்தாது. அது கிளைப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் வேறுபாடுகள். அவற்றில் சரியான கருத்தை அடைந்தவர்கள், தவறான கருத்தை அடைந்தவர்கள் என இரு சாராரும் இறைவனிடம் கூலிபெறுவார்கள். ஃபிக்ஹு ரீதியான கருத்து வேறுபாடுகளைக் கொண்டு தமக்கென ஓர் அமைப்பை நிறுவ முயல்பவர் வழிகெட்டுப்போவார்.

இயல்பின் பக்கம் வழிகாட்டும் வசனங்களை அடுத்து மகிழ்ச்சியாலும் துன்பத்தாலும் ஏற்படும் சோதனைகுறித்து பேசும் நீண்டதொரு வசனம் இடம்பெறுகிறது. துன்பங்கள் மனிதர்களை இறைவனின் பக்கம் நெருக்கமாக்குகின்றன. ஆனால், அந்தத் துன்பங்கள் நீங்கிவிட்டால் அவர்கள் இறைவனை மறந்து நன்றிகெட்டத்தனமாகச் செயல்பட ஆரம்பிக்கிறார்கள்.

*மனிதர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் தம் இறைவனின் பக்கம் அவர்கள் திரும்பியவர்களாக அவனையே அழைக்கிறார்கள். பின்னர் அவன் தன் அருளை அவர்கள் சுவைக்கும்படி செய்தால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் இறைவனுக்கு இணைவைக்கிறார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியதற்காக அவர்கள் நிராகரிக்கட்டும்;*

*சில நாள்கள்வரை அனுபவித்துக்கொள்ளட்டும். விரைவில் அவர்கள் அறிந்துகொள்வார்கள்.* (33,34)

*நிச்சயமாக இது களையப்பட வேண்டிய மோசமான அலட்சியம்.*

அதே போன்று இன்னொரு சாரார் அருட்கொடைகளைக் கொண்டு மகிழ்ச்சியடைகிறார்கள். அவற்றிலேயே பழகிவிடுகிறார்கள். ஆனால், அவற்றுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்துவிடுகிறார்கள். திடீரென அவர்களின் ஆரோக்கியமோ செல்வமோ பறிக்கப்பட்டுவிட்டால் நிராசை என்னும் படுகுழியில் வீழ்ந்துவிடுகிறார்கள். ஏனெனில், அவர்கள் தங்களிடமிருந்து பறிக்கப்பட்டது தங்களுக்குரியது, அது பறிக்கப்படத் தகுதியானதன்று என்று எண்ணிக்கொள்கிறார்கள். கொடுப்பதும் எடுப்பதும் படைத்தவனின் செயல்பாடு என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

*நாம் மனிதர்களை அருளை சுவைக்கும்படி செய்தால் அதன் மூலம் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்கள் செய்த தீவினையால் அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டுவிட்டால் உடனே அவர்கள் நிராசையடைந்து விடுகிறார்கள். அல்லாஹ் தான் நாடுவோருக்கு வாழ்வாதாரத்தைத் தாராளமாக வழங்குகிறான், தான் நாடுவோருக்குக் குறைவாகவும் வழங்குகிறான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு இதில் ஏராளமான சான்றுகள் உள்ளன.* (36,37)

உண்மையில் மகிழ்ச்சியின்போது நன்றி செலுத்தும்படியும் துன்பத்தின்போது பொறுமையைக் கடைப்பிடிக்கும்படியும் விதியை ஏற்றுக்கொள்ளும்படியும் தனக்கு வழங்கப்பட்டுள்ளதைக் கொண்டு மற்றவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளும்படியும் மனிதன் பணிக்கப்பட்டுள்ளான்.

*அல்லாஹ் கூறுகிறான்:*

*உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவரவர் உரிமையை வழங்கிவிடுவீராக. அல்லாஹ்வின் திருப்தியை நாடுவோருக்கு இதுவே மிகச் சிறந்ததாகும். அவர்கள்தாம் வெற்றியாளர்கள்.* (38)

செல்வத்தாலும் ஏழ்மையாலும் ஏற்படும் குழப்பம் ஆரம்பக் காலம் தொட்டே உலகை உலுக்கிவருகிறது. முதலாளித்துவமும் சோஷலிசமும் பெரும்பாலான மனிதர்களை வரம்புமீறலின் பக்கமும் வெறுப்பின்

பக்கமும் இட்டுச்சென்றுகொண்டிருக்கின்றன. இரு சாராரும் மற்றவரை ஒழித்தால்தான் மனித வாழ்க்கை உருப்படும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இரு சாராருக்கிடையேயான போர் மனிதர்கள்மீது கட்டாயமாக விதிக்கப்பட்ட, அவர்களால் செலுத்தப்பட வேண்டிய வரியைப் போன்று ஆகிவிட்டது.

மனிதர்கள் செய்த தீவினைகளால் நிலத்திலும் நீரிலும் குழப்பம் பரவிவிட்டது. அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அல்லாஹ் அவர்களது சில தீய செயல்களின் விளைவை அவர்கள் சுவைக்கும்படி செய்கிறான். (41)

ஈமான் அவர்களிடையே உருவாக்கும் சகோதரத்துவத்தால் மட்டுமே இந்த வேறுபாட்டை, பகைமையை நீக்க முடியும்.

ஆகவே, அல்லாஹ்விடமிருந்து திரும்ப முடியாத நாள் வருவதற்கு முன் நீர் உம் முகத்தை நேரான மார்க்கத்தின் பக்கம் நிலை நிறுத்திக்கொள்ளும். அந்நாளில் மனிதர்கள் தனித்தனியாக ஆகிவிடுவார்கள். நிராகரிப்பவரின் நிராகரிப்பு அவருக்கே கேடாக அமையும். நற்செயல் புரிபவர்கள் தங்களுக்காகவே நன்மையை தயார்படுத்திக்கொள்கிறார்கள். (43,44)

மகிழ்ச்சி, துன்பம், நம்பிக்கை, நிராசை ஆகியவற்றைக் குறித்த செய்திக்குப் பிறகு சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான நிரந்தரமான மோதல்குறித்த செய்தி இடம்பெறுகிறது. அல்லாஹ்வின் மார்க்கத்தை எடுத்துரைத்துக்கொண்டிருந்த, இணைவைப்பாளர்களால் ஏற்பட்ட துன்பங்களைச் சகித்துக்கொண்டிருந்த தூதரிடம் கூறப்பட்டது: ‘நாம் உமக்கு முன்னர் தூதர்களை அவர்களுடைய சமூகத்தாரிடம் அனுப்பி வைத்தோம். அவர்கள் அம்மக்களிடம் தெளிவான சான்றுகளைக் கொண்டுவந்தார்கள். பின்னர், குற்றம்புரிந்த மக்களை நாம் தண்டித்தோம். நம்பிக்கையாளர்களுக்கு உதவிசெய்வது நம் கடமையாகும். (47)’

நான் என் மனதுக்குள் சொல்லிக்கொண்டேன், ‘முஹம்மது நபியைப் பின்பற்றுபவர்கள் உலகில் ஐந்தில் ஒரு பகுதியினராக இருக்கிறார்கள். ஆனாலும் இராணுவம், கலாச்சாரம், ஒழுக்கவியல் எனப் பல துறைகளிலும் அவர்கள் பின்தங்கியவர்களாக இருக்கிறார்களே! இந்த இழிவுக்குக் காரணம் என்ன?’

உண்மையில் மனித இயல்பின் பல சிறப்புகள் அவர்களிடம் மறைந்தே காணப்படுகின்றன. உறுதியோ ஒற்றுமையோ வளர்ச்சியோ அவர்களிடம் இல்லை. ஒரு முஸ்லிமையும் அல்லாஹ்வை அறியாத முஸ்லிம்

அல்லாதவரையும் ஒப்பிட்டுப்பார்த்தால் முதலாமவரிடம் சோம்பேறித் தனத்தையும் இரண்டாமவரிடம் சுறுசுறுப்பையும் காண முடிகிறது.

போஸ்னியாவில் முஸ்லிம்கள் அழிக்கப்படும்போது, ஃபலஸ்தீனில் அவர்களின் இடங்கள் ஆக்கிரமிக்கப்படும்போது நைல் நதிக்கரையின் மேற்கில் உள்ள முஸ்லிம்கள் வாய்நிரம்பச் சிரித்துக்கொண்டும் வீணான காரியங்களைத் தேடிக்கொண்டும் இருக்கிறார்கள்.

மார்க்கச் சகோதரத்துவ உணர்வு என்னவாயிற்று? ஏனெனில், அவர்களின் உள்ளங்களில் மார்க்கம் நிலைபெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் காணப்படும் சமூகம் இறையுதவிக்குத் தகுதியானதன்று.

இஸ்றாயீலின் சமூகத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களாக இருந்த போதிலும் அல்லாஹ் அவர்கள்மீது சிலை வழிபாட்டாளர்களை ஆதிக்கம் செலுத்தச் செய்தான். ஏனெனில், மோசமான மார்க்கம் இறையுதவியைப் பெற்றுத்தராது. ஆனாலும் காலம் சுற்றக்கூடியது. முஸ்லிம்கள் தங்களின் விவகாரங்களைச் சீர்திருத்திக்கொள்ளும்போது தூரமான வெற்றி அவர்களுக்கு நெருக்கமானதாக ஆகிவிடும்.

இந்த உலகில் நம் சமூகம் அரசியல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் சீரழிந்துகொண்டிருக்கிறது. இந்தப் பண்புடைய சமூகத்துக்கு அல்லாஹ் உதவிசெய்ய மாட்டான். இந்த அத்தியாயத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள வசனம், இஸ்லாம் இறுதி நாள்வரை நிலைத்திருக்கும் என்பதை அழுத்தம்திருத்தமாகக் கூறுகிறது என்று நான் கருதுகிறேன். தன்னைப் பின்பற்றும் சமூகத்துடன்தானே அது நிலைத்திருக்கும்.

> ஆனாலும் ஞானமும் ஈமானும் வழங்கப்பட்டவர்கள், ‘அல்லாஹ்வுடைய பதிவேட்டின்படி நீங்கள் மீண்டும் எழுப்பப்படும் நாள்வரை தங்கியிருந்தீர்கள். இதுதான் எழுப்பப்படும் நாள். ஆயினும், நீங்கள் இதனைப் பற்றி அறியாதவர்களாக இருந்தீர்கள்’ என்று கூறுவார்கள். (56)

இந்த வசனம் என்றும் அழியாத நம் சமூகத்தையே குறிப்பிடுகிறது. அதன் தடுமாற்றம் குறிப்பிட்ட காலம்வரைதான் நீடிக்கும். நாம்தான் தூதுத்துவம் வழங்கப்பட்டவர்களில் இறுதியானவர்கள் என்பதை நாம் அறிவோம். நமக்குப் பிறகு மறுமைநாளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நாம் ஏன் நம் விவகாரங்களை ஒருங்கிணைத்து நம் வரலாற்றையும் கண்ணியத்தையும் மீட்டெடுக்கக் கூடாது?

*இதுதான் இறுதியாக நிகழும். அத்தியாயத்தின் இறுதிப் பகுதியும் இதனையே உணர்த்துகிறது. 'ஆகவே, நீர் பொறுமையுடன் இருப்பீராக. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. உறுதியான நம்பிக்கையற்றவர்கள் உம்மைக் கலக்கமடையச் செய்துவிட வேண்டாம்.* (60)'

❖ ❖ ❖

அத்தியாயம் 31

# லுக்மான்

(ஒரு நல்லடியாரின் பெயர்)

*நல்லவர்களை, அவர்களுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ள கூலிகளை நினைவுகூர்ந்த வண்ணம் இந்த அத்தியாயம் தொடங்குகிறது. பின்னர் அத்தியாயம், குற்றவாளிகளையும் இஸ்லாத்துக்கு எதிராக அவர்கள் போடும் கூச்சல்களையும் குறித்து பேசுகிறது.*

மனிதர்களில் சிலர், அறிவில்லாமல் அல்லாஹ்வின் பாதையை விட்டுப் பிறழச்செய்வதற்காகவும் அதனைப் பரிகாசமாக எடுத்துக் கொள்வதற்காகவும் மதிமயக்கும் விசயங்களை விலைக்கு வாங்கு கிறார்கள். அவர்களுக்கு இழிவுமிக்க வேதனை உண்டு. (6)

*அந்நள்ர் இப்னு ஹாரிஸ் என்பவரையே வசனம் குறிப்பிடுகிறது. அவர்தான் பாரசீக மன்னர்களின் கதைகளை உள்ளடக்கிய புத்தகங்களை வாங்கி குறைஷிகளின் சபைகளிலும் இரவுப் பேச்சுகளிலும் அவர்களுக் குப் படித்துக்காட்டினார். முஹம்மது எடுத்துரைக்கும் குர்ஆனைவிட இது சிறந்தது என்றார் அவர். ஒரு மனிதர் இரவு முழுவதும் ஆயிரத்தொரு இரவுகள் என்ற புத்தகத்தின் ஒரு பகுதியைப் படித்துக்காட்டினாலும் வீணான காரியத்தைத் தவிர வேறு எதையும் அவர் செய்யவில்லை என்றே கருதப்படும்.*

*குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர் இது இசைகுறித்து அருளப்பட்ட வசனம் என்று கருதுகிறார்கள். அருவருக்கத்தக்க இசை உண்மையில் பழிக்கப்பட்ட ஒன்றுதான். சத்தியத்தைவிட்டு மனிதர்களைத் திருப்பும் ஒவ்வொன்றும் மதிமயக்கும் விசயம்தான்.*

*வசனங்கள் நல்லவர்கள் பெறும் கூலியை மீண்டும் ஒருமுறை அழுத் தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்றன. 'நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்தவர்களுக்கு அருட்கொடைகள் நிறைந்த சுவனங்கள்*

உண்டு. அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். இது அல்லாஹ்வின் உண்மையான வாக்குறுதியாகும். அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (8,9)'

அவை மாபெரும் படைப்பாளனை அவனுக்குரிய புகழோடு, அந்தஸ்தோடு குறிப்பிடுகின்றன. அல்லாஹ்வுக்கு இணையாக ஆக்கப்பட்டவர்களைக் குறித்து அவை கேள்வி எழுப்புகின்றன. அவர்கள் யார்? அவர்கள் எதனைப் படைத்தார்கள்? இணைவைப்பாளர்களின் இந்த வீணான பேச்சுகள் ஜன்னி கண்டவனின் புலம்பல்களைப் போல. அவற்றுக்கு எந்த மதிப்பும் இல்லை.

அத்தியாயம் இந்தக் கருத்துகளை நடுப்பகுதியில் வேறொரு வடிவிலும் குறிப்பிடுகிறது. 'யார் தம்மை முழுவதும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து நற்செயல் புரிபவராகவும் இருக்கிறாரோ அவர் வலுவான கயிற்றைப் பற்றிப்பிடித்துக்கொண்டவராவார். அனைத்து விவகாரங்களின் முடிவும் அல்லாஹ்விடமே உள்ளது. (22)'

நல்லவர்கள் நன்மையைக் கொண்டு நற்செய்தி கூறப்பட்டதைப் போலக் குற்றவாளிகள் தீமையைக் கொண்டு எச்சரிக்கப்படுகிறார்கள்: 'நிராகரிப்பவரின் நிராகரிப்பு உம்மைக் கவலையில் ஆழ்த்திவிட வேண்டாம். நம்மிடமே அவர்கள் திரும்ப வேண்டும். அப்போது அவர்கள் செய்தவற்றை நாம் அவர்களுக்கு அறிவிப்போம் ... (23)'

அதற்குப் பிறகு அல்லாஹ்வின் மகத்துவம் குறித்து அத்தியாயம் அதிகமாகப் பேசுகிறது. அடியார்களின் விவகாரங்களை நிர்வகிப்பது குறித்த அவனது வார்த்தைகள் என்றும் முடிவடையாதவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. வானத்திலிருந்து பூமிவரை காணப்படும் எல்லாவற்றையும் அவனே படைத்தான், அவனே அவையனைத்துக்கும் உணவளிக்கிறான். உயர்வும் தாழ்வும் அளிக்கிறான். உயிர் கொடுக்கிறான். மரணிக்கச்செய்கிறான். விவகாரம் கணக்கிட முடியாத படைப்பினங்களோடு தொடர்புடையது. உயிரினங்கள், தாவரங்கள், வானவர்கள், வானவெளியில் நீந்திக்கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் எனக் கணக்கிடவே முடியாத எத்தனையோ படைப்பினங்கள் காணப்படுகின்றன. நாம் வாழும் பூமியில் யார்யாரெல்லாம் இருக்கிறார்கள், எவை எவையெல்லாம் இருக்கின்றன என்பதைக் குறித்து நாம் அறிய மாட்டோம். 'பூமியில் உள்ள மரங்களெல்லாம் எழுதுகோல்களாகவும் கடலுடன் இன்னும் ஏழு கடல்கள் சேர்ந்து மையாகவும் மாறினால்கூட அல்லாஹ்வின் வார்த்தைகள் முடிவடையாது. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (27)'

இந்தப் பெரும் எண்ணிக்கை அவனை இயலாமையில் ஆழ்த்தி விடுமா? ‘ஒருவரைப் படைப்பதும் உயிர்கொடுத்து எழுப்புவதும் போன்றதுதான் உங்கள் அனைவரையும் படைப்பதும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புவதும். நிச்சயமாக அவன் செவியேற்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான். (28)’

அல்லாஹ்வை வணங்கக்கூடியவர்கள் பூமியில் அவனுடைய அடையாளங்களைக் காண்கிறார்கள். ஏனெனில், அவர்கள் உண்மையின் வெளிச்சத்தைக் கண்டுகொண்டார்கள். படைப்புகளைக் கொண்டு படைப்பாளனின் வல்லமையை அறிந்துகொண்டார்கள்.

இந்த அத்தியாயம் லுக்மான் என்ற ஞானியின் பெயரால் அழைக்கப்படுகிறது. அவருடைய சம்பவத்தை இது குறிப்பிடுகிறது. அறிவிப்புகளில் காணப்படுகிறது, குறைஷிகள் நபியவர்களிடம் அவரைக் குறித்து கேட்டார்கள். நபியவர்கள் அவருடைய அறிவுரையைக் குறைஷிகளுக்கு எடுத்துரைத்தார்கள். அது நன்மைகளால் நிரம்பியுள்ள அறிவுரை. பிரபல்யமான கிரேக்க தத்துவ ஞானிகளைவிட லுக்மான் சத்தியத்தைத் தெளிவாக அறிந்திருந்தார். அவர்களின் தத்துவங்களோ வெற்றுக் கோட்பாடுகளாகவும் புரிந்துகொள்ள முடியாத சிந்தனைகளாகவும் இருக்கின்றன. லுக்மான் நிரந்தரமான சத்தியத்தைச் சுருக்கமான வழிமுறையில் தம் மகனுக்கு எடுத்துரைத்தார். அவருக்கு மிக உயர்வான சொத்தை விட்டுச்சென்றார்.

தனக்கு உபகாரம் செய்தவர்களுக்கு அழகிய முறையில் நன்றி செலுத்துவது மனிதனுக்குக் கடினமான ஒன்றைப் போலத் தெரிகிறது. இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளவை எல்லாம் தனக்குப் பணிவிடைசெய்ய வேண்டும். தான் அதனைப் பற்றி எந்த உணர்வுமின்றி அலட்சியமாக இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். பெரும்பாலான மனிதர்கள் தங்களுக்குச் செய்யப்படும் உபகாரத்தை மிகுந்த ஆவலோடு பெற்றுக்கொள்கிறார்கள். பின்னர், நன்றி என்று ஒரு வார்த்தைகூடக் கூறாமல் திரும்பிச் செல்கிறார்கள். இப்படித்தான் இவர்கள் தங்கள் இறைவனுடனும் நடந்துகொள்கிறார்கள். சில விலங்குகள்கூட இப்படிப்பட்ட நன்றிகெட்டத்தனத்தை விரும்புவதில்லை. ‘... நிச்சயமாக மனிதன் தன் இறைவனுக்கு நன்றிகெட்டவனாக இருக்கிறான். (100:6)’

அல்லாஹ்வுடனான தொடர்பு, அவன் நம்மைப் படைத்ததற்கும் உதவிசெய்வதற்கும் நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில்தான் அமைய வேண்டும். ஆகவே, லுக்மானுக்கு வழங்கப்படும் அறிவுரைகளில் முதலாவதாகக் கூறப்படுகிறது, ‘நாம்

லுக்மானுக்கு ஞானத்தை வழங்கினோம். நீர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும். யார் நன்றி செலுத்துகிறாரோ அவர் தமக்காகவே நன்றி செலுத்துகிறார். யார் நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்கிறாரோ, அல்லாஹ் தேவையற்றவனாகவும் புகழுக்குரியவனாகவும் இருக்கிறான். (12)' அல்லாஹ் அடியார்களைவிட்டும் தேவையற்றவன். ஒரு அடியான் நன்றி செலுத்தினால் அவனுக்குத்தான் அது நல்லது. அது அவன் விழிப்பாக இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. அவன் தன்னிடம் உள்ளவை அதிகரிப்பதற்கான வழியைக் கண்டடைந்துவிட்டான். அவன் நன்றி செலுத்தவில்லையெனில் அவனுக்குத்தான் இழப்பு.

லுக்மான் தம் மகனுக்கு வழங்கும் அறிவுரை ஒரே இறைவனான அல்லாஹ்வை அறிதலைக் கொண்டு தொடங்குகிறது. 'லுக்மான் தம் மகனுக்கு அறிவுரை வழங்கியபோது, என்னருமை மகனே, நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே, நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும் என்று கூறியதை நினைவுகூரும். (13)'

அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறு கூறிய பிறகு தாய்தந்தையருடன் நல்ல முறையில் நடந்துகொள்வது குறித்த அறிவுரை இடம் பெறுகிறது. ஏனெனில், அல்லாஹ்வுக்குப் பிறகு அவர்களின் மூலம் தான் மனிதன் தன் இருப்பைப் பெறுகிறான்.

பரிதாபம் என்னவென்றால், நவீன நாகரிகம் தாய் தந்தையரைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கெனக் கட்டப்பட்ட முதியோர் இல்லங்களில் தங்களின் எஞ்சிய காலங்களைத் தனிமையில் கழிக்குமாறு அவர்களை அலட்சியமாக விட்டுவிடுகிறது. அல்லாஹ்வை நினைவு கூர்தலை வெறுக்கும், அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய மறுக்கும் ஒரு சமூகத்தில் இப்படித்தான் நிகழும்.

'என்னருமை மகனே, தொழுகையைக் கடைப்பிடி; நன்மைசெய்யுமாறு தூண்டி தீமையைத் தடு; உனக்கு வரக்கூடிய துன்பங்களைப் பொறுத்துக்கொள். நிச்சயமாக இது மனவுறுதிமிக்க காரியமாகும். (17)' லுக்மான் தம் மகனுக்கு வழங்கும் இந்த அறிவுரைகள், 'உன் நடையில் மிதமான வேகத்தைக் கடைப்பிடி. உன் குரலைத் தாழ்த்திக்கொள். நிச்சயமாகக் குரல்களிலெல்லாம் வெறுக்கத்தக்கது கழுதையின் குரலே ஆகும். (19)' என்ற வசனத்தோடு நிறைவடைகிறது. அறிவுரைகள் முழுவதிலும் உன்னதமான கொள்கைகளும் கண்ணியமான ஒழுக்க மாண்புகளும் நிரம்பிக் காணப்படுகின்றன. நாம் அவற்றில் உள்ள ஞானத்தைக் கொண்டு பயனடைய வேண்டும் என்பதற்காகத் திருக்குர்ஆன் நமக்கு அவற்றைக் குறிப்பிடுகிறது. ஞானம் என்பது நம்பிக்கையாளனின் தொலைந்த பொருள். எங்கு கண்டாலும் அவனே அதற்கு உரியவனாவான்.

அவற்றுக்குப் பிறகு நன்றியுணர்வைத் தூண்டும் பின்வரும் வசனம் இடம்பெறுகிறது:

> வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை அவன் உங்களுக்கு வசப் படுத்தித் தந்துள்ளான் என்பதையும் உங்கள் மீது வெளிப்படையாக வும் மறைமுகமாகவும் தன் அருட்கொடைகளை நிறைவாக்கியுள் ளான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா? அல்லாஹ்வைப் பற்றி அறிவில்லாமலும் வழிகாட்டுதல் இல்லாமலும் பிரகாசமான வேதம் இல்லாமலும் மக்களில் சிலர் தர்க்கம்புரிகிறார்கள். (20)

வணக்க வழிபாட்டைச் சிறந்த முறையில் நிறைவேற்றி, தனக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தெளிவுபடுத்தியபிறகு அல்லாஹ் கூறுகிறான்:

> அல்லாஹ்வின் அருளால் கப்பல் கடலில் செல்கிறது என்பதை நீர் பார்க்கவில்லையா? அது அவன் தன் சான்றுகளைக் காட்ட வேண் டும் என்பதற்காகத்தான். பொறுமையுடன் நன்றி செலுத்தும் ஒவ் வொருவருக்கும் இதில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. (31)

ஒவ்வொருவரும் தனித்தனியாகவே இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும். யாரும் மற்றவரின் சுமையைச் சுமக்க முடியாது, மற்றவரின் மீது எதையும் சுமத்திவிட முடியாது என்ற அடிப்படையை நிறுவியவாறு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது.

> அந்நாளில் எந்தத் தந்தையும் தன் மகனுக்குப் பலனளிக்க முடியாது. எந்த மகனும் தன் தந்தைக்குப் பலனளிக்க முடியாது. (33)

மனிதன் தன் எதிர்காலத்தைத் தானே உருவாக்குகிறான். அவன் வெற்றிபெற்றால் அது அவன் செய்த நற்செயல்களின் காரணமாகத்தான். அவன் அழிந்துவிட்டால் அதுவும் செய்த பாவங்களின் விளைவால்தான். ‘பளுவான சுமையுடையவர் தம் சுமையைச் சுமக்கும்படி அழைத்தாலும் எவரும் அதிலிருந்து சிறிதளவும் சுமக்க மாட்டார், அவர் நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரியே. (35:18)’

சூனியக்காரர்கள், ஜோதிடர்கள் மறைவான செய்திகளை அறிவார்கள் என்பதை அத்தியாயம் முற்றிலுமாக நிராகரிக்கிறது. அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அவற்றை அறிய மாட்டார்.

> அந்நேரத்தைப் பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. அவனே மழையைப் பொழிவிக்கிறான். கருவறையில் உள்ளதையும் அவன் அறிவான். நாளை என்ன சம்பாதிப்பார் என்பதை யாரும் அறிய

*மாட்டார். தான் எந்தப் பூமியில் மரணிப்பார் என்பதையும் யாரும் அறிய மாட்டார். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்; நுட்ப மானவன்.* (34)

*வானிலை அறிக்கைகள் மறைவான செய்திகள் அல்ல. அவை வெளிப் படையான சில அடையாளங்களைப் பார்த்து கூறப்படும் கணிப்புகள். அதுபோன்றுதான் கருவில் உள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதை அறிவதும். அது கருவைக் குறித்த முழுமையான அறிதலாகிவிடாது.*

❖ ❖ ❖

அத்தியாயம் 32

# அஸ்ஸஜ்தா

(சிரம்பணிதல்)

*இது மக்காவில் அருளப்பட்ட அத்தியாயமாகும். இந்த அத்தியாயத்தின் நடுப்பகுதியில் மனிதச் சமூக வரலாற்றில் முஸ்லிம் சமூகம் உருவாக்கப்படுவதன் நோக்கம் இடம்பெற்றுள்ளது. அல்லாஹ் அருளிய இந்தக் குர்ஆன் இதற்கு முன்னர் வஹீயை அறிந்திராத ஒரு சமூகத்துக்கு வழங்கப்பட்டது. அது புதியதொரு வடிவத்தில் அந்தச் சமூகத்தை உருவாக்கியதோடு உலகளாவிய தூதுத்துவத்தைச் சுமப்பதற்குத் தகுதியான சமூகமாக அதனை ஆக்கியது.*

> *'இதனை இவர் சுயமாகப் புனைந்துகொண்டார்.' என்று அவர்கள் கூறுகிறார்களா? அவ்வாறில்லை. உமக்கு முன் எச்சரிப்பவர் எவரும் வந்திராத ஒரு சமூகத்துக்கு அவர்கள் நேர்வழியடையும் பொருட்டு நீர் எச்சரிக்கைசெய்ய வேண்டும் என்பதற்காக இது உம் இறைவனிடமிருந்துள்ள உண்மையாகும்.* (3)

*இதற்கு முன்னர் குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் அல்லது குறிப்பிட்ட சமூகத்துக்கு மட்டும் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். அவற்றினுடைய காலம் முடிந்துவிட்டது. அறபுகள் அனைவரையும் தட்டியெழுப்பிய, அவர்களைக் கொண்டு உலகையே மாற்றிய ஒரு தூதுத்துவம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவம்தான்.*

*இந்த அருட்கொடையை மனிதச் சமூகத்துக்கு வழங்கிய அல்லாஹ்வின் இந்தப் பண்பு இந்த இடத்தில் குறிப்பிடப்படுவதற்கு மிகப் பொருத்தமானது.*

> *அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் அவற்றுக்கு இடையே உள்ளவற்றையும் ஆறு நாள்களில் படைத்தான். பின்னர்,*

அரியணையின் மீது நிலைகொண்டான். அவனைத் தவிர உங்களுக்கு உதவியாளரோ பரிந்து பேசுபவரோ எவரும் இல்லை ... (4)

பரந்துவிரிந்த இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பாளன் கண் இமைக்கும் நேரத்தில் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றையும் நிர்வகிக்கும் ஆற்றலுடையவன். இதனை நாம் கொஞ்சம் விளக்கமாகக் காண்போம்.

பூமி ஒவ்வொரு இருபத்து நான்கு மணிக்கொரு தடவை தன்னைத் தானே சுற்றிக்கொண்டிருக்கிறது. அது முன்னூற்று அறுபத்தைந்து நாள்களில் சூரியனையும் ஒருமுறை சுற்றிவருகிறது. சூரியனும் அதன் குடும்பமும் நட்சத்திரங்களால் சூழப்பட்ட வட்டப்பாதையில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. வானவெளியில் நீந்திச் செல்லுபவற்றைக் குறித்து நாம் குறைவாகவே அறிவோம். பூமிக்கும் வானத்துக்கும் இடையில் உள்ள தூரத்தை ஒளி சில நிமிடங்களில் கடந்துவிடுகிறது.

அதன் விவகாரங்கள் நிகழ்வதற்கான கால அளவு நம்முடைய கால அளவின்படி ஆயிரம் ஆண்டுகள் அல்லது அதைவிட அதிகமானதாக இருக்கலாம். ஆனாலும் படைப்பாளனின் செயல்பாடுகளில் காலத்தைக் குறிப்பிட முடியாது. பார்க்கத் தகுந்தவற்றைக் கண்கள் பார்ப்பதற்கு எவ்வளவு கால அளவு ஆகும் என்று கூற முடியுமா? அப்படிக் கூற முடியாது.

அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்கிறான். நம்முடைய பிரபஞ்சத்தில் அவன் நாடியதை அழிக்கிறான், நாடியதை நிலைத்திருக்கச் செய்கிறான். தான் நாடியோருக்கு வெற்றியையும் தான் நாடியோருக்குத் தோல்வியையும் அளிக்கிறான் ...

வானத்திலிருந்து பூமிவரை அனைத்து காரியங்களையும் அவனே நிர்வகிக்கிறான். அவை ஒருநாள் அவனிடமே உயர்ந்துசெல்லும். அதன் அளவு உங்கள் கணக்கின்படி ஆயிரம் ஆண்டுகளாகும். அவன் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் நன்கறிந்தவன். அவன் யாவற்றையும் மிகைத்தவன், இணையிலாக் கிருபையாளன். (5,6)

உலக வரலாற்றில் தோன்றிய இஸ்லாமியச் சமூகம் மற்ற சமூகங்களிடமிருந்து தம்மை வேறுபடுத்தும் தனித்தன்மைகளைப் பெற்றிருந்தது. அனைத்துக்கும் முதலாக அது அல்லாஹ் ஒருவனையே வணங்குகிறது. அவனுக்குரிய அழகிய பெயர்களைக் கொண்டு அவனை அழைக்கிறது. இறை வழிகாட்டல்களைப் பின்பற்றாமல், தன்னைத்தானே வழிபட்டுக் கொண்டிருக்கும் நவீன நாகரிகத்துக்கு மாற்றமாக அது அவனுக்காகவே

செயல்படுகிறது. பின்னர், மறுமைநாளை நினைவுகூர்ந்து அந்த நாளுக்காகத் தம்மைத் தயார்படுத்திக்கொள்கிறது. ஆனால், மற்ற மனிதர்களோ அந்த நாளை நினைவுகூராமல் வெருண்டோடிக்கொண்டிருக்கிறார்கள்.

> ‘பூமியில் நாங்கள் மறைந்துபோய்விட்டாலும் மீண்டும் புதிதாகப் படைக்கப்படுவோமா?’ என்று அவர்கள் கேட்கிறார்கள். இல்லை. உண்மையில் அவர்கள் தங்கள் இறைவனின் சந்திப்பையே நிராகரிப்போராக இருக்கிறார்கள். (10)
>
> நாளை இதற்காக அவர்கள் நிச்சயம் வருத்தப்படுவார்கள்.
>
> அந்தோ, நீர் பார்க்க வேண்டுமே! அப்போது குற்றவாளிகள் தம் இறைவனுக்கு முன்னால் தலைகுனிந்தவர்களாக, ‘எங்கள் இறைவா, நாங்கள் பார்த்தோம், கேட்டோம். ஆகவே, எங்களைத் திருப்பியனுப்பிவிடு. நாங்கள் நற்செயல் புரிகிறோம். நிச்சயமாக நாங்கள் உறுதியாக நம்பிக்கை கொண்டுவிட்டோம்’ என்று கூறுவார்கள். (12)

எப்படி அது சாத்தியமாகும். விதைப்பதற்கான தருணம் எப்போதோ முடிந்துவிட்டது. அறுவடைக்கான நேரம் வந்துவிட்டது. ஈமானையும் நற்செயல்களையும் தங்களுக்காகச் சேர்த்துவைத்தவர்களைத் தவிர வேறு யாரும் வெற்றிபெற மாட்டார்கள்.

நம் சமூகத்தின் தனித்தன்மைகளில் ஒன்று, அது பகலிலும் இரவின் ஒரு பகுதியிலும் தொழுகையை நிலைநிறுத்துகிறது. இப்படிப்பட்டவர்களும் நம் சமூகத்தில் இருக்கிறார்கள். ‘தம் படுக்கைகளிலிருந்து அவர்கள் எழுந்து அச்சத்துடனும் நம்பிக்கையுடனும் தம் இறைவனிடம் பிரார்த்திப்பார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்வார்கள். (16)’ நவீன நாகரிகம் இரவைக் குற்றம்செய்வதற்கான, தடுக்கப்பட்ட இன்பங்களை அனுபவிப்பதற்கான நேரமாகக் கருதுகிறது. பகலின் செயல்பாடுகளிலோ அது தொழுகைக்கு எந்த முக்கியத்துவமும் அளிப்பதில்லை.

இந்த இரு சாராரும் சமமாவார்களா என்ன? ‘நம்பிக்கை கொண்டவர் கீழ்ப்படியாதவரைப் போல் ஆவாரா? இருவரும் சமமாக மாட்டார்கள். (18)’

காலத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கான இஸ்லாமிய ஒழுங்கு பின்வரும் வசனத்தில் வெளிப்படுகிறது: ‘உங்களின் தூக்கத்தை ஓய்வாக நாம் ஆக்கினோம். நாமே இரவைத் திரையாக்கினோம். பகலை

வாழ்வாதாரத்துக்கான நேரமாக ஆக்கினோம். (78:9-11)' வேலைசெய்வதற்குக் கண்டிப்பாக ஓய்வு அவசியம். இரண்டு நிலைகளிலும் அல்லாஹ்வை மறந்துவிடக் கூடாது.

நிச்சயமாகத் தொழுகை நம்பிக்கையாளர்களின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது. (4:103)

மனிதச் சமூகத்தின் தற்போதைய பிரச்சினை அவர்கள் தொழுகையை விட்டுவிட்டார்கள் என்பது மட்டுமல்ல. மாறாக, அவர்கள் அதனை வீணாக்குவதற்கான பல திட்டங்களை வகுத்துள்ளார்கள். 'ஓர் அடியார் தொழும்போது அவரைத் தடுப்பவரை நீர் பார்த்தீரா? நீர் என்ன நினைக்கிறீர், அவர் நேர்வழியில் இருந்தாலுமா? அல்லது, இறையச்சத்தைக் கொண்டு கட்டளையிட்டாலுமா? (96:9-12)'

கடந்தகாலத்தில் முஸ்லிம்கள் கடின உள்ளம் கொண்ட, வணக்க வழிபாட்டை இழிவாகக் கருதக்கூடிய நாத்திகர்களின் பெரும் கூட்டத்தினரை எதிர்கொண்டார்கள். இன்றும் அவர்கள் அதே போன்று தங்களின் கண்டுபிடிப்புகளைக் கொண்டு, இராணுவ வலிமையைக் கொண்டு கர்வம் கொள்ளும் ஒரு கூட்டத்தினரை எதிர்கொள்கிறார்கள். நாம் பொறுமையுடன் அவர்களை எதிர்கொள்ளவும் அதற்கான விலையை அளிக்கவும் வேண்டும். 'தன் இறைவனின் வசனங்களின் மூலம் நினை வூட்டப்பட்ட பின்னரும் அவற்றைப் புறக்கணிப்பவனை விட மிகப் பெரிய அக்கிரமக்காரன் யார்? நாம் குற்றவாளிகளைத் தண்டித்தே தீருவோம். (22)'

பின்னர் அல்லாஹ் தன் தூதர் முஹம்மதுக்கு நினைவூட்டுகிறான், 'இதற்கு முன்னால் வந்த தூதர்கள் சிரமங்களை அனுபவித்தார்கள். ஆகவே, அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்ததைப் போன்று நீரும் பொறுமையைக் கடைப்பிடியும்.'

நாம் மூசாவுக்கு வேதத்தை வழங்கினோம். ஆகவே, அவர் அதனைப் பெற்றதைக் குறித்து நீர் சந்தேகப்படாதீர். நாம் அதனை இஸ்ராயீலின் மக்களுக்கு வழிகாட்டியாகவும் ஆக்கினோம். அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்தபோது நாம் அவர்களிலிருந்து நம் கட்டளைப்படி வழிநடத்தும் தலைவர்களை ஏற்படுத்தினோம். அவர்கள் நம் வசனங்களின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். (23-24)

இதன் பொருள், உறுதியான நம்பிக்கையையும் பொறுமையையும் ஒருசேர பெற்றிருப்பவர்களே தலைமைத்துவத்துக்குத் தகுதியானவர்கள். இப்றாஹீம் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். ஏனெனில், அவர்

சோதிக்கப்பட்டார். அதில் வெற்றிபெற்றார். யார் மகத்தான ஒன்றை வேண்டுகிறாரோ அவர் பெரும்பெரும் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

நம்முடைய தூதருக்குச் சொல்லப்படுகிறது, அவர் நிச்சயமாக மூசாவைச் சந்திப்பார் என்று. மரணத்துக்குப் பின்னர் அவர் சந்தித்தாரா? அல்லது, மிஃறாஜ் பயணத்தில் சந்தித்தாரா? மிஃறாஜ் பயணத்தில் சந்தித்திருக்கலாம் அல்லது மரணத்துக்குப் பின்னர் சந்தித்திருக்கலாம். ஆனால், சந்திப்பு நிகழ்ந்தது என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

இப்னு ஆஷூர் தம்முடைய குர்ஆன் விரிவுரையில் இங்கு 'சந்திப்பு' என்பது ஜிஹாதைக் குறிக்கிறது என்கிறார். அதாவது, மூசா ஃபிர்அவ்னின், அவனுடைய சமூகத்தாரின் சூழ்ச்சியை எதிர்கொண்டதுபோல நீங்களும் எதிர்கொள்வீர்கள் என்ற பொருளைத் தரும். ஆனால், இறுதி வெற்றி நம்பிக்கையாளர்களுக்கே சாதகமாக அமையும்.

> நாம் இவர்களுக்கு முன் எத்தனையோ சமூகங்களை அழித்திருக்கிறோம் என்பதிலிருந்து இவர்கள் படிப்பினை பெறவில்லையா? அவர்கள் வாழ்ந்த இடங்களின் வழியில்தானே இவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இதில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவர்கள் செவிசாய்க்க மாட்டார்களா என்ன? (26)

உண்மையில் இந்த நாள்களில் முஸ்லிம்கள் பெரும் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். தெற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவிலும் இன்னும் பல நாடுகளிலும் முஸ்லிம்களின் மீது பெரும் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன.

குர்ஆன் கூறும் சட்டங்கள்மீதும் அதன் புனிதங்கள்மீதும் மண்வாரி வீசப்படுகிறது. சிறுபான்மையினராக வசிக்கும் முஸ்லிம்கள் தோல்வியையும் இழிவையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அல்லாஹ்வின் மீது தாம் கொண்ட நம்பிக்கையை அவர்கள் இழக்கவில்லை. அவனே தன் அடியார்களிடையே சத்தியத்துடன் தீர்ப்பளிக்கக்கூடியவன்.

> 'நீங்கள் உண்மையாளர்களாயின் இந்தத் தீர்ப்பு எப்போது வரும்?' என்று அவர்கள் கேட்கிறார்கள். நீர் கூறும், 'தீர்ப்புநாளன்று நிராகரிப்பாளர்களின் நம்பிக்கை பயன் தராது.' அவர்களுக்கு அவகாசமும் அளிக்கப்படாது. ஆகவே, நீர் அவர்களைப் புறக்கணித்து எதிர்பார்த்திருப்பீராக. அவர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். (28-30)

❖ ❖ ❖

அத்தியாயம் 33

# அல்அஹ்ஸாபு

(படையினர்)

இந்த அத்தியாயம் முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டி என்ற அடிப் படையில் நபியவர்களுக்கான ஐந்து அழைப்பை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு அழைப்புக்குப் பின்னரும் அவரிடமும் அவருடைய சமூகத் திடமும் என்ன வேண்டப்படுகிறது என்பதும் குறிப்பிடப்படுகிறது.

*முதலாவது அழைப்பு:*

*தூதரே, அல்லாஹ்வுக்கு அஞ்சுவீராக. நிராகரிப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் கீழ்ப்படியாதீர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். உம் இறைவனிடமிருந்து உமக்கு அறிவிக்கப்படுவதைப் பின்பற்று வீராக. நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்த வன். அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருப்பீராக. அவனே பொறுப்பேற்கப் போதுமானவன்.* (1-3)

ஏவல், விலக்கு இரண்டும் நபியவர்களை நோக்கியே விடுக்கப்படு கின்றன. இது முன்னணியில் இருக்கும் மாணவனைப் பார்த்து சோம் பேறித்தனம் செய்துவிடாதே, பின்தங்கிவிடாதே என்று கூறுவதைப் போன்றதொரு சொல்லாடல். அவர் இறைவனை அதிகம் அஞ்சுபவராக, நிராகரிப்புடனும் நயவஞ்சகத்துடனும் எந்த விட்டுக்கொடுத்தலுக்கும் இடமின்றி நடந்துகொள்பவராக இருந்தார். வஹீயைத் தவிர வேறு எதையும் அவர் பின்பற்றவில்லை. அவருடைய பெயர்களில் அல் முதவக்கில் - அல்லாஹ்வை முழுமையாகச் சார்ந்திருப்பவர் - என்பதும் ஒன்றாகும்.

ஆனாலும் அவர் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரம் இருந்தது. அவர் அதனை மாற்றியே தீர வேண்டும். அது, அவர் அறியாமைக் காலத்தில்

*வளர்ப்பு மகனாக ஆக்கிக்கொண்ட ஸைது இப்னு ஹாரிஸ் தொடர் பானது. இஸ்லாம் வந்தபோது வளர்ப்பு மகன் என்ற கருத்தாக்கத்தை முழுமையாக நிராகரித்தது. அல்லாஹ் கூறினான்:*

> *எந்த மனிதனுடைய நெஞ்சுக்குள்ளும் இரண்டு உள்ளங்களை அல்லாஹ் அமைக்கவில்லை. உங்கள் மனைவியரில் யாரை நீங்கள் உங்கள் தாயுடன் ஒப்பிட்டீர்களோ அவர்களை அவன் உங்களுக்குத் தாயார்களாக ஆக்கவுமில்லை. உங்கள் வளர்ப்பு மகன்களை உங்க ளின் சொந்த மகன்களாக ஆக்கவுமில்லை. இவை யாவும் உங்கள் வாய்ப்பேச்சுகளாகும். அல்லாஹ் உண்மையைக் கூறுகிறான். நேரான வழியைக் காட்டுகிறான்.* (4)

*வளர்ப்பு மகனைக் குறித்த ஒப்பந்தம் நிறைவேறிவிட்டால் நாம் என்ன செய்வது?*

> *வளர்ப்பு மகன்களை அவர்களின் தந்தையர்களுடன் சேர்த்து அழை யுங்கள். இதுவே அல்லாஹ்விடம் மிகவும் நியாயமானதாகும். அவர்களின் தந்தையர்களை நீங்கள் அறியவில்லையாயின், அவர்கள் உங்களுக்கு மார்க்கச் சகோதரர்களாகவும் உங்கள் நண்பர்களாகவும் இருக்கிறார்கள்.* (5)

*உண்மையான தந்தையின் பெயரால்தான் அவன் அழைக்கப்பட வேண்டும். அவனுடைய தந்தையை நாம் அறியவில்லையெனில் அவன் நம்முடைய மார்க்கச் சகோதரனாவான். கைவிடப்பட்ட குழந்தை களுடன் நாம் சகோதரத்துவ உறவைப் பேணுவோம். அவர்களுக்குப் பொறுப்பாளர்களாவோம். சமூகத்தில் அவர்களை அப்படியே வீணாகி விடுமாறு விட்டுவிட மாட்டோம்.*

*இந்த விசயத்தை நடைமுறைப்படுத்துவதில் முஸ்லிம்கள் தோல்வி யடைந்துவிட்டார்கள். மற்றவர்களோ அவர்களைப் பராமரிப்பதற்காக அனாதை இல்லங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் தங்களின் மார்க்கத்தை யும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள்.*

*இந்தக் கட்டளைக்குப் பிறகு மார்க்க உறவின் மகத்துவமும் மற்ற நெருங்கிய உறவுகளைவிட அதற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவமும் இடம்பெறுகிறது. 'இந்தத் தூதர் நம்பிக்கையாளர்களுக்குத் தங்கள் உயிர் களை விடவும் மேலானவர். அவருடைய மனைவியர் அவர்களுக்கு அன்னையர்களாவர் ...* (6)*' முஹம்மது நபியவர்கள் இந்தச் சமூகத்துக்கு ஆன்ம ரீதியான தந்தையாவார். மனிதர்களின் நேர்வழியையும் வெற்றி யையுமே தம் நோக்கமாகக் கொண்டுள்ளார். அவர், அவர்களை*

இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டுவரக்கூடிய இஸ்லாத்தின் அடையாளமாவார். இதனடிப்படையில்தான் நபியவர்கள் கூறுகிறார்கள்:

> எந்த நம்பிக்கையாளனாக இருந்தாலும் இவ்வுலகிலும் மறுவுல கிலும் நானே அவனுக்கு மனிதர்கள் அனைவரையும்விட நெருக்க மானவன். நீங்கள் விரும்பினால் இந்த வசனத்தைப் படியுங்கள், 'இந்தத் தூதர் நம்பிக்கையாளர்களுக்குத் தங்கள் உயிர்களை விட வும் மேலானவர் ...' ஒரு நம்பிக்கையாளர் செல்வத்தை விட்டுச் சென்றால் அவருடைய வாரிசுகள் அதற்கு உரிமையாளர்களா கட்டும். அவர் கடனை அடைக்காமல் விட்டுவிட்டுச் சென்றால் அதனை என்னிடம் கொண்டுவாருங்கள். நான் அதற்குப் பொறுப் பாளியாவேன்.

இந்த வசனம் அருளப்படுவதற்கு முன்னால் நபியவர்கள், கடன் பட்டவர் கடனை அடைக்காமல் மரணித்துவிட்டால் அவருக்காகத் தொழுகை நடத்தத் தயங்கினார்கள். பின்னர் அல்லாஹ் வெற்றியை அளித்த பிறகு, இந்த வசனம் அருளப்பட்ட பிறகு அந்தக் கட்டளை மாற்றப்பட்டுவிட்டது. கடன்பட்ட ஏழைகளின் கடன்களை நபியவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அநாதைகளுக்குப் பொறுப்பெடுத்துக் கொண் டார்கள்.

நபியவர்கள் நம்பிக்கையாளர்களின் தந்தையாகக் கருதப்படுவது போன்று அவருடைய மனைவியர் நம்பிக்கையாளர்களின் அன்னை யர்களாகக் கருதப்படுவார்கள். இதனடிப்படையில்தான் நபியவர் களுக்குப் பிறகு அவர்களை மணமுடிப்பது தடைசெய்யப்பட்டது. ஏனெ னில், அவர்கள் வஹீயை அறிவிப்பவர்கள்; இந்தச் சமூகத்துக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியைகள். அவர்களிடமிருந்தும் அழகிய முன்மாதிரி பெறப்படுகிறது.

இந்த அத்தியாயத்தில் இடம்பெறக்கூடிய இரண்டாவது அழைப்பு,

> தூதரே, நீர் உம் மனைவியரிடம் கூறும், 'நீங்கள் இவ்வுலக வாழ்க் கையையும் அதன் அலங்காரத்தையும் விரும்பினால் வாருங்கள், நான் உங்களுக்கு ஓரளவு செல்வத்தைக் கொடுத்து அழகிய முறை யில் உங்களை அனுப்பிவிடுகிறேன்.' (28)

நபியவர்களின் வீடு ஓர் அரசனின் வீட்டைப் போன்றதல்ல. அது குறைவான தேவைகளுடன் வாழ்க்கையைக் கழிக்கும் வீடு. அங்கு சொகுசு வாழ்க்கைக்கோ அதிகப்படியான இன்பங்களுக்கோ இடம் இல்லை.

நபியவர்கள் வயிற்றின் அதிகாரத்துக்குட்பட்டவராக இருக்கவில்லை. அதிகப்படியான இன்பங்களுக்கோ சொகுசு வாழ்க்கைக்கோ தம் வாழ்க்கையில் அவர் இடம் கொடுக்கவில்லை. ஆனாலும் அவருடைய மனைவியர் தலைவர்கள், செல்வந்தர்களின் வீடுகளிலிருந்து வந்தவர்கள்; சொகுசு வாழ்க்கைக்குப் பழகியவர்கள். ஆகவே, விரைவாகவே அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தங்களின் செலவுக்கு இன்னும் அதிகமாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்.

நபியவர்களின் வீடு போதுமென்ற மனப்பான்மையின் அடிப்படையில் நிலைபெறக்கூடியது, அந்த வீட்டின் உரிமையாளர் அறபுலகத்தின் தலைவராக, மக்களின் வழிகாட்டியாக இருந்தபோதிலும். ஆகவே, அவருடைய மனைவியரும் அவருடன் சேர்ந்து அந்தப் பதவிக்கான சுமைகளைச் சுமக்க வேண்டும். தொழுகை, ஜிஹாது, மறுமைக்கான செயல்பாடு ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். நிராகரிப்பாளர்கள் இஸ்லாமியச் சமூகத்தை முற்றுகையிட்டுப் புலம் பெயரும்படி அவர்களை நிர்ப்பந்திக்கும் வேளையில் நபியவர்களின் குடும்பம் அதனால் எந்தப் பாதிப்புமின்றிச் சொகுசான வாழ்க்கையில் ஈடுபடக் கூடாது. அவர்கள் இந்த வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்கள் அனைவரும் விவாகரத்து செய்யப்படுவார்கள். தெரிவுசெய்யும் உரிமை அவர்களிடம் வழங்கப்பட்டது. ‘ஆனால், நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மறுமையின் வீட்டையும் விரும்புவீர்களாயின் அறிந்துகொள்ளுங்கள், உங்களில் நற்செயல் புரிவோருக்கு அல்லாஹ் மகத்தான கூலியைத் தயார்படுத்தி வைத்துள்ளான். (29)’

நம்பிக்கையாளர்களின் அன்னையர் குறைவானவற்றைக் கொண்டு திருப்தியடையும் வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். கண்ணியமான தோழமைக்குத் தகுதியானவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள்.

தூதரின் வாழ்க்கையில் குழப்பம் ஏற்படுத்துவது இருமடங்கு தண்டனையைத் தரக்கூடிய பெரும் பாவமாகும். அதே போன்று, அந்த வாழ்க்கையின் கண்ணியமான பணிகளைக் கொண்டு திருப்தியடைவதும் இருமடங்கு கூலியைத் தரக்கூடியதாகும். நபியவர்களின் குடும்பம் சமூகத்துக்கு வஹீயையும் உலகப் பற்றற்ற வாழ்க்கையையும் போதுமென்ற மனப்பான்மையையும் கற்றுக்கொடுக்கிறது. அவர்கள் நம்பிக்கையாளர்களின் அன்னையர்.

இந்த அத்தியாயத்தில் இடம்பெறும் மூன்றாவது அழைப்பு,

தூதரே, நாம் உம்மைச் சாட்சியாகவும் நற்செய்தியாளராகவும் எச்சரிக்கையாளராகவும் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவன் பக்கம் அழைப்பவராகவும் ஒளிவீசும் விளக்காகவும் அனுப்பியுள்ளோம். (45,46)

முஹம்மதுக்கு முன்னால் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவான தூதுத்துவம் என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு தூதரும் அவரவர் சமூகத்தின் பக்கம் மட்டுமே தூதராக அனுப்பப்பட்டார்கள். பிரபஞ்சம் முழுவதும் ஒளியைப் பாய்ச்சிய சூரியன் இறுதியாக நபியவர்களுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவம்தான்.

ஆகவேதான் திருக்குர்ஆன் இந்தத் தூதுத்துவத்தின் அடித்தளமாகவும் அற்புதமாகவும் இருக்கிறது. அது மறுமைநாள் வரை வரக்கூடிய மனிதர்கள் அனைவரையும் விளித்து உரையாடக்கூடிய வேதமாகும். அதன் இயல்பு, அது அல்லாஹ்விடமிருந்து மட்டுமே வந்துள்ளது என்பதற்குச் சான்றாக இருக்கிறது. அல்லாஹ்விடமிருந்து பெற்று எடுத்துரைத்தல், முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுதல் ஆகியவற்றைத் தவிர முஹம்மதுக்கு எந்தப் பங்கும் இருக்கவில்லை.

முஹம்மது தம் சமூகத்துக்கு எடுத்துரைத்துவிட்டதன் மூலம் அதற்குச் சாட்சியாக இருக்கிறார். அவருடைய சமூகம் இந்தத் தெளிவான வேதத்தின் மூலம் மனிதர்கள் அனைவருக்கும் சாட்சியாக இருக்கிறது. முஸ்லிம்கள் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றிவிட்டார்களா?

முந்தையவர்கள் இஸ்லாத்தைக் கொண்டு இந்த உலகின் கதவைத் தட்டினார்கள். தங்களின் செயல்பாடுகளின் மூலம் அதனை அழகிய முறையில் முன்வைத்தார்கள். ஆனால், அதற்குப் பின் வந்த முஸ்லிம்களிடம் அழிக்கப்பட்ட சமூகங்களை ஆட்கொண்ட நோய் பரவிவிட்டது. அவர்கள் வானத்தின் வழிகாட்டல்களைத் தங்களின் பிரதேசங்களுக்குள் பதுக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களின் மார்க்கத்தை விட்டு மக்களைத் தடுக்கும் தடுப்பரண்களாக ஆகிவிட்டார்கள் என்று கூறினாலும் அது தவறாகாது. முஹம்மதுக்கு வழங்கப்பட்ட இந்தத் தூதுத்துவத்தை எடுத்துரைப்பதற்குச் சிறந்த முறையில் எடுத்துரைக்கும் அறிவுஜீவிகள், திறமையான வலிமைமிக்க போர்வீரர்கள் தேவைப்படுகிறார்கள். இந்தச் சமூகத்தின் முன்னோர்கள் எதைக் கொண்டு சீர்பெற்றார்களோ அதைக் கொண்டுதான் பிந்தையவர்களும் சீர்பெற முடியும்.

*நான்காவது அழைப்பு,*

*நம்பிக்கையாளர்களின் அன்னையர் தேர்ந்தெடுத்துக் கொண்ட உன்னத மான நிலைகளைக் குறித்து பேசுகிறது. ஒவ்வொரு பெண்ணும் மகத்தான ஒரு மனிதருக்கு மனைவியாகி விட முடியாது. அதற்கெனத் தகுதிகள் இருக்கின்றன. கண்ணியமான மனிதருக்குக் கண்ணியமான பெண்ணே தகுதியானவள். ஒரு கவிஞர் கூறுகிறார்*

> *'மாலிக்கின் தாயே, கஞ்சத்தனம் என்பது நற்குணம் உள்ள மனிதர்களுக்குத் திருட்டைப் போன்றதாகும்.'*

*ஹாத்திம் தம் மனைவிக்குக் கூறுகிறார், 'என் மனைவியே, செல்வம் காலையில் வரக்கூடியது, மாலையில் செல்லக்கூடியது. எஞ்சியிருப்ப தெல்லாம் அதனால் ஏற்படும் நற்பெயரும் நல்ல நினைவுகளும்தான்.'*

*மனைவி தன் கணவனுக்கு வழங்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்று வதற்கு உதவிசெய்யக்கூடியவளாக இருக்க வேண்டும். அவள் உதவியாக இல்லாவிட்டாலும் அதற்குச் சுமையாக மாறிவிடக் கூடாது.*

*நூஹூம் லூத்தும் தம் மனைவியரால் பெரும் துன்பங்களை அனுப வித்தார்கள்.*

*உண்மையில் நம்பிக்கையாளர்களின் அன்னையர் வணக்கசாலி களாகவும் இறைவனுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவர்கள் நபியவர்களுக்கு மனைவியராக இருந்தார்கள்.*

*அல்லாஹ் கூறுகிறான்:*

> *தூதரே, நீர் மணக்கொடை அளித்துள்ள உம் மனைவியரையும் அல்லாஹ் உமக்கு வழங்கிய அடிமைப் பெண்களையும் உம்முடன் புலம்பெயர்ந்து வந்த உம் தந்தையின் சகோதரரின் மகள்கள், உம் தந்தையின் சகோதரிகளின் மகள்கள், உம் தாயின் சகோதரருடைய மகள்கள், உம் தாயின் சகோதரிகளுடைய மகள்கள் ஆகியோரையும் நாம் உமக்கு அனுமதித்துள்ளோம். தன்னையே தூதருக்காக அர்ப் பணித்துக்கொண்ட நம்பிக்கை கொண்ட பெண்ணும் - தூதரும் அவளை மணந்துகொள்ள விரும்பினால் - அனுமதிக்கப்பட்ட வளே. இது நம்பிக்கையாளர்களைத் தவிர்த்து உமக்கு மட்டுமே தனிப்பட்ட ஒன்றாகும் ... (50)*

*ஒரு முஸ்லிம் நான்கு திருமணங்கள் வரை செய்துகொள்ளலாம். அதற்கு மேல் செய்யக் கூடாது. ஒரு மனிதர் இஸ்லாத்தை ஏற்றுக்*

கொள்ளும்போது அவருக்குப் பத்து மனைவியர் இருந்தார்கள். நான்கு மனைவியரை மட்டும் வைத்துக்கொண்டு விவாகரத்து செய்துவிடும்படி நபியவர்கள் அவருக்குக் கட்டளையிட்டார்கள்.

நீங்கள் கேட்கலாம், 'நபியவர்களின் விசயத்தில் இந்தக் கட்டளை ஏன் செயல்படுத்தப்படவில்லை?' பதில் இதுதான், நபியவர்களின் மனைவியர் அவர்களுடன் போதுமென்ற மனப்பான்மையுடன் வாழ்வதைத் தெரிவுசெய்தபிறகு அவர்களில் யாரையும் நபியவர்களால் விவாகரத்து செய்ய முடியாது. அவர்கள் யாரையாவது விவாகரத்துசெய்துவிட்டால் அவர் என்ன செய்ய முடியும்? அவர்கள் நம்பிக்கையாளர்களுக்கு அன்னையரைப் போன்றவர்கள். ஆகவே, மற்றவர்களையும் மண முடித்துக்கொள்ள முடியாது. அவர்கள் அனைவரையும் மணஉறவில் வைத்திருப்பதைத் தவிர வேறு வழி இல்லை, அவர்களில் சிலர் வயதானவர்களாக இருந்தபோதிலும்.

இதற்குப் பிறகு நபியவர்களிடம் கூறப்பட்டது:

> இவர்களைத் தவிர வேறு பெண்கள் உமக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் அல்லர். இவர்களுக்குப் பதிலாக வேறு மனைவியரையும் நீர் மாற்றிக்கொள்ளக் கூடாது. அவர்களின் அழகு உம்மைக் கவர்ந்தபோதிலும் சரியே. ஆயினும், உம்முடைய அடிமைப் பெண்களைத் தவிர. அல்லாஹ் அனைத்தையும் கண்காணிப்பவனாக இருக்கிறான். (52)

மனிதர்களின் வேறுபட்ட தேவைகளுக்கேற்பப் பலதார மணம் அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான். இறைத்தூதர்களின் வாழ்க்கையிலும் இந்த விசயம் காணப்படுகிறது. ஆனால், தவ்றாத்தில் இடம்பெற்றுள்ள, 'சுலைமான் ஆயிரம் பெண்களை மணமுடித்துக்கொண்டார்.' என்ற அறிவிப்பை நான் சந்தேகப்படுகிறேன். இது இட்டுக்கட்டப்பட்ட ஒன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த விசயத்தில் விவாதம்செய்ய நவீன நாகரிகத்துக்கு எந்தத் தகுதியும் இல்லை. பலதார மணம் அனுமதிக்கப்பட்ட இன்பம்தான். இந்தக் காலத்தில் அடிமைகூட ஆயிரம் பெண்களுடன் தடைசெய்யப்பட்ட உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

ஐந்தாவது அழைப்பு, அல்லாஹ் கூறுகிறான்:

> தூதரே, உம் மனைவியர், உம் பெண்மக்கள், நம்பிக்கையாளர்களின் பெண்கள் ஆகியோரிடம் நீர் கூறும், அவர்கள் தங்கள் தலை முக்காடுகளைக் கொஞ்சம் கீழே தாழ்த்திக் கொள்ளட்டும். அவர்கள் அறிந்துகொள்ளப்பட்டுத் தொல்லை கொடுக்கப்படாமல் இருப்ப

தற்கு இதுவே சிறந்த வழியாகும். அல்லாஹ் பெரும் மன்னிப்பாள னாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (59)

அடுத்து வரக்கூடிய வசனம் இந்த அறிவுரைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகிறது.

மதீனாவில் விபச்சாரம்செய்யும் நோக்கத்தோடு பாதைகளில் சுற்றக் கூடிய சில தீய இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் வெட்கமற்ற, தம்மை மறைத்துக்கொள்ளாத பெண்களைக் கண்டால் அவர்களை அடைய விரும்பினார்கள். ஆகவே, நம்பிக்கை கொண்ட பெண்கள் முழுமையாகத் தங்களை மறைத்துக்கொள்ளும்படி பணிக்கப்படுகிறார் கள். அவர்கள் தங்களின் ஆடைகள் விலகும் சந்தர்ப்பத்தை ஒருபோதும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது. இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் அந்தப் பெண்கள் தங்களைக் காத்துக்கொள்ளலாம். பின்னர், அப்படிப் பட்ட தீய இளைஞர்களுக்குக் கூறப்பட்டது:

நயவஞ்சகர்களும் உள்ளங்களில் நோய் உள்ளவர்களும் மதீனா வில் பொய்யான செய்திகளைப் பரப்பிக்கொண்டிருப்பவர்களும் தங்களின் செயல்களைவிட்டு விலகிக்கொள்ளவில்லையெனில் நாம் அவர்களுக்கு எதிராக உமக்கு அதிகாரம் வழங்குவோம். பிறகு சொற்ப காலமேயன்றி அங்கு அவர்கள் உம்முடன் இருக்க மாட் டார்கள். அவர்கள் சபிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் எங்கு காணப்படினும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படுவார்கள். (60,61)

நவீன நகரங்களில் அனைத்து தரப்பினருக்கும் குழப்பத்துக்கான வாயில்கள் அனைத்தும் திறக்கப்பட்டுக் கிடக்கின்றன. பெண்கள் அணியும் ஆடைகளே தவறான செயல்களுக்கு அழைக்கக்கூடியவையாக இருக் கின்றன. உள்ளத்தில் இறையச்சமுடையோரைத் தவிர வேறு யாரும் இங்கு தப்பிக்க முடியாது.

❖ ❖ ❖

நபியவர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்புகளுக்குப் பிறகு நம்பிக்கை யாளர்களுக்கும் ஆறு முறை அழைப்புகள் விடுக்கப்படுகின்றன.

முதல் அழைப்பு, மதீனாவை எதிரிகள் அனைவரும் திரண்டு வந்து தாக்க முனைந்தபோது விடுக்கப்பட்டது. அது கடுமையான ஒரு சூழலாக இருந்தது. அறபு தீபகற்பத்தில் உள்ள நிராகரிப்பாளர்களில் பெரும் பாலோர் மதீனாவை முற்றுகையிட வந்திருந்தனர். நயவஞ்சகர்களும் யூதர்களும் உள்ளிருந்து அவர்களுக்கு உதவிசெய்துகொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்கள் நாலாபுறமும் சுற்றிவளைக்கப்பட்டவர்களாக அவர்களை எதிர்த்துப் போரிட்டிக்கொண்டிருந்தனர். அவர்களின் நிலை பெரும் கடலில் மூழ்க நெருங்கிவிட்டவனைப் போன்று இருந்தது.

அவர்கள் உங்களுக்கு மேலிருந்தும் கீழிருந்தும் உங்களிடம் வந்த போது பார்வைகள் நிலைகுத்தி, இதயங்கள் தொண்டைக்குழியை அடைந்துவிட்டன. நீங்கள் அல்லாஹ்வைப் பற்றிப் பலவாறான எண்ணங்கள் கொண்டிருந்தீர்கள். அச்சமயத்தில் நம்பிக்கையா ளர்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டார்கள்; கடுமையாக அதிர்ச்சி க்குள்ளாக்கப்பட்டார்கள். (10,11)

முஸ்லிம்கள் மதீனாவைச் சுற்றி அரணாக ஒரு பெரும் குழியைத் தோண்டியிருந்தார்கள். அதில் உள்ள இடைவெளியின் மூலமாகத் தாண்டி வருபவர்களைத் தடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் மீது கொண்ட நம்பிக்கையில் உண்மையாளர்களாக இல்லாமல் இருந் திருந்தால் அவர்களால் எதிர்த்துப் போரிட்டிருக்க முடியாது. ஆனாலும் அவர்கள் நிலைகுலையவில்லை. அல்லாஹ்வுடனான தங்களின் தொடர்பை இழக்கவில்லை. மாறாக, அல்லாஹ் கூறியது போன்று இருந்தார்கள்.

நம்பிக்கையாளர்கள் எதிரிகளின் படைகளைப் பார்த்தபோது, ‘இதுதான் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நமக்கு வாக்க ளித்தது. அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையே கூறி னார்கள்.’ என்றார்கள். அது அவர்களின் நம்பிக்கையையும் கீழ்ப் படிதலையுமே அதிகரித்தது. நம்பிக்கையாளர்களில் இப்படியும் சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டார்கள். அவர்களில் சிலர் தம் இலட்சியத்தை அடைந்துவிட்டார்கள். சிலர் அதனை எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தம் வாக்குறுதியில் சிறிதும் மாறுபட்டுவிடவில்லை. (22,23)

கொள்கைவாதிகளின் நிலைமை வேறு. உலகாயதவாதிகளின் நிலைமை வேறு.

உண்மையில் அவர்கள் மதீனாவின் எல்லைகளைப் பாதுகாத்தார்கள். எதிரிகளில் எவரையும் தாண்டிவர விடவில்லை.

தாக்குதல் தொடுத்தவர்களோ நிராசையடைந்தார்கள். அவர்களால் மதீனாவுக்குள் ஊடுருவுவதற்கான எந்த வழியையும் பெற முடிய வில்லை. பின்னர் வீசிய சூறைக்காற்று அவர்களின் கூடாரங்களையும்

பொருள்களையும் தூக்கியெறிந்தது. அவர்களை மேலும் நிராசையில் ஆழ்த்தியது. இறுதியில் அங்கிருந்து புறப்பட வேண்டுமென அவர்கள் தீர்மானித்தார்கள். 'நிராகரித்தோரை அவர்களின் கோபத்துடனேயே அல்லாஹ் திருப்பிவிட்டான். அவர்களின் எந்தத் தேவையும் நிறைவேற வில்லை. நம்பிக்கையாளர்களுக்காகப் போர்புரிவதற்கு அல்லாஹ்வே போதுமானவன். அல்லாஹ் வல்லமைமிக்கவனாகவும் யாவற்றையும் மிகைத்தவனாகவும் இருக்கிறான். (25)'

நடந்த நிகழ்வின் இறுதியில் நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள், 'அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனே தன் வாக்குறுதியை உண் மைப்படுத்திக் காட்டினான். தன் படையினரைக் கண்ணியப்படுத்தி னான். எதிரிகளைத் தோல்வியடையச் செய்தான்.' இந்தப் போருக்குப் பிறகு இனி மதீனாவை ஒருபோதும் கைப்பற்ற முடியாது என்பதை இணைவைப்பாளர்கள் உணர்ந்துகொண்டார்கள். மீண்டும் அவர்கள் தாக்குதல் தொடுப்பதைக் குறித்து சிந்திக்கவில்லை. திரும்பும்போது கிடைத்த சில போர்ச் செல்வங்களோடு அவர்கள் திருப்தியடைந்தார்கள்.

இந்த அத்தியாயத்தில் நம்பிக்கையாளர்களுக்கு விடுக்கப்படும் இரண்டாவது அழைப்பு: 'நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வை அதிக மதிகம் நினைவுகூருங்கள். காலையிலும் மாலையிலும் அவனைத் துதி யுங்கள். (41,42)' இது தனிமனிதர்களுக்கு முன்னால் ஒரு கூட்டத்தின ருக்குரிய அழைப்பு என்று கருதுகிறேன். இஸ்லாமியச் சமூகம் உலக ளாவிய தூதுத்துவத்தைக் கொண்ட சமூகமாகும். அந்தத் தூதுத்துவத் தைப் பாதுகாப்பதும் அதன் சார்பாக நிற்பதும் அதன் கடமையாகும். இந்தத் தூதுத்துவம் அல்லாஹ்வுடனான இணைப்பில், அவன் ஏற்படுத்திய புனிதங்களை மேலோங்கச் செய்வதில், அவனுடைய சந்திப்பை உறுதி யாக நம்புவதில் நிலைபெறுகிறது. இந்த நோக்கங்கள் தற்காலத்தில் எந்தச் சமூகத்திலும் காணப்படவில்லை. ஒரு சமூகத்துக்காக உழைப்ப வர்கள் அதன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, அதன் உலக வாழ்வை அலங்கரிப்பதற்காக உழைக்கிறார்கள். மறுமைநாளைக் குறித்து பேசுவதை வீணான ஒன்றாகவும் பரிகாசத்துக்குரிய ஒன்றாகவும் கருது கிறார்கள். மனிதர்களுக்கு அல்லாஹ்வைச் சரியாக அறிமுகப்படுத்து வதில், அவனுடைய சந்திப்புக்காக அவர்களைத் தயார்படுத்துவதில் மதங்கள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டன. மனிதர்கள் மண்ணை விரும்பக்கூடியவர்களாக ஆகிவிட்டார்கள்.

நம்முடைய சமூகம் அல்லாஹ்வை மட்டும் வணங்குவதை நிலை நிறுத்தியபோது அது பின்வரும் கூற்றுக்குத் தகுதியான ஒன்றாக மாறி யது: 'உங்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம்

கொண்டுவருவதற்காக அவனே உங்கள்மீது அருள்புரிகிறான். அவனுடைய வானவர்களும் உங்கள்மீது அருள்புரியுமாறு அவனிடம் இறைஞ்சுகிறார்கள். அவன் நம்பிக்கையாளர்களுக்கு இணையிலாக் கிருபையாளனாக இருக்கிறான். (43)' அல்லாஹ்வின் அருளும் வானவர்களின் பிரார்த்தனையும் அல்லாஹ்வை நினைவுகூரும், அதனையே தன் பணியாக ஆக்கிக்கொள்ளும் சமூகத்துக்குத்தான். முஸ்லிம்கள் இந்தத் தகுதியை அடைந்தபோது பல நூற்றாண்டுகாலம் இந்த உலகில் உன்னதமான சமூகத்தினராக இருந்தார்கள். பின்னர் அல்லாஹ்வை மறந்தார்கள். விளைவாகத் தங்களையே மறந்துபோனார்கள். இப்போது அவர்கள் வீழ்ச்சியின் பாதாளத்தில் இருக்கிறார்கள்.

மூன்றாவது அழைப்பு, ஃபிக்ஹு ரீதியான ஒரு கட்டளை. 'நம்பிக்கையாளர்களே, நம்பிக்கை கொண்ட பெண்களை நீங்கள் மணந்து, பின்னர் அவர்களைத் தீண்டுவதற்கு முன்னரே அவர்களை விவாகரத்து செய்துவிட்டால் அவர்கள் விசயத்தில் நீங்கள் கணக்கிடக்கூடிய எந்தக் காலக் கெடுவும் இல்லை. எனவே, அவர்களுக்கு ஏதேனும் அளித்து நல்ல முறையில் அவர்களை விட்டுவிடுங்கள் (49).' சட்டங்களின் வேர்களையும் அவற்றின் கிளைகளையும் பற்றிப்பிடிப்பது கட்டாயமாகும், அவை அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளவை என்பது தெளிவாகிவிட்டால்.

நான்காவது அழைப்பு, நபியின் குடும்பத்துடன் நடந்துகொள்ளும் முறை தொடர்பானது. நம்பிக்கையாளர்கள் தங்கள் உயிர்களைவிட அல்லாஹ்வின் தூதரையே அதிகமாக நேசிக்கிறார்கள். இந்தப் பண்பு அவர்களை மீண்டும் மீண்டும் தூதரிடம் செல்லத் தூண்டுகிறது. அவர்களில் வேலையின்றி ஓய்வாக இருப்பவர்களும் இருந்தார்கள். அவரிடம் நெருக்கத்தை அல்லது ஆறுதலை விரும்பக்கூடியவர்களும் இருந்தார்கள். ஆகவே, இந்த அறிவுரை அவர்களுக்கு அவசியமாக இருந்தது:

> நம்பிக்கையாளர்களே, உணவருந்த நீங்கள் அழைக்கப்பட்டாலன்றித் தூதரின் இல்லங்களுக்குச் செல்லாதீர்கள். அங்கு உணவு தயாராவதற்கு முன்பாகவே சென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். ஆயினும், நீங்கள் அழைக்கப்பட்டால் நுழையுங்கள். உணவருந்திவிட்டால் கலைந்து சென்றுவிடுங்கள். பேசிக் கொண்டே அமர்ந்துவிடாதீர்கள். (53)

பெரிய மனிதர்களின் வீடுகளில் இது வழக்கமாக நடைபெறுகின்ற ஒன்றுதான். அவற்றில் பல அறைகள் இருக்கும். ஆனால், நபியின் வீடுகள் பள்ளிவாசலோடு இணைந்த, நீளமும் அகலமும் குறைவான அறைகளைக் கொண்டவை. ஆகவே, அங்கு வருபவர்கள் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

மூடர்களில் ஒருவன் நம்பிக்கையாளர்களின் அன்னையரில் ஒரு வரைப் பார்த்து 'முஹம்மது இறந்துவிட்டால் நான் அவரை மண முடித் துக்கொள்வேன்.' என்று கூறினான். இதுபோன்ற தீயவர்களிடமிருந்து கண்ணியமான வீடு காக்கப்பட வேண்டாமா?

ஆகவேதான் ஹிஜாபு கடமையாக்கப்பட்டது.

> தூதரின் மனைவியரிடம் நீங்கள் ஏதேனும் கேட்க வேண்டி யிருந்தால் திரைமறைவிலிருந்தே கேளுங்கள். இதுதான் உங்களின் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் தூய்மையானது. இறைத்தூதருக்குச் சிரமமளிப்பது உங்களுக்குத் தகுமானதல்ல. அவருடைய மனைவியரை அவருக்குப் பின் மணந்துகொள்வதும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதன்று. இது அல்லாஹ்விடத்தில் மிகப் பெரும் பாவமாகும். (53)

ஒரு பெண் வீட்டில் இருக்கும்போது குறைவான ஆடையை அணிந் திருக்கலாம். அவளது வீட்டில் அனுமதியின்றி நுழைந்திட, அவளைப் பார்க்க அந்நியர் யாருக்கும் அனுமதி இல்லை.

நயவஞ்சகர்களும் உள்ளங்களில் நோயுள்ளவர்களும் பல விதங்களில் தூதருக்குத் தொல்லையளித்தார்கள். அவற்றில் மிக மோசமானது மதீனா முற்றுகையிடப்பட்டிருந்தபோது அவர்கள் பேசிய வார்த்தைகளும் அவர் களின் செயல்பாடுகளும்தாம்.

> உங்களில் தடுப்பவர்களையும் தம் சகோதரர்களிடம் 'எங்களிடம் வந்துவிடுங்கள்' என்று கூறுபவர்களையும் அல்லாஹ் நன்கறிவான். அவர்கள் மிகக் குறைவாகவே போருக்கு வருகிறார்கள். அவர்கள் உங்களிடம் கஞ்சத்தனம் செய்கிறார்கள். ஆனால், பயம் ஏற்படும் போது மரண வேளையில் மருள்பவரைப் போல அவர்களின் கண்கள் சுழன்று சுழன்று உம்மைப் பார்ப்பதை நீர் காண்பீர். அச்சம் நீங்கிவிட்டால் செல்வத்தின் மீது பேராசை கொண்டு உங்களைக் கடிந்துகொள்வார்கள் ... (18,19)

மதீனாவின் சாலைகளில் பெண்களைப் பின்தொடர்ந்து சென்றவர்கள், மக்களிடையே குழப்பத்தை, சந்தேகத்தைப் பரப்பியவர்கள் இவர்களில் உள்ளவர்கள்தாம். இவர்களைக் குறித்து அல்லாஹ் தன் தூதரிடம் கூறி னான்: 'நிராகரிப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் நீர் கீழ்ப்படியாதீர். அவர்களின் துன்புறுத்தலைப் புறக்கணித்து அல்லாஹ்வையே முற்றிலும் சார்ந்திருப்பீராக. பொறுப்பேற்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். (48)' அவர்களுக்கு எதிராக மேலும் அவன் கூறுகிறான்:

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் தொல்லை தருபவர் களை அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சபித்துவிட்டான். அவர்களுக்காக இழிவுமிக்க வேதனையைத் தயார்படுத்தி வைத் துள்ளான். நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களையும் அவர்கள் செய்யாத குற்றத்துக்காகத் துன்புறுத்துபவர்கள் பெரும் அவதூறைச் செய்து வெளிப்படையான பாவத்தையும் சுமந்து கொண்டார்கள். (57,58)

கண்ணியமான மனிதர்கள் இழிவானவர்களால் குறிவைக்கப்படு வார்கள். இந்த வழிமுறையிலிருந்து நம்பிக்கையாளர்கள் எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள்.

ஐந்தாவது அழைப்பு, இறைத்தூதர்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பது தொடர்பானது. 'நம்பிக்கையாளர்களே, மூசாவைத் துன்புறுத்தியவர் களைப் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். அவர்கள் கூறியதைவிட்டு அல்லாஹ் அவரைத் தூய்மையாக்கிவிட்டான். அவர் அல்லாஹ்விடத்தில் கண்ணியமானவராக இருந்தார். (69)'

ஆறாவது அழைப்பிலும் இந்த விசயம் வலியுறுத்தப்படுகிறது. 'நம்பிக் கையாளர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நேர்மையான சொல்லையே கூறுங்கள். அவன் உங்கள் செயல்களைச் சீர்படுத்தி உங்கள் பாவங்களை மன்னித்துவிடுவான் ... (70,71)'

தூதருக்கு வரக்கூடிய பல்வேறு விதமான துன்பங்களுக்கு நடுவே அவருக்கு ஆறுதலாகவும் அவரை வலுப்படுத்தவும் உன்னதமான இந்த நற்செய்தி இடம்பெறுகிறது. அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பில், அர வணைப்பில் உள்ளார்: 'அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் இந்தத் தூதரின் மீது வாழ்த்துகளைக் கூறுகிறார்கள். நம்பிக்கையாளர்களே, நீங்களும் அவர்மீது வாழ்த்துகளையும் சலாமையும் கூறுங்கள். (56)'

பின்னர் இந்த அத்தியாயம் பூமியில் மனிதனின் செயல்பாடுகுறித்த சுருக்கமான அறிமுகத்துடன் நிறைவடைகிறது. அவன் தனக்கு வழங் கப்பட்டுள்ள தெரிவுசெய்யும் சுதந்திரத்தைக் கொண்டு, தான் நிறை வேற்ற வேண்டிய பணிகளைக் கொண்டே மற்ற படைப்புகளைவிட்டும் வேறுபடுகிறான். அந்தப் பணிகள்தாம் நல்லவர்களையும் தீயவர்களை யும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. மனிதர்கள் தம் இச்சைகளுக்கு அடிமைகளான விலங்குகள் அல்ல. கட்டுப்படுத்தப்பட்ட ஆன்மாக்களை மட்டுமே கொண்ட வானவர்கள் அல்ல. அவர்கள் உயரவும் தாழ்ந்து போகவும் ஆற்றலைப் பெற்ற தனித்துவமானவர்கள். அவனால் வலது

புறம் சுவனத்தின் பக்கம் செல்லவும் முடியும், இடதுபுறம் நரகத்தின் பக்கம் செல்லவும் முடியும். அந்தப் பொறுப்பை மனிதன் ஏற்றுக் கொண்டான். அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் நிறைவேற்றி, அவனால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றவும் முடியும். அதே போன்று மோசடிசெய்யவும் முடியும். இந்த வசனம் இதைத்தான் உணர்த்துகிறது:

> நாம் இந்தப் பொறுப்பை வானங்களுக்கும் பூமிக்கும் மலைகளுக்கும் முன்னால் வைத்தபோது அவை அதனை ஏற்க மறுத்துவிட்டன; அதனைக் கண்டு பயந்துவிட்டன. ஆனால், மனிதன் அதனை ஏற்றுக்கொண்டான். நிச்சயமாக அவன் அநியாயக்காரனாகவும் அறியாதவனாகவும் இருக்கிறான். (72)

வசனம் மனிதர்களின் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை எடுத்துரைக்கிறது. அது அவனை உயர்த்தவும் செய்யும்; தாழ்த்தவும் செய்யும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 34

# சபா

(சபா நகரம்)

*இந்த அத்தியாயம் அல்லாஹ்வின் புகழோடு ஆரம்பமாகும் நான்காவது அத்தியாயமாகும். 'அல்ஹம்து' என்பது புகழ்வதையும் நன்றி செலுத்துவதையும் கண்ணியப்படுத்துவதையும் குறிக்கும். அவன்தான் வானங்கள், பூமி மற்றும் அவையிரண்டுக்கும் இடைப்பட்டவற்றின் அரசன். இந்த உலகத்தில் உள்ளவை அனைத்தும் அவன் பக்கமே திரும்பிச் செல்லும். அவன் நீதியைக் கொண்டும் கருணையைக் கொண்டும் தீர்ப்பளிப்பான். அவன் அனைத்தையும் சூழ்ந்தறிந்தவன். 'பூமிக்குள் ஊடுருவிச் செல்வதையும் அதிலிருந்து வெளிப்படுவதையும் வானத்திலிருந்து இறங்குவதையும் அதன் பக்கம் உயர்வதையும் அவன் அறிகிறான். (2)' பூமியின் ஆழத்தில் விதைக்கப்படும் விதையையும் அது வெளிப்படுத்தும் கனியையும் வானத்திலிருந்து விழக்கூடிய ஒவ்வொரு மழைத் துளியையும் அதன்பால் உயர்ந்துசெல்லக்கூடிய காற்றையும் அவன் அறிகிறான். இந்தப் பிரபஞ்சம் முழுமையும் அவனுக்கு முன்னால் ஒரேயொரு பக்கமாக இருக்கிறது. அதிலிருந்து எந்த ஒன்றும் அவனுக்கு மறைவாக இல்லை. மண்ணின் சூறாவளி மேலெழும்போது ஒவ்வொரு அணுவின் செயல்பாட்டையும் அது மேலெழும்பிச் செல்வதையும் அல்லது தாழ்ந்து செல்வதையும் அது எங்கே நிலைகொள்ளும் என்பதையும் அவன் அறிகிறான்.*

*சூரியனுக்கு முன்னால் சூடான புயல் காற்று மேலெழும்போது அது எங்கே கொந்தளிக்கும், எங்கே கீழிறங்கும் என்பதையும் மின்சார உலகில், சப்தங்களின் உலகில் அது என்ன வகையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதையும் அவன் அறிகிறான்.*

*ஆன்மாக்களும் வானவர்களும் மேலேறிச் செல்கிறார்கள். மறைவான படைப்புகளும் இருக்கின்றன. நாம் அவற்றைப் பற்றிக் குறைவாகவே*

தவிர அறிய மாட்டோம். மறைவானவற்றை அறிந்த என் இறைவன்மீது ஆணையாக, நிச்சயம் அது உங்களிடம் வந்தே தீரும். 'வானங்களிலோ பூமியிலோ அணுவளவும் அவனுக்கு மறைவானதாக இல்லை. அதை விடச் சிறியதோ பெரியதோ அனைத்தும் ஒரு தெளிவான பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. (3)'

இந்த அத்தியாயம் அல்ஃபுர்கான் என்ற அத்தியாயத்தைப் போன்று நிராகரிப்பாளர்களின் ஆட்சேபணைகளைக் குறிப்பிட்டு, ஒவ்வொன் றுக்கும் பதில்களையும் அளிக்கிறது.

நேற்றைய, இன்றைய நிராகரிப்பாளர்கள் எழுப்பும் முதல் ஆட்சே பணை 'மறுமைநாள் சாத்தியமற்ற ஒன்று' என்பதுதான். 'அந்நேரம் எங்களிடம் வராது என்று நிராகரிப்பாளர்கள் கூறுகிறார்கள். நீர் கூறும், மறைவானவற்றை அறிந்த என் இறைவன்மீது ஆணையாக, நிச்சயம் அது உங்களிடம் வந்தே தீரும். (3)' மறுமைநாளை நிகழச் சாத்தியமற்ற ஒன்றாகக் கருதுவது வடிகட்டிய மடமைத்தனமாகும். படைப்பாளன் மீண்டும் ஒருமுறை உயிர்கொடுத்து எழுப்ப நாடினால் எந்த விசயம் அதற்குத் தடையாக வந்து நிற்க முடியும்? ஆரம்பத்தில் நிகழ்த்தியவ னுக்கு மீண்டும் நிகழ்த்துவது சாத்தியமற்ற ஒன்றாகிவிட்டதா? மனி தர்கள் அவனது பிடியிலிருந்து எப்போது தப்பினார்கள்? அவன்தான் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தூங்கச்செய்கிறான், விழிப்படையச் செய்கிறான், பசியளிக்கிறான், வயிறார உணவும் அளிக்கிறான். ஆனாலும் இயல்பு இந்தக் காரியங்களை உணராமல் இருக்கிறது.

மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவது உண்மையாகும். இங்கு கருத்து வேறுபட்டவர்கள் உண்மையை அறிந்துகொள்வதற்கும் ஒவ் வொரு மனிதனும் தான் செய்த செயல்களுக்கான கூலியைப் பெறு வதற்கும் அது நிகழ்ந்தே தீரும். ஆம். நன்மைசெய்தவர்கள் நன்மையைப் பெறுவார்கள். தீமைசெய்தவர்கள் தண்டனையைப் பெறுவார்கள். கர்வத் தின் காரணமாக முஹம்மதை எதிர்த்து அவரைப் பின்பற்றியோரை ஏற்றுக்கொள்ள மறுத்த வேதக்காரர்கள் தாங்கள் அல்லாஹ்வையே நிராகரித்தோம் என்பதையும் வலுப்படுத்த வேண்டிய தூதுத்துவத்தை எதிர்த்தோம் என்பதையும் அறிந்துகொள்வார்கள்.

மறுமைநாளை நிராகரிப்பது முந்தையவர்களிடத்திலும் பிந்தைய வர்களிடத்திலும் பரவியுள்ள மோசமான குற்றமாகும். தற்காலத்தில் உள்ள மனிதர்கள் மறுமைநாளைக் குறித்து சிந்தித்துக்கூடப் பார்ப்ப தில்லை. அவர்கள் உணரக்கூடிய வாழ்க்கையை மட்டுமே பொருட்படுத்து கிறார்கள். அல்லாஹ்வைக் குறித்த அறியாமையாலும் தங்களைத் தாங்களே வழிபடுவதாலும் ஏற்பட்ட மோசமான விளைவு இது.

ஆகவே, இந்த அத்தியாயம் மறுமைநாளை நிராகரிப்பவர்களின் ஆட்சேபணையையும் அவர்கள் தூதரின் பேச்சை எவ்வாறு விசித்திரமான ஒன்றாகக் கருதுகிறார்கள் என்பதையும் மீண்டும் ஒருமுறை குறிப்பிடுகிறது.

> நிராகரிப்பாளர்கள், 'நீங்கள் மண்ணோடு மண்ணாகி விட்ட பின்னரும் மீண்டும் புதிதாகப் படைக்கப்படுவீர்கள் என்று உங்களிடம் அறிவிக்கும் ஒரு மனிதரைப் பற்றி நாங்கள் உங்களுக்குக் கூறட்டுமா?' என்று கேட்கிறார்கள். 'அவர் அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்துகூறுகிறாரா? அல்லது, அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?' உண்மையில் மறுமையின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள் வேதனையிலும் மாபெரும் வழிகேட்டிலும் வீழ்ந்துவிட்டார்கள். (7,8)

மறுமைநாளை நம்பும், அதைக் குறித்து எச்சரிக்கை செய்யும் ஒரு மனிதரை அவர்கள் விசித்திரமானவராகக் காண்கிறார்கள். இதுதான் நிராகரிப்பின் அறிவு. பின்னர், மீண்டும் ஒருமுறை அத்தியாயத்தின் இறுதியில் அவர்களின் கூற்று எடுத்துரைக்கப்படுகிறது.

> நம்முடைய தெளிவான வசனங்கள் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டால், 'இவர் உங்கள் முன்னோர்கள் வணங்கிக்கொண்டிருந்த தெய்வங்களை விட்டு உங்களைத் தடுக்க விரும்பும் ஒரு மனிதர்தான்.' என்றும் 'இது புனைந்துரைக்கப்பட்ட பொய்யே அன்றி வேறில்லை.' என்றும் அவர்கள் கூறுகிறார்கள். சத்தியம் தங்களிடம் வந்தபோது நிராகரிப்பாளர்கள், 'இது தெளிவான சூனியமே ஆகும்.' என்று கூறினார்கள். (43)

இந்த உரையாடலைச் சிறிது நேரம் நிறுத்திவிட்டு இதனோடு தொடர்புடைய இரண்டு சம்பவங்களை நாம் நினைவுகூர்வோம்.

முதல் சம்பவம், இரும்பைக் கொண்டு ஆயுதங்களையும் இன்ன பிற பொருள்களையும் செய்த தாவூது நபியின் சம்பவம்.

மார்க்க அறிவு இல்லாதவர்கள்தான், உலக விவகாரங்களில் பின்தங்குவதை மறுமைநாள்குறித்த விவகாரங்களில் முன்னேறிச்செல்வதற்கான அடையாளமாகக் கருதுகிறார்கள். ஈமான் என்பது தெளிவான அறிவின் விளைச்சல். அது மூடத்தனத்தின் விளைவு அல்ல. தாவூதின் சம்பவத்தை எடுத்துரைக்கும் வசனங்கள் இதனையே தெளிவுபடுத்துகின்றன. இன்று இஸ்லாத்தின் பக்கம் தங்களை இணைத்துக் கொண்ட சமூகங்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து புதுப்புது கண்டுபிடிப்புகளைப் பெற்றுக்கொண்டு

வாழ்ந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். உண்மையில் இது அவர் களுக்கு இழுக்கான ஒன்றாகும்.

நாம் தாவூதுக்கு நம்மிடமிருந்து பெரும் அருட்கொடையை வழங்கி னோம். 'மலைகளே, பறவைகளே, அவருடன் சேர்ந்து நீங்களும் துதிபாடுங்கள்.' நாம் அவருக்கு இரும்பை மென்மையாக்கித் தந்தோம். 'நீர் பூரணமான போர்க்கவசங்கள் செய்வீராக. வளையங் களைச் சரியான அளவில் இணைப்பீராக. நற்செயல்கள் புரிவீராக. நீங்கள் செய்பவற்றை எல்லாம் நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.' (10,11)

தாவூது தம்முடைய வாழ்க்கையில் இரண்டு வெவ்வேறான விசயங் களை ஒன்றுசேர்த்தார். அல்லாஹ்வின் அருட்கொடைகளைக் கொண்டு அவனுடைய புகழ்பாடுதலையும் இராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்வதையும் ஒருசேரப் பெற்றிருந்தார். அவருடன் சேர்ந்து பறவைகளும் அல்லாஹ்வைத் துதிபாடின. இரும்பைக் கொண்டு வாள்களையும் ஈட்டி களையும் கவசங்களையும் இன்னும் பல்வேறு வகையான கருவிகளை யும் அவர் உண்டாக்கினார்.

உலக விவகாரங்களைப் புரிந்துகொள்ளும் அறிவின் ஒரு பகுதியைக் கொண்டே நாம் மறுமையையும் புரிந்துகொள்கிறோம். மூடனுக்கோ செயல்படாமல் அமர்ந்திருப்பவனுக்கோ ஈமானின் உதவி கிடைக்காது.

முஸ்லிம்கள் மூன்றாம் அல்லது நான்காம் உலகத்துக்கு மாறிச் சென்றபோது அவர்களிடமிருந்து அவர்களின் எதிரிகள் கற்றுக் கொண் டார்கள்.

சுலைமானுக்கு வழங்கப்பட்ட ஷரீஅத்தில் சிலைகள் தடைசெய்யப் பட்டவையாக இருக்கவில்லை என்பது தெரிகிறது. ஆகவேதான் அவர் சி லைகளைச் செய்தார். அல்லாஹ்வை விடுத்து மக்கள் அவற்றைக் கடவுள்களாக ஆக்கியதால் இஸ்லாம் சிலைகளை செதுக்குவதைத் தடைசெய்தது. மனிதர்கள் விஞ்ஞானத்தில் பெரும் பெரும் கண்டு பிடிப்புகளை நிகழ்த்திவிட்ட போதிலும் சிலை வழிபாட்டின் பக்கம் ஈர்க்கப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். சில சர்ச்சுகளில் உருக்கமான பிரார்த்தனையை உருவாக்குவதற்காகச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. அதனால்தான் புரோட்டஸ்டன்டு பிரிவினர் தங்களின் சர்ச்சுகளிலிருந்து சிலைகளை முழுமையாக நீக்கிவிட்டார்கள்.

தாவூதும் சுலைமானும் அரசர்களாகவும் தூதர்களாகவும் இருந்தார்கள். அதிகாரம் அவர்களை வணக்க வழிபாட்டின் கடமைகளை விட்டும்

தடுக்கவில்லை. ஆகவே, அத்தியாயத்தில் இடம்பெறுகிறது. 'தாவூதின் குடும்பமே, நன்றியுணர்வுடன் செயலாற்றுங்கள். என் அடியார்களில் நன்றி செலுத்துவோர் மிகக் குறைவானவர்களே. (13)' இதுதான் இந்த அத்தியாயத்தில் இடம்பெறும் முதல் சம்பவம்.

இரண்டாவது சம்பவம் சபாவாசிகளின் சம்பவமாகும்.

> சபாவாசிகளுக்கு அவர்களது வசிப்பிடங்களில் சான்று இருந்தது. அவற்றின் வலது புறமும் இடது புறமும் இரு தோட்டங்கள் இருந்தன. 'உங்கள் இறைவன் அளித்துள்ள உணவை உண்ணுங் கள். அவனுக்கு நன்றி செலுத்துங்கள். வளமான நகரத்தையும் மன்னிப்பளிக்கும் இறைவனையும் நீங்கள் பெற்றுள்ளீர்கள்.' (15)

அவர்களின் சம்பவத்தை நாம் நினைவுகூர்வோம்.

பெரும்பாலான மனிதர்கள் செல்வத்தை இறைத் திருப்தியின் அடை யாளமாகவும் அது குறைந்துவிடுவதை இறைத் திருப்தியின்மையின் அடையாளமாகவும் எண்ணிக்கொள்கிறார்கள். அல்லாஹ் கொடுத்தும் சோதிக்கிறான், கொடுக்காமல் இருந்தும் சோதிக்கிறான் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். சில சமயங்களில் அவன் துன்பங்களைக் கொண்டு சோதிக்கிறான். சில சமயங்களில் அவன் மகிழ்ச்சியைக் கொண்டு சோதிக் கிறான். இந்தச் சோதனைகளை மனிதன் எப்படி எதிர்கொள்கிறான் என்பதைப் பொறுத்தே அவனுடைய வெற்றி, தோல்வி அமைகிறது. 'நன்மையையும் தீமையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். நீங்கள் அனைவரும் நம் பக்கமே திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். (21:35)'

சபாவாசிகள் சோதனையில் தோல்வியடைந்தார்கள். அல்லாஹ்வின் அருட்கொடையை இழிவாகக் கருதி நன்றிகெட்டத்தனமாக நடந்து கொண்டார்கள்.

> இது அவர்களின் நன்றிகெட்டத்தனத்தால் அவர்களுக்கு நாம் அளித்த தண்டனையாகும். நன்றிகெட்டவர்களையே நாம் இவ்வாறு தண்டிக்கிறோம். (17)

> அல்லாஹ்வின் அருட்கொடைக்கு நன்றிகெட்டத்தனமாக நடந்து கொண்டு, தம் சமூகத்தை அழிவின் வீடான நரகத்தில் தள்ளிய வர்களை நீர் பார்க்கவில்லையா? (14:28)

அருட்கொடை பறிக்கப்பட்டுவிட்டால் ஒற்றுமை, ஆரோக்கியம், பாதுகாப்பு எல்லாம் அழிந்துவிடும். இவற்றுக்கு எதிரான நிலைகள்

வந்துசேர்ந்துவிடும். அவர்களுக்கு வரக்கூடிய தண்டனைகள் நீதியின் தேட்டமே ஆகும்.

> அவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்கள். ஆகவே, நாம் அவர்களைப் பழங்கதைகளாக்கி விட்டோம். அவர்களை முற்றிலும் சின்னாபின்னமாக்கிச் சிதறடித்து விட்டோம். நிச்சய மாகப் பொறுமையுடன் நன்றி செலுத்தும் ஒவ்வொருவருக்கும் இதில் ஏராளமான சான்றுகள் உள்ளன. (19)

இந்த அத்தியாயம், அருட்கொடைகளைக் கொண்டு சோதிக்கப்படும் பெரும்பாலானவர்கள் தோல்வியடைந்துவிடுகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. பல சமூகங்களை அவர்களின் சொகுசான வாழ்க் கைதான் கர்வத்தில் ஆழ்த்தின. முதலில் அவர்கள் செய்த காரியம், வஹீயை நிராகரித்ததும் தூதர்களை எதிர்த்ததும் தங்களிடம் இருப்பதே தங்களுக்குப் போதுமானதாகும் என்று வாதிட்டதும் ஆகும்.

> நாம் எச்சரிக்கைசெய்பவரை எந்த ஊருக்கு அனுப்பினாலும் அங்கு செல்வந்தர்கள், ‘நீங்கள் கொண்டுவந்துள்ள தூதுச் செய்தியை நாங்கள் நிராகரிக்கிறோம்.’ என்றே கூறினார்கள். ‘நாங்கள் செல் வங்களாலும் பிள்ளைகளாலும் மிகுந்தவர்கள். ஆகவே, நாங்கள் வேதனைசெய்யப்பட மாட்டோம்.’ என்றும் அவர்கள் கூறினார்கள். (34,35)

முந்தைய சமூகங்கள் வழிகெடுவதற்குச் செல்வம் ஒரு காரணமாக அமைந்தது. தற்காலச் சமூகங்கள் வழிகெடுவதற்கும் அது காரணமாக உள்ளது. அதனைப் பெற்றவர்கள் அதனைச் சிறந்த முறையில் பயன் படுத்துவதற்குப் பதிலாக அதன் மூலம் ஏழைகள், பலவீனர்கள்மீது வரம்புமீறினார்கள். ஆகவே, அது யாருக்கும் உரித்தானதாகிவிடக் கூடாது என்பதற்காகப் பல சமூக அமைப்புகள் தோற்றம்பெற்றன. அவை முத லாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் மத்தியில் நிரந்தரமான பகையை யும் போரையும் தூண்டிவிட்டன.

நாம் கவனித்துப்பார்த்தால், அவர்கள் அழிவின் பக்கம் ஒன்று கூடுவதையும் மார்க்கத்தின் அடையாளங்கள் மறைந்து இவ்வுலகில் இருள் அதிகரிப்பதையும் காண முடியும். இவ்வுலக வாழ்க்கையை வழிபடும், மறுமையை மறக்கும் தத்துவங்கள் தோன்றிவிட்டன. உண் மையான மார்க்கத்தின் பக்கம் திரும்பாமல் நாம் வெற்றிபெற முடியாது.

> அவர்களின் விசயத்தில் இப்லீஸ் தன் எண்ணத்தை உண்மை யாக்கிக் காட்டினான். நம்பிக்கையாளர்களில் ஒரு பிரிவினரைத்

தவிர மற்றவர்கள் அவனைப் பின்பற்றினார்கள். இப்லீஸுக்கு அவர்களின் மீது எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை. ஆயினும் இது, மறுமையின் மீது நம்பிக்கை கொள்வோர் யார், அதுகுறித்து சந்தேகம் கொள்வோர் யார் என்பதை நாம் அறிந்துகொள்வதற்காகத்தான். உம் இறைவன் ஒவ்வொன்றையும் கண்காணிப்பவனாக இருக்கிறான். (20,21)

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு மீண்டும் மூடர்களின் ஆட்சேபணைகளும் அவற்றுக்கான பதில்களும் இடம்பெறுகின்றன. இங்கு நாம் ஒரு விவாத ஒழுங்கைக் காண்கிறோம். வேறு எங்குமே இப்படிப்பட்ட ஒரு முன்மாதிரியை நாம் காண முடியாது. சத்தியத்தை எடுத்துரைப்பவன் தன் எதிரிகளின் படித்தரத்துக்குக் கீழ் இறங்கி அதனைப் புரிந்துகொள்ளும்படியும் ஏற்றுக்கொள்ளும்படியும் கோரிக்கை வைக்கிறான். 'நீர் அவர்களிடம் கேளும், வானங்களிலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? நீர் கூறும், அல்லாஹ்தான். நாங்களோ நீங்களோ இருவரில் ஒருவர்தான் நேர்வழியில் அல்லது வெளிப்படையான வழிகேட்டில் இருக்கிறோம். (24)'

வணக்க வழிபாட்டுக்குத் தகுதியானவன் யார்? உணவளிப்பவனா உணவைப் பெறுபவனா?

உங்களின் தெய்வங்கள் எதையும் புரிந்துகொள்ள முடியாத கற்கள்தாம். எப்படி அவைகளிடத்தில் வாழ்வாதாரம் வேண்டப்படும்?

நம்மில் ஒருவர் நிச்சயமாகத் தவறிழைக்கிறார். அது யார் என்று உங்களுக்குத் தெரியும்.

இந்த வடிவில் விவகாரம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபிறகு இடம்பெற்ற வசனம் இணைவைப்பாளர்களை இன்னும் வெட்கப்படச் செய்தது. 'நீர் கூறும், நாங்கள் செய்த குற்றங்கள் குறித்து நீங்கள் விசாரிக்கப்பட மாட்டீர்கள். நீங்கள் செய்த குற்றங்கள் குறித்து நாங்கள் விசாரிக்கப்பட மாட்டோம். நீர் கூறும், நம் இறைவன் நம்மை ஒன்று சேர்ப்பான். பின்னர், நமக்கிடையே நியாயமாகத் தீர்ப்பளிப்பான். அவன் தீர்ப்பளிப்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (25,26)'

இந்த அத்தியாயத்தில் தலைவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றும் தொண்டர்களுக்கும் மத்தியில் நடைபெறும் உரையாடல் இடம்பெறுகிறது. இத்தகைய உரையாடல் பல அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளது. மனிதர்களில் சிலர் சிலருடன் கொண்டுள்ள மட்டமான தொடர்பை அது அம்பலப்படுத்துகிறது. சிலர் தங்களுக்குப் பின்னால்

எப்போதும் மற்றவர்கள் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டும், தங்களுக்குப் பின்னால் அவர்கள் வர வேண்டும் என்று விரும்பக்கூடியவர்கள். ஒரு கவிஞர் கூறுகிறார்:

> ‘மனிதர்களில் சிலரைக் காணலாம், அவர்கள் நாம் சென்றால் நம்முடன் செல்வார்கள். நாம் பிற மனிதர்களை நோக்கிச் சுட்டிக்காட்டினால் அவர்கள் நின்றுவிடுவார்கள்.’

இழிவடைந்தவர்களாக ஆக விரும்பக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் தலைவர்களுக்குப் பின்னால் ஓடுவதுதான். செல்வம், வறுமை, ஆற்றல், பலவீனம் ஆகியவை தம்முடைய பணிகளைச் செய்து இவர்கள் தீட்டும் திட்டங்களை உறுதிப்படுத்திவிடுகின்றன. சூனியக்காரர்கள் ஃபிர்அவ்னுடன் கொண்ட தொடர்பில் இதற்கான உதாரணம் காணப்படுகிறது.

> சூனியக்காரர்கள் வந்தபோது அவர்கள் ஃபிர்அவ்னிடம், ‘நாங்கள் மேலோங்கிவிட்டால் எங்களுக்கு வெகுமதி உண்டு, அல்லவா?’ என்று கேட்டார்கள். அதற்கு அவன், ‘ஆம், நிச்சயமாக. அப்போது நீங்கள் எனக்கு நெருக்கமானவர்களாக ஆகிவிடுவீர்கள்.’ என்று கூறினான். (26:41,42)

நான் கண்டவரை கடந்தகாலத்திலும் தற்காலத்திலும் ஈமானை விட்டுத் தூரமான பல கூட்டங்கள் இத்தகைய வடிவில்தான் செயல்படுகின்றன. பேராசையைத் தூண்டுவதும் தேவைக்கான அழைப்பும்.

இந்த அத்தியாயம், நாளை அவர்களுக்குள் நடக்கவிருக்கும் உரையாடலின் மூலம் மறைவான இந்த விசயங்களை வெளிப்படுத்துகிறது.

> அக்கிரமக்காரர்கள் தங்கள் இறைவனுக்கு முன்னால் நிறுத்தப்படுவதை நீர் காண வேண்டுமே! அப்போது ஒருவர் மற்றவர்மீது பழி சுமத்துவார். பலவீனமானவர்கள் கர்வம் கொண்டோரிடம் கூறுவார்கள், ‘நீங்கள் மட்டும் இல்லை என்றால் நாங்களும் நம்பிக்கை கொண்டிருப்போம்.’ கர்வம் கொண்டோர் பலவீனமானவர்களிடம் கூறுவார்கள், ‘உங்களிடம் நேர்வழி வந்துவிட்டபின் அதைவிட்டும் நாங்களா உங்களைத் தடுத்தோம்? மாறாக, நீங்கள் தாம் குற்றவாளிகளாக இருந்தீர்கள்.’ (31,32)

ஆயினும் உரையாடல் தொடரவில்லை. நரகத்தின் காவலர்கள் அதனை நிறுத்திவிடுவார்கள்.

இந்த அத்தியாயத்தின் இறுதியில் அல்லாஹ், நிராகரிப்பாளர்களை எதிர்கொண்டு அவர்கள் எழுப்பும் ஆட்சேபணைகளுக்குப் பதிலளித்துக்

கொண்டிருக்கும் தன் தூதருக்கு இந்தத் தூதுத்துவத்தின் இயல்பைத் தெளிவுபடுத்தும்படி கட்டளையிடுகிறான்.

நீர் கூறும், 'நான் உங்களுக்கு ஒரு விசயத்தைக் குறித்து உபதேசம் செய்கிறேன். நீங்கள் இருவர் இருவராக அல்லது தனித்தனியாக எழுந்து அல்லாஹ்வுக்காகச் சிந்தித்துப்பாருங்கள்.' உங்கள் தோழருக்குப் பைத்தியம் இல்லை. அவரோ வரப்போகும் கடுமையான வேதனையைக் குறித்து எச்சரிப்பவராகவே இருக்கிறார். (46)

ஆழமான சிந்தனையே இந்தத் தூதுத்துவத்தின் அடித்தளம், ஒரு மனிதன் தனியாகச் சிந்தித்தாலும் அல்லது தன் தோழர்களுடன் சேர்ந்து சிந்தித்தாலும் சரியே. உறங்கக்கூடிய அறிவை தட்டியெழுப்பி இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் இறைவனின் சான்றுகளைக் காணவைப்பதே நோக்கமாகும். முஹம்மது நபியவர்கள் சோம்பிக்கிடக்கும் அறிவை உசுப்பி எழுப்புகிறார். தடுமாறிக்கொண்டிருக்கும் சமூகங்களுக்கு நேரான வழியைக் காட்டுகிறார். அவர் பதவிக்காகவோ செல்வத்துக்காகவோ இதையெல்லாம் செய்யவில்லை. அவர் சிரமங்களைத் தாங்கிக் கொண்டார். இந்த மார்க்கத்தை எடுத்துரைக்கும் பொருட்டுத் தம்மையே அர்ப்பணித்தார்.

நான் உங்களிடம் ஏதாவது கூலி கேட்டிருந்தால் அதனை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எனது கூலி அல்லாஹ்விடமே உள்ளது. அவன் ஒவ்வொன்றையும் கண்காணித்துக்கொண்டிருக்கிறான். (47)

இன்று சத்தியத்தைப் புறக்கணிப்பவர்கள் அவரது எச்சரிக்கை உண்மையாகும் சமயத்தில் அதன் மீது நம்பிக்கை கொள்வார்கள். அவர்களின் நிராகரிப்பைத்தான் அவர்கள் எதிர்கொள்வார்கள். 'அவர்கள் திடுக்கமுற்றிருப்பதை நீர் காண்பீராயின், அவர்களால் தப்பியோட முடியாது. அருகிலிருந்தே அவர்கள் பிடிக்கப்படுவார்கள். (51)'

'நாங்கள் அதன் மீது நம்பிக்கை கொண்டோம் என்று அவர்கள் கூறுவார்கள். வெகுதூரம் சென்றுவிட்ட அவர்களால் எவ்வாறு அடைய முடியும்? (52)' காலம் கடந்தபிறகு அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள். சோதனைக்கான காலமோ முடிவடைந்துவிடும். விளைவுகளும் வெளிப்பட்டு விடும். அவர்கள் புரிந்திருந்தால் அல்லாஹ்வை அறிந்திருப்பார்கள். தூதர்களைப் பின்பற்றியிருப்பார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 35

# ஃபாத்திர்

(படைப்பாளன்)

*இந்த அத்தியாயம் அல்லாஹ்வின் புகழோடு ஆரம்பமாகும் அத்தி யாயங்களில் இறுதியானதாகும். எல்லாப் புகழையும் அல்லாஹ்வின் பக்கம் இணைத்துக்கூறுவது நிலையான நல்லறங்களில் ஒன்றாகும். அத்தியாயங்களின் மத்தியில் உள்ள பகுதிகளிலும் இறுதிப் பகுதிகளி லும் இது அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வுலகிலும் மறுவுலகிலும் அல்லாஹ்வைவிட வேறு யார் புகழுக்குத் தகுதியானவனாக இருக்க முடியும்?*

> அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் வானங்களையும் பூமி யையும் படைத்தவன்; இரண்டிரண்டு, மும்மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் உடைய வானவர்களைத் தூதுவர்களாக நியமித்த வன். (1)

*வானவர்கள் ஒளியால் ஆன உடல்களைக் கொண்டவர்கள். பல்வேறு வடிவங்களை எடுக்கும் ஆற்றலுடையவர்கள். நன்மைசெய்வது, கட்டுப் படுவது, அறிவது, சிரமமான காரியங்களைச் செய்வது ஆகியவை அவர் களின் பணிகள். அவர்கள் வானங்களில் வசிப்பவர்கள். படைப்புகளின் விசயத்தில் அவர்கள் அல்லாஹ் இடும் கட்டளைகளைச் செயல்படுத்து கிறார்கள். வானவர்களில் உயிரை எடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்ட வர்களும் உயிர்கொடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டவர்களும் மனிதச் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்த பணிகளுக்கேற்ப அவர்கள் வெவ்வேறானவர்களாக இருக்கிறார்கள்.*

*இங்கு வசனம் அவர்களுக்கு இரண்டு, மூன்று, நான்கு இறக்கைகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. ஹதீஸில், சில சமயங்களில் அவர்கள்*

நூறு இறக்கைகளையும் சில சமயங்களில் அவர்கள் ஆயிரம் இறக்கைகளையும் கொண்டிருப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*படைப்பில் தான் நாடியதை அவன் அதிகப்படுத்துகிறான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். (1)*

இந்த அத்தியாயம் அந்நஹ்ல் என்ற அத்தியாயத்தைப் போன்று மனிதர்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகளை, சிறப்புகளைக் கணக்கிடுகிறது. நிலையான இந்த விதியைக் கொண்டு அத்தியாயம் தொடங்குகிறது: ‘அல்லாஹ் மனிதர்களுக்கு ஏதேனும் அருளைத் திறந்துவிட்டால் அதனைத் தடுப்பவர் எவரும் இல்லை. எதனை அவன் தடுத்துவிடுகிறானோ அதற்குப் பின் அதனை அனுப்புபவர் எவரும் இல்லை. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (2)’

மனிதர்கள் இந்த விதியைப் புரிந்துகொள்வது மிக அவசியமாகும். அவர்கள் நன்மையின் ஊற்றுகள் அல்லாஹ்விடமிருந்து அல்லாமல் எங்கோ வேறு இடங்களிலிருந்து வருகின்றன என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த இருப்புமற்ற பூஜ்யத்தைப் பேராற்றலாக எண்ணுகிறார்கள். தங்களின் இந்த எண்ணத்தின் காரணமாக அவர்கள் இங்குமங்கும் தடுமாறித்திரிகிறார்கள்.

புறாவைக் கண்டு பயந்து, சிங்கத்தைக் கண்டு பயப்படாதவனை நாம் என்ன சொல்வோம்? இவன் அறிவுடையவனாக இருப்பானா?

ஆகவே, இந்த விதிக்குப் பிறகு பின்வரும் வசனம் இடம்பெறுகிறது:

*மனிதர்களே, அல்லாஹ் உங்கள்மீது பொழிந்த அருட்கொடைகளை நினைவுகூருங்கள். வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் இருக்கிறானா? அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே, நீங்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறீர்கள்? (3)*

அல்லாஹ்வை விடுத்து வேறு எங்கிருந்து அருட்கொடைகள் வருகின்றன? அடியார்களுக்கு அவர்கள் விரும்புவதை அளித்து அருள் புரிபவன் யார்?

ஹதீஸில் வந்துள்ளது, ‘அல்லாஹ்வே, எனக்கு அல்லது உன் அடியார்களில் யாருக்கேனும் இன்றைய காலையில் கிடைத்த எந்த அருளானாலும் அது உன் புறத்திலிருந்தே கிடைத்தது. நீ தனித்தவன். உனக்கு இணை இல்லை. உனக்கே புகழனைத்தும். உனக்கே நன்றிகள் அனைத்தும்.’

*இந்த உணர்வைக் கொண்டேயன்றி ஈமான் முழுமையடைவதில்லை. 'இரவிலும் பகலிலும் இருப்பவை அல்லாஹ்வுக்கே உரியவையாகும். அவன் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (6:13)' அவனே அருட்கொடைகளுக்குச் சொந்தக்காரன்.*

*இந்தக் கொள்கையை இழந்ததனால்தான் மக்களிடையே இணை வைப்பு பரவியது. அவர்கள் ஈக்களைக் கொண்டு அஞ்சுகிறார்கள். படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனை மறந்துவிடுகிறார்கள். இந்த ஈமானிய உணர்வு உள்ளத்தில் குடி கொள்ளாததனால்தான் வலிமையானவர்கள் மோசமான குணமுடைய வர்களாக ஆனார்கள்.*

*பின்னர், இயல்பான இந்த விசயத்தை மனிதர்கள் உணர்ந்துகொள்ளும் பொருட்டு இரண்டாவது முறையும் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப் படுகிறது.*

> *மனிதர்களே, அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. ஆகவே, இவ்வுலக வாழ்வு உங்களை ஏமாற்றத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். அல்லாஹ்வின் விசயத்தில் ஏமாற்றுக்காரனும் உங்களை ஏமாற்றி விட வேண்டாம். நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்குப் பகை வனாவான். ஆகவே, நீங்களும் அவனைப் பகைவனாக ஆக்கிக் கொள்ளுங்கள். தன் கூட்டத்தாரை அவன் அழைப்பதெல்லாம் அவர்கள் நரகவாசிகளாக ஆகிவிட வேண்டும் என்பதற்காகத்தான்.* (5,6)

*அல்லாஹ் மனிதர்களை இருள்களிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவரும் பொருட்டு முஹம்மதுக்கு வஹீயாக இந்த வேதத்தை அருளினான். அவர் மனிதர்களுக்கு இதனை எடுத்துரைக்கிறார். யார் அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்வாரோ அவர் வெற்றிபெறுவார். 'அவர்கள் உம்மை நிராகரித்தால் உமக்கு முன்னரும் தூதர்கள் நிராகரிக் கப்பட்டுள்ளார்கள். அனைத்து விவகாரங்களும் அல்லாஹ்விடமே திரும் பக் கொண்டுவரப்படுகின்றன* (4).' *இணைவைப்பாளர்கள் ஓரிறைக் கொள்கையையும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலையும் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். நபியவர்கள் தம் சமூகத்தாரிடமிருந்து பிடி வாதத்தையும் எதிர்ப்பையும் சந்தித்தார்கள். ஆகவே, மீண்டும் அவரிடம் கூறப்பட்டது:*

> *இவர்கள் உம்மை நிராகரித்தால், இவர்களுக்கு முன்னுள்ளவர்களும் நிராகரித்துள்ளார்கள். அவர்களிடம் அவர்களுடைய தூதர்கள்*

*தெளிவான ஆதாரங்களையும் ஆகமங்களையும் ஒளிவீசும் வேதங்களையும் கொண்டுவந்தார்கள். பின்னர் நிராகரித்தவர்களை நான் தண்டித்தேன். எப்படி இருந்தது என் தண்டனை?* (25,26)

*இந்தத் தண்டனை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படவில்லை. உறங்கியவன் விழிப்பதற்காக, மூடன் அறிவைப் பெறுவதற்காகக் குறிப்பிட்ட காலம்வரை அல்லாஹ் தன் அடியார்களுக்கு அவகாசமளிக்கவே செய்கிறான்.*

*அல்லாஹ் மனிதர்கள் செய்யும் தீய காரியங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதாக இருந்தால் பூமியில் எந்த உயிரினத்தையும் அவன் விட்டுவைத்திருக்க மாட்டான். ஆயினும், அவன் குறிப்பிட்ட தவணைவரை அவர்களுக்கு அவகாசமளிக்கிறான். அவர்களுக்கான தவணை வந்துவிடுமானால் ... நிச்சயமாகத் தன் அடியார்களை அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான்.* (45)

*அவகாசத்தைக் கொண்டு பயனடைபவர்களையும் மனஇச்சைக்கு அடிமையாகிக் குருடர்களாகவே இருப்பவர்களையும் அவன் அறிவான்.*

*அவகாசத்தைத் தவறுசெய்வதற்குக் கிடைத்த வாய்ப்பாக எண்ணுபவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. இறைவன் அளிக்கும் அவகாசம் அவர்களை இன்னும் வழிகேட்டில் ஆழ்த்திவிடுகிறது.*

*யாருக்கு அவரது தீய செயல் அழகாகக் காட்டப்பட்டு அவர் அதனை நற்செயலாகக் கருதுகிறாரோ, அல்லாஹ் தான் நாடுவோரை வழிதவறச் செய்கிறான், தான் நாடுவோரை நேரான வழியில் செலுத்துகிறான். நீர் அவர்களுக்காகக் கவலைப்பட்டு உம் உயிரைப் போக்கிவிட வேண்டாம். அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்.* (8)

*நிராகரிப்பவர்களின் நிராகரிப்பை எண்ணி நபியவர்கள் கடுமையாகக் கவலை கொண்டார்கள். அவர்களுக்கு அறிவூட்டவும் சத்தியத்தை உணர்த்தவுமே அவர் தம் ஆற்றல்கள் அனைத்தையும் செலவுசெய்கிறார். சத்தியத்தை வெறுத்து அசத்தியத்தைத் தேர்ந்தெடுப்பவர்களே அழிந்து போகிறார்கள்.*

*ஆகவே, இங்கு இந்த அத்தியாயத்தின் மூன்றாவது அழைப்பு இடம் பெறுகிறது:*

*மனிதர்களே, நீங்கள்தாம் அல்லாஹ்விடம் தேவையுடையவர்கள். அல்லாஹ் தேவையற்றவனாகவும் புகழுக்குரியவனாகவும்*

இருக்கிறான். அவன் நாடினால் உங்களை அழித்துவிட்டுப் புதிய தொரு படைப்பைக் கொண்டுவருவான். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்குக் கடினமானதல்ல. (15-17)

அல்லாஹ்வுக்கு எதுவும் கடினமானதல்ல. அவன் இந்தப் பிரபஞ் சத்தையும் இதில் உள்ள அனைத்தையும் அழிப்பதற்கும் மீண்டும் ஒரு தூய்மையான பிரபஞ்சத்தைக் கொண்டுவருவதற்கும் ஆற்றலுடையவன்.

மனிதர்கள் நீதிக்கும் அநீதிக்கும் மத்தியில், கண்ணியத்துக்கும் இழி வுக்கும் மத்தியில் அல்லாஹ்வுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்று வதற்கும் வாக்குறுதியை நிறைவேற்றாமல் மோசடிசெய்வதற்கும் மத்தி யில் தெரிவுசெய்யும் உரிமை வழங்கப்பட்டவர்கள்.

யார் கண்ணியத்தை விரும்புகிறாரோ அவர் அறிந்துகொள்ளட்டும், கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே உரியது. தூய்மையான வார்த்தை அவனிடமே உயர்ந்துசெல்கிறது. நற்செயல் அதனை உயர்த்துகிறது. சதிச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமை யான வேதனை உண்டு. அவர்களின் சதித்திட்டங்கள் அழிந்து போகும். (10)

இந்த அத்தியாயம் படைப்பு, பரிபாலிப்பு ஆகிய இரு கால கட்டங் களையும் தெளிவுபடுத்திக் கொண்டே செல்கிறது. அவன்தான் காற்று களை அனுப்பி மேகங்களைச் சிதறடிப்பவன். இரு கடல்களுக்கு மத்தியில் திரைகளை ஏற்படுத்தியவன். அவற்றில் ஒன்று சுவையான நீரைக் கொண்ட தாகவும் மற்றொன்று உப்புநீரைக் கொண்டதாகவும் இருக்கிறது.

அல்லாஹ்தான் உங்களை மண்ணிலிருந்து, பின்னர் ஒரு துளி விந்திலிருந்து படைத்தான். பின்னர், உங்களை இணைகளாக ஆக்கினான். (11)

ஆயினும், மனிதர்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர் தம் எஜமானனை அறியாத, அவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அறியாத தறிகெட்ட நாய்களைப் போன்று தடுமாறித்திரிகிறார்கள்.

பல்வேறு மதங்களுக்கு மத்தியில் இஸ்லாம் மட்டுமே இந்தப் பிரபஞ் சத்தைக் குறித்தும் மனித வாழ்க்கையைக் குறித்தும் சிந்தனைசெய்யுமாறு வலியுறுத்துகிறது என்பதில் கிட்டத்தட்ட அனைவரும் ஒத்த கருத்து கொண்டுள்ளனர். இந்தப் பிரபஞ்சத்தைக் குறித்தும் இதில் காணப்படும் சான்றுகள்குறித்தும் சிந்திப்பதற்கும் இதில் மறைந்து காணப்படும் இர கசியங்களை வெளிப்படுத்துவதற்கும் இஸ்லாம் மனிதச் சமூகத்தை நோக்கி வலுவான அழைப்பு விடுக்கிறது.

அல்லாஹ்வின் உள்ளமைகுறித்து சிந்திப்பது சாத்தியமற்றது. அவனுடைய படைப்புகளில் காணப்படும் சான்றுகளைக் கொண்டே அவனுடைய மகத்துவத்தை அறிந்துகொள்ள முடியும். பூமியில் ஒரே மண்ணிலிருந்து மிகவும் நெருக்கமாக, பல்வேறு நிறமுடைய, சுவையுடைய, மணமுடைய பயிர்கள், விளைச்சல்கள் வெளிப்படுகின்றன. நீர் உம்முடைய கண்களை வானத்தின் பக்கம் உயர்த்தினால் ஒளிவீசும் சூரியனையும் பிரகாசமான சந்திரனையும் பரந்துகிடக்கும் நட்சத்திரங்களையும் காணலாம்.

இவையனைத்தும் படைத்துப் பராமரித்துக்கொண்டிருக்கும் இறைவனின் அடையாளங்களே அன்றி வேறில்லை. இந்த வசனத்தைப் படித்துப்பாருங்கள்:

நீர் பார்க்கவில்லையா? அல்லாஹ் வானத்திலிருந்து மழை பொழியச் செய்கிறான். அதன் மூலம் நாம் பல விதமான நிறங்களுடைய கனிகளை வெளிப்படுத்துகிறோம். மலைகளிலும் வெண்மை, சிவப்பு, அடர்ந்த கருநிறம் எனப் பல்வேறு நிறங்களுடைய பாறைகளும் காணப்படுகின்றன. இவ்வாறே மனிதர்களிலும் பிராணிகளிலும் கால்நடைகளிலும் பல நிறங்கள் காணப்படுகின்றன. அல்லாஹ்வின் அடியார்களில் அறிஞர்கள்தாம் அவனை அஞ்சுகிறார்கள். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன்; பெரும் மன்னிப்பாளன். (27,28)

இங்கு அறிஞர்கள் என்ற வார்த்தை தாவரவியல், விலங்கியல், புவியியல், வேதியியல், மருத்துவ இயல், வானவியல் ஆகிய துறைகளின் அறிஞர்களைக் குறிக்கும். அல்லாஹ்வைக் குறித்து அவர்கள் கூறும் செய்திகளை நாம் ஆராய்ந்துபார்த்தால் அவர்கள் அவனை மகத்துவம் மிகுந்தவனாகவும் வணக்க வழிபாட்டுக்குரியவனாகவும் குறிப்பிடுவதை அறிந்துகொள்ள முடியும்.

ஒவ்வொரு பொருளும் அவன் ஒருவனே என்பதை அறிவித்துக் கொண்டிருக்கிறது.

குர்ஆனின் கருத்துகள் இந்த மையத்தையே சுற்றிவருகின்றன. ஈமான் என்பது தேடல் கொண்ட அறிவின் விளைச்சல். மார்க்கம் என்பது நம்பிக்கை கொண்ட அறிவையும் அல்லாஹ்வின் பக்கம் முன்னோக்கும் உள்ளத்தையும் கொண்டது. இந்த அடிப்படையில்தான் முஸ்லிம் சமூகம் இந்த மார்க்கத்தின் உண்மைகளைச் சுமந்துகொண்டிருக்கிறது. மனிதர்களிடையே அதனை எடுத்துரைக்கும் பொறுப்பும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது:

பின்னர் நம் அடியார்களில் நாம் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களை அவ்வேதத்துக்கு உரியவர்களாக்கினோம். ஆயினும், அவர்களில் சிலர் தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டார்கள். அவர்களில் சிலர் நடுநிலையாளர்களாக இருக்கிறார்கள். அவர்களில் சிலர் அல்லாஹ்வின் அருளால் நன்மையின் பக்கம் முந்தக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இதுதான் மாபெரும் அருளாகும். (32)

இந்தத் தூதுத்துவத்தைப் பெறுவதில் அறபுகள் மற்றவர்களை முந்தினார்கள். வஹீயைப் பெற்ற கடைசி சமூகமாக இஸ்றாயீலின் மக்களே இருந்தார்கள். ஆனால், பேராசை அவர்களை மிகைத்தது. அவர்கள் தங்களின் அற்ப ஆதாயங்களுக்காக, கர்வத்தை நிலைநிறுத்துவதற்காக வஹீயைத் தவறான முறையில் பயன்படுத்தினார்கள். அல்லாஹ் அவர்கள்மீது கோபம் கொண்டு இறுதிநாள்வரை வஹீயை அவர்களை விட்டும் திருப்பிவிட்டான். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக அறபுகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்.

இந்த வஹீக்கு முன்னால் அறபுகள் மூன்று பிரிவினராக இருந்தார்கள் என்பதை வசனம் தெளிவுபடுத்துகிறது. ஒரு பிரிவினர், அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டுத் தங்களுக்குத்தாங்களே அநீதி இழைத்துக் கொண்டவர்கள். இரண்டாவது பிரிவினர், தங்களுக்கு இலகுவான நற்செயல்களைச் செய்துகொண்டு அவற்றோடு தீய செயல்களையும் கலந்தவர்கள். மூன்றாவது பிரிவினர், அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிந்தவர்கள். அவனுடைய திருப்தியை நாடி முந்திக் கொண்டு செயல்பட்டவர்கள்.

ஒரு சமூகத்தில் பரவியுள்ள சூழலைப் பொறுத்தே அந்தச் சமூகத்தின் மதிப்பு அளவிடப்படும். மேற்கண்ட மூன்று பிரிவினர்களில் ஒரு பிரிவினர் மற்ற இரு பிரிவினரையும் மிகைத்திருக்கலாம். சமூகத்தின் பெரும்பாலோர் தங்களுக்குத் தாங்களே அநீதி இழைப்பவர்களாக அல்லது நல்லவற்றோடு தீயவற்றையும் கலப்பவர்களாக இருப்பதுதான் ஆபத்தானது.

இறைத் தண்டனை கடுமையாக இருக்கும் ஒரு சமூகத்தில் மிகைத்திருக்கும் தீமையின் கூறுகள் அதனை முழுவதுமாக இழப்பில் ஆழ்த்திவிடும். முஸ்லிம்கள் இந்த விசயத்தை உணர்ந்துகொண்டார்களா என்ன?

முஸ்லிம்களாகிய நாம், நம்மைப் பண்படுத்திக்கொள்ளவும் இந்தத் தூதுத்துவத்தை மற்ற மனிதர்களுக்கு எடுத்துரைக்கவும் ஆற்றல்

பெற்றுள்ளோமா? இதுபோன்ற வசனங்களைக் காணும்போது நாம் கூறுகிறோம், 'முஹம்மதுடைய சமூகம் - அல்லாஹ் தான் அருளிய எல்லா வேதங்களுக்கும் அவர்களை உரியவர்களாக ஆக்கியுள்ளான். அவர்களில் உள்ள அநியாயக்காரர்கள் மன்னிக்கப்படுவார்கள்; நல்லவற்றோடு தீயவற்றையும் கலந்தவர்கள் எளிய முறையில் விசாரிக்கப்படுவார்கள்; நற்செயல்களின் பக்கம் விரைந்து செல்பவர்கள் கேள்விக்கணக்கின்றிச் சுவனத்தில் நுழைவிக்கப்படுவார்கள்.' இப்படித்தான் இப்னு அப்பாஸ் அறிவிப்பதாக ஒரு செய்தி காணப்படுகிறது. இதுபோன்ற அனுமானங் கள் சமூகத்தில் பரவியதால்தான் பாமரரர்கள் வழிதவறினார்கள். அவை அவர்களை மிகவும் பின்தங்கிய சமூகத்தினராக ஆக்கிவிட்டன. இந்தக் கசப்பான உணர்வைப் பின்வரும் வசனத்தைப் படிக்கும்போது நாம் உணர்கிறோம்:

> எச்சரிக்கைசெய்பவர் யாரேனும் அவர்களிடம் வந்தால் மற்ற எல்லாச் சமூகங்களைவிடவும் அவர்கள்தாம் நேர்வழி பெற்றவர் களாக இருப்பார்கள் என்று அவர்கள் உறுதியாகச் சத்தியமிட்டுக் கூறினார்கள். ஆனால், எச்சரிக்கை செய்பவர் அவர்களிடம் வந்த போது அது அவர்களுக்கு வெறுப்பைத்தான் அதிகமாக்கியது. அவர்கள் பூமியில் ஆணவம் கொண்டவர்களாகத் தீய சூழ்ச்சிகள் செய்தார்கள். உண்மையில் தீய சூழ்ச்சிகள் அவற்றில் ஈடுபடு பவர்களைத்தான் தாக்கும். இவர்களுக்கு முன்னுள்ளோரின் வழி முறையைத்தான் இவர்களும் எதிர்பார்க்கிறார்களா? அல்லாஹ்வின் வழிமுறையில் எவ்வித மாற்றத்தையும் நீர் காண மாட்டீர். (42,43)

இதே கருத்து குர்ஆனில் மூன்று முறை இடம்பெற்றுள்ளது. இந்த அத்தியாயத்திலும் அல்அன்ஆம் என்ற அத்தியாயத்திலும் அஸ்ஸாஃப்பாத் என்ற அத்தியாயத்திலும். மூன்று இடங்களிலும் அன்றைய அறபுகளின் அணுகுமுறை கண்டிக்கப்படுகிறது. அவர்கள் வேதக்காரர்களை இழி வாகக் கருதினார்கள். எங்களிடமும் ஒரு வேதம் இருந்தால் நாங்கள் அவர்களைவிட நேர்வழி பெற்றவர்களாக இருப்போம் என்று அவர்கள் கூறினார்கள். அவர்களிடமும் ஒரு வேதம் வந்தது. ஆனால் என்ன செய் தார்கள்?

நேர்வழியில் நிலைத்திருந்த நம்முடைய முன்னோர்கள் இந்த வஹீ யைக் கொண்டு உலகம் முழுவதும் சுற்றினார்கள். தங்களின் பண்பு களாலும் நடத்தைகளாலும் அவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள் கைக்கு முன்மாதிரிகளாகத் திகழ்ந்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு விரைவிலேயே அறபுகளின் இயல்பான அவசரப் புத்தி மிகைத்துவிட்டது. அவர்கள் நேரான வழியைவிட்டும் பிறழ்ந்தார்கள். திருக்குர்ஆனின்

*அறிவுரைகளை அற்பமானவையாகக் கருதினார்கள். தங்களின் மன இச்சைகளுக்குக் கட்டுப்பட்டார்கள். இப்போது அவர்கள் தங்களின் தேசியவாதத்தைக் கொண்டு பெருமையடிப்பதைக் காண்கிறோம். அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அளித்த பொறுப் பிலிருந்து முழுமையாக வெளியேறிவிட்டார்கள். இதற்குப் பிறகு அவர் கள் என்னதான் எதிர்பார்க்கிறார்கள்? அல்லாஹ் அவர்களை எச்சரித்த வாறு கூறுகிறான்:*

> *இவர்கள் பூமியில் சுற்றித் திரிந்து இவர்களுக்கு முன்னிருந்தோரின் கதி என்னவாயிற்று என்பதைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் இவர்களைவிடப் பலம்மிக்கவர்களாக இருந்தார்கள். வானங் களிலும் பூமியிலும் எந்த ஒன்றும் அல்லாஹ்வை வென்றுவிட முடியாது. அவன் நன்கறிந்தவனாகவும் பேராற்றல்மிக்கவனாகவும் இருக்கிறான். (44)*

❖ ❖ ❖

அத்தியாயம் 36

# யாசீன்

*'யா, சீன். (1)' இரண்டும் தனித்தனியான எழுத்துகள். இது நபிய வர்களின் பெயர் அல்ல. அடுத்து சத்தியம் இடம்பெறுகிறது. 'ஞானம் நிறைந்த குர்ஆன்மீது சத்தியமாக. நிச்சயமாக நீர் தூதர்களில் உள்ளவரா வீர். (2,3)' இந்தத் தூதுத்துவத்தின் நம்பகத்தன்மைக்கு ஆதாரத்தின் வலிமையைக் கொண்டு சத்தியம்செய்யப்படுகிறது. சரியான அழைப்பு சரியான ஆதாரத்தைக் கொண்டே தன்னை முன்வைக்கும்.*

*முஹம்மது உண்மையாளர் என்பதற்கு இந்தக் குர்ஆனே சான்றாகவும் சாட்சியாகவும் இருக்கிறது. அவர் நேர்வழி காட்டும் வேதத்தைக் கொண்டு அல்லாஹ்விடமிருந்து அனுப்பப்பட்ட தூதராவார். அது புனைந்துரைக் கப்பட்டதல்ல. 'இது யாவற்றையும் மிகைத்த இணையிலாக் கிருபை யாளனிடமிருந்து அருளப்பட்டதாகும். அது, தம் முன்னோர்கள் எச்ச ரிக்கப்படாததால் அலட்சியமாக இருக்கும் ஒரு சமூகத்துக்கு நீர் எச்ச ரிக்கைசெய்ய வேண்டும் என்பதற்காக. (5,6)'*

*புறவயமான அற்புதங்கள் மனித அறிவில் வெளிச்சத்தைப் பாய்ச்சு வதில்லை. மூசாவின் கைத்தடியோ ஈசாவின் மருத்துவமோ சிலை வழிபாட்டில் ஊறிக்கிடந்தவர்களை விடுவிக்கவில்லை. அவர்களைச் சிந்திக்கச் செய்த வேதம்தான் குருட்டுத்தனத்திலிருந்து, மூடநம்பிக்கை களிலிருந்து அவர்களை விடுவித்தது. எதனையும் காணச் சக்தியற்று, தடுப்புகளுக்குப் பின்னால் வாழக்கூடிய மனிதர்களும் இருக்கிறார்கள். 'நாம் அவர்களின் கழுத்துகளில் விலங்குகளை மாட்டியுள்ளோம். அவை அவர்களின் முகவாய்க்கட்டை வரை உள்ளன. அதனால் அவர்கள் தலையை மேல்நோக்கி வைத்திருக்கிறார்கள். (8)'*

*அவர்களின் முகவாய்க்கட்டை விலங்கிடப்பட்டுள்ளது. சரியாகப் பார்க்க முடியாதவாறு அவர்களின் தலை கோணலாக, மேல்நோக்கி உயர்ந்துள்ளது. 'நாம் அவர்களுக்கு முன்னால் ஒரு தடுப்பையும் பின்னால்*

ஒரு தடுப்பையும் ஏற்படுத்தி அவர்களை மூடிவிட்டோம். ஆகவே, அவர்களால் எதையும் பார்க்க முடியாது. (9)'

குருட்டுத்தனமான பின்பற்றல், எதைக் கொண்டும் சீரடையாத இப் படிப்பட்ட தலைமுறைகளை உருவாக்குகிறது. எச்சரிக்கைகள் அவர் களுக்கு எந்தப் பயனையும் அளிக்காது.

> யார் அறிவுரையைப் பின்பற்றி மறைவிலும் கருணையாளனுக்கு அஞ்சி நடக்கிறாரோ அவரைத்தான் நீர் எச்சரிக்கைசெய்ய முடியும். அவருக்கு மன்னிப்பும் பெரும் கூலியும் உண்டு என்னும் நற்செய்தி யைக் கூறிவிடுவீராக. (11)

இந்த அத்தியாயம் குர்ஆனின் இதயம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு முன்னுரையையும் மூன்று பாடங்களையும் உள்ளடக்கியுள்ளது என்று நாம் கூற முடியும்.

முன்னுரை குர்ஆனைக் குறித்த, அதனைச் செவியேற்பவர்களைக் குறித்த, அதனை நிராகரிப்பவர்களை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய வர்களைக் குறித்த செய்தியைக் கொண்டுள்ளது.

மூன்று பாடங்களும் இந்தக் குர்ஆன் எதன் பக்கம் அழைக்கிறதோ அதற்கான ஆதாரங்களை உள்ளடக்கியுள்ளன.

முதல் பாடம், ஒரு வரலாற்று ஆதாரத்தை எடுத்துரைக்கிறது. மக்கா மாதிரியான ஒரு சிறிய ஊரில் நடைபெற்ற சம்பவம் அது. அவ்வூர்வாசிகள் தூதர்களை நிராகரித்து, வஹீயைச் சாத்தியமற்ற ஒன்றாகக் கருதினார்கள்.

இரண்டாவது பாடம், பிரபஞ்சத்தில் பரவிக் காணப்படும் அறிவுபூர்வ மான ஆதாரத்தை எடுத்துரைக்கிறது. அதன் ஒழுங்கமைப்பையும் ஒத்தி சைவையும் படைப்பாளனின் மகத்துவத்துக்குச் சான்றாக எடுத்துரைக் கிறது.

மூன்றாவது ஆதாரம், உள்ளத்தைப் பண்படுத்துவது தொடர்பானது. அது மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டுக் கூலி வழங்கப்படுதலின் உண்மைநிலையைத் தெளிவுபடுத்தி, தீய இச்சைகளிலிருந்தும் அலட் சியத்திலிருந்தும் மனிதனைப் பாதுகாக்கக்கூடியது. மனித உள்ளங்களில் நம்பிக்கையையும் அச்சத்தையும் ஏற்படுத்தி அவற்றைச் சத்தியத்தின் பக்கம் இழுத்துக் கொண்டுவருகிறது.

முன்னுரையும் மூன்று பாடங்களும் ஒன்றிணைந்தே இந்த அத்தி யாயம் உருவாகிறது. அது அல்லாஹ் ஒருவனின் பக்கம், அவனுடைய

படைப்புகளில் கவனம் செலுத்துவதன் பக்கம், அவனுடைய சந்திப்புக் காகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதன் பக்கம் மனிதர்களை அழைக் கிறது.

பின்வரும் வசனத்தைக் கொண்டு முதல் ஆதாரம் தொடங்குகிறது: 'ஓர் ஊர் மக்களிடம் தூதர்கள் வந்தபோது நடந்ததை அவர்களுக்கு உதாரண மாக எடுத்துக்கூறுவீராக. (13)' இங்கு ஊரின் பெயர் குறிப்பிடப்பட வில்லை. அங்கு நடந்த சம்பவமே முக்கியம்.

தூதர்கள் அதிகாரத்துக்காகவும் தங்களிடம் உள்ளவற்றைப் பறிப் பதற்காகவும்தான் இவ்வாறெல்லாம் கூறுகிறார்கள் என்று இறைத் தூதர்களின் எதிரிகள் எண்ணிக்கொள்கிறார்கள். ஆகவேதான் தூதர்களின் வருகையைத் தங்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாகவும் துர்சகுனமாகவும் அவர்கள் கருதுகிறார்கள்.

> அதற்கு அவர்கள், 'நாங்கள் உங்களைக் கெட்ட சகுனமாகக் கருது கிறோம். நீங்கள் விலகிக்கொள்ளாவிடில் நிச்சயம் உங்களைக் கல்லால் அடித்துக் கொன்றுவிடுவோம். எங்களிடமிருந்து துன் புறுத்தும் வேதனையும் உங்களுக்கு உண்டு.' என்றார்கள். 'உங்களின் கெட்ட சகுனம் உங்களுடன்தான் இருக்கிறது. நாங்கள் உங்களுக்கு அறிவுரை கூறியதற்காகவா இப்படிக் கூறுகிறீர்கள்? உண்மையில் நீ ங்கள் வரம்புமீறும் மக்களாக இருக்கிறீர்கள்!' என்று தூதர்கள் கூறினார்கள். (18,19)

நூஹின் காலகட்டத்திலிருந்தே இறைத்தூதர்களின் எதிரிகள் அவர் களைப் பதவியை விரும்பக்கூடியவர்களாகத்தான் எண்ணிக்கொள் கிறார்கள். அவர்களின் அழைப்பைத் தங்களின் தனிப்பட்ட நலன்களுக்கு எதிரான ஒன்றாகவும் எண்ணிக்கொள்கிறார்கள்.

ஆகவேதான் அவர்கள் நூஹிடம் கூறியவற்றையே மற்றவர்களிடமும் கூறினார்கள்:

> அவருடைய சமூகத்தில் உள்ள நிராகரித்த பிரமுகர்கள், 'நாங்கள் உம்மை எங்களைப் போன்ற ஒரு மனிதராகவே காண்கிறோம். எங்களில் அறிவற்ற இழிவானவர்களே உம்மைப் பின்பற்றுவதை யும் காண்கிறோம். எங்களைவிட உங்களுக்கு எந்தச் சிறப்பும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. மாறாக, நாங்கள் உங் களைப் பொய்யர்களாகவே கருதுகிறோம்.' என்று கூறினார்கள். (11:27)

ஆனாலும் அல்லாஹ் சத்தியத்தை விரும்பக்கூடிய மனிதர்களையும் படைக்கிறான். அவர்கள் அதற்காகத் தியாகங்கள் செய்கிறார்கள். அதன் பாதையில் ஏற்படும் சிரமங்களைச் சகித்துக்கொள்கிறார்கள். கவிஞர் ஷௌகீ கூறுகிறார், 'சத்தியத்தைப் படைத்தவன் எந்தத் தலைமுறையை யும் சத்தியவாதிகள் இல்லாமல் காலியாக விட்டுவிடவில்லை.'

அந்த ஊரின் கடைக்கோடியிலிருந்து மக்களுக்கு அறிவுரை கூறு வதற்காக ஒரு மனிதர் விரைந்தோடி வந்தார். அவர் இரண்டு விசயங்களை அவர்களிடம் அழுத்தம்திருத்தமாகக் கூறினார்.

1. இறைத்தூதர்கள் பதவியையோ செல்வத்தையோ விரும்பாத மனிதர்கள்.

2. அவர்கள் எந்த இறைவனின் பக்கம் அழைக்கிறார்களோ அவனே உண்மையான இறைவன். அவனைத் தவிர அனைத் துமே எவ்வித இருப்புமற்ற யூகங்கள்.

   அந்நகரத்தின் வெகுதொலைவிலிருந்து ஒரு மனிதர் விரைந் தோடி வந்து, 'என் சமூகமே, தூதர்களைப் பின்பற்றுங்கள். உங்களிடம் எந்தக் கூலியையும் கேட்காத இவர்களைப் பின் பற்றுங்கள். இவர்கள்தாம் நேர்வழியில் உள்ளவர்கள்' என்று கூறினார். (20-21)

ஆனாலும் தம் சமூகத்தின் நலன்நாடிய நம்பிக்கைக்குரிய இந்த மனிதன் வழிகேடர்களைத் திருப்திப்படுத்துவதில் தோல்வியடைந்து விட்டார். அவர் கொல்லப்பட்டாரா அல்லது இறந்துவிட்டாரா என் பதைக் குறித்து சம்பவம் எதையும் குறிப்பிடவில்லை. ஆனால், தம் இறைவனிடம் சென்றபிறகு, அவன் தமக்காக வைத்துள்ள கண்ணி யத்தைப் பார்த்தபோது அவர் கூறினார்:

> 'அந்தோ, என் சமூகம் அறிந்துகொள்ள வேண்டுமே! என் இறைவன் என்னை மன்னித்து என்னைக் கண்ணியமுள்ளோரில் ஒருவனாக ஆக்கியதை!' என்று கூறினார். (26,27)

அவர்கள் எப்படி நேர்வழியின் பக்கம் திரும்பிவருவார்கள்? அதற்குப் பின் அவர்களுக்கு என்ன நிகழ்ந்தது? அவர்களைத் தண்டிப்பதற்காக வானம் தன் பலத்தை அவர்கள்மீது பிரயோகித்ததா? அவர்களின் விவ காரமோ மிகச் சாதாரணமாக முடிந்துவிட்டது.

> அவருக்குப் பின் நாம் அவருடைய சமூகத்தின் மீது வானத்திலிருந்து எந்தப் படையையும் இறக்கவில்லை. அப்படி இறக்கிவைப்

*போராகவும் நாம் இருக்கவில்லை. ஒரேயொரு பேரொலிதான். அவர்கள் அனைவரும் சாம்பலாகிவிட்டார்கள்.* (28,29)

*மனிதர்களின் கர்வம் அவர்களை வேதனை தரும் முடிவின் பக்கம் இட்டுச்செல்லும். தூதர்களை நிராகரித்ததற்காகவும் இழிவுபடுத்திய தற்காகவும் அவர்கள் கடுமையான விலையை அளிக்க நேர்ந்தது. கர்வம் என்னும் குற்றத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையும் கடுமையாகிவிட்டது. ஆகவே அல்லாஹ் கூறினான்: 'அந்தோ, அடியார் களுக்கு ஏற்பட்ட கேடே! அவர்களிடம் எந்தத் தூதர் வந்தாலும் அவரை அவர்கள் பரிகாசம்செய்துகொண்டுதான் இருந்தார்கள். நாம் அவர்களுக்கு முன்னர் எத்தனையோ சமூகங்களை அழித்துவிட்டோம். அவர்கள் இவர்களிடம் திரும்பிவரவே மாட்டார்கள் என்பதை இவர்கள் கவனிக்க வில்லையா?* (30,31)'

*நாம் வாழும் நாகரிகத்தின் எதிர்காலம் அச்சமூட்டக்கூடியதாக இருக் கிறது. ஏனெனில், அது அல்லாஹ்வை நினைவுகூர மறுக்கிறது. அவ னுடைய சந்திப்புக்காகத் தயார்படுத்திக்கொள்வதை மறந்துவிட்டது. அது தம் செயல்களின் மூலம் அழிவைத்தான் தேடிக்கொண்டிருக்கிறது.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயத்தின் இரண்டாவது பாடத்தில் அல்லாஹ்வின் மகத் துவத்தை, அவனுடைய பரிபூரணத்தைத் தெளிவுபடுத்தும் சில ஆதாரங் களைக் காண்கிறோம்.*

*அந்த ஆதாரங்களில் முதலாவது:*

*உயிரற்ற பூமி அவர்களுக்கு ஒரு சான்றாகும். நாமே அதனை உயிர்ப்பித்து அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகிறோம். அதிலிருந்துதான் அவர்கள் உண்ணுகிறார்கள். அதில் நாம் பேரீச்சை, திராட்சைத் தோட்டங்களை உருவாக்கினோம். அதில் நீரூற்று களையும் பொங்கியோடச் செய்தோம், அதன் கனிகளை அவர்கள் உண்பதற்காக!* (33,34)

*நாம் பூமிக்கு மோசமானவற்றைக் கொடுக்கிறோம். ஆனால், அது தம்மிடம் உள்ளவற்றில் மிகச் சிறந்தவற்றை நமக்குத் தருகிறது. புறாவின் எச்சத்தில் இருக்கக்கூடிய தர்பூசணி விதை மண்ணில் விழுந்து முளைக் கும்போது மிகச் சிறந்த தர்பூசணியைத் தருகிறது என்று விவசாயிகள் கூறுகிறார்கள். மனிதர்களின் கழிவுகள் வயல்வெளிகளிலும் தோட்டங் களிலும் உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பூமியோ நல்ல*

நெல்லையும் கோதுமையையும் பஞ்சையும் எண்ண முடியாத வித விதமான பழங்களையும் நமக்குத் திருப்பித்தருகிறது.

பிசுபிசுப்பான களிமண்ணிலிருந்து பலன்தரக்கூடிய இந்த விளைச் சல்களை எல்லாம் நமக்கு வெளிப்படுத்தித் தந்தவன் யார்?

பூமி முளைக்கச்செய்கின்றவற்றையும் அவர்களையும் அவர்கள் அறியாதவற்றையும் - என எல்லாவற்றையும் - இணைகளாகப் படைத்தவன் மிகவும் தூய்மையானவன். (36)

இருள் இந்தப் பிரபஞ்சத்தின் பாகங்களைச் சூழ்ந்துகொள்கிறது. பூமி சூரியனின் கதிர்களை முன்னோக்கும்போது அந்த இருள் வெண்மை யான விரிப்பாக மாற்றமடைகிறது. அல்லாஹ் அதன் கதிர்களைச் சுருட்டி விடும்போது இருள் திரும்பி வந்துவிடுகிறது. ஆகவேதான் இரவும் பகலும் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தெளிவுபடுத்தப்படுகிறது. ‘இரவும் அவர்களுக்கு ஒரு சான்றாகும். அதிலிருந்து நாம் பகலின் ஒளியை அகற்றிவிடும்போது அவர்கள் இருளில் மூழ்கிவிடுகிறார்கள். (37)’

மனிதர்கள் சில சமயங்களில் சூரியனும் சந்திரனும் ஒரே வட்டப் பாதையில் இருக்கின்றன என்று எண்ணிக்கொள்கிறார்கள். இது தவறான எண்ணமாகும். இரண்டுக்கும் தனித்தனியான வட்டப்பாதைகள் இருக் கின்றன. அவையிரண்டும் ஒருபோதும் ஒன்றிணைய மாட்டா.

சில சமயங்களில் நான் இந்த நட்சத்திரங்களைப் பார்த்து, ‘இவற்றை வானவெளியில் தடுத்துவைத்திருப்பது எது? அவற்றினுடைய பாதையில் அவற்றைச் செலுத்துவது எது? அவை எந்த ஆற்றலைக் கொண்டு செல் கின்றன? ஆயிரக்கணக்கில் காணப்படும் அவற்றை ஒழுங்குபடுத்தியவன் யார்? அவற்றின் இடங்களையும் காலத்தையும் நிர்ணயித்தவன் யார்?’ என்றெல்லாம் யோசித்ததுண்டு.

நாம் இந்தப் பரந்துவிரிந்த பிரபஞ்சத்தின் ஒரு பகுதியில் வாழக்கூடிய மனிதர்கள். நம் இறைவனின் சான்றுகளைக் காண்கிறோம். நம்மில் நம்பிக்கையாளர்களும் இருக்கிறார்கள், நிராகரிப்பாளர்களும் இருக்கி றார்கள்.

கடல்களையும் மலைகளைப் போன்று அவற்றில் செல்லும் கப்பல் களையும் காண்பதற்கு நாம் மீண்டும் பூமியின் பக்கம் திரும்பிவருவோம். அல்லாஹ் கூறுகிறான்: ‘நிரம்பிய கப்பலில் நாம் அவர்களின் சந்ததிகளை ஏற்றியதும் அவர்களுக்கு ஒரு சான்றாகும். அவர்கள் ஏறிச்செல்லக்கூடிய அதைப் போன்றவற்றையும் அவர்களுக்காக நாம் படைத்துள்ளோம். (41,42)’

நாம் வாழும் நிலப்பகுதிகளைவிட நான்கு மடங்கு பெரியது கடல். நம்முடைய உலகைவிட அது விசாலமானது. அதில் உள்ள ஒவ்வொரு படைப்பினத்துக்கும் ஒரு விதி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அவை கடலில் செல்கின்றன அல்லது குறிப்பிட்ட அளவில் மூழ்கு கின்றன. அங்கு மனிதர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டுவிட்டால் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அவர்களுக்கு உதவிசெய்பவர் இல்லை. ஆனால், அவர்கள் காப்பாற்றப்பட்டபிறகு அவனை நினைத் துப்பார்க்கிறார்களா என்ன?

❖ ❖ ❖

முந்தைய மூன்று ஆதாரங்களையும் தொடர்ந்து அத்தியாயத்தின் இறுதியில் மற்றுமொரு ஆதாரம் இடம்பெறுகிறது.

> அவர்கள் பார்க்கவில்லையா, நம் கரங்கள் செய்தவற்றில் நாம் அவர்களுக்காகக் கால்நடைகளைப் படைத்திருக்கிறோம் என் பதை? அவற்றுக்கு அவர்கள் உரிமையாளர்களாக இருக்கிறார்கள். நாம் அவற்றை அவர்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளோம். சில வற்றின் மீது அவர்கள் பயணம்செய்கிறார்கள். சிலவற்றை அவர்கள் உண்ணுகிறார்கள். (71,72)

கடைவீதிகளில் உள்ள இறைச்சிக் கடைகளில் ஆட்டின் அல்லது மாட்டின் இறைச்சி தொங்கவிடப்பட்டுள்ளதைக் காண்கிறேன். ஆயிரக் கணக்கானோர் அவற்றை வாங்கி உண்ணுகிறார்கள். ஆனாலும் இவற்றை யெல்லாம் தங்களுக்கு வசப்படுத்தித் தந்தவன் யார் என்பதைக் குறித்து அவர்கள் எதுவும் சிந்திப்பதில்லை. அல்லாஹ்வைக் குறித்து என்னவொரு அலட்சியம்?

❖ ❖ ❖

இந்த அத்தியாயத்தின் இறுதிப் பகுதி, மனிதர்கள் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்பட்டுக் கூலி கொடுக்கப்படுவது தொடர்பான செய் தியைக் கொண்டுள்ளது. இவையிரண்டும் மனிதர்கள் பண்படுத்தப் படுவதற்கு அவசியமான அம்சங்களாகும். ஆனால், நவீன நாகரிகம் அவற்றை அலட்சியப்படுத்துகிறது. அவற்றைக் குறித்து பேசுவதை இழிவாகக் கருதுகிறது. ‘மனிதர்களும் விலங்குகளும் சென்றடையும் இடம் ஒன்றுதான். எவ்வித கேள்விக்கணக்கும் இல்லை.’ என்ற கருத்தை அது பரப்புகிறது.

மரணம் திடீரென வந்துவிடுவதுபோன்று மறுமைநாளும் மக்கள் எதிர்பார்க்காமல் திடீரென நிகழ்ந்துவிடும். பின்வரும் வசனங்கள் இதைத் தான் உணர்த்துகின்றன:

'நீங்கள் உண்மையாளர்களாயின் இந்த வாக்குறுதி எப்போது நிறைவேறும்?' என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் ஒரு பேரொலியைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது அவர்கள் தர்க்கித்துக்கொண்டிருக்கும்போதே அவர்களைத் தாக்கிவிடும். அப்போது அவர்களால் மரணசாசனம் செய்யவோ தம் மக்களிடம் திரும்பிச்செல்லவோ முடியாது. (48-50)

தங்களின் கடைவீதிகளிலும் சபைகளிலும் பணிகளிலும் கேளிக்கைகளிலும் அவர்கள் மூழ்கியிருக்கும் சமயத்தில் அது அவர்களைத் தாக்கும். ஹதீஸில் வந்துள்ளது:

இரண்டு மனிதர்கள் ஒரு ஆடையை விரித்திருக்கும் சமயத்தில் மறுமைநாள் நிலைபெற்றுவிடும். அவர்கள் அதனை விற்றிருக்கவும் மாட்டார்கள், சுருட்டியிருக்கவும் மாட்டார்கள். ஒரு மனிதன் கறந்த பாலோடு திரும்பும் சமயத்தில் மறுமைநாள் நிலைபெற்றுவிடும். அவனால் அதனை அருந்த முடியாது. ஒருவன் உணவை உண்பதற்காகத் தன் கையை வாயின் பக்கம் உயர்த்தும் சமயத்தில் மறுமைநாள் நிலைபெற்றுவிடும். அவனால் அதனை உண்ண முடியாது.

மறுமைநாள் இவ்வாறு நிலைபெற்றுவிடும். செயல்படுவதற்கோ மரணசாசனம் எழுதுவதற்கோ அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படாது. பின்னர், அடியார்கள் அனைவரும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டு, விசாரணைக்காகத் தங்கள் இறைவனிடம் ஒன்றுசேர்க்கப்படுவார்கள். மனிதர்கள் செய்த செயல்கள் யாவும் அவர்களை முன்னோக்கி நிற்கும்.

எக்காளம் ஊதப்பட்டதும் அவர்கள் புதைகுழிகளிலிருந்து வெளிப்பட்டுத் தம் இறைவனிடம் விரைவார்கள். 'அந்தோ, எங்கள் துர்பாக்கியமே! எங்களின் புதைகுழிகளிலிருந்து எங்களை எழுப்பியது யார்?' என்று அவர்கள் கேட்பார்கள். இதுதான் அளவிலாக் கருணையாளன் அளித்த வாக்குறுதி. தூதர்கள் உண்மையே கூறினார்கள். (51,52)

வசனங்களில் சுவனவாசிகள் அவர்கள் அனுபவிக்கும் இன்பங்களோடு அற்புதமான முறையில் வர்ணிக்கப்படுகிறார்கள். நரகவாசிகள் தாங்கள் செய்த செயல்களுக்காகப் பழிக்கப்படுவதைச் செவியேற்பார்கள்.

ஆதமுடைய மக்களே, 'நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாது. அவன் உங்களுக்கு வெளிப்படையான விரோதியாவான். நீங்கள் என்னையே வணங்க வேண்டும். இதுவே நேரான வழியாகும்.'

என்று நான் உங்களுக்கு அறிவுறுத்தவில்லையா? அவன் உங்களில் பெரும் கூட்டத்தினரை வழிகெடுத்துவிட்டான். நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்களா? (60-62)

இந்தப் பாடம், மனிதர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டுக் கூலி கொடுக்கப்படுவதைக் குறித்து முக்கியமாகப் பேசினாலும் அல்லாஹ்வின் மகத்துவத்தைப் பறைசாற்றும், ஆதமின் பிள்ளைகளுக்கு அவன் அளித்த அருட்கொடைகளின் வெளிப்பாடுகளைப் பேசும் வேறு சில கருத்துகளையும் உள்ளடக்கியுள்ளது.

பின்னர், மீண்டும் உரையாடலின் வடிவில் 'மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதற்கான' ஆதாரம் இடம்பெறுகிறது.

அவன் தன் படைப்பை மறந்துவிட்டு நமக்கு ஓர் உதாரணம் கூறுகிறான். 'எலும்புகள் மக்கியபின்னர் அவற்றை உயிர்ப்பிப்பவன் யார்?' என்று கேட்கிறான். நீர் கூறும், 'ஆரம்பத்தில் அவற்றைப் படைத்தவன்தான் மீண்டும் அவற்றை உயிர்ப்பிப்பான். அவன் எல்லா வகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்.' (78,79)

ஆரம்பத்தில் படைத்தவன் மீண்டும் படைப்பதற்குச் சக்தியற்றவனா என்ன?

பின்னர் குர்ஆன், இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் ஓர் அறிவியல் உண்மையின் பக்கம் நம் கவனத்தைத் திருப்புகிறது. நாம் ஆக்ஸிஜனைச் சுவாசிக்கிறோம்; கார்பன்டையாக்ஸைடை வெளியேற்றுகிறோம். மரங்கள், செடிகொடிகள் கார்பன்டையாக்ஸைடைச் சுவாசித்து ஆக்ஸிஜனை வெளியேற்றுகின்றன. மரங்கள் சுவாசிக்கும் கார்பன்டையாக்ஸைடு அதன் வேர்களிலும் தண்டுகளிலும் இலைகளிலும் சேகரமாகின்றது. அவை எரியக்கூடிய விறகாக மாற்றமடைகின்றன. 'அவனே பசுமையான மரத்திலிருந்து உங்களுக்காக நெருப்பை உண்டாக்கினான். அதிலிருந்துதான் நீங்கள் தீயை மூட்டுகிறீர்கள். (80)'

இயல்பான இந்தச் செயல்பாடுகள் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் உயிரற்றதிலிருந்து உயிருள்ளதையும் வெளிப்படுத்தும் அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளவையாகும். இந்தச் செயல்பாட்டை மண்ணிலிருந்து உயிர்பெற்று வளரும் தாவரங்களில் வெளிப்படையாகக் காண முடிகிறது. 'எவனது கையில் அனைத்து அதிகாரமும் உள்ளதோ அவன் மிகத் தூய்மையானவன். அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டுவரப் படுவீர்கள். (83)'

❖ ❖ ❖

அத்தியாயம் 37

# அஸ்ஸாஃப்பாத்

(அணிவகுத்து நிற்பவர்கள்)

*வரிசையாக அணிவகுத்து நிற்போர் மீதும் கண்டித்து விரட்டு வோர்மீதும் அறிவுரையை எடுத்துரைப்போர்மீதும் சத்தியமாக ... (1-3)*

*இவை தூதர்களில் இறுதியானவரின் உள்ளத்தில் அருளப்பட்ட வஹீயைக் கொண்டுவந்தோரின் பண்புகள். நம்பிக்கைக்குரிய ஜிப்ரீல் அவரை வழிநடத்துகிறார். கண்ணியம் மிக்க வானவர்கள் அவரைச் சுற்றியிருக்கிறார்கள். அல்லாஹ் ஒருவனே என்ற உண்மையை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கவே இந்தச் சத்தியங்கள்.*

*ஜிப்ரீலே வஹீக்குப் பொறுப்பாளராக இருந்தபோதிலும் அவருடன் ஏராளமான வானவர்களும் இறங்கினார்கள், தூதுத்துவத்தைக் கண் ணியப்படுத்தும் பொருட்டும் அதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தும் பொருட்டும். 'தன் அடியார்களில் தான் நாடியோர்மீது அவன் கட்டளை என்னும் வஹீயுடன் வானவர்களை அனுப்பி, என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை, ஆகவே என்னையே அஞ்சுங்கள் என்று எச்சரிக்கை செய்யுமாறு கட்டளையிட்டுள்ளான். (16:2)' இன்னொருபுறம் அவர்கள் வஹீயின் செய்திகளை ஒட்டுக்கேட்கும் ஷைத்தான்களை விரட்டக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.*

*பின்வரும் ஹதீஸில் வந்துள்ளது போன்று அளவிலாக் கருணை யாளனிடமிருந்தே அறிவுரை தொடங்குகிறது:*

*அல்லாஹ் வானத்தில் ஒரு விசயத்தைத் தீர்மானித்துவிட்டால் அவனுடைய கட்டளைக்குக் கீழ்படியும் பொருட்டு வானவர்கள் தங்கள் இறக்கைகளை அடிக்கிறார்கள். அது இரும்பைக் கொண்டு*

கல்லில் அடித்தால் ஏற்படும் ஒலியைப் போன்ற ஒலியை ஏற் படுத்துகிறது. அவர்களின் உள்ளங்களைவிட்டு நடுக்கம் நீங்கிய வுடன், 'உங்கள் இறைவன் என்ன கூறினான்?' என்று அவர் களிடையே கேட்டுக் கொண்டு, 'அவன் உண்மையையே கூறி னான். அவன் மிக உயர்ந்தவனாகவும் மிகப் பெரியவனாகவும் இருக்கிறான்.' என்று கூறுவார்கள். (34:23)

ஒரே இறைவன் இவ்வாறு வர்ணிக்கப்படுகிறான்: 'அவனே வானங் களுக்கும் பூமிக்கும் அவ்விரண்டுக்கும் இடையே உள்ளவற்றுக்கும் இறைவன். கீழ்த் திசைகளுக்கும் அவனே இறைவனாவான். (5)' கீழ்த் திசைகள் என்பது சூரியன் உதிக்கும் இடங்களைக் குறிக்கும். வருடத்தின் நான்கு பருவங்களில் அது இடத்தையும் காலத்தையும் மாற்றிக்கொள் கிறது.

அத்தியாயத்தின் நடுப்பகுதி இரண்டு உண்மைகளை உள்ளடக்கி யுள்ளது. ஒன்று ஓரிறைக் கொள்கை. மற்றொன்று மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுதல். இந்த இரண்டு உண்மைகளையும் இணை வைப்பாளர்கள் நிராகரித்தார்கள். 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறை வன் இல்லை என்று அவர்களிடம் கூறப்பட்டால் அவர்கள் கர்வம் கொள்பவர்களாக இருந்தார்கள். ஒரு பைத்தியக்காரக் கவிஞரின் சொல் கேட்டு நாங்கள் எங்கள் தெய்வங்களை விட்டுவிடுவோமா என்று அவர் கள் கேட்கிறார்கள். (35,36)'

உண்மையை மறுப்பதால் எந்தப் பயனும் இல்லை. உண்மை நிச்சயம் மேலோங்கியே தீரும். மறுமைநாளில் வழங்கப்படும் கூலியை நிலை நிறுத்தும்போது ஏற்படும் அதன் இரண்டு நிகழ்வுகளைக் காட்சிகளாகத் திருக்குர்ஆன் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. நிராகரிப்பாளர்கள் படிப்பினைபெறும் பொருட்டு இவ்வுலகிலேயே அவை காட்டப்படு கின்றன.

அவர்களை நிறுத்திவையுங்கள். அவர்கள் விசாரிக்கப்பட வேண் டியவர்கள். 'உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் ஒருவருக்கொரு வர் உதவிக் கொள்வதில்லையே?' மாறாக, அவர்கள் இன்று கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறார்களே! அவர்கள் ஒருவருக்கொரு வர் விசாரித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் கூறுவார்கள், 'நீங்கள் வலப்பக்கமிருந்துதானே எங்களிடம் வந்துகொண்டிருந்தீர்கள்?' அதற்கு அவர்கள் கூறுவார்கள், 'இல்லை, நீங்கள் நம்பிக்கை யாளர்களாக இருக்கவில்லை!' ... (24-29)

தலைவர்களும் அவர்களைப் பின்பற்றிய தொண்டர்களும் மறுமை நாளில் சண்டையிடுவார்கள். ஒருவர் மற்றவர்மீது பழி சுமத்துவார். பலவீனமானவர்கள் கூறுவார்கள், 'உங்களின் அதிகாரத்தைக் கொண்டு எங்களை நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள்.' என்று. தலைவர்கள் கூறுவார்கள், 'மாறாக, நீங்கள் சத்தியத்தைப் பார்க்க முடியாத மூடர்களாக இருந்தீர்கள். எங்களுடன் இணைந்து நீங்களும் பொறுப்பைச் சுமந்துகொள்ளுங்கள்.' என்று. 'ஆகவே, அந்நாளில் அவர்கள் வேதனையில் பங்காளிகளாக இருப்பார்கள். குற்றவாளிகளுடன் நாம் இவ்வாறே நடந்துகொள்கிறோம். (33,34)'

இரண்டாவது உண்மை பின்வரும் வசனத்தில் வெளிப்படுவதை நீங்கள் காணலாம்:

> அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி உரையாடுவார்கள். அவர்களில் ஒருவர் கூறுவார், 'எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன், நீயும் உண்மையென ஏற்றுக்கொள்கிறாயா, நாம் இறந்து மண்ணாகவும் எலும்புகளாகவும் ஆகிவிட்டாலும் கூலி கொடுக்கப் படுவோமா என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். நீங்கள் அவனைப் பார்க்க விரும்புகிறீர்களா?' என்று அவர் கேட்பார். அவர் எட்டிப் பார்க்கும்போது நரகத்தின் மத்தியில் அவனைக் காண்பார். அப்போது அவர் கூறுவார், 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீ என்னை அழித்துவிட முற்பட்டாய் ...' (50-56)

இந்தக் காட்சி மக்கள் தங்களின் உலகில் அறிந்ததுதான். ஒவ்வொருவரும் தம் நண்பரைத் தம் கொள்கையின் பக்கம் இழுக்கவே முயல்கிறார். நம்பிக்கையாளன் பலமானவனாக இல்லாமல் இருந்திருந்தால் சறுக்கி விழுந்து வழி தவறியிருப்பான். ஆகவே, அவன் நரகத்தின் நடுவில் தன் நண்பனைக் காணும்போது கூறுவான்:

> 'என் இறைவனின் அருள் இல்லாதிருந்திருந்தால் நானும் நரகத்துக்குக் கொண்டுவரப்பட்டவர்களில் ஒருவனாக இருந்திருப்பேன். இனி நாம் மரணிக்க வேண்டியதில்லையே? ஆயினும், நம்முடைய முந்தைய மரணத்தைத் தவிர. இனி நாம் வேதனை செய்யப்பட மாட்டோம்.' நிச்சயமாக இதுவே மகத்தான வெற்றியாகும். செயல்படுவோர் இத்தகைய வெற்றிக்காகத்தான் செயல்பட வேண்டும். (57-61)

மறைவான உலகில் நடக்கும் ஒரு காட்சியை விரைவாகக் காட்டுவது மனிதர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான். இதற்கான உதாரணம் அல்அஃறாஃப் அத்தியாயத்தில் இன்னும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இங்கு நம்பிக்கையாளன் வெற்றியடைந்ததால் அவன் அடையும் மகிழ்ச்சியை நீங்கள் காணலாம். அவனுடைய ஈமானே அவனுடைய நண்பன் அடைந்த மோசமான விளைவிலிருந்து அவனைக் காத்தது. அவன் சுவனத்தில் இன்பங்களை அனுபவித்துக் கொண்டு தன் தோழர் களோடு மகிழ்ச்சியாக இருப்பான். ஆனாலும் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நிராகரித்தவனை நினைத்துப் பார்த்து அவனுடைய நிலையை அறிந்துகொள்ள விரும்புவான். அவன் நிராகரித்தவனைக் காணும்போது தான் அடைந்த வெற்றியையும் அருட்கொடைகளையும் எண்ணி இன்னும் பெருமகிழ்ச்சியடைவான்.

பின்னர் அல்லாஹ் கூறுகிறான்: ‘இந்த விருந்து சிறந்ததா அல்லது ஸக்கூம் மரமா? நாம் அதனை அக்கிரமக்காரர்களுக்கு ஒரு சோதனையாக ஆக்கியுள்ளோம். அது நரகத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்படும் மரமாகும். அதன் குலைகள் ஷைத்தான்களின் தலைகளைப் போன்று இருக்கும். (62-65)’

ஸக்கூம் மரம்குறித்து திருக்குர்ஆனின் பல இடங்களில் குறிப்புகள் வந்துள்ளன. அல்வாகிஆ என்ற அத்தியாயத்தில் இவ்வாறு வந்துள்ளது: ‘வழிகேடர்களே, நிராகரிப்பாளர்களே, நீங்கள் கள்ளி மரத்திலிருந்து உண்பீர்கள். (56:51,52)’

அத்துஃகான் என்ற அத்தியாயத்தில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது: ‘ஸக்கூம் மரம்தான் பாவிகளின் உணவாகும். அது எண்ணெயின் கசடைப் போன்று இருக்கும். வெந்நீர் கொதிப்பதைப் போல வயிற்றினுள் கொதித் துக்கொண்டிருக்கும். (44:43-44)’

அல்இஸ்றா என்ற அத்தியாயத்தில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது: ‘குர்ஆனில் கூறப்பட்ட சபிக்கப்பட்ட மரம் ... (17:60)’

இது பாலைவனத்தில் முளையும் ஒரு மரம் என்று கூறப்படுகிறது. பஞ்சம் நிறைந்த பிரதேசங்களில் வெளிப்படும் இந்த மரங்கள் கெட்ட வாடையையும் சிறிய இலைகளையும் விஷம் கொண்ட பாலையும் கொண்டுள்ளன. அந்தப் பால் மனிதனின் தோலில் பட்டாலே தோல் வீங்கி, பெரும்பாலும் அவனது மரணத்துக்கு அது காரணமாகிவிடும். இது ஓர் உதாரணம்தான். நரகத்தின் மரங்கள் பசுமையானதாகவோ நல்ல கனிகளைத் தரக்கூடியதாகவோ ஒருபோதும் இருக்காது. மாறாக, மோச மான சுவையைக் கொண்டதாகவும் பார்ப்பதற்கு அருவருப்பானதாகவும் தான் இருக்கும். ஓர் அழகான மரம் காய்ந்துவிடும்போது அது எரிப்பதற்கு மட்டுமே தகுதியானதாக ஆகிவிடுகிறது. அல்லாஹ்வின் ஆச்சரிய

மளிக்கும் ஆற்றல்களில் ஒன்று, அவன் கிளைகளையும் இலைகளையும் வேர்களையும் எரிவதற்குத் தகுதியானவையாக ஆக்கியுள்ளான். பசுமையான மரத்திலிருந்து எரியும் நெருப்பையும் அவன் ஏற்படுத்தியுள்ளான்.

ஸக்கூம் மரத்தை அல்லாஹ் நரகவாசிகளின் உணவாக ஆக்கியுள்ளான். 'அவர்கள் அதனையே தின்று வயிறுகளை நிரப்பிக்கொள்வார்கள். பின்னர், அவர்களுக்குக் கொதிக்கின்ற நீர் கலந்து கொடுக்கப்படும். (66,67)' இந்த வதைக்கும் வேதனை எதனால்? 'அவர்கள் தம் முன்னோர்களை வழிகேட்டில் கண்டார்கள். ஆயினும், அவர்களின் அடிச்சுவட்டிலேயே விரைந்து சென்றார்கள். (69,70)'

முன்னோர்கள் விட்டுச்சென்ற கொள்கைகளை, பழக்கவழக்கங்களை ஆராயாமல் அப்படியே குருட்டுத்தனமாகப் பின்பற்றுவது வதைக்கும் வேதனையின் பக்கம் மனிதர்களை இட்டுச்சென்றுவிடும். உண்மையில் மனிதர்களில் பெரும்பாலோர் தங்கள் முன்னோர்களிடமிருந்து பெற்றவற்றை அப்படியே பின்பற்றுகிறார்கள். அவற்றுக்கு எதிரான கொள்கைகளுடன், அமைப்புகளுடன் சண்டையிடுகிறார்கள். அவற்றை எவ்வித ஆய்வுக்கும் ஒப்பீட்டுக்கும் உட்படுத்துவதில்லை. தங்களை எதிர்ப்பவர்களைக் கொலைசெய்யவும் தங்களுக்கு எதிரான கொள்கைகளைத் தடம் தெரியாமல் அழிப்பதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. 'இவர்களுக்கு முன்னரும் இவர்களுடைய முன்னோர்களில் பெரும்பாலோர் வழிகெட்டிருந்தார்கள். நாம் அவர்களிடையே எச்சரிக்கை செய்வோரை அனுப்பி வைத்தோம். எச்சரிக்கப்பட்டோரின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பாரும். (71-73)'

இந்த அத்தியாயத்தின் மத்தியில் ஆறு தூதுத்துவங்களைக் குறித்து குறிப்பிடப்படுகின்றன. நபியவர்களுக்கு ஆறுதலாக அமையும் பொருட்டும் அவர்களின் உள்ளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டும் வஹீயின் மூலம் அந்தச் சம்பவங்கள் நபியவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன.

அவர்களில் முதலாமவர் நூஹ். அவரே மனவுறுதிமிக்க தூதர்களில் முதலாமவரும் ஆவார். அல்லாஹ்வுக்காக அவர் பெரும் சிரமங்களைச் சகித்துக்கொண்டார். இரண்டாமவர் நமக்கு முஸ்லிம்கள் என்று பெயரிட்ட, இயல்பின் அடித்தளங்களை அமைத்துத் தந்த இப்றாஹீம். மூன்றாமவர் மூசா. அவர் கொண்டுவந்த மார்க்கம் கொள்கையையும் சட்டத்தையும் ஆட்சியையும் உள்ளடக்கியதாக இருந்தது. அது நபியவர்களுக்கு வழங்கப்பட்ட மார்க்கத்துக்கு ஒப்பானது. இந்த மூவரும் அடித்தளங்களைப் போன்றவர்கள். இவர்களிடமிருந்தே மற்ற மூவரும் வெளிப்படுகிறார்கள்.

 லூத் இப்றாஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றியவர். அவருடைய சகோதரர் மகனாவார்.

இல்யாஸும் யூனுஸும் இஸ்றாயீலின் மக்களுக்கு அனுப்பப்பட்ட தூதர்களில் உள்ளவர்களாவர். மூசாவுக்கு அருளப்பட்ட தவ்றாத்தையே இவர்கள் இருவரும் வேதமாகக் கொண்டிருந்தனர்.

இங்கு நூஹின் சம்பவம் அதன் முடிவிலிருந்தே தொடங்குவது கவனிக்கத்தக்க ஒன்றாகும். அவர் தொள்ளாயிரத்து ஐம்பது வருடங்கள் வரை தம் சமூகத்தை அழைத்துக்கொண்டிருந்தார். புறக்கணிப்பையும் நெருக்கடியையும் தவிர வேறு எதையும் அவர் அவர்களிடமிருந்து பெறவில்லை. கடைசியில் தோல்வியை உணர்ந்தபோது அவர் இவ்வாறு பிரார்த்தித்தார்: 'என் இறைவா, நான் ஒடுக்கப்பட்டுள்ளேன். ஆகவே எனக்கு உதவிசெய்வாயாக.' உதவியும் வந்தது.

பின்வரும் பிரார்த்தனையைக் கொண்டு இந்தச் சம்பவம் தொடங்குகிறது:

> நூஹ் நம்மிடம் பிரார்த்தித்தார். மிகச் சிறந்த முறையில் நாம் அவருக்குப் பதிலளித்தோம். நாம் அவரையும் அவருடைய மக்களையும் பெரும் துன்பத்திலிருந்து காப்பாற்றினோம். அவருடைய சந்ததியினரை மட்டும் எஞ்சியிருக்கச் செய்தோம். பின்னர் தோன்றிய தலைமுறைகளில் அவரது பெயரையும் புகழையும் நிலைத்திருக்குமாறு விட்டுவைத்தோம். உலக மக்களில் நூஹின் மீது சாந்தி உண்டாகட்டும். (75-79)

அல்லாஹ் நூஹின் புகழை நிலைத்திருக்கச் செய்தான். அவருடைய எதிரிகளை அழித்தபிறகு அவன் கூறினான்: 'நூஹே, நீரும் உம்முடன் இருக்கின்ற சமூகமும் நம்மிடமிருந்து அமைதியையும் அருள் வளங்களையும் பெற்று இறங்குவீர்களாக. (11:48)'

நூஹ் தம் சமூகத்துக்கு அனுப்பப்பட்ட தூதராக இருந்தார் என்பதையும் அவர்களுக்கு வந்த தண்டனை அவர்களை மட்டுமே தாக்கியது என்பதையும் எகிப்து, பாரசீகம், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, இன்னபிற நாடுகள் ஆகியவற்றுடன் அந்தத் தண்டனைக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதையும் நான் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருந்தேன்.

நூஹைப் போன்று இப்றாஹீமும் ஓரிறைக் கொள்கையைக் கொண்டு எழுந்தார். சிலை வழிபாடு ஒரு பெரும் வழிகேடு என்பதற்கான ஆதாரங்களைத் தம் சமூகத்துக்கு எடுத்துரைத்தார். பின்வரும் வசனத்தைக் கொண்டு அவரது சம்பவம் தொடங்குகிறது:

அவர் நட்சத்திரங்களைப் பார்த்தார். 'நான் நோயுற்றிருக்கிறேன்' என்று கூறினார். ஆகவே அவர்கள் அவரை விட்டுச் சென்று விட்டார்கள். அவர் அவர்களின் தெய்வங்களிடம் சென்று கேட்டார், 'நீங்கள் உண்ண மாட்டீர்களா? உங்களுக்கு என்ன நேர்ந்தது, ஏன் நீ ங்கள் பேசுவதில்லை?' (88-92)

சிலை வழிபாடு ஒரு மூடநம்பிக்கை என்பதை தம் சமூக மக்களுக்கு உணர்த்த இப்றாஹீம் நாடினார். ஆகவே, நோயுற்றிருப்பதைப் போன்று தம்மைக் காட்டிக்கொண்டார். மக்கள் அவரைத் தனியாக விட்டு விட்டார்கள். பின்னர், சிலைகளின் பக்கம் சென்று அவற்றை உடைக்க ஆரம்பித்தார். 'அவர்கள் பெரிய சிலையின் பக்கம் திரும்பி வரக்கூடும் என்பதால் அச்சிலைகளில் அதனைத் தவிர மற்றவை அனைத்தையும் அவர் துண்டு துண்டாக்கிவிட்டார். (21:58)' கோடாரியைப் பெரிய சிலை யின் கழுத்தில் மாட்டினார், அதுதான் மற்ற சிலைகளை உடைத்து விட்டது என்று கூறுவதற்காக.

அந்த மக்களின் மடத்தனத்தை, அவர்கள் எந்த ஆற்றலுமற்ற கற் களைத்தான் வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுக் குப் புரியவைப்பதற்காகவே இப்றாஹீம் இவ்வாறு திட்டம் தீட்டினார். அவர் தம் சமூகத்திடம் கூறினார், 'அந்தப் பெரிய சிலைதான் இப்படி யெல்லாம் செய்தது.' அவர் பொய் சொல்லவில்லை. மாறாக, அவர் களுக்குப் பாடம் புகட்டுகிறார்.

இப்றாஹீம் மூன்று முறை பொய் சொன்னார் என்று ஓர் அறிவிப்பில் காணப்படுகிறது. அதில் இந்தச் சம்பவமும் ஒன்று. இது தவறான புரித லின் விளைவேயாகும். முதலில் வேதக்காரர்களிடம்தான் இந்தத் தவ றான நம்பிக்கை பரவியது. பின்னர் அது நம்முடைய அறிவிப்புகளிலும் ஊடுருவிவிட்டது. ஆய்வாளர்கள் இதனைச் சாத்தியமற்ற ஒன்றாகக் கருதுகிறார்கள். இப்றாஹீம் கண்ணியமான இறைத்தூதர். இதுபோன்ற புனைவை அவர் பக்கம் இணைக்கக் கூடாது.

இப்றாஹீமின் வாழ்க்கையில் நடைபெற்ற மிக உன்னதமான சம்பவம், அல்லாஹ்வின் விசயத்தில் தந்தை மகனுடனும் மகன் தந்தையுடனும் நடந்துகொண்ட அணுகுமுறைதான். நீண்ட பிரார்த்தனைக்குப் பிறகு முதிய வயதில் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் இளமை பரு வத்தை அடைந்தபோது அவர் தம் மகனைக் கொண்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். அந்த மகனை அறுத்துப் பலியிடும்படி அல்லாஹ் அவருக்கு வஹீ அறிவித்தான்.

அவருடன் சேர்ந்து நடந்து திரியும் வயதை அம்மகன் அடைந்த போது அவர், 'என் அருமை மகனே, உன்னை அறுத்துப் பலியிடு வது போன்று நான் கனவு கண்டேன். இதுகுறித்து உன் கருத்து என்ன என்பதை யோசித்துக் கூறு' என்று கூறினார். (102)

இந்த உலகில் தமக்கு மிகவும் பிரியமான தம் மகனை அறுக்கும்படி கட்டளையிடப்பட்ட ஒரு முதியவரின் நிலை எப்படியிருக்கும்?

வேறு யாராவது ஒருவர் தம் மகனுக்கு வேதனையளித்தால் அந்தக் கவலையே அவரைக் கொன்றுவிடும். எப்படி அவரே அவனை அறுப்பார்?

ஆனால், இப்றாஹீம் அல்லாஹ்வின் அடியாராகவும் அவனுடைய தூதராகவும் அவனுடைய நண்பராகவும் இருந்தார். தம் வாழ்க்கையில் அவனுடைய திருப்தியை அடைவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டி ருந்தார். அவரால் அவனுடைய கட்டளைக்கு மாறாகச் செயல்பட முடி யாது, அது எவ்வளவுதான் கடினமானதாக இருந்தாலும் சரியே. தம் மகனுடன் இதுகுறித்து பேசினார். மகனும் தந்தையைப் போன்று உறுதி யும் நேர்மையும்மிக்க நல்ல மனிதராக இருந்தார். அவர் கூறினார்: 'என் தந்தையே, உங்களுக்குக் கட்டளையிடப்பட்டபடியே செய்யுங்கள். அல் லாஹ் நாடினால் நீங்கள் என்னைப் பொறுமையாளனாகக் காண்பீர்கள். (102)'

இருவரும் ஒன்றிணைந்து இந்தக் கட்டளையைச் செயல்படுத்த நாடிய போது அவர் தம் மகனின் கழுத்தில் கத்தியை வைத்தார். இறையுதவி வந்தது. ஒரு பலிப்பிராணியும் இறங்கியது.

அப்போது நாம் அவரை 'இப்றாஹீமே!' என்று அழைத்து, 'நீர் கண்ட கனவை உண்மைப்படுத்திவிட்டீர்.' என்று கூறினோம். இவ்வாறே நாம் நன்மைசெய்வோருக்குக் கூலி வழங்குகிறோம். நிச்சயமாக இது ஒரு தெளிவான சோதனையாக இருந்தது. (104-106)

மனிதர்களுக்கு அல்லாஹ் வழங்கும் சோதனை மிக நீளமானது என்ப தையும் ஈமான் என்பது வெறுமனே நாவால் உச்சரிக்கப்படும் வார்த்தை அல்ல, அது முழுமையான கீழ்ப்படிதலும் பொறுமையும் ஆகும் என்ப தையும் இந்தச் சம்பவம் உணர்த்துகிறது.

இந்த அத்தியாயத்தில் உள்ள மற்ற சம்பவங்களையும் கடந்து நாம் பின்வரும் வசனத்தில் சற்று நின்றுவிட்டுச் செல்வோம்: 'நீர் அவர்களிடம் கேளும், உங்கள் இறைவனுக்குப் பெண் மக்களையும் உங்களுக்கு ஆண் மக்களையுமா விரும்புகிறீர்கள்? (149)' இது அவர்களிடம் கேட்கப்படும் இரண்டாவது கேள்வியாகும்.

முதல் கேள்வி: 'நீர் நிராகரிப்பாளர்களிடம் கேளும், அவர்களைப் படைப்பது அதிகச் சிரமமானதா அல்லது நாம் படைத்த வேறு படைப்புகளா? நாம் அவர்களைப் பிசுபிசுப்பான களிமண்ணிலிருந்து படைத்தோம். (11)' இந்தக் கேள்வி பிரபஞ்சத்தின் பல பாகங்களையும் குறித்த செய்தியை, படைப்பாளனின் மகத்துவம் குறித்த செய்தியை எடுத்துரைத்த பிறகு இடம்பெறுகிறது. இறைவனைக் குறித்து இணைவைப்பாளர்கள் மிகப் பலவீனமான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இறைவனை மதிப்பிட வேண்டிய முறைப்படி மதிப்பிடவில்லை. மாறாக, அவனை பலவீனமான பெண்மக்களின் தந்தையாகக் கருதினார்கள்.

அவர்கள் தங்களுக்குப் பெண்குழந்தைகள் பிறப்பதை வெறுப்பவர்களாகவும் அந்தக் குழந்தைகளை உயிருடன் புதைப்பவர்களாகவும் இருந்தார்கள். ஆனாலும் வானவர்களைப் பெண்களாகச் சித்தரித்து அவர்களை அல்லாஹ்வின் மகள்கள் என்றார்கள். 'அல்லது, நாம் வானவர்களைப் பெண்களாகப் படைத்தோமா? அவர்கள் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்களா? (150)'

அல்லாஹ்வுக்கு மனிதர்களிலிருந்தோ ஜின்களிலிருந்தோ வானவர்களிலிருந்தோ எந்தக் குழந்தையும் இல்லை. நன்மைக்கென்று ஒரு இறைவனும் தீமைக்கென்று ஒரு இறைவனும் இல்லை. 'அவன் ஒரே இறைவன்தான். (16:51)' நன்மையின் கடவுளும் தீமையின் கடவுளும் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்று கூறுவது வடிகட்டிய பொய்யும் மடத்தனமும் ஆகும். வழிகேடர்களுக்கு மத்தியில்தான் இத்தகைய மூடநம்பிக்கைகள் பரவும்.

வேதக்காரர்களைப் போன்று எங்களுக்கும் வேதம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் அவர்களைவிட மிகச் சிறந்தவர்களாக இருப்போம் என்று அறபுகள் கூறிவந்தார்கள். 'அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள், முன்னோர்களிடமிருந்து வந்துள்ள ஏதேனும் அறிவுரை எங்களிடம் இருந்திருந்தால் நாங்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களாக இருந்திருப்போம். (167-169)'

ஆனால், அவர்களிடம் வேதம் வந்தபோது அதனை அவர்கள் நிராகரித்தார்கள். அதற்குப் பிறகு முந்திக்கொண்டவர்கள் நம்பிக்கை கொண்டார்கள். தெளிவான இந்த வேதத்தைக் கொண்டு உலகை ஆட்சிசெய்தார்கள்.

அவர்களுக்குப் பின் வந்தவர்கள் அதன் வழிகாட்டல்களைவிட்டு விலகிச்சென்றார்கள். முந்தையவர்களுக்கு நிகழ்ந்ததே அவர்களுக்கும்

*நிகழ்ந்தது. 'நாம் அனுப்பிய அடியார்களுக்காக நமது வாக்கு முந்தி விட்டது. நிச்சயமாக அவர்கள் உதவிசெய்யப்படுவார்கள். நம் படைகளே மேலோங்கி நிற்கும்.* (171-173)'

*ஆனால், சோதனை நிறைவடைந்தபிறகு வாக்களிக்கப்பட்ட உதவி வந்துசேரும். ஆகவே அவன் கூறினான்:*

> *சில காலம்வரை அவர்களைப் புறக்கணிப்பீராக. அவர்களை நீர் பார்த்துக்கொள்ளும். விரைவில் அவர்களும் பார்த்துக் கொள் வார்கள். நம் வேதனைக்காகவா அவர்கள் அவசரப்படுகிறார்கள்? அது அவர்களின் முற்றத்தில் இறங்கிவிட்டால் எச்சரிக்கப்பட் டோரின் காலைப் பொழுது மோசமாகிவிடும்.* (174-177)

*இந்தக் காலம் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறது. அவன் கூறு கிறான், 'ஆகவே, சில காலம்வரை அவர்களைப் புறக்கணிப்பீராக.* (178)' *பொறுத்திருக்க வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை.*

❖ ❖ ❖

அத்தியாயம் 38

# ஸாத்

*'ஸாத். அறிவுரை நிறைந்த குர்ஆனின் மீது சத்தியமாக ... (1)'* இந்தக் குர்ஆன் உயர்ந்த படித்தரமும் கண்ணியமும் உடையது. இதனைப் பின்பற்றுவோருக்கு அல்லாஹ் இந்த இரு அருட்கொடைகளையும் வழங்குகிறான். வேறொரு இடத்தில் அவன் கூறுகிறான்: *'நாம் உங்களுக்கு ஒரு வேதத்தை அருளியுள்ளோம். அதில் உங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? (21:10)'*

இந்த அறிவுரை மறதியையும் அலட்சியத்தையும் போக்கக் கூடியது. விழிப்புணர்வை ஊட்டக்கூடியது. *'நாம் இந்தக் குர்ஆனை அறிவுரை பெறும் பொருட்டு எளிதாக்கியுள்ளோம். ஆகவே, அறிவுரைபெறுபவர் யாரேனும் இருக்கிறாரா? (54:40)'*

ஆனாலும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் கர்வம் கொள்வோரும் இருக்கிறார்கள். அவர்களிடம் சத்தியம் எடுத்துரைக்கப்பட்டால் அவர்களின் கர்வம் அவர்களைப் பாவத்தில் நிலைநிறுத்திவிடுகிறது. அவர்கள் இறுதியில் அழிவையே சந்திப்பார்கள், காலம் எவ்வளவுதான் நீண்டாலும் சரியே.

> *அவர்களிலிருந்தே எச்சரிப்பவர் அவர்களிடம் வந்ததற்காக ஆச்சரியப்பட்டு, 'இவர் சூனியக்காரர்; பொய்யர்.' என்று கூறினார்கள். 'அவர் அத்தனை கடவுள்களையும் ஒரே கடவுளாக ஆக்கிவிட்டாரா? இது மிகவும் ஆச்சரியமான விசயம்தான்!' (4,5)*

தூதருக்கு ஆறுதலாகவும் அவரை உறுதிப்படுத்தும் பொருட்டும் கூறப்பட்டது: *'அவர்கள் கூறுவதை நீர் சகித்துக்கொள்ளும். வலிமைமிக்க நம் அடியார் தாவூதை நினைவுகூரும். அவர் நம்மிடமே திரும்புபவராக இருந்தார். (17)'*

*இந்த விசயம் கவனத்துக்குரியது. தாவூதும் சுலைமானும் நபியவர்கள் முன்மாதிரியாகக் கொள்ளும் அளவுக்கு நபியவர்களைவிட அதிகச் சிரமங்களை எதிர்கொண்டார்களா?*

*பதில் இதுதான்: தூதர்களில் சிலர் அரசர்களாகவும் சிலர் பொது மக்களாகவும் இருந்தார்கள். 'தூதர்களில் அரசர்களாக இருந்தவர்கள் எவ்வித சிரமத்தையும் அனுபவித்திருக்க மாட்டார்கள். பலவீனமான, ஏழ்மை நிலையில் இருந்த தூதர்கள் அதிகமாகச் சிரமம் அனுபவித் திருப்பார்கள்.' என்ற எண்ணம் நமக்கு ஏற்படலாம்.*

*அனைவரும் சமமாகவே சோதனைகளை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அல்லாஹ் தன் தூதருக்குத் தெளிவுபடுத்துகிறான். மனிதர் களில் தூதர்களே மிக அதிகமாகச் சோதிக்கப்பட்டுள்ளார்கள். அரசர் களாகவும் தூதர்களாகவும் இருந்த தாவூதையும் சுலைமானையும் குறிப் பிட்டு, அவர்கள் எதிர்கொண்ட சோதனைகளை அல்லாஹ் தன் தூத ருக்குத் தெளிவுபடுத்துகிறான்.*

*தாவூதின் சம்பவம் இவ்வாறு தொடங்குகிறது:*

> *சுவர் ஏறி வணக்கஸ்தலத்தில் புகுந்துவிட்ட வழக்கை உடையவர் களின் செய்தி உமக்கு வந்ததா? அவர்கள் தாவூதிடம் வந்தபோது அவர்களைக் கண்டு அவர் திடுக்கிட்டார். அவர்கள் கூறினார்கள், 'பயப்படாதீர். எங்கள் இருவருக்கும் வழக்கு உள்ளது. எங்களில் ஒருவர் மற்றவர்மீது அநீதி இழைத்துள்ளார். எனவே, எங்க ளிடையே நியாயமாகத் தீர்ப்பளிப்பீராக ...'* (21,22)

*பாதிக்கப்பட்டவர் சம்பவத்தை எடுத்துரைத்தார்: 'இவர் என் சகோ தரர். இவரிடம் தொண்ணூற்று ஒன்பது செம்மறியாடுகள் உள்ளன. என்னிடமோ ஒரேயொரு ஆடுதான் உள்ளது. அதையும் என்னிடமே தந்துவிடு என்று இவர் கூறுகிறார். இவர் வாதத்தில் என்னை மிகைத்து விட்டார்.* (23)*' அநியாயக்காரன் அமைதியாக இருந்தான். தன் தவறை ஒத்துக்கொண்டான். அவர்களிடம் தாவூது கூறினார்: 'உமது ஆட்டைத் தமது ஆடுகளுடன் சேர்த்துக்கொள்ளக் கோரியதனால் நிச்சயமாக இவர் உமக்கு அநீதி இழைத்துவிட்டார். கூட்டாளிகளில் பெரும்பாலோர் ஒருவர் மற்றவர்மீது வரம்புமீறுபவர்களாகவே இருக்கிறார்கள் ...* (24)*' இந்த வழக்கின் நோக்கத்தைத் தாவூது உணர்ந்துகொண்டார். அவருக்குப் பல மனைவிகள் இருந்தார்கள். இருந்தும் அவர் இன்னொரு யுவதியை மணமுடிக்க நாடி தூது அனுப்பினார். அந்தப் பெண்ணுக்கு இன்னொரு மனிதரும் மணமுடிப்பதற்காகத் தூது அனுப்பியிருந்தார். அரசராகவும்*

தூதராகவும் இருக்கும் ஒருவரிடம் அவர் எப்படிப் போட்டியிட முடியும்? தாவூது அவளை மணமுடித்துக்கொண்டார். மற்றொருவரோ வெறுங் கையுடன் திரும்பிச்சென்றார்.

இந்தச் செயலை அல்லாஹ் விரும்பவில்லை. அவரது தவறையும் சுயநலனையும் மேற்கண்ட வழக்கின் மூலம் அவன் அவருக்குப் புரிய வைத்தான்.

> உண்மையில் நாம் அவரைச் சோதித்தோம் என்பதை அவர் புரிந்து கொண்டபோது தம் இறைவனிடம் மன்னிப்பு கோரினார். சிரம் பணிந்து அவனிடமே திரும்பினார். நாம் அவரது தவறை மன்னித்து விட்டோம். நிச்சயமாக நம்மிடத்தில் அவருக்கு நெருக்கமும் நல்ல முடிவும் உள்ளது. (24,25)

தாவூது நன்றி செலுத்தும் செல்வந்தர்களில் ஒருவராக இருந்தார். அல்லாஹ் அவருக்கு அனுமதித்தவற்றில்தான் அவர் விசாலத்தை நாடி னார். அவருக்கு முன்னரே ஒருவர் அந்தப் பெண்ணுக்குத் தூது அனுப்பி யிருக்கிறார் என்று தெரிந்தும் அவரும் தூது அனுப்புவது அவருக்கு உகந்ததல்ல. ஒருவேளை அவரே முந்தியவராக இருந்திருந்தாலும் பிந்திய வருக்காக விட்டுக்கொடுப்பதே அவருக்குச் சிறந்தது. விவகாரம் எப்படி யிருப்பினும் அல்லாஹ் அவருக்கு அவரது தவறைப் புரியவைத்தான். அவன் அவரை மன்னித்தான். பின்னர், அவரது அந்தஸ்தை உயர்த்தும் இறை அறிவுரைகள் அவருக்கு வழங்கப்படுகின்றன.

> நாம் கூறினோம், ‘தாவூதே, நாம் உமக்குப் பூமியில் ஆட்சியதி காரத்தை வழங்கியுள்ளோம். ஆகவே, மனிதர்களிடையே நியாய மாகத் தீர்ப்பளிப்பீராக. மனஇச்சையைப் பின்பற்றாதீர். அது உம்மை அல்லாஹ்வின் பாதையைவிட்டுப் பிறழச்செய்துவிடும்.’ (26)

அரசராகவும் தூதராகவும் இருந்த இந்த அடியார் தவறுசெய்தார். தம் கண்ணீரால் அந்தத் தவறைக் களைந்தார். அழைப்பின் பாதையில் அவ ருக்குக் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால், அல்லாஹ் அவருக்கு அளித்த அருட்கொடைகள் அவன் பக்கம் மீளக்கூடியவராக அவரை ஆக்கிவிட்டன. ஆட்சியதிகாரமும் பதவியும் இந்த அனுபவங்களை எல்லாம் அனுபவிக்காமல் அவரைக் காத்துவிட்டனவா?

நிராகரிக்கப்படுதல், பொய்யரெனத் தூற்றப்படுதல் என முஹம்மது நபி எதிர்கொண்ட சிரமங்கள் இவற்றை விட இலகுவானவைதாம். அல்லாஹ் முஹம்மதுடைய அந்தஸ்தை உயர்த்தி அவருக்கு ஒரு வேதத்தை வழங்கியுள்ளான். அது முந்தையவர்கள் மற்றும் பிந்தைய

வர்களுடைய வேதங்களையும் வழிகேட்டிலிருந்து பாதுகாக்கும், அல்லாஹ்வின் பக்கம் இட்டுச்செல்லும் ஞானங்களையும் உள்ளடக்கி யுள்ளது.

> நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோரை நாம் பூமியில் குழப் பம்செய்வோரைப் போன்று ஆக்கிவிடுவோமா? அல்லது, இறை யச்சமுடையோரைக் குற்றவாளிகளைப் போன்று ஆக்கிவிடு வோமா? இது நாம் உமக்கு அருளியுள்ள பாக்கியம்மிக்க வேத மாகும். இது, அவர்கள் அதன் வசனங்களைச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் அறிவுடையோர் இதன் மூலம் அறிவுரைபெற வேண்டும் என்பதற்காகவும்தான். (28,29)

யூதர்கள் தம் தூதரின் மீது விபச்சாரக் குற்றச்சாட்டையும் கொலைக் குற்றச்சாட்டையும் சுமத்தினார்கள். அவர் அவ்ரியா என்ற பெண்ணுடன் விபச்சாரம்செய்தார் என்றும் அவளுடைய கணவனைத் திட்டமிட்டுக் கொன்றுவிட்டு அவளை அடைந்துகொண்டார் என்றும் அவர்கள் அவ தூறுகளை அள்ளி வீசுகிறார்கள். ஆனால், முஹம்மதுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆன் அந்தக் கண்ணியமான மனிதரைக் குறித்து உண்மையைக் கூறியது. மற்றவற்றை அவதூறுகள் என அடித்துக் கூறியது.

தூதர்களாகவும் அரசர்களாகவும் இருந்தவர்கள் மற்ற மனிதர்களைப் போன்று இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களால் அடித்துச் செல் லப்படுபவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் தங்களிடம் உள்ள அனைத்தை யும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகச் செலவுசெய்தார்கள்.

சுலைமான் யமனில் பல்கீஸ் அரசியை எதிர்த்துப் போரிடுவதற்காகத் தம்முடைய படைகளைத் தயார்படுத்திக்கொண்டிருப்பதைக் காண்கி றோம். சூரியனை வணங்கிக் கொண்டிருந்த அவர்களை அல்லாஹ் ஒருவனின் பக்கம் திருப்ப வேண்டும் என்பதே அந்தப் புறப்பாட்டின் நோக்கமாக இருந்தது. ‘என்னிடம் ஆணவம் கொள்ளாதீர்கள். கட்டுப் பட்டவர்களாக என்னிடம் வந்துவிடுங்கள். (27:31)’

இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: ‘நாம் தாவூதுக்குச் சுலைமானை வழங்கினோம். சுலைமான் மிகச் சிறந்த அடியாராகவும் நம் பக்கமே திரும்புபவராகவும் இருந்தார். (30)’ அல்லாஹ்வின் பாதை யில் போரிடுவதற்காகச் சுலைமான் ஒரு பெரும் படையைத் தயார் செய்தார். அவர் ‘குதிரைகளின் பக்கம் அவை தயார்நிலையில் இருக் கின்றனவா?’ என்பதை அறிய சென்றார். கொஞ்சம் கூடுதலாக நேரம் ஆகியிருக்கலாம். ஆனாலும் ஜிஹாதுக்காகக் குதிரைகளைத் தயார்

படுத்துவது இறை நெருக்கத்தைப் பெற்றுத்தரும் செயல்பாடு என்பதை அவர் அறிந்திருந்தார்.

> வேகமாக ஓடக்கூடிய உயர்தரமான குதிரைகள் மாலை நேரத்தில் அவர் முன்னால் கொண்டுவரப்பட்டபோது அவர், 'சூரியன் மறையும்வரை என் இறைவனின் நினைவைவிட நான் செல்வங்களை அதிகம் நேசித்து விட்டேன். அந்தக் குதிரைகளை என்னிடம் திரும்பக் கொண்டுவாருங்கள்.' என்று கூறினார். பின்னர், அவற்றின் கெண்டைக்கால்களையும் பிடரிகளையும் தடவிக்கொடுத்தார். (31-33)

அன்பின் காரணமாகத்தான் அவர் தடவிக்கொடுத்தார். சில மூடர்கள் கூறுவதுபோல வாளைக் கொண்டு அவற்றின் பின்புறத்தை அவர் வெட்டவில்லை.

அந்தோ, என் சமூகமும் போர்க் கருவிகளை இவ்வாறு நேசிக்க வேண்டுமே! அப்படிச் செய்தால் அவர்கள் பெரும் இழிவிலிருந்து தப்பிவிடுவார்களே!

சுலைமானைக் குறித்து ஓர் அறிவிப்பு இடம்பெறுகிறது. ஒருநாள் அவர் தம்முடைய நூறு மனைவிகளுடனும் - தவ்றாத்தில் ஆயிரம் மனைவிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது - உடலுறவு கொள்ள வேண்டும் என்று நாடினார். அவர் கூறினார், 'நூறு மனைவியரும் அல்லாஹ்வின் பாதையில் போரிடும் நூறு போர்வீரர்களைப் பெற்றெடுப்பார்கள்.' அவர் நூறு மனைவியருடனும் உடலுறவு கொண்டார். ஒரேயொரு குழந்தை, அதுவும் குறையுடைய குழந்தைதான் பிறந்தது. பின்வரும் வசனம் இந்தச் சம்பவத்தையே குறிப்பிடுகிறது என்று இந்த அறிவிப்பைச் சரியென நம்புவோர் கூறுகிறார்கள்: 'நாம் சுலைமானைச் சோதித்தோம். அவரது அரியணையில் ஒரு சடலத்தைப் போட்டுவிட்டோம். அப்போது அவர் நம் பக்கம் திரும்பினார். (34)'

இந்த அறிவிப்பைக் குறித்து என்னிடம் வேறு கருத்து உள்ளது. அதற்கான ஆற்றலும் போதுமான நேரமும் ஓர் இரவில் கிடைத்துவிடாது என்று நான் கருதுகிறேன். அப்படியே இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் குழந்தை பிறக்கும் என்றும் ஒவ்வொரு குழந்தையும் போர்வீரராக உருவெடுக்கும் என்றும் கூற முடியாது. நடந்த சம்பவத்தை இன்னதென்று நாம் உறுதியாகக் கூற முடியாது.

சுலைமான் பேரரசராக இருந்தார். இங்கு நம் கவனத்தைக் கவர்வது, அவர் நல்ல முறையில் பணிவிடைசெய்தல், பணிவாக இறைவனை

வணங்குதல், விரைவாக அவன் பக்கம் திரும்புதல், ஆழமான அறிவு ஆகியவற்றின் காரணமாக இந்த அரசாட்சியைப் பெற்றுக்கொண்டார் என்பதுதான். அவருடைய இறைவன் அவரை இத்தகைய பண்புகளால் தான் வர்ணிக்கிறான். அவன் அவரைப் பற்றி, 'அவர் மிகச் சிறந்த அடி யாராக ... (30)' என்று கூறுவது, அவரது இறை அடிமைத் தனத்திலிருந்தும் அவனது அருட்கொடைகளை உணர்ந்துகொண்டு இன்னும் அதிகமாகக் கோருவதிலிருந்தும்தான் வெளிப்படுகிறது.

அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றான வஹ்ஹாபு - தாராளமாக வழங் கக் கூடியவன் - அவரது அகப்பார்வையைத் திறந்துவிட்டது. அவர், மனிதர்களும் மற்ற படைப்புகளும் உயர்ந்தோனின் சிறிய அருட் கொடைகளைக் கொண்டு திருப்தியடைந்து கொண்டிருப்பதையும் நல்லவர்களும் தீயவர்களும் அவனுடைய அருட்கொடைகளிலிருந்து பெற்றுக்கொண்டிருப்பதையும் கண்டார். அந்தப் பெரும் கடலின் ஒரு துளி தமக்கும் வேண்டுமென அவர் விரும்பினார். ஆகவே பிரார்த்தித்தார்: 'என் இறைவா, என்னை மன்னித்துவிடுவாயாக. எனக்குப் பின் யாரும் அடைய முடியாத ஓர் அரசாட்சியை எனக்குத் தருவாயாக. நிச்சயமாக நீயே மாபெரும் கொடையாளி. (35)'

அல்லாஹ்வின் கொடைக்கு வரம்பு கிடையாது. அது என்றும் குறை யாமல் பொங்கிக்கொண்டே இருக்கும் பெரும் கடல்.

மேற்கண்ட வசனத்துக்கு 'என் போட்டியாளர்கள் யாரும் அடைந்துவிட முடியாத அரசாட்சி.' என்று பொருள் கொள்வதற்கே நான் முன்னுரிமை யளிக்கிறேன். சுலைமானுடைய ஆட்சியைக் கைப்பற்றத் துடித்த பகை வர்களும் இருந்தார்கள். 'மனிதர்கள் யாருக்கும் கிடைக்காத ஓர் அரசாட்சி.' என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். 'ஆகவே, நாம் அவருக்குக் காற்றை வசப்படுத்திக் கொடுத்தோம். அது அவரது கட்டளைப்படி அவர் நாடிய திசையில் மென்மையாக வீசிக்கொண்டிருந்தது. ஜின்களில் கட்டடம் கட்டுவோர், முத்துக்குளிப்போர் ஆகியோரையும் சங்கிலி களால் பிணைக்கப்பட்டிருந்த வேறு சிலரையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம். (36,37)'

அவர் மரணிக்கும்வரை ஆட்சியதிகாரம் அவர் கைவசம் இருந்தது. இறுதியில் அவர் தம்முடைய சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தவாறே மர ணித்துவிட்டார். அவர்தான் ஜின்களையும் மனிதர்களையும் தன் கட்ட ளையைக் கொண்டு வசப்படுத்தியவர். இந்த உலகில் அவர் பெற்றதை விடச் சிறந்ததை மறுமையில் அளிப்பதாக அல்லாஹ் அவருக்கு வாக் களித்துள்ளான். 'நிச்சயமாக நம்மிடத்தில் அவருக்கு நெருக்கமும் நல்ல முடிவும் இருக்கிறது. (40)'

இந்த அத்தியாயம் மற்றுமொரு செல்வம் மிகுந்த ஒரு தலைவரின் சம்பவத்தையும் உள்ளடக்கியுள்ளது. பெரும் துன்பம் அவரைப் பீடித்து அவரது ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் அடித்துச்சென்றது. அவர் தான் அய்யூபு (அலை). 'நம்முடைய அடியார் அய்யூபை நினைவுகூர் வீராக. அவர் தம் இறைவனை நோக்கிப் பிரார்த்தித்து, ஷைத்தான் என்னைத் துயரத்திலும் வேதனையிலும் ஆழ்த்திவிட்டான் என்று கூறி னார். (41)'

ஷைத்தான் அல்லாஹ்வைக் குறித்து மோசமான எண்ணத்தையும் நிராசையையும் அவரது உள்ளத்தில் ஊசலாட்டங்களின் மூலம் ஏற்படுத்த நாடினான். ஏனெனில், ஷைத்தான்களால் மனிதர்களுக்கு உடல் ரீதியான நோய்களை ஏற்படுத்த முடியாது.

அல்அன்பியா என்ற அத்தியாயத்தில் வந்துள்ளது: 'அய்யூபையும் நினைவுகூரும். அவர் தம் இறைவனிடம், நோய் என்னைப் பீடித்து விட்டது. நீயே கருணையாளர்களில் எல்லாம் மாபெரும் கருணையாள னாக இருக்கிறாய் என்று இறைஞ்சினார் ... (21:83)'

இந்த ஊசலாட்டங்களை நீக்கும் பொருட்டுத் தன்னைத் துன்பங் களிலிருந்து விடுவிக்குமாறு அவர் இறைவனிடம் வேண்டினார். 'உம் காலால் அடிப்பீராக. இது குளிர்ந்த நீராகும். குளிப்பதற்கும் குடிப்பதற்கும் ஏற்றதாகும். (42)'

அல்லாஹ் அய்யூபுக்கு நிவாரணமளித்தான். 'நாம் அவருக்கு அவ ருடைய குடும்பத்தையும் அவர்களுடன் அவர்களைப் போன்றோரையும் நம் அருளாகவும் அறிவுடையோருக்கு அறிவுரையாகவும் வழங்கினோம். (43)' அறிவுடையோர்தாம் படிப்பினைகளின் மூலம் பயனடைகிறார்கள்.

பின்னர் அத்தியாயம் ஆறு இறைத்தூதர்களின் பெயர்களைக் குறிப் பிடுகிறது. அவர்களில் ஒருவரான இப்றாஹீம் மனவுறுதிமிக்க தூதர் களில் ஒருவராவார். அவருடைய மகன் இஸ்ஹாக், அவருடைய பேரன் யஅகூபு என அனைவரும் வலிமை, அகப்பார்வை என்ற இரு பண்பு களால் வர்ணிக்கப்படுகிறார்கள்.

இந்த வர்ணனை, 'மார்க்கம் என்பது ஆற்றலும் அகப்பார்வையும் ஆகும். அது பலவீனமோ மூடத்தனமோ அல்ல.' என்ற பொருளைத் தருகிறது.

> நாம் மறுமையை நினைவூட்டுவதற்காக அவர்களைத் தேர்ந் தெடுத்தோம். அவர்கள் நம்மிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நல் லோர்களில் உள்ளவர்களாவர். (46,47)

மற்ற மூவர் இஸ்மாஈல், அல்யசஉ, துல்கிஃப்ல் ஆவர். அனைவரும் நல்லோர்களில் உள்ளவர்களாக இருந்தார்கள்.

'அவர்கள் கூறுவதை நீர் சகித்துக்கொள்ளும். வலிமைமிக்க நம் அடியார் தாவூதை நினைவுகூரும். (17)' என்ற வசனம், நல்ல முறையில் நினைவு கூரப்படுவதும் அல்லாஹ் தன் அடியார்கள்மீது பொழியும் அருள்தான் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. அதன் மூலம் அல்லாஹ் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துகிறான். அவர்களுடைய கூலியையும் நிலைத்திருக்கச் செய்கிறான். நல்ல முறையில் நினைவுகூரப்படுவது மனிதனுக்கு வழங் கப்படும் இரண்டாவது வாழ்க்கை என்றும் கூறப்படுகிறது. ஒரு முஸ்லிம் தன்னுடைய செயல்பாட்டின் மூலம் அல்லாஹ்வின் திருப்தியை நாடு கிறான், மனிதர்களின் திருப்தியை அல்ல. அல்லாஹ் அவனை ஏற்றுக் கொண்டுவிட்டால் அவனை நேசிக்கிறான். மனித உள்ளங்களில் அவன் மீதான நேசத்தையும் நாவுகளில் அவனைக் குறித்த புகழ்மொழிகளையும் போட்டுவிடுகிறான். இது மட்டுமல்ல. மாறாக, அவனுக்கு முழுமையான கூலி காத்திருக்கிறது.

> இது அறிவுரையாகும். நிச்சயமாக இறையச்சமுடையோருக்கு நல்ல தங்குமிடம் இருக்கிறது. அவை நிலையான சுவனச் சோலைகளா கும். அவற்றின் வாசல்கள் அவர்களுக்காகத் திறந்தே இருக்கும். அங்கே அவர்கள் இருக்கைகளில் சாய்ந்தவர்களாக ஏராளமான கனிகளையும் பானங்களையும் கேட்டுக்கொண்டிருப்பார்கள். (49-51)

அல்லாஹ்வின் எதிரிகளும் அவனது அழைப்பை நிராகரித்தவர்களும் வேறு வகையான கூலியைப் பெறுவார்கள். 'வரம்புமீறுவோருக்குக் கெட்ட இருப்பிடம்தான் உண்டு. நரகத்தில் அவர்கள் புகுவார்கள். அது மிகவும் மோசமான தங்குமிடமாகும். (55,56)'

திருக்குர்ஆன் தன் வழக்கப்படி மறுமைநாளின் காட்சிகளையும் அங்கு தலைவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றிய தொண்டர்களுக்கும் மத்தியில் நடக்கும் உரையாடல்களையும் குறிப்பிடுகிறது. அல்லாஹ் நரகவாசிகளைப் பார்த்துக் கூறுவான்: 'இதோ ஒரு படை உங்களுடன் முண்டியடித்துக் கொண்டு நுழைகிறது. அவர்களுக்கு எந்த வரவேற்பும் இல்லை. அவர்கள் நெருப்பில் பொசுங்கக்கூடியவர்கள்தாம். (59)'

முண்டியடித்துக்கொண்டு நுழையக்கூடியவர்கள் தொண்டர்களாவர். அவர்களுக்கு வரவேற்பளிக்க மறுப்பவர்கள் தலைவர்களாவர். ஏன் தலைவர்கள் தொண்டர்களை வரவேற்கவில்லை? அவர்கள்தானே

தொண்டர்களை நிராகரிப்பில் ஆழ்த்தினார்கள்? தொண்டர்கள் தலைவர்களைப் பார்க்கும்போதெல்லாம் கத்துவார்கள். அவர்கள் கூறுவார்கள், ‘அப்படியல்ல நீங்களும்தான். உங்களுக்கும் எந்த வரவேற்பும் இல்லை. நீங்கள்தான் இந்தக் கதிக்கு எங்களை ஆளாக்கினீர்கள். இது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். (60)’

அநியாயக்காரர்கள் உலகில் நடந்தவற்றை, பலவீனமான முஸ்லிம்களுடன் தாங்கள் எவ்வாறு நடந்துகொண்டோம் என்பதை நினைத்துப் பார்த்து இவ்வாறு கூறுவதைச் செவியுறும்போது நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்:

> ‘என்ன ஆயிற்று? உலகில் நாம் தீயவர்களாக எண்ணிக்கொண்டிருந்தவர்களை இங்கு காணவில்லையே!’ என்று அவர்கள் கேட்பார்கள். ‘அவர்களை நாம் பரிகாசம் செய்துகொண்டிருந்தோமா? அல்லது, பார்வைகள் அவர்களைவிட்டும் பிறழ்ந்துவிட்டனவா?’ (62,63)

அந்தப் பலவீனமான முஸ்லிம்கள் ‘சுவனங்களிலும் ஆறுகளிலும் இருப்பார்கள் ... (54:54)’

நரகவாசிகளில் தர்க்கம்செய்யக்கூடியவர்கள் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பார்கள். ‘நிச்சயமாக இது உண்மையானதாகும். இவ்வாறு நரக வாசிகள் ஒருவருக்கொருவர் தர்க்கம்செய்துகொள்வார்கள். (64)’

இந்த அத்தியாயத்தின் இறுதிப் பகுதி ஆரம்பப் பகுதியோடு இணைகிறது: ‘நீர் கூறும், நான் எச்சரிக்கைசெய்பவன்தான். அடக்கியாளும் ஏகனான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. (65)’ இது அல்லாஹ்வின் தூதரைக் குறித்த நிராகரிப்பாளர்களுடைய கருத்துக்குப் பதிலாக உள்ளது. ‘இவர் சூனியக்காரர், பொய்யர் என்று அவர்கள் கூறினார்கள். அத்தனை கடவுள்களையும் ஒரே கடவுளாக ஆக்கிவிட்டாரா! ... (4,5)’ ஒரே இறைவனைத் தவிர வணக்கத்துக்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை. அவனைத் தவிர அனைத்துமே அவனுடைய படைப்புகள்தாம். இந்த உண்மையை முஹம்மது நபியவர்கள் சந்தேகத்துக்கிடமின்றித் தெள்ளத் தெளிவாக நிறுவினார்கள். ஆனாலும் மனிதர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள்.

> நீர் கூறும், ‘இது மகத்தான செய்தியாகும். ஆயினும் நீங்கள் இதனைப் புறக்கணிக்கிறீர்கள். மேலுலகில் அவர்கள் தர்க்கித்துக் கொண்டதைக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் வெளிப்படையாக எச்சரிப்பவனாக இருக்கிறேன் என்பதால்தான் எனக்கு இறைவனிடமிருந்து வஹீ அறிவிக்கப்படுகிறது.’ (67-70)

*விண்ணுலகின் செய்தி தமக்கு எங்கிருந்து வருகிறது என்பதைத் தூதர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். 'எனக்கு வஹீயாக அறிவிக்கப் படுவதைத்தான் நான் பெற்றுக்கொண்டிருக்கிறேன், அல்லாஹ் கூறுவது போன்று.' 'நாம் மூசாவுக்குக் கட்டளைகளை வழங்கியபோது மலையின் மேற்குப் பகுதியில் நீர் இருக்கவில்லை. அதனைப் பார்த்துக் கொண்டி ருந்தவர்களில் ஒருவராகவும் நீர் இருக்கவில்லை.* (28:44)'

*இந்த வேதத்தை அருள்வதற்கு அல்லாஹ் முஹம்மதைத் தேர்ந் தெடுத்துக்கொண்டான். அது தவ்ஹீதின் எதார்த்தத்தைத் தெளிவுபடுத்தி, பலதெய்வ வழிபாட்டை முற்றிலுமாக நிராகரிக்கிறது. மனிதர்களை ஒரே இறைவனுடன் இணைக்கிறது. அவனுக்கு மட்டுமே அனைவரும் கட்டுப்பட வேண்டும். விவகாரங்கள் அனைத்தும் அவன் பக்கமே திரும்புகிறது.*

> *நீர் கூறும், 'நான் இதற்காக உங்களிடம் எந்தக் கூலியும் கேட்க வில்லை. நான் புனைந்துரைப்பவனும் அல்ல. இது உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அறிவுரையாகும். அதன் உண்மைநிலையை விரைவில் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.'* (86-88)

❖ ❖ ❖

அத்தியாயம் 39

# அஸ்ஸுமர்

(கூட்டங்கள்)

*அஸ்ஸுமர் என்பது மனிதர்களில் உள்ள பல்வேறு வகையான கூட்டத்தினரைக் குறிக்கும். இந்த அத்தியாயத்தில் மட்டுமே இந்த வார்த்தை இடம்பெறுகிறது. இதுவே இந்த அத்தியாயத்தின் பெயராகவும் இருக்கிறது.*

*படைப்புகளில் காணப்படும் பல்வேறான குழுக்களின் நிலைகளை இந்த அத்தியாயம் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு கூட்டமும் மற்றொன்றுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட பத்துக்கு மேற்பட்ட ஒப்பீடுகள் இந்த அத்தியாயத்தில் காணப்படுகின்றன. அத்தியாயம் அவையனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. அது தவ்ஹீதை, அதன் தனித்தன்மைகளைச் சுற்றியே சுழன்றுகொண்டிருக்கிறது.*

*இணைவைப்பு முந்தையவர்களிடத்திலும் பிந்தையவர்களிடத்திலும் பரவிய மோசமான நோயாகும். அது அவர்களின் நடத்தையை மோசமாக்கிவிட்டது. அறிவுள்ள ஒரு மனிதன் கல்லுக்குச் சிரம்பணிவதும் அதனைக் கண்டு அஞ்சுவதும் உங்களுக்கு வியப்பை ஏற்படுத்தவில்லையா?*

*ஒரு விமானி தன்னுடைய வெற்றியும் தோல்வியும் குதிரையின் மூக்கணாங் கயிற்றில்தான் பிணைக்கப்பட்டுள்ளன என்று கூறினால் நீங்கள் ஆச்சரியப்பட மாட்டீர்களா?*

*மனிதர்களிடம் புகுந்துவிட்ட பிழையான சிந்தனைகள் ஏராளம். அவற்றில் முதன்மையானது அல்லாஹ்வைக் குறித்த மோசமான அறியாமைதான்.*

*நாம் நம் படைப்பாளனைக் குறித்து நல்லெண்ணம் கொள்ள வேண்டும். பரிபூரணமான பண்புகளையே அவன் பக்கம் இணைக்க வேண்டும்.*

*ஆனால், மனிதர்களாகிய நாம் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற் படுத்திவிட்டோம். சிலைகளைச் செய்து அவற்றைக் குறியீடுகளாக ஆக்கிவிட்டோம். இவற்றையெல்லாம் செய்பவர்கள் கூறுகிறார்கள்: 'அவர்கள் எங்களை அல்லாஹ்விடம் நெருக்கமாக்கிவைப்பார்கள் என் பதற்காகத்தான் நாங்கள் அவர்களை வணங்குகிறோம். (3)'*

*இந்தச் சிலைகள் ஒன்றுமே இல்லாத பூஜ்யங்கள். அனுமானங்களே அவற்றை வடிவமைத்திருக்கின்றன. அவை குப்பைத் தொட்டிகளில் வீசியெறியப்பட வேண்டிய குப்பைகள். இறைவனின் பண்புகள் இது போன்ற இழிவுகளைவிட்டும் மிக உயர்வானவை. ஒருவேளை அல்லாஹ் தனக்கும் தன் படைப்புகளுக்கும் மத்தியில் ஓர் இடைத்தரகரை ஏற் படுத்த நாடியிருந்தால் மிக உயர்ந்த ஒன்றைத் தெரிவுசெய்திருப்பான். 'அல்லாஹ் தனக்கு ஒரு மகனை ஏற்படுத்த நாடியிருந்தால் தன் படைப் பிலிருந்து தான் விரும்பியவரைத் தேர்ந்தெடுத்திருப்பான். அவன் தூய்மையானவன். அவனே அனைத்தையும் அடக்கியாளும் ஏகனான அல்லாஹ். (4)'*

*மனிதர்களுக்கும் அவர்களின் இறைவனுக்கும் மத்தியில் எந்த இடைத்தரகரும் இல்லை. அவர்கள் நேரடியாக அவனுடன் தொடர்பு கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அல்லாஹ்வுடன் தொடர்புகொள்ள முடியும்.*

*ஒருவேளை அவன் தனக்கு ஒரு மகனை ஏற்படுத்தியிருந்தாலும் -அவ்வாறு ஏற்படுத்துவது சாத்தியமற்றது - தன் படைப்புகளில் கண் ணியமான ஒரு மனிதரை அல்லது கண்ணியமான ஒரு வானவரைத் தெரிவுசெய்திருப்பான். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவரும் படைப் பாக இருப்பாரே அன்றி படைப்பாளனாக ஆக மாட்டார்.*

*கடவுள்தன்மைக்கென்று யாரும் அடைய முடியாத ஓர் உயர்ந்த இடம் இருக்கிறது. படைப்புகள் அனைத்தும் அவனிடம் இறைஞ்சக்கூடிய, அவனுக்குக் கட்டுப்படக்கூடிய அடிமைகள் என்ற நிலையை ஒருபோதும் தாண்டிவிட முடியாது.*

*ஆனால் இணைவைப்பாளர்கள் - அவர்கள் சிலை வழிபாட்டாளர் களாக இருந்தாலும் சரி அல்லது வேதக்காரர்களாக இருந்தாலும் சரியே - இந்த உண்மையை மறந்துவிட்டார்கள். அவர்கள் படைப்பாளனுக்கும் படைப்புகளுக்கும் மத்தியில் உள்ள வேறுபாட்டை அறியவில்லை. 'ஒரே இறைவன் மட்டுமே வணக்கத்துக்குத் தகுதியானவன். அவனைத் தவிர மற்றவை அனைத்தும் அவனது அடிமைகள்தாம்.' என்ற கண்ணோட்டமே சரியான தவ்ஹீது ஆகும்.*

இந்த உண்மையை எடுத்துரைத்த வேதங்களில் திருக்குர்ஆனே முதன்மையானது. அது மீண்டும்மீண்டும் மிக விரிவாக இந்த உண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளது. இந்த அத்தியாயத்தில் இந்தக் கருத்து மீண்டும்மீண்டும் சொல்லப்படுகிறது.

- இவ்வேதம் அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டதாகும். அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். நிச்சயமாக நாம் உமக்கு இவ்வேதத்தைச் சத்தியத்துடன் அருளியுள்ளோம். ஆகவே, நீர் நம்பிக்கையை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவாறு அவனையே வணங்குவீராக. (1,2)

- அல்லாஹ் மிகச் சிறந்த செய்தியை அருளியுள்ளான். அது ஒன்றையொன்று ஒத்த, திரும்பத்திரும்ப வரக்கூடிய கருத்துகளைக் கொண்ட ஒரு வேதமாக இருக்கிறது. அதனால் தம் இறைவனை அஞ்சுவோரின் உடல் சிலிர்த்துவிடுகிறது ... (23)

- மனிதர்கள் அறிவுரைபெறும் பொருட்டு நாம் இந்தக் குர்ஆனில் எல்லா வகையான உதாரணங்களையும் எடுத்துக் கூறியுள்ளோம். (27)

- நாம் மனிதர்களின் நேர்வழிக்காக இவ்வேதத்தைச் சத்தியத்துடன் உமக்கு அருளியுள்ளோம். யாரேனும் நேர்வழியைப் பின்பற்றினால் அது அவருக்கே நன்மையாக அமையும் ... (41)

- நீங்கள் அறியாதிருக்கும் நிலையில் திடீரென உங்கள் மீது வேதனை வருவதற்கு முன்பே உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பட்ட வேதத்தின் சிறந்த அம்சத்தைப் பின்பற்றுங்கள். (55)

- ஆம். நிச்சயமாக என் வசனங்கள் உன்னிடத்தில் வந்தன. ஆயினும், நீ அவற்றைப் பொய் என்று கூறினாய். கர்வம் கொண்டு நிராகரிப்பாளர்களில் ஒருவனாகிவிட்டாய். (59)

இந்த அத்தியாயத்தின் நடுப்பகுதியில் படைப்பாளனான அல்லாஹ்வைக் குறித்து, வானங்கள், பூமி, மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றில் வெளிப்படும் அவனுடைய சான்றுகள்குறித்து நீண்டதொரு செய்தி இடம்பெறுகிறது. இது தனக்குப் பிறகு இடம்பெறக்கூடிய, பலதரப்பட்ட மனிதர்களுக்கு மத்தியில் செய்யப்படும் ஒப்பீடுகளுக்கான முன்னுரையாக அமைகிறது.

இந்த ஒப்பீடுகளில் முதலாவது, பின்வரும் வசனத்தில் வெளிப்படு கிறது:

> நீங்கள் நிராகரிப்பீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் உங்களை விட்டும் தேவையற்றவன். அவன் தன் அடியார்களிடம் நிராகரிப்பை விரும்ப மாட்டான். நீங்கள் நன்றி செலுத்துவீர்களாயின் அவன் உங்களைக் குறித்து திருப்தியடைவான். எந்த ஆன்மாவும் மற்றொரு ஆன்மாவின் சுமையைச் சுமக்காது. (7)

உண்மையில் மனிதர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளால் சூழப் பட்டுள்ளார்கள். அவர்கள் அவனுடைய பூமியில் வாழ்கிறார்கள். அவன் ஏற்படுத்திய காற்றைச் சுவாசிக்கிறார்கள். அவன் படைத்த உணவுகளை உண்ணுகிறார்கள். பின்னர் இவையனைத்தையும் மறந்துவிடுகிறார்கள். அவன் தங்களுக்கு எந்த நன்மையும் செய்யாதது போன்று நடந்து கொள்கிறார்கள்.

அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அவனிடமே உதவி கோருகிறார்கள். அவன் அவர்களைக் காப்பாற்றியவுடன் அவன்தான் தங்களைக் காப்பாற்றினான் என்பதையே மறந்துவிடுகிறார்கள்.

> மலைகளைப் போன்ற அலைகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டால் நம்பிக்கையை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவாறு அவனிடமே பிரார்த்திக்கிறார்கள். ஆனால், நாம் அவர்களைக் காப்பாற்றி கரை சேர்த்துவிட்டால் அவர்களில் சிலர் நடுநிலையாக நடந்துகொள் கிறார்கள். நன்றிகெட்ட துரோகிகள் நம் சான்றுகளை நிராகரிக்கி றார்கள். (31:32)

நன்றி செலுத்துவது சீரான இயல்பின், சரியான பார்வையின் அடை யாளமாகும். அல்லாஹ் நூஹைக் குறித்து கூறுகிறான்: ‘நிச்சயமாக அவர் நன்றியுள்ள அடியாராக இருந்தார். (17:3)’

இப்றாஹீமைக் குறித்து கூறுகிறான்: ‘அவனுடைய அருட்கொடை களுக்கு நன்றி செலுத்துபவராக இருந்தார். அவன் அவரைத் தேர்ந்தெடுத்து நேரான வழியைக் காட்டினான். (16:121)’

நம்முடைய தூதரிடம், ‘இந்த அளவு கடுமையாக வணக்க வழிபாட்டில் ஈடுபடுவது ஏன்?’ என்று கேட்கப்பட்டபோது அவர்கள் கூறினார்கள், ‘நான் நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?’

மனிதர்கள் இந்த உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பாவமான காரியங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

இரண்டாவது ஒப்பீடு:

யார் இரவு நேரங்களில் நின்றவாறும் சிரம்பணிந்தவாறும் அவனை வணங்கி, மறுமையைப் பயந்து, தம் இறைவனின் கருணையை வேண்டிநிற்கிறாரோ - அவர் நிராகரிப்பவனைப் போல் ஆவாரா? - நீர் கேளும், 'அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா?' (9)

இந்த வசனத்தில் எதிர் தரப்பினர் மறைமுகமாகச் சுட்டப்படுகிறார் கள். 'இரவில் நின்று தொழுபவர்களும் தொழாமல் தூங்குபவர்களும் சமமாவார்களா? அல்லது, வணக்க வழிபாட்டில் இரவைக் கழிப்பவர் கேளிக்கைகளிலும் தடுக்கப்பட்ட இன்பங்களிலும் மூழ்கியிருப்பவரைப் போல் ஆவாரா?'

அடுத்து வரக்கூடிய ஒப்பீடுகளில் இவ்வாறு ஒரு தரப்பு மறைவாகச் சுட்டப்படுவதை நாம் காண முடியும். மேற்கண்ட ஒப்பீட்டில் ஒரு தரப்பு மறைவாகச் சுட்டப்பட்டதன் நோக்கம் இரவுத் தொழுகையை உயர்வான ஒன்றாகக் குறிப்பிடுவதும் இலக்கிய நயத்துக்காகவும் ஆகும்.

நபியவர்கள் கூறினார்கள்:

இரவுத் தொழுகையைக் கடைப்பிடியுங்கள். அது உங்களுக்கு முன்சென்ற நல்லோர்களின் வழிமுறையாகவும் உங்கள் இறை வனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகவும் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குக் காரணமாகவும் பாவங்களை விட்டுத் தடுக்கக்கூடியதாகவும் நோயிலிருந்து உடலைக் காக்கக்கூடிய தாகவும் இருக்கிறது.

ஒருவர் இரவுத் தொழுகை தொழ நாடி அவரால் தொழ முடிய வில்லையெனில் அவரும் தொழுதவரின் கூலியைப் போன்று கூலி பெறுவார். நபியவர்கள் கூறியதாக அபூதர்தா கூறுகிறார், 'யார் இரவில் படுக்கும்போது இரவில் எழுந்து தொழ வேண்டும் என்று எண்ணு கிறாரோ, தூக்கம் அவரை மிகைத்து அவரால் தொழ முடியாமல் போய் விட்டாலும் அவர் எதனை எண்ணினாரோ அதற்கான கூலி வழங்கப் பட்டு விடுவார். அவரது தூக்கம் இறைவன் புறத்திலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட தர்மமாக ஆகிவிடும்.'

இரவில் நின்று தொழுவது வலியுறுத்தப்பட்ட உபரியான வணக்க வழிபாடாகும். இந்த அத்தியாயத்தில் இரவில் விழித்து தொழுவது தொடர்பாகக் கூறப்பட்டுள்ள விசயம் கடமையான தொழுகையைக் குறிக்கும் என்று நான் கருதுகிறேன்.

கடமையான வணக்கங்களைப் பேணுவதுடன் ஒரு மனிதன் இரவில் எழுந்து படிப்பது, பிரார்த்தனைசெய்வது, குர்ஆன் ஓதுவது போன்ற உபரியான வணக்கங்களிலும் ஈடுபடலாம். ஆனால், உடலுக்கு அளிக்க வேண்டிய உரிமையை அவன் கொடுத்திருக்க வேண்டும்.

இந்த விசயத்தில் மனிதர்களின் நிலைகள் வேறுபட்டவையாக இருக்கின்றன. இரவில் கண்விழித்து, பின்னர் ஒரு மணிநேரம் மட்டும் தூங்கி, சுறுசுறுப்பாக வேலைசெய்யும் மனிதர்களை நான் கண்டிருக்கிறேன். சிலரால் ஆழமான தூக்கத்துக்குப் பிறகுதான் சுறுசுறுப்பாக வேலை செய்ய முடியும்.

மூன்றாவது ஒப்பீடு இருவேறுபட்ட பிரிவினர்களிடையே செய்யப்படுகிறது.

ஒரு பிரிவினர் தங்கள் இறைவனை அஞ்சுபவர்கள், அவனுக்காகவே நற்செயல்களில் ஈடுபடுபவர்கள், தங்கள் தூதரின் வழிமுறையைப் பின்பற்றக்கூடியவர்கள். ‘நீர் கூறும், நான் என் இறைவனுக்கு மாறுசெய்தால் மகத்தான ஒரு நாளின் வேதனையை அஞ்சுகிறேன். (13)’ அவர்கள் தங்களின் மனஇச்சைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தார்கள்.

மற்றொரு பிரிவினர், உலக வாழ்க்கையை வணங்குபவர்கள், தங்கள் மனஇச்சைகளுக்குப் பின்னால் ஓடுபவர்கள், நிகழ்காலத்துக்காக மட்டுமே செயல்படக்கூடியவர்கள். இவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: ‘நீர் கூறும், மறுமைநாளில் தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் இழப்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள்தாம் உண்மையில் இழப்படைந்தவர்கள். இதுதான் தெளிவான இழப்பாகும். (15)’

பெரும்பாலான மனிதர்கள் இந்த உலக வாழ்வில் தங்கள் குடும்பத்தாருடன் முன்னேற்றமடைவதற்காக, தங்களால் இயன்ற அளவு செல்வத்தையும் பதவியையும் பெறுவதற்காகத் தங்களின் ஆற்றல்கள் அனைத்தையும் செலவிடுகிறார்கள். ஆனால், மறுமைநாளில் அவர்கள் நிர்வாணிகளாக, அடிமைகளாக ஒன்றுதிரட்டப்படுவார்கள். அவர்கள் சேகரித்த செல்வங்கள் அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்காது.

இந்த ஒப்பீடு பின்வரும் வசனத்தில் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது:

> ‘போலி தெய்வங்களை வணங்குவதைத் தவிர்த்துக் கொண்டு
> அல்லாஹ்வின் பக்கமே முற்றிலும் திரும்பிக்கொண்டவர்களுக்கு

நற்செய்தி இருக்கிறது. என் அடியார்களுக்கு நற்செய்தி கூறிவிடுவீராக. அவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டு அதில் சிறந்ததைப் பின்பற்றுகிறார்கள்.' (17,18)

நான்காவது ஒப்பீட்டில் ஒரு தரப்பு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு தரப்பு மறைமுகமாகச் சுட்டப்படுகிறது. அல்லாஹ் கூறுகிறான்: 'யார்மீது வேதனையின் வாக்கு உறுதியாகிவிட்டதோ (அவரை யாரால் காப்பாற்ற முடியும்?), நெருப்பில் வீழ்ந்துகிடப்பவரை உம்மால் காப்பாற்ற முடியுமா? (19)'

பொருள் இதுதான்: 'யார் தீய செயல் புரிந்தாரோ அவர் இழிவுக் குரியவராகிவிட்டார். யார் அல்லாஹ்வுக்கு அஞ்சினாரோ அவர் கண்ணியத்துக்குரியவராகிவிட்டார். உம் இறைவனின் வாக்கு யார்மீது உறுதியாகிவிட்டதோ அவரை யாராலும் காப்பாற்ற முடியாது.'

ஒப்பீட்டில் மறைமுகமாகச் சுட்டப்பட்ட இரண்டாவது தரப்பினர் அடுத்த வசனத்தில் நேரடியாக வெளிப்படுத்தப்படுகிறார்கள்.

ஆயினும், தம் இறைவனை அஞ்சக்கூடியவர்களுக்கு அடுக்கடுக்காகக் கட்டப்பட்ட உயர்ந்த மாளிகைகள் உள்ளன. அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். தன் வாக்குறுதிக்கு அல்லாஹ் மாறுசெய்ய மாட்டான். (20)

ஐந்தாவது ஒப்பீட்டிலும் ஒரு தரப்பு மறைமுகமாகச் சுட்டப்படுகிறது.

யாருடைய இதயத்தை இஸ்லாத்துக்காக அல்லாஹ் விசாலமாக்குகிறானோ அவர் தம் இறைவனிடமிருந்துள்ள தெளிவான ஒளியில் உள்ளார். இறை நினைவை விட்டும் இதயங்கள் இறுகிப் போனவர்களுக்குக் கேடுதான். அவர்கள் வெளிப்படையான வழிகேட்டில் இருக்கிறார்கள். (22)

பொருள் இதுதான்: 'யாருடைய உள்ளம் சத்தியத்தைக் கொண்டு விசாலமானதோ அவர் சத்தியத்தைக் கொண்டு உள்ளம் இறுகிப் போனவருக்கு ஒப்பாவாரா?'

உள்ளம் விசாலமாகிவிட்டால் மனிதன் நற்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவான். பூஸிரி கூறுகிறார்: 'இறை வழிகாட்டல் ஆன்மாவில் இறங்கிவிட்டால் உறுப்புகள் வணக்க வழிபாட்டுக்காகச் சுறுசுறுப்பாகிவிடும்.'

இறை வழிகாட்டுதலை விட்டு வெகுதூரம் சென்றவர்களுக்குத் தொழுகையும் ஸகாத்தும் இன்னபிற வணக்க வழிபாடுகளும் கடினமானவையாகத் தோன்றும். அவர்கள் ஜிஹாதை விட்டு வெருண்டோடுவார்கள்.

அடுத்து வரும் வசனம் இந்த ஐந்தாவது ஒப்பீட்டைத் தெளிவுபடுத்து கிறது.

அல்லாஹ் மிகச் சிறந்த செய்தியை அருளியுள்ளான். அது ஒன்றை யொன்று ஒத்த, திரும்பத் திரும்ப வரக்கூடிய கருத்துகளைக் கொண்ட ஒரு வேதமாக இருக்கிறது. அதனால் தம் இறைவனை அஞ்சுவோரின் உடல் சிலிர்த்துவிடுகிறது. பின்னர் அவர்களின் உடலும் உள்ளமும் உருகி இறை நினைவின்பால் நாட்டம் கொள் கின்றன. (23)

திருக்குர்ஆன், ஞானம்மிக்க அறிவுரை, நேர்வழி ஆகியவற்றின் மூல மாகவும் அசத்தியத்தை விட்டுப் பாதுகாத்து, சத்தியத்தின் பக்கம் இணைக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

ஆறாவது ஒப்பீடு பின்வரும் வசனத்தில் இடம்பெறுகிறது:

யார் மறுமைநாளில் கொடிய வேதனையைத் தன் முகத்தால் தடுக்க முயல்வாரோ (அவர் சுவனவாசியைப் போல் ஆவாரா?), அப்போது அநியாயக்காரர்களிடம் கூறப்படும், 'நீங்கள் சம்பாதித்துக் கொண்டி ருந்தவற்றைச் சுவையுங்கள்.' (24)

பொருள்: 'யார் மறுமைநாளின் வேதனையை ஈமானைக் கொண் டும் நற்செயல்களைக் கொண்டும் தடுக்க முயல்வாரோ அவர் அநியா யத்தினாலும் நிராகரிப்பினாலும் அதற்கு உரியவரானவரைப் போன்றவர் ஆவாரா?'

தீயவற்றைவிட்டும் தன் முகத்தைத் தூரமாக்கிக்கொள்வது மனிதனின் இயல்பு. ஆனால், அநியாயக்காரர்களைத் தீடிரெனச் சுற்றிவளைக்கும் வேதனையை அவர்களால் தடுக்கக்கூட முடியாது. இந்த உலகிலேயே விரைவாக வேதனை அவர்களைத் தாக்கும் என அடுத்து வரக்கூடிய வசனம் எச்சரிக்கிறது.

அல்லாஹ் இவ்வுலக வாழ்வில் அவர்கள் இழிவைச் சுவைக்கும்படி செய்தான். மறுமையின் வேதனையோ மிகக் கடுமையானது. அந்தோ, அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே! (26)

ஏழாவது ஒப்பீடு, அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் செயல்படும் ஓரிறைக் கொள்கையாளர்களுக்கும் சிலைகளுக்காக அல்லது தங்களின் தலைவர்களுக்காக அல்லது இன்னபிற ஆதாயங்களுக்காகச் செயல் படுபவர்களுக்கும் மத்தியில் செய்யப்படுகிறது.

*அல்லாஹ்வைத் தவிர பிறவற்றை வணங்குபவர்கள் என்றால் இவர்கள் அனைவரையும் குறிக்கும். மாறாக, என்னால் சில மக்களைக் குறித்து உறுதியாகக் கூற முடியும். அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வின் தொடர்பை விட்டு வெகுதூரமாக இருக்கின்றன. பிற மனிதர்களின் திருப்தியைப் பெறுவதற்காக அல்லது இன்னபிற நோக்கங்களுக்காக தங்களின் செயல்பாடுகளை அமைத்துக்கொள்கிறார்கள். கதாநாயக வழிபாடும் புகழைச் சம்பாதிப்பதற்காகச் செயல்படுவதும் இந்த வகையைச் சார்ந்தவைதான்.*

*நம்பிக்கையாளன் தொழும்போது அல்லாஹ்வுக்கு மட்டுமே கட்டுப்படுகிறான். அவன் ஸகாத் கொடுக்கும்போது அல்லாஹ்வுக்காக மட்டுமே கொடுக்கிறான். அவன் ஜிஹாது செய்யும்போது அல்லாஹ்வுக்காக மட்டுமே தன் உயிரை அர்ப்பணிக்கிறான். அவனுடைய நோக்கம் ஒன்றுதான். அவனுடைய உள்ளம் அந்த நோக்கத்தில் திருப்தியடைந்துவிட்டது.*

> *அல்லாஹ் ஓர் உதாரணம் கூறுகிறான். ஒரு மனிதனுக்குப் பிடிவாத குணமுடைய பங்காளிகள் உரிமையாளர்களாக இருக்கிறார்கள். மற்றொரு மனிதன் முழுக்க முழுக்க ஒரே மனிதனுக்கு அடிமையாக இருக்கிறான். இவர்கள் இருவரும் சமமாவார்களா? அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே! ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை.* (29)

> *ஒரு கவிஞர் இதனை இவ்வாறு வர்ணிக்கிறார்:*

> > *‘அந்த ஒருவனின் திருப்தியை நாடிச் செயல்படு. உனக்கு எல்லா மனிதர்களின் திருப்தியையும் அது பெற்றுத்தரும்.’*

> *எட்டாவது ஒப்பீடு பின்வரும் வசனத்தில் வெளிப்படுகிறது:*

> *அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்து, சத்தியம் தன்னிடம் வந்தபோது அதனைப் பொய்யெனக் கூறி நிராகரித்தவனைவிடப் பெரும் அக்கிரமக்காரன் யார்? இத்தகைய நிராகரிப்பாளர்களின் தங்குமிடம் நரகத்தில் இல்லையா? சத்தியத்தைக் கொண்டுவந்தவரும் அதனை ஏற்றுக்கொண்டவர்களும்தாம் இறையச்சமுடையவர்கள்.* (32,33)

*இந்தப் பூமி அசத்தியக் கொள்கைகளால், மூடநம்பிக்கைகளால் நிரம்பி வழிகிறது. சத்தியம் அந்நியமான ஒன்றாகத் தென்படுகிறது. மனிதர்களில் மிகவும் கண்ணியமானவர் சத்தியத்தை அறிந்து அதனை மற்றவர்களுக்கு எடுத்துரைத்தவர். அவர் உண்மையைக் கூறினார், உண்மையாளர்களை வலுப்படுத்தினார்.*

மனிதர்களில் மிக மோசமானவர்கள் அல்லாஹ்வின் மீது இட்டுக் கட்டிக் கூறுபவர்கள். அவர்களைச் சத்தியத்தின் பக்கம் யாரேனும் அழைத் தால் திமிறியெழுவார்கள். அதனைப் பின்பற்றுவதை நிராகரிப்பார்கள்.

அல்லாஹ் சத்தியத்தைப் பின்பற்றுவோருக்கு இவ்வாறு வாக்களிக்கி றான்:

> அவர்கள் விரும்புகின்றவை யாவும் அவர்களின் இறைவனிட மிருந்து அவர்களுக்குக் கிடைக்கும். இதுதான் நன்மை செய்வோ ரின் கூலியாகும். இது ஏனெனில், அல்லாஹ் அவர்கள் செய்து கொண்டிருந்த தீய காரியங்களைப் போக்கி, அவர்கள் செய்த நற்செயல்களுக்குப் பலனாகக் கூலியளிக்க வேண்டும் என்பதற் காகத்தான். (34,35)

இந்த நற்செய்தியை விடத் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய, இனிமையான ஒன்றை நான் கண்டதில்லை.

இந்த அத்தியாயத்தில் அற்புதமான இந்தக் கேள்வியும் இடம்பெறு கிறது. ‘தன் அடியானுக்கு அல்லாஹ் போதுமானவன், இல்லையா? அவனை விடுத்து மற்றவர்களைக் கொண்டு இவர்கள் உம்மைப் பய முறுத்துகிறார்கள். (36)’

அல்லாஹ்தான் உயர்த்துபவன், தாழ்த்துபவன், பலனளிப்பவன், தீங் களிப்பவன், கண்ணியமளிப்பவன், இழிவுபடுத்துபவன். அவனுடைய கட்டளையை யாரும் தடுத்துநிறுத்த முடியாது. அவனுக்கு எதிராக யாரும் பாதுகாவலளிக்க முடியாது.

அவனுடைய தண்டனையிலிருந்து மனிதர்களை யாரால் காப்பாற்ற முடியும்?

ஒன்பதாவது ஒப்பீட்டில் இதுவே அடிப்படையான கருத்தாக இடம் பெறுகிறது.

> அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் கட்டளையிடவோ அதனை நிறைவேற்றவோ சக்திபெற மாட்டார்கள். மாறாக, அவர்களால் தங்களைத் தாங்களே கூடக் காத்துக்கொள்ள முடியாது. எப்படி அவர்கள் மற்றவர்களைக் காப்பாற்றுவார்கள்? நீர் கேளும், ‘அவனை விடுத்து நீங்கள் அழைக்கின்றவற்றைப் பற்றி என்ன நினைக்கி றீர்கள்? அல்லாஹ் எனக்கு ஏதேனும் தீங்கை நாடினால் அவற்றால் அத்தீங்கை நீக்கிவிட முடியுமா? அல்லது, அவன் என்மீது கருணை காட்ட நாடினால் அவற்றால் அவனது கருணை

யைத் தடுத்துவிட முடியுமா?' நீர் கூறும், 'அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். சார்ந்திருப்பவர்கள் அவனையே முழுமையாகச் சார்ந்திருப்பார்கள்.' (38)

ஆகவே ஓரிறைக் கொள்கையுடையவர்கள் இந்த விசயத்தை இணை வைப்பாளர்களுக்கு முன்னால் மீண்டும் மீண்டும் எடுத்துவைக்கிறார்கள்: 'நீர் கூறும், என் சமூகமே, நீங்கள் உங்கள் வழியில் செயல்படுங்கள். நானும் என் வழியில் செயல்படுகிறேன். விரைவில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இழிவு தரும் வேதனை யாருக்கு வரும், நிலையான வேதனை யார் மீது இறங்கும் என்பதை விரைவில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (39,40)'

பத்தாவது ஒப்பீடு, தவ்ஹீதுவாதிகளுக்கும் இணைவைப்பாளர்களுக்கும் மத்தியில் காணப்படும் தூரத்தை வர்ணிக்கிறது. தவறிழைப்பவன் தான் தவறிழைப்பதை அறிந்து கொண்டே தவறிழைக்கிறான் என்றும் சிலைவழிபாடு செய்பவன் தான் கல்லைத்தான் வணங்குகிறேன் என்பதை அறிந்துகொண்டே வணங்குகிறான் என்றும் நாம் எண்ணுகிறோம். ஆனால், தவறிழைப்பவர்களில் பெரும்பாலோர் தாங்கள் சரியான விசயத்தில் இருப்பதாகவே எண்ணிக்கொள்கிறார்கள். 'யாருக்கு அவருடைய தீய செயல் அழகாகக் காட்டப்பட்டு அவர் அதனை நற்செயலாகக் கருதுகிறாரோ ... (35:8)'

அவர்கள் தாங்கள் சத்தியத்தில் இருப்பதாகவும் தங்களைத் தவிர மற்றவர்கள் அசத்தியத்தில் இருப்பதாகவும் எண்ணிக்கொள்கிறார்கள். பின்வரும் வசனத்தைக் கவனித்துப்பாருங்கள்:

ஏகனான அல்லாஹ்வைப் பற்றிக் கூறப்பட்டால் மறுமையின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களின் உள்ளங்கள் வெறுப்படைகின்றன. அவனை விடுத்து மற்றவர்களைப் பற்றிக் கூறப்பட்டால் அப்போது அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். (45)

இவர்களுடன் தூதர் என்ன செய்ய முடியும்? 'நீர் கூறும், அல்லாஹ்வே, வானங்களையும் பூமியையும் படைத்தவனே, மறைவானதையும் வெளிப்படையானதையும் அறிந்தவனே, நீயே உன் அடியார்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளில் தீர்ப்பளிக்கிறாய். (46)'

இந்தப் பூமியில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் தங்களின் மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஆகவேதான், சத்திய அழைப்பாளர்களின் மீது சுமத்தப்பட்ட சுமை கடினமானது என்று கூறுகிறோம். அவர்களின் இந்தப் பணிவிடை, அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய நேர்வழிக்கு நன்றி செலுத்துவதாக அமையும்.

பதினொன்றாவது ஒப்பீடு பின்வரும் வசனத்திலிருந்து புரிந்து கொள்ளப்படுகிறது:

மனிதனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அவன் நம்மிடமே பிரார்த்திக்கிறான். பின்னர், நாம் அவனுக்கு நம்மிடமிருந்து ஏதேனும் அருட்கொடையை வழங்கினால், 'இது என் அறிவால் தான் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.' என்று கூறுகிறான். அப்படியல்ல. இது ஒரு சோதனையே. ஆயினும் அவர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. இவர்களுக்கு முன்சென்றவர்களும் இவ்வாறே கூறினார்கள். ஆயினும் அவர்கள் சம்பாதித்துக்கொண்டிருந்தது எதுவும் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. (49,50)

இது மனிதன் தனக்குள் சந்திக்கும் இருவேறான நிலைகளுக்கு மத்தியில் உள்ள ஒப்பீடு. அவனுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் அவன் தன் துன்பத்தைப் போக்குமாறு அல்லாஹ்விடம் இறைஞ்சுகிறான். தன் இயலாமையை உணர்கிறான்.

ஆனால், காலம் மாறி அவனிடம் உள்ள அருட்கொடைகள் அதிகரித்துவிட்டால் தன் பலத்தையும் திறமையையும் உணர்கிறான். இந்த வெற்றி தன் திறமையின் விளைவே என்று ஆணவத்துடன் கூறுகிறான்.

இந்தத் திறமை நேற்று எங்கே இருந்தது? அவனிடம் உள்ளவை அழிந்த சமயத்தில் அவன் ஏன் இந்தத் திறமையை நம்பவில்லை?

இந்த அலட்சியமும் ஆணவமும் அவனை அழிவின் பக்கம் இட்டுச் செல்பவை. மனிதன் தன் அடிமைத்தனத்தின் எல்லையை அறிந்து கொள்ள வேண்டும். விரைவாகப் பாவமன்னிப்பு கோருவது உறுதியான ஈமானின் அடையாளமாகும். அவன் தாமதப்படுத்திக் கொண்டே செல்வது அவனிடம் காணப்படும் இயலாமையின், விழிப்புணர்வின்மையின் அடையாளமாகும்.

நபியவர்கள் கூறியுள்ளார், 'ஒரு தீய செயலை அடுத்து நற்செயலைச் செய்துவிடு. அது உன் பாவத்தை அழித்துவிடும்.' மனிதன் நிராசையடைந்து தன்னை ஷைத்தானின் வசம் ஒப்படைத்து பாவங்களில் மூழ்கிவிடுகிறான். வெற்றிக்கும் அவனுக்குமான தொலைவு மிகத் தூரமாகிவிடுகிறது. இந்த அத்தியாயம் பின்வரும் வசனத்தில் இதற்கான தீர்வை முன்வைக்கிறது. 'நீர் கூறும், தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட என் அடியார்களே, அல்லாஹ்வின் கருணையில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும்

மன்னித்துவிடுவான். அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணை யிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (53)'

பன்னிரண்டாவது ஒப்பீடு, அல்லாஹ்வின் மன்னிப்பில் நம்பிக்கை வைத்து அவனுடைய திருப்தியை நாடி நற்செயல்களில் விரைந்து ஈடு படுபவர்களுக்கும் சோம்பேறித்தனம் செய்து வாய்ப்புகளைத் தவற விட்டவர்களுக்கும் மத்தியில் செய்யப்படுகிறது. அவ்வாறு சோம்பேறித் தனம் செய்பவர்கள் பின்னர் தாங்கள் செயல்படாமல் இருந்ததை எண்ணி வருத்தப்படுவார்கள். ஆனால், அப்போது வருத்தப்படுவதால் அவர் களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. 'அந்தோ, நான் அல்லாஹ் வின் விசயத்தில் குறைபாடுசெய்துவிட்டேனே, பரிகாசம் செய்வோரில் நானும் ஒருவனாக இருந்தேனே என்று யாராவது புலம்பக்கூடும். (56)'

அப்போது அவனிடம் கூறப்படும்: 'ஆம். நிச்சயமாக என் வசனங்கள் உன்னிடத்தில் வந்தன. ஆயினும் நீ அவற்றைப் பொய் எனக் கூறினாய். கர்வம் கொண்டு நிராகரிப்பாளர்களில் ஒருவனாகிவிட்டாய். (59)'

கொள்கை, வழிமுறை, ஒழுக்கம் ஆகியவற்றில் உண்மையாளர்களை யும் பொய்யர்களையும் ஒப்பிட்டு அல்லாஹ் கூறுகிறான்:

> அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்தவர்களின் முகங்கள் மறுமை நாளில் கருத்திருப்பதை நீர் காண்பீர். கர்வம் கொண்டோரின் தங்குமிடம் நரகத்தில் இல்லையா? ஆயினும், அல்லாஹ்வை அஞ்சி நடந்தவர்களுக்கு அவன் வெற்றியுடன் ஈடேற்றமளிப்பான். அவர்களை எந்தத் தீங்கும் தீண்டாது. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். (60,61)

இதுதான் பதிமூன்றாவது ஒப்பீடு. தக்வா என்பது வாய்மை என்ற வார்த்தையால் விவரிக்கப்படுகிறது. 'இன்றைய நாள் வாய்மையாளர் களின் வாய்மை அவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய நாளாகும் ... (5:119)' நன்மையின் அடையாளங்கள் அனைத்தும் தக்வா, வாய்மை என்ற இரு வார்த்தைகளால் விவரிக்கப்படுகின்றன: 'அவர்கள்தாம் உண்மையாளர் கள். அவர்கள்தாம் இறையச்சமுடையவர்கள். (2:177)'

இறுதியில் உறுதியான இந்த ஒப்பீட்டின் மூலம் அத்தியாயம் நிறை வடைகிறது. நியாயமான விசாரணைகள், துல்லியமான கேள்வி கணக்குகளுக்குப் பிறகு மனிதர்களில் ஒவ்வொரு பிரிவினரும் அவர் களுக்குரிய நிரந்தரமான தங்குமிடத்தின் பக்கம் அனுப்பப்படுவார்கள். 'நிராகரிப்பாளர்கள் கூட்டம் கூட்டமாக நரகத்தின் பக்கம் ஓட்டிச் செல்லப்படுவார்கள் ... (71)' 'தம் இறைவனை அஞ்சியவர்கள் சுவனத் தின்பால் கூட்டம்கூட்டமாக அழைத்துவரப்படுவார்கள் ... (73)'

*தங்களுக்கு அளிக்கப்பட்ட அவகாசம் கடந்தபிறகு நரகவாசிகள் தாங்கள் அல்லாஹ்வை மறந்ததால் அவன் தங்களை மறந்துவிட்டான் என்பதை அறிந்துகொள்வார்கள்.*

*சுவனவாசிகள் இன்பம் நிறைந்த வீடுகளில் உலகில் அல்லாஹ்வை நினைவுகூர்ந்ததுபோன்று நினைவுகூர்ந்தவாறும் நன்றி செலுத்திய வாறும் தங்கியிருப்பார்கள். 'அல்லாஹ்வே, நீயே தூயவன் என்பதே அங்கு அவர்களின் பிரார்த்தனையாக இருக்கும். அமைதி நிலவட்டும் என்பதே அவர்களின் வாழ்த்தாக இருக்கும்.* (10:10)'

*அருட்கொடைகளின் நிழலில் நம்பிக்கையாளர்களின் துதிகள் வான வர்களின் துதிகளோடு ஒத்திசைந்து ஒலிக்கும்.*

> *வானவர்கள் அரியணையை வட்டமிட்டவாறு தம் இறைவனைப் புகழ்ந்து போற்றிக்கொண்டிருப்பதை நீர் காண்பீர். அவர்களிடையே நியாயமான முறையில் தீர்ப்பளிக்கப்படும். 'அகிலங்களின் இறை வனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!' என்று கூறப்படும்.* (75)

❖ ❖ ❖

அத்தியாயம் 40

# காஃபிர்

(மன்னிப்பாளன்)

*இந்த அத்தியாயம் ஹா, மீம் என்ற இரு எழுத்துகளோடு ஆரம்ப மாகும் ஏழு அத்தியாயங்களில் முதலாவதாகும். இப்னு மஸ்வூது கூறு கிறார், 'ஹா, மீம் என்று ஆரம்பமாகும் அத்தியாயங்கள் குர்ஆனுக்குப் பட்டாடைகளைப் போன்றவையாகும்.' இப்னு அப்பாஸ் கூறுகிறார், 'ஒவ்வொரு பொருளும் ஒரு கருப்பொருளைப் பெற்றிருக்கிறது. குர்ஆனின் கருப்பொருள் ஹா, மீம் எனத் தொடங்கும் அத்தியாயங்களாகும்.'*

*இந்த அத்தியாயம் இவ்வாறு தொடங்குகிறது: 'ஹா, மீம். இது அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வேதமாகும். அவன் யாவற்றையும் மிகைத்தவன்; நன்கறிந்தவன் ... (1,2)'*

*யாவற்றையும் மிகைத்தவன், நன்கறிந்தவன் இரண்டும் அல்லாஹ் வின் பண்புகளில் உள்ளவையாகும். அதன் அடையாளங்களே அவன் அருளிய வேதத்தில் பரவிக் காணப்படுகின்றன. இப்னு கஸீர் கூறுகிறார், 'இந்தக் குர்ஆன் வல்லமை மிக்கவனும் நன்கறிந்தவனுமாகிய அல் லாஹ்விடமிருந்து அருளப்பட்டதாகும். அவனை யாரும் மிகைத்துவிட முடியாது. எந்த ஒன்றும் அவனுக்கு மறைவாக இருக்காது, அதன் மீது எத்தனை திரைகள் படிந்திருந்தாலும் சரியே.' 'பாவங்களை மன்னிப்ப வன்; பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்பவன்; கடுமையாகத் தண்டிப்பவன் ... (3)'*

*திருக்குர்ஆன் வாக்குறுதியையும் எச்சரிக்கையையும் ஒருசேர முன் வைக்கிறது. அது மனிதனை அச்சத்துக்கும் நம்பிக்கைக்கும் மத்தியில் நிலைநிறுத்துகிறது. 'அறிந்துகொள்ளுங்கள், அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன். ஆயினும், அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (5:98)'*

மனிதனுக்கு நன்னம்பிக்கையைத் தூண்டக்கூடிய விசயமும் அவனுடைய கர்வத்தை நசுக்கக்கூடிய அம்சமும் மிக அவசியம். ஏனெனில், நிராசை அவனைத் தோல்வியின் பக்கம் இட்டுச்செல்லும். அவனிடம் உள்ளவற்றைக் கொண்டு அவன் கொள்ளும் கர்வம் அவனை முந்த விடாமல் தடுக்கும்.

இப்னு கஸீர் ஒரு சம்பவத்தை அறிவிக்கிறார்: ஷாம் தேசத்திலிருந்து பலசாலியான ஒரு மனிதர் உமர் இப்னுல் ஃகத்தாபைக் காண வந்திருந்தார். அவர் திடீரெனக் காணாமல் போய்விட்டதால் உமர் அவரைக் குறித்து விசாரித்தார். தோழர்கள் கூறினார்கள், 'நம்பிக்கையாளர்களின் தலைவரே, அவர் மதுவுக்கு அடிமையாகிவிட்டார்.' உமர் தம்முடைய எழுத்தரை அழைத்து அவரிடம் இவ்வாறு எழுதுமாறு கூறினார்:

> 'உமர் இப்னுல் ஃகத்தாபிடமிருந்து இன்னாருக்கு எழுதப்படுகிறது. உம்மீது சாந்தி உண்டாகட்டும். உம்மீது அல்லாஹ் பொழிந்த அருளுக்காக நான் அல்லாஹ்வைப் புகழ்கிறேன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் பாவங்களை மன்னிப்பவன்; பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்பவன்; கடுமையாகத் தண்டிப்பவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டும்.'

பின்னர் தம் தோழர்களிடம் கூறினார், 'உங்களின் சகோதரருக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். அவர் உளப்பூர்வமாக இதனை ஏற்றுக் கொள்ளட்டும்; அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோரட்டும்.'

உமரின் கடிதம் அந்த மனிதரை அடைந்தபோது அவர் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டே இருந்தார். அவர் கூறினார், 'பாவங்களை மன்னிப்பவன்; பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்பவன்; கடுமையாகத் தண்டிப்பவன். அவர் அவனுடைய தண்டனையிலிருந்து என்னை எச்சரிக்கிறார். அவன் என்னை மன்னிப்பான் என்றும் எனக்கு வாக்களிக்கிறார்.' அவர் மீண்டும் மீண்டும் தம் மனதுக்குள் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார். பின்னர் அழுதார். பின்னர் அந்தப் பழக்கத்திலிருந்து அவர் விடுபட்டுவிட்டார்.

இந்தச் செய்தி உமரை அடைந்தபோது அவர் கூறினார், 'உங்களின் சகோதரர் தவறிழைப்பதைக் கண்டால் இவ்வாறே செயல்படுங்கள். அவரைச் சீர்படுத்துங்கள். அவருக்கு நம்பிக்கையூட்டுங்கள். அவருக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். அவரை வழிகெடுக்கும் ஷைத்தானுக்கு உதவியாளர்களாக ஆகிவிடாதீர்கள்.'

இந்தச் சம்பவத்தை நான் குறிப்பிடுவதன் நோக்கம், நம் காலத்தில் இறையருளில் நிராசையடைந்தவர்களைத் திட்டியும் இழிவுபடுத்தியும் அவர்களை இன்னும் நிராசையில் ஆழ்த்துபவர்களே காணப்படுகிறார்கள். தடுமாறிக் கீழே விழுந்தவர்களை ஒரேயடியாக அமிழ்த்திக் கொல்வதையே அவர்கள் நோக்கமாகக் கொண்டிருப்பார்கள்போல. ஆனால், இஸ்லாத்தின் எதிரிகளோ தவறி விழுந்தவர்களைக் கைதூக்கி, கடவுள் மன்னிப்பார் என்று நற்செய்தி கூறி தங்களின் மார்க்கத்தில் அவரை இணைத்துக்கொள்கிறார்கள்.

இந்த அத்தியாயத்துக்கு காஃபிர் - மன்னிப்பாளன் என்ற பெயரும் உண்டு. இத்தனைக்கும் அது மோசமான தர்க்கத்துக்கு எதிராக, அசத்தியத்தைக் கொண்டு கர்வம் கொள்வதற்கு எதிராகப் போரை அறிவிக்கிறது. அல்லாஹ் கூறுகிறான்:

*நிராகரிப்பாளர்கள்தாம் அல்லாஹ்வின் வசனங்களில் தர்க்கம் புரிகிறார்கள். நகரங்களில் அவர்களின் நடமாட்டம் உம்மை ஏமாற்றத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். இவர்களுக்கு முன் நூஹின் சமூகத்தினரும் அவர்களுக்குப் பின் வந்த கூட்டத்தினரும் நிராகரித்துள்ளனர். ஒவ்வொரு சமூகத்தினரும் தங்கள் தூதரைக் கொலை செய்யவே நாடினார்கள். அசத்தியத்தின் மூலம் சத்தியத்தை வீழ்த்தி விடத் தர்க்கம்செய்தார்கள். ஆனால், நான் அவர்களைப் பிடித்துக் கொண்டேன். எப்படி இருந்தது என் தண்டனை?* (4,5)

ஜிதால் - தர்க்கம் என்ற வார்த்தை மட்டும் இந்த அத்தியாயத்தில் ஐந்து முறை இடம்பெற்றுள்ளது. அசத்தியவாதிகளின் வழிமுறையை மூடியிருக்கும் திரையை அது அகற்றுகிறது. அவர்கள் பிடிவாதக்காரர்கள். அவர்கள் ஆதாரத்தைப் பின்பற்றுபவர்கள் அல்ல. எப்படியாவது எதிரியை வீழ்த்தி, தன் கர்வத்தை நிலைநிறுத்திவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே நோக்கம்.

ஆகவே, அல்லாஹ் அவர்களைக் குறித்து கூறுகிறான்:

*பூமியில் உரிமையின்றிக் கர்வம் கொள்வோரை நான் என் சான்றுகளைவிட்டும் திருப்பிவிடுவேன். அவர்கள் எல்லா விதமான சான்றுகளைக் கண்டாலும் அவற்றை நம்ப மாட்டார்கள். அவர்கள் நேர்வழியைக் கண்டாலும் அதனைத் தங்களுக்குரிய வழியாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால், தவறான வழியைக் கண்டால் அதனைத் தமதாக்கிக்கொள்வார்கள். இது ஏனெனில், அவர்கள் நம் சான்றுகளை மறுத்து அலட்சியமாக இருந்ததனாலே ஆகும்.* (7:146)

*சத்தியத்தை அறிந்துகொண்டே அசத்தியத்தைக் கொண்டு தர்க்கம் செய்யும் ஒவ்வொருவருக்குப் பின்னாலும் இதுதான் இருக்கிறது. இறைத்தூதர்கள் இப்படிப்பட்டவர்களால் சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. இறைத்தூதர்களைப் பின்பற்றுவோரும் ஒவ்வொரு கால கட்டத்திலும் இடத்திலும் இப்படிப்பட்டவர்களால் சிரமங்களை எதிர் கொள்ளவே செய்வார்கள்.*

*ஆனாலும் இவ்வுலக வாழ்வு சோதனையின் காலகட்டம்தான். நல் லோர்கள் அதில் ஏற்படும் சிரமங்களையும் வலிகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும். கருணைமிக்க இறைவனின் வானவர்கள் அவர் களைக் கண்காணிக்கிறார்கள். அவர்கள் களத்தில் நிலைகுலையாமல் உறுதியாக நின்றிட அல்லாஹ்விடம் இறைஞ்சுகிறார்கள். ஆகவே இந்த அத்தியாயத்தில் இடம்பெறுகிறது:*

> *அரியணையைச் சுமப்பவர்களும் அதனைச் சூழ உள்ளவர்களும் தம் இறைவனின் புகழைப் போற்றுகிறார்கள். அவன்மீது நம் பிக்கை கொண்டு நம்பிக்கையாளர்களுக்காக மன்னிப்பு கோரு கிறார்கள். 'எங்கள் இறைவா, நீ கருணையாலும் அறிவாலும் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளாய். ஆகவே, மன்னிப்பு கோரி உன் வழியைப் பின்பற்றுபவர்களை மன்னித்துவிடுவாயாக. நரக வேத னையை விட்டும் அவர்களைக் காப்பாயாக!'* (7)

*இந்த அத்தியாயத்தின் நடுப்பகுதியில் அசத்தியத்தைக் கொண்டு வாதிடக்கூடிய ஃபிர்அவ்னின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் குறித்து இரண்டு வசனங்கள் இடம்பெறுகின்றன. மூன்றாவது வசனத்தில், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ரோஷம் கொண்ட ஒரு நம்பிக்கையாளரின் அறி வுரை இடம்பெறுகிறது. அவர் அவர்களிடம் கூறுகிறார்: 'இதற்கு முன் யூசுஃப் உங்களிடம் தெளிவான ஆதாரங்களுடன் வந்தார். ஆயினும், நீங்கள் அவர் கொண்டுவந்தவற்றைக் குறித்து சந்தேகத்திலேயே இருந் தீர்கள்.* (34)'

*யூசுஃப் தவ்ஹீதின் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்களில் ஒருவராக இருந்தார். உண்மையான மார்க்கத்தின் அடித்தளங்களை அவர் தெளிவு படுத்தினார். அச்சமயத்தில் பரவியிருந்த சிலை வழிபாட்டுக்கு எதிராகக் கடுமையான தாக்குதலைத் தொடுத்தார். நீதியைக் கொண்டு எகிப்தை ஆட்சிசெய்தார். ஆனாலும் மனிதர்கள் அவரது மார்க்கத்தில் கூட்டம் கூட்டமாக நுழைந்தார்களா? நிச்சயமாக இல்லை. அவர் மரணிக்கும் வரை அவர் கொண்டுவந்த விசயம் குறித்து அவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்.*

அவருக்குப் பின் மூசா தூதராக அனுப்பப்பட்ட பிறகு மீண்டும் துன்பம் தொடர்ந்தது. நிராகரிப்பு இன்னும் வலுவடைந்துகொண்டே சென்றது.

> இவ்வாறே அல்லாஹ் வரம்புமீறுவோரையும் சந்தேகம் கொள்வோரையும் வழிதவறச் செய்கிறான். அவர்கள் தங்களிடம் எவ்வித ஆதாரமும் வராமலேயே அல்லாஹ்வின் வசனங்களில் தர்க்கம் புரிகிறார்கள். இது அல்லாஹ்விடமும் நம்பிக்கையாளர்களிடமும் மிகவும் வெறுப்புக்குரியதாகும். இவ்வாறே அல்லாஹ் கர்வம் கொண்ட அக்கிரமக்காரர்களின் உள்ளங்களில் முத்திரையிட்டு விடுகிறான். (34,35)

ஃபிர்அவ்னின் குடும்பத்தைச் சேர்ந்த நம்பிக்கை கொண்ட அந்த மனிதர் ஈமானிய விவகாரங்களுக்காக வாதிடும் வலிமையான மனிதர்களுள் ஒருவராக இருந்தார். சில சமயம் மென்மையாகப் பேசினார். சில சமயம் கடினமாகப் பேசினார். சில சமயம் வெளிப்படையாகப் பேசினார். சில சமயம் மறைமுகமாகப் பேசினார், முடிந்த அளவு ஃபிர்அவ்னின் அதிகாரத்துக்கு முன்னால் சத்தியத்தைத் தெளிவுபடுத்தும் இந்த உரையாடல் நீடிக்க வேண்டும் என்பதற்காக. அவர் மூசாவின் தூதுத்துவத்துக்காக வாதாடினாலும் உண்மையில் அவர் தூதுத்துவங்கள் அனைத்தின் சார்பாகவும் வாதாடினார். இறுதித் தூதரை எதிர்த்த இணைவைப்பாளர்களுக்குப் பதிலளிக்கும்போது அபூபக்கர் அந்த நம்பிக்கையாளர் பயன்படுத்திய அதே வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

குறைவான அறிதலுடன் வலிமையான மனஇச்சை இணைந்துவிட்டால் அது பெரும் துன்பமாக மாறிவிடுகிறது. மனவெளியை விசாலப்படுத்தும் அறிதல்களை அதிகப்படுத்துவதே அதற்கான தீர்வு. இச்சைக்கு அடிபணியாத அளவு உள்ளத்தை வலிமைப்படுத்த வேண்டும். தனிமனிதர்கள், அமைப்புகள் என அனைவருக்கும் இது பொருந்தக்கூடியது.

இந்த அத்தியாயத்தில் திருக்குர்ஆன் பூமியில் சுற்றித்திரிந்து பார்க்கும்படி இரு முறை கட்டளையிடுகிறது, மனிதன் தன் சிந்தனையைச் சீர்படுத்தும் விசயங்களைப் பெறும் பொருட்டு. அல்லாஹ் கூறுகிறான்:

> இவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து தங்களுக்கு முன்னிருந்தவர்களின் கதி என்னவாயிற்று என்பதைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் இவர்களைவிடப் பலம்மிக்கவர்களாகவும் பூமியில் அதிகமான அடையாளச் சின்னங்களை விட்டுச் சென்றவர்களாகவும் இருந்

*தார்கள். ஆயினும், அவர்களின் பாவங்களால் அல்லாஹ் அவர்களைத் தண்டித்தான். அவர்களை அல்லாஹ்விடமிருந்து காப்பாற்றுபவர் யாரும் இருக்கவில்லை. (21)*

*மனித வரலாறு படிப்பினைகளால் நிரம்பியுள்ளது. இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் நியதிகளைப் போன்று அதிலும் நியதிகள் காணப்படுகின்றன. வழிதவறியவனை நேர்வழியில் செலுத்தும் அளவுக்கு அதில் பல பாடங்கள் அடங்கியுள்ளன. மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:*

*அவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து தங்களுக்கு முன்னிருந்தவர்களின் கதி என்னவாயிற்று என்பதைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் இவர்களைவிட அதிக எண்ணிக்கை உடையவர்களாகவும் வலிமை மிக்கவர்களாகவும் இருந்தார்கள். பூமியில் பெரும் அடையாளங்களையும் விட்டுச்சென்றிருந்தார்கள். ஆயினும், அவர்கள் சம்பாதித்துக்கொண்டிருந்தவை அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்கவில்லை. (82)*

*திருக்குர்ஆன் இந்தக் கர்வத்தின் காரணிகளைத் தெளிவுபடுத்துகிறது. குறைவான அறிவைக் கொண்டு பூரிப்படையும் தன்மை. இந்தக் கர்வம்தான் தர்க்கத்துக்கும் பின்னால் இருக்கும் வலிமையான காரணி. 'அவர்களின் தூதர்கள் அவர்களிடம் தெளிவான ஆதாரங்களைக் கொண்டு வந்தபோது தம்மிடம் உள்ள சொற்ப அறிவைக் கொண்டே அவர்கள் பூரிப்படைந்தார்கள். அவர்கள் எதனைப் பரிகசித்துக்கொண்டிருந்தார்களோ அதுவே அவர்களைச் சூழ்ந்துகொண்டது. (83)' தவறிழைப்பவர்களில் பலர் தாங்கள் தவறிழைக்கிறோம் என்பதை அறிவதில்லை. மாறாக, தாங்கள் சரியானவற்றையே செய்கிறோம் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கர்வத்தை உடைக்கும் துன்பம் வரக்கூடிய சமயத்தில்தான் அவர்கள் விழிப்படைவார்கள்.*

*தங்களிடம் எவ்வித ஆதாரமும் வராமலேயே தர்க்கம்புரிபவர்களின் உள்ளங்களில் கர்வத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆயினும், அவர்கள் அதனை அடையப்போவதில்லை. ஆகவே, அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடிக்கொள்வீராக. நிச்சயமாக அவன் செவியேற்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான். (56)*

*இதுதான் இந்த அத்தியாயத்தில் ஜிதால் - தர்க்கம் - என்ற வார்த்தை இடம்பெறும் நான்காவது வசனம். இந்தச் சூழலை எதிர்கொள்ள நீண்ட பொறுமையும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருதலும் அவனிடம்*

உதவி கோருதலும் மிக அவசியம். பின்வரும் வசனம் இதனையே தெளிவுபடுத்துகிறது:

உம் பாவத்துக்காக மன்னிப்பு கோருவீராக. உம் இறைவனைக் காலையிலும் மாலையிலும் புகழ்ந்துபோற்றுவீராக ... (55)

இந்தப் பொறுமை என்பது குற்றவாளிகளுக்குக் கிடைக்கும் தண் டனையோடு தொடர்புடையதல்ல. அவர்களுக்கான தண்டனை தாமத மாகலாம். அது போராளியின் மரணத்துக்குப் பின்னால்கூட நிகழலாம். ஆனாலும் அவன் மனவுறுதியோடு தன் கடமையை நிறைவேற்ற வேண்டும். முடிவை அல்லாஹ்வுடைய அறிவின், ஆற்றலின் வசம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆகவே, பொறுமையைக் கடைப்பிடிக் கும்படி மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

நீர் பொறுத்துக்கொள்ளும். நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. நாம் அவர்களை எச்சரிக்கும் சிலவற்றை உமக்குக் காட்டினாலும் அல்லது நாம் உம்மை மரணிக்கச் செய்தாலும் அவர்கள் நம் பக்கமே திரும்ப வேண்டியுள்ளது. (77)

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அல்லாஹ் ஒருவனிடமே பிரார்த் திக்கும்படி, அவனுக்கு மட்டுமே மார்க்கத்தை உரித்தாக்கும்படி, அவனைத் தவிர பொய்யான கடவுள்கள் அனைத்தையும் விட்டுவிடும் படி - அவற்றைச் சுற்றிப் பெரும்பான்மையினர் கூடினாலும் - கட் டளையிடப்பட்டது.

ஆகவே, நம்பிக்கையை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவாறு அவ னையே அழையுங்கள். அது நிராகரிப்பாளர்களுக்கு எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் சரியே. அவன் உயர்ந்த அந்தஸ்துகளை உடையவன்; அரியணையின் அதிபதி. தன் அடியார்களில் தான் நாடுவோருக்கு அவன் தன் கட்டளையை அறிவிக்கிறான், சந்திக்கும் நாளைக் குறித்து எச்சரிக்கை செய்வதற்காக. அந்நாளில் அவர்கள் வெளிப்பட்டு வருவார்கள். அவர்களின் எந்த விசயமும் அல்லாஹ் வுக்கு மறைவாக இருக்காது ... (14-16)

வசனம் அலட்சியத்தில் இருப்போரை உலுக்கும் வண்ணம் அல்லாஹ் வின் மகத்துவத்தைப் பறைசாற்றுகிறது. அவர்களின் உள்ளத்தில் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டுக் கூலி கொடுக்கப்படுவது குறித்த மெல்லிய உணர்வை ஏற்படுத்துகிறது. தூதர்களின் பணி, சந்திக்கும் நாளைக் குறித்து எச்சரிக்கை செய்து, ஆன்ம ரீதியாக மனிதர்களைத் தயார்படுத்துவதுதான் என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

இந்தக் கருத்து இரண்டாவது முறையாக இந்த அத்தியாயத்தில் இடம்பெறுகிறது: 'உங்கள் இறைவன் கூறுகிறான், என்னையே அழை யுங்கள். நான் உங்கள் பிரார்த்தனைக்குப் பதிலளிக்கிறேன். என்னை வணங்குவதைவிட்டும் கர்வம் கொண்டவர்கள் வெகுவிரைவில் இழி வடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள். (60)'

இந்த நாகரிகத்தில் அல்லாஹ்வை வணங்குவது இரண்டாம்பட்ச நோக்கமாகப் பார்க்கப்படுகிறதா? இல்லை. அது ஒரு நோக்கமாகக்கூடப் பார்க்கப்பட்டதில்லை. அது உபரியான ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

ஆகவே, இந்த அத்தியாயத்தில் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு ஆரம்பமாகும், அவனை அறிமுகப்படுத்தும், அவனுடைய உரிமையை நினைவூட்டும் மூன்று வசனங்கள் இடம்பெறுகின்றன.

1. அல்லாஹ்தான் நீங்கள் ஓய்வெடுப்பதற்காக இரவைப் படைத் தான். பகலை அவன் பிரகாசமாக்கினான். நிச்சயமாக அல் லாஹ் மனிதர்களின் மீது பெரும் கிருபையாளனாக இருக் கிறான். ஆயினும், மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை. (61)

மனிதன் எதிர்கொள்ளும் ஒவ்வொரு புதிய காலையும் அவனுக்கு அருட்கொடைதான். அல்லாஹ்வைப் புகழ்ந்தவாறு நபியவர்கள் அதனை எதிர்கொண்டார்கள். அவர்கள் கூறுவார்கள், 'என் ஆன்மாவை எனக்குத் திருப்பியளித்த, என் உடலில் ஆரோக்கியமளித்த, தன்னை நினைவு கூர்வதற்கு எனக்கு அனுமதியளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.' ஒவ்வொரு நாளும் புத்தம்புதிய காற்றைச் சுவாசிக்கிறோமே! வாழ்க்கை என்பது படைப்பாளன் நமக்கு அளித்த கொடை என்பதை நாம் உணர் கிறோமா? அல்லது, வீணான விசயங்களில் ஈடுபட்டு நம்முடைய வாழ் நாளைக் கடத்துகிறோமா?

2. அல்லாஹ்தான் பூமியை உங்களுக்குத் தங்குமிடமாகவும் வானத்தை முகடாகவும் ஆக்கினான். உங்களை வடிவமைத்து உங்களை அழகாக்கினான் ... (64)

தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் சூரியனையும் சுற்றிக்கொண்டும் இந்தப் பூமி எப்படி நிலையாக இருக்கிறது என்பது எனக்குத் தெரிய வில்லை.

வானங்களையும் பூமியையும் தாங்கியிருப்பவன் ஆட்டம்காணாத வாறு, எந்த இடையூறும் அண்டாதவாறு அவற்றைப் பாதுகாத்துள்ளான்.

அரை நிமிட நிலநடுக்கத்தை நான் நேரில் கண்டிருக்கிறேன். அப்போது எங்களின் உணர்வுகளை நாங்கள் இழந்துவிட்டோம். கோள்களின் இயக்கத்தில் ஒழுங்குமுறைகளை ஏற்படுத்திய இறைவனின் ஆற்ற லால்தான் எறும்புகள் தங்களின் புற்றுகளில் நிம்மதியாக இருக்கின்றன. 'அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தி அவனைப் புகழ்கிறேன்; அவனது படைப்புகளின் எண்ணிக்கை அளவு; அவன் திருப்தியடையும் அளவு; அவனது அரியணையின் கனமளவு; அவனது வார்த்தைகளின் மையளவு.'

3. அல்லாஹ்தான் கால்நடைகளை உங்களுக்காகப் படைத்துள் ளான். அது, அவற்றில் சிலவற்றின் மீது நீங்கள் பயணம் செய் வதற்காகவும் சிலவற்றை நீங்கள் உண்பதற்காகவும்தான். அவற் றில் உங்களுக்கு இன்னும் பல பயன்களும் இருக்கின்றன ... (79,80)

விலங்குகள் உலகம்குறித்த ஓர் உரையை நான் ரேடியோவில் கேட் டுக்கொண்டிருந்தேன். அதில் இடம்பெற்ற ஒரு தகவல்: 'இந்தக் காட்டில் அரை மில்லியன் பறவை இனங்கள் இருப்பதாக உயிரியல் அறிஞர்கள் கணக்கிட்டுள்ளார்கள்.' இந்த எண்ணிக்கை என்னைப் பெருவியப்பில் ஆழ்த்திவிட்டது. எனக்கு நானே கூறிக்கொண்டேன்: 'மொத்த உலகத் திலும் பறவைகள், விலங்குகள், பூச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்? அவற்றுக்கு மத்தியில் இயல்பான சமநிலை காணப்படுகிறது. அதுதான் அவற்றின் வாழ்க்கையையும் மரணத்தையும் அவற்றுக்கும் நமக்கும் மத்தியிலான தொடர்பையும் ஒழுங்குபடுத்துகிறது.' 'உங்களுக்குத் தன் சான்றுகளை அவன் காட்டுகிறான். ஆகவே, அல்லாஹ்வின் சான்று களில் எதனை நீங்கள் மறுப்பீர்கள்? (81)'

மனிதர்களாகிய நாம் நம்மைக் கொண்டு பூரிப்படைகிறோம். நம் முடைய அறிவையும் ஆற்றலையும் கொண்டு கர்வம் கொள்கிறோம். ஏனெனில், நம்முடன் இந்தப் பிரபஞ்சத்தில் யாரெல்லாம் வசிக்கி றார்கள் என்பதை நாம் அறியவில்லை. இந்த அத்தியாயம் நம்மிடம் கூறுகிறது: 'நிச்சயமாக வானங்களையும் பூமியையும் படைப்பது மனி தர்களைப் படைப்பதைவிட மிகப் பெரியதாகும். ஆயினும், மனிதர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (57)'

நாம் பணிவுடன் நடப்போம். நம் கர்வத்தை உடைத்தெறிவோம்.

சில மனிதர்கள் ஒரு கொள்கையை அல்லது ஒரு வழிமுறையை ஏற்றுக்கொண்டு யாரையும் கவனிக்காமல் தங்களின் பாதையில் கடந்து விடலாம் என்று கருதுகிறார்கள். மௌனமாக இருப்பதை விரும்பி

அல்லது விவாதம்செய்வதை வெறுத்து அல்லது மற்றவர்களைத் தம்மிடம் இருக்கும் சரியான வழிகாட்டலைக் கொண்டு திருப்திப்படுத்த முடியாமல் அவர்கள் இந்த முடிவுக்கு வரலாம். இத்தகைய மக்கள் மிகக் குறைவானவர்களே. முந்தைய காலத்தில் இப்படியான ஒரு வாய்ப்பும் இருந்திருக்கிறது. அவர்கள் யாருடனும் தொடர்பு இல்லாமல் வாழ்ந்து மரணிக்கலாம்.

நம்முடைய இந்தக் காலத்தில் நாம் அவ்வாறு வாழ முடியாது. நாம் மற்ற மனிதர்களுடன் தொடர்புகொள்ளாமல் தனிமையில் வாழ முடியாது. முந்தைய காலத்தில் ஒரு சொல் இருந்தது: 'யார் அரசனை அறியவில்லையோ அவரும் அரசர்தான்.' ஆனால் தற்காலத்தில் ஆட்சியாளரை அறியாமல் இங்கு நாம் வாழ முடியாது. ஒருவேளை அப்படி வாழ்ந்தாலும் ஆட்சியாளர்கள் நம்மை இழுத்துவந்து தங்களுக்குக் கட்டுப்பட்டு வாழுமாறு நிர்ப்பந்திப்பார்கள்.

தற்போதைய ஆட்சி மக்களிடையே பல்வேறு விதமான தொடர்புகளை ஏற்படுத்தி, எந்த ஒரு மனிதனும் பிற மனிதர்களுடன் தொடர்பு கொள்ளாமல் தனியாக வாழ முடியாதவாறு செய்துவிட்டது. கண்டிப்பாக ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் கருத்துப்பரிமாற்றம் செய்யவும் தன் நிலைப்பாட்டை மற்றவர்களுக்கு ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தவும் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கவும் வேண்டும். இஸ்லாம் இத்தோடு நன்மையைக் கொண்டு தீமையை எதிர்கொள்வதையும் இணைத்துக் கொள்கிறது. 'தீமையை மிகச் சிறந்ததைக் கொண்டு தடுப்பீராக. அவர்கள் கூறுவதை நாம் நன்கறிவோம். (23:96)' நாமும் அவர்களைப் போன்று சப்தம் உயர்த்திக் கூச்சல்போடாமல் பொறுமையைக் கடைப்பிடிக்கும்போது விதி தன் பணியைச் செய்துவிடுகிறது. இப்படிப்பட்ட மனிதர்களிடம் நாம் வேறென்ன வகையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க முடியும்? 'அல்லாஹ்வே, இதுதான் உன்னிடமிருந்து வந்துள்ள உண்மையானால் எங்கள்மீது கல்மாரி பொழிந்துவிடு என்று அவர்கள் கூறுகிறார்கள். (8:32)'

நான் கருத்துச் சுதந்திரத்தை மிகவும் மதிக்கிறேன். ஆனால், மூடத்தனத்தையும் இட்டுக்கட்டிக் கூறுவதையும் அதிகாரத்தைக் கொண்டு தம் கருத்தை நிறுவ முனைவதையும் சத்தியம் உள்ளே புக முடியாதவாறு அறிவை மூடிக்கொள்வதையும் வெறுக்கிறேன். நிச்சயமாகக் கர்வம் மிக மோசமான பண்புகளில் ஒன்றாகும். இஸ்லாம் தன் ஆரம்பக் காலத்திலிருந்தே அல்லாஹ்வை மறுத்து பலதெய்வ வழிபாட்டில் மூழ்கிவிடுபவர்களையும் வானங்களையும் பூமியையும் படைத்துப் பராமரிப்பவனுக்குச் சிரம்பணிய மறுத்து கல்லுக்குச் சிரம்பணிபவர்களையும் எதிர்கொண்டுவருகிறது.

*இந்த அத்தியாயம், தர்க்கம்புரியும் இவர்களின் நிலைமைகளை ஐந்து இடங்களில் எடுத்துரைக்கிறது. அவற்றில் இது கடைசியானது:*

*அல்லாஹ்வின் சான்றுகளில் தர்க்கம்புரிவோர் எவ்வாறு திசை திருப்பப்படுகிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அவர்கள் இந்த வேதத்தையும் நம் தூதர்கள் கொண்டுவந்ததையும் நிராகரிக்கிறார்கள் ...* (69,70)

*அவர்கள் திருக்குர்ஆனை மட்டும் நிராகரிக்கவில்லை. மாறாக, இது வரை அருளப்பட்ட வஹீ அனைத்தையும் நிராகரிக்கிறார்கள். அவர்கள் மூசாவையும் ஈசாவையும் முஹம்மதையும் நிராகரிக்கிறார்கள்.*

*மேற்கு நாடுகளில் மதங்களைப் பின்பற்றுவோர் நவீனக் கலாச்சாரத்தால் அடித்துச்செல்லப்படும் தூசுகளாக இருப்பதைக் காண்கிறேன். அவர்கள் இஸ்லாத்தை வெறுக்கிறார்கள். ஏனெனில், அவர்களின் முன்னோர்கள் இஸ்லாத்தை வெறுத்தார்கள். அவர்கள் மூசாவின் மீதும் ஈசாவின் மீதும் நம்பிக்கை கொண்டார்களா? அல்லாஹ்வின் சந்திப்புக்காக எதையேனும் தயார்படுத்தி வைத்திருக்கிறார்களா? மாறாக, அவர்கள் நிகழ்காலத்தை வழிபடும், மறுமைநாளை வெறுக்கும் நவீனக் கலாச்சாரத்தின் ஓர் அங்கத்தினர். மேற்குலகம் தடைசெய்யப்பட்ட இன்பங்களையும் அநியாயத்தையும் அனுமதிக்கப்பட்டவையாகக் கருதுகிறது. வெள்ளை இனத்தாரை மட்டும் கொண்டாடும் அது பிற இனங்களின் மீது தாக்குதல் தொடுத்துக்கொண்டிருக்கிறது.*

*முஸ்லிம்கள் தங்கள் முன்னோர்களிடமிருந்து வாரிசாகப் பெற்ற மார்க்கத்தை முறையாகப் பின்பற்றுவதில், எடுத்துரைப்பதில் சோம்பேறித்தனம் செய்துள்ளார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அது தொழுகையை வீணாக்கி, மனஇச்சைகளின் பக்கம் அலையவைக்கும் நவீனக் கலாச்சாரத்தை எச்சரிக்கையாக அணுகுவதை விட்டும் அவர்களைத் தடுக்கவில்லை.*

❖ ❖ ❖

அத்தியாயம் 41

# ஃபுஸ்ஸிலத்

(தெளிவுபடுத்தப்பட்டது)

*இது அளவிலாக் கருணையாளன், இணையிலாக் கிருபையாள னிடமிருந்து அருளப்பட்டதாகும். (2)*

*அவனுடைய அருளின் வெளிப்பாடுதான் குர்ஆனின் வசனங்கள். அவை மனிதர்களை அவர்களின் தீங்கிலிருந்தும் அவர்களுடைய செயல்பாடுகளின் தீங்குகளிலிருந்தும் காக்கின்றன. சிந்தனைத் தடு மாற்றத்திலிருந்தும் இச்சைகளுக்குப் பின்னால் அலைவதிலிருந்தும் வலிமையால் வரம்புமீறுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கின்றன. முழுக்கமுழுக்க நன்மையையும் நீதியையும் கொண்டதுதான் இந்த வஹீ.*

*இது ஒரு வேதமாகும். அறபி மொழியில் அமைந்துள்ள குர்ஆ னாகிய இதன் வசனங்கள் அறிந்துகொள்ளும் மனிதர்களுக்காகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இது நற்செய்தி கூறக்கூடியதாகவும் எச்சரிக்கைசெய்யக்கூடியதாகவும் இருக்கிறது. (3,4)*

*அறிவுடையோர் இந்த வசனங்களின் சிறப்பை உணர்ந்துகொள்கிறார் கள். அவை இறையச்சமுடையோருக்கு இறைத் திருப்தியை வாக்க ளிக்கின்றன. மூடர்களைத் துர்பாக்கியத்தைக் கொண்டு எச்சரிக்கின்றன. ஆனால், மனிதர்களில் அறிவுடையோர் மிகக் குறைவானவர்களே! ஆகவே அவன் கூறுகிறான்: 'அவர்களில் பெரும்பாலோர் புறக்கணித்து விட்டார்கள். ஆகவே, அவர்கள் செவியேற்க மாட்டார்கள். (4)'*

*இந்தக் குர்ஆனின் அறபி மொழியும் அற்புதமாகும். இதன் கருத்து களை வேறு மொழியில் பெயர்க்கலாம். ஆனால், அது குர்ஆன் ஆகாது. அல்லாஹ் அறபு மொழியை வஹீயின் மொழியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். இந்த மொழி பேசுபவர்களை மனிதச் சமூகத்துக்கு வழி காட்டுவதற்காகத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்.*

இஸ்லாத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே அறபுகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, கடுமையாக எதிர்த்தார்கள். இறுதியில் சத்தியத்தை அறிந்து கொண்டு அதற்காகத் தங்கள் செல்வத்தையும் உயிரையும் அர்ப்பணித்தார்கள். நீண்ட காலமாக அநியாயக்காரர்களைப் பாதுகாத்துவந்த வல்லரசுகளை வீழ்த்தினார்கள்.

ஆனால் தற்கால அறபுகளிடம் இரண்டு கீழான பண்புகள் ஒருசேரக் காணப்படுகின்றன. அவர்கள் இஸ்லாமிய நாகரிகம் வீழ்ச்சியடைந்த போது வாழ்ந்த தங்கள் முன்னோர்களின் பழக்கவழக்கங்களை அப்படியே பின்பற்றுகிறார்கள். உலக இன்பங்களில் மூழ்கித்திளைக்கும் மேற்கத்திய கலாச்சாரத்தின் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுகிறார்கள்.

அறபுகளில் காணப்படும் நாத்திகர்களைவிட இழிவான, சிந்தனைத் தடுமாற்றம் கொண்ட நியாயமற்ற மனிதர்களை நான் கண்டதில்லை. அவர்களைக் குறித்து, 'அவர்கள் அபூஜஹ்லின் இந்தக் கூற்றை அப்படியே திரும்பக் கூறுகிறார்கள்.' என்று கூற முடியும்:

'நீர் எதன் பக்கம் எங்களை அழைக்கிறீரோ அதனைவிட்டு எங்கள் உள்ளங்கள் உறையிடப்பட்டுள்ளன. எங்கள் செவிகளில் அடைப்பு உள்ளது. உமக்கும் எங்களுக்குமிடையே ஒரு திரை இருக்கிறது. ஆகவே, நீர் உம் வழியில் செயல்படும். நாங்களும் எங்கள் வழிகளில் செயல்படுகிறோம்.' என்று அவர்கள் கூறுகிறார்கள். (5)

இஸ்லாம் என்னும் இந்தத் தூதைச் சுமப்பதற்காக அல்லாஹ் அறபுகளைத் தெரிவுசெய்தான். அவர்களின் மொழியில் அதன் வழிகாட்டல்களைத் தெளிவுபடுத்தினான். அவன் கூறுகிறான்:

நாம் இதனை அறபி அல்லாத வேற்று மொழியில் அருளியிருந்தால் 'இதன் வசனங்கள் தெளிவாக்கப்பட்டிருக்க வேண்டாமா?' என்றும் 'வேதமோ வேற்று மொழியில், மக்களோ அறபிகள்!' என்றும் அவர்கள் கூறியிருப்பார்கள். நீர் கூறும், 'இது நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்டியாகவும் நிவாரணியாகவும் இருக்கிறது. நம்பிக்கை கொள்ளாதவர்களின் செவிகளில் அடைப்பு இருக்கிறது. அது அவர்களின் பார்வைக்குத் திரையாகவும் உள்ளது. அவர்கள் தூரமான இடத்திலிருந்து அழைக்கப்படுவார்கள்.' (44)

உலகில் உள்ள எந்த மனிதனும் அறபு மொழியைத் திறம்படக் கற்றுவிட்டால் அவன் அறபியாகக் கருதப்படுவான். அறபுகள் என்பது குறிப்பிட்ட இனத்தாரைக் குறிப்பதல்ல. மாறாக, முந்தைய காலத்தில் அறபுகளைவிடப் பாரசீகர்கள், ரோமானியர் எனப் பல்வேறு நாடுகளைச்

சேர்ந்தவர்கள் அறபு மொழிக்கும் குர்ஆனுக்கும் பணிவிடைசெய்து, புகழ்பெற்ற புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள்.

இருக்க வேண்டிய பண்பு என்னவெனில், உள்ளத்தில் உறையோ செவிகளில் அடைப்போ பார்வையில் திரையோ இன்றிப் புரிந்துகொள் ளக்கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

எந்த ஒரு மனிதனாலும் முஹம்மதைப் பின்பற்ற முடியும். அவர் மனிதச் சமூகத்தை நோக்கிக் கூறுகிறார்:

> நீர் கூறும், 'நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். ஆயினும், எனக்கு இறைவனிடமிருந்து வஹீ அறிவிக்கப்படுகிறது. உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான். அவன் பக்கமே கவனம் செலுத் துங்கள். அவனிடமே மன்னிப்பு கோருங்கள்.' இணைவைப்பா ளர்களுக்குக் கேடுதான். அவர்கள் ஸகாத்தை வழங்குவதில்லை. மறுமையையும் மறுக்கிறார்கள். (6,7)

நேரான வழியில் நிலைத்திருப்பதும் பாவமன்னிப்பு கோருவதும் சிரமமான காரியமா என்ன? அல்லாஹ் ஒருவனை வணங்குவதும் ஏழைகளுடன் கருணையுடன் நடந்துகொள்வதும் சிரமமான கடமைகளா என்ன?

பேராசையும் கர்வமும் கொண்டவர்களுக்குத்தான் அது கடினமானது. அவர்கள் சென்றடையும் இடம் மிக மோசமானது. ஆகவே, அறபுகள் சத்தியத்தைப் புறக்கணித்தால், தூதரை ஏற்க மறுத்தால் கேடு உண்டா கும் என்றும் அவர்களின் முன்னோர்களான ஆது சமூகத்தினரும் ஸமூது சமூகத்தினரும் அடைந்த விளைவுகளையே அவர்களும் அடைவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டார்கள். 'ஆகவே, அவர்கள் புறக்கணித்து விடு வார்களாயின் நீர் கூறிவிடும், நான் உங்களுக்கு ஆது, ஸமூது கூட்டத் தாருக்கு ஏற்பட்ட இடியோசையைப் போன்ற வேதனையைக் குறித்து எச்சரிக்கிறேன். (13)'

மோசமான பண்புகளால் ஏற்படும் விளைவுகள் ஒத்தவை. அவை எந்தக் காலத்தில் பின்பற்றப்பட்டாலும் சரியே.

ஆது சமூகத்தினர் ஏன் அழிக்கப்பட்டார்கள்? 'ஆது சமூகத்தினர் பூமியில் உரிமையின்றி ஆணவம் கொண்டு, எங்களைவிட வலிமை வாய்ந்தவர்கள் யார் என்று கேட்டார்கள். அவர்களைப் படைத்த இறைவன் அவர்களைவிட வலிமை வாய்ந்தவன் என்பதை அவர்கள் அறியவில்லையா? (15)'

ஸமூது சமூகத்தினர் ஏன் அழிக்கப்பட்டார்கள்? 'ஸமூது கூட்டத் தினருக்கு நாம் நேர்வழி காட்டினோம். ஆனால், அவர்கள் நேர்வழிக்குப் பதிலாகக் குருட்டுத்தனத்தை விரும்பினார்கள். (17)'

ஆது சமூகத்தினர் சத்தியத்தை நிராகரித்தார்கள்; பிற மனிதர்களை இழிவாகக் கருதினார்கள். ஸமூது சமூகத்தினர் நேர்வழியை விட்டு விட்டுத் தவறான வழியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். இந்தப் பண்புகள்தாம் அவர்களை இந்த முடிவின் பக்கம் கொண்டுசேர்த்தன. இந்தப் பண்புகளைப் பெற்றிருந்தவர்கள் இந்த விளைவை அடையாமல் தப்பினார்களா? நிச்சயமாக இல்லை. அல்லாஹ் குழப்பவாதிகளின் செயலைச் சீர்படுத்துவதில்லை. இன்றைய அறபுகளையும் இஸ்லாத் துடன் அவர்களின் அணுகுமுறையையும் நான் காண்கிறேன். துர்சகுனமே என்னை மிகைக்கிறது ...

இந்த உலகில் வழங்கப்படும் தண்டனை மறுமையில் வழங்கப்படும் தண்டனையைத் தடுக்காது. 'அல்லாஹ்வின் எதிரிகள் நரகத்தின் பக்கம் ஒன்றுதிரட்டப்படும்போது அவர்கள் தனித்தனியாகப் பிரிக்கப்படுவார் கள். இறுதியில் அவர்கள் அங்கு வந்ததும் அவர்களின் செவிகளும் கண்களும் தோல்களும் அவர்களுக்கு எதிராக அவர்கள் செய்துகொண்டி ருந்தவற்றைக் குறித்து சாட்சி கூறும். (19,20)'

செவியும் பார்வையும் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய அருட்கொடை கள். அவற்றைக் கொண்டு அவன் படைப்பின் மகத்துவத்தை அறிந்து, படைப்பாளனின் மகத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற் காகவும் தன் அறிவைக் கொண்டு பிரபஞ்சத்தை அறிந்து 'அல்லாஹ்வே பெரியவன்' என்று கூறுவதற்காகவும்தான். மனிதன் தன் செவியையும் பார்வையையும் மூடிவிட்டால் அவன் அல்லாஹ்வின் பக்கம் செல்லும் வழியைத் தேர்ந்தெடுக்க முடியாது. வீணடிக்கப்பட்ட இந்த உறுப்பு கள்தான் மனிதனுக்கு எதிராக முதலில் சாட்சி சொல்லும். அவனை வேதனையின் பக்கம் இட்டுச்செல்லும். அவன் மறுமையில் நரகத்தில் வீசியெறியப்படும்போது விலங்குகள் கூட அடையாத மோசமான இருப் பிடத்தை அடைவான்.

அழைப்பையும் நிராகரிப்பாளர்களுக்கான தண்டனையையும் எடுத் துரைப்பதினூடே நீண்ட, ஆன்மரீதியான ஆட்சேபணை ஒன்று இடம் பெறுகிறது. அது படைப்புகளின் தொடக்கம், பிரம்மாண்டமான இந்தப் பிரபஞ்சத்தின் ஒழுங்கமைப்பு ஆகியவற்றை எடுத்துரைப்பதினூடே இடம்பெறுகிறது.

*நீர் கூறும், 'பூமியை இரண்டு நாள்களில் படைத்தவனையா நீங்கள் நிராகரித்துவிட்டு அவனுக்கு இணைகளை ஏற்படுத்துகிறீர்கள்?' அவன் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனாவான். அவன் பூமியின் மீது மலைகளை அமைத்து பயனுள்ள பலவற்றை அதில் உண்டாக்கினான். அதில் உணவுகளை சரியாக நான்கு நாள்களில் நிர்ணயம் செய்தான். இதுகுறித்து கேட்ப வர்களுக்கான விடை இதுதான்.* (9,10)

*மனிதன் இந்தப் பூமியில் பிறந்து அதன் விளைச்சல்களையே உண்டு வாழ்கிறான். அவனுக்குப் பிரதிநிதித்துவ அந்தஸ்து வழங்கப்பட்ட திலிருந்து இந்தப் பூமியில் உள்ள பொருள்களுக்கு அவனே உரிமை யாளனாக இருக்கிறான். அது, அவனைப் படைத்துச் செம்மைப்படுத்தி அவனுக்குள் தன் ஆன்மாவை ஊதிய இறைவனுக்கு அவன் அடிமை யாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் மனிதனோ மறந்து விட்டு வரம்புமீறுகிறான்.*

*அறிஞர்களின் கூற்றுகளிலிருந்து அல்லாஹ் சூரியக் குடும்பத்தையே முதன்முதலாகப் படைத்தான் என்பது தெளிவாகிறது. 'அவனே வானங் களையும் பூமியையும் படைத்தான். இருள்களையும் ஒளியையும் உண் டாக்கினான் ...* (6:1)'

*பின்னர் பூமியை அங்கு வசிப்பவர்கள் வாழ்வதற்குத் தகுதியானதாக ஆக்கியபிறகு அல்லாஹ் மனிதனைப் படைத்தான். அதில் அபிவிருத்தி செய்து மனிதர்களுக்கான உணவை நிர்ணயம் செய்தான். வேறுசில வசனங்களில், மனிதனின் கவனம் அவனுக்கு நெருக்கமான ஒரு பொருளின் பக்கம், அவன் வாழும் பூமியின் பக்கம் திருப்பப்படுகிறது. அவன் விரும்பினால் நம்பிக்கை கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். இஸ்லாமிய அழைப்பு விடுக்கப்பட்டபிறகு இந்த உண்மைகள் எடுத்து ரைக்கப்படுவது புரிந்துகொள்ளக்கூடியதுதான். இவற்றைக் குறித்து சிந்திப்பதே ஈமானின் அடித்தளமாகும். இவற்றைக் கண்டும்காணாமல் இருந்துவிடுவது அழிவின் பக்கம் இட்டுச்செல்லும்.*

*இந்த அத்தியாயத்தின் நடுவில் மனிதனோடு தொடர்புடைய வேறொரு படைப்பு குறித்த செய்தி இடம்பெறுகிறது. அதில் ஜின் களையும் அவை ஏற்படுத்தும் ஊசலாட்டங்களையும் குறித்தும் வான வர்களையும் அவர்கள் ஏற்படுத்தும் உள்ளுதிப்புகளையும் குறித்தும் பேசப்படுகிறது. சடவாதிகள் இவையனைத்தையும் நிராகரிக்கிறார்கள். அவர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை என்பதைத் தவிர எந்த ஆதாரமும் அவர்களிடம் இல்லை.*

நாம் பார்க்கக்கூடிய உலகையும் அதற்குப் பின்னால் இருப்பவற்றை யும் மதிக்கிறோம். ஜின்கள், வானவர்கள், மனிதர்கள் என அனைவரை யும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஜின்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள்; மனிதர்களோடு ஒட்டி வாழும் ஷைத்தான்களும் இருக்கிறார்கள். அவர்கள் மனிதர்களைப் பாவமான செயல்களைச் செய்யத் தூண்டுகிறார்கள்.

ஷைத்தான்களின் தலைவனான இப்லீஸ் ஆதமின் அலட்சியத்தைப் பயன்படுத்திக்கொண்டான். தடுக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கு மாறு அவரைத் தூண்டினான். தான் அவருடைய நலம்விரும்பி எனப் பொய்யாகச் சத்தியம்செய்து கூறினான். ஆதம் அந்த மரத்தின் கனியை உண்டார். சுவனத்திலிருந்து விரட்டப்பட்டார். மறதியும் உறுதியின்மை யும்தான் அவர் சுவனத்திலிருந்து அகற்றப்பட்டதற்கான முதல் காரணிகள். இரண்டாவது காரணி, அவரை ஏமாற்றுவதற்காகச் சமயம் எதிர்பார்த்துக் காத்துக்கிடந்த ஷைத்தான்தான்.

இவ்வாறே ஷைத்தான் இஸ்லாமிய அழைப்பின் ஆரம்பக் கட்டத்தில் இஸ்லாத்தின் எதிரிகளுடன் நடந்துகொண்டான். அல்லாஹ் கூறுகிறான்:

> நாம் அவர்களுடன் சில தோழர்களை இணைத்துவிட்டோம். அவர்கள் இவர்களுக்கு முன்னும் பின்னும் உள்ள ஒவ்வொன்றை யும் அழகாக்கிக் காட்டினார்கள். முன்சென்ற மனிதர்கள்மீதும் ஜின்கள்மீதும் உறுதியான அதே விசயம் இவர்கள்மீதும் உறுதி யாகிவிட்டது. நிச்சயமாக அவர்கள் நஷ்டமடைந்தவர்களாக இருந் தார்கள். ‘இந்தக் குர்ஆனைச் செவியேற்காதீர்கள். நீங்கள் மிகைத்து விடும் பொருட்டு இதற்கு இடையூறு ஏற்படுத்துங்கள்.’ என்று இந்நிராகரிப்பாளர்கள் கூறுகிறார்கள். (25,26)

நிராகரிப்பாளர்கள் குர்ஆனை நிராகரித்தார்கள். அதனைச் செவியேற் பதைக்கூட வெறுத்தார்கள். குர்ஆன் ஓதப்படும்போது அது யாருடைய உள்ளத்திலும் நுழைந்துவிடாதிருக்க கூச்சல்போடும்படி ஷைத்தான் அவர்களைத் தூண்டினான். சத்தியத்தை எதிர்கொள்ள முடியாமல், அதனுடன் விவாதம் செய்ய முடியாமல் அவர்கள் இறுதியில் இந்த நிலையையே அடைகிறார்கள். சத்தியத்தைப் புறக்கணிக்கும் ஒவ்வொரு வரையும் ஷைத்தான் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுமாறு தூண்டு கிறான்.

தங்களின் இந்த நடத்தைக்காக மறுமைநாளில் அவர்கள் வருத்தப் படுவார்கள். நிராகரிப்பாளர்கள் கூறுவார்கள்:

எங்கள் இறைவா, ஜின்கள், மனிதர்களில் எங்களை வழி கெடுத்தவர்களை எங்களுக்குக் காட்டு. அவர்களை இழிவுபடுத்தும் பொருட்டு நாங்கள் அவர்களை எங்கள் கால்களுக்குக் கீழே போட்டு மிதித்துவிடுகிறோம். (29)

சத்தியத்தைக் கொண்டு திருப்தியடைந்த அறிவுடையோர் அதற்கு உதவிசெய்வதற்காக முன்வருவார்கள். வானவர்கள் அவர்களைச் சூற்றிக் கொள்வார்கள். இடையூறுகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பார்கள்.

யாரெல்லாம் 'அல்லாஹ்தான் எங்கள் இறைவன்' என்று கூறி அதில் உறுதியாக நிலைத்துநின்றார்களோ அவர்களிடம் வானவர்கள் வந்து, 'நீங்கள் பயப்பட வேண்டாம்; கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு வாக்களிப்பட்ட சுவனத்தைக் கொண்டு நற்செய்தி பெற்றுக்கொள்ளுங்கள்.' என்று கூறுவார்கள். (30)

இந்த வசனம், மனிதன் உலகைவிட்டுப் பிரியும் சமயத்தில், மறுவுலகப் பயணத்துக்கான முதல் படியின்போது வானவர்கள் இறங்குவதைக் குறிக்கும் என்று பெரும்பாலான குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள். வானவர்கள் வந்து அவர்கள் விட்டுச்செல்லும் பிரியமானவர்களின் விசயத்தில் அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் இறைவனிடம் பெறப் போகும் திருப்தியைக் கொண்டு அவர்களுக்கு நிம்மதியளிப்பார்கள்.

இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதில் பிரச்சினை ஏதும் இல்லை. அதே போன்று இது, ஜிஹாதின்போது வானவர்கள் இறங்கி நம்பிக்கையாளர்களுக்கு நல்ல உள்ளுதிப்புகளை ஏற்படுத்தி, சத்தியத்தில் அவர்கள் நிலைத்திருப்பதற்கு உதவியும் செய்வார்கள் என்ற கருத்துக்கு மாறானதும் இல்லை. அல்லாஹ்வை நல்ல முறையில் புகழ்ந்த ஒரு மனிதரைக் குறித்து நபியவர்கள், 'கண்ணியமான வானவர் ஒருவரும் உமக்கு உதவி செய்துள்ளார்.' என்றும் கூறியிருக்கிறார்கள். அதே போன்று, கவிஞரான ஹஸ்ஸான் இப்னு ஸாபித்தைக் குறித்து நபியவர்கள், 'றூஹுல் குத்ஸ் உம்மை வலுப்படுத்துகிறார்.' என்றும் கூறியிருக்கிறார்கள்.

ஷைத்தான்கள் அசத்தியத்துக்காக உதவிசெய்வதுபோன்று வானவர்கள் சத்தியத்துக்காக உதவிசெய்கிறார்கள். நன்மையும் தண்டனையும் மனிதனின் நோக்கத்தை, அவனுடைய சம்பாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டவை.

மனிதனை அல்லாஹ்வைவிட்டுத் தூரமாக்குவதில், மனிதனுக்கு முன்னால் இருக்கும் நேரான வழியைவிட்டு அவனைக் குருடாக்குவதில் ஷைத்தான் கைதேர்ந்தவனாக இருக்கிறான். அல்லாஹ்வின் பக்கம்

அழைக்கும் பணி என்பது மனிதர்களுக்கு நினைவூட்டுவதும் சோம் பேறித்தனத்திலிருந்து விடுவித்து அவர்களைச் சுறுசுறுப்பானவர் களாக ஆக்குவதுமாகும். அது உண்மைகளைப் பாதுகாத்து ஷைத்தான் களுக்குப் பதிலடி கொடுக்கிறது. மூடநம்பிக்கைகளையும் தீய இச்சை களையும் அடித்துவிரட்டுகிறது. 'யார் அல்லாஹ்வின் பக்கம் அழைத்து, நற்செயல் புரிந்து, நான் கீழ்ப்படிந்தவர்களில் ஒருவன் என்று கூறுகி றாரோ அவரைவிட அழகிய சொல்லை உடையவர் யார்? (33)'

காலங்கள் கடந்தாலும் இறைத்தூதர்களே அழைப்பாளர்களின் வழி காட்டிகள். ஈமானை உறுதிப்படுத்தவும் நன்மையை வெற்றிபெறச் செய்யவுமே அவர்கள் செயல்படுகிறார்கள். மனிதர்களுக்கு அவர்களின் இறைவனை அறிமுகப்படுத்துவதும் அவனை அவர்களுக்குப் பிரிய மானவனாக ஆக்கிக்காட்டுவதுமே அவர்களின் முதன்மையான பணி. இந்த நோக்கத்தை நிலைநிறுத்தவே இந்த அத்தியாயத்தில் பின்வரும் வசனங்கள் இடம்பெறுகின்றன:

❖ இரவும் பகலும் சூரியனும் சந்திரனும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். நீங்கள் சூரியனையும் சந்திரனையும் வணங் காதீர்கள். அவற்றைப் படைத்த அல்லாஹ்வையே வணங்குங் கள், நீங்கள் அவனை வணங்குபவர்களாயின். (37)

❖ அவனது சான்றுகளில் ஒன்று, நீர் பூமியை வறண்ட நிலையில் காண்கிறீர். நாம் அதன் மீது மழை பொழியச்செய்தால் அது செழித்துவளர்கிறது. (39)

❖ 'அந்நேரம்' பற்றிய அறிவு அவனையே சார்ந்தது. அவனுக்குத் தெரியாமல் எந்தக் கனியும் தன் சூல்கொத்திலிருந்து வெளிப் படுவதில்லை; எந்தப் பெண்ணும் கர்ப்பம் தரிப்பதுமில்லை, பிரசவிப்பதுமில்லை. (47)

கவலைக்குரிய விசயம் என்னவென்றால், தற்காலத்தில் இஸ்லாமிய அழைப்பு முடங்கிப்போய் உள்ளது. சில காலகட்டத்திலும் நகரங்களிலும் அது முழுவதுமாக மறைந்திருக்கிறது. இந்த அழைப்புக்குப் பணி யாற்றாமல் தங்களின் மனஇச்சைகளை நிறைவேற்றுவதிலும் குலப் பெருமைகளைப் பறைசாற்றுவதிலும் மூழ்கிவிட்ட அறபுகள் தங்களின் மார்க்கத்தை வீணாக்கிவிட்டார்கள்; தங்களின் ஆட்சியை இழந்து விட்டார்கள். பின்வரும் வசனங்களை அவர்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம்:

அ. நம் வசனங்களுக்குத் தவறான பொருள் கற்பிப்பவர்கள் நம்மை விட்டும் மறைவாக இல்லை.

ஆ. அறிவுரை தங்களிடம் வந்தபின்னரும் அதனை நிராகரித்து விடுபவர்கள் நம்மைவிட்டும் மறைவாக இல்லை. இது ஆற்றல் மிக்க வேதமாகும். (40-42)

முஹம்மது கொண்டுவந்த மார்க்கத்தை அறபுகள் சுமப்பது இறைத் தூதர்கள் அனைவரும் கொண்டுவந்த மார்க்கங்களைச் சுமப்பது போன்றதாகும். அவர்கள் இவ்வுலகத்தில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அருளப்பட்ட வஹீயைச் சுமப்பவர்கள். 'உமக்கு முன் வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டதுதான் உமக்கும் கூறப்படுகிறது. நிச்சயமாக உம் இறைவன் பெரும் மன்னிப்பாளனாகவும் துன்புறுத்தும் தண்டனை யளிப்பவனாகவும் இருக்கிறான். (43)'

வேதக்காரர்கள் தங்களிடம் உள்ள மார்க்கத்தை வீணாக்கினார்கள். அதன் அடித்தளங்களை மறந்தார்கள்.

நாம் மூசாவுக்கு வேதத்தை வழங்கினோம். ஆனால், அதில் கருத்து வேறுபாடு கொள்ளப்பட்டது. உம் இறைவன் ஒரு விசயத்தை முன்னரே முடிவுசெய்திராவிட்டால் அவர்களிடையே தீர்ப்பளிக் கப்பட்டிருக்கும். (45)

விசித்திரம் என்னவென்றால், இன்று தங்களின் மார்க்கத்தை எடுத் துரைப்பதில் முஸ்லிம்களைவிட அவர்கள்தாம் முன்னணியில் இருக்கி றார்கள். உலகின் பல பாகங்களில் அவர்களின் மிஷனரிகள் பணியாற் றிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த அத்தியாயம் தற்கால அறபுகள், கடந்தகால அறபுகள் என அனைவரையும் விளித்து உரையாடும் சில வசனங்களோடு நிறைவடை கிறது.

நீர் கேளும், 'நீங்களே கூறுங்கள், இக்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்திருந்தும் நீங்கள் அதனை நிராகரித்தால் பகைமையில் வெகு தூரம் சென்றுவிட்டவனை விட வழிகெட்டவன் வேறு யார் இருக்க முடியும்?' (52)

பின்னர் அல்லாஹ் கூறுகிறான்:

இதுதான் சத்தியம் என்பது அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு (பிரபஞ்சத்தின்) பல பாகங்களிலும் அவர்களுக்குள்ளேயும் விரைவில் நாம் நம் சான்றுகளைக் காட்டுவோம். உம் இறைவன் எல்லாவற்றுக்கும் சாட்சியாளனாக இருக்கிறான் என்பது உமக்குப் போதுமானதாக இல்லையா? (53)

நாள்கள் செல்லச் செல்லக் குர்ஆனின் ஒளி மேலும் மேலும் பிரகாசமடைந்து கொண்டும் அதன் உண்மைகள் இன்னும் வலுவாகிக் கொண்டும் முஹம்மதின் தூது உறுதியாக நிலைபெற்றுக்கொண்டும் செல்கின்றன. அவர் தூய தவ்ஹீதின் பக்கம் அழைத்தார். தூதர்களை அனுப்பியவனைத் தவிர புதிய கடவுள் யாரேனும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறாரா? அவன்தான் தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் அவசியமான வழிகாட்டல்களை வழங்கியுள்ளான். அந்த வழிகாட்டல்களில் ஏதேனும் குறையிருக்கிறதா?

*அறிந்துகொள்ளுங்கள், தம் இறைவனை அவர்கள் சந்திப்பதைக் குறித்து சந்தேகத்தில் ஆழ்ந்துகிடக்கிறார்கள். அறிந்துகொள்ளுங்கள், அவன் ஒவ்வொன்றையும் சூழ்ந்தவனாக இருக்கிறான்.* (54)

❖ ❖ ❖

அத்தியாயம் 42

# அஷ்ஷூறா

(கலந்தாலோசனை)

*தனித்தனி எழுத்துகளைக் கொண்டு ஆரம்பமாகும் ஐந்து அத்தியாயங்களுக்குப் பிறகு இடம்பெறும் முதல் அத்தியாயம் அஷ்ஷூறாவாகும். அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்: 'இவ்வாறே உமக்கும் உமக்கு முன் சென்றவர்களுக்கும் யாவற்றையும் மிகைத்த, ஞானம்மிக்க இறைவன் அறிவிக்கிறான்.* (3)' *தூதர்கள் அவர்களின் சமூகத்தினுடைய மொழியில்தான் அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் பேசிப் பழக்கப்பட்ட எழுத்துகளிலிருந்தே வார்த்தைகள் உருவாகின்றன. குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களுக்குத் தெளிவான அறபி மொழியில் அருளப்பட்டது. பின்னர், அது அருளப்பட்டதுபோன்றே நபியவர்கள் அதனை எடுத்துரைத்தார்கள். தம்முடைய பண்பாலும் நடத்தையாலும் அதற்கு விரிவுரையாகத் திகழ்ந்தார்கள்.*

*இவ்வாறே அவருக்குப் பிறகு அவருடைய தோழர்களும் அவர்களின் மாணவர்களும் செய்தார்கள். அவர்கள் பூமியிலிருந்து தீங்கினை அகற்றிவிட்டார்களா? தவறுகள் அனைத்தையும் சீர்படுத்திவிட்டார்களா? அவர்கள் தங்களால் இயன்ற அளவு முயன்றார்கள். ஆனாலும் மனிதச் சமூகம் தோன்றியதிலிருந்தே வஹீயை மறந்துவருகிறது அல்லது மறந்தது போன்று நடித்துவருகிறது. படைப்பாளனின் வல்லமையைப் பறைசாற்றும் இந்தப் பிரபஞ்சத்தில் அது தன் வட்டப்பாதையிலிருந்து விலகிச் செல்லும் நட்சத்திரமாக இருக்கிறது. 'வானங்கள் தனக்கு மேலிருந்து வெடித்துவிடவும் கூடும். வானவர்கள் தம் இறைவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். பூமியில் உள்ளவர்களுக்காக மன்னிப்பு கோருகிறார்கள். அறிந்துகொள்ளுங்கள், நிச்சயமாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான்.* (5)'

அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வஹீயைக் குறித்தும் அதனைச் சுமப்பவர்களைக் குறித்தும் கூறப்படுகிறது. அதன் மத்தியில், இந்த வஹீயைச் சுமப்பதற்காகத் தேர்வுசெய்யப்பட்ட அறபுகள்மீது சுமத்தப்பட்ட பணிகள் குறிப்பிடப்படுகின்றன. அவர்களுக்கும் ஆரம்பக் கால வேதக்காரர்களுக்கும் மத்தியிலான தொடர்பு தெளிவுபடுத்தப் படுகிறது.

> இவ்வாறே நாம் அறபி மொழியிலான இந்தக் குர்ஆனை உமக்கு அறிவித்துள்ளோம். (அதன் மூலம்) மக்காவில் உள்ளவர்களையும் அதனைச் சூழ உள்ளவர்களையும் ஒன்றுதிரட்டப்படும் நாளைக் குறித்து நீர் எச்சரிக்கைசெய்வதற்காகத்தான். அந்நாள் வருவதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. ஒரு பிரிவினர் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஒரு பிரிவினர் நரகத்தில் இருப்பார்கள். (7)

இஸ்லாம் என்பது அனைவருக்கும் பொதுவான நிரந்தரமான மார்க்கம். அது மறுமைநாள்வரை வரக்கூடிய மனிதர்கள் அனைவருக்குமானது. ஆயினும், அதன் புறப்பாட்டுக்கு ஓர் ஆரம்பம் இருக்க வேண்டும், அல்லவா? அது உம்முல் குறாவும் அதனைச் சூழ உள்ள நகரங்களும் ஆகும். அழைப்பியல் களம் உலகம் முழுமையும் ஆகும். முஹம்மதும் அவருடைய தோழர்களும் தங்களின் கடமைகளை நிறைவேற்றினார்கள். தொடங்கிய அரை நூற்றாண்டுக்குள் இஸ்லாம் கிழக்கிலிருந்து மேற்கு வரை உலகின் பல பாகங்களுக்கும் சென்றடைந்தது. ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பெரும் வல்லரசுகளை அது வீழ்த்தியது.

ஆரம்பத்தில் வஹீயைச் சுமந்தவர்களின் செய்தி என்ன?

ஆனால் யூதர்களோ அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் அழைப்புப் பணியோடு தங்களுக்கு இருந்த தொடர்பை அறுத்தெறிந்து விட்டார்கள். வாரிசாகப் பெறக்கூடிய இனவாதமாக மார்க்கத்தை ஆக்கினார்கள். அதனைப் பிழைப்புக்கான வழிமுறையாக ஆக்கி உண் டார்கள். அதனைக் கொண்டு கர்வம் கொண்டார்கள். கிறிஸ்தவர் களிடமோ பலதெய்வ வழிபாடும் 'இயேசு சிலுவையில் அறையப்பட்டு மனிதர்களின் பாவத்துக்குப் பரிகாரமாக ஆகிவிட்டார்' என்ற சிந்தனை யும் வேரூன்றிவிட்டன.

இஸ்லாம் வந்தது. மூசாவுக்கும் ஈசாவுக்கும் தனக்கும் இருக்கின்ற வலுவான தொடர்பைப் பிரகடனம் செய்தது. 'அவர்கள் கொண்டுவந்த வஹீயைப் புதுப்பிக்கவே நான் வந்தேன்.' என்பதை நிறுவியது.

*அவன் நூஹுக்கு எதனைக் கட்டளையிட்டானோ அதனையே உங்களுக்கும் மார்க்கமாக ஆக்கியுள்ளான். நாம் உமக்கு அறிவித்ததும் இப்றாஹீம், மூசா, ஈசா ஆகியோருக்கு கட்டளையிட்டதும் இதுதான், 'நீங்கள் மார்க்கத்தில் நிலைத்திருங்கள். அதில் முரண்பட்டுவிடாதீர்கள்.' இணைவைப்பாளர்களை நீர் எதன் பக்கம் அழைக்கிறீரோ அது அவர்களுக்குப் பாரமாக இருக்கிறது. அல்லாஹ் தான் நாடுவோரைத் தன் பக்கம் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். தன் பக்கம் திரும்புவோருக்கு அவன் நேர்வழி காட்டுகிறான்.* (13)

*மனிதன் படைக்கப்பட்டதிலிருந்து இந்தப் பூமிக்கு அவன் உரிமையாளனாக ஆக்கப்பட்டது வரை அல்லாஹ்வின் மார்க்கம் ஒன்றுதான். ஏழு வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளவர்களும் அந்த ஒரே இறைவனையே போற்றிப்புகழ்கிறார்கள். அவனே தன் ஆற்றலால் அடியார்களைப் படைத்தான். தன் அருட்கொடைகளால் அவர்களைப் பரிபாலித்தான். அவர்கள் அனைவரும் அவனுடைய அடிமைகள்தாம். அவர்களில் அவனுக்கு மிகவும் நெருக்கமானவர் அதிகமாகச் சிரம்பணிபவரே; நம்பிக்கையோடும் அச்சத்தோடும் அவனை அழைப்பவரே. இந்தக் கருத்துதான் திருக்குர்ஆனில் பரவிக் காணப்படுகிறது. இதுதான் முஹம்மது கொண்டுவந்த மார்க்கத்தின் கருப்பொருள்.*

*நம்முடைய அறிவைக் கொண்டு நாம் அல்லாஹ்வை அறிந்த பிறகு, முஹம்மது கொண்டுவந்த வஹீ நம்முடைய அறிவுக்கு முழுமையாக ஒத்துப்போவதை, அது அல்லாஹ்வை கண்ணியப்படுத்த வேண்டிய முறைப்படி கண்ணியப்படுத்துவதை நாம் கண்டபிறகு அவருடைய உண்மைத் தன்மையையும் அறிந்துகொண்டோம். அது அல்லாஹ்வை மட்டுமே வணக்க வழிபாட்டுக்குத் தகுதியானவனாக ஆக்குவதில், அவனைக் கண்ணியப்படுத்துவதில் மிகச் சிறிய அளவில்கூடத் தவறிழைக்கவில்லை.*

*அறிவு மனிதனுக்கு வழங்கப்பட்ட மிகச் சிறந்த அருட்கொடையாகும். அதனைக் கொண்டு முஹம்மது நபியவர்கள் அல்லாஹ்வின் மகத்துவம் குறித்து கூறியவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது அவர் அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள தூதர் என்பதை உறுதியாக அறிந்துகொள்ளலாம்.*

*முஹம்மதின் மீது பொறாமை கொண்டு அவரை நிராகரிப்பவர்களை விட்டுவிடுவோம். அவர்கள் அவருடன் நடந்துகொண்ட மோசமான நடத்தை தங்கள் இறைவனுடன் அவர்கள் நடந்துகொண்ட மோசமான நடத்தையின் வெளிப்பாடுதான்.*

அவர்கள் தங்களிடம் அறிவு வந்தபின்னரும் தங்களுக்கிடையே உள்ள பொறாமையினால்தான் பிளவுபட்டார்கள். ‘குறிப்பிட்ட தவணைவரை’ என்னும் உம் இறைவனின் விதி முந்தியிராவிட்டால் அவர்களிடையே தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும். நிச்சயமாக அவர்களுக்குப் பின்னர் வேதம் வழங்கப்பட்டவர்கள் குழப்பத்தில் ஆழ்த்தும் சந்தேகத்தில் வீழ்ந்துவிட்டார்கள். (14)

தடுமாறிக்கொண்டிருக்கும் இந்த வேதக்காரர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவர்களின் பொறாமையை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். அவர்களுடன் ஒத்திசைந்து செல்ல வேண்டாம். வழிகாட்டிக்கொண்டு உங்களின் பாதையில் முன்னேறிச் செல்லுங்கள்.

ஆகவே, நீர் அவன் பக்கமே அழைப்பீராக. உமக்கு கட்டளையிட்டபடி உறுதியாக இருப்பீராக. அவர்களின் மனஇச்சைகளைப் பின்பற்றாதீர். நீர் கூறும், ‘அல்லாஹ் அருளிய வேதத்தின் மீது நான் நம்பிக்கை கொண்டேன். உங்களிடையே நீதி செலுத்துமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். அல்லாஹ்தான் எங்கள் இறைவனும் உங்கள் இறைவனுமாவான். எங்களுக்கு எங்களின் செயல்கள்; உங்களுக்கு உங்களின் செயல்கள். எங்களுக்கும் உங்களுக்குமிடையே எந்தத் தர்க்கமும் இல்லை. அல்லாஹ் நம் அனைவரையும் ஒன்றுதிரட்டுவான். அவன் பக்கமே திரும்ப வேண்டும்.’ (15)

மக்களை அழகிய முறையில் அழைத்தவாறு, அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியவாறு இஸ்லாம் தன் பாதையில் முன்னேறிச் சென்றது. மத்திய ஆசியா, வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள பெரும்பான்மையான வேதக்காரர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஈறான், ஆசர்பைஜான், இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் வாழ்ந்த சிலை வழிபாட்டாளர்களில் பலரும் நேர்வழியின் பக்கம் திரும்பினார்கள்.

ஆனாலும் இப்போதும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சத்தியத்தை எதிர்ப்பவர்கள், ஓரிறைக் கொள்கைக்கு எதிராகப் போரிடக்கூடியவர்கள், முஹம்மது நபியை வெறுக்கக்கூடியவர்கள் காணப்படத்தான் செய்கிறார்கள். இருக்கட்டும். அவர்கள் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கும் இழைத்துவிட முடியாது.

அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டபின்னரும் அவனைக் குறித்து தர்க்கம் புரிபவர்களின் தர்க்கம் அவர்களின் இறைவனிடத்தில் வீணானதே ஆகும். அவர்களின் மீது அவனுடைய கோபம் இறங்கும். அவர்களுக்குக் கடுமையான வேதனையும் உண்டு. (16)

மீண்டும் இஸ்லாத்தையும் அதன் தூதரையும் எதிர்ப்பவர்களின் ஆட்சேபணைகள் குறிப்பிடப்பட்டுப் பதிலளிக்கப்படுகின்றன.

‘இவர் அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிவிட்டார்’ என்று அவர்கள் கூறுகிறார்களா? அல்லாஹ் நாடினால் உம் உள்ளத்தில் முத்திரையிட்டுவிடுவான். அல்லாஹ் அசத்தியத்தை அழிக்கிறான். தன் வார்த்தையால் சத்தியத்தை நிறுவுகிறான். அவன் உள்ளங்களில் உள்ளவற்றையும் நன்கறிந்தவன். (24)

முஹம்மது பொய்யராக இருந்திருந்தால் அவர் இட்டுக்கட்டிக் கொண்டிருக்குமாறு அல்லாஹ் விட்டிருக்க மாட்டான். அவரது அறிவைப் பறித்து, அவரது வாதத்தைப் பொய்யெனக் காட்டியிருப்பான். இது வேறொரு அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் வசனத்தைப் போன்றதுதான்:

அவர் ஏதேனும் ஒரு விசயத்தை நம்மீது புனைந்துகூறியிருந்தால் நாம் அவரது வலக்கரத்தைப் பிடித்திருப்போம். பின்னர், அவரது நாடி நரம்பைத் துண்டித்திருப்போம். உங்களில் எவரும் இதிலிருந்து நம்மைத் தடுக்க முடியாது. (69:44-46)

ஆனால், இஸ்லாம் தன் பாதையை மிக விசாலமாக அமைத்துக் கொண்டது. இரவும் பகலும் சென்றடையும் இடத்தையெல்லாம் அடைந்தது. உலகின் எல்லா இடங்களிலும் ‘அல்லாஹ் ஒருவனே’ என்பதையும் ‘முஹம்மது அவனுடைய தூதர்’ என்பதையும் பறைசாற்றும் பாங்கின் சப்தம் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. அது நேரத்தை கணக்கிடும் கடிகாரம்போன்று ஒலித்துக்கொண்டிருக்கிறது. சிலர் தங்களுக்கு வஹீ இறங்குவதாகக் கூறி அல்லாஹ்வின் மீது பொய்யாக இட்டுக்கட்டினார்கள். அவர்களின் முடிவு என்னவாயிற்று? அவர்களின் அடையாளங்கள் அனைத்தும் தடம்தெரியாமல் மறைந்துவிட்டன. சத்தியத்துக்கு மட்டுமே நிரந்தரத்துவம் உண்டு.

சமூகத்தின் தனிமனிதர்களை இஸ்லாம் இறைசார்ந்த வாழ்க்கை வாழ்பவர்களாக ஆக்குகிறது. அவர்களின் நோக்கமெல்லாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதும் அவனுக்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்வதும்தான்.

இதன் பொருள், அது துறவிகளின் சமூகத்தை உருவாக்க விரும்புகிறதா?

நிச்சயமாக இல்லை. போராடக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்க விரும்புகிறது. அது உலகுக்காகவும் மறுமைக்காகவும் ஒருசேர செயல்

படும். அது தம்முடைய உலக விவகாரங்கள் அனைத்தையும் அல்லாஹ் தம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற உணர்வுடன் அமைத்துக் கொள்ளும். தம்மிடமிருந்து வெளிப்படும் ஒவ்வொரு செயலும் சிறந்த செயலாக வெளிப்பட அது பொறுப்பேற்றுள்ளது.

*அவனே தன் அடியார்களின் பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான். தீமைகளை மன்னித்துவிடுகிறான். நீங்கள் செய்பவற்றையும் அவன் அறிகிறான். நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிபவர்களின் பிரார்த்தனையை அவன் ஏற்றுக்கொள்கிறான். தன் அருளிலிருந்து அவர்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குகிறான் ...* (25,26)

மண்ணை வழிபடும் ஒரு சமூகத்துக்கும் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனை வணங்கும் ஒரு சமூகத்துக்கும் மத்தியில் மிகப் பெரிய அளவில் வேறுபாடுகள் காணப்படும்.

ஆகவே இங்கு அத்தியாயம் வானங்களையும் பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்த படைப்பாளனின் மகத்துவத்தை நம்பிக்கை யாளர்களுக்கு நினைவூட்டுகிறது. அவர்களின் அறிவையும் உள்ளத்தை யும் அவனுடைய மகத்துவத்தோடு இணைக்கும் வசனங்களைக் கொண்டுவருகிறது.

- ❖ *அவனே மனிதர்கள் நம்பிக்கையிழந்த பின்னர் மழையைப் பொழியச்செய்து தன் கருணையைப் பரப்புகிறான் ...* (28)
- ❖ *வானங்கள், பூமியைப் படைத்திருப்பதும் அவற்றுக்கிடையில் அவன் உயிரினங்களைப் பரவச் செய்திருப்பதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும்.* (29)
- ❖ *மலைகளைப் போன்று கடலில் செல்லும் கப்பல்களும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும்.* (32)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் கடல்களை ஆட்சிசெய்யும் இயல்பான விதிகளை, அவற்றில் மிதந்து செல்லும் கப்பல்களைச் சுட்டிக்காட்டுகின்றன. வானங்கள் அல்லாஹ்வின் புகழைப் பறை சாற்றக்கூடிய வானவர்களால் நிரம்பியுள்ளன என்பதை நாம் அறிவோம். அவற்றில் வேறு படைப்பினங்களும் இருக்கின்றனவா? நம்மைப் போலவே பொறுப்பு சுமத்தப்பட்ட ஜின்களும் இருக்கின்றன.

அவற்றில் வேறு வகையான படைப்புகளும் இருக்கலாம். அவற்றை நம்மால் உறுதிப்படுத்தவோ இல்லையென்று மறுக்கவோ முடியாது. அல்லாஹ் நமக்கு வசப்படுத்தித் தந்த பூமியில் சிறந்த முறையில் செயல்படுவதே நாம் செய்ய வேண்டிய பணியாகும்.

நவீன நாகரிகம் முந்தைய நாகரிகங்களை விடக் கண்டுபிடிப்புகளில் உச்சத்தை அடைந்துவிட்டாலும் அது மனஇச்சைகளுக்குப் பின்னால் ஓடக்கூடியதாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் முந்தைய சமூகங்கள் அழிக்கப்பட்டன. அவை சிறந்ததையும் நீதியானதையும் பின்பற்றுவதில் வெற்றிபெறவில்லை.

இதிலிருந்து எச்சரிக்கும் பொருட்டு இந்த அத்தியாயம் ஒன்பது பண்புகளைக் குறிப்பிடுகிறது. அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பிக்க விரும்பினால் மனிதர்கள் இந்தப் பண்புகளைக் கடைப்பிடித்தே தீர வேண்டும்.

*உங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதெல்லாம் வெறும் உலக வாழ்வின் இன்பங்கள்தாம். ஆயினும்,*

*அ. நம்பிக்கை கொண்டு,*

*ஆ. தம் இறைவனையே சார்ந்திருப்பவர்களுக்கு அல்லாஹ்விடம் இருப்பதே மிகச் சிறந்ததும் நிலையானதும் ஆகும்.*

*இ. அவர்கள் பெரும் பாவங்களையும் மானக்கேடானவற்றையும் விட்டு விலகியிருப்பார்கள்;*

*ஈ. தங்களுக்குக் கோபம் ஏற்பட்டால் மன்னித்துவிடுவார்கள்;*

*உ. அவர்கள் தங்கள் இறைவனின் அழைப்பை ஏற்றுக்கொள்வார்கள்;*

*ஊ. தொழுகையைக் கடைப்பிடிப்பார்கள்;*

*எ. தங்கள் காரியங்களில் ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து கொள்வார்கள்;*

*ஏ. நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்வார்கள்;*

*ஐ. அவர்கள் தங்கள்மீது அநீதி இழைக்கப்பட்டால் பதிலடி கொடுப்பார்கள்.*

*தீமைக்குக் கூலி அதே போன்ற தீமையே. ஆயினும், யாரேனும் மன்னித்து சரிப்படுத்திக்கொண்டால் அவரது கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது. நிச்சயமாக அவன் அநியாயக்காரர்களை நேசிக்க மாட்டான்.* (36-40)

சில சமயங்களில் உலகம் அநியாயக்காரர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் சாதகமானதாக அமையலாம். அவர்கள் எல்லா வளங்களையும் பெற்று மகிழ்ச்சியானவர்களாக இருக்கலாம். ஆனால், அதன் பயன் என்ன? 'நீர் கூறும், மறுமைநாளில் தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் இழப்பை ஏற்படுத்திக்கொண்டவர்கள்தாம் உண்மையில் இழப்படைந்தவர்கள். இதுதான் தெளிவான இழப்பாகும். (39:15)'

மனிதர்களின் கடமைகளுள் ஒன்று அவர்கள் தங்களுக்கிடையே வஹீயைப் பாதுகாக்கக் கூடிய, அதன் கட்டளைகளைப் பேணி நடக் கக்கூடிய, அதன் மதிப்பீடுகளை நிலைநிறுத்தக்கூடிய ஒரு சமூகத்தைப் பெற்றிருக்க வேண்டும். இறுதித் தூதுத்துவத்தைப் பெற்றுள்ள அறபுகள் இந்தப் பதவிக்கு மிகவும் தகுதியானவர்கள்.

அவர்கள் ஆரம்பத்தில் அதற்கான கடமைகளை நிறைவேற்றினார்கள். மாறாக, நாள்கள் செல்லச்செல்ல அவர்கள் மறந்துவிட்டார்கள். அதைக் குறித்து அறியாத மூடர்களாகிவிட்டார்கள்.

நம்முடைய இந்தக் காலத்தில் அறபுகள் இஸ்லாத்தைவிட்டுத் தூர மாகி, தங்களின் இனவாதத்தைக் கொண்டு பெருமையடிப்பதைக் காண்கிறோம். அவர்களின் போலியான இந்த இனவாதத்தில் நான் உணர்ந்தது, அவர்கள் இஸ்லாத்தை விட்டும் அதன் மொழியான தூய அறபியைவிட்டும் வெகுதூரமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

அறபு தேசியவாதத்தின் பெயரால் ஆங்கிலமும் ஃபிரெஞ்சும் வட்டார மொழிகளும் வளர்க்கப்படுகின்றன. குர்ஆனின் மொழி புறக்கணிக்கப் படுகிறது. அவர்கள் கண்ணியமான மதிப்பீடுகளைவிட்டும் நீங்கிய ஒழுங்குமுறைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். மகத்தான ஒரு சமூகத்தை அதன் ஆன்மா, வரலாறு, புனிதங்கள், சட்டங்கள் ஆகியவையின்றி வாழுமாறு நிர்ப்பந்திக்கிறார்கள்.

நாத்திகம் தன் கொள்கையைப் பரப்புவதில் வெற்றி கண்டுள்ளது. அது தன்னை நிலைநிறுத்திக்கொள்ள துடிக்கிறது. நாங்கள் அதனை ஒருபோதும் விடமாட்டோம்.

இந்த அத்தியாயத்தில் அறபுகளை எச்சரிக்கும் பொருட்டு அல்லாஹ் கூறுவதை நான் செவியேற்கிறேன்.

> அல்லாஹ்விடமிருந்து தப்ப முடியாத அந்த நாள் வருவதற்கு முன்னர் நீங்கள் உங்கள் இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொள் ளுங்கள். அந்நாளில் உங்களுக்கு எந்தப் புகலிடமும் இருக்காது.

> *உங்களால் எதையும் மறுக்க முடியாது. அவர்கள் புறக்கணித்தால், நாம் அவர்கள்மீது உம்மைக் கண்காணிப்பாளராக்கி அனுப்ப வில்லை. எடுத்துரைப்பதுதான் உம்மீது உள்ள பொறுப்பாகும்.* (47,48)

வேதனைக்குரிய விசயம், இன்று அறபுகள் இஸ்லாத்தினுடனான தங்களின் தொடர்பைக் குறைத்துக் கொண்டே வருகிறார்கள். அதே சமயம், யூதர்களும் மற்றவர்களும் தங்களின் கொள்கைகளுடன் தங்களை இன்னும் பிணைத்துக்கொண்டு வருகிறார்கள். இஸ்லாத்தைத் தவிர மற்ற கொள்கைகள் வேகமாக வளர்ந்துகொண்டுவருகின்றன.

வஹீ குறித்த செய்தியைக் கொண்டு அத்தியாயம் தொடங்கியது போன்று அதுகுறித்த செய்தியோடு முடிவடையவும் செய்கிறது. வஹீ எவ்வாறு இறங்குகிறது என்பதை அது தெளிவுபடுத்துகிறது.

> *எந்த மனிதனும் அல்லாஹ்வுடன் நேரிடையாகப் பேச முடியாது. ஆயினும், வஹீயின் மூலமோ திரைக்கு அப்பால் இருந்தோ ஒரு தூதரை அனுப்பி அவன் நாடுவதை அவன் கட்டளைப்படி அறிவிப்பதன் மூலமாகவோ (அவன் பேசினாலே) தவிர. அவன் மிக உயர்ந்தவன்; ஞானம்மிக்கவன்.* (51)

மனிதர்கள் அனைவரும் வஹீக்குத் தகுதியானவர்கள் அல்ல. மாறாக, அல்லாஹ் அதற்காகத் தனித்துவமான இயல்புடையவர்களை, வலிமையானவர்களைத் தேர்தெடுக்கிறான். தூதர்கள் அனைவரும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களிலும் திறமைகளிலும் சமமானவர்கள் அல்ல, வானத்தின் நட்சத்திரங்கள் அளவிலும் அளிக்கும் ஒளியிலும் சமமானவையாக இல்லாமல் இருப்பது போன்று. ஒரு ஊருக்கு வழிகாட்டும்படி பொறுப்பு சாட்டப்பட்டவரும் ஒரு நகரத்துக்கு வழிகாட்டும்படி பொறுப்பு சாட்டப்பட்டவரும் உலகம் முழுவதிலும் உள்ள மனிதர்களுக்கு வழிகாட்டும்படி பொறுப்பு சாட்டப்பட்டவரும் சமமானவர்கள் அல்ல.

அல்லாஹ் முஹம்மதை ஒரு வேதத்தைக் கொடுத்து அனுப்பியுள்ளான். அது எல்லாக் காலகட்டத்திலும் இடத்திலும் உள்ள மனிதர்களுக்கு நிவாரணியாக இருக்கிறது. அவர் அந்த வேதத்தை எடுத்துரைத்தார். அதனடிப்படையில் ஓர் ஆட்சியை நிறுவினார். ஒரு நாகரிகத்தை உருவாக்கினார். உலகில் உள்ளவர்களை வழிகேட்டிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு அதனை விட்டுச் சென்றார்.

> *இவ்வாறே நாம் நம் கட்டளையின் வாயிலாகக் குர்ஆனை உமக்கு அறிவித்தோம். வேதம் என்றால் என்ன, நம்பிக்கை என்றால் என்ன*

என்பதை நீர் அறியாதிருந்தீர். ஆயினும், அதனை நாம் ஒளியாக்கி நம் அடியார்களில் நாம் நாடியோருக்கு நேர்வழி காட்டுகிறோம். நிச்சயமாக நீர் நேரான வழியைக் காட்டுகிறீர். அது அல்லாஹ்வின் வழியாகும். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன. அறிந்துகொள்ளுங்கள், அவனிடமே அனைத்து விவகாரங்களும் திரும்புகின்றன. (52,53)

❖ ❖ ❖

அத்தியாயம் 43

# அஸ்ஸுஃக்றுஃப்

(அலங்காரம்)

*பின்வரும் வசனங்களைக் கொண்டு அத்தியாயம் தொடங்குகிறது: 'ஹா, மீம். தெளிவான இவ்வேதத்தின் மீது சத்தியமாக. நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு இதனை நாம் அறபி மொழியில் உள்ள குர்ஆனாக ஆக்கியுள்ளோம்.* (1-3)'

*குர்ஆன் அறபி மொழியில் அருளப்பட்டதுகுறித்து மீண்டும்மீண்டும் கூறப்படுவது அறபுகள் சுமந்துகொண்டிருக்கும் தூதுத்துவத்தை அவர் களுக்கு நினைவூட்டும் பொருட்டேயாகும். தற்காலத்தில் அவர்களுக்கு இந்த நினைவூட்டல் மிகமிக அவசியம். அறபுகளுக்கு இஸ்லாம் தேவை இல்லை என்ற மோசமான சிந்தனை அவர்களிடையே வளர்ந்து வருகிறது.*

*அறபுகள் குர்ஆனைவிட்டு விலகிவிட்டால் உலகத்தில் மிகவும் தாழ்ந்த சமூகமாக மாறிவிடுவார்கள்.*

*இந்தக் குர்ஆன் உயர்ந்த படித்தரத்தைக் கொண்டது; ஞானங்களால் நிரம்பியது. அதற்கு நிகராக எந்த ஒன்றும் இல்லை. வஹீயை நிராகரித்த சமூகங்கள் இவ்வுலகையும் மறுவுலகையும் ஒருசேர இழந்துவிட்டன. அறபுகளும் அவர்கள் அடைந்த அதே விளைவையே அடைவார்கள்.*

*அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இணைவைப்பாளர்களிடம் தென்பட்ட முரண்பாடு சுட்டிக்காட்டப்படுகிறது. அல்லாஹ்தான் படைப்பாளன் என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டிருந்தார்கள்.*

> *'வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்?' என்று நீர் அவர்களிடம் கேட்டால், 'யாவற்றையும் மிகைத்தவனும் நன் கறிந்தவனுமாகிய அல்லாஹ்தான் படைத்தான்' என்று நிச்சயம் அவர்கள் கூறுவார்கள்.* (9)

‘அவர்களைப் படைத்தது யார்?’ என்று நீர் அவர்களிடம் கேட்டால் ‘அல்லாஹ்’ என்றே அவர்கள் கூறுவார்கள். பிறகு எங்கே அவர்கள் வழிதவறிச் செல்கிறார்கள்? (87)

யாவற்றையும் மிகைத்தவனும் நன்கறிந்தவனுமாகிய அல்லாஹ்தான் அவர்களையும் வானங்களையும் பூமியையும் படைத்தான் என்னும் போது அவர்கள் வணங்கும் சிலைகளின் பணி என்ன? எதையும் பார்க்கவோ கேட்கவோ பயனளிக்கவோ தீங்களிக்கவோ சக்தியற்ற, செதுக்கப்பட்ட சிலைகளின் மதிப்பு என்ன?

அவர்கள் அல்லாஹ்வை அறிந்து அவனை மட்டுமே முன்னோக்க வேண்டும். இதுதான் அவர்களுக்குத் தகுந்தது.

அவனே உங்களுக்காகப் பூமியை விரிப்பாக்கினான். நீங்கள் விரும்பிய இடத்தை அடையும் பொருட்டு அதில் பாதைகளையும் ஏற்படுத்தினான். அவனே வானத்திலிருந்து ஓர் அளவோடு மழையை இறக்கினான். அதன் மூலம் இறந்த பூமியை நாம் உயிர்ப்பிக்கிறோம். இவ்வாறே நீங்கள் வெளிப்படுத்தப்படுவீர்கள். (10,11)

அல்லாஹ்வுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் அவனுடைய அங்கத்தினர் என்றும் இணைவைப்பாளர்கள் வாதிட்டார்கள். இது பொய்யாகும். அவனுக்குத் தந்தையும் இல்லை; பிள்ளைகளும் இல்லை. அவன் தனித்தவன்; தேவையற்றவன். அவர்களின் பொய்யான வாதத்துக்கு இந்த அத்தியாயத்தில் மறுப்புரை இடம்பெறுகிறது:

நீர் கூறும், ‘கருணை மிக்க இறைவனுக்குச் சந்ததி இருந்தால் அவர்கள் அனைவரையும்விட வணங்குவோரில் நானே முதன்மையானவனாக இருப்பேன்.’ வானங்கள் மற்றும் பூமியின் இறைவனும் அரியணையின் அதிபதியுமாகிய அவன் அவர்கள் கூறுவதைவிட்டும் தூய்மையானவன். (81,82)

ஜாஹிலிய்யா காலகட்டத்தில் உள்ள அறபுகள் பெண்மக்களை இழிவாகக் கருதி வந்தார்கள். ஆனாலும் அவர்கள் அல்லாஹ்வுக்குப் பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

கருணையாளனின் அடியார்களான வானவர்களை இவர்கள் பெண்களாக ஆக்கிவிட்டார்கள். அவர்கள் படைக்கப்பட்டபோது இவர்கள் அங்கு இருந்தார்களா? அவர்களின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு அவர்கள் விசாரிக்கப்படுவார்கள். (19)

மற்றொரு அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

உங்கள் இறைவன் உங்களுக்கு ஆண்மக்களைத் தேர்ந்தெடுத்து விட்டுத் தனக்காக வானவர்களிலிருந்து பெண் மக்களைத் தேர்ந் தெடுத்துக் கொண்டானா? நீங்கள் மிகக் கடுமையான வார்த்தை களைக் கூறுகிறீர்கள். (17:40)

இணைவைப்பாளர்கள் இன்னும் புனைந்துகொண்டே சென்றார்கள். அல்லாஹ் தனக்கு இணை கற்பிக்கப்படுவதை விரும்புகிறான் என்று வாதிட்டார்கள். அவர்களின் நிராகரிப்பு அறியாமையும் பிடிவாதமும் ஆகும் என்பதைத் திருக்குர்ஆன் தெளிவுபடுத்தியது.

இவ்வாறே உமக்கு முன்னர் எந்த ஊரில் நாம் எச்சரிக்கை செய்ப வரை அனுப்பினாலும் அங்குள்ள சுகபோகிகள், 'நாங்கள் எங்கள் முன்னோர்கள் ஒரு வழியில் செல்வதைக் கண்டோம். அவர் களையே நாங்கள் பின்பற்றிச்செல்கிறோம்' என்றுதான் கூறி னார்கள். 'உங்கள் முன்னோர்கள் எந்த வழியில் சென்றதைக் கண்டீர்களோ அதை விடச் சரியான வழியை நான் காட்டினா லுமா?' என்று அவர் கேட்டார். அதற்கு அவர்கள், 'உங்களின் தூதுச் செய்தியை நாங்கள் நிராகரிக்கிறோம்.' என்று கூறினார்கள். ஆகவே நாம் அவர்களைத் தண்டித்தோம். நிராகரித்தோரின் கதி என்ன வாயிற்று என்பதைப் பாரும். (23-25)

சத்தியத்தை அறிந்து கொண்டே நிராகரிப்பது ஆதாரத்தின் அடிப் படையில் அல்லாமல் மனஇச்சையின் ஆதிக்கத்தினால் ஏற்படுவதாகும். மனித மனதில் மறைந்திருக்கும் இச்சைகளே இயல்பான ஒன்றை நிரா கரிக்கத் தூண்டுகின்றன.

இணைவைப்பாளர்கள் உள்ளங்களில் மறைத்திருந்ததைத் திருக்குர் ஆன் வெளிப்படுத்தியது.

ஸமூது சமூகத்தினரும் எச்சரிக்கைகளைப் பொய்யெனக் கருதி னார்கள். அவர்கள் கூறினார்கள், 'நம்மில் உள்ள ஒரு மனிதரையா நாம் பின்பற்றுவது? நாம் அவ்வாறு செய்தால் வழிகேட்டிலும் புத்தித் தடுமாற்றத்திலும் வீழ்ந்துவிடுவோம். நமக்கு மத்தியில் இவருக்குத்தான் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதா? ...' (54:23-25)

பொறாமையும் காழ்ப்பும் நிராகரிப்பின் பின்னால் மறைந்திருக் கின்றன. இறைத்தூதர்களின் வாழ்க்கையை ஆராய்பவர்கள் அவர்களை எதிர்த்தவர்களிடத்தில் இந்தக் கீழான பண்புகளே செயல்பட்டன

என்பதை அறிந்துகொள்வார்கள். ஸாத் என்ற அத்தியாயத்தில் பின்வரு மாறு கூறப்படுகிறது:

> ‘நமக்கு மத்தியில் இவருக்குத்தான் அறிவுரை அருளப்பட வேண்டுமா?’ உண்மையில் அவர்கள் என் எச்சரிக்கையைக் குறித்து சந்தேகம் கொண்டுள்ளார்கள். அவர்கள் என் தண்டனையை இன்னும் அனுபவிக்கவில்லை. (38:8)

இவ்வாறு கூறப்பட்டபிறகு இங்கு கூறப்படுகிறது: ‘இந்தக் குர்ஆன் இவ்விரு ஊர்களில் உள்ள ஒரு பெரிய மனிதருக்கு அருளப்பட்டிருக்கக் கூடாதா என்று அவர்கள் கேட்கிறார்கள். (31)’

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு ஊர்கள் மக்காவும் தாயிஃபும் ஆகும். ‘இந்த ஊர்களில் உள்ள யாரேனும் ஒரு பெரிய மனிதருக்கு ஏன் இந்தக் குர்ஆன் அருளப்படவில்லை?’ என்பதுதான் கேள்வி. தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம்தான் இந்தக் கேள்விக்குப் பின்னால் இருக்கிறது. அந்த ஊர்களில் உள்ள பெரிய மனிதர்களே தூதுத்துவப் பணிக்காக, மனிதர்களை இருளிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அவர்கள் சொல்ல வரும் கருத்து.

முன்னொரு காலத்தில் இஸ்றாயீலின் மக்களும் தாலூத்தின் விசயத்தில் இப்படித்தான் ஆட்சேபணை செய்தார்கள். ‘எங்கள்மீது ஆட்சிபுரிய அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? ஆட்சிபுரிவதற்கு நாங்கள்தாம் அவரைவிட அதிகத் தகுதியுடையோராக இருக்கிறோம். (2:247)’ அவர்களுக்குப் பதிலளிக்கப்பட்டது: ‘அல்லாஹ் உங்களைவிட மேலானவராக அவரைத் தேர்ந்தெடுத்துள்ளான். அவருக்கு அறிவாற்றலையும் உடல் வலிமையையும் அதிகமாக வழங்கியுள்ளான். தான் நாடியவர்களுக்கே அல்லாஹ் தன் ஆட்சியதிகாரத்தை வழங்குகிறான். (2:247)’

அடியார்களை அனைத்து வகையான அடிமைத் தனங்களிலிருந்தும் விடுவித்து அவர்களை இறைவனுக்கு மட்டும் அடிமையானவர்களாக, சிகரம் நோக்கிச் செல்பவர்களாக ஆக்குவதற்குத் தனித்துவமான திறமைகளைக் கொண்ட மனிதர்கள் தேவைப்படுகிறார்கள். தன் தேவைகளுக்காகவும் இன்பங்களைப் பெறுவதற்காகவும் செலவுசெய்யும் செல்வந்தன் தகுதியானவனாக இருக்க மாட்டான். மனிதர்களில் சிலர் சிலருக்குத் தலைமையேற்கிறார்கள். ஒரு பொறியாளர் தமக்குக் கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்களை வழிநடத்துகிறார். ஒரு படைத் தளபதி தம் படையில் உள்ள வீரர்களை வழிநடத்துகிறார்.

ஆனால், இதற்கும் மனித உள்ளங்களைத் தூய்மைப்படுத்தும், மனித வாழ்வில் நன்மைகளை விதைக்கும் பணிக்கும் என்ன தொடர்பு?

ஆகவே, அந்த மூடர்களின் கோரிக்கைக்கு அல்லாஹ் இவ்வாறு பதிலளிக்கிறான்:

> உம் இறைவனின் அருட்கொடையை அவர்கள்தாம் பங்கிடுகிறார்களா? உலக வாழ்வில் நாம்தாம் அவர்களிடையே அவர்களின் வாழ்வாதாரத்தைப் பங்கிட்டுள்ளோம், அவர்களில் சிலர் வேறு சிலரைக் கொண்டு ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சிலரைச் சிலரைவிட உயர்த்தியுள்ளோம். உம் இறைவனின் அருட்கொடை அவர்கள் சேர்த்துவைப்பதை விடச் சிறந்ததாகும். (32)

மனிதர்களிடையே காணப்படும் இந்த வேறுபாடுகள் உலக வாழ்க்கைக்கு மிகமிக அவசியம். ஆனால், இதற்கும் மனிதர்களைப் பண்படுத்துவதற்காக அல்லாஹ் தான் நாடிய சிலரைத் தேர்வுசெய்வதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இங்கு இன்னொரு விசயமும் இருக்கிறது. இந்த உலகில் சிலர் பெற்றிருக்கும் வாழ்க்கை வசதிகள் அவர்கள் சிறந்தவர்கள் என்பதற்கான அடையாளம் அல்ல. நரகத்தின் எரிபொருள்களாக ஆகக்கூடிய சிலருக்கும் அல்லாஹ் விசாலமான வாழ்வாதாரத்தை வழங்குகிறான். அம்மார் இப்னு யாசிர், பிலால் இப்னு றபாஹ் ஆகியோரைப் போன்று அவன் சுவனத்துக்குரியவர்களைச் சோதிக்கவும் செய்கிறான். இந்த உலகில் அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் சுவனத்தில் அரசர்களைப் போன்றவர்கள். ஆனாலும் இந்த உலக வாழ்வில் அவர்கள் கடுமையான சிரமங்களை அனுபவித்தார்கள். நிராகரிப்பாளர்களின் செல்வச் செழிப்பைப் பார்த்து மனிதர்கள் ஏமாந்துவிடுவார்கள் என்ற நிலை இல்லாதிருப்பின் அல்லாஹ் தன் எதிரிகளுக்கு இன்னும் அதிகமாக வாரி வழங்கியிருப்பான்.

> மனிதர்கள் அனைவரும் (நிராகரித்து) ஒரே சமூகமாகிவிடுவார்கள் என்னும் நிலை இல்லாதிருந்தால் கருணைமிக்க இறைவனை நிராகரிப்போரின் வீட்டு முகடுகளையும் ஏறிச்செல்லும் படிகளையும் அவர்களின் வீட்டுக் கதவுகளையும் அவர்கள் சாய்கின்ற கட்டில்களையும் வெள்ளியாலும் தங்கத்தாலும் ஆக்கியிருப்போம். இவையனைத்தும் இவ்வுலக வாழ்வின் இன்பங்கள்தாம். மறுமையோ உம் இறைவனிடத்தில் இறையச்சமுடையவர்களுக்கே உரியதாகும். (33-35)

அசத்தியவாதிகள் தங்களுடன் ஒத்திசைவாகச் செல்லக்கூடிய உதவி யாளர்களையும் பெறுவார்கள். அவர்கள் அலங்கரிக்கப்பட்ட போலியான கட்டுரைகள், மயக்கும் உரைகள் ஆகியவற்றின் மூலம் அசத்தியவாதி களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். 'இவ்வாறே நாம் கேடுகெட்ட மனிதர்களையும் ஜின்களையும் ஒவ்வொரு தூதருக்கும் பகைவர்களாக ஆக்கினோம். அவர்கள் ஒருவர் மற்றவரை ஏமாற்றுவதற்காக வஞ்சகமான பேச்சுகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். (6:113)' இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'யார் கருணைமிக்க இறைவனின் அறிவுரையை விட்டு அலட்சியமாக இருக்கிறாரோ அவர்மீது நாம் ஒரு ஷைத்தானை ஏவிவிடுகிறோம். அவன் அவருக்கு நண்பனாகிவிடுகிறான். (36)'

இந்த அசத்தியவாதிகள் ஒன்றிணைந்து சத்தியத்தை எதிர்ப்பதற்காக, அதன் பாதையில் தடைகளை ஏற்படுத்துவதற்காக அமைப்புகளை உருவாக்குகிறார்கள். இவர்களை எதிர்கொள்ளும்படி, வஹீயைக் கொண்டு தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும்படி அல்லாஹ் தன் தூதருக்கும் அவருடைய சமூகத்தாருக்கும் கட்டளையிடுகிறான். 'ஆகவே உமக்கு அறிவிக்கப்படுவதைப் பலமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளும். நிச்சயமாக நீர் நேரான வழியில் இருக்கிறீர். இது உமக்கும் உம் சமூகத் துக்கும் அறிவுரையாகும். விரைவில் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். (43:43,44)'

மனிதர்களுக்கு எடுத்துரைப்பதற்காக அறபுகள் சுமந்திருக்கும் இந்த இஸ்லாம் அவர்களுக்கான பாதுகாப்புக் கேடயமாகும். அவர்களின் மொழியில்தான் அதன் வேதம் அருளப்பட்டது. அவர்கள் அதற்கு உண்மையாளர்களாக இருந்தால் இந்த உலகில் முதன்மையானவர்களாக, இந்த உலகை வழிநடத்துபவர்களாக ஆகிவிடுவார்கள்.

முந்தைய வேதங்களில் கலந்துவிட்ட பிழைகளை, இடைச்செரு கல்களை இந்த வேதம் சரிசெய்கிறது. மனிதர்கள் அனைவருக்கும், அவர்கள் ஈருலக வாழ்க்கையிலும் வெற்றிபெறக்கூடிய ஒரு மார்க்கத்தை அளிக்கிறது. மூசா, ஈசா, இன்னபிற தூதர்கள் ஆகியோரின் மார்க்கத் திலும், 'அல்லாஹ்வுக்கு இணையானவர்களும் அவனிடம் பரிந்துரை செய்பவர்களும் இருக்கிறார்கள்.' என்று கூறப்படவில்லை.

நாம் உமக்கு முன்னர் அனுப்பிய நம் தூதர்களிடம் கேட்டுப்பாரும்: 'கருணையாளனைத் தவிர வணங்கப்படுவதற்கு வேறு தெய்வங்களை நாம் நியமித்திருந்தோமா என்ன? (45)'

செல்வம், அதிகாரம், ஆற்றல் ஆகியவற்றால் ஏற்படும் குழப்பத்தை நீக்கும் பொருட்டு அல்லாஹ் இங்கு ஃபிர்அவ்னின் சம்பவத்தைக்

கொண்டுவருகிறான். ஃபிர்அவ்ன் தாயிஃபைப் போல ஓர் ஊரின் பெரிய மனிதனாக இருக்கவில்லை. மாறாக, நாகரிகங்களின் தொட்டில் என்று அழைக்கப்படும் எகிப்தின் அரசனாக இருந்தான். அவனிடம் வந்து, நம்பிக்கை கொள்ளும்படி, பலவீனர்களின் மீது அநியாயம்செய்வதை விட்டுவிடும்படி மூசா வேண்டுகிறார். ஆனால், அந்த மனிதன் கர்வம் கொண்டு மறுத்துவிட்டான்.

ஃபிர்அவ்ன் தன் சமூகத்தாரிடம், 'என் சமூகமே, எகிப்தின் அரசாட்சி என்னுடையது, அல்லவா? இந்த ஆறுகள் என் கட்டுப்பாட்டில் தானே ஓடிக்கொண்டிருக்கிறது? நீங்கள் பார்க்க மாட்டீர்களா? எதையும் தெளிவாகப் பேச முடியாத, இழிவான இவரைவிட நான் சிறந்தவன், இல்லையா? இவருக்கு ஏன் தங்கக் காப்புகள் அணி விக்கப்படவில்லை? அல்லது, வானவர்கள் இவருடன் கூட்டமாக வர வேண்டாமா?' என்று கேட்டான். (43:51-53)

ஃபிர்அவ்ன் மூசாவை நிராகரித்தான். அவருடைய சமூகத்தாரை விரட்டிச்சென்றான். செங்கடலை அவர்கள் அடைந்தவுடன் அவர்கள் கடலைக் கடந்தார்கள். மூசா அவர்களை வழிநடத்திச் சென்றார். ஃபிர் அவ்னும் அவர்களைப் பிடிப்பதற்காகப் பின்தொடர்ந்து சென்றான். அவனும் அவனுடைய கூட்டத்தார் அனைவரும் கடலில் மூழ்கடிக்கப் பட்டார்கள். தான் மூழ்குவதை ஃபிர்அவ்ன் உணர்ந்தபோது கூறினான்: 'இஸ்றாயீலின் மக்கள் யார்மீது நம்பிக்கை கொண்டார்களோ அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று நானும் நம்பிக்கை கொண்டேன். அவனுக்குக் கீழ்ப்படிவோரில் நானும் ஒருவனாக இருக்கிறேன். (10:90)'

இப்னு அப்பாஸ் கூறுகிறார், 'அல்லாஹ் ஃபிர்அவ்னை மூழ்கடித்த போது அவன் தவ்ஹீதின் வார்த்தையை மொழிந்தான். ஜிப்ரீல் கடலின் ஆழத்திலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து அவனுடைய வாயில் வைத் தார். பின்னர், அலைகள் அவனைப் பிரேதமாகத் துப்பிவிட்டன. கடற் கரையோரத்தில் வாயில் சகதியைக் கொண்டவனாக அவன் சடலமாகக் கிடப்பதை மக்கள் பார்த்தார்கள்.'

அவன் அணிந்த தங்கக் காப்புகள் எல்லாம் எங்கே? தனக்குக் கடவுள் தன்மை இருப்பதாகக் கூறினானே அவனுடைய கடவுள்தன்மை எங்கே மறைந்தது?

இவ்வாறு வாழ்க்கையின் ஓட்டத்தில் அசத்தியவாதிகள் மறைந்து போகிறார்கள். மறுமைநாளிலும் அவர்கள் கடுமையான விசாரணையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஆளுமைத்திறன்கள் கொண்டவர்கள் வேறு. தங்கத்தையும் செல் வத்தையும் பெற்றிருப்பவர்கள் வேறு.

ஃபிரென்சுக்காரர்களைப் போன்று ஆடை அணிந்திருந்த ஒரு மனி தரை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் தம் கழுத்தைச் சுற்றி தடித்த தங்கச் சங்கிலியை அணிந்திருந்தார். பெண்கள் மட்டுமே தங்கம் அணி வதை பார்த்திருந்த எனக்கு அது விசித்திரமாகத் தெரிந்தது. அந்த மனிதரை நன்கறிந்த இன்னொரு மனிதரிடம் அவரைக் குறித்து விசாரித்தேன். 'தம்மைக் குறித்து அதிகமாக அலட்டிக்கொள்வார். ஆனால், குறைவாகவே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்.' என்றார். நான் என் மனதுக் குள் இந்தக் கவிதையை நினைத்துக்கொண்டேன்.

> 'கோவேறுக் கழுதையைப் போன்று உடலையும் சிட்டுக் குருவியைப் போன்று எண்ணத்தையும் கொண்ட வாட்ட சாட்டமான மனிதர்கள் பொருட்படுத்தத்தக்கவர்கள் அல்ல.'

அத்தியாயம் மூசா, ஃபிர்அவ்னின் சம்பவத்தை இத்தோடு நிறுத்தி விட்டு மர்யமின் மகன் ஈசாவின் வரலாற்றை எடுத்துரைக்கத் தொடங்குகிறது. சிலர் அவரைக் கடவுள் என்று வாதிட்டனர். விதண்டா வாதம் செய்வதையே தொழிலாகக் கொண்ட சிலர், இணைவைப்பா ளர்களிடம் அல்லாஹ் பின்வருமாறு கூறியபோதும் அவரது சேருமிடம் குறித்து பெரும் சர்ச்சையை உண்டாக்கினார்கள்:

> நிச்சயமாக நீங்களும் அல்லாஹ்வை விடுத்து நீங்கள் வணங்கிக் கொண்டிருந்தவையும் நரகத்தின் எரிபொருள்களாவீர்கள். நீங்கள் அங்குதான் செல்ல வேண்டும். உண்மையில் அவை தெய்வங் களாக இருந்திருந்தால் அங்கு விழுந்திருக்க மாட்டா. (21:98,99)

வணங்கப்படும் சிலைகளே இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. ஜிப்ரீலும் பரிசுத்த ஆவி என்ற பெயரால் மூன்றாவது கடவுளாக வணங் கப்பட்டார். ஈசா இறை மகன் என்ற பெயரால் இரண்டாவது கடவுளாக வணங்கப்பட்டார். இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் 'மா' என்ற அறபி வார்த்தை உயிரற்ற சிலைகளைத்தான் குறிக்குமே தவிர உயிருள்ள வற்றை அல்ல. ஆகவேதான் அல்லாஹ் கூறினான்:

> மர்யமின் மகன் உதாரணமாகக் கூறப்பட்டபோது உம் சமூகத்தினர் நகைத்தனர். 'எங்கள் தெய்வங்கள் சிறந்தவையா அல்லது அவரா?' என்று அவர்கள் கேட்டனர். இந்த உதாரணத்தை அவர்கள் வீண் விவாதத்துக்காகவே கூறுகிறார்கள். மாறாக, அவர்கள் குதர்க்கம் செய்யும் மக்களே ஆவர். (57,58)

சந்தேகமேயின்றி ஈசா சுவனத்தின் தலைவர்களில் ஒருவராவார். தந்தையின்றிப் பிறந்ததனால் அவர் அல்லாஹ்வின் மகனாகக் கருதப் படும் குழப்பத்துக்கு ஆளானார். பல இடங்களில் இந்தத் தவறான கருத்து பரவியது. ஆகவே அல்லாஹ், மீண்டும் ஒருமுறை அவர் இந்த உலகுக்கு வர வேண்டும் என்றும் தாம் தூதராக அனுப்பப்பட்ட ஓர் அடியார் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டும் என்றும் நாடிவிட் டான். பின்வரும் வசனம் இதனையே குறிப்பிடுகிறது: 'நிச்சயமாக அவர் மறுமையின் ஓர் அடையாளமாக இருக்கிறார். அது குறித்து நீங்கள் சந் தேகம் கொள்ள வேண்டாம். என்னையே பின்பற்றுங்கள். இதுவே நேரான வழியாகும். (61)'

ஈசா மீண்டும் இறங்குவது குறித்து 'தவாதுரான' ஹதீஸ்கள் காணப் படுகின்றன.

மனிதர்களை இரு வகையினராகப் பிரிக்கலாம். ஒரு வகையினர், அல்லாஹ்வைக் குறித்து சரியான முறையில் அறிந்தவர்கள். இரண்டா வது வகையினர், அவன்மீது இட்டுக்கட்டுபவர்கள். இந்த உலகில் இரு சாராருக்குமிடையே தீர்ப்பளிக்கப்படாது. ஆகவே ஈசா கூறுவதாக இடம் பெறுகிறது:

> நிச்சயமாக அல்லாஹ்தான் எனக்கும் உங்களுக்கும் இறைவனா வான். ஆகவே நீங்கள் அவனையே வணங்குங்கள். இதுவே நேரான வழியாகும். ஆயினும், அந்தக் கூட்டத்தினர் தங்களிடையே முரண் பட்டுக்கொண்டனர். அநியாயக்காரர்களுக்குத் துன்புறுத்தும் வேத னையுடைய நாளில் கேடுதான். (64,65)

மறுமைநாள் நிலைபெற்றபிறகு நம்பிக்கையாளர்களிடம் கூறப்படும்: 'நீங்களும் உங்கள் மனைவியரும் மகிழ்ச்சியாகச் சுவனத்தில் நுழைந்து விடுங்கள். (70)'

ஆனால் மற்றவர்கள் மிக மோசமான இருப்பிடத்தையே பெறுவார்கள். 'நிச்சயமாகக் குற்றவாளிகள் நரக வேதனையில் என்றென்றும் வீழ்ந்து கிடப்பார்கள். அவர்களின் வேதனை குறைக்கப்பட மாட்டாது. அங்கு அவர்கள் நிராசையடைந்துவிடுவார்கள். (74,75)'

அவர்கள் இந்த உலகில் சத்தியத்துக்கும் சத்தியவாதிகளுக்கும் எதிராகச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். எதை அவர்கள் அறுவடையாகப் பெற்றார்கள்? 'அவர்கள் ஏதேனும் ஒரு திட்டம் தீட்டியுள்ளார்களா? நிச்சயமாக நாமும் ஒரு திட்டம் தீட்டியுள்ளோம். (79)' 'அவர்கள் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். நானும் திட்டம் தீட்டுகிறேன். ஆகவே

நிராகரிப்பாளர்களுக்கு நீர் அவகாசமளிப்பீராக. சிறிது காலம் அவர்களை விட்டுவிடுவீராக. (86:16,17)'

மனிதர்களில் பெரும்பாலோர் வழிகேட்டையே தங்கள் முன்னோர் களிடமிருந்து பெற்றார்கள். அதில் அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார் கள். அழைப்பாளர்கள் நிராசையடையாமல், களைப்படையாமல் அவர் களை நேர்வழியின் பக்கம் அழைப்பதில் பொறுமையையும் உறுதியையும் கடைப்பிடிக்க வேண்டும். ஆகவேதான் அத்தியாயம் இந்த இரண்டு வசனங்களைக் கொண்டு நிறைவடைகிறது:

> தூதர் கூறினார், 'என் இறைவா, இவர்கள் நம்பிக்கை கொள்ளாத மக்களாக இருக்கிறார்கள்.' ஆகவே அவர்களைச் சகித்துக்கொள் ளும். 'உங்கள்மீது அமைதி உண்டாகட்டும்!' என்று கூறும். விரை வில் அவர்கள் அறிந்துகொள்வார்கள். (88,89)

❖ ❖ ❖

அத்தியாயம் 44

# அத்துஃகான்

(புகை)

*'ஹா, மீம். (1)' திருக்குர்ஆனின் மீது செய்யப்படும் சத்தியத்தைக் கொண்டு இந்த அத்தியாயம் தொடங்குகிறது. 'தெளிவான இந்த வேதத்தின் மீது சத்தியமாக. (2)' 'நாம் இதனைப் பாக்கியம்மிக்க ஓர் இரவில் அருளினோம். (3)' இது ரமளான் மாதத்தில் வரக்கூடிய லைலத்துல் கத்ர் என்னும் இரவைத்தான் குறிக்கிறது. இது ஷஅபான் பதினைந்தாவது இரவு என்று குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர் கூறுவது தவறான கருத்தாகும்.*

*அந்த இரவில் அருளப்பட்ட இறுதியான வஹீயின் காரணமாக அது அருள்வளம்மிக்க இரவாகிவிட்டது. அது ஞானத்தாலும் ஒளியாலும் பெரும் நன்மையாலும் நிரம்பிய வஹீயாகும். 'இது நாம் உமக்கு அருளியுள்ள பாக்கியம்மிக்க வேதமாகும். இது, மனிதர்கள் அதன் வசனங்களைச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் அறிவுடையோர் இதன் மூலம் அறிவுரைபெற வேண்டும் என்பதற்காகவும்தான். (38:29)' 'இந்த வேதத்தைப் பாக்கியம்மிக்கதாக நாம் அருளியுள்ளோம். இதனையே நீங்கள் பின்பற்றுங்கள் ... (6:156)'*

*இந்த வேதத்தின் சாதனை என்னவெனில், அது மனிதர்களிலிருந்து வானவர்களை உருவாக்கியது. தடுமாறித் திரிந்துகொண்டிருந்த அறபுகளைச் சூரியன் மறையாத நாகரிகத்துக்குரியவர்களாக ஆக்கியது.*

*'நிச்சயமாக நாம் எச்சரிக்கைசெய்வோராக இருக்கிறோம். (3)', வரம்பு மீறக்கூடியவர்களை, அடித்தளங்களைத் தகர்க்கக்கூடியவர்களை. இது தன்னை நிலைநிறுத்துவதற்கு முன்னால் தனக்கு எதிரானவற்றை அகற்றுவதைப் போன்றதாகும். தனக்கு முன்னால் இருந்த அநியாயக்கார அரசுகளை வீழ்த்திய பிறகு இஸ்லாம் நீதியை நிலைநிறுத்தியது. ஓரிறைக்*

கொள்கையையும் முன்னோர்களும் பின்னோர்களும் அதன் பக்கம் கொண்டிருக்கும் தேவையையும் உறுதிப்படுத்தியவாறு வசனங்கள் கடந்துசெல்கின்றன.

அறபுகள் ஆரம்பக் கட்டத்தில் இஸ்லாத்தை எதிர்த்தார்கள். முஸ் லிம்களைத் துன்புறுத்தினார்கள். அவர்களை அவர்களின் வீடுகளிலி ருந்து வெளியேற்றினார்கள். ஆகவே, நபியவர்கள் தம் இறைவனிடம் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்: 'அல்லாஹ்வே, ஏழு வருட பஞ்ச காலத் தைக் கொண்டு உதவிசெய்ததைப் போல எனக்கும் உதவிசெய்வாயாக.' மக்காவில் பஞ்சம் தலைவிரித்தாடியது. மழை நின்றுபோனது. இணை வைப்பாளர்கள் பசியால் அவதிப்பட்டார்கள். அவர்களின் கண்களுக்கு உலகம் இருட்டாகத் தெரிந்தது. சூழலைப் புகைமூட்டம் மூடியிருப்பது போன்று இருந்தது.

அவர்கள் நபியவர்களிடம் சென்று தங்களின் சமூகத்தை மன்னிக்கும்படி மன்றாடினார்கள்.

ஆனாலும் மன்னிப்பு வழங்கப்பட்டபிறகு, சூழல் மாறி அவர்களின் ஆரோக்கியம் திரும்பிய பிறகு அவர்கள் மீண்டும் வாக்குறுதி மீறினார்கள். 'நாம் கொஞ்ச நேரம் வேதனையை அகற்றிவிடுகிறோம். அப்போது நீங்கள் மீண்டும் முந்தைய நிலைக்கே வந்துவிடுவீர்கள். நாம் அவர்களைக் கடுமையாகப் பிடிக்கும் நாளில் நிச்சயம் தண்டிப்போம். (15,16)'

பத்ருப் போரில் அல்லாஹ் அவர்களைக் கடுமையாகத் தண்டித்தான். நிராகரிப்பின் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். மிக இழிவான முறை யில் அவர்கள் தோல்வியடைந்தார்கள்.

இதுதான் குர்ஆன் விரிவுரையாளர்களில் பெரும்பான்மையினரின் கருத்து.

இன்னொரு கருத்தும் இருக்கிறது. நான் அதனைச் சரியெனக் கருது கிறேன். நாளை வெளிப்படப்போகும் புகையாக இருக்கலாம் என்பது தான் அது. உதாரணமாக, ஓசோன் படலத்தில் ஏற்பட்ட ஓட்டையைக் கண்டு உலகம் அஞ்சுவதைக் குறிப்பிடலாம். இந்தப் பூமியில் பரவிய இறை மறுப்பு, பாவங்கள், இஸ்லாத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகள், அதன் தூதரை நோக்கி வீசப்படும் அவதூறுகள் ஆகியவற் றால் இந்தப் பிரபஞ்சத்தில் கடுமையான வேதனைகளும் துன்பங்களும் அதிகரித்துவிடும்.

அப்போது மனிதர்கள் அல்லாஹ்விடம் கருணையை வேண்டியவர் களாக அடைக்கலம் புகுவார்கள். இந்த இறுதியான மார்க்கத்துடன்

மேற்கொண்ட மோசமான நடத்தைக்காக அவர்கள் வருந்துவார்கள். அவர்கள் உண்மைப்படுத்துவார்களா?

விவகாரம் எதுவாக இருப்பினும் இறுதி சந்திப்பின்போதுதான் முழுமையான விசாரணை நடைபெறும். ஒவ்வொருவரும் தாம் செய்த வற்றுக்காகவும் செய்யாமல் விட்டுவிட்டவற்றுக்காகவும் முழுமையான கூலியைப் பெறுவார்கள்.

இந்த அத்தியாயம் தெளிவுபடுத்துகிறது, முந்தைய காலத்தில் வஹீ யைச் சுமந்தவர்களைக் கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்தன. தம் சமூகத்தினருக்குச் சுதந்திரமளிக்கும்படி, தம்முடன் அவர்கள் வேறு ஊருக்கு வருவதற்கு அனுமதியளிக்கும்படி மூசா ஃபிர்அவ்னிடம் வேண்டினார். ஆனால், ஃபிர்அவ்ன் அவரது கோரிக்கைக்குப் பதி லளிக்காமல் அவர்களைத் துன்புறுத்துவதைத் தொடர்ந்தான். இறுதியில் என்ன நிகழ்ந்தது? ஃபிர்அவ்னின் கூட்டத்தினர் அனைவரும் அழிக் கப்பட்டார்கள். ‘அவர்கள் எத்தனையோ தோட்டங்களையும் நீரூற்று களையும் வயல்களையும் உயர்தரமான இல்லங்களையும் அவர்கள் அனுபவித்த வாழ்க்கை வசதிகளையும் விட்டுச்சென்றுவிட்டார்கள். அவ்வாறே ஆனது. நாம் வேறு சமூகத்தை அவற்றுக்கு வாரிசாக்கினோம். (25-28)’

வரலாறு மீண்டும் திரும்புகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் அநி யாயக்காரர்களின் முடிவு ஒன்றுபோலவே அமைந்துவிடுகிறது. சத்திய அழைப்பாளர்கள் உன்னதமான படித்தரத்தை அடைந்துவிடுகிறார்கள். அவர்களின் சொற்களை அவர்களின் செயல்கள் உண்மைப்படுத்துகின்றன. அவர்கள் நீதிக்கும் தூய்மைக்கும் முன்மாதிரிகளாக ஆகிவிடுகிறார்கள்.

ஆனால் கவலைக்குரிய ஒரு விசயம், மார்க்கத்தைப் பின்பற்றுவோரின் வாழ்க்கையில் நேர்மை குறுகிய வாழ்நாளையே பெறுகிறது. விரை விலேயே அவர்களின் மனஇச்சைகள் அவர்களை மிகைக்க ஆரம்பிக் கின்றன. அவர்கள் தூதர்கள் விட்டுச்சென்றவற்றை விட்டு விலகிச் செல்கிறார்கள். அல்லாஹ் யூதர்களைக் குறித்து கூறுகிறான்: ‘நாம் அறிந்தே உலக மக்கள் அனைவரிலும் அவர்களைத் தேர்ந்தெடுத்தோம். நாம் அவர்களுக்குத் தெளிவான அருட்கொடைகள் இருந்த சான்றுகளை அளித்தோம். (32,33)’

விடுதலையடைந்தபிறகு, ஆட்சியதிகாரத்தை அடைந்தபிறகு அவர்கள் என்ன செய்தார்கள்?

பூமியில் குழப்பம் விளைவித்தார்கள். விதி அவர்களைச் சிதறடித்தது.

அவர்களுக்குப் பிறகு இறைவன் அறபுகளைத் தேர்ந்தெடுத்தான். மகத்தான குர்ஆனை அவர்களுக்கு அளித்தான். அவர்கள் அந்தக் குர்ஆனைக் கொண்டு உலகம் முழுவதும் சுற்றினார்கள். பின்னர், அவர்களில் குறைவானவர்களைத் தவிர மற்றவர்கள் அதனைவிட்டு விலகிவிட்டார்கள். வழிகேடர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் பழமையான வேதனை அவர்களையும் தாக்கியது. இன்று அவர்கள் வலிமை கொண்ட அநியாயக்காரர்களால் சீண்டப்படும் சிறு கூட்டத்தைப் போன்று ஆகிவிட்டார்கள்.

இந்த வஹீக்கு உண்மையாக நடந்துகொள்பவர்கள் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் நன்மைகளைப் பெறுவார்கள். இதுதான் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு அளிக்கும் வாக்குறுதி.

நவீன நாகரிகத்துக்குச் சொந்தக்காரர்கள் அதிபுத்திசாலிகளாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மறுவுலக வாழ்க்கையின் பக்கம் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. ஒருநாள் அல்லாஹ்வைச் சந்தித்தே தீர வேண்டும் என்பது குறித்து யோசிப்பதுகூட இல்லை. அவர்கள் அன்றைய ஜாஹிலிய்யக் காலத்தில் வாழ்ந்தவர்களைப் போன்று இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகு வரக்கூடிய மறுவுலக வாழ்க்கையைப் பரிகாசம் செய்கிறார்கள். அதனை மூடநம்பிக்கையாகக் கருதுகிறார்கள்.

> அவர்கள் கூறுகிறார்கள், ‘எங்களின் முதல் மரணத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. நாங்கள் மீண்டும் எழுப்பப்பட மாட்டோம். நீங்கள் உண்மையாளர்களாயின் எங்கள் முன்னோர்களைக் கொண்டுவாருங்கள்.’ (34-36)

அல்லாஹ் அவர்களின் முன்னோர்களையும் அவர்களையும் ஒன்று திரட்டுவான். ஒவ்வொருவரும் அவர் செய்த செயல்களுக்கேற்ப விசாரிக்கப்படுவார். அவ்வாறு மட்டும் இல்லையெனில் இவ்வுலக வாழ்க்கை நோக்கமற்ற ஒன்றாக இருந்திருக்கும்.

> வானங்களையும் பூமியையும் அவையிரண்டுக்கும் இடையில் உள்ளவற்றையும் நாம் விளையாட்டுக்காகப் படைக்கவில்லை. அவற்றை நாம் நோக்கத்துடன் படைத்துள்ளோம். ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் அறிவதில்லை. நிச்சயமாகத் தீர்ப்புநாள் அவர்கள் அனைவருக்கும் முடிவுசெய்யப்பட்ட நேரமாகும். (38-40)

அல்லாஹ் வானங்களையும் பூமியையும் ஒரு நோக்கத்துடன் படைத்துள்ளான் என்ற விசயம் அணு, கோள்கள், எறும்பு, யானை, சமவெளிகள், காடுகள், நிலம், நீர் ஆகியவற்றை ஆட்சிசெய்யும் நுணுக்கமான

விதிகளிலிருந்து வெளிப்படுகிறது. அறிவியலும் இந்தப் பிரபஞ்சத்தில் படைப்பாளனின் மகத்துவத்தைப் பறைசாற்றும் ஆச்சரியங்களைக் கொண்டுவருகிறது. அதுபோன்று இந்தச் சத்தியம், முஸ்லிம்கள், குற்ற வாளிகள், நினைவுகூர்ந்தோர், அலட்சியமாக இருந்தோர் ஆகியோருக்கு மத்தியில் தீர்ப்பளிக்கப்படும் விசாரணை நாளிலும் வெளிப்படும்.

திருக்குர்ஆன் தன்னுடைய வாக்குறுதிகளாலும் எச்சரிக்கைகளாலும் மனித வாழ்வை மூடியிருக்கும் குழப்பத்தை மிகைத்துவிடுகிறது. இந்த உலகில் மனிதனின் கர்வத்தை அடித்து வீழ்த்தும் மறுமைநாளின் காட்சிகளை நிறுவுகிறது.

இந்த அத்தியாயம் அந்த உதாரணங்களில் ஒன்றோடு நிறைவடை கிறது. ‘நிச்சயமாகத் தீர்ப்புநாள் அவர்கள் அனைவருக்கும் முடிவு செய்யப்பட்ட நேரமாகும். அந்நாளில் எந்த நண்பரும் தம் நெருங்கிய நண்பருக்குப் பயனளிக்க மாட்டார். அவர்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்காது. (40,41)’

தீயவர்களுக்கு என்ன கிடைக்கும்?

நிச்சயமாக ஸக்கூம் மரம்தான் பாவிகளின் உணவாகும். அது எண்ணெயின் கசடைப் போல் இருக்கும். அது வயிற்றுக்குள் கொதிக்கும், வெந்நீர் கொதிப்பதைப் போல. (43-46)

நல்லவர்களுக்காகக் காத்திருக்கும் வெகுமதி என்ன?

நிச்சயமாக இறையச்சமுடையவர்கள் அமைதியான இடத்தில் இருப்பார்கள். சோலைகளிலும் நீரூற்றுகளிலும் இலேசான, கன மான பட்டாடைகளை அணிந்து கொண்டு எதிரெதிரே அமர்ந்தி ருப்பார்கள். (51-53)

அலட்சியாக இருப்பவர்களைத் தட்டியெழுப்பி அவர்களைக் கொண்டு மகத்தான தூதுத்துவமுடைய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே அல்லாஹ் முஹம்மதுக்கு இந்தக் குர்ஆனை அருளியுள்ளான்.

ஆகவே, மனிதர்கள் அறிவுரைபெறும் பொருட்டு இவ்வேதத்தை உம் மொழியில் இலகுபடுத்தியுள்ளோம். ஆகவே நீர் எதிர்பாரும், அவர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் ... (58,59)

❖ ❖ ❖

அத்தியாயம் 45

# அல்ஜாஸியா

(முழந்தாளிடுதல்)

*இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் சான்றுகளைக் கவனிக்குமாறு, நம்முடைய கவனத்தை வானங்களிலும் பூமியிலும் உள்ளடங்கியுள்ள அல்லாஹ்வின் பக்கம் இட்டுச் செல்லும் சான்றுகளின் பக்கம் திருப்பிய வாறு இந்த அத்தியாயம் தொடங்குகிறது.*

> *ஹா, மீம். இது யாவற்றையும் மிகைத்தவனும் ஞானம்மிக்கவனு மாகிய அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வேதமாகும். நிச்சய மாக வானங்களிலும் பூமியிலும் நம்பிக்கையாளர்களுக்கு ஏராள மான சான்றுகள் இருக்கின்றன. உங்களைப் படைத்திருப்பதிலும் பூமியில் உயிரினங்களைப் பரவச்செய்திருப்பதிலும் உறுதியாக நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு எண்ணற்ற சான்றுகள் இருக் கின்றன.* (1-5)

*இவைபோன்ற வசனங்கள் அல்பகறாவிலும் ஆலு இம்றானிலும் இன்னபிற அத்தியாயங்களிலும் இடம்பெற்றுள்ளன. இவற்றின் நோக்கம் மனித அறிவை ஈமானின் பக்கம் இட்டுச் செல்வதும் சரியான சிந்தனை யுடையவர்களிடம் ஈமானை நிலைநிறுத்துவதும்தான்.*

*மனிதன் நற்பாக்கியத்தைப் பெறுவதற்கு இந்தப் பார்வை மட்டும் போதுமானதா? இல்லை. இது ஒரு பகுதிதான். மற்றொரு பகுதி, இந்த உலகில் உள்ளவற்றை மனிதனின் நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதாகும். இதற்காகத்தான் அவன் படைக்கப்பட்டுள்ளான்.*

> *அல்லாஹ்தான் கடலினை உங்களின் பயன்பாட்டுக்காக ஆக்கித் தந்தான். அது, அவனது கட்டளைப்படி கப்பல் அதில் செல்வ தற்காகவும் அவனது அருளை நீங்கள் தேடுவதற்காகவும் நீங்கள்*

*நன்றி செலுத்துவதற்காகவும்தான். வானங்கள், பூமியில் உள்ள அனைத்தையும் அவன் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான். நிச்சயமாக இதில் சிந்திக்கக்கூடிய மக்களுக்கு ஏராளமான சான்று கள் இருக்கின்றன.* (12,13)

இந்த உலகின் நியதிகளை அறிந்துகொள்வது உலகியல்ரீதியான மனிதனுக்குப் பயனளிக்கும் ஒன்றாகும். அது அவனுடைய கொள்கை வலுப்பெறுவதற்கும் அவசியமான ஒன்றாகும். இந்தக் களத்தில் முஸ் லிம்கள் மிகவும் பின்தங்கிய காரணத்தால்தான் இன்று அவர்கள் தங்கள் எதிரிகளுக்கு முன்னால் தலைகுனிந்து அவமானப்பட்டு நிற்கிறார்கள். 'இவை அல்லாஹ்வின் வசனங்களாகும். இவற்றைச் சத்தியத்துடன் நாம் உமக்கு எடுத்துரைக்கிறோம். அல்லாஹ்வையும் அவனது வசனங்களை யும் விட்டுவிட்டு வேறு எதன் மீதுதான் இவர்கள் நம்பிக்கை கொள் வார்கள்? (6)'

குர்ஆன் மனித உள்ளங்களைத் தன் அறிவுரைகளின் மூலம் வழி நடத்துகிறது. இந்தப் பிரபஞ்சம் தன் சான்றுகளுடன் அல்லாஹ் ஒருவனே என்பதை அறிவிக்கிறது. இதற்குப் பிறகும் ஒரு மனிதனோ சமூகமோ எவ்வாறு தவறான வழியில் செல்ல முடியும்? 'பொய்யுரைக்கும் ஒவ் வொரு பாவிக்கும் கேடுதான். (7)'

இந்தக் கலவையான வழிகாட்டலுடன், அல்லாஹ் தன் அடியார்களை உடனுக்குடன் தண்டிக்காமல் அவர்கள் நேர்வழியடையும் பொருட்டு அவகாசமும் அளிக்கிறான். நிராகரிப்பாளர்களை அழைக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறி வுறுத்தவும் செய்கிறான்:

*நம்பிக்கையாளர்களிடம் நீர் கூறும், 'இறைவனின் தண்டனை ஏற்பட்ட நாள்களின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களை அவர்கள் மன்னித்துவிடட்டும். அது ஏனெனில், அவன் ஒரு சமூகத்துக்கு அவர்கள் சம்பாதித்ததற்கான கூலியை வழங்குவதற்காகத்தான்.' யார் நற்செயல் புரிகிறாரோ அது அவருக்கே நன்மையாகும். யாரே னும் தீய செயல் புரிந்தால் அது அவருக்கே கேடாக அமையும். பின்னர் உங்கள் இறைவனின் பக்கமே திரும்பக் கொண்டுவரப் படுவீர்கள்.* (14,15)

இந்த வகையான அறிவுகள் ஒரு புறம். இன்னொரு புறம் ஷரீஆ குறித்த அறிவுகளும் காணப்படுகின்றன. இந்த இரண்டு வகையான அறிவுகளும் ஒருசேர மனிதனை நேரான வழியின் பக்கம் இட்டுச் செல்

கின்றன. ஆனால் நிகழ்ந்தது என்னவெனில், உலகியல் அறிவுகளை மிகச் சிறந்த முறையில் கற்றவர்களில் பெரும்பாலோர் ஷரீஆவின் அறிவு களைக் கொண்டு பயனடையவில்லை. மாறாக, அவர்கள் இறை மறுப் பாளர்களாக எஞ்சிவிட்டார்கள். கருப்பையில் வளரும் குழந்தையை அவர்கள் காண்கிறார்கள். அதன் படைப்பாளனை ஒத்துக்கொள்வதற்குப் பதிலாக அதன் படைப்பாளன் அறியப்படாதவன் என்று கூறுகிறார்கள்.

இந்த நாத்திகமே நவீன நாகரிகத்தின் பொதுவான முகமாக இருக் கிறது. அது ஐரோப்பிய கண்டத்தை முழுமையாகச் சூழ்ந்துள்ளது. அதி லிருந்து வெளிப்படும் கரும்புகை மற்ற கண்டங்களையும் பாதித்துக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற வழிகேடு மார்க்க அறிவைச் சுமக்கும் பலரிடமும் காணப்படுகிறது. அவர்கள் மார்க்கத்தை உள்ளத்தைப் பண் படுத்தாத, சிந்தனையைச் செழுமைப்படுத்தாத வெறும் சடங்குகளாக ஆக்கிவிட்டார்கள். அவர்கள் தாம் சுமக்கும் புத்தகங்களில் என்ன இருக் கிறது என்பதை அறியாத கால்நடைகளைப் போன்று ஆகிவிட்டார்கள். இந்த உலகின் சீர்கேட்டுக்கு இந்த ஆலிம்கள் என்று அழைக்கப்படு வோரின் குறைபாடும் இறுகிய உள்ளமும் ஒரு காரணமாகும்.

சாக்ரடீஸின் கோட்பாட்டை (சிறப்பு என்பது ஞானம்தான்) முதன் முதலில் பொய்யெனக் கூறியவர்கள் யூத அறிஞர்கள்தாம். அவர்கள் அறிஞர்கள் என்னும் போர்வையில் தங்களின் மனஇச்சைகளைச் செயல் படுத்தும் மனிதர்களாக இருந்தார்கள்.

> நாம் இஸ்றாயீலின் மக்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் தூதுத்துவத்தையும் வழங்கினோம். அவர்களுக்குத் தூய்மையான வாழ்வாதாரங்களையும் வழங்கினோம். உலக மக்கள் அனைவரைக் காட்டிலும் அவர்களுக்கு மேன்மையை அளித்திருந்தோம். நாம் அவர்களுக்கு மார்க்கம் குறித்து தெளிவான ஆதாரங்களைக் கொடுத்திருந்தோம். ஆயினும், அவர்கள் தங்களிடம் தெளிவான அறிவு வந்தபின்னரும் தங்களிடையே உள்ள பிடிவாதத்தினால் முரண்பட்டார்கள் ... (16,17)

மார்க்க அறிவு நேர்மையையும் நீதியையும் உருவாக்கவில்லையெனில் அதனால் எந்த நன்மையும் இல்லை. இப்போதுள்ள அறிவியலாளர்களும் மார்க்க அறிஞர்களும் இறந்துபோன உள்ளங்களைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் மனிதச் சமூகத்துக்குப் பெரும் நன்மைகளை அளிக்க சக்திபெற்றவர்களாக இருக்கிறார்கள்.

> தன் மனஇச்சையைத் தன் இறைவனாக ஆக்கிக்கொண்டவனை நீர் பார்த்தீரா? அல்லாஹ் அறிந்துகொண்டே அவனை வழிகேட்டில்

*விட்டுவிட்டான். அவனது செவியின் மீதும் உள்ளத்தின் மீதும் முத்திரையிட்டு அவனது பார்வையின் மீது திரையை ஏற்படுத்தி விட்டான். அல்லாஹ் அவனை வழிகேட்டில் விட்டுவிட்ட பிறகு யார்தான் அவனுக்கு வழிகாட்ட முடியும்?* ... (23)

உலக விவகாரங்களில் புத்திசாலியாகவும் மறுமையின் விவகாரங்களில் மூடனாகவும் இருப்பது மனிதனை அவனுடைய இச்சைக்கு அடிமையாக ஆக்கிவிடும். அவன் இவ்வுலக வாழ்வை மட்டுமே பெரிதாகக் கருதுவான். அதற்குப் பின் வரக்கூடிய மறுமை வாழ்வுக்காக எந்தவித தயாரிப்பிலும் ஈடுபட மாட்டான். மாறாக, அதனை மறுக்கக்கூடியவனாக இருப்பான்.

*'நம்முடைய இவ்வுலக வாழ்வைத் தவிர வேறு வாழ்வு இல்லை. இங்குதான் நாம் மரணிக்கிறோம், உயிர் வாழவும் செய்கிறோம். கால ஓட்டத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை.' என்று அவர்கள் கூறுகிறார்கள். இதுகுறித்து அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்கள் வெறும் யூகத்தின் அடிப்படையில்தான் இவ்வாறு கூறுகிறார்கள்.* (24)

ஆகவே இந்த அத்தியாயத்தில் இறுதியாக, மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு விசாரணைக்காக நிறுத்தப்படுவதை நிராகரிப்பவர்களுக்கான எச்சரிக்கை இடம்பெறுகிறது.

*அப்போது ஒவ்வொரு சமூகமும் முழந்தாளிட்டுக் கிடப்பதை நீர் காண்பீர். ஒவ்வொரு சமூகமும் அதனதன் பதிவேட்டின் பக்கம் அழைக்கப்படும். நீங்கள் செய்தவற்றுக்குத்தான் இன்று கூலி கொடுக்கப்படுவீர்கள். இது உங்களின் விசயத்தில் மிகச் சரியான முறையில் சாட்சியளிக்கும் நம் பதிவேடு. நீங்கள் செய்தவற்றை எல்லாம் நாம் பதிவுசெய்துகொண்டிருந்தோம்.* (28,29)

தற்காலத்தின் நாகரிகத்தை கவனித்துப் பார்ப்பவர், அது விஞ்ஞானத்தில் பெரிய அளவில் முன்னேற்றமடைந்திருப்பதையும் மனிதர்கள் இங்கு கழிக்கும் குறுகிய காலத்துக்குச் சொகுசான வாழ்வு இலகுபடுத்தப்பட்டிருப்பதையும் அங்கு அவர்களுக்காகக் காத்திருக்கும் நிரந்தரமான வாழ்வைவிட்டு முழுமையாக மறக்கடிக்கப்பட்டிருப்பதையும் காண்பார். பின்னர், வேதக்காரர்கள் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கு இயலாதவர்களாக ஆகிவிட்டார்கள். மேலும், இஸ்லாத்தின் எதிரிகளுடன் கைகோத்துக்கொண்டார்கள். விளைவாக அவர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் அசத்தியத்தைப் பரப்புபவர்களாக, அல்லாஹ்

*வின் மார்க்கம் அகற்றப்படுவதற்குக் காரணமானவர்களாக ஆகிவிட்டார்கள். மறுமைநாளில் அவர்கள் இவ்வாறு எதிர்கொள்ளப்படுவதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை:*

> *அவர்களிடம் கூறப்படும், 'உங்களது இந்த நாளின் சந்திப்பை நீங்கள் மறந்துவிட்டதுபோன்று நாமும் இன்று உங்களை மறந்துவிடுவோம். உங்களின் இருப்பிடம் நரகமாகும். உங்களுக்கு உதவிபுரிவோர் யாரும் இல்லை.'* (34)

*இந்த உலகை வழிபடுபவர்கள் விரைவாகச் சில இலாபங்களைப் பெறலாம். ஆனால், அவர்கள் அல்லாஹ்வுக்கு ஏதேனும் இழப்பை ஏற்படுத்த முடியுமா? அவர்கள்தாம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் இழப்படையக்கூடியவர்கள்.*

> *எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவனே வானங்களின் இறைவனும் பூமியின் இறைவனும் படைப்புகள் அனைத்தின் இறைவனுமாவான். வானங்களிலும் பூமியிலும் பெருமை என்பது அவனுக்கே உரியதாகும். அவன் யாவற்றையும் மிகைத்தவன்; ஞானம்மிக்கவன்.* (36,37)

*அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துவதில், அவனது பெயர்களில் இரண்டை அழுத்தம்திருத்தமாகக் கூறுவதில் அத்தியாயத்தின் இறுதிப் பகுதி அதன் முதல் பகுதியோடு முழுமையாக ஒத்துப்போகிறது.*

❖ ❖ ❖

அத்தியாயம் 46

# அல்அஹ்காஃப்

(மணல்மேடு)

இது 'ஹா, மீம்' எனத் தொடங்கும் அத்தியாயங்களில் இறுதியான தாகும். இவ்வாறு தொடங்கப்படும் அத்தியாயங்கள், திருக்குர்ஆன் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ் விடமிருந்து அருளப்பட்ட வேதம் என்பதை அழுத்தம்திருத்தமாகக் கூறக்கூடியவையாக இருக்கின்றன. கல்வியை விரும்பும் மாணவர்கள் தங்களின் ஆசிரியரின் பாடத்தைக் கவனமாகக் கேட்பதுபோன்று மனி தர்கள் அனைவரும் இது கூறும் அறிவுரைகளைக் கவனமாகக் காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான், உயிருள்ள உடல்களில் செல்களை உருவாக்கியவன் பரந்து விரிந்த இந்தப் பிரபஞ்சத்தில் சுற்றக்கூடிய கோள்களையும் உருவாக்கினான். அவனுடைய எந்தச் செயலும் மற்ற எந்தச் செயலையும்விட்டு அவனைத் திருப்பிவிடாது. நாம் வாழக்கூடிய இந்த உலகம் நிறைவடையக்கூடிய குறிப்பிட்ட தவணையைத்தான் பெற்றிருக்கிறது. நாமும் குறிப்பிட்ட தவணையையே பெற்றிருக்கிறோம். அந்தத் தவணை நிறைவடைந்த பின்னர் மீண்டும் ஒரு வாழ்க்கை தொடங்கும். அந்த வாழ்க்கையில் இவ்வுலகில் விதைத்ததையெல்லாம் நாம் அறுவடைசெய்வோம். 'வானங் களையும் பூமியையும் அவற்றுக்கிடையே உள்ளவற்றையும் சத்தியத் துடனும் ஒரு குறிப்பிட்ட தவணையுடனுமே நாம் படைத்துள்ளோம். ஆயினும், நிராகரிப்பாளர்கள் தங்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையைப் புறக்கணிப்பவர்களாகவே இருக்கிறார்கள். (3)'

அவர்கள் இரண்டு விசயத்துக்கு முகம்கொடுத்தே தீர வேண்டும். ஒன்று, இந்தப் பிரபஞ்சத்தை ஓர் ஒழுங்கில் வைத்திருக்கும் நியதிகள். மற்றொன்று, அனைவருக்காகவும் காத்திருக்கும் இறுதியான இருப்பிடம்.

*ஒவ்வொருவரும் அவரவர் செய்த செயல்களின் அடிப்படையில் விசாரணையை எதிர்கொண்டு தங்களுக்கான இடங்களைச் சென்றடைவார்கள்.*

*பின்னர் அத்தியாயம் தூதருக்கும் இணைவைப்பாளர்களுக்கும் மத்தியில் நடைபெற்ற விவாதங்களைக் குறிப்பிடுகிறது. அவர்களின் கொள்கைகளையும் வழிமுறைகளையும் ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டு அவற்றின் குளறுபடிகளைத் தெளிவுபடுத்துகிறது. அவர்கள் வணங்கும் போலியான தெய்வங்கள் எதையும் படைக்கச் சக்தியற்றவை என்பதிலிருந்து தொடங்குகிறது.*

> *நீர் கேளும், 'அல்லாஹ்வை தவிர்த்து நீங்கள் அழைக்கின்றவற்றை நீங்கள் கவனிக்கவில்லையா? அவை பூமியில் எதைப் படைத்துள்ளன அல்லது அவை வானங்களில் ஏதேனும் பங்கைப் பெற்றுள்ளனவா என்பதை எனக்குக் காட்டுங்கள். நீங்கள் உண்மையாளர்களாயின் முன்னுள்ள ஒரு வேதத்தையோ அறிவுசார்ந்த ஏதேனும் ஒரு ஆதாரத்தையோ என்னிடம் கொண்டுவாருங்கள்.'* (4)

*ஆசியா கண்டத்தை அல்லாஹ் படைத்தான், ஆப்பிரிக்கா கண்டத்தை வேறொரு தெய்வம் படைத்தது என்றோ சூரியனை அல்லாஹ் படைத்தான், சந்திரனை வேறொரு தெய்வம் படைத்தது என்றோ யாரும் கூறவில்லை. இது நிராகரிக்கப்பட வேண்டிய வடிகட்டிய மடமைத்தனம் என்பது தெளிவாகிறது. பிறகு ஏன் அல்லாஹ்வைத் தவிர பிற தெய்வங்களை அவர்கள் அழைக்கிறார்கள்? ஒருவேளை இணைவைப்பாளர்கள் வானத்தின் முகட்டை அடைந்துவிட்டாலும் அவர்களால் எதையும் கொண்டுவர முடியாது. ஏனெனில், அவர்கள் ஒன்றுமில்லாத பூஜ்யத்தை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள்.*

> *அல்லாஹ்வைத் தவிர்த்து மறுமைநாள்வரை தனக்குப் பதிலளிக்காதவற்றை அழைப்பவனைவிட வழிகேடன் யார்? அவர்களோ தம்மை அழைப்பதையே அறியாதவர்களாக இருக்கிறார்கள்.* (5)

*குர்ஆனை முஹம்மதுதான் புனைந்துள்ளார் என்று இணைவைப்பாளர்கள் கருதுகிறார்கள்.*

> *அல்லது, 'இதனை அவர் சுயமாகப் புனைந்துகொண்டார்.' என்று அவர்கள் கூறுகிறார்களா? நீர் கூறும், 'நான் இதனைப் புனைந்து கொண்டிருந்தால் உங்களால் அல்லாஹ்விடமிருந்து சிறிதும் என்னைக் காப்பாற்ற முடியாது. நீங்கள் புனைந்துகூறும் விசயங்களை அவன் நன்கறிந்தவன். எனக்கும் உங்களுக்குமிடையே சாட்சியாளனாக இருக்க அவனே போதுமானவன்.'* (8)

முஹம்மது அவர்களுக்கு வேதத்தை எடுத்துரைத்தபோது அது அவர்களை அல்லாஹ் ஒருவனின் பக்கம், அவனை மட்டுமே வணங்கு வதன் பக்கம், அவனுடைய திருப்திக்காகவே செயல்படுவதன் பக்கம், காலையிலும் மாலையிலும் அவனை நினைவுகூர்வதன் பக்கம் உந் தித்தள்ளியது. இதற்காகவா அல்லாஹ் அவரைத் தண்டிப்பான்? அல்லாஹ்வை வணங்குவதில், அவனை மட்டுமே சார்ந்திருப்பதில், பொறுமையைக் கடைப்பிடிப்பதில், மறுமையின் மீது நம்பிக்கை வைப்பதில் அவர் அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இதற்காக அவர் பழிக்கப்படுவாரா? இந்தக் குர்ஆனைத் தவிர இறை வேதம் என்று கூறப்படுகின்ற எந்த ஒரு வேதத்திலும் இந்த அளவு அல்லாஹ்வின் கண்ணியமும் மகத்துவமும் அவன் படைப்புகளின் மீது கொண்டுள்ள அன்பும் எடுத்துரைக்கப்பட்டிருப்பதை நான் கண்டதில்லை. இதுதான் முஹம்மது செய்த குற்றமா?

இந்த வேதம் முஹம்மதால் புனையப்பட்டது என்று எந்த ஒரு ஆரோக் கியமான சிந்தனையாளனும் கூற மாட்டான். அல்லாஹ் வஹீ இறக்கு வான், தூதர்களை அனுப்புவான் என்பதை நிராகரிக்கின்ற அறியாமை மிகுந்த சடவாதிகள்தாம் அவ்வாறு கூறுவார்கள். அவர்களுக்கு என்ன பதிலளிக்கப்பட்டது?

> நீர் கூறும், 'தூதர்களில் நான் ஒன்றும் புதுமையானவன் அல்லன். எனக்கு என்ன நேரும் என்பதையும் உங்களுக்கு என்ன நேரும் என்பதையும் நான் அறிய மாட்டேன். நான் எனக்கு இறைவ னிடமிருந்து வஹீயாக அறிவிக்கப்படுவதைத்தான் பின்பற்றுகி றேன். நான் வெளிப்படையாக எச்சரிக்கைசெய்பவனே.' (9)

அவர் இந்த அழைப்புப் பணியைத் தொங்கியபோது அவருக்கும் சத்தியத்தின் எதிரிகளுக்கும் நடக்கும் இந்தப் போராட்டத்தின் முடிவு என்ன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. ஆயினும், அல்லாஹ் விடம் அடைக்கலம் தேடியவராக அவனுடைய கட்டளையை எடுத்து ரைத்தார். குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு வெற்றிபெற்றார். இறுதி மூச்சு வரை அவனைப் போற்றிப் புகழ்ந்துகொண்டுதான் இருந்தார். அல்லாஹ் வின் மீது புனைந்துகூறும் ஒருவரின் வாழ்க்கை இவ்வாறு இருக்குமா?

அப்படியானால் உண்மைக்கு மதிப்பு என்ன?

இஸ்லாத்தை நிராகரிப்பதற்கு மக்காவாசிகளுக்கு எந்தக் காரணமும் இல்லை. ஏனெனில், மதீனாவில் யூதர்கள் - அவர்களின் வாதப்படி - மூசாவைப் பின்பற்றிக்கொண்டிருந்தார்கள். யூதர்களில் நல்லவர்கள்

முஹம்மதுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவம் உண்மையானது என்று சந்தேகமின்றி நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, பொதுவாக வஹீயை நிராகரிப்பதற்கோ குறிப்பாக முஹம்மதை நிராகரிப்பதற்கோ அவர்களுக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை.

> நீர் கூறும், 'இது அல்லாஹ்விடமிருந்து வந்திருந்தும் இதனை நீங்கள் நிராகரித்தால் உங்களின் கதி என்னவாகும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களா? இஸ்றாயீலின் மக்களிலிருந்து ஒருவர் இதைப் போன்ற ஒரு வேதத்துக்குச் சாட்சிகூறி ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் நீங்கள் கர்வம் கொண்டுள்ளீர்கள். நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்ட மாட்டான்.' (10)

நம்முடைய காலத்தில் அவர்களில் பெரும்பான்மையினர் முஹம்மதை நிராகரிக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வைக்கூட ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களுக்கான சீர்திருத்தம் உண்மைகளில் தலையாயதான, படைப்பாளனான அல்லாஹ்வைப் பற்றிய அறிமுகத்தோடுதான் தொடங்கப்பட வேண்டும்.

முந்தைய வேதக்காரர்கள் தங்களின் வேதத்துடன் மூட்டமான தொடர்பையே கொண்டிருந்தார்கள். அவர்களில் அல்லாஹ்வைச் சரியான முறையில் அறிந்து முஹம்மதையும் பின்வருமாறு கூறக்கூடியவரை வெறுக்கக்கூடியவர் காணப்படுவது சாத்தியமற்றதாகவே இருந்தது:

> 'நிச்சயமாக எங்கள் இறைவன் அல்லாஹ்தான்!' என்று கூறி, பின்னர் அதில் உறுதியாக நிலைத்துநிற்பவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். அவர்கள்தாம் சுவனவாசிகள். உலகில் அவர்கள் செய்துகொண்டிருந்த செயல்களுக்குக் கூலியாக என்றென்றும் அங்கு தங்கியிருப்பார்கள். (13,14)

மனிதர்களிடம் வேண்டப்படுவது ஈமானும் அதில் உறுதியாக நிலைத்திருத்தலும்தான். அதுதான் அவர்களை வழிநடத்த வேண்டும். இதில் என்ன குறை இருக்கிறது?

இஸ்லாத்தை மக்களிடம் எடுத்துரைக்கும்போது குடும்பங்களிலும் நம்பிக்கையாளர், நிராகரிப்பாளர் என்ற பிரிவினை ஏற்பட்டுவிடும். தந்தை நேர்வழியில் இருக்கலாம். மகன் தவறான வழியில் இருக்கலாம். மகன் நேர்வழியில் இருக்கலாம். தந்தை தவறான வழியில் இருக்கலாம். மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை. சத்தியம் நெருங்கிய உறவினர் அனைவரையும் ஒழுங்குபடுத்துகிறது. அருட்கொடைகள் பரிபூரணமடைகின்றன. அந்தச் சமயத்தில் மனிதன் கூறுவான்:

*'என் இறைவா, நீ என்மீதும் என் தாய்தந்தையர் மீதும் புரிந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதற்கும் நீ விரும்பும் நற்காரி யங்களைச் செய்வதற்கும் எனக்கு அருள்புரிவாயாக. என் சந்ததி யிலிருந்து எனக்கு நல்ல பிள்ளைகளைத் தருவாயாக. நிச்சயமாக நான் உன் பக்கம் மீண்டு, கீழ்ப்படிந்தவர்களில் ஒருவனாகி விட் டேன்.'* (15)

நன்றிகெட்ட மகன் மறுமைநாளையும் அங்கு கூலி கொடுக்கப்படு வதையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். பெற்றோரின் அறிவுரையைப் புறக்கணிக்கிறான். அவர்களால் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அவனைச் சிறிதும் காப்பாற்ற முடியாது.

*ஒருவன் தன் தாய்தந்தையரிடம், 'நான் உங்களை வெறுக்கிறேன். இறந்தபின்னர் நான் மீண்டும் எழுப்பப்படுவேன் என்று மிரட்டு கிறீர்களா? எனக்கு முன்னர் எத்தனையோ சமூகங்கள் கடந்து போய்விட்டன.' என்று கூறுகிறான். அப்போது அவனுடைய தாய் தந்தையர் அல்லாஹ்விடம் மன்றாடியவர்களாக, 'உனக்குக் கேடு தான். நம்பிக்கை கொள், அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மை யானது.' என்று கூறுகிறார்கள். ஆயினும் அவனோ, 'இவையெல் லாம் முன்னோர்களின் கட்டுக்கதைகள்தான்.' என்று கூறுகிறான். இவர்களுக்கு முன் வாழ்ந்த ஜின், மனிதச் சமூகங்களோடு இத் தகைய மக்கள்மீதும் வேதனை உறுதியாகிவிட்டது. நிச்சயமாக இவர்கள் பெரும் இழப்புக்குள்ளாகிவிட்டார்கள்.* (17,18)

நிராகரிப்பாளர்களின் வாழ்க்கை இன்பங்களாலும் வீணானவற்றால் ஆன தீய இச்சைகளாலும் நிரம்பிக் காணப்படலாம். ஆகவே, அல்லாஹ் அவர்களைக் குறித்து கூறுகிறான்:

*நிராகரிப்பாளர்கள் நரகத்தின் முன் கொண்டுவரப்படும் நாளில், 'நீங்கள் உங்களுக்குக் கிடைத்த நல்லவற்றையெல்லாம் வீண டித்து, அவற்றின் மூலம் உலகில் அனுபவித்துவிட்டீர்கள். ஆகவே, நீங்கள் பூமியில் அநியாயமாகப் பெருமையடித்துக் கொண்டும் பாவம்செய்து கொண்டும் இருந்ததால் இன்று இழிவு மிக்க வேத னைதான் உங்களுக்குக் கூலியாக வழங்கப்படும்.'* (20)

இந்த வசனத்தின் காரணமாகவே உமர் (ரழி) இன்பங்களை விட்டும் பற்றற்றவராக வாழ்ந்தார். இப்னு அதிய்யா அறிவிக்கிறார்: உமர் ஷாம் தேசம் சென்றபோது ஃகாலிது இப்னுல் வலீது அவருக்கு மிகச் சிறந்த உணவை வழங்கினார். அப்போது உமர் கூறினார், 'இந்த உணவு

எங்களுக்குக் கிடைக்கிறது. ஏழை முஸ்லிம்களோ கோதுமை ரொட்டி யைக்கூடப் பசி தீர சாப்பிட முடியாமல் மரணித்துவிட்டார்கள்.' ஃகாலிது கூறினார், 'அவர்களுக்குச் சுவனம் கிடைக்கும்.' உமர் அழுதார். 'இதுதான் நம்முடைய பங்கு எனில் அவர்கள் சுவனத்தைக் கொண்டு சென்று விட்டார்கள். பெரிய அளவில் வேறுபட்டுவிட்டார்கள்.'

உமர் ஆட்சியாளராக இருந்தும் கடினமான ஆடைகளை அணிபவ ராக, ஏழை முஸ்லிம்களின் உணவைவிட அதிகமாக உண்ணாதவராக இருந்தார். அல்லாஹ் தன் அடியார்கள் மீது தூய்மையானவற்றைத் தடைசெய்யவில்லை என்பதை நாம் அறிவோம். ஆனாலும் வீண்விரயம் செய்பவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்பவர்களாகிக் கடமைகளை மறந்து விடுவார்கள் என்ற அச்சம் இருக்கத்தான் செய்கிறது.

இஸ்லாத்தின் எதிரிகளான சிலை வழிபாட்டாளர்கள் இஸ்லாத்தை எதிர்ப்பதில் தீவிரமானவர்களாக இருந்தார்கள். தங்களுக்குக் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் அவர்கள் பயன்படுத்தாமல் விடவில்லை. முஸ்லிம் கள் அவர்களை எதிர்த்து உறுதியாக நின்றார்கள். திருக்குர்ஆன் அவர்களை உறுதிப்படுத்தியது. அவர்களுக்கான ஆதாரங்களை வலுப்படுத்தியது. வரலாற்றிலிருந்து அவர்களுக்குப் படிப்பினைகளைக் கொண்டுவந்தது. அவை, எவ்வளவுதான் எதிர்ப்பு வந்தாலும் இந்த அழைப்பு வென்றே தீரும் என்பதை அறிவிக்கக்கூடியவையாக இருந்தன. இதுகுறித்து அல் லாஹ் தன் தூதரிடம் கூறினான்:

> 'ஆது'டைய சகோதரரை நினைவுகூரும். அவர் தம் சமூகத்தினரை மணல்மேடுகளில் நின்று எச்சரிக்கைசெய்தார். அவருக்கு முன்னரும் பின்னரும் எச்சரிக்கைசெய்பவர்கள் வந்துள்ளார்கள். 'நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது. நான் உங்கள்மீது வரப்போகும் கடினமான நாளின் வேதனையை அஞ்சு கிறேன்.' (21)

அது மறுமைநாளின் வேதனையா? அல்லது, அவர்களை அழிப்பதற் காக அவர்களின் முற்றத்தில் இறங்கிய வேதனையா?

இந்த எச்சரிக்கை இரண்டு வேதனைகளையும் குறிக்கலாம். ஆது சமூகத்தினர் யமனில் உள்ள தெற்குப் பகுதியில் மணற்பாங்கான பிர தேசத்தில் வசிப்பவர்களாக இருந்தார்கள். செழிப்பும் வலிமையும் பெற்று அவர்கள் நிம்மதியாக வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் தங்களின் தூதர் ஹூதை மூடர் என்று தூற்றினார்கள். அவரை ஊர்விலக்கம் செய்தார்கள். அவர்களின் இந்த நடத்தைக்குத் தண்டனையாக அல்லாஹ் மழையை

நிறுத்திவைத்தான். ஆனாலும் துன்பங்கள் அவர்களை மென்மை யாக்கவில்லை. அவர்கள் தங்களின் தீமைகளை விடவில்லை. அவர்கள் ஹூதிடம் கூறினார்கள்: ‘எங்களின் தெய்வங்களை விட்டும் திசை திருப்பவா எங்களிடம் நீர் வந்துள்ளீர்? நீர் உண்மையாளராக இருந்தால் அச்சுறுத்தும் வேதனையை நீர் எங்களிடம் கொண்டுவாரும். (22)’

அவர்கள் எதற்காக அவசரப்பட்டுக் கொண்டிருந்தார்களோ அது அவர் களிடம் வந்தது.

> ஒரு மேகமூட்டம் தங்களை நோக்கி வருவதைக் கண்டார்கள். தாங்கள் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த மழைமேகம் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தார்கள். அது மேகமாகத் தங்களின் பள்ளத் தாக்கு களை நோக்கி வருவதை அவர்கள் கண்டபோது, ‘இது எங்களுக்கு மழை தரும் மேகம்.’ என்று கூறினார்கள். இல்லை. மாறாக, நீங்கள் அவசரப்பட்டீர்களே அதுதான் இது. இது துன்புறுத்தும் வேத னையை உள்ளடக்கிய காற்றாகும். அது தன் இறைவனின் கட் டளைப்படி அனைத்தையும் அழித்துவிடும். அவர்களின் வீடு களைத் தவிர எதுவும் தென்படாதவாறு அவர்கள் ஆகிவிட்டார்கள் … (24,25)

அவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டார்கள். வீடுகள் மட்டும் வெறிச் சோடியவையாக மிஞ்சிக்கிடந்தன.

இந்தக் குறைஷிகளைவிட வலிமையானவர்கள் ஆது. அவர்களை விதி மிகைக்கவில்லையா? அவர்கள் அஞ்ச மாட்டார்களா?

ஆனாலும் மனிதர்கள் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்குக் கார ணம், அவர்கள் தங்களின் அறிவையும் கண்களையும் செவிகளையும் மூடிக்கொண்டதுதான். பேச முடியாத விலங்குகளைவிட மோசமானவர் களாக ஆகிப்போனார்கள். உங்களுக்கு வழங்காத ஆற்றல்களையெல் லாம் நாம் அவர்களுக்கு வழங்கியிருந்தோம். அவர்களுக்கு செவிகளை யும் கண்களையும் உள்ளங்களையும் அளித்திருந்தோம். ஆயினும், அவர்களது செவிப்புலனும் பார்வையும் உள்ளங்களும் அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்கவில்லை. அவர்கள் அல்லாஹ்வின் வசனங் களை நிராகரித்துக்கொண்டிருந்தார்கள். எதனை அவர்கள் பரிகாசம் செய்துகொண்டிருந்தார்களோ அதுவே அவர்களைச் சூழ்ந்துகொண்டது. (26)

குறைஷிகள் அறபு தீபகற்பத்தில் வசித்துக்கொண்டிருந்தார்கள். வெறிச் சோடிக் கிடக்கின்ற ஸாலிஹின் நகரங்களையும் லூத்தின் சமூகத்தார்

வாழ்ந்த ஊர்களையும் கடந்துசெல்பவர்களாக இருந்தார்கள். சபாவாசிகளுக்கும் துப்பஉ சமூகத்தாருக்கும் என்ன நிகழ்ந்து என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் வணங்கிக்கொண்டிருந்த சிலைகள் அவர்களுக்கு ஏதேனும் பலனளித்தனவா? 'மாறாக, அவையனைத்தும் அவர்களைவிட்டும் மறைந்துவிட்டன. அவை அவர்களின் பொய்யும் புனைவுமே ஆகும். (28)'

மக்காவாசிகளின் பிடிவாதத்துக்கேற்ப உதாரணங்களும் எச்சரிக்கைகளும் மீண்டும் மீண்டும் அதிகமாகக் கூறப்படுகின்றன. இந்தக் குர்ஆன், தூதர்களுடைய தலைவரின் உள்ளத்தில் இருக்கின்ற கவலைகளை நீக்கும் ஆறுதல்களாலும் மறுமைநாள்வரை வரக்கூடிய அழைப்பாளர்களுக்கு அவசியமான வழிகாட்டல்களாலும் நிரம்பியுள்ளது.

பின்னர் இந்த அத்தியாயம், இந்தக் குர்ஆனைச் செவியேற்றும் அதற்குப் பதிலளிக்காமல் இருந்துகொண்டிருக்கும் மனிதர்களுக்கிடையில் அதன் வசனங்களைச் செவியுற்று நேர்வழியடைந்த ஜின்களில் ஒரு சாராரைக் குறித்து குறிப்பிடுகிறது. இது அவர்களைச் சிந்திப்பதற்குத் தூண்ட வேண்டாமா?

இங்கு ஜின்களைக் குறித்த செய்தி ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல அர்த்தங்களை உள்ளடக்கியது. மக்களில் கதையளப்பவர்கள் மறைவானவற்றின் போர்வையில் தங்களின் எண்ணங்களையும் பிறழ்வான சிந்தனைகளையும் புகுத்திவிடுகிறார்கள்.

குர்ஆன் ஷைத்தானைக் குறித்து பேசுகிறது. அது கூறுகிறது: 'அவனும் அவனது கூட்டாளிகளும் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் பார்க்க முடியாது. (7:27)' ஆனால் இவர்களோ ஜின்களின் வாழ்க்கையைக் குறித்து, அவை மனிதர்களுடன் கொண்டுள்ள திருமண உறவைக் குறித்து, அவற்றை வசப்படுத்தும் முறைகளைக் குறித்து புத்தகம் எழுதுகிறார்கள்.

வீணான இந்த விசயங்களில் மூழ்கிவிடும் அவர்கள் சத்தியத்துக்கு முன்னால் ஊமையர்களாக நின்றுவிடுகிறார்கள். அதற்காகத்தான் வானங்களும் பூமியும் படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் அவற்றில் செயல்படும் எந்த நியதிகளையும் கண்டுபிடிப்பதில்லை. அவற்றைக் கொண்டு பயனடைவதுமில்லை. மேற்குலகத்தினர், வானங்களும் பூமியும் எந்தச் சத்தியத்தைக் கொண்டு நிலைபெற்றுள்ளதோ அதனைக் கண்டடைவதற்காகத்தான் எழுந்துள்ளார்கள்.

நாம் அவர்களைக் குறித்து வேறொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். இப்போது திருக்குர்ஆனைக் குறித்து ஜின்கள் கூறியவற்றைக் காண்போம்.

ஜின்களில் ஒரு குழுவினரை நாம் உம் பக்கம் கொண்டுவந்த போது அவர்கள் குர்ஆனைச் செவியுற்றார்கள். அவர்கள் அவரிடம் வந்தபோது தங்களிடையே 'மௌனமாக இருங்கள்!' என்று கூறி னார்கள். செவியேற்று முடிந்ததும் தம் சமூகத்திடம் எச்சரிக்கை செய்தவர்களாகத் திரும்பினார்கள். (29)

ஆனால் ஆதமுடைய மக்களில் சிலர் கூறினார்கள்: 'இந்தக் குர்ஆனைச் செவியேற்காதீர்கள். நீங்கள் மிகைத்துவிடும் பொருட்டு இதற்கு இடை யூறு ஏற்படுத்துங்கள். (41:26)'

ஆனால் இவர்களோ காதுகொடுத்துக் கேட்டார்கள். பின்னர், தங்களின் சமூகத்தாரிடம் சென்று எச்சரிக்கைசெய்தார்கள்.

அவர்கள் கூறியவற்றில் ஒரு விசயம், 'எங்கள் சமூகமே, நாங்கள் மூசாவுக்குப் பிறகு அருளப்பட்ட ஒரு வேதத்தைச் செவியுற்றோம்! (30)' இன்ஜீல் என்பது தவ்றாத்தை நிறைவுபடுத்தக்கூடியதும் அதன் சில கடினமான சட்டங்களை இலகுபடுத்தக்கூடியதும் ஆகும் என்று அவர் கள் அறிந்திருந்தார்கள் என்பதையே இந்த வாசகம் காட்டுகிறது. ஆனால், குர்ஆன் தனித்துவம்மிக்க வேதமாகும். அது தன்னில் தவ்றாத், இன்ஜீலின் கருத்துகளையும் உள்ளடக்கியுள்ளது. அது தனக்கு முன்னர் அருளப்பட்ட வஹீயைப் பாதுகாக்கக்கூடியதாகவும் இருக்கிறது. 'எங்கள் சமூகமே, அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவரின் அழைப்பை ஏற்று அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவன் உங்கள் பாவங்களை மன்னித்து, துன்புறுத்தும் வேதனையிலிருந்து உங்களைப் பாதுகாப்பான். (31)' வசனங் கள் குறைஷிகளுக்கு எடுத்துரைத்தவாறு, இருள்களிலிருந்து அவர்களை வெளியேற்றியவாறு, கூலி கொடுக்கப்படும் நாளைக் கொண்டு அவர்களை எச்சரித்தவாறு கடந்துசெல்கின்றன.

வானங்களையும் பூமியையும் படைத்து, அவற்றைப் படைப்பதில் சோர்வடைந்துவிடாத அல்லாஹ் இறந்தவர்களை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பவும் ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லையா? ஆம். அவன் ஒவ்வொன்றின் மீதும் பேராற்றலுடையவன். (33)

ஆது சமூகத்தினர் குறைஷிகளைவிடப் பலம்மிக்கவர்களாக இருந் தார்கள். அவர்கள் இருவரையும்விட ஜின்கள் பலம்மிக்கவர்கள். அவர்கள் மனிதர்களைப் போன்று கர்வம் கொண்டு பின்வாங்கினார்களா என்ன?

மனஉறுதிமிக்க தூதர்களான நூஹ், இப்றாஹீம், மூசா, ஈசா ஆகி யோரைக் கொண்டு ஆறுதல் பெற்றுக்கொள்ளும்படி நபியவர்களை

வேண்டும் வசனத்தோடு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது. ஏனெனில், அந்தத் தூதர்கள் தங்களின் சமூகத்தார்களிடமிருந்து பல துன்பங்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் கடைசி வரை நிலைகுலையாமல் உறுதியாக நின்றார்கள். 'மனஉறுதி மிக்க தூதர்கள் பொறுத்துக்கொண்டதைப் போல் நீரும் பொறுமையுடன் இருப்பீராக. அவர்களின் விசயத்தில் அவசரப்படாதீர் ... (35)'

போராட்டத்தின் நாள்கள் நீண்டுகொண்டே செல்லலாம். ஆனால், எதிர்பார்க்கப்பட்ட விளைவு வந்துவிட்டால் அவையனைத்தும் சில நிமிடங்களில் கடந்துபோன நினைவுகளாக எஞ்சிவிடும். ஒரு கவிஞர் கூறுகிறார்.

> 'நீ விரும்புவதை நீ அடைந்துவிட்டால் உனக்கு ஓர் இரவு கடந்துபோனதைப் போன்றுதான் இருக்கும்.'

அ. அவர்களுக்கு எச்சரிக்கப்பட்ட வேதனையை அவர்கள் காணும் நாளில் பகலின் சில மணித்துளிகள்தான் பூமியில் தங்கியிருந்தோம் என்றே அவர்களுக்குத் தோன்றும்.

ஆ. இதனை எடுத்துரைத்துவிட வேண்டும் என்பதே உமது பொறுப்பாகும். அடிபணியாத மக்கள்தான் அழிக்கப்படுவார்கள். (35)

❖ ❖ ❖

அத்தியாயம் 47

# முஹம்மது

*இந்த அத்தியாயத்துக்கு அல்கிதால் - போர் என்றும் பெயரிடப்பட்டுள்ளது. நபி (ஸல்) கருணை மிகுந்தவராக இருக்கும் அதே சமயம் போரிடக்கூடியவராகவும் இருக்கிறார் என்பதை இந்த அத்தியாயம் தெளிவுபடுத்துகிறது. அவர் பாதிக்கப்பட்டவர்களுக்காக, அநியாயம் இழைக்கப்பட்டவர்களுக்காக அநியாயக்காரர்களைப் பழிவாங்குகிறார். அநியாயக்காரர்கள், கர்வம் கொண்டவர்களாகப் பூமியில் சுற்றித் திரிய அவர் விட்டுவிடுவதில்லை. மாறாக, அவர்களின் கர்வத்தை அவர் உடைக்கிறார்.*

*இந்த அத்தியாயத்தின் சூழலைப் புரிந்துகொள்வதற்கு முதலில் நீங்கள் உங்கள் மனதுக்குள் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ளுங்கள்: போஸ்னியாவில் உள்ளவர்கள், தங்கள் ஆண்களைக் கொன்று பெண்களைக் கடத்திச்செல்லும் செர்பியர்களுக்கு எதிராக மனதில் எந்த வகையான உணர்வை மறைத்துவைத்திருப்பார்கள். வெறுப்பையும் குரோதத்தையும்தானே மறைத்துவைத்திருப்பார்கள். தங்களைத் தங்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றிய, தங்களைக் கொலைசெய்வதை அனுமதிக்கப்பட்ட செயலாகக் கருதும் யூதர்களுக்கு எதிராக ஃபலஸ்தீன் மக்கள் எந்த வகையான உணர்வைக் கொண்டிருப்பார்கள்? கோபத்தையும் வெறுப்பையும்தானே கொண்டிருப்பார்கள்?*

*ஒடுக்கப்பட்டவர்கள் தங்களை ஒடுக்கியவர்களைக் களத்தில் சந்திக்கும்போது திருக்குர்ஆன் அவர்களுக்கு என்ன சொல்ல வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? அது அவர்களுக்குக் கூறுகிறது:*

> *அவர்களுடன் போரிடுங்கள். அல்லாஹ் உங்கள் கரங்களால் அவர்களைத் தண்டிப்பான். அவர்களை இழிவுபடுத்தி வென்றுவிட அல்லாஹ் உங்களுக்கு உதவிபுரிவான். நம்பிக்கையாளர்களின் உள்ளங்களையும் குளிரச்செய்வான். அவர்களுடைய உள்ளங்களின் கோபத்தைப் போக்கிவிடுவான்.* (9:14,15)

*அல்லது, இந்த அத்தியாயத்தில் வந்துள்ளது:*

*நிராகரிப்பாளர்களை நீங்கள் போர்க்களத்தில் சந்திக்க நேர்ந்தால் அவர்களின் கழுத்துகளை வெட்டுங்கள். அவர்களைக் கொன்று குவித்த பிறகே அவர்களைக் கைதிகளாகப் பிடியுங்கள். பின்னர், அவர்கள்மீது கருணை காட்டியோ ஈட்டுத் தொகை பெற்றோ அவர்களை விடுவித்துவிடலாம். இது போர் முடியும்வரையிலாகும். அல்லாஹ் நாடியிருந்தால் அவனே அவர்களைத் தண்டித்திருப் பான். ஆயினும், அவன் உங்களில் சிலரைச் சிலரைக் கொண்டு சோதிக்கிறான்.* (4)

*போர் என்பது கசப்பான மருந்தாகும். ஆனாலும் அது கடுமையான நோய்க்கே பரிந்துரைக்கப்படுகிறது. கவிஞர் ஷௌகீ கூறுகிறார்:*

*'போர் என்பது உம்மிடம் ஒரு சட்டமாகும்.*
*கடுமையான விஷத்தில் மருந்து இருப்பதைப் போல.'*

*இந்த வசனம் நிரந்தரமான, பொதுவான சட்டத்தை உள்ளடக்கிய வசனங்களைக் கொண்டு தொடங்குகிறது.*

*சத்தியத்தை நிராகரித்து, அல்லாஹ்வின் பாதையைவிட்டு மக்க ளைத் தடுத்தவர்களின் செயல்களை அவன் வீணாக்கிவிட்டான். யாரெல்லாம் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்து, முஹம்மது மீது அருளப்பட்ட வேதம் தங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள சத்தியமாகும் என்றும் நம்பிக்கை கொள்கிறார்களோ, அல்லாஹ் அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களின் நிலையையும் சீராக்குவான். இது ஏனெனில், நிராகரிப்பாளர்கள் அசத்தியத்தைப் பின்பற்றினார்கள், நம்பிக்கையாளர்கள் தங்கள் இறைவனிட மிருந்து வந்துள்ள சத்தியத்தைப் பின்பற்றினார்கள் என்பதனா லேயே ஆகும். இவ்வாறே அல்லாஹ் மக்களுக்கு அவர்களுக்கான உதாரணங்களை எடுத்துரைக்கிறான்.* (1-3)

*இந்த விதியைக் கொண்டு அத்தியாயம் தொடங்கப்பட்டிருப்பதைப் போல இறுதியிலும் இதே கருத்து மீண்டும் இடம்பெறுகிறது. அல்லாஹ் கூறுகிறான்:*

*தங்களுக்கு நேர்வழி தெளிவானபின்னரும் சத்தியத்தை நிராகரித்து, அல்லாஹ்வின் பாதையைவிட்டு மக்களைத் தடுத்து தூதருக்கு மாறுசெய்பவர்கள் அல்லாஹ்வுக்கு எவ்வித தீங்கும் இழைத்துவிட முடியாது. அவன் அவர்களின் செயல்களை வீணாக்கிவிடுவான்.* (32)

முஸ்லிம்கள் போர்க்களங்களில் இருந்தபோது இந்த அத்தியாயத்தை அனைவரும் ஒன்றிணைந்து சப்தமான குரலில் ஓதினார்கள். இந்த அத்தி யாயத்தின் வசனங்கள் 'மீம் ஸாகினா'வைக் கொண்டு நிறைவடைந் துள்ளதால் கூட்டாக ஓதும்போது எதிரிகளின் உள்ளத்தில் ஒருவித அச்சத் தைத் தோற்றுவிக்கும்.

பின்னர், 'முன்னேறிச் செல்லுங்கள்.' என்று முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்தவாறு 'போரின் இறுதியில் அல்லாஹ்வின் வாக்குறுதி நிறை வேறும்' என மீண்டும் உறுதியளிக்கப்படுகிறது.

> நம்பிக்கையாளர்களே, நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவிபுரிந்தால் அவன் உங்களுக்கு உதவிபுரிவான்; உங்களை உறுதிப்படுத்துவான். நிராகரிப்பாளர்களுக்குக் கேடுதான். அல்லாஹ் அவர்களின் செயல் களை வீணாக்கிவிட்டான். (7,8)

இந்த இராணுவ அறிவுரைகளினூடே திருக்குர்ஆன் உயிர்த் தியாகம் செய்வோரின் இருப்பிடங்களையும் அவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் வெகுமதிகளையும் குறிப்பிடுகிறது.

> அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களின் செயல்களை அவன் ஒருபோதும் வீணாக்க மாட்டான். அவன் அவர்களுக்கு வழிகாட்டி அவர்களின் நிலைமையைச் சீராக்குவான். அவன் அவர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்திருந்த சுவனத்தில் அவர் களை நுழையச்செய்வான். (4-6)

பின்னர், எதிர்பார்க்கப்படும் இன்பங்களுக்கு உதாரணம் எடுத்துரைக் கப்படுகிறது.

> இறையச்சமுடையோருக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவனத்தின் தன்மை இதுதான்: அங்கு தூய்மையான தெளிந்த நீரினைக் கொண்ட ஆறுகளும் சிறிதும் சுவை மாறாத பாலாறுகளும் இன்ப மளிக்கும் மது ஆறுகளும் தூய்மையான தேனாறுகளும் ஓடிக் கொண்டிருக்கும் ... (15)

இவையனைத்தும் அல்லாஹ்வின் தூய்மையைப் பறைசாற்றுவதி னூடே அவர்களுக்குக் கிடைக்கும். 'அல்லாஹ்வே, நீயே தூயவன் என் பதே அங்கு அவர்களின் பிரார்த்தனையாக இருக்கும். அமைதி நில வட்டும் என்பதே அவர்களின் வாழ்த்தாக இருக்கும். (10:10)'

நம்பிக்கை கொண்ட போர்வீரர்களையும் வரம்புமீறும் நிராகரிப்பா ளர்களையும் குறித்த செய்தியுடன், தங்கள் உள்ளங்களில் உள்ளவற்றை

மறைத்துக்கொண்டு தங்களை வேறு விதமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நயவஞ்சகர்களைக் குறித்த செய்தியும் இடம்பெறு கிறது. இவர்கள் நபியவர்களின் அவையில் முஸ்லிம்களுடன் பங்கு பெறுகிறார்கள். அங்கு சொல்லப்படும் அறிவுரைகளை காதுகொடுத்துக் கேட்கிறார்கள், ஆனால் நயவஞ்சகம் நிரம்பிய உள்ளங்களுடன். அவர்கள் எளிதான வணக்க வழிபாடுகளில் முஸ்லிம்களுடன் கலந்துகொள்கி றார்கள். இஸ்லாத்தின் எதிரிகளிடம் சென்று தூதருக்கும் அவருடைய தோழர்களுக்கும் மத்தியில் நடந்த உரையாடல்களையும் அவற்றின் மீதான தங்களின் கருத்துகளையும் வெளிப்படுத்துகிறார்கள்.

> அவர்களில் சிலர் உம் பேச்சைக் காதுகொடுத்துக் கேட்கிறார்கள். ஆயினும், அவர்கள் உம்மை விட்டுச் சென்றதும் ஞானம் வழங்கப் பட்டவர்களிடம் பரிகாசமாக, 'இவர் இப்போது என்ன கூறினார்?' என்று கேட்கிறார்கள். அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் முத் திரையிட்டுவிட்டான். அவர்கள் தம் மனஇச்சைகளைத்தான் பின் பற்றுகிறார்கள். (16)

இந்தக் கேள்வி பரிகாசத்தால் அல்லது அறிந்தும் அறியாததுபோன்று தங்களைக் காட்டிக்கொள்வதால் எழுவதாகும். ஆனால், போர்குறித்த ஏதேனும் ஒரு கட்டளையை அவர்கள் செவியேற்றுவிட்டால் அவர் களின் முகம் கருத்துவிடுகிறது. அவர்கள் நடுநடுங்க ஆரம்பித்து விடு கிறார்கள். ஏனெனில், அவர்கள் கொள்கைக்காகப் போர் புரியும் மனிதர் கள் அல்ல. ஆதாயத்துக்காகச் செயல்படும் போக்கு அவர்களைக் கோழை களாக்கிவிட்டது.

> போர்புரிவதைக் குறித்து ஏதேனும் ஓர் அத்தியாயம் அருளப்படக் கூடாதா என்று நம்பிக்கையாளர்கள் கேட்கிறார்கள். ஆயினும், போர்புரிவதைக் குறித்து தெளிவான ஓர் அத்தியாயம் அருளப் பட்டால் உள்ளங்களில் நோயுள்ளவர்கள் மரண பீதியால் மயக்க முற்றவனைப் போல உம்மைப் பார்க்கிறார்கள். (20)

நயவஞ்சர்களின் பாவங்கள் பலமடங்கானவையாகும். ஏனெனில், இஸ்லாம் குறித்து எதுவும் அறியாத நிராகரிப்பாளர்களும் காணப்படு கிறார்கள். அவர்கள் மூடத்தனத்துடன் அதனை எதிர்த்துப் போரிடு கிறார்கள். ஆனால், நயவஞ்சகர்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் தங்கி யிருப்பவர்கள், அருளப்படும் வஹீயைச் செவியேற்பவர்கள். தூதரின் நடத்தையை அருகிலிருந்து பார்ப்பவர்கள். ஆகவே, அவர்கள் நிரா கரிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. 'நேர்வழி தெளிவான பின்னரும் யாரெல்லாம் பின்வாங்கித் திரும்பிச் செல்கிறார்களோ - ஷைத்தான்

அவர்களின் தவறுகளை அவர்களுக்கு அழகாக்கிவிட்டான் - அல்லாஹ் வும் அவர்களுக்கு அவகாசமளித்துவிட்டான். (25)'

நம்முடைய காலகட்டத்திலும் நயவஞ்சகர்கள் தங்களின் முன்னோர் களை அப்படியே பின்பற்றுகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவ மிஷனரிகளின் தலைமையிடங்களிலிருந்து அல்லது கிறிஸ்தவக் கலாச்சார மையங் களிலிருந்து தங்களுக்கான வழிகாட்டல்களைப் பெறுகிறார்கள். முஸ்லிம் களுக்கு மத்தியில் குழப்பங்களையும் புரளிகளையும் பரப்புகிறார்கள். இஸ்லாத்துக்கு எதிரான கருத்துகளுக்கு முன்னுரிமையளிக்கிறார்கள்.

> இதற்குக் காரணம், அவர்கள் அல்லாஹ் அருளியவற்றை வெறுப்ப வர்களிடம், 'நாங்கள் சில விசயங்களில் உங்களுக்குக் கட்டுப் படுவோம்' என்று கூறியதுதான். அல்லாஹ் அவர்களின் இரகசியங் களை நன்கறிவான். ஆகவே, அவர்களின் முகங்களிலும் முதுகு களிலும் அடித்தவாறு அவர்களின் உயிர்களை வானவர்கள் கைப் பற்றும்போது என்னவாகும்? இதற்குக் காரணம் அவர்கள் அல் லாஹ்வுக்குக் கோபமூட்டக்கூடியதை பின்பற்றியதும் அவனது திருப்தியை வெறுத்ததுமாகும். ஆகவே, அவன் அவர்களின் செயல் களை வீணாக்கிவிட்டான். (26-28)

அல்லாஹ் இந்த நயவஞ்சகர்களை வெளிப்படுத்திவிட்டான். ஒவ் வொரு சமயத்திலும் அவர்களின் வழிமுறைகளும் செயல்பாடுகளும் அவர்களைக் காட்டிக்கொடுத்தே தீரும். மாறாக, அவர்கள் பேசும் தொனியே அவர்களின் உள்ளங்களில் மறைத்திருப்பவற்றைக் காட்டிக் கொடுத்துவிடும்.

> நாம் நாடியிருந்தால் அவர்களை உமக்குக் காட்டியிருப்போம். ஆயினும், அவர்களின் முக அடையாளங்களைக் கொண்டே நீர் அவர்களை அறிந்துகொள்ளலாம். அவர்கள் பேசும் தொனியிலும் அவர்களை நீர் அறிந்துகொள்வீர். உங்களின் செயல்களை அல்லாஹ் நன்கறிவான். (30)

நம்பிக்கையாளர்களுக்கான அறிவுரையோடு அத்தியாயம் நிறை வடைகிறது. போர் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அவர்கள் சரணடைந்துவிடக் கூடாது. அவர்கள் பலவீனத்தின் காரணிகளை எதிர்த்து நிற்க வேண்டும். போரின் சிரமங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும். 'ஆகவே, நீங்கள் தைரியம் இழந்து சமாதானத்தைக் கோராதீர்கள். நீங்கள் தாம் மேலோங்கி நிற்பீர்கள். அல்லாஹ் உங்களுடன் இருக்கிறான். அவன் உங்களின் நன்மைகளை ஒருபோதும் குறைத்துவிட மாட்டான். (35)'

*பின்னர், சத்தியத்துக்கு உதவிசெய்யும் பொருட்டுத் தங்களிடம் உள்ள வற்றைச் செலவழிக்காமல் கஞ்சத்தனம் செய்பவர்களைப் பார்த்து அவன் கூறுகிறான்:*

> ஆம். நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவுசெய்யுமாறு அழைக்கப்படுகிறீர்கள். ஆயினும் உங்களில் சிலர் கஞ்சத்தனம் செய்கிறார்கள். கஞ்சத்தனம் செய்பவர் தமக்கே கஞ்சத்தனம் செய்கிறார். அல்லாஹ் தேவையற்றவன். நீங்கள்தாம் தேவையுடையவர்கள். நீங்கள் புறக்கணித்தால் அல்லாஹ் உங்களுக்குப் பதிலாக வேறொரு சமூகத்தைக் கொண்டுவருவான். அவர்கள் உங்களைப் போன்று இருக்க மாட்டார்கள். (38)

*கோழைகளையும் கஞ்சர்களையும் கொண்ட சமூகங்கள் வாழ்வதற்கும் நீடிப்பதற்கும் தகுதியானவை அல்ல.*

❖ ❖ ❖

அத்தியாயம் 48

# அல்ஃபத்ஹ்

(வெற்றி)

*ஹுதைபிய்யா என்ற இடத்தில் நிறைவடைந்த உம்றாவிலிருந்து முஸ்லிம்கள் திரும்பினார்கள். அவர்களின் உள்ளங்கள் காயம்பட்டிருந்தன. அவர்கள் கஅபாவைத் தரிசித்து அங்கு தவாஃப் செய்யவும் ஸஃபா, மர்வாவுக்கு இடையே தொங்கோட்டம் ஓடவும் வேண்டும் என்ற எண்ணத்தில் புறப்பட்டிருந்தார்கள். அவர்களின் ஆசை நிறைவேறவில்லை. இப்போது அவர்கள் இணைவைப்பாளர்களால் சிரமங்களை அனுபவித்த பிறகு மக்காவிலிருந்து திரும்புகிறார்கள். இரு பிரிவினருக்கும் மத்தியில் போர் மூளும் சூழல் இருந்தது. நபியவர்களின் விவேகத்தால் அது தவிர்க்கப்பட்டது. அவர்கள் மதீனாவை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த சமயத்தில் நற்செய்திகளால் நிரம்பிய இந்த அத்தியாயம் அருளப்பட்டது.*

> *நிச்சயமாக நாம் உமக்குத் தெளிவான வெற்றியை அளித்துள்ளோம். அது அல்லாஹ் உம்முடைய முன்பின் பாவங்களை மன்னித்து, தன் அருட்கொடையை உம்மீது பரிபூரணப்படுத்தி, உமக்கு நேரான வழியைக் காட்ட வேண்டும் என்பதற்காகவும் உமக்குப் பெரும் உதவிசெய்வதற்காகவும்தான்.* (1-3)

*ஆம். உண்மையில் அது வெற்றிதான். மகத்தான வெற்றியின் தொடக்கமாக அது இருந்தது.*

*அதனால் அழைப்புப் பணிக்கு இடையூறாக இருந்த தடைகள் ஒன்றுவிடாமல் அகன்றன. இணைவைப்பாளர்கள் வைத்த நிபந்தனைகளை முஸ்லிம்கள் வெறுத்தபோதிலும் ஏற்றுக்கொண்டார்கள். அவை இணைவைப்பாளர்களுக்கே எதிராக அமைந்தன. அழைப்பின் வட்டம் விரிவடைந்து ஏராளமானோர் இஸ்லாத்தை ஏற்றார்கள். இஸ்லாமிய அரசு*

ஒரு தனித்துவமான அரசாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டு வருடம் நிறைவடைவதற்குள் மக்காவும் முழுமையாகச் சரணடைந்தது. தூதர் பத்தாயிரம் படைவீரர்களுடன் மக்காவை நோக்கிப் புறப்பட்டார். பல நூற்றாண்டுகளாக வணங்கப்பட்டுக் கொண்டிருந்த சிலைகள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. தவ்ஹீதின் கொடி உயர்ந்தது. பிலால் கஅபாவின் மேல் ஏறிநின்று பாங்கு சொன்னார்.

ஹுதைபிய்யாவில் தூதர் கடைப்பிடித்த விவேகமான அணுகுமுறையால் இந்த விளைச்சல்களை அறுவடைசெய்ய முடிந்தது. ஆகவே, அல்லாஹ் அவருக்கு மன்னிப்பைக் கொண்டும் வெற்றியைக் கொண்டும் நற்செய்தி கூறினான். பின்னர் அந்த நற்செய்தி முஸ்லிம்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது:

> அவனே நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் நிம்மதியை அருளினான், அவர்களின் நம்பிக்கையுடன் இன்னும் நம்பிக்கை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக. வானங்கள், பூமியில் உள்ள படைகள் அல்லாஹ்வுக்கே சொந்தம். அவன் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். இது ஏனெனில், நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களையும் அவன் சுவனங்களில் நுழையச் செய்வதற்காகத்தான். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். (4,5)

அவர்களின் எதிரிகள் இவ்வுலகிலும் மறுவுலகிலும் இழப்பையே சந்திப்பார்கள். அவர்கள் விரைவில் தோல்வியைத் தழுவுவார்கள். ஷிர்க்கின் கோட்டைகள் தகர்த்துநொறுக்கப்படும். அவர்களின் பலமோ பாதுகாப்போ அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்காது. ஏனெனில், அல்லாஹ்வை ஒருவராலும் வீழ்த்த முடியாது. ‘வானங்களிலும் பூமியிலும் உள்ள படைகள் அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (7)’

ஜாஹிலிய்யாவை அழிப்பதற்காகவும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்கின்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காகவும்தான் அல்லாஹ் முஹம்மதைச் சத்தியத்தைக் கொண்டு அனுப்பினான். நபித்தோழர்கள் இந்தச் சமூகத்தின் முதல் தலைமுறையினராக இருக்கிறார்கள். அவர்கள் சிரமமான சமயத்தில் மரணத்தைக் கொண்டு உடன்படிக்கை செய்தார்கள். அளித்த வாக்குறுதியிலிருந்து அவர்களில் யாரும் பின்வாங்கவில்லை. அவர்கள் அல்லாஹ்வுக்காக வாழ்ந்தார்கள். அல்லாஹ்வின் பாதையில் மரணித்தார்கள். ஆகவே அல்லாஹ் அவர்களைக் குறித்து கூறுகிறான்:

> உம்மிடம் வாக்குறுதியளித்தவர்கள் உண்மையில் அல்லாஹ்விடம் வாக்குறுதியளித்தவர்கள் ஆவர். அல்லாஹ்வின் கை அவர்களின் கைகள் மீது இருந்தது. யாரேனும் வாக்குறுதியை முறித்துக் கொண் டால் அவர் தமக்குக் கேடாகவே அதனை முறித்துக் கொள்கிறார். அல்லாஹ்விடம் செய்துகொண்ட சத்தியப் பிரமாணத்தைப் பரி பூரணமாக நிறைவேற்றுபவர்களுக்கு அவன் மகத்தான கூலியை வழங்குவான். (10)

அவர்கள் அல்லாஹ்வுக்கு அளித்த வாக்குறுதியில் உண்மையாளர் களாக இருந்தார்கள். ஆகவே, அவர்களைக் குறித்து திருப்தியடைந்து விட்டதாக அல்லாஹ்வும் அறிவித்தான். அதற்குப் பகரமாக விரைவாக வும் தாமதமாகவும் கிடைக்கக்கூடிய நன்மைகளை அல்லாஹ் அவர் களுக்கு வழங்கினான்.

> நம்பிக்கையாளர்கள் அந்த மரத்தின் கீழே உம்மிடம் உறுதிமொழி எடுத்துக்கொண்டபோது அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தி யடைந்தான். அவர்களின் உள்ளங்களில் உள்ளவற்றை அறிந்து அவர்களுக்கு நிம்மதியை அருளினான். விரைவில் கிடைக்கும் வெற்றியையும் அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான். ஏராள மான போர்ச் செல்வங்களையும் அவர்கள் அடையும்படி செய்தான். (18,19)

முஸ்லிம்கள் மதீனாவை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த சமயத் தில் இந்த அத்தியாயம் அருளப்பட்டது. அது அவர்களுக்கு நிம்மதி யளித்தது. பின்னர், அவர்களுடன் புறப்படாமல் பின்தங்கிவிட்ட மக்க ளின் உண்மை நிலையையும் அந்த மக்கள் கூறியதையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியது. முஸ்லிம்கள் உம்றா செய்வதற்குத் தீர்மானித்தார் கள். அதற்காகப் புறப்பட ஆயத்தமானார்கள். ஆனால், மதீனாவில் இருந்த நயவஞ்சகர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள், இவர்கள் ஒரு போதும் திரும்பிவர மாட்டார்கள். குறைஷிகள் இவர்களுக்குத் தக்க பாடம் கற்பிப்பார்கள். மோசமான தோல்வியையே இவர்கள் சந்திப்பார் கள்.

விசித்திரம் என்னவென்றால், இந்த நயவஞ்சகர்கள் அகழ்ப் போரி லிருந்து எந்தப் படிப்பினையையும் பெறவில்லை. நயவஞ்சகம் அவர்களின் உள்ளத்துக்குள் ஆழமாக ஊடுருவிவிட்டது. அவர்கள் முஸ்லிம்களுக்குத் துன்பம் வராதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். தங்களின் உள்ளத்தில் உள்ள குரோதத்தின் அடிப்படையில் அவர்கள் சம்பவங் களை விவரித்துவந்தார்கள். ஏதேனும் சிக்கலில் மாட்டிக்கொண்டால் உடனே அவர்கள் பொய்யின் பக்கமே அடைக்கலம் தேடினார்கள்.

பின்தங்கிவிட்ட நாட்டுப்புற மக்கள் உம்மிடம் வந்து, 'எங்களின் செல்வங்களும் குடும்பங்களும் எங்களுக்கு அவகாசமளிக்க வில்லை. எனவே, எங்களுக்காக மன்னிப்பு கோருவீராக.' என்று கூறுவார்கள். அவர்கள் தங்கள் உள்ளங்களில் இல்லாதவற்றைத் தங்கள் நாவுகளால் கூறுகிறார்கள். நீர் கூறும், 'அல்லாஹ் உங்களுக்கு ஏதேனும் தீங்கிழைக்க நாடினால் அல்லது பலனளிக்க விரும் பினால் யாரால் அதனைத் தடுக்க முடியும்? உங்களின் செயல்களை அல்லாஹ் நன்கறிந்தவன். மாறாக, தூதரும் நம்பிக்கையாளர்களும் ஒருபோதும் தம் குடும்பத்தினரிடம் திரும்பிவர மாட்டார்கள் என்று நீங்கள் எண்ணிக்கொண்டீர்கள். உங்களின் உள்ளங்களில் இதுவே அழகாக்கப்பட்டது. நீங்கள் தீய எண்ணம் கொண்டீர்கள். அழிந்து போகும் சமூகமாகிவிட்டீர்கள்.' யார் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நம்பிக்கை கொள்ளவில்லையோ, நிச்சயமாக நாம் நிராகரிப்பாளர்களுக்குக் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைத் தயார்படுத்தி வைத்துள்ளோம். (11-13)

நயவஞ்சகர்கள் இணைவைப்பாளர்களின் இயல்புகளை நன்கறிந் திருந்தார்கள். ஏனெனில், அவர்கள் ஒருவருக்கொருவர் நண்பர்கள்தாம். குறைஷிகள் முஸ்லிம்களை மக்காவில் நுழைய அனுமதிக்க மாட்டார் கள் என்பதை அறிந்திருந்தார்கள். ஒருவேளை போர் ஏற்பட்டுவிட்டால் முஸ்லிம்கள் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால் தோல்வி யடைந்து விடுவார்கள் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், எதிர்பாராத விதமாக முஸ்லிம்கள் திரும்பிவருவதைக் கண்டார்கள். அந்த உம்றா அடுத்த வருடம் தள்ளிவைக்கப்பட்டது. அல்லாஹ் முஸ் லிம்களுக்கு ஆதரவாகத் திட்டம் தீட்டினான். நன்மையும் வெற்றியும் அவர்களுக்குக் கிடைப்பதற்காக விவகாரங்களை ஒழுங்குபடுத்தினான்.

வானங்கள், பூமியின் ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது. தான் நாடியவர்களை அவன் மன்னிப்பான், தான் நாடியவர்களைத் தண்டிப்பான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணை யிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (14)

அல்லாஹ்வுடைய கருணையின் வெளிப்பாடு, அவன் நயவஞ்சகர்கள் திரும்பிவரும் பொருட்டுப் பாவமன்னிப்பின் வாசல்களைத் திறந்து வைத்தான். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தான், அவர்கள் இவ்வுலகை வழிபடக்கூடியவர்களாக, அற்ப ஆதாயத்தைப் பெறும் பொருட்டு இங்கு மங்கும் தடுமாறித் திரியக் கூடாது.

அவர்கள் வலிமையான நிராகரிப்பாளர்களுடன் சண்டையிட்டால்தான் அவர்களின் பாவமன்னிப்புக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும்.

*பின்தங்கிவிட்ட நாட்டுப்புற அறபிகளிடம் நீர் கூறும், 'நீங்கள் விரைவில் வலிமைமிக்க மக்களுடன் போர்புரியுமாறு அழைக்கப் படுவீர்கள். அவர்களுடன் நீங்கள் போரிட வேண்டும் அல்லது அவர்கள் அடிபணிய வேண்டும். நீங்கள் கட்டளையை ஏற்றுக் கொண்டால் அல்லாஹ் உங்களுக்கு அழகிய கூலியை அளிப்பான். இதற்கு முன்னர் புறக்கணித்தது போன்றே இப்போதும் நீங்கள் புறக்கணித்துவிட்டால் துன்புறுத்தும் வேதனையால் அவன் உங் களைத் தண்டிப்பான்.'* (16)

*இங்கு வலிமையான மக்கள் என்ற வார்த்தை யாரைக் குறிக்கும்?*

*ஹவாஸின், ஸகீஃப் குலத்தார் என்று கூறப்படுகிறது. பொய்யன் முசைலமாவின் கோத்திரத்தார் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் பாரசீகர் களும் ரோமர்களும் ஆவர் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் யாராக இருந்தாலும் போர்புரிவதற்கு அர்ப்பணிப்பு உணர்வும் பொறுமையும் மிக அவசியம். இதன் மூலம் நயவஞ்சகத்தின் எல்லா அடையாளங்களும் மறைந்துவிடும்.*

*பின்தங்கியவர்கள் ஃகைபர் போரில் முஸ்லிம்களுடன் கலந்து கொள்ள விரும்பினார்கள், போர்ச் செல்வங்களைப் பெறும் பொருட்டு. ஆனால், அல்லாஹ் அதனை மறுத்துவிட்டான். இங்கு யூதர்கள் ஏன் வலிமையானவர்கள் என்று கூறப்படவில்லை. இன்று இஸ்லாத்தை முன்னிறுத்தாத, அல்லாஹ்வின் உதவியை விரும்பாத மதச்சார்பற்றவர் களையும் இனவாதிகளையும்தான் யூதர்கள் மிகைத்துள்ளார்கள்.*

*போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களைப் பெறுவதற்காக நீங்கள் செல்லும்போது பின்தங்கிவிட்டவர்கள், 'எங்களையும் உங்களுடன் வர அனுமதியுங்கள்.' என்று கூறுவார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வாக்கை மாற்றிவிட நாடுகிறார்கள். நீர் கூறும், 'நீங்கள் எங்களுடன் வரவே வேண்டாம். அல்லாஹ் முன்னரே இதனைக் கூறிவிட் டான்.' அதற்கு அவர்கள், 'இல்லை. நீங்கள் எங்கள்மீது பொறா மைப்படுகிறீர்கள்!' என்று கூறுவார்கள். மாறாக, அவர்கள் குறை வாகவே அன்றிப் புரிந்துகொள்ள மாட்டார்கள்.* (15)

*ஃகைபரின் வெற்றி ஹுதைபிய்யாவில் கலந்துகொண்டவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய வெகுமதியாகும். ஹுதைபிய்யா ஒப்பந்தம் முடிந்து நாற்பது நாள்களில் ஃகைபர் வெற்றிகொள்ளப்பட்டது.*

*இஸ்லாமிய அழைப்பு தொடங்கி இருபது வருடங்களுக்குப் பிறகு ஃகைபர் வெற்றிகொள்ளப்பட்டது. ஃகைபர் ஹிஜாஸின் வடக்குப் பகுதியில் அமைந்த வலிமையான, செல்வம்மிகுந்த யூத குடியிருப்பு*

களாகும். அது வெற்றிகொள்ளப்பட்டதன் மூலம் யூதர்களின் அதிகாரம் வீழ்த்தப்பட்டது. அதனிடம் அடைக்கலம் தேடிக்கொண்டிருந்த சிற்றரசு களும் ஒன்றுமில்லாமல் ஆயின. யூதர்களின் மோசமான நடத்தையிலி ருந்து விடுபட்டு உலகம் நிம்மதியடைந்தது.

அவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட வஹீக்கு எந்தச் சேவையும் செய்ய வில்லை. உன்னதமான நடத்தையைக் கொண்டு அதனைக் கண்ணியப் படுத்தவில்லை. சிலை வழிபாட்டில் மூழ்கியிருந்த அறபுகளை அதி லிருந்து மீட்பதற்கு முயற்சிசெய்யவில்லை. மாறாக, சிலை வழிபாட்டா ளர்களுடன் ஒன்றிணைந்து முஸ்லிம்களை எதிர்த்தார்கள்.

யூதர்களின் மோசமான நடத்தை: அவர்கள் மார்க்கத்தை இனவாத மாகச் சுருக்கிக்கொண்டார்கள். அதனை மற்றவர்களைவிட்டும் தம்மை வேறுபடுத்தும் அடையாளமாகக் கருதினார்கள். அல்லாஹ் இஸ்றாயீலின் மக்களுக்கு மட்டுமே இறைவன் என்பதுபோல, அவன் பிற யாருக்கும் இறைவன் இல்லை என்பதுபோல அவர்கள் நடந்துகொண்டார்கள்.

அவர்கள் தாங்கள் அல்லாஹ்விடத்தில் உயர்வான இடத்தைப் பெறு வோம் என்று வாதிட்டபோது அவனுடைய நெருக்கத்தைப் பெறுவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக, இலஞ்சத்தையும் வட்டியை யும் பரப்பினார்கள். உலக வாழ்வை வழிபட்டார்கள். மார்க்கத்தை மற்ற சமூகங்களுக்கு எதிராகக் கர்வம் கொள்வதற்குப் பயன்படும் குடும்பச் சொத்தாக ஆக்கிக்கொண்டார்கள்.

ஆனாலும் அறபுகளிலிருந்து வந்த தூதர் மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த ஆரம்பக் கட்டத்தில் அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொண்டார். அவர்களின் அருகாமையை விரும்பினார். ஆனால், அவர்கள் அவருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டினார்கள். அவரை ஏமாற்ற எண்ணினார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

> வேதக்காரர்களில் பெரும்பாலோர் நீங்கள் நம்பிக்கை கொண்ட பின் எப்படியாவது உங்களை நிராகரிப்பாளர்களாக ஆக்கிவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். சத்தியம் அவர்களுக்குத் தெளிவான பின்னரும் பொறாமையினால்தான் இவ்வாறு விரும்பு கிறார்கள். ஆகவே, அல்லாஹ்வின் தீர்ப்பு வரும்வரை அவர்களை மன்னித்து, சகித்துக்கொள்ளும். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுடையவன். (2:109)

அல்லாஹ் தன் கட்டளையை நிறைவேற்றினான். யூதர்கள் திருந்தும் பொருட்டு மீண்டும் அவன் அவர்களைத் தண்டித்தான். அவர்கள் தங்களின் அநியாயத்தில் பிடிவாதமாக நிலைத்திருந்தபோது ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில்

அல்லாஹ் அவர்களின் இறுதிக் கோட்டையையும் வீழச்செய்தான். எந்தப் பலத்தைக் கொண்டு அவர்கள் அநியாயம் செய்துகொண்டிருந்தார்களோ அந்தப் பலத்தை அவர்களிடமிருந்து பறித்தான். அவர்களின் செல்வங்களை முஸ்லிம்களுக்குப் போர்ச் செல்வங்களாக ஆக்கினான்.

அல்லாஹ் உங்களுக்கு ஏராளமான போர்ச் செல்வங்ளை வாக்களிக்கிறான். அவற்றை நீங்கள் அடைந்துகொள்வீர்கள். ஆகவே, விரைவாக இதனை உங்களுக்கு வழங்கி, உங்களை மக்களின் தீங்குகளையும் விட்டுத் தடுத்துவிட்டான். இது நம்பிக்கையாளர்களுக்கு ஒரு சான்றாக அமைவதற்காகவும் உங்களுக்கு நேரான வழியைக் காட்டுவதற்காகவும்தான். (20)

அல்லாஹ் இந்தப் பெரும் செல்வத்தை, தூதரிடம் மரத்துக்கு அடியில் வைத்து வாக்குறுதியளித்தவர்களுக்கு வழங்கினான்.

இந்த அத்தியாயம், மக்காவில் இணைவைப்பாளர்களுடன் நபியவர்கள் ஏன் போரிடவில்லை என்பதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்து கிறது. அவர்கள் ஒருவேளை போரிட்டிருந்தால் இணைவைப்பாளர்கள் பெரும் தோல்வியைச் சந்தித்திருப்பார்கள். ‘அந்த நிராகரிப்பாளர்கள் உங்களுடன் போரிட்டிருந்தால் நிச்சயம் புறங்காட்டி ஓடியிருப்பார்கள். பின்னர், எந்தப் பாதுகாவலனையும் உதவியாளனையும் காண மாட்டார்கள். (22)’

பிறகு ஏன் அவர்கள் போரிடவில்லை?

தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் மக்காவின் புனிதத்தைக் காப்பதற்காகவும் இன்னொரு முக்கியமான விசயத்துக்காகவும். இஸ்லாம் எல்லா இடங்களிலும் பரவியிருந்தது. மக்காவிலும் ஏராளமானோர் இஸ்லாத்தை ஏற்றிருந்தார்கள். நிராகரிப்பாளர்களின் அழுத்தத்தினால் அவர்கள் தங்களின் ஈமானை மறைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை இணைவைப்பாளர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் போர் நடந்திருந்தால் முஸ்லிம்கள் அங்கு தங்களின் ஈமானை மறைத்துக்கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கும் தீங்கிழைத்திருப்பார்கள். அவர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டிருப்பார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும் (மக்காவில்) இல்லாதிருந்து நீங்கள் அறியாத நிலையில் அவர்களைத் தாக்கி அதனால் உங்கள்மீது பழி ஏற்படாதிருக்குமானால் (நாம் போர்புரிய அனுமதியளித்திருப்போம். அவ்வாறு ஏன் அனுமதியளிக்கவில்லை எனில்) அல்லாஹ் தான் நாடுவோரைத் தன் அருளில் நுழையச் செய்வதற்கே ஆகும். நம்பிக்கையாளர்கள் விலகியிருப்பார்களா

*யின் அவர்களில் நிராகரிப்பாளர்களைத் துன்புறுத்தும் வேதனை யால் நாம் தண்டித்திருப்போம். (25)*

எப்படியிருப்பினும் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் மக்காவில் நுழைவதற் குத் தடுக்கப்பட்ட முஸ்லிம்கள் ஏழாம் ஆண்டு உம்றாசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். பின்னர், ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டில் மக்கா முழுமையாக வெற்றிகொள்ளப்பட்டது.

அந்த ஆண்டுகளில் எத்தனை மனிதர்கள் கொல்லப்பட்டார்கள்? விரல்விட்டு எண்ணத்தக்க சில மனிதர்களே!

இஸ்லாம் இரு தரப்பிலும் குறைவான அளவில்தான் உயிரிழப்பு ஏற்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இஸ்லாத்தின் ஆரம்பக் கட்டத்திலிருந்து இஸ்லாமிய ஆட்சி நிறுவப்பட்டதுவரை கொல்லப்பட்டவர்களை நாம் கணக்கெடுத்தால் அந்த எண்ணிக்கை ஃபிரான்ஸில் தங்களை எதிர்த்த புரோட்டஸ்டன்டுகளைக் கொன்று குவித்த கத்தோலிக்கத் திருச்சபையின் கொலைவெறித் தாண்டவத் தோடு ஒப்பிடும்போது மிகமிகக் குறைவுதான். ஆனாலும் நம்முடைய மார்க்கத்துக்கு எதிராக அவதூறுகள் தொடர்ந்து பரப்பப்பட்டுவருகின்றன.

ஹுதைபிய்யாவிலும் அதற்குப் பிறகும் நடந்த நிகழ்வுகளைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

*நிச்சயமாக அல்லாஹ் தன் தூதருக்குக் கனவை உண்மைப்படுத்திக் காட்டினான். அதுவோ முற்றிலும் நிகழக்கூடியதாகவே இருந்தது. அல்லாஹ் நாடினால் நிச்சயமாகப் புனித ஆலயத்தில் உங்கள் தலைமுடியை மழித்தவர்களாகவும் குறைத்தவர்களாகவும் அமை தியுடன் நீங்கள் நுழைவீர்கள். உங்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது. நீங்கள் அறியாதவற்றை அவன் அறிந்திருந்தான். இதற்கு முன்பே அவன் ஒரு வெற்றியை அளித்துவிட்டான். (27)*

பின்னர், இந்த வசனம் இடம்பெறுகிறது. நாம் இதில் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்துவோம்: *'அல்லாஹ்தான் தன் தூதரை நேர்வழியுடனும் சத்திய மார்க்கத்துடனும் அனுப்பியுள்ளான், ஏனைய அனைத்து மார்க்கங் களை விடவும் இதனை மேலோங்கச் செய்வதற்காக. சாட்சியளிக்க அல்லாஹ்வே போதுமானவன். (28)'*

இந்த வசனம், வெற்றி என்பது முன்னரும் பின்னரும் மறுமைநாள் வரை இஸ்லாத்துக்குத்தான் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஹதீஸில் வந்துள்ளது: *'என்னுடைய சமூகம் மழையைப் போன்றது. அதன் தொடக் கப் பகுதி சிறந்ததா இறுதியான பகுதி சிறந்ததா என்பதை யாரும் அறிய மாட்டார். ஆனாலும் இறையுதவிக்கென்று சில தகுதிகள் இருக்கின்றன.*

அவற்றை முழுமையாக நிறைவேற்றாமல் எந்த தலைமுறையும் வெற்றி பெறாது. அந்தத் தகுதியைப் பெறாதவர்கள் இறையுதவிக்குத் தகுதி யானவர்கள் அல்ல. அவர்கள் தங்களைத் தாங்களே பழித்துக்கொள் ளட்டும். அதனால் அல்லாஹ்வுக்கு எந்த இழப்பும் இல்லை.

இறையுதவி பெறக்கூடிய இந்தச் சமூகத்தின் ஒரு தனித்தன்மையோடு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது. அல்லாஹ் கூறுகிறான்: ‘முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பாளர் களின் விசயத்தில் கடுமையானவர்கள்; தங்களுக்கிடையே கருணை மிக்கவர்கள். (29)’

நான் இந்த இடத்தில் நின்று, ஒரு வாரத்தில் நான் படித்த இரண்டு செய்திகளை ஒப்பீடுசெய்கிறேன். முதல் செய்தி, அறபிய நாடுகளுள் ஒன்று, ஒரு தாக்குதலில் அடிப்படைவாதிகள் என்று கருதப்படக்கூடிய பதிமூன்று முஸ்லிம்களைக் கொன்றிருக்கிறது. இன்னொரு செய்தி, சிரியாவுக்கும் இஸ்றாயீலுக்கும் மத்தியில் இருக்கக்கூடிய அமெரிக்கத் தூதர் ஒருவர் லெபனானில் சிரியா பிடித்துவைத்துள்ள ஐந்து இராணுவ வீரர்களை விடுவிக்க வேண்டும் அல்லது அவர்கள் கொல்லப்பட்டிருந் தால் அவர்களின் உடல்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார். யூதர்கள் தங்களின் சமூகத்தின் மீது அதிக அக்கறை கொண் டுள்ளார்கள்.

இந்த இரண்டு செய்திகளையும் நான் ஒப்பிட்டுப்பார்த்தேன். இந்தக் காலத்தில் இரண்டு சமூகங்களுக்கும் மத்தியில் எவ்வளவு வேறுபாடு காணப்படுகிறது? முஸ்லிம் சமூகம் ஆரம்பக் கட்டத்தில் எவ்வாறு இருந்தது என்பதை அல்லாஹ் வர்ணிக்கிறான்: ‘அவர்கள் நிராகரிப்பா ளர்களின் விசயத்தில் கடுமையானவர்கள்; தங்களுக்கிடையே கருணை மிக்கவர்கள். (29)’ ஆனால், இன்று இந்தப் பண்பு மற்றவர்களிடம் சென்றுவிட்டது. நாம் ஒருவருக்கொருவர் கருணை காட்டக்கூடியவர் களாக இல்லை. மாறாக, பகைமைக்கான காரணிகளைத் தேடி அலை கிறோம். யார் தம் சகோதரரை மிகைக்கிறாரோ அவர் அவருடைய ஆன்மாவைச் சாகடித்துவிடுகிறார். ஒரு கவிஞர் கூறுகிறார்:

> ‘தன் கன்னத்தில் அறைந்த தன் தந்தையின் சகோதரருடைய மகனைத் திருப்பியடிப்பதில் அவர் விரைந்து செயல்படுகிறார். ஆனால், கொடையின் பக்கம் அழைப்பு விடுக்கும் அழைப்பாள ருக்கு அவர் விரைந்து பதிலளிப்பதில்லை.’

உதவி எப்படி கிடைக்கும்? எதன் காரணமாக இந்தச் சமூகம் பூமியின் சொத்துக்கு உரிமைபெற்றதாகும்?

❖ ❖ ❖

அத்தியாயம் 49

# அல்ஹுஜுறாத்

(அறைகள்)

*பெரியவர்களைக் கண்ணியப்படுத்துவது அவர்களுக்குச் செய்யப்பட வேண்டிய கடமைகளில் ஒன்றாகும். அதுபோன்று சிறியவர்கள்மீது கருணை காட்டுவதும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாகும். நபியவர்கள் இவற்றை முஸ்லிம் சமூகத்தின் ஒழுக்கங்களாக ஆக்கியிருக்கிறார்கள்.*

> *யார் நம்முடைய பெரியவர்களைக் கண்ணியப்படுத்தவில்லையோ நம்முடைய சிறியவர்கள்மீது கருணை காட்டவில்லையோ நம் அறிஞர்களின் உரிமைகளை அறிந்துகொள்ளவில்லையோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல.*

*ஓர் ஆட்சியாளரின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் அவரது ஆலோசனையின்றி எதுவும் செய்ய முடியாது. அவருக்கு முன்னால் வந்து கட்டளையிட்டோ தடுத்தோ முற்படுத்தியோ பிற்படுத்தியோ ஆட்சேபித்தோ யாரும் தம்மை முன்னிலைப்படுத்த முடியாது.*

*இந்த அத்தியாயத்தில் முஸ்லிம் சமூகத்தை அலங்கரிக்கக்கூடிய, அதன் கட்டமைப்பைப் பாதுகாக்கக்கூடிய சில ஒழுங்குமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது, முஸ்லிம்கள் தங்கள் தூதருடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும். பின்னர், முஸ்லிம்கள் தங்களுக்குள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், மற்ற சமூகங்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ஆகியவைகுறித்தும் கூறப்படுகிறது.*

*முஸ்லிம்கள் தங்கள் தூதருடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து அல்லாஹ் கூறுகிறான்:*

> *நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் முன்னர் நீங்கள் முந்தாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.*

*நிச்சயமாக அல்லாஹ் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். நம்பிக்கையாளர்களே, தூதரின் குரலைவிட உங்களின் குரலை உயர்த்திவிடாதீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் இரைந்து பேசுவதைப் போல அவருடன் இரைந்து பேசாதீர்கள் ... (1,2)*

இதற்கு முன்னர் அந்நூர் என்ற அத்தியாயத்திலும் கூறப்பட்டது: *'நீங்கள் ஒருவரையொருவர் அழைப்பதைப் போன்று தூதரின் அழைப் பையும் கருதிவிடாதீர்கள். (24:63)'*

தூதரை அழைக்கும்போதும் அவருடன் பேசும்போதும் பணிவுடனும் குரலைத் தாழ்த்தியும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தும் தனித்துவமான வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவர் அல்லாஹ்வைக் குறித்து எடுத்துரைப்பவராக, அவனுடைய வழிகாட்டலின் மொழி பெயர்ப்பாளராக இருக்கிறார். ஆகவே, அவரைக் கண்ணியப்படுத்துவது மார்க்கமாகும். யார் அல்லாஹ்வின் தூதருடன் இத்தகைய ஒழுக்கங் களைக் கடைப்பிடிக்கிறாரோ அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் உயர்ந்த அந்தஸ்தும் கூலியும் இருக்கின்றன. கடினமானவர்கள், மோசமான குணமுடையவர்கள் வேறு வகையான கூலியைப் பெறுவார்கள்.

ஈமானின் அடையாளங்களில் ஒன்று, கேட்கும் செய்திகளை ஆராய்வது. எந்த ஆதாரமுமற்ற வதந்திகள் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி யிருக்கின்றன. *'நம்பிக்கையாளர்களே, தீயவன் ஒருவன் உங்களிடம் ஏதேனும் செய்தி கொண்டுவந்தால் அதைத் தீர விசாரித்து தெளிவு படுத்திக்கொள்ளுங்கள். ஏனெனில், நீங்கள் அறியாமையால் ஒரு சமூகத் துக்குத் தீங்கிழைத்துவிட்டு அதற்காக வருந்தக்கூடியவர்களாக ஆகிவிடக் கூடாது. (6)'*

ஷைத்தான் ஆதமுடைய மக்களைக் கண்காணித்துக் கொண்டும் அவர்களின் உரையாடல்களைச் செவியேற்றுக் கொண்டும் அவர்களி டையே குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை எதிர் பார்த்துக் கொண்டும் இருக்கிறான். அவன் சிறிய தவறைக் கண்டாலும் அதைப் பெரிய தவறாக ஆக்குவதற்கு, சிறிய தீ கங்கிலிருந்து பெரும் நெருப்பை மூட்டுவதற்கு முயல்வான். வதந்திகள் மனிதர்களிடையே பெரும்பெரும் போர்கள் மூள்வதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. முஸ்லிம் சமூகம் உண்மையை அறிவதற்கு, தங்களிடையே சமாதானம் ஏற்படுத்துவதற்கு முயல வேண்டும். ஒருவர் வரம்புமீறி அநியாயம் செய்ய முயன்றால் அனைவரும் அவருக்கு எதிராகத் திரண்டு அவரைத் தடுக்க வேண்டும்.

பெரும் உயிரிழப்புகளையும் சேதங்களையும் ஏற்படுத்திய போர்களுக்குப் பின்னால் முஸ்லிம்கள் அநியாயக்காரர்களைத் தடுக்காமல் இருந்ததுதான் காரணமாக அமைந்தது என்பதையும் அதன் காரணமாக முஸ்லிம் சமூகம் பலவீனப்பட்டு எதிரிகளின் அச்சுறுத்தலுக்கு ஆளானதையும் நான் கண்டிருக்கிறேன்.

> நம்பிக்கையாளர்களில் இரு பிரிவினர் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டால் அவர்களிடையே சமாதானம் செய்து வையுங்கள். அவர்களில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரின் மீது வரம்பு மீறினால் அவர்கள் அல்லாஹ்வுடைய கட்டளையின் பக்கம் திரும்பும் வரை வரம்புமீறும் பிரிவினருடன் போரிடுங்கள். அவர்கள் திரும்பிவிட்டால் அவர்களிடையே நியாயமாகச் சமாதானம் செய்து வையுங்கள். நீதி செலுத்துங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிக்கிறான். (9)

முஸ்லிம்களிடையே சகோதரத்துவ தொடர்பு பலவீனப்பட்டுவிட்டால் அது தீங்குக்கும் முஸ்லிம் சமூகத்துக்குள் மற்றவர்கள் புகுந்து தங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கும் வழிவகுக்கும். அவ்வாறு இருந்தால் ஆரம்பத்திலும் கடைசியிலும் இஸ்லாம்தான் இழப்பைச் சந்திக்கும்.

இந்த அத்தியாயம் சில மோசமான பண்புகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைவிட்டு முழுமையாகத் தவிர்ந்திருப்பதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

தம்மைச் சிறந்தவர்களாகக் கருதி மற்றவர்களைப் பரிகாசம்செய்வது மோசமான பண்புகளில் ஒன்றாகும். உண்மையில் சிறந்தவர்கள் யார் என்பதை அல்லாஹ் மட்டுமே அறிவான்.

எந்த ஒரு மனிதனின் படித்தரமும் அவன் வழிவழியாகப் பெற்ற பண்புகளுக்கும் அவனது சூழலுக்கும் மத்தியில் உருவாகும் அல்லது அவனது தனித்துவமான இயல்புக்கும் அவனைச் சுற்றியிருக்கும் சூழலுக்கும் மத்தியில் உருவாகும் துல்லியமான அளவீடுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. நீங்கள் யாரைப் பரிகாசம் செய்கிறீர்களோ அவர் நீங்கள் தோற்றுப் போன ஒரு விசயத்தில் வெற்றிபெற்றவராக, நீங்கள் பின்தங்கிய ஒரு விசயத்தில் முன்னேறியவராக இருக்கலாம்.

> நம்பிக்கையாளர்களே, எந்த ஆண்களும் பிற ஆண்களைப் பரிகாசம் செய்ய வேண்டாம். அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். எந்தப் பெண்களும் பிற பெண்களைப்

பரிகாசம்செய்ய வேண்டாம். அவர்கள் இவர்களைவிடச் சிறந்த வர்களாக இருக்கக்கூடும். (11)

குறைகூறுதல், பிறரை இழிவாகப் பேசுதல், உளவறிதல், தீய எண்ணம் கொள்ளுதல், புறம் பேசுதல், கோள் மூட்டுதல் ஆகிய தீய பண்புகளை இஸ்லாம் முழுமையாக நிராகரிக்கிறது. மக்கள் இந்த வகையான பேச்சு களை நிறுத்திவிட்டால் அவர்களின் வாழ்நாளின் பாதிப் பகுதி அமைதி யாகவே கழிந்துவிடும்.

ஒரு கவிதையைப் பாருங்கள்:

சல்லடை பொட்டு மனிதர்களை வடித்தெடுத்தால்
கடைசியில் கிடைப்பது காலியான சல்லடைகள்தான்.

மக்களிடையே நம்முடைய மார்க்கத்தைச் சரியான முறையில் அறி முகப்படுத்துவது முஸ்லிம்களாகிய நம்மீது கடமையாகும். அவர்களை உயரத்திலிருந்து பார்ப்பதற்காக நாம் படைக்கப்படவில்லை. தூதுத் துவம் வழங்கப்பட்ட நாம் ஞானம், அன்பு, கருணை, ஒழுக்கம் ஆகிய வற்றால் அதனைத் தெளிவுபடுத்தும் பொறுப்பும் வழங்கப்பட்டுள் ளோம். அந்தத் தூதுத்துவத்தைக் கொண்டு உலகை மாற்றுவதில் நாம் தோல்வியடைந்ததற்கான காரணம், நாம் அதனை எடுத்துரைக்க வேண்டிய முறைப்படி எடுத்துரைக்காததும் நம்முடைய வழிமுறையின் தோல்வியும்தான் என நான் அஞ்சுகிறேன்.

மனிதர்களே, நாம் உங்களை ஒரே ஆண், பெண்ணிலிருந்து படைத் தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு உங்களைச் சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். அல்லாஹ்விடத்தில் மிகவும் கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அவனை அதிகம் அஞ்சுபவர்தான். (13)

இஸ்லாத்தில் நுழைந்துவிட்ட, ஆனால் அதன் சட்டங்களையோ ஒழுங்குகளையோ பின்பற்றாத நாட்டுப்புற அறபிகளின் நிலையைத் தெளிவுபடுத்தியவாறு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது. வெறும் பெயர்களை மட்டுமே தாங்கியுள்ள, ஈமானிய உறுதியைப் பெற்றிராத இப்போதைய முஸ்லிம்களுக்கு முன்மாதிரிகள் அவர்கள். ‘நாட்டுப்புற அறபிகள், நாங்கள் நம்பிக்கை கொண்டோம் என்று கூறுகிறார்கள். நீர் கூறும், நீங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆயினும், நாங்கள் கீழ்ப் படிந்தோம் என்று கூறுங்கள். உங்கள் உள்ளங்களில் இன்னும் நம்பிக்கை நுழையவில்லை. (14)’

*அல்லாஹ் அவர்களை எச்சரிக்கிறான். அவர்களின் செயல்பாடுகள் தான் அவர்களுக்குச் சாதகமாக அல்லது பாதகமாக அமையும். 'நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்தால் அவன் உங்கள் செயல்களில் எதையும் குறைத்துவிட மாட்டான்.* (14)'

*இஸ்லாத்துக்கு உதவி தேவைப்படும் சமயத்தில் அவர்கள் உதவி செய்யாமல் கைவிட்டுவிட்டால் அல்லது அது கூறும் பண்புகளை விட்டு விட்டால் அல்லது துன்பம் ஏற்படும் சமயங்களில் உறுதியாக நில்லாமல் பலவீனப்பட்டுவிட்டால் அவர்கள் முஸ்லிம்களாக ஆக முடியாது.*

> *உண்மையில் நம்பிக்கையாளர்கள் யாரெனில், அவர்கள் அல்லாஹ் வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டு, பின்னர் சந்தேகம் கொள்ளாது தங்கள் உயிர்களாலும் செல்வங் களாலும் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்பவர்களாவர். அவர்கள்தாம் உண்மையாளர்கள்.* (15)

*தற்காலத்தில் நாம் நாட்டுப்புற அறபிகளை ஒத்த முஸ்லிம் பொது மக்களைக் காண்கிறோம். அவர்கள் தங்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அதன் எந்த அழைப்புக்கும் அவர் கள் பதிலளிப்பதில்லை.*

❖ ❖ ❖

அத்தியாயம் 50

# காஃப்

இந்த அத்தியாயத்தில் மறுமைநாளில் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டு கூலி கொடுக்கப்படுவதைக் குறித்த செய்தி இடம்பெறுகிறது. அதற்கு முன்னால் படைப்பாளனின் வல்லமையை, அனைத்தையும் சூழ்ந்த அவனுடைய அறிவை, மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதற்கான சாத்தியத்தை உணர்த்தும் அறிவுபூர்வமான ஆதாரங்கள் இடம்பெறுகின்றன.

நான் உணவருந்திக்கொண்டிருக்கும்போது அந்த ஆதாரங்களைக் குறித்து சிந்தித்துப்பார்த்தேன். நான் சாப்பிடும் உணவில் சில, ஆற்றலாக மாறி என் உடலின் வெப்பத்தைக் கூட்டுகிறது. இது எப்படி நிகழ்கிறது? தெரியவில்லை. அவற்றில் சில செல்களாக மாற்றமடைகின்றன. அவற்றில் உயிர் ஊடுருவுகிறது. அவை எலும்புகளாகவும் சதைகளாகவும் உருவாகின்றன. பரம்பரைப் பண்புகள் அவற்றில் வந்துசேர்கின்றன. இது எப்படி நிகழ்கிறது? தெரியவில்லை.

உயிரியல் அறிஞர்கள் உடலின் செல்லை ஒரு நகரத்துக்கு ஒப்பிடுகிறார்கள். அதில் மைதானங்களும் தெருக்களும் மின்னிணைப்புகளும் நீர் வழித்தடங்களும் காணப்படுவது போன்று செல்லிலும் காணப்படுகின்றன. ஆனாலும் செல்லை வெறும் கண்ணால் காண முடியாது.

உணவின் மற்றொரு பகுதி கழிவாகப் பூமிக்குச் செல்கிறது. மீண்டும் அதிலிருந்து அரிசியும் கோதுமையும் இன்னபிற தானியங்களும் விளைகின்றன. மனிதன் அவற்றை உண்ணுகிறான். இவ்வாறு இந்த நிகழ்வு மீண்டும்மீண்டும் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு உடலிலும் மரணமும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலும் ஒவ்வொரு மணித்துளியிலும் மீண்டும் மீண்டும் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. ஆகவே அல்லாஹ், ‘காஃப். மகத்துவம் மிக்க

குர்ஆனின் மீது சத்தியமாக. (1)' நீங்கள் நிச்சயம் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவீர்கள் என்று கூறினால் நான் அதனை விசித்திரமான, சாத்தியமற்ற ஒன்றாக எவ்வாறு எண்ண முடியும்?

> அவர்களிடம் அவர்களிலிருந்தே எச்சரிக்கைசெய்பவர் வந்துள்ளதைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். 'இது ஓர் ஆச்சரியமான விசயமே! நாம் மரணமடைந்து மண்ணோடு மண்ணாகிவிட்டாலுமா? இவ்விதம் எழுப்பப்படுவது சாத்தியமற்ற ஒன்று!' என்று நிராகரிப்பாளர்கள் கூறுகிறார்கள். அவர்களைப் பூமி எந்த அளவு தின்கிறது என்பதை நாம் அறிவோம். நம்மிடம் பாதுகாக்கப்பட்ட ஏடு இருக்கிறது. (2-4)

ஏன் மீண்டும் படைப்பதைச் சாத்தியமற்ற ஒன்றாக கருத வேண்டும்? அவன்தானே முதலில் படைத்தவன்? நம்முடைய உடல்களுக்கும் நாம் வாழும் மண்ணுக்கும் மத்தியில் உள்ள தொடர் செயல்பாட்டை நாம் கண்டுகொண்டுதானே இருக்கிறோம்? ஒவ்வொரு நொடியிலும் மீண்டும் எழுப்பப்படுதல் நிகழ்ந்துகொண்டுதானே இருக்கிறது? ஆனாலும் நிராகரிப்பாளன் அலட்சியமானவனாகவும் மடையனாகவும் இருக்கிறான்.

திருக்குர்ஆன் ஈமானை விழிப்பான அறிவுச் செயல்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கிறது. பின்னர், அதனை அற்புதமான தெளிவுபடுத்துதலின் வடிவில் முன்வைக்கிறது. ஓர் அறிவிப்பாளர் அறிவிக்கிறார், இந்த அத்தியாயத்தை நபித்தோழியர்களில் ஒருவர் ஜும்ஆவுடைய நாளில் நபியவர்கள் ஓதுவதைச் செவியேற்றே மனனம் செய்துவிட்டார். பின்னர் அது அவருடைய நடத்தையாக, பண்பாக, வாழ்க்கை வழிமுறையாக மாறிவிட்டது.

மீண்டும் எழுப்பப்படுதல் என்பது நம்மிடம் வெறுமனே வெற்றுக் கண்ணோட்டம் அல்ல. அது மனிதனை ஆட்சிசெய்யும், அவனைச் செயல்படத் தூண்டும் உயிரோட்டமான கண்ணோட்டம்.

> நாமே மனிதனைப் படைத்தோம். அவனது உள்ளத்தில் தோன்றுவதையும் நாம் அறிவோம். அவனது பிடரி நரம்பை விட நாம் அவனுக்குச் சமீபமாக இருக்கிறோம். வலதுபுறமும் இடதுபுறமும் இரு வானவர்கள் அமர்ந்து பதிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். கண்காணித்து எழுதக்கூடியவர் அவனிடம் இல்லாமல் அவன் எந்தச் சொல்லையும் சொல்வதில்லை. (16-18)

ஈமானிய வாழ்வுக்கும் நவீன நாகரிகம் முன்னிலைப்படுத்தும் வாழ்வுக்கும் மத்தியில் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது! அது இறைவனை

மிகக் குறைவாக நினைவுகூரக்கூடிய, அவனுடைய சந்திப்புக்காகத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ளாத சமூகமாகும்.

மனித உணர்வைத் தட்டியெழுப்புவதில், உள்ளத்தில் இறைவனின் கண்காணிப்பை ஆழமாகப் பதியவைப்பதில் மற்ற மதங்கள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டன. ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் மரணத்தை இருப்பின் இறுதியாக எண்ணிக்கொள்கிறார்கள். அதற்குப் பின்னால் வரக்கூடிய மறுமை வாழ்வு அவர்களுக்கு எதிர்பாராத ஒன்றாக அமையும்.

> இதுகுறித்து நீ அலட்சியத்தில் இருந்தாய். உன்னைவிட்டு உன் திரையை நாம் அகற்றிவிட்டோம். இன்று உன் பார்வை கூர்மையாக உள்ளது. (22)

அறபு முஸ்லிம்களையும் இந்தச் சிந்தனை ஆட்கொண்டுவிட்டது. அவர்கள் மறுமை வாழ்வுக்காகச் செயல்படுவதை மறுக்கிறார்கள். அவர்களில் ஒருவர் கூறுகிறார், ‘உணரக்கூடிய ஒன்றை யூகத்தில் இருக்கக்கூடிய ஒன்றுக்காக நான் மாற்றிவிட மாட்டேன்.’ மறுமையைக் குறித்த அவர்களின் தலைவர்கள் கொண்டுள்ள கருத்துதான் அவர்களின் கருத்தும்.

இந்த உலகம் நிச்சயம் அழிந்தே தீரும். இங்கு மனிதர்கள் தாங்கள் முற்படுத்தியவற்றை மறுமையில் அறுவடைசெய்தே தீருவார்கள்.

இந்த அத்தியாயத்தில் நாம் இரண்டு காட்சிகளைக் காண்கிறோம். ஒன்று, நிராகரிப்பாளன் செய்யும் செயல்கள் அனைத்தையும் கணக்கிட்டுக்கொண்டிருக்கும் வானவரின் காட்சி.

> அவருடன் இருந்த வானவர், ‘இதோ என்னிடம் உள்ளது, தயாராக இருக்கிறது.’ என்று கூறுவார். ‘நரகத்தில் வீசியெறியுங்கள், நன்றி கெட்ட பிடிவாதக்காரர்கள் அனைவரையும். அவன் நன்மையைத் தடுத்துக் கொண்டும் வரம்புமீறிக் கொண்டும் சந்தேகங்களை உண்டாக்கிக் கொண்டும் இருந்தான்.’ (23-25)

இந்த இடத்தில் அவனுடன் இருந்த, அவனுக்குத் தீய செயல்களை அலங்கரித்துக் காட்டிய ஷைத்தான் கூறுவான்: ‘எங்கள் இறைவா, நான் இவனை வழிகெடுக்கவில்லை. ஆயினும், இவனே மாபெரும் வழிகேட்டில்தான் இருந்தான். (27)’ நான் வழிகெடுப்பதற்கு முன்பே அவன் வழிகெட்டவனாகத்தான் இருந்தான். ‘இறைவன் கூறுவான், என் முன்னிலையில் சண்டையிடாதீர்கள். இதுகுறித்து முன்னரே உங்களை எச்சரித்துவிட்டேன். வாக்கு என்னிடத்தில் எப்போதும் மாறுவதில்லை. நான் என் அடியார்களுக்கு அநியாயம்செய்பவன் அல்லன். (28,29)’

அல்அன்ஆம் என்ற அத்தியாயத்திலும் இந்தக் கருத்துக்கு நெருக்க மான ஒரு வசனம் இடம்பெற்றுள்ளது.

> ‘ஜின் சமூகமே, நீங்கள் மனிதர்களில் அதிகமானோரை உங்க ளுடன் சேர்த்துக்கொண்டீர்கள்.’ அதற்கு மனிதர்களில் உள்ள ஜின்களின் கூட்டாளிகள், ‘எங்கள் இறைவனே, நாங்கள் ஒருவரை யொருவர் பயன்படுத்திக்கொண்டோம். நீ எங்களுக்காக ஏற்படுத்தி யிருந்த தவணையையும் நாங்கள் அடைந்துவிட்டோம்’ என்று கூறுவார்கள். (6:129)

இரண்டாவது காட்சி, இறையச்சமுடையவர்கள், நல்லவர்களின் இருப்பிடங்களைச் சித்தரித்துக் காட்டுகிறது.

> இறையச்சமுடையோருக்குச் சுவனம் மிக அருகில் கொண்டு வரப்படும். ‘எப்போதும் இறைவனின் பக்கம் மீள்வோருக்காக, நினைவில் கொள்வோருக்காக உங்களிடம் வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் இதுதான்.’ என்று கூறப்படும். அவர் அளவிலாக் கருணை யாளனை மறைவில் அஞ்சி, அவன் பக்கம் மீளக்கூடிய உள்ளத் துடன் வந்தவர். ‘இதில் நிம்மதியாக நுழைந்துவிடுங்கள். இந்த நாளே எப்போதும் இருக்கப்போகிறது.’ (31-34)

இந்த உலகம் கூலி வழங்கப்படும் இடம் அல்லாமல் சோதனைக் களமாக இருந்தாலும் அல்லாஹ் குற்றவாளிகளுக்குப் படிப்பினையாக இருக்கும் பொருட்டு அவர்களுக்குச் சில தண்டனைகளை முன்கூட் டியே வழங்கிவிடுகிறான். அநியாயக்காரர்கள் அல்லாஹ்வின் பக்கம் மீள்வார்களா என்ன? ‘நாம் இவர்களுக்கு முன்னர் எத்தனையோ சமூகங்களை அழித்துவிட்டோம். அவர்கள் இவர்களை விடப் பலம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். ஏதாவது புகலிடம் கிடைக்குமா என்று அவர்கள் பல நாடுகளில் சுற்றித் திரிந்தார்கள். (36)’

இந்த அத்தியாயம் தொடங்கியதுபோன்றே முடிவிலும் இந்தப் பிர பஞ்சம் குறித்தும் இதில் உள்ள படைப்புகள்குறித்தும் பேசுகிறது. அல் லாஹ்தான் தன் வல்லமையால் அவையனைத்தையும் படைத்தான் என்றும் அதனால் அவன் எந்தக் களைப்பையும் உணரவில்லை என்றும் குறிப்பிடுகிறது. எவ்வாறு அவன் களைப்பை உணர்வான்? ஆகு என்ற சொல்லில் அனைத்தும் நிறைவேறிவிடுகிறதே? அவன் களைப்பை உணர்ந்தால் வானங்களையும் பூமியையும் எப்படி நிர்வகிப்பான்? பூமியில் மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தேவையான உணவுகளை எவ்வாறு பரிபூரணமாக ஏற்படுத்துவான்? எவ்வாறு கோள்கள் அவற்றின்

வட்டப்பாதையில் சுற்றிக்கொண்டிருக்கும்? அவன் முதன் முறை களைப்பை உணர்ந்தால் இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் களைப்பை உணர்வான். இந்தப் பிரபஞ்சம் அவனுடைய கட்டுப்பாட்டி லிருந்து விலகிவிடும். ஆகவே அவன் கூறுகிறான்: 'நாம் வானங்களை யும் பூமியையும் அவற்றுக்கிடையே உள்ளவற்றையும் ஆறு நாள்களில் படைத்தோம். அதனால் நமக்கு எவ்வித களைப்பும் ஏற்படவில்லை. (38)'

அல்லாஹ் களைப்படைந்துவிட்டான் என்று கூறுவது வடிகட்டிய மடமைத்தனமாகும். ஆனால், திருக்குர்ஆன் இதுபோன்ற மடமைத் தனமான கூற்றிலிருந்து அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தி, அவனை உரிய முறையில் கண்ணியப்படுத்துகிறது.

திருக்குர்ஆன் மனிதனிடம் ஈமானைக் கட்டமைக்கும்போது மனித அறிவைச் சார்ந்து வீணான, மடத்தனமான விசயங்களை நிராகரிக்கிறது. ஆகவே இந்த அத்தியாயம், முஹம்மது தம் அதிகாரத்தால் உங்கள் கொள்கைகளை மாற்றுமாறு நிர்ப்பந்திக்கும் ஆட்சியாளரோ சர்வாதி காரியோ அல்ல என்பதையும் அவர் உங்களுக்கு உண்மையாகவே அறி வுரை கூறக்கூடியவரும் நினைவூட்டக்கூடியவரும் ஆவார் என்பதையும் நிறுவுவதோடு நிறைவடைகிறது.

> அவர்கள் கூறுவதை நாம் நன்கறிவோம். நீர் அவர்களை நிர்ப் பந்திப்பவர் அல்ல. ஆகவே, என் எச்சரிக்கையை அஞ்சும் மக்க ளுக்குக் குர்ஆனின் மூலம் அறிவுரை வழங்குவீராக. (45)

இந்த நினைவூட்டல்தான் இறைத்தூதர்களின், இறுதிநாள்வரை வரக் கூடிய அழைப்பாளர்களின் பணி. குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர் இது போர்குறித்த வசனங்கள் அருளப்படுவதற்கு முந்தைய கட்டளை யாகும் என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்து சரியானதல்ல. ஏனெனில், அழைப்புப் பணியின் பாதையில் இருக்கும் இடையூறுகளை அகற்றவும் உரிமைகளைப் பாதுகாக்கவும்தான் போர் கடமையாக்கப்பட்டுள்ளது. அது நம்பிக்கை கொள்ளும்படி மக்களை நிர்ப்பந்திப்பதற்காக அல்ல. முஹம்மது ஒருநாளும் சர்வாதிகாரியாக இருந்ததில்லை. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும்படி யாரையும் அவர் நிர்ப்பந்தித்ததில்லை.

❖ ❖ ❖

அத்தியாயம் 51

# அத்தாரியாத்

(புழுதிக்காற்று)

*இந்த அத்தியாயம் சிந்திப்பதற்குரிய பல சத்தியங்களைக் கொண்டு தொடங்குகிறது. முதலாவது சத்தியம் காற்றுகளைக் கொண்டு செய்யப் படுகிறது. நாம் காற்றைப் பெறவில்லையெனில் மூச்சுமுட்டி இறந்து விடுவோம்.*

*என் இதயத்தை நிரப்பும் இந்தக் காற்றைக் குறித்து எனக்கு நானே கேட்டுக்கொண்டேன்: 'மனிதர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் அதனைப் பரிமாறிக் கொள்கிறோமா? என் சுவாசக் குழாயிலிருந்து வெளிவரும் காற்றை மற்றவர்கள் சுவாசிக்கிறார்களா?'*

*இந்தப் பூமியில் காற்று உயர்ந்தும் தாழ்ந்தும் சென்றுகொண்டிருக் கிறது. பின்னர், அது சூறாவளியாக வீசுகிறது. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என எல்லாத் திசைகளையும் சென்றடைகிறது. என் இதயத்தை நிரப்பும் காற்று ஐரோப்பாவிலோ ஆசியாவிலோ வேறொரு மனிதரின் இதயத்தையும் நிரப்புகிறது. யார் அதற்குக் கற்றுக்கொடுத்தது? அதன் பாதையை நிர்ணயித்தது அல்லாஹ்தான்.*

*இந்தக் காற்றுகள் மனிதர்கள், விலங்குகளின் தாகம் தீர்க்கக்கூடிய, இறந்த பூமியை உயிர்ப்பிக்கக் கூடிய மழை மேகங்களை இழுத்து வருகின்றன.*

*எகிப்தியர்களாகிய நாம் மழையை அதிகமாக எதிர்பார்ப்பதில்லை. நைல் நதி நம் தேவையைப் பூர்த்திசெய்துவிடுகிறது. ஆனாலும் அந்த நதி எங்கிருந்து தன் மூலத்தைப் பெற்றுக்கொள்கிறது? இந்தியப் பெருங் கடலிலிருந்து இழுத்துக் கொண்டுவரப்படும் மேகங்களிலிருந்து அது தனக்கான நீரைப் பெற்றுக்கொள்கிறது. ஆயிரக்கணக்கான மைல்களைக்*

கடந்துவந்த அந்த மேகங்களால் கெய்ரோவிலும் இஸ்கன்திரியாவிலும் நாம் எளிதாக நீரைப் பெற்றுக்கொள்கிறோம்.

மென்மையான காற்று இந்த அளவு நீரைக் கொண்டுவந்து பெரும் நதியை ஓடவைக்கிறது.

> புழுதியைக் கிளப்பக்கூடிய காற்றுகளின் மீது சத்தியமாக. சுமைகளைச் சுமந்துசெல்பவற்றின் மீதும் மெதுவாகச் செல்பவற்றின் மீதும் விவகாரங்களைப் பங்கிடுவோரின் மீதும் சத்தியமாக. நிச்சயமாக உங்களுக்கு வாக்களிக்கப்படுவதெல்லாம் உண்மையே ஆகும். தீர்ப்புநாள் வந்தே தீரும். (1-6)

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்தக் காற்று எப்படி கனமான மேகங்களை இழுத்துக் கொண்டுவருகிறது! இந்தக் காற்றால் கொண்டு வரப்பட்ட மேகங்கள் மழையாகப் பொழிந்து பூமியின் ஆறுகளில் ஒன்றிணைகின்றன. கூலி கொடுக்கப்படும் நாளும் மனிதர்கள் அனைவரும் அவர்கள் செய்த எல்லாச் செயல்களுக்கும் பதில் சொல்லியே தீர வேண்டும் என்பதும் உண்மையே என்பதற்கு அல்லாஹ் காற்றுகளைக் கொண்டு சத்தியம்செய்கிறான்.

அதற்குப் பிறகு வேறொரு சத்தியம் இடம்பெறுகிறது. 'வழிகளையுடைய வானத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக நீங்கள் முரண்பாட்டில் வீழ்ந்துகிடக்கிறீர்கள். (7,8)'

வானவெளி வழிகளையுடையது. அதில் எத்தகைய கோணலும் ஒழுங்கின்மையும் இல்லை. ஒவ்வொன்றும் தமக்குரிய வட்டப்பாதையில் நீந்திக்கொண்டிருக்கிறது.

வானத்தை விட்டுவிட்டு இப்போது பூமியின் பக்கம் வருவோம். 'உறுதியான நம்பிக்கை கொண்டோருக்குப் பூமியில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. (20)'

எனக்குநானே கூறிக்கொண்டேன், மனிதர்களாகிய நாம் எவ்வளவு கனமானவர்களாக இருக்கிறோம்! வானவெளியில் பூமியும் எவ்வளவு கனமானதாக இருக்கிறது! ஆனாலும் எந்தத் தடுமாற்றமுமின்றிப் பூமி தன் பாதையில் சென்றுகொண்டுதானே இருக்கிறது.

> உங்களுக்குள்ளேயும் சான்றுகள் இருக்கின்றன. நீங்கள் கவனிக்க மாட்டீர்களா? வானத்தில் உங்களுக்கு வாழ்வாதாரமும் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டதும் இருக்கின்றன. வானம், பூமியின் இறைவன்மீது ஆணையாக, நீங்கள் பேசுவதைப் போன்றே அது உண்மையானது. (21-23)

*மனிதனின் உடலமைப்பு மிகவும் சிக்கலானது. அவனைப் படைத்துச் செம்மைப்படுத்தி, அவனுக்குச் செவிப்புலனையும் பார்வைத் திறனை யும் வழங்கிய இறைவன் மிகவும் பரிசுத்தமானவன். ஆனாலும் கர்வம் கொண்ட மனிதன் தன் இருக்கையில் சாய்ந்தவாறு, 'எந்த இறைவனும் இல்லை, வாழ்க்கை என்பது வெறுமனே அனுபவித்தல்தான்.' என்று கூறுகிறான். இந்த உலகைப் படைத்தது யார், அதன் ஒழுங்குகளை அமைத்தது யார் என்பதுகுறித்து அவன் எதுவும் சிந்திப்பதில்லை.*

*இந்தக் கேள்விக்கு அத்தியாயத்தின் இறுதியில் இவ்வாறு பதிலளிக் கப்படுகிறது:*

> *நாம் வானத்தை நம் வல்லமையால் அமைத்தோம். நாம் விசால மாக்குவோராக இருக்கிறோம். பூமியை நாமே விரித்தோம். நாம் சிறப்பான முறையில் விரிப்போராக இருக்கிறோம்! நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொன்றையும் நாம் இணை இணை யாகப் படைத்துள்ளோம்.* (47-49)

*நாத்திகர்கள் தங்களின் மடமையாலும் அலட்சியத்தாலும் தங்க ளுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். ஆகவே, அல்லாஹ் அவர்களுக்கும் அவர்களைப் போன்றவர்களுக்கும் கூறுகிறான்:*

> *ஆகவே அல்லாஹ்வின் பக்கம் விரையுங்கள். அவன் புறத்திலிருந்து நான் உங்களைத் தெளிவாக எச்சரிப்பவனாக இருக்கிறேன். அல்லாஹ்வுடன் வேறு இறைவனை ஏற்படுத்திவிடாதீர்கள். அவ னிடமிருந்து நான் உங்களைத் தெளிவாக எச்சரிப்பவனாக இருக்கி றேன்.* (50,51)

*ஆனால், நிராகரிப்பாளர்களுக்கு நாவன்மை வழங்கப்பட்டுள்ள அள வுக்குப் பாக்கியம் வழங்கப்படவில்லை. அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்களைச் சூனியக்காரர்கள், பிற் போக்குவாதிகள் என்று வசைபாடுகிறார்கள். 'இவ்வாறே இவர்களுக்கு முன்னிருந்தவர்களிடமும் தூதர்கள் வந்தபோதெல்லாம், அவர் ஒரு சூனியக்காரர் அல்லது பைத்தியக்காரர் என்றுதான் கூறினார்கள். இவர்கள் தங்களுக்குள் உபதேசித்துக் கொண்டார்களா என்ன? மாறாக, இவர்கள் வரம்புமீறும் மக்களாவர்.* (52,53)'

*அவர்களின் வரம்புமீறல்தான் அவர்களைச் சோதனைக்குப் பிறகு அழிவின் பக்கம் இட்டுச்சென்றது.*

*இத்தகைய மக்கள் சென்றடையும் இடங்கள்குறித்து அத்தியாயத்தின் நடுப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. இப்ராஹீமிடம் வந்த விருந்தினர்களைக்*

குறித்த செய்தியோடு அது தொடங்குகிறது. அந்தச் செய்தி இறைவனைக் குறித்து வேதக்காரர்கள் கொண்டுள்ள தவறான புரிதல்களை, அவர்களின் அறிவு எவ்வாறு சிலை வழிபாட்டுச் சிந்தனையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அப்பட்டமாகத் தெளிவுபடுத்துகிறது.

இப்றாஹீமிடம் விருந்தினராக வந்தது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வானவர்களாகும். அவர்கள் அவருடைய மனைவி சாறாவுக்கு நன்கறிந்த ஒரு குழந்தையை அல்லாஹ் வழங்குவான் என்ற நற்செய்தியையும் லூத்தின் சமூகத்தார் வாழ்கின்ற அசுத்தமான ஊரை அல்லாஹ் விரைவில் அழிப்பான் என்ற செய்தியையும் கொண்டுவந்தார்கள்.

ஆனால், பழைய ஏற்பாட்டில் இந்தச் சம்பவம் வேறொரு வடிவில் இடம்பெற்றுள்ளது. இப்றாஹீமுடன் சேர்ந்து அல்லாஹ்தான் உணவு உண்டான் என்று அது குறிப்பிடுகிறது. 'இப்றாஹீம் அல்லாஹ்வுக்கு உயர்ந்தரக உணவுத்தட்டில் பொரித்த காளைக் கன்றையும் ரொட்டியையும் பரிமாறினார். அல்லாஹ் வயிறு நிரம்ப உண்டான்' என்றும் அது குறிப்பிடுகிறது.

இதுதான் அவர்களின் பரிசுத்த வேதாகமம் கூறுவது.

ஆனால், வேதக்காரர்கள் ஏற்றுக்கொள்ளாத இந்தக் குர்ஆன் இது போன்ற கட்டுக்கதைகளைவிட்டும் அவன் பரிசுத்தமானவன் என்று குறிப்பிடுகிறது. ஏனெனில், அதில் அல்லாஹ் கண்ணியப்படுத்தப்பட வேண்டிய முறைப்படி கண்ணியப்படுத்தப்படவில்லை.

கவிஞன் சொல்கிறான் :

கஷ்டவேளையில் தரப்படும் தீர்ப்பு
மனிதனுக்கு நல்லதாயினும், தீயதாகவே தெரியும்

அத்தியாயம் ஃபிர்அவ்னையும் அவனது படைகளையும் குறித்தும் அவர்கள் எவ்வாறு இஸ்றாயீலின் மக்களின் மீது அநீதி இழைப்பதை அனுமதிக்கப்பட்டதாகக் கருதினார்கள் என்பதைக் குறித்தும் பேசுகிறது. 'ஆகவே நாம் அவனையும் அவனது படையையும் பிடித்து கடலில் வீசியெறிந்துவிட்டோம். அவன் பழிப்புக்குரியவனாக இருந்தான். (40)' அவன் பழிப்புக்குரிய குற்றம்செய்தான். கடலில் வீசியெறியப்பட்டான். அதனால் இறைவனுக்கு எந்தச் சிரமமும் ஏற்படவில்லை. அவர்களுக்காக வானங்களும் பூமியும் அழவில்லை.

ஆது சமூகத்தினரும் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகிறார்கள். 'எங்களைவிட வலிமையானவர்கள் யார்?' என்று அவர்கள் கேட்டார்கள்.

‘ஆது சமூகத்திடமும் சான்று இருக்கிறது. நாம் அவர்கள்மீது நாசகரமான காற்றை அனுப்பினோம். அது தன் எதிரில் பட்டதையெல்லாம் தூள் தூளாக்கிவிட்டது. (41,42)’

எவ்வித எதிர்ப்புமின்றி அவர்கள் செத்துமடிந்தார்கள். அவர்களைப் போன்ற மற்ற அநியாயக்காரர்களும் இவ்வாறே அழிக்கப்பட்டார்கள். அல்லாஹ் தன்னை அறிமுகப்படுத்தக்கூடிய, தன் சந்திப்பைக் குறித்து நினைவூட்டக்கூடிய தூதர்களை அவர்களின் பக்கம் அனுப்பினான். ஆனால், அவர்கள் வரம்புமீறினார்கள், கர்வம் கொண்டார்கள். ஆகவே அழிந்துபோனார்கள்.

அல்லாஹ் தன் படைப்புகளிடம் தேவையுடையவன் அல்ல. அவன் தேவையற்றவன். அவன் அவர்கள்மீது வணக்க வழிபாட்டைக் கடமை யாக்குகிறான் எனில் அது அவனுடைய அருட்கொடைகளுக்கு அவர்கள் நன்றி செலுத்தவும் அவனுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் அவர்கள் உணர வேண்டும் என்பதற்காகவும் ஆகும். இது கடினமான கடமையா என்ன?

> ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே நான் படைத்துள்ளேன். நான் அவர்களிடமிருந்து வாழ்வதற்கான எதையும் விரும்பவில்லை. அவர்கள் எனக்கு உணவளிக்க வேண் டும் என்றும் விரும்பவில்லை. நிச்சயமாக அல்லாஹ்வே வாழ் வாதாரம் அளிப்பவனாகவும் வல்லமைமிக்கவனாகவும் உறுதி யானவனாகவும் இருக்கிறான். (56-58)

மனிதர்கள் தங்கள் இறைவனின் விசயத்தில் வெளிப்படுத்தும் நன்றி கெட்டத்தனம் அவர்களை அழிவின் பக்கமே இட்டுச்செல்லும். தங்கள் முன்னோர்கள் அடைந்த விளைவுகளையே அவர்களும் அடைவார்கள்.

> ஆகவே, அக்கிரமக்காரர்களின் பங்கு அவர்களுடைய தோழர்களின் பங்கைப் போல் ஆகிவிட்டது. ஆகவே அவர்கள் அவசரப்பட வேண்டாம். (59)

ஒரே வகையான தண்டனையையும் ஒரே வகையான இருப்பிடத்தை யுமே அவர்கள் பெறுவார்கள்.

> நிராகரிப்பாளர்களுக்கு அவர்கள் எச்சரிக்கப்பட்ட நாளில் கேடுதான். (60)

❖ ❖ ❖

அத்தியாயம் 52

# அத்தூர்

(ஒரு மலையின் பெயர்)

*மனித உள்ளத்தில் திருக்குர்ஆன் ஏற்படுத்தும் தாக்கத்துக்கு அத்தூர் என்ற இந்த அத்தியாயம் மிகச் சிறந்த உதாரணமாகும். இரவின் மீது அதிகாலை உதிக்கும்போது அது இருளை அழித்து தன் வெளிச்சத்தைப் பரப்புவது போலத் திருக்குர்ஆன் மனித உள்ளத்தில் நேர்வழியைப் பரப்புகிறது.*

*ஜுபைர் இப்னு முத்அம் இணைவைப்பாளராக இருந்தார். பத்ருப் போரில் அவரது சமூகம் அடைந்த தோல்விக்குப் பிறகு சில கைதிகளை விடுவிப்பதற்காக அவர் மதீனா வந்தார். முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்குள் நுழைந்து நபியவர்களுக்குப் பின்னால் மஃரிபு தொழுதுகொண்டிருந்த போது அவர் பள்ளிவாசலுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தார். தொழுகையில் நபியவர்கள் அத்தூர் என்ற அத்தியாயத்தை ஓதுவதைச் செவியுற்றார். அவரது மனம் மாறியது. அவரது உள்ளத்தில் இருந்த ஷிர்க் ஆட்டம் கண்டது. ஓதப்படும் இந்த வஹீ தம் உள்ளத்தில் மிஞ்சியிருக்கும் நிராகரிப்பையும் முழுமையாக அழித்துவிடும் என்பதை அவர் உணர்ந்தார்.*

*ஜுபைர் கூறுகிறார், 'நபியவர்கள் மஃரிபு தொழுகையில் அத்தூர் என்ற அத்தியாயத்தை ஓதுவதை நான் செவியுற்றேன். பின்வரும் வசனத்தை அவர்கள் அடைந்தவுடன்,*

> *அவர்கள் படைப்பாளன் யாருமின்றித் தாமாகவே வந்துவிட்டார்களா? அல்லது, அவர்கள்தாம் படைப்பாளர்களா? அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள்தாம் படைத்தார்களா? உண்மையில் அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அல்லது, அவர்களிடம் உம் இறைவனின் பொக்கிஷங்கள் இருக்கின்றனவா? அல்லது, அவர்கள் ஆதிக்கம்பெற்றவர்களா?* (35-37)

என் உள்ளம் பறக்க ஆரம்பித்துவிட்டது.

மற்றொரு அறிவிப்பில் அவர் கூறுகிறார்: பத்ருப் போரில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பாக நபியவர்களுடன் பேசுவதற்காக நான் மதீனா வந்தேன். நபியவர்கள் தங்கள் தோழர்களுடன் மஃரிபு தொழுகை தொழுதுகொண்டிருக்கும்போது நான் அங்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அப்போது அத்தூர் எனத் தொடங்கி பின்வரும் வசனங்கள்வரை ஓதப்படுவதைச் செவியுற்றேன்,

> தூர் மலையின் மீதும் திறந்த பக்கங்களில் எழுதப்பட்டுள்ள ஏட்டின் மீதும் மக்கள் நடமாட்டம் உள்ள ஆலயத்தின் மீதும் உயர்ந்த முகட்டின் மீதும் பொங்கும் கடலின் மீதும் சத்தியமாக, நிச்சயமாக உம் இறைவனின் வேதனை வந்தே தீரும். அதனைத் தடுப்பவர் எவரும் இல்லை. (1-8)

அது என் உள்ளத்தை உலுக்கியது. வேதனை இறங்கிவிடுமோ என்ற அச்சத்தில் நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன்.

அவர் சிலை வணக்கத்தை விட்டுவிட்டார். வெற்றிபெற்றார். இவ்வாறு ஏராளமானோரை இந்தக் குர்ஆன் இருள்களிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவந்திருக்கிறது.

முந்தைய வஹீக்கும் புதிய வஹீக்கும் மத்தியில் நெருக்கமான தொடர்பு நிலைபெற்றுள்ளது. தூர் மலையின் ஒரு பகுதியிலிருந்துதான் மூசா அழைக்கப்பட்டார். ஃபிர்அவ்னுக்கு எதிராகப் போரிடும் பொறுப்பு வழங்கப்பட்டார். பைத்துல் மஅமூர் என்ற இடத்திலிருந்துதான் முஹம்மது நபியவர்கள் தவ்ஹீதின் கொடியை நிலைநிறுத்துவதற்காக அழைக்கப்பட்டார். இங்கு திறந்த பக்கங்கள் என்பது மூசாவுக்கு வழங்கப்பட்ட ஏடுகளைக் குறிக்கும். பொங்கும் கடல் என்பது செங்கடலைக் குறிக்கும். அந்தக் கடலில்தான் தன்னைக் கடவுள் என்று கூறிய ஃபிர்அவ்னும் அவனுடைய படையினரும் மூழ்கடிக்கப்பட்டார்கள். இதுதான் பேரறிஞர் இப்னு ஆசூரின் கருத்து.

இந்த அத்தியாயத்தில், ஆரம்பத்தில் செய்யப்படும் சத்தியங்கள் குறித்து வேறுசில கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. அவற்றை இங்கு குறிப்பிட நாம் விரும்பவில்லை.

இங்கு நாம் வலியுறுத்த விரும்புவது, மூசா மார்க்கத்தையும் ஆட்சியையும் உள்ளடக்கிய தவ்றாத்தைப் பெற்றார். அதுபோன்று நம்முடைய தூதரும் மார்க்கத்தையும் ஆட்சியையும் உள்ளடக்கிய குர்ஆனைப்

பெற்றார். தவ்றாத்தைப் பரிபூரணப்படுத்தும் விதமாகவும் அதில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவுமே ஈசாவுக்கு இன்ஜீல் அருளப் பட்டது. திருக்குர்ஆன் கொள்கையையும் சட்டத்தையும் உள்ளடக்கி யுள்ளது. அது மறுமைநாள்வரை நிலைத்திருக்கக்கூடிய வஹீயாகும். முந்தைய தூதர்கள் பெற்ற வஹீயை அறிந்துகொள்வதற்கு அது ஒன்றே நம்பகமான ஒரே மூலமாகும்.

இந்த அத்தியாயம் வஹீயின் எதிரிகளை எச்சரிக்கிறது. அவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்தது. ஆனால், இறையச்சமுடையவர்களுக்குப் பிரகாசமான எதிர்காலமும் நிலையான இன்பங்களும் காத்திருக்கின்றன. அவை அவர்களின் தூய உள்ளத்தாலும் கரங்களாலும் நேர்வழியில் நிலைத்திருந்ததாலும் அவர்களுக்குக் கிடைக்கும் அருட்கொடைகளாகும்.

> நாங்கள் இதற்கு முன்னர் எங்கள் குடும்பத்தாரிடையே இருந்தபோது அஞ்சிக்கொண்டிருந்தோம். அல்லாஹ் எங்கள்மீது அருள்புரிந்து கொடிய வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றினான். இதற்கு முன்னர் அவனையே நாங்கள் அழைத்துக்கொண்டிருந்தோம். நிச்சயமாக அவன் பேருபகாரம் செய்பவன்; இணையிலாக் கிருபை யாளன். (26-28)

வாக்குறுதிக்கும் எச்சரிக்கைக்கும் பிறகு அத்தியாயத்தின் நடுப்பகுதி யில் உறுதியுடன் அழைப்புப் பணியைத் தொடருமாறும் நினைவூட்டிக் கொண்டிருக்குமாறும் நபியவர்களுக்குக் கட்டளையிடப்படுகிறது. 'நீர் நினைவூட்டிக் கொண்டிருப்பீராக. உம் இறைவனின் அருளால் நீர் ஜோதிடரும் அல்ல; பைத்தியக்காரரும் அல்ல. (29)' இயற்கையான மார்க்கத்தில் ஜோதிடம் எங்கிருந்து வரும்? அறிவுபூர்வமான மார்க்கத் தில் பைத்தியக்காரத்தனம் எங்கிருந்து வரும்?

இஸ்லாம் என்பது கோணலையும் பிழையையும் வெளிப்பகட்டையும் தீமைகளையும் நிராகரித்து உன்னதமான மனிதச் சமூகத்தை உருவாக்கும் கண்ணியமான மார்க்கமாகும்.

ஆகவே, இதற்குப் பிறகு அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாக வரக்கூடிய பதினைந்து கேள்விகள் இடம்பெறுகின்றன. அவை பலமான மின் அதிர்வுகளைப் போன்று மனிதனை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு அழைத்துச் செல்கின்றன; சிந்திக்கும்படி அவனை நிர்ப்பந்திக் கின்றன.

1. 'அல்லது, இவர் ஒரு கவிஞர், இவர் விசயத்தில் நாங்கள் காலத்தின் சுழற்சியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று

அவர்கள் கூறுகிறார்களா? நீர் கூறும், எதிர்பாருங்கள். நானும் உங்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். (30,31)' முஹம்மது கவிஞர் அல்ல. 'நாம் இவருக்குக் கவிதை கற்றுக் கொடுக்கவும் இல்லை. அது இவருக்குத் தகுமானதுமல்ல. (36:69)' அவருக்கு வழங்கப்பட்டுள்ள வேதம் உண்மைகளால் நிரம்பியுள்ளது, யூகங்களால் அல்ல. 'நாம் குர்ஆனைச் சத்தி யத்துடனே அருளியுள்ளோம். அது சத்தியத்துடன்தான் அருளப் பட்டுள்ளது. (17:105)'

2. 'அவர்களது அறிவுதான் அவர்களை இவ்வாறு தூண்டுகிறதா? (32)' அறிவுடையோர் இதுபோன்று இட்டுக்கட்ட மாட்டார்கள்.

3. 'அல்லது, அவர்கள் வரம்புமீறும் மக்களாக இருக்கிறார்களா? (32)' வரம்புமீறல்தான் அவர்களை நிராகரிக்கத் தூண்டுகிறது.

4. 'அல்லது, இந்தக் குர்ஆனை இவர் சுயமாகப் புனைந்து கொண்டார் என்று அவர்கள் கூறுகிறார்களா? மாறாக, அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அவர்கள் உண்மையாளர் களாயின் இதைப் போன்ற ஒரு வாக்கைக் கொண்டுவரட்டும். (33,34)' திருக்குர்ஆன் ஒரு மனிதனால் புனையப்பட்டது என்று அவர்கள் கூறினால் அதைப் போன்ற ஒன்றைப் புனைவதற்கு அவர்களுக்குத் தடையாக இருப்பது எது?

5. 'அவர்கள் படைப்பாளன் யாருமின்றித் தாமாகவே வந்துவிட் டார்களா? (35)' பூஜ்யத்திலிருந்து எதுவும் தோன்றாது.

6. 'அல்லது, அவர்கள்தாம் படைப்பாளர்களா? (35)' மனிதன் ஒரு படைப்புதான். அவன் எதையும் படைக்கவில்லை.

7. 'அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள்தாம் படைத் தார்களா? உண்மையில் அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (36)' நம் வாழ்க்கைக்காக வசப்படுத்தப்பட்டுள்ள ஓர் உலகில் நாம் வாழ்கிறோம். அதில் உள்ள எதையும் நாம் படைக்கவில்லை.

8. 'அல்லது, அவர்களிடம் உம் இறைவனின் பொக்கிஷங்கள் இருக்கின்றனவா? (37)' நிராகரிப்பாளர்களில் பெரும்பாலோர், 'ஏன் இறைத்தூதர்கள் எங்களுக்கு மத்தியிலிருந்து தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள்?' என்று கேட்கிறார்கள். ஏன் அவர்களுக்கு மத்தியிலிருந்து தூதர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது?

9. ‘அல்லது, அவர்கள் ஆதிக்கம்பெற்றவர்களா? (37)’ அவர்களிடம் அதிகாரம் இருந்தால் தங்களின் அதிகாரத்தை அவர்கள் சோதித்துப் பார்க்கட்டும். ‘தங்களிடம் எவ்வித ஆதாரமும் வராமலேயே தர்க்கம்புரிபவர்களின் உள்ளங்களில் கர்வத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனாலும் அவர்கள் அதனை அடையப்போவதில்லை. (40:56)’

10. ‘அல்லது, அவர்களிடம் ஏணி இருந்து அதன் மூலம் வானுலக இரகசியங்களைச் செவியேற்கிறார்களா? அப்படியாயின் அவர் களில் செவியேற்பவர் தெளிவான ஆதாரத்தைக் கொண்டு வரட்டும். (38)’ வஹீயைக் கொண்டுவர அவர்கள் ஆற்றல் பெற்றிருந்தால் அதனை அவர்கள் கொண்டுவரட்டும்.

11. ‘அவனுக்குப் பெண் மக்கள். உங்களுக்கு ஆண் மக்களா? (39)’ மக்காவின் இணைவைப்பாளர்கள் தங்களுக்குப் பெண்மக்கள் இருப்பதை இழிவான ஒன்றாகக் கருதினார்கள். அவ்வாறு இருந்தும் அல்லாஹ்வுக்குப் பெண்மக்கள் இருக்கிறார்கள் என்று கூறிவந்தார்கள்.

12. ‘அல்லது, அவர்களிடம் நீர் ஏதேனும் கூலி கேட்டு அதன் சுமையால் அவர்கள் அழுத்தப்படுகிறார்களா? (40)’ இறைத் தூதர்கள் மனிதர்களிடம் எந்த வகையான கூலியையும் வேண்ட மாட்டார்கள்.

13. ‘அல்லது, அவர்களிடம் மறைவான ஞானம் இருந்து அதனை அவர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்களா? (41)’ நிராரிப்பாளர் களிடம் மறைவான ஞானம் இருக்கிறதா அல்லது ஏதேனும் சாட்சியம் இருக்கிறதா?

14. ‘அல்லது, அவர்கள் ஏதேனும் சூழ்ச்சிசெய்ய நாடுகிறார்களா? அப்படியாயின் அந்நிராகரிப்பாளர்கள்தான் சூழ்ச்சியில் அகப் பட்டுக்கொள்வார்கள். (42)’ சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கு மான மோதல் நீண்டுகொண்டே செல்லலாம். ஆனால், முடிவு சத்தியவாதிகளுக்கே சாதகமாக அமையும்.

15. ‘அல்லது, அல்லாஹ்வைத் தவிர வேறு ஓர் இறைவன் அவர் களுக்கு இருக்கிறானா? அவர்களின் இணைவைப்பை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன். (43)’ அல்லாஹ்வைத் தவிர அனைத்துமே போலியானவைதாம்.

*இந்தக் கேள்விகளுக்குப் பிறகு அல்லாஹ் கூறுகிறான்: 'வானத்தி லிருந்து அதன் ஏதேனும் ஒரு துண்டு கீழே விழுவதை அவர்கள் பார்த் தாலும் அதனை அடர்ந்த மேகம் என்றுதான் கூறுவார்கள். (44)' கர்வமும் பிடிவாதமும் அவர்களின் அறிவை மழுங்கடித்துவிட்டன. அவர்கள் சத்தியத்துக்குக் கட்டுப்படுவதில்லை.*

*ஆகவே தூதருக்குக் கூறப்பட்டது, அவர்கள் சத்தியத்துக்கு முன்னால் இழிவடைந்து நிற்கும் நாள்களை எதிர்பார்ப்பீராக. அப்போது அவர்கள் தங்களின் ஆற்றல்கள் அனைத்தையும் இழந்திருப்பார்கள். நீர் வணக்க வழிபாட்டிலும் இடைவிடாத போராட்டத்திலும் உம்மை ஈடுபடுத்திக் கொள்வீராக.*

*உம் இறைவனின் கட்டளைக்காகப் பொறுத்திருப்பீராக. நிச்சயமாக நீர் நம் கண்காணிப்பில் இருக்கிறீர். (48)*

❖ ❖ ❖

அத்தியாயம் 53

# அந்நஜ்ம்

(நட்சத்திரம்)

*மனிதனின் அறிதலுக்கு அறியப்பட்ட மூலங்கள் இருக்கின்றன. அவற்றில் முதலாவது அறிவு, பிறகு ஐந்து புலனுறுப்புகள். இன்னொரு மூலமும் இருக்கிறது. அது குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே உரித்தான தாகும். அது குறித்து இறைத்தூதர் யஅகூபு தம் பிள்ளைகளிடம் கூறுகிறார்: 'அல்லாஹ்விடமிருந்து நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்.* (12:86)'

*எல்லாவற்றையும் குறித்து நன்கறிந்தவனிடமிருந்து ஏதேனும் ஒன்றைப் பெற்றவர் உறுதியான அறிவைச் சம்பாதித்துவிட்டார். அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுக்கும் தன் அறிவிலிருந்து வழங்க மாட்டான். மனிதர்கள் கனிமங்களைப் போன்றவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைத் தவிர வேறு யாரும் வஹீயைச் சுமப்பதற்குச் சக்திபெற மாட்டார்கள். அவர்கள் வானத்தின் வஹீயைப் பெறுவதற்கேற்பத் தனித்துவமான இயல்பைக் கொண்டவர்கள். அவர்கள் புனையவோ இட்டுக்கட்டவோ மாட்டார்கள். நட்சத்திரங்கள் மறையலாம். ஆனால், இவர்கள் மறைய மாட்டார்கள்.*

*முஹம்மது இவர்களில் ஒருவர் அல்லது இவர்களின் தலைவர்.*

*இந்த அத்தியாயம், முஹம்மது நபி எவ்வாறு வஹீயைப் பெற்றார் என்பதை வர்ணிக்கிறது.*

> *மறைகின்ற நட்சத்திரத்தின் மீது சத்தியமாக. உங்கள் தோழர் வழிகெடவுமில்லை, தவறான வழியில் செல்லவுமில்லை. அவர் தம் மனஇச்சைப்படி பேசுவதுமில்லை. இது அவருக்கு அறிவிக்கப்படும் வஹீயாகும். வல்லமைமிக்கவர் அவருக்கு இதனைக் கற்றுக்கொடுத்துள்ளார்.* (1-6)

*இதற்கு முன்னர் மூசா பள்ளத்தாக்கின் வலதுகரையின் அருள் வளம் மிக்க பகுதியில் உள்ள ஒரு மரத்திலிருந்து அழைக்கப்பட்டார், பல*

வருடங்கள் ஆடுகளை மேய்த்தபிறகு மனிதனை மேய்க்கும் மேய்ப்பராக ஆகும் பொருட்டு. இதோ தூதர்களுக்கெல்லாம் தலைவராக இருந்தவர் மனிதர்களைவிட்டும் விலகி ஹிறா குகையில் தஞ்சமடைகிறார். அச்சு றுத்தக்கூடிய தோற்றத்தில் ஒரு வானவர் அவர் முன்னால் தோன்றுகிறார், அவருக்கான பெரும் பணியை அவர் தொடங்கும் பொருட்டு.

'அவர் கண்டதுகுறித்து அவரது உள்ளம் பொய்யுரைக்கவில்லை. ஆயினும், அவர் கண்டதுகுறித்து அவருடன் நீங்கள் தர்க்கம்செய்கிறீர்களா? (11,12)' முஹம்மதுக்கு அருளப்பட்ட வஹீயின் அடித்தளம் உண்மைதான். இதுதான் பெரும்பாலோரிடமிருந்து மறைந்துவிட்டது. தலைமுறைகள் அதனை அறியாதவையாகிவிட்டன. 'அவர்கள் யூகங்களையும் மனஇச்சைகளையுமே பின்பற்றுகிறார்கள். ஆயினும், அவர்களின் இறைவனிடமிருந்து அவர்களிடம் நேர்வழி வந்தே உள்ளது. (23)'

இந்தப் பூமியில் உருவாக்கப்பட்ட கொள்கைகளுடன் வானத்திலிருந்து அருளப்பட்ட மார்க்கங்களும் இருக்கின்றன. ஆனால், அவற்றை அசத்தியங்களாலும் மூடநம்பிக்கைகளாலும் ஆன புகை சூழ்ந்துள்ளது. அல்லாஹ்வைக் குறித்து தகுதியில்லாத விசயங்கள் அவற்றில் காணப்படுகின்றன. மார்க்கமும் அறிவும் ஒரே உண்மையாக இருந்தும் அவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று முரண்படக்கூடியவையாக ஆக்கப்பட்டுவிட்டன. மார்க்கத்தைப் பின்பற்றுவோரில் பலர் வஹீயுடன் தங்கள் மனஇச்சைகளையும் கலந்து அதற்கு அநீதி இழைக்கிறார்கள்.

> உண்மையில் இதுகுறித்து அவர்களுக்கு எந்த அறிவும் இல்லை. அவர்கள் யூகத்தைத்தான் பின்பற்றுகிறார்கள். சத்தியத்துக்கு முன்னால் யூகம் எவ்வித பயனும் அளிக்காது. (28)

மார்க்கம் என்பது அறிவுடன் இணைந்தது. வஹீ என்பது அறிவைப் பாதுகாக்கக்கூடியதாகவும் அதன் சட்டங்களுக்கு உத்தரவாதமளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அறிவுக்கு முரணான எதுவும் மார்க்கத்தின் அம்சமாக இருக்க முடியாது. ஆனாலும் சிலர் அடிப்படையற்ற சில அறிவிப்புகளைப் புனைந்து அவற்றை மார்க்கமாக ஆக்கிவைத்துள்ளார்கள். உண்மையில் அவை மார்க்கம் அல்ல.

இஸ்லாமும் இத்தகைய மனிதர்களால் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள், தூதர் சிலைகளைப் புகழ்ந்தார் என்று இட்டுக்கட்டினார்கள். அதற்கு உயர்வான 'கறானீக்' என்று பெயரிட்டார்கள்.

ஹதீஸ் கலை வல்லுனர்களிலும் சட்டவியல் நிபுணர்களிலும் யாரும் இதை அறிவிக்கவில்லை. இதை உண்மை என வாதிடுபவரை விட்டும்

இஸ்லாம் தூய்மையானது. நட்சத்திரம் உதிர்ந்து கீழே விழலாம். ஆனால், முஹம்மது ஒருபோதும் வீழ்ந்துவிட மாட்டார்.

மனிதர்களுக்கு நன்மையின் பாதையைக் காட்டுவதற்காகவே இஸ் லாம் வந்தது. அல்லாஹ் படைப்புகள் அனைத்தையும் விட்டுத் தேவை யற்றவனாக இருந்தாலும் அவன் அவர்களுக்காக நேர்வழியையும் தூய் மையையும் விரும்புகிறான். திருக்குர்ஆன், மனிதர்கள் சத்தியத்தில் உறுதியாக நிலைத்திருப்பதற்கான வழியாக அல்லது சிகரத்தை அடை வதற்கான படிகளாக இருக்கிறது. விரும்புபவர் நற்செயலில் ஈடுபடலாம். விரும்புபவர் தீய செயலில் ஈடுபடலாம்.

> வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அல்லாஹ் வுக்கே உரியனவாக இருப்பது ஏனெனில் தீமைசெய்தோர் அவர் களின் செயல்களுக்கேற்பத் தண்டிக்கப்படுவதற்காகவும் நன்மை செய்தோர் நற்கூலி வழங்கப்படுவதற்காகவும்தான். அவர்கள் சிறு பாவங்களைத் தவிர பெரும் பாவங்களையும் மானக்கேடான வற்றையும்விட்டுத் தவிர்ந்துகொள்வார்கள். நிச்சயமாக உம் இறைவன் மன்னிப்பதில் தாராளமானவன். அவன் உங்களைப் பூமியிலிருந்து படைத்தபோதும் உங்கள் அன்னையரின் வயிறுகளில் நீங்கள் சிசுக்களாக இருந்தபோதும் உங்களை நன்கறிவான். ஆகவே, உங்களை நீங்களே புனிதர்களாகக் கருதிவிடாதீர்கள். உண்மையில் இறையச்சமுடையோரை அவன் நன்கறிவான். (31,32)

வசனங்கள் மனிதனைப் பரிபூரணத்தின் பக்கம் அழைத்துச் செல்வ துடன் அவனிடம் இருக்கும் இயல்பான சிறுசிறு குறைகளையும் சுட்டிக்காட்டுகின்றன. ஒவ்வொன்றும் சிறுசிறு குறைகளைப் பெற்றே இருக்கும். அவற்றால் மனிதன் மிகைக்கப்படலாம். ஆகவே, அவன் உயர்வான இறை மன்னிப்பை ஆதரவுவைக்க வேண்டும். அவனுடைய பெரும் கிருபையையே சார்ந்திருக்க வேண்டும்.

இந்த மார்க்கம் அறிவுடையோரிடம் எடுத்துரைக்கப்பட்டால் அவர்கள் கூறுவார்கள்: 'எங்கள் இறைவா, நம்பிக்கையின் பக்கம் அழைக்கும் ஓர் அழைப்பாளர் உங்கள் இறைவனின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுத்ததை நாங்கள் செவியேற்றோம். ஆகவே, நாங்கள் நம்பிக்கை கொண்டோம். (3:193)'

இத்தோடு உன்னதத்தை அடைய வேண்டும் என்ற அவர்களின் ஆசை யும் பூமி நிரந்தரமானதல்ல என்ற அவர்களின் எண்ணமும் இணைந்து விடுகின்றன.

ஆனால், பிடிவாதமும் மடத்தனமும் கொண்டவர்கள் வந்த வழியே திரும்பிச்செல்கிறார்கள்.

*'இப்படிப்பட்ட மனிதனைப் பற்றி நீர் என்ன கருதுகிறீர்? அவன் சத்தியத்தைப் புறக்கணித்தான். சிறிது அளித்துவிட்டுப் பின்னர் நிறுத்திக்கொண்டான். அவனிடம் மறைவான அறிவு இருந்து அதன் மூலம் அவன் பார்த்துக்கொண்டிருக்கிறானா?'* (33-35)

இது குறிப்பிட்ட ஒரு மனிதனின் பண்பு அல்ல. மாறாக, இது கடந்த காலத்திலும் தற்காலத்திலும் நிராகரிக்கும் ஒரு மனித முன்மாதிரி. தற் காலத்தின் நாத்திகர்கள் சத்தியத்தைப் புறக்கணிப்பதையும் அசத்தியத் தைக் கொண்டு பெருமையடிப்பதையும் மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதையும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறைவான வசதிகளில் மூழ்கிக்கிடப்பதையும் நான் காண்கிறேன்.

உண்மையில் முஹம்மது நபியை நிராகரிப்பது தூதர்கள் அனைவருக் கும் வழங்கப்பட்ட வஹீயை நிராகரிப்பதாகும்.

*மூசாவின் ஆகமங்களிலும் தம் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றிய இப்றாஹீமின் ஆகமங்களிலும் உள்ள செய்திகள் அவனுக்கு அறிவிக்கப்படவில்லையா? எந்த ஓர் ஆன்மாவும் மற்றொரு ஆன்மாவின் சுமையைச் சுமக்க முடியாது. மனிதனுக்குத் தான் சம்பாதித்ததைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. அவனது சம்பாத்தியம் விரைவில் அவனுக்குக் காட்டப்படும். பின்னர் நிறைவான கூலி அவனுக்கு வழங்கப்படும்.* (36-41)

ஈமானின் சாரம்சம் படைப்புகளிலிருந்து படைப்பாளனை நோக்கிச் செல்வதும் பிரபஞ்சத்திலிருந்து அதன் மாபெரும் இறைவனை நோக்கிச் செல்வதும் ஆகும். உயிருள்ளவை, உயிரற்றவை என அனைத்துமே அல்லாஹ் ஒருவனே என்பதை அறிவிக்கின்றன.

யார் 'பூச்சியினுள் அல்லது மனிதனுள் உயிர் தானாகவே வந்தது.' என்று எண்ணுகிறாரோ அவர் முட்டாளாவார்.

'என் இதயத்துக்கு நான்தான் கட்டளையிடுகிறேன். அது துடிக்கிறது. என் மூளைக்கு நான்தான் கட்டளையிடுகிறேன். அது சிந்திக்கிறது.' என்று யாரால் கூற முடியும்?

*உம் இறைவனிடமே அனைவரும் சென்றடைய வேண்டும். நிச்சய மாக அவனே சிரிக்கவைக்கிறான்; அழவும் வைக்கிறான். அவனே மரணிக்கச்செய்கிறான்; வாழ்வும் அளிக்கிறான். அவனே ஆண், பெண் இணைகளைப் படைத்தான், செலுத்தப்படும் ஒரு துளி விந்திலிருந்து!* (42-46)

*நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் நம்முடைய வழித்தோன்றல்களிலும் காணப்படும் உயிர், எல்லாவற்றையும் தன் கைவசம் வைத்திருக்கும் அந்த ஒரே இறைவனின் மாபெரும் அருட்கொடையாகும்.*

*முந்தையவர்கள் ஏமாந்துவிட்டார்கள். ஆகவே அழிந்துபோனார்கள். பிந்தையவர்களும் அவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்க மாட்டார்கள்.*

*இந்த அத்தியாயத்தின் இறுதிப் பகுதி சிறியசிறிய வசனங்களைக் கொண்டதாக இருந்தாலும் அவை ஓங்கி ஒலிக்கக்கூடியவை; தீப்பொறி களைப் போன்றவை; ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.*

> *மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புவதும் அவனது பொறுப்பே ஆகும். அவனே செல்வத்தை வழங்கி செல்வந்தனாக ஆக்கினான். அவனே ஷிஅறாவின் (ஒரு நட்சத்திரம்) இறைவனாவான். முந்தைய ஆது சமூகத்தையும் ஸமூது சமூகத்தையும் அவனே அழித்தான். அவர் களில் யாரையும் அவன் விட்டுவைக்கவில்லை. அவர்களுக்கு முன்னர் நூஹின் சமூகத்தையும் அவனே அழித்தான். அவர்கள் அக்கிரமக்காரர்களாகவும் வரம்புமீறியவர்களாகவும் இருந்தார்கள். தலைகீழாகப் புரட்டப்பட்ட ஊர்களையும் அழித்துவிட்டான். ஆகவே, அவர்களை மூட வேண்டிய வேதனை மூடிக்கொண்டது. ஆகவே மனிதனே, உன் இறைவனின் அருட்கொடைகளில் எதனை நீ சந்தேகிப்பாய்?* (47-55)

*இவ்வாறு பாவம்செய்த சமூகங்கள் அழிக்கப்பட்டன. அவர்களைப் போன்று நிராகரிப்பாளர்களும் குற்றவாளிகளும் அவர்கள் அடைந்த அதே விளைவுகளையே அடைவார்கள். தற்கால நாத்திகர்கள் இதனை உணர்ந்துகொள்வார்களா?*

*முஹம்மது கடந்தகாலங்களில் எச்சரிக்கைசெய்வதற்காக வந்த, தங்க ளின் கொள்கைகளின் பக்கம் மக்களை அழைத்த இறைத்தூதர்களில் ஒருவர்தாம். 'உமக்கு முன் வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டதுதான் உமக்கும் கூறப்படுகிறது.* (41:43)'

*பலதெய்வ வழிபாட்டை நிராகரித்து அல்லாஹ் ஒருவனே வணக் கத்துக்குரியவன் என்று கூறியதற்காகவா அவர் பழிக்கப்படுகிறார்? சூனியக்காரர்களையும் தங்களுக்கோ மற்றவர்களுக்கோ இறைவனின் மன்னிப்பை வழங்க முடியாத மத வியாபாரிகளையும் அம்பலப்படுத்தி யதற்காகவா அவர் குறைகூறப்படுகிறார்? 'இந்தச் செய்தியைக் குறித்தா நீங்கள் வியப்படைகிறீர்கள்! நீங்கள் சிரிக்கிறீர்களே, அழ வேண்டாமா?* (59,60)'

❖ ❖ ❖

அத்தியாயம் 54

# அல்கமர்

(சந்திரன்)

'மறுமைநாள் நெருங்கிவிட்டது. சந்திரனும் பிளந்துவிட்டது. (1)' இது மறுமைநாளுக்கு முன்னர் நிகழக்கூடிய பிளவைக் குறிக்கிறது. அப்போது கோள்களெல்லாம் தம் வட்டப்பாதையிலிருந்து விலகி ஒன்றோடு ஒன்று மோதிவிடும்.

அல்கியாமா என்ற அத்தியாயத்திலும் இதே பொருளை வலியுறுத்தக் கூடிய வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

> சந்திரன் ஒளியற்றுவிடும்போது, சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப்படும்போது, அந்நாளில் 'நான் எங்கே ஓடுவது?' என்று மனிதன் கேட்பான். (75:7-10)

ஆயினும் இப்னு மஸ்ஊதிடமிருந்து, 'இது நபியவர்களின் காலத்தில் நிகழ்ந்த பிளவு.' என்ற அறிவிப்பும் காணப்படுகிறது. இதனைக் கண்ட பின்னரும் இணைவைப்பாளர்கள் நபியவர்களை நிராகரித்தார்கள். தூதரைச் சூனியக்காரர் என்று கூறிவிட்டுத் தங்களின் நிராகரிப்பில் நிலைத்திருந்தார்கள். 'அவர்கள் சத்தியத்தை நிராகரித்து தங்கள் மனஇச்சைகளைப் பின்பற்றுகிறார்கள். ஒவ்வொரு விசயத்துக்கும் ஒரு குறிப்பிட்ட நேரம் உண்டு. (3)'

சிலை வழிபாட்டைத் தகர்ப்பதற்குத் தூதர் மேற்கொண்ட முயற்சி பயனற்றுப்போனது என்று கூறப்படுகிறது. அறியாமைக் காலத்து கொள்கைகள் அப்படியே நிலைத்திருந்தன. முஸ்லிம்களால் அவற்றை அகற்ற முடியவில்லை.

ஆனாலும் அருளப்படும் வஹீ அசத்தியத்துடன் மோதிக்கொண்டும் இருள்களை அகற்றிக்கொண்டும்தான் இருந்தது. 'படிப்பினைக்குரிய பல

செய்திகள் அவர்களிடம் வந்தே இருக்கின்றன. அவை நிறைவான ஞானம் மிக்கவை. ஆயினும், எச்சரிக்கைகள் பயனளிக்கவில்லை. (4,5)'

மனிதனின் உள்ளம் செயல்பட்டு இறைவனை நம்பும்படி, அவனுக்குக் கீழ்ப்படியும்படி அவனைத் தூண்டவில்லையெனில் அழைப்பு அவனுக்கு எவ்வித பயனையும் அளிக்காது. அது எவ்வளவு வசீகரமானதாக இருந்தாலும் சரியே.

மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டுக் கூலி கொடுக்கப்படும் நாளைக் கொண்டு அல்லாஹ் இணைவைப்பாளர்களை எச்சரிக்கிறான். பின்னர், வழிகெட்ட சமூகங்கள் வேதனைமிக்க இருப்பிடத்தையே அடையும் என்று அவர்களுக்கு நினைவூட்டுகிறான்.

> நிராகரிப்பாளர்களுக்கு அவர்களின் செயல்களால் ஏதேனும் ஓர் ஆபத்து வந்துகொண்டே இருக்கும் அல்லது அவர்களின் ஊருக்கு அருகில் எங்காவது இறங்கிக்கொண்டே இருக்கும். அல்லாஹ்வின் வாக்குறுதி வரும்வரை இவ்வாறு நிகழ்ந்துகொண்டே இருக்கும். (13:31)

இங்கிருந்து அத்தியாயம் நூஹின் சமூகத்தார் தொடங்கி, வழிகேடும் பிடிவாதமும் எதன் பக்கம் இட்டுச்சென்றன என்பதைச் சுருக்கமாக எடுத்துரைக்கத் தொடங்குகிறது.

> இவர்களுக்கு முன்னர் நூஹின் சமூகத்தினரும் நிராகரித்தனர். அவர்கள் நம் அடியாரை 'பைத்தியம்' என்று கூறி நிராகரித்தார்கள். அவர் மிரட்டப்பட்டார். தம் இறைவனிடம் அவர், 'நான் அடக்கப் பட்டுள்ளேன், ஆகவே எனக்கு உதவிபுரிவாயாக' என்று பிரார்த் தனைசெய்தார். (9,10)

இந்த வசனங்களை இனிமையான குரல்வளம் கொண்ட ஒருவர் ஓதிக்கொண்டிருப்பதை நான் செவியுற்றேன். மஃலூப் என்ற வார்த்தையின் மீது அவர் நிறுத்தினார். வாவ் என்ற எழுத்தை நீட்டி உச்சரித்தார். ஒடுக்குமுறையாலும் மன்றாடுதலாலும் உதவி கோருதலாலும் நிரம்பியுள்ள ஆறு செயல்பாடுகள். அது அவரது அழைப்பு நிராகரிக்கப்பட்ட, வலிகளால் நிரம்பியுள்ள ஒன்பதரை நூற்றாண்டுகளாக எனக்குத் தோன்றியது. என் கண்களிலிருந்து நீர் வடிவதைக் கண்டேன்.

> ஆகவே நாம் கொட்டும் கடும் மழையால் வானத்தின் வாசல்களைத் திறந்துவிட்டோம். பூமியிலிருந்து நீரூற்றுகளையும் பொங்கச் செய்தோம். விதிக்கப்பட்ட விசயத்துக்காக இருவகை நீரும் ஒன்றிணைந்தன. (11,12)

நூஹின் சமூகத்துக்குப் பிறகு ஆது சமூகம் வந்தது. அவர்களும் கர்வம் கொள்பவர்களாக, நிராகரிப்பாளர்களாக இருந்தார்கள். உடல் வலிமையும் பெரும் செல்வமும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆனாலும் அவர்கள் தங்களை ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைத்த தங்களின் தூதரை மூடர் என்றார்கள்.

*நீடித்த துர்பாக்கியமுடைய ஒரு நாளில் நாம் அவர்கள்மீது புயல் காற்றை அனுப்பினோம். வேரோடு பிடுங்கப்பட்ட பேரீச்ச மரங் களைப் போல் அது மனிதர்களைத் தூக்கியெறிந்தது.* (19,20)

அவர்கள்மீது வீசிய மலட்டுக் காற்று அவர்களின் உடல்களைத் தூக்கி வீசியது. அவற்றைப் பூமியோடு அறைந்தது. அவர்கள் வேரோடு பிடுங் கப்பட்ட பேரீச்ச மரங்களைப் போன்று பூமியில் வீழ்ந்துகிடந்தார்கள்.

*ஆகவே, நான் அளித்த வேதனையும் எச்சரிக்கையும் எப்படி இருந் தன?* (21)

நூஹின் சமூகம் நீரைக் கொண்டு அழிக்கப்பட்டார்கள். ஹூதுடைய சமூகம் காற்றைக் கொண்டு அழிக்கப்பட்டார்கள். இவையனைத்தும் நாம் பயன்படுத்தும் கூறுகள்தாம். ஆனால், அல்லாஹ் நாடிவிட்டால் நீரில் மூழ்கடித்துவிடுவான்; காற்றைக் கொண்டு அழித்துவிடுவான்.

*நாம் இந்தக் குர்ஆனை அறிவுரைபெறும் பொருட்டு எளிதாக்கி யுள்ளோம். ஆகவே, அறிவுரைபெறுபவர் யாரேனும் இருக்கிறாரா?* (32)

ஆது சமூகத்துக்குப் பிறகு ஸமூது சமூகம் வந்தது. இந்த அத்தியாயம் ஸமூது சமூகம் தம் தூதருக்கு அளித்த பதிலைக் குறிப்பிடுகிறது. ஏனெ னில், அவர்களின் கூற்றும் மக்காவாசிகளின் கூற்றும் ஒன்றுபோலவே இருக்கின்றன. ‘நமக்கு மத்தியில் இவருக்குத்தான் அறிவுரை அருளப்பட வேண்டுமா? உண்மையில் அவர்கள் என் எச்சரிக்கையைக் குறித்து சந்தேகம் கொண்டுள்ளார்கள். (38:8)’ இதற்கு முன்னால் கூறப்பட்டது: ‘அவர்களிலிருந்தே எச்சரிப்பவர் அவர்களிடம் வந்ததற்காக ஆச்சரியப் பட்டு, இவர் சூனியக்காரர், பொய்யர் என்று கூறினார்கள். (38:4)’

ஸமூது சமூகத்தினரின் கூற்று மக்காவாசிகளின் கூற்றோடு எந்த அளவு ஒத்துப்போகிறது என்பதைப் பாருங்கள்!

*அவர்கள், ‘நம்மில் உள்ள ஒரு மனிதரையா நாம் பின்பற்றுவது? நாம் அவ்வாறு செய்தால் வழிகேட்டிலும் புத்தித் தடுமாற்றத்திலும் வீழ்ந்துவிடுவோம். நமக்கு மத்தியில் இவருக்குத்தான் அறிவுரை*

வழங்கப்பட்டுள்ளதா? இல்லை. இவர் ஒரு பொய்யர்; ஆணவம் கொண்டவர்.' என்று கூறினார்கள். (24,25)

ஸமூது சமூகம், ஸாலிஹுக்கு அற்புதமாகப் பாறையிலிருந்து வழங் கப்பட்ட பெண் ஒட்டகத்தைக் கொலைசெய்தது. ஆகவே, அவர்களின் மீது வேதனை இறங்கியது. அவர்கள் தொழுவத்தில் மிதித்து நசுக்கப்பட்ட வைக்கோல்களைப் போல் ஆகிவிட்டார்கள். 'நாம் அவர்கள்மீது பெரும் சப்தத்தை அனுப்பினோம். அவர்கள் தொழுவத்தில் மிதித்து நசுக்கப்பட்ட வைக்கோல்களைப் போல் ஆகிவிட்டார்கள். (31)'

இப்போது நாம் வரம்புமீறித் தங்களின் பாலியல் இச்சைகளை விசித்திரமான வழிகளில் தணித்துக்கொண்டிருந்த ஓர் ஊர்வாசிகளின் பக்கம் திரும்புவோம். அவர்களுக்கு அனுப்பப்பட்ட தூதர் லூத் அவர் களின் மானக்கேடான இந்தச் செயலை வெறுப்பதாகப் பிரகடனம்செய்தார். அவர்களைச் சீர்படுத்துவதற்கு முயற்சிசெய்தார்.

அவர்களிடம் அனுப்பப்பட்ட தூதர் லூத் (அலை) அவர்களின் மானக் கேடான இந்தக் காரியத்தை வெறுப்பதாக அறிவித்தார். அவர்களின் இந்த மோசமான நடத்தையைச் சீர்படுத்த முயன்றார். ஆனால் அவர்களோ தங்களிடம் விருந்தினர் வடிவில் வந்த வானவர்களிடமே தவறாக நடக்க முயன்றார்கள். அவர்களின் ஊர் அடியோடு அழிக்கப்பட்டது.

சில ஆய்வாளர்கள் அணு வெடிப்பால்தான் அந்த ஊர் தலைகீழாக மாற்றப்பட்டது என்றும் அதனைப் பார்த்தவர்களின் பார்வைகள் பறிக்கப் பட்டன என்றும் கூறுகிறார்கள்.

> அவருடைய விருந்தினரைத் தம் இச்சைக்கு இணங்கவைக்குமாறு அவரிடம் வற்புறுத்தினார்கள். நாம் அவர்களின் பார்வைகளைப் பறித்துவிட்டோம். ஆகவே, அனுபவியுங்கள் எனது தண்டனை யையும் எச்சரிக்கையையும். அதிகாலையில் நிலையான வேதனை அவர்களைத் தாக்கியது. (37,38)

ஓரினச் சேர்க்கை தற்காலத்தில் பரவலாகக் காணப்படுகிறது. விளை வாக, எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்களும் உருவாகியுள்ளன.

விசித்திரம் என்னவென்றால், அந்த இழிசெயலிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் மதகுருமார்களுக்கு ஏற்படவில்லை. மாறாக, அவர்கள் இவ்வாறு அறிவுறுத்துகிறார்கள், 'உங்களின் இச்சை களைத் தணித்துக்கொள்ளுங்கள். ஆணுறைகளைப் பயன்படுத்தி உங்கள் உடல்நலனையும் பேணிக்கொள்ளுங்கள்.'

*அல்லாஹ்வை மறந்தவர்களிடமிருந்து வேறென்ன எதிர்பார்க்க முடியும்?*

*மனிதர்களை அடிமைப்படுத்தி பூமியில் அநியாயம் செய்துவந்த ஃபிர்அவ்ன்கள்குறித்த செய்தியோடு அத்தியாயம் நிறைவடைகிறது.*

> *எச்சரிப்பவர்கள் ஃபிர்அவ்னுடைய சமூகத்தினரிடமும் வந்தார்கள். அவர்கள் நம் சான்றுகள் அனைத்தையும் நிராகரித்தார்கள். ஆகவே, யாவற்றையும் மிகைத்த பலம்மிக்கவன் தண்டிப்பதைப் போன்று நாம் அவர்களைத் தண்டித்தோம்.* (41,42)

*பின்னர் புரிந்துகொள்ளக்கூடியவர்களுக்காகக் கூறப்படுகிறது: 'இஸ் லாத்தின் எதிரிகள் தங்களின் முன்னோர்கள் பெற்ற அதே விளைவு களையே அடைவார்கள்.'*

> *இவர்களைவிட உங்களில் உள்ள நிராகரிப்பாளர்கள் சிறந்தவர்களா? அல்லது வேதங்களில், 'உங்களுக்கு மன்னிப்பு உண்டு.' என்று ஏதும் உள்ளதா? அல்லது, 'பெரும் கூட்டத்தினரான நாங்கள் தாம் மேலோங்குவோம்.' என்று அவர்கள் கூறுகிறார்களா? விரைவில் இக்கூட்டம் தோல்வியைத் தழுவிப் புறங்காட்டி ஓடும்.* (43-45)

*இந்த எச்சரிக்கை நிறைவேறியது. பத்ருப் போரில் இணைவைப்பா ளர்கள் இழிவான தோல்வியைத் தழுவினார்கள். நிராகரிப்பின் தலை வர்கள் கொல்லப்பட்டார்கள். மறுமையில் அவர்களுக்காகக் காத்திருக் கும் வேதனை மிகக் கடுமையானதாகும். 'அவர்கள் நம் பக்கம் திரும்பி விடும் பொருட்டுப் பெரும் வேதனைக்கு முன்னால் சிறிய வேதனையை அவர்கள் அனுபவிக்கும்படி செய்வோம்.* (32:21)'

*மறுமைநாள்குறித்த செய்தியோடு அத்தியாயம் நிறைவடைகிறது. அங்கு இரு சாராரும் தகுந்த கூலியைப் பெறுவார்கள்.*

> *நிச்சயமாகக் குற்றவாளிகள் வழிகேட்டிலும் அறியாமையிலும் இருக்கிறார்கள். அவர்கள் நரகத்தில் முகங்குப்புற இழுத்துவரப் படும் நாளில் அவர்களிடம் கூறப்படும், 'அனுபவியுங்கள் நரக நெருப்பை!' என்று.* (47,48)

*முஸ்லிம்கள் வேறு வகையான கூலியைப் பெறுவார்கள். 'இறை யச்சமுடையோர் சுவனங்களிலும் ஆறுகளிலும் தங்கியிருப்பார்கள். வலிமைமிக்க அரசனுக்கு அருகில், சத்தியத்தின் இருக்கையில் அவர்கள் அமர்ந்திருப்பார்கள்.* (54,55)'

❖ ❖ ❖

அத்தியாயம் 55

# அர்றஹ்மான்

## (அளவிலாக் கருணையாளன்)

*'அளவிலாக் கருணையாளன். (1)' இது அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்றாகும். பெரும்பாலும் இது 'அல்லாஹ்' என்ற பெயருடன் இணைந்தே வந்துள்ளது. 'நீர் கூறும், நீங்கள் அல்லாஹ் என்று அழையுங்கள் அல்லது அர்றஹ்மான் என்று அழையுங்கள் ... (17:110)'*

*அல்லாஹ்வின் அருட்கொடைகளில் ஒன்று, அவன் மனிதச் சமூகத்தை வழிகாட்டலின்றி, ஒரு நோக்கமின்றித் தடுமாறித் திரியுமாறு விட்டு விடவில்லை. இந்தக் குர்ஆன் முந்தைய தூதர்களுடைய போதனைகளின் சாரம்சத்தை உள்ளடக்கியதாகவும் மறுமைநாள்வரை வரக்கூடிய மக்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறது. மனிதச் சமூகத்துக்கு வழங்கப் பட்டுள்ள அருட்கொடைகளில் இறுதித் தூதருக்கு அருளப்பட்ட இந்தக் குர்ஆனே முதன்மையானது. 'அல்லாஹ் உமக்கு வேதத்தையும் ஞானத் தையும் அருளியுள்ளான். (4:113)'*

*இதனைக் கற்கக்கூடிய, மக்களுக்குக் கற்றுக்கொடுக்கக்கூடிய ஒவ் வொருவருக்கும் இது மகத்தான அருட்கொடைதான். நபியவர்கள் கூறி யுள்ளார்கள், 'உங்களில் சிறந்தவர், குர்ஆனைத் தாமும் கற்று மற்ற வருக்கும் கற்றுக்கொடுப்பவரே.' ஏனெனில், அவர்கள் தூதர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்கிறார்கள். 'அளவிலாக் கருணையாளன் குர் ஆனைக் கற்றுக்கொடுத்தான். (1,2)'*

*மனிதச் சமூகத்துக்கு வழங்கப்பட்டுள்ள தனித்தன்மைகளில் பல்வேறு மொழிகளின் மூலமாக வெளிப்படுத்தும் திறனும் ஒன்றாகும்.*

*பின்னர் அல்லாஹ், இந்தப் பிரபஞ்சம் நிலையான விதிகளால் கட் டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறான். எந்த*

நட்சத்திரமும் தான் விரும்புவது போன்று வானவெளியில் சுற்ற முடியாது. அவற்றுக்கென நிர்ணயிக்கப்பட்ட பாதை இருக்கிறது. அவை மிக நுணுக்கமான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அதே போன்றுதான் இந்தப் பூமியில் விளையக்கூடிய தாவரங்களும். அவை உயரமான தண்டையும் நீண்டு செல்லும் வேரையும் பெற்றுள்ளன. இரண்டும் ஒரு விதிக்குக் கட்டுப்பட்டவை. 'நாம் ஒவ்வொரு தாவரத்தையும் பொருத்தமான முறையில் முளைக்கச்செய்தோம். (15:19)'

இந்தப் பிரபஞ்சத்தின் பாகங்கள் கடிகாரத்தின் முட்களைப் போன்று காலத்தைக் கணக்கிடக்கூடியவை.

> சூரியனும் சந்திரனும் ஓர் ஒழுங்கின்படியே இயங்குகின்றன. செடி கொடிகளும் மரங்களும் அவனுக்குச் சிரம்பணிகின்றன. அவனே வானத்தை உயர்த்தி நீதியை நிலைநிறுத்தினான், நீங்கள் நீதி தவறி விடக் கூடாது என்பதற்காக. (5-8)

மனிதர்களின் ஒழுங்கின்மையால்தான் நீரிலும் நிலத்திலும் குழப் பங்கள் தோன்றுகின்றன. அவர்களின் வரம்புமீறலால்தான் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துகொண்டிருக்கிறது. ஆனாலும் பிரபஞ்சம் முழுமையாகப் படைப்பாளனின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அவன் அனுமதியளிக்கும் வரை அதன் சமநிலை சீர்குலைந்துவிடுவதில்லை.

நாம் நமக்கு அளிக்கப்பட்டுள்ள இந்தக் காலஇடைவெளியில் நீதியை நிலைநிறுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளோம். அது வியாபார கொடுக்கல் வாங்கல் விவகாரமாக இருந்தாலும் சரி அல்லது ஒருவருக்கொருவர் நாம் அளிக்க வேண்டிய உரிமைகளாக இருந்தாலும் சரி. 'நிறுவையை நிறுப்பதை நியாயமாகச் செய்யுங்கள், எடையைக் குறைத்துவிடாதீர்கள். (9)'

பேரீச்சம்பழங்களும் பயிர்களின் விளைச்சல்களும் அல்லாஹ்வின் அருட்கொடைகளில் உள்ளவையாகும். இனிப்பான அவற்றின் பழங்களுடன் விதைகளும் இருக்கின்றன. அவற்றை மூடியிருக்கும் உறைகள் காற்றில் அடித்துச்செல்லப்படுபவையாக இருக்கின்றன. உதாரணமாக, கோதுமையையும் அரிசியையும் மூடியிருக்கும் உறைகள். மனிதர்களில் பெரும்பாலோர் அவற்றையே உணவுகளாக உண்ணுகிறார்கள். அவை காய்ந்த பிறகு வைக்கோல்கள் கால்நடைகளுக்கு உணவாகின்றன. இன்னும், விரும்பக்கூடியவர்கள் அனுபவிக்கும் பொருட்டு மணம் வீசும் மலர்களும் காணப்படுகின்றன.

'ஆகவே, நீங்கள் இரு பிரிவினரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுப்பீர்கள்? (13)' இந்த வசனம் மட்டும் இந்த

அத்தியாயத்தில் முப்பத்தொரு தடவை இடம்பெற்றுள்ளது. இந்த உலகில் அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்று பொறுப்பு சாட்டப்பட்ட மனிதர்கள், ஜின்கள் என இரு சாராரையும் விளித்து உரையாடுகிறது.

இந்த அத்தியாயத்தைப் பின்வருமாறு நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

1. முதல் பகுதி, படைப்புகுறித்து பேசுகிறது.
2. இரண்டாம் பகுதி, இவ்வுலகம் அழிக்கப்பட்டு மனிதர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டுக் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனையைக் குறித்து பேசுகிறது.
3. மூன்றாம் பகுதி, முந்திக்கொண்டோரைக் குறித்து பேசுகிறது.
4. நான்காம் பகுதி, நல்லோர்களுக்கு அருகில் இருப்போரைக் குறித்து பேசுகிறது.

ஆதம் முதல் மனிதன் மண்ணிலிருந்தும் பின்னர் பிசுபிசுப்பான மண்ணிலிருந்தும் பின்னர் களிமண்ணிலிருந்தும் தட்டினால் சுட்ட மண்பாண்டத்தைப் போன்று சப்தம் உண்டாகும் மண்ணிலிருந்தும் படைக்கப்பட்டான் என்பதும் ஆதமின் பிள்ளைகள் விந்திலிருந்தும் பின்னர் இரத்தக் கட்டியிலிருந்தும் பின்னர் சதைத் துண்டிலிருந்தும் படைக்கப்பட்டார்கள் என்பதும் அறிந்த விசயமே.

இப்படித்தான் அவர்கள் படைக்கப்பட்டார்கள். விரைவில் மனிதர்கள் முழுப் பிரபஞ்சத்திலும் பரவிவிடுவார்கள். பின்னர், அவர்கள் அனைவரையும் மரணம் மிகைத்துவிடும். 'பூமியில் உள்ள அனைத்தும் அழியக் கூடியவையே! மகத்துவமும் கண்ணியமும் நிறைந்த உம் இறைவன் மட்டுமே நிலைத்திருப்பான். (26,27)' பின்னர், அவர்கள் விசாரணையை எதிர்கொள்வதற்காகக் கண்விழிப்பார்கள். அவர்களில் யாரும் அதிலிருந்து தப்பிவிட முடியாது. நல்லோர்கள் நிலையான இன்பங்களில் இருப்பார்கள். தீயோர்கள் தங்களின் செயல்களின் விளைவுகளை நோக்கி அழைத்துச்செல்லப்படுவார்கள்.

'குற்றவாளிகள் தங்களின் அடையாளங்களினால் அறியப்படுவார்கள். அப்போது அவர்களின் நெற்றி முடிகளும் பாதங்களும் பிடிக்கப்பட்டு நரகத்தில் எறியப்படுவார்கள். (41)' இந்தக் குற்றவாளிகள் பல நிலைகளைக் கடக்க வேண்டும். அவர்கள் ஒரு சமயம் தாங்கள் செய்த செயல்களைக் குறித்து கேட்கப்படுவார்கள். ஆனால், அவர்களின் விவகாரங்களில் தீர்ப்பளிக்கப்பட்டவுடன் அது அப்படியே செயல்படுத்தப்படும். அவர்கள் நரகத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படுவார்கள்.

குற்றவாளிகளைக் கண்டிக்கும் பொருட்டும் அவர்களின் இழி செயல்களை வெளிப்படுத்தும் பொருட்டும் இந்த வாசகம் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது: 'ஆகவே, உங்கள் இறைவனின் எந்தெந்த வல்லமைகளை நீங்கள் மறுப்பீர்கள்? (36)' இவ்வாறு தனித்துவமான முறையில் நிபந்தனைக்கும் பதிலுக்கும் மத்தியில் வேறுபாடு ஏற்படுத் தப்படுகிறது. அவர்களுடன் எந்த வகையான நடத்தை மேற்கொள்ளப் படும் என்ற விசயம் குறிப்பிடப்படுவதற்கு முன்னால் அவர்கள் அல் லாஹ்வின் விசயத்தில் செய்த பிழைகள் குறிப்பிடப்படுகின்றன.

> வானம் பிளந்து (ஸைத்தூன்) எண்ணெயைப் போல் சிவப்பாகி விடும். ஆகவே, உங்கள் இறைவனின் எந்தெந்த வல்லமைகளை நீங்கள் மறுப்பீர்கள்? அந்நாளில் மனிதர்களோ ஜின்களோ தம் பாவங்களைக் குறித்து விசாரிக்கப்பட மாட்டார்கள். (37-39)

கடைசியாக இடம்பெற்ற இந்த வாசகம் நிபந்தனைக்குப் பதிலாக அமைகிறது. வசனம் நிறைவடைவதற்கு முன்னரே மீண்டும் அந்த வசனம் இடம்பெறுகிறது. 'ஆகவே, உங்கள் இறைவனின் எந்தெந்த வல்லமை களை நீங்கள் மறுப்பீர்கள்? (40)'

பின்னர் மோசடியாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனையைக் குறித்த முழுமையான விவரம் இடம்பெறுகிறது. 'குற்றவாளிகள் தங்களின் அடையாளங்களால் அறியப்படுவார்கள். அப்போது அவர்களின் நெற்றி முடிகளும் பாதங்களும் பிடிக்கப்பட்டு நரகத்தில் எறியப்படுவார்கள். (41)' அல்லாஹ்வின் அருட்கொடைகளை அறிந்துகொண்டே நிராகரித்து நன்றிகெட்டத்தனமாக நடந்துகொண்டவர்கள்மீது இறைவன் எந்த அளவு கடுமையான கோபம் கொள்வான் என்பதைக் காட்டவே இந்த வசனம் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது. இதற்கு உதாரணமாக, ஒரு தந்தை தன்னுடன் நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்ளும் மகனைப் பார்த்து, 'மோசடியாளனே, நான் இழிவுபடுத்தப்படுகிறேனா? என் விவகாரங்கள் மறக்கடிக்கப்பட்டு என் உரிமைகள் வீணாக்கப்படுகின் றனவா? மோசடியாளனே! நன்றிகெட்டவனே! ...' என்று கூறுவதைப் போன்றதாகும்.

இந்த அத்தியாயம் இறையச்சமுடையோருக்காகத் தயார்படுத்தப் பட்டுள்ள சுவனங்களின் அழகிய வர்ணனையோடு நிறைவடைகிறது. அங்கு உயர்ந்த அந்தஸ்துடையோருக்கு இரண்டு சுவனங்கள் உண்டு. 'தம் இறைவனின் முன்னால் நிற்பதை அஞ்சியவருக்கு இரு சொர்க்கச் சோலைகள் உண்டு. (46)'

அதே போன்று, பண்புக்கும் யாரைக் குறித்து வர்ணிக்கப்படுகிறதோ அவர்களுக்கும் மத்தியில் மீண்டும்மீண்டும் இடம்பெறும் அந்த வசனம் இடம்பெறுகிறது. ‘அவற்றில் நாணும் விழிகளுடைய கன்னியர்கள் இருப்பார்கள். அவர்களை இதற்கு முன்னர் எந்த மனிதனும் ஜின்னும் தீண்டியிருக்க மாட்டார்கள். (56)’ ‘ஆகவே, நீங்கள் இரு பிரிவினரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுப்பீர்கள்? (57)’ ‘அவர்கள் மாணிக்கத்தையும் பவளத்தையும் போன்று இருப்பார்கள். (58)’

அனுபவிக்கும் அருட்கொடைகளுக்காகச் செய்யப்பட வேண்டிய கடமைகள் ஏராளமானவை. அவற்றை அனுபவித்துவிட்டு அளித்தவனை மறந்துவிடுவது பெரும் குற்றமாகும். அவர்கள் அதற்கான விலையை அளித்தே ஆக வேண்டும்.

அங்கு நம்பிக்கையாளர்களுக்கு இன்னும் இரு சுவனங்களும் இருக்கின்றன.

> அவற்றைத் தவிர இன்னும் இரு சோலைகளும் இருக்கின்றன. ஆகவே, நீங்கள் இரு பிரிவினரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுப்பீர்கள்? இரண்டும் கரும்பச்சை நிறமுடையவை. (62-64)

பரவியிருக்கும் பசுமையும் படர்ந்திருக்கும் நிழலும் இந்த வர்ணிப்பை மிகச் சரியானதாக ஆக்குகின்றன.

நைல் நதியின் பள்ளத்தாக்கும் புராத் நதியின் பள்ளத்தாக்கும் அவற்றில் மிகைத்திருக்கும் பசுமையினால் கருப்பு நிலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தச் சுவனங்கள் அனைத்தும் அவற்றுக்குரியவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியவை. அல்லாஹ் நம்மையும் அவர்களில் உள்ளவர்களாக ஆக்குவானாக.

❖ ❖ ❖

அத்தியாயம் 56

# அல்வாகிஆ

(நிகழக்கூடியது)

*அல்வாகிஆ என்பது அல்ஹாக்கா, அல்காரிஆ, அஸ்ஸாஆ போன்று மறுமைநாளின் பல்வேறு பெயர்களில் ஒன்றாகும். இந்த அத்தியாயம் எடுத்துரைக்கும் கருத்துகள் மிகத் தெளிவானவை. இந்த உலகத்தின் அழிவையும் விசாரணை நாளின் தொடக்கத்தையும் குறித்த சுருக்கமான செய்தியோடு அத்தியாயம் தொடங்குகிறது. பின்னர், மனிதர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டபிறகு அவர்கள், 'முந்திக்கொண்டவர்கள், வலப்புறம் உள்ளவர்கள், இடப்புறம் உள்ளவர்கள்.' என மூன்று வகையினராக இருப்பார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது.*

*அதற்குப் பிறகு மறுமைநாள் சத்தியமானது என்பதற்கும் அதனை மறுப்பது மடமைத்தனம் என்பதற்கும் ஐந்து ஆதாரங்களைக் குறிப்பிடுகிறது. மரணத்தின் மூலம் இந்த உலகை விட்டுவிட்டுச் செல்லும் மனிதனின் பயணம் எப்படி அமையும் என்பதோடும் முந்திக்கொண்டவர்கள், வலப்புறம் உள்ளவர்கள், இடப்புறம் உள்ளவர்கள் என மூன்று வகையான மனிதர்களும் வெவ்வேறு வகையான இருப்பிடங்களைப் பெறுவார்கள் என்பதோடும் அத்தியாயம் நிறைவடைகிறது.*

*வாழ்க்கையின் அலுவல்களிலும் இச்சைகளின் பிடியிலும் சிக்கிய பெரும்பாலான மனிதர்கள் தங்களின் நிகழ்காலத்தைத் தவிர வேறு எதையும் உணர்வதில்லை. அவர்களில் ஒருவர் அலட்சியமாகக் கூறுகிறார், 'மறுமைநாள் நிலைபெறும் என்று நான் நம்பவில்லை.' இன்னொருவர் கூறுகிறார், 'கருப்பைகள் வெளியேற்றுகின்றன. மண் அவற்றை விழுங்கிக்கொள்கின்றன. அவ்வளவுதான் வாழ்க்கை. காலத்தைத் தவிர வேறு எதுவும் நம்மை அழிக்க முடியாது.' மரணத்துக்குப் பிறகு எந்த வாழ்க்கையும் இல்லை என்று அவர்கள் சத்தியமிட்டுக் கூறுகிறார்கள்.*

‘மரணித்துவிட்டவர்களை அல்லாஹ் எழுப்ப மாட்டான் என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது உறுதியான சத்தியம்செய்கிறார்கள். (16:38)’

நாளை மரணிக்கப்போகிறவர் இன்று மரணிப்பவரைப் பார்க்கிறார். ஆனாலும் அவர் தம் தோழரிடம் எதிர்கால ஆசைகளைக் குறித்து பேசுகிறார். அவருக்கு முன்னால் இருக்கும் மரணத்தைக் கண்டு எந்தப் படிப்பினையும் பெறுவதில்லை. இப்படியே நூற்றாண்டுகள் கடந்து கொண்டே செல்கின்றன. மனிதர்கள் சுருட்டப்பட்டுக் கொண்டே செல்கிறார்கள். ஆனாலும் நிராகரிப்பாளர்கள் அதிகரித்துக்கொண்டுதான் செல்கிறார்களே அன்றி குறைந்தபாடில்லை. நிராகரிப்புக்கு இந்த உலகின் பல பாகங்களிலும் வலுவான குரல் இருக்கிறது.

திடீரென மறுமைநாள் நிகழ்ந்துவிடும். நாத்திகத்தின் குரல் ஊமையாகி அது தடம் தெரியாதவாறு அழிந்துவிடும். ‘நிகழக்கூடியது நிகழ்ந்துவிடும்போது, அது நிகழ்வதை நிராகரிப்பவர் எவரும் இல்லை. (1,2)’ மனிதன் இயல்பாகவே தர்க்கம் செய்யக்கூடியவனாக, பிடிவாதக்காரனாக இருக்கிறான். ஆனால், பயங்கரமான அந்த நிகழ்வு நிகழ்ந்துவிட்டால் அவனால் என்ன கூற முடியும்? பொய்யர்களின் தொண்டைகள் பேச முடியாதவாறு வறண்டுவிடும். அப்போது அவர்களால் வீணான எந்தப் பேச்சும் பேச முடியாது.

‘அது சிலரைத் தாழ்த்தக்கூடியதும் சிலரை உயர்த்தக்கூடியதும் ஆகும். (3)’ அரசர்கள், தலைவர்களில் பலர் அடிமைகளாக எழுப்பப்படுவார்கள். ஏனெனில், அவர்கள் அந்த நாளுக்காக எதனையும் தயார்படுத்தாதவர்களாக இருப்பார்கள். அடையாளம் தெரியாதவர்களாக, அறியப்படாதவர்களாக இருந்த பலர் அந்நாளில் சிகரங்களில் இருப்பார்கள். இந்த உலகில் ஆடையுடன் இருக்கக்கூடிய எத்தனையோ மனிதர்கள் மறுமை நாளில் ஆடையற்றவர்களாக இருப்பார்கள். அந்த நாள் சீர்படுத்தக்கூடிய நாள். பொய் அழிந்து சத்தியம் வெட்டவெளிச்சமாகிவிடும்.

குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர், ‘இது பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் உயர்வு, தாழ்வு ஆகும்.’ என்று கூறுகிறார்கள். ஹதீஸில் வந்துள்ளது, ‘மறுமைநாளில் மனிதர்கள் இளஞ்சிவப்பு கலந்த வெண்மையான தூய பூமியில் ஒன்றுசேர்க்கப்படுவார்கள். அதில் எந்தவித அடையாளமும் இருக்காது. அனைவரும் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனுக்கு முன்னால் செருப்பு அணியாதவர்களாக, நிர்வாணமானவர்களாக நிற்பார்கள்.’

மலைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும், ‘என் இறைவன் அவற்றைத் தூள்தூளாக்கிவிடுவான்.

பூமியை வெட்டவெளியாக்கி விடுவான்.' அதில் எவ்வித மேடுபள்ளத்தையும் நீர் காண மாட்டீர். (20:105-107)

இரண்டு கருத்துகளும் ஒன்று மற்றொன்றை நிறைவுபடுத்தக்கூடிய தாக இருக்கின்றன. இரண்டுக்குமிடையே எந்த முரண்பாடும் இல்லை. அப்போது இரண்டு வகையான அதிர்வுகள் நிகழும். ஒன்று சமூகத்தில் ஏற்படும் அதிர்வு. மனிதர்களிடையே காணப்படும் அசத்தியக் கொள் கைகள், அவர்கள் தங்களுக்குத்தாங்களே சூட்டிக்கொண்ட பட்டப் பெயர்கள், பரம்பரைகள் ஆகியவற்றை அது ஒன்றுமில்லாமல் ஆக்கி விடும். இரண்டாவது வகையான அதிர்வு நில அதிர்வாகும். 'பூமி பலமாகக் குலுக்கப்படும்போது, மலைகள் உடைபட்டுத் தூள்தூளாகிவிடும். அது பரப்பப்பட்ட புழுதியாகிவிடும். (4-6)'

மறுமைநாள் நிலைபெறும்போது ஏற்படும் பூகம்பத்தால் ஒவ்வொன் றும் தூள்தூளாகிவிடும். கடினமான பாறைகள் பறக்கும் தூசிகளாக மாறிவிடும். 'பூமி வேறு பூமியாக மாற்றப்படும் நாளில் வானங்களும் மாற்றப்படும். அடக்கியாளும் ஏகனாகிய அல்லாஹ்வுக்கு முன்னால் அவர்கள் அனைவரும் வந்துநிற்பார்கள். (15:48)'

பூமி மாற்றப்படுவதற்கு முன்னால் எவ்வளவு காலம் நாம் இங்கு தங்கியிருப்போம் என்று நமக்குத் தெரியாது. இங்கு காலத்தை நிர்ணயம் செய்வது முக்கியம் அல்ல. தெரிய வேண்டியது, இந்த நீண்ட வரலாற் றின் இறுதி விளைவு என்ன என்பதுதான்.

அந்த நாளில் ஆதமின் மக்கள் மூன்று பிரிவினராகப் பிரிக்கப்படுவார்கள் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

அப்போது நீங்கள் மூன்று பிரிவினராகிவிடுவீர்கள். வலப்புறத்தில் உள்ளவர்கள், எவ்வளவு சிறப்பானவர்கள் வலப்புறத்தில் உள்ளவர் கள்! இடப்புறத்தில் உள்ளவர்கள், எவ்வளவு மோசமானவர்கள் இடப்புறத்தில் உள்ளவர்கள்! முந்தியவர்கள் முந்தியவர்களே! அவர்கள் அருட்கொடைகள் நிறைந்த சுவனங்களில் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக இருப்பார்கள். (7-12)

இந்த அத்தியாயம், மனிதர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப் படுவது உண்மையே என்பதற்கு ஆதாரங்களைக் குறிப்பிடுகிறது. இந்தப் பிரபஞ்சத்தின் பல்வேறு விசயங்களிலிருந்தும் மனிதர்களின் அனுபவங் களிலிருந்தும் அது ஐந்து ஆதாரங்களைக் குறிப்பிடுகிறது.

ஒன்று, 'நாமே உங்களைப் படைத்தோம். ஏன் நீங்கள் ஏற்றுக்கொள் வதில்லை? (57)' ஆரம்பத்தில் படைத்தவனால் ஏன் மீண்டும் படைக்க

முடியாது? நான் முதன் முதலாக ஒரு வகுப்பை நடத்தும்போது கொஞ்சம் களைப்பை உணர்கிறேன். ஆனால், மீண்டும் அதே வகுப்பை நடத்துவது எனக்கு மிகவும் இலகுவானது.

இதற்கு அல்லாஹ் மற்றொரு வசனத்தில் பதிலளிக்கிறான்: 'அவனே படைப்பைத் தொடங்குகிறான். பின்னர் மீண்டும் அதனைப் படைக்கிறான். இது அவனுக்கு மிகவும் எளிதானது. (30:27)' அல்லாஹ்வுக்கு இலகுவானது, கடினமானது, மிக இலகுவானது என்று எதுவும் இல்லை. இந்த இலகு, கடினம் எல்லாம் மனிதர்களுக்குத்தான். ஆகவே, அவனைத் தூய்மைப்படுத்தும் பொருட்டு அடுத்த வாசகம் இடம்பெறுகிறது: 'வானங்களிலும் பூமியிலும் உள்ள உயர்தன்மைகள் அவனுக்கே உரியன. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (30:27)'

இந்த ஆதாரம் பல அத்தியாயங்களில் மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளது. இது மிக இயல்பானது. பிடிவாதமும் அறியாமையும் கொண்ட ஒருவனால் தவிர வேறு யாராலும் இதனை மறுக்க முடியாது.

> 'நாம் எலும்புகளாக, மண்ணோடு மண்ணாக ஆகிவிட்டாலுமா மீண்டும் புதிய படைப்பாக எழுப்பப்படுவோம்.' என்று அவர்கள் கேட்கிறார்கள். நீர் கூறும், 'நீங்கள் கல்லாகவோ இரும்பாகவோ ஆகிவிடுங்கள் அல்லது நீங்கள் பெரிதாக எண்ணும் ஒரு படைப்பாக ஆகிவிடுங்கள்.' அப்போதும் அவர்கள், 'எங்களை மீண்டும் படைப்பவன் யார்?' என்று கேட்பார்கள். நீர் கூறும், 'யார் உங்களை ஆரம்பத்தில் படைத்தானோ அவன்தான் ...' (17:49-51)

இந்தப் பிரபஞ்சத்தின் ஆரம்பத்தையும் முடிவையும் அறிந்து கொள்வதற்காகத் திருக்குர்ஆன் சிந்திக்கும்படி மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிறது. நாம் இந்தப் பூமியில் இருக்கிறோம். அப்படியென்றால் எப்படி வந்தோம்? மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதைக் குறித்து சிந்தித்துப்பார்ப்பவர், அதனைச் சாத்தியமற்ற ஒன்றாகக் கருதுவது வடிகட்டிய மடமைத்தனம் என்பதை அறிந்துகொள்வார்.

> அல்லாஹ் எவ்வாறு முதலில் படைப்பினைத் தொடங்கினான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பின்னரும் அவன் மீண்டும் படைப்பான். நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக எளிதானது. நீர் கூறும், 'பூமியில் சுற்றித்திரிந்து அல்லாஹ் எவ்வாறு படைப்பினைத் தொடங்கி, மீண்டும் அதனை உருவாக்குகிறான் என்பதைப் பாருங்கள்.' நிச்சயமாக அவன் எல்லாவற்றின் மீதும்

பேராற்றலுடையவன். அவன் தான் நாடியோரைத் தண்டிப்பான். தான் நாடியோர்மீது கருணை காட்டுவான். அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். (29:19-21)

இவையனைத்தும் இந்தச் சிறிய வசனத்தில் சுருக்கமாக எடுத்துரைக் கப்படுகிறது: 'நாமே உங்களைப் படைத்தோம். ஏன் நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை?'

இரண்டாவது ஆதாரம், முதன் முதலில் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவன் எந்தக் களைப்பையும் உணரவில்லை. அதனால் அவ னுடைய ஆற்றலும் செலவாகவில்லை. அவன் ஒவ்வொரு நாளும், மாறாக ஒவ்வொரு மணிநேரமும், இல்லை ஒவ்வொரு நொடியும் படைப்பு களைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறான். மனிதப் படைப்பில் இது தெளிவாக வெளிப்படுகிறது. மனித உடல் தொடர்ந்து புதிய அணுக்களை எதிர்கொண்டவண்ணம் இருக்கிறது.

பின்வரும் வசனத்தில் இந்த ஆதாரம் நிறுவப்படுகிறது:

நீங்கள் செலுத்துகின்ற விந்தைக் கவனித்தீர்களா? அதனை நீங்கள் படைக்கிறீர்களா அல்லது நாம் படைக்கிறோமா? நாம் உங்களி டையே மரணத்தை விதியாக்கிவிட்டோம். உங்களுக்குப் பதிலாக உங்களைப் போன்ற மற்றவர்களைப் படைப்பதற்கும் நீங்கள் அறியாத வடிவத்தில் உங்களை ஆக்கிவிடுவதற்கும் நாம் இயலாத வர்கள் அல்ல. (58-61)

விந்து வழியக்கூடியது, ஆச்சரியமானது. இழிவான இந்த நீர் இலட்ச க்கணக்கான உயிரணுக்களைக் கொண்டுள்ளது. அது ஒவ்வொன்றும் தனக்குள் மனிதனின் தனித்தன்மைகள் அனைத்தையும் உள்ளடக்கி யுள்ளது.

ஆரம்பக் காலத்திலிருந்தே இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்துவருகிறது. அந்நூர் என்ற அத்தியாயத்தில் சாப அழைப்பு தொடர் பான சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்ட அந்தப் பெண்ணைக் குறித்து நபியவர்கள் கூறினார்கள், 'இவளைக் கவனித்துவாருங்கள். இவள் கரிய விழிகளும் பெருத்த புட்டங்களும் தடித்த கால்களும் உடைய பிள்ளை யைப் பெற்றெடுத்தால் அது ஷரீக் இப்னு சஹ்மாவுக்கே உரியதாகும்.' என்று கூறினார்கள்.

எப்படி தந்தையினுடைய உடல்ரீதியான தன்மைகளும் அறிவு ரீதி யான, ஒழுக்க ரீதியான தன்மைகளும் விந்தின் வழியாகக் குழந்தைக்கு இடம்பெயர்கின்றன என்பதைக் கவனியுங்கள்.

*இதற்காக வல்லுனர்களைக் கொண்ட பெரும்பெரும் தொழிற்சாலை கள் உலக அளவில் இயங்குகின்றனவா? அப்படி ஒன்றும் இல்லை. இந்தப் பண்பு தன் மூலமான இரத்தத்திலிருந்து பெற்றுக்கொள்கிறது. இரத்தம் தனக்கானதை உணவிலிருந்து பெற்றுக்கொள்கிறது. உணவு தனக்கானதை மண்ணிலிருந்து பெற்றுக்கொள்கிறது.*

*இந்த நிலைகளை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கண்காணிப்பவன் அல்லாஹ்தான்.*

> *அவன் படைத்த ஒவ்வொரு பொருளையும் நேர்த்தியாகப் படைத் தான். அவன் மனிதப் படைப்பை களிமண்ணிலிருந்து தொடங்கி னான். பின்னர், அற்பத் துளியின் சாரத்திலிருந்து மனிதனின் சந்த தியை உருவாக்கினான். பின்னர், அவனைச் செம்மையாக்கி, தன் ஆன்மாவை அவனுள் ஊதினான். உங்களுக்குச் செவிப்புலனையும் பார்வைகளையும் உள்ளங்களையும் அமைத்தான். ஆனாலும் நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள்.* (32:7-9)

*திகைப்பூட்டும் விசயம் என்னவெனில், மனிதன் விந்துத்துளியின் ஒரு அணுவிலிருந்துதான் உருவாகிறான். மற்ற இலட்சக்கணக்கான அணுக்கள் அனைத்தும் வீணாகிவிடுகின்றன. இதன் மூலம், கர்வம் கொள்ளும் மனிதனுக்கு அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்போல: 'உன்னைப் படைப் பதிலும் உன்னைப் போன்ற இலட்சக்கணக்கானவர்களைப் படைப் பதிலும் எனக்கு எந்தச் சிரமமும் இல்லை.'*

*தான் மெய்யியலில் ஈடுபாடு கொண்டவன் என்று கூறி என்னிடம் தர்க்கம்செய்த ஒரு மூடனிடம் நான் இவ்வாறு கூறினேன்: 'விந்தைப் படைத்தது யார்? அதனைக் கருப்பையில் தங்கவைத்தது யார்? உன் தாய், தந்தை இருவருக்கும் அதுகுறித்து எதுவும் தெரியாது. நீ இப்போது வந்து நாத்திகம் பேசுகிறாய்!' 'உங்களின் முதல் படைப்பைப் பற்றி நீங்கள் அறிந்தே உள்ளீர்கள். பிறகு ஏன் அதனைக் கொண்டு நீங்கள் படிப்பினை பெறுவதில்லை?* (62)'

*மூன்றாவது ஆதாரம், நீங்கள் வாழக்கூடிய பூமி ஆச்சரியங்களால் நிரம்பியுள்ளது. அதில் படரும் கொடிகளைக் கொண்ட தோட்டங்களையும் படராத செடிகளைக் கொண்ட தோட்டங்களையும் காடுகளையும் எண் ணிக்கையற்ற விதவிதமான தானியங்களையும் பழங்களையும் எண்ணெய் தரக்கூடியவையும் மணம்வீசும் மலர்களையும் நீங்கள் காண்கிறீர்கள்.*

*இவையனைத்தையும் படைத்தவன் யார்? விவசாயி பூமியில் விதை விதைக்கிறான். அதற்குப் பிறகு என்ன நிகழும் என்று அவனுக்குத்*

தெரியாது. பேராற்றல் அதில் நிகழ்த்தும் அற்புதங்களை அவன் காண்கிறான். இறைவனின் அன்பளிப்புகளை எதிர்கொள்கிறான். இவற்றில் ஏதாவது ஒன்று படைத்தவனைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும், அல்லவா? இது வாழ்வு, மரணம் குறித்து உணர்ந்துகொள்வதற்கு அவனைத் தூண்டும், அல்லவா?

இந்த அத்தியாயத்தில் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதற்கு விதைகளில் காணப்படும் சான்றுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ‘நீங்கள் விதைக்கின்ற விதைகளைக் கவனித்துப்பார்த்தீர்களா? அதனை நீங்கள் முளைக்கச்செய்கிறீர்களா அல்லது நாம் முளைக்கச்செய்கிறோமா? நாம் நாடினால் அதனைக் கூளமாக ஆக்கிவிடுவோம். (63-65)’ இறந்தவை உயிர்ப்பிக்கப்படும் நிகழ்வு இந்த உலகில் மீண்டும்மீண்டும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ‘உயிரற்ற பூமி அவர்களுக்கு ஒரு சான்றாகும். நாமே அதனை உயிர்ப்பித்து அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகிறோம் … (36:33)’ அடக்கத்தலங்களிலிருந்து மனிதர்களை உயிர்கொடுத்து எழுப்புவது பல வகையான கனிமங்களையும் பொருள்களையும் கொண்டுள்ள மண்ணின் இருள்களிலிருந்து தாவரங்களை வெளிப்படுத்துவதைவிடக் கடினமான ஒன்றல்ல. ‘அல்லாஹ்வே பூமியிலிருந்து உங்களைச் சிறந்த முறையில் உருவாக்கினான். பின்னர், அவன் உங்களைப் பூமிக்குள் திரும்பக் கொண்டுசெல்வான். அதிலிருந்தே உங்களை வெளிப்படுத்துவான். (71:17,18)’ வேறு அத்தியாயங்களில் இன்னும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

> நாம் பூமியை விரித்து அதில் மலைகளை ஊன்றியுள்ளோம். அதில் எல்லா வகையான அழகிய தாவரங்களையும் முளைக்கச்செய்துள்ளோம். இது நம் பக்கம் திரும்பக்கூடிய ஒவ்வொரு அடியானுக்கும் படிப்பினையாகவும் நினைவூட்டலாகவும் இருக்கிறது. (50:7,8)

இங்கு தவ்பா என்ற வார்த்தை அறிவின் விழிப்பைக் குறிக்கிறது. அவன் அலட்சியமாக இருந்தான். பின்னர் விழித்துக்கொண்டான்.

ஆம். அல்லாஹ்வின் சந்திப்புக்காகவும் விசாரணையை எதிர்கொள்வதற்காகவும் மனிதன் மீண்டும் உயிர்பெற்று எழுவான், சேறும் சகதியும் நிரம்பிய மண்ணிலிருந்து இனிப்பு, எண்ணெய், கார்போஹைட்ரேட் ஆகியவற்றை உள்ளடக்கிய, பல்வேறு நிறங்களைக் கொண்ட பயிர்கள் வெளிப்படுவது போன்று. ஒவ்வொரு நிமிடமும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதற்கான ஆதாரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் மனிதன் அதனை நிராகரிப்பதற்கு அழைப்பு விடுக்கவே செய்கிறான்.

*தன்னுடைய செயல்பாடுதான் விளைச்சலுக்குக் காரணம் என்று விவசாயி எண்ணவும் செய்கிறான். அல்லாஹ் அவனுக்குத் தெளிவு படுத்துகிறான், அவன் நாடினால் எதை அவன் உருவாக்கினானோ அதை அவன் குப்பையாக ஆக்கிவிடுவான்.*

> *நாம் நாடினால் அதனைக் கூளமாக ஆக்கிவிடுவோம். பின்னர் நீங்கள் புலம்பிக்கொண்டே இருப்பீர்கள், 'அந்தோ, நாங்கள் அழிந்து விட்டோமே! மாறாக நாங்கள் எதையும் பெறாதவர்களாக ஆகி விட்டோமே!' என்று.* (65-67)

*பூமியிலிருந்து தாவரங்களை முளைக்கச்செய்வதைப் போன்றதுதான் இறந்த உடல்களை உயிர்கொடுத்து எழுப்புவதும். அதில் படைப்பாளனின் வல்லமைதான் வெளிப்படுகிறது.*

*மறுமைநாளில் ஆன்மாக்களுக்குத்தான் கூலி வழங்கப்படும் என்று சிலர் கூறுகிறார்கள். இந்தக் கருத்து சரியானதா?*

*மனிதன் என்பவன் உடலும் ஆன்மாவும் கொண்டவன். உடலை அழித்துவிட்டு, உடலின் இயல்பான தேவைகளைப் புறக்கணித்துவிட்டு மனிதனால் உயர்ந்த இடத்தை அடைய முடியாது. உடலை வருத்திக் கொண்டு ஆன்மாவை உயர்த்துவதற்கு நான் குர்ஆனிலோ ஹதீஸிலோ எந்த ஆதாரத்தையும் காணவில்லை.*

*ஆம். கடமையாக்கப்பட்ட நோன்பு இருக்கிறது. நாம் அதில் பசியோடும் தாகத்தோடும் இருக்கிறோம். நீண்ட நெடிய தொழுகைகளும் இருக்கின்றன. அதனால் நம்முடைய பாதங்கள் வீங்கிப்போகின்றன. சில சமயங்களில் மனிதன் வியர்வை சிந்தி செய்யும் தொழில்தான் அவனுக்கு வாழ்வாதாரமாக அமைகிறது. சில சமயங்களில் அவனுடைய உயிரை அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணிக்க நேர்கிறது. இந்த விசயத்தில் இப்னு றூமியின் பின்வரும் கவிதை அப்படியே உண்மையாகிறது:*

> *''உயிரறுந்து சடலம் மண்ணின் கீழ் சாய்ந்தாலும்*
> *ஆன்மா தரைவிட்டு அல்லாஹ்விடமே உயர்கிறது''*

*ஆனால், இவையனைத்தும் அல்லாஹ் மனிதனுக்கு உடல்ரீதியாகவும் ஆன்மாரீதியாகவும் அளிக்கும் சோதனையின் நோக்கமாகும். இந்தச் சோதனையில் ஆன்மா பங்குபெறும் அளவுக்கு உடலும் பங்குபெறுகிறது. அது, தான் அடைந்ததை உணர்வுக்குக் கடத்துகிறது. உணர்வுடன்தான் அது அல்லாஹ்வின் திருப்திக்காக முன்னெடுக்கப்படும் செயலாக மாறுகிறது.*

*உடலின் வலியை நீக்கும் பொருட்டு மனிதனுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டுவிட்டால் மனிதன் எந்த வலியையும் உணர்வதில்லை. அதில் அவனுக்கு என்ன சிறப்பு இருக்கிறது!*

*மனிதன் தன்னுடைய தனித்தன்மைகளைக் கொண்டே வேறுபடு கிறான். அல்லாஹ் அவனை தன் கரத்தால் படைத்தான். ஒரு ஆணிடமோ பெண்ணிடமோ, 'உன் உடல் இழிவானது, அதனை நீ வருத்த வேண் டும்; இழிவுபடுத்த வேண்டும்' என்று கூறுவதற்காக அவன் மனிதனை அழகிய வடிவில் படைக்கவில்லை.*

*அல்லாஹ் ஆதமைப் படைத்தபோது அவரிடம் கூறினான்: 'ஆதமே, நீரும் உம் மனைவியும் சொர்க்கத்தில் வசியுங்கள். அங்கே நீங்கள் விரும் பியவாறு தாராளமாகப் புசியுங்கள். (2:35)' இந்த அனுமதியில் உடலை வருத்த வேண்டும் என்று எங்கே கூறப்பட்டிருக்கிறது?*

*அல்லாஹ் தூதர்களைப் படைத்தான். அவர்களைப் படைப்புகளில் உன்னதமானவர்களாக ஆக்கினான். அவர்களிடம் கூறினான்: 'தூதர் களே, தூய்மையானவற்றை உண்ணுங்கள். நற்செயல் புரியுங்கள். நீங்கள் செய்பவற்றை நான் நன்கறிவேன். (23:51)' இந்தக் கட்டளையில் இழப்பின் அடையாளங்கள் எங்கே இருக்கின்றன?*

*அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்குத் தூய்மையான உணவுகளை இலகுவாக்கித் தந்துள்ளான். அவர்களிடம் அவன் விரும்புவதெல்லாம் நன்றியைத்தான். 'நம்பிக்கையாளர்களே, நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையான உணவுகளையே உண்ணுங்கள். நீங்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்குபவர்களாக இருந்தால் அவனுக்கே நன்றி செலுத்துங் கள். (2:172)' இதில் உடலை இழிவுபடுத்த வேண்டும் என்றோ வருத்த வேண்டும் என்றோ ஏதேனும் கட்டளை இருக்கிறதா?*

*ஆதமின் மக்கள் இந்த உலகில் செய்யும் நீண்ட பயணத்துக்குப் பிறகு மீண்டும் அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்புவார்கள். 'ஆரம்பத்தில் படைத்தவாறே நாம் மீண்டும் படைப்போம். இது நாம் நம்மீது கடமை யாக்கியுள்ள வாக்குறுதியாகும். (21:104)'*

*இந்தத் திரும்புதல் உடல்களின்றி ஆன்மாக்களுடன் மட்டும் அல்லது ஆன்மாக்களின்றி உடல்களுடன் மட்டுமா இருக்கும்?*

*நிச்சயமாக இது மடத்தனமான பார்வையாகும்.*

*மனிதர்கள் அதே மனிதர்கள்தாம். பாவங்களில் அல்லது நற்செயல் களில் ஈடுபட்ட தங்களின் உடல்களுடனும் உணர்வுகளுடனும் அவர்கள்*

உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். அவர்கள் மறுமையில் தாம் செய்த செயல்களை மறுக்கும்போது அவர்களின் உறுப்புகள் பேசி அவர்கள் பொய் கூறுகிறார்கள் என்பதை நிரூபிக்கும்.

> இறுதியில் அவர்கள் அங்கு வந்ததும் அவர்களின் செவிகளும் கண்களும் தோல்களும் அவர்களுக்கு எதிராக அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைக் குறித்து சாட்சி கூறும். அவர்கள் தம் தோல்களிடம், 'எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?' என்று கேட்பார்கள். (41:20,21)

இந்த உலகில் சிரமங்களையும் அர்ப்பணிப்பையும் உணரும் மனிதன் மறுமையில் நிரந்தரமான இன்பங்களை வெகுமதியாகப் பெறுவான். தப்றானீயிடமிருந்து இப்னு கஸீர் அறிவிக்கிறார்: 'நம்பிக்கை கொண்ட பெண்கள் சுவனங்களில் ஹூறுல் ஈன்களை விடச் சிறந்தவர்களாக இருப்பார்கள். அப்போது உம்மு சலமா கேட்டார், எதன் காரணமாக அவர்கள் அப்படி இருப்பார்கள்? நபியவர்கள் கூறினார்கள், அவர்களின் தொழுகையினாலும் நோன்பினாலும் வணக்க வழிபாட்டினாலும் அவர்கள் சிறந்தவர்களாக இருப்பார்கள்.'

இந்த ஹதீஸில் நம்பிக்கை கொண்ட பெண்கள் கூறுவதாகப் பின்வரும் வாசகமும் இடம்பெறுகிறது: 'நாங்கள் நிரந்தரமாக இருக்கக் கூடியவர்கள். ஒருபோதும் மரணிக்க மாட்டோம். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கக்கூடியவர்கள். ஒருபோதும் நிராசையடைய மாட்டோம். நாங்கள் நிலையாக தங்கியிருப்பவர்கள். ஒருபோதும் பயணம்செய்ய மாட்டோம். அறிந்துகொள்ளுங்கள், நாங்கள் திருப்தியடைந்தவர்கள். ஒருபோதும் அதிருப்தியடைய மாட்டோம். நற்செய்தி பெற்றுக்கொள்ளட்டும், யாருக்காக நாங்கள் இருந்தோமோ, எங்களுக்காக யார் இருந்தாரோ.'

இந்த உலகில் உழைத்தவர்கள் மறுமையில் நிம்மதியாக இருப்பார்கள்.

'உடல்கள் அழிந்துவிடும், மறுமையின் இன்பங்களை ஆன்மாக்கள் தான் அனுபவிக்கும், நற்கூலியும் தண்டனையும் உள்ளம் உணரும் நிம்மதியையும் கவலையையும் போன்றது.' போன்ற கருத்துகள் அனைத்தும் எவ்வித அடிப்படையுமற்ற தவறான கருத்துகளாகும்.

இது இந்த உலகில் உருவாக்கப்பட்ட மதங்களிலிருந்து கிறிஸ்தவத்துக்குள் ஊடுருவிய கருத்தாகும். சிலை வழிபாடு பல மதங்களில் ஊடுருவி அவற்றின் அடித்தளங்களைத் தகர்த்துவிட்டது.

விசித்திரம் என்னவென்றால், துறவறத்தையும் உடலினை வருத்துவதையும் கொள்கையாகக் கொண்டவர்கள்தாம் நவீன நாகரிகத்துக்கு

முன்னால் தோல்வியுற்று மண்டியிட்டவர்களாக நிற்கிறார்கள். அந்த நாகரிகம் தம் இச்சைகளைத் தணித்துக்கொள்வதில் வரம்புமீறிக் கொண்டிருக்கிறது. முந்தைய அரசர்களுக்குக்கூடக் கிடைக்காத இன்பங்களையெல்லாம் சாதாரண குடிமகன்களுக்கும் அது இலகுபடுத்திக் கொடுத்துவிட்டது. இவ்வாறு அது மனிதர்களைப் பாவங்களை நோக்கி இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.

நம் காலத்தில் நோபல் பரிசு பேரறிஞர்களால் விரும்பப்படுகின்ற ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம். கலை, இலக்கிய உலகில் பெரும் மதிப்பைப் பெற்றுத்தரும் அந்தப் பரிசு மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியது. ஆனாலும் இந்த இலக்கிய கௌரவம் மட்டுமே பசிக்கு உணவாக, பயத்திலிருந்து பாதுகாக்கும் கேடயமாக அமையாது. ஆகவேதான், அதனுடன் பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது.

மறுமையில் கூலி எவ்வாறு வழங்கப்படும் என்பதை இன்னும் விளக்கமாகப் பார்ப்போம். உடலின் ஆசைகள் வரம்புக்குட்பட்டது. அதன் வரம்புமீறும் பண்புகள் மறைந்தவுடன் அதன் தேவைகளும் குறைந்துவிடும். ஆகவே, 'அது எவ்வாறு ஆன்மாவுக்கு வழங்கப்படும் கூலியைவிடச் சிறந்ததாக இருக்க முடியும்?' என்று சிலர் கூறுகிறார்கள். நிச்சயமாக இல்லை. வழங்கப்பட்ட வெவ்வேறு திறமைகளுக்கும் அவர்கள் செய்த முயற்சிகளுக்கும் ஏற்பக் கூலிகளும் வெவ்வேறானவையாக இருக்கும். அவற்றுள் சில சிலவற்றைவிட உயர்ந்தவை.

உங்களுக்கு ஒரு உளப்பூர்வமான பணிவிடையாளர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அவருக்கு உணவுத்தட்டை அளிக்கிறீர்கள். அவர் உங்களைப் பார்ப்பதற்கு முன்னர் அந்தத் தட்டைத்தான் பார்க்கிறார். அவர் உங்களுக்கு நன்றி சொன்னாலும் அவரது பார்வை தட்டையும் அதில் உள்ளவற்றையும் தாண்டவில்லை. உங்களை அறிந்த, உங்களைக் கண்ணியப்படுத்துகின்ற, மக்களிடம் உங்களை அறிமுகப்படுத்துகின்ற இன்னொருவர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு முன்னால் நீங்கள் உணவுத்தட்டை வைத்தால் அவரது பார்வை உங்களை நோக்கியே இருக்கும். அவர் உங்களிடமிருந்து உணவுத்தட்டை வாங்கும்போதுகூட உங்களின் புத்தகங்களிலிருந்து ஏதேனும் ஒன்று தனக்கு வழங்கப்பட வேண்டுமே என்று ஆசை கொள்வார். இந்த இருவரும் சமமாவார்களா?

இறை நம்பிக்கையாளர்களில் சிலர் இறைவனைக் கண்ணியப்படுத்துவதில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள். அதனால் அவர்கள் நிரந்தரமான மகிழ்ச்சியில் இருப்பார்கள். தங்கள்

இன்பத்திலும் துன்பத்திலும் அவர்கள் தங்கள் இறைவனையே முன்னோக்கியிருப்பார்கள்.

ஆனாலும் இன்பமும் வலியும் உள்ளம் உணரக்கூடிய தன்மைகள்தாம். எந்த மனிதனும் அவற்றைவிட்டு விலகியிருக்க முடியாது. நம்பிக்கையாளர்களின் பண்புகள்குறித்து வர்ணிக்கப்படும்போது அவர்கள் ஒருபோதும் மார்க்கத்தின் ஒழுங்குகளை உடைக்க மாட்டார்கள் என்றும் அல்லாஹ் விதித்த வரம்புகளை மீற மாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

அல்லாஹ் அவர்களைக் குறித்து கூறுகிறான்: 'யார் நரகத்தைவிட்டு அகற்றப்பட்டுச் சுவனத்தில் நுழைவிக்கப்படுகிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார். (3:185)' அவர்களில் யாரும், 'சுவனம் என்றால் என்ன? அதன் இன்பங்கள் என்றால் என்ன? நாங்கள் முகத்தைக் காணவே விரும்புகிறோம்.' என்றெல்லாம் கூற மாட்டார்கள். இவ்வாறு கூறுவது பலவீனமான கருத்தாகும்.

ஸக்கூம் மரத்தின் நிழலிலிருந்து யாராவது அல்லாஹ்வின் முகத்தைக் காண விரும்புவாரா? அல்லாஹ் நம்பிக்கை கொண்ட தன் அடியார்களுக்காகத் தன் திருப்தியை வெளிப்படுத்துவான். அவர்கள் சுவனத்தின் ஆடைகளை அணிந்து கொண்டும் அதன் நிரந்தரமான நிழலில் சென்று கொண்டும் இருப்பார்கள்.

நாம் மேற்கண்ட வரிகளில் பின்வரும் வசனத்தின் விளக்கத்தைத்தான் குறிப்பிட்டுள்ளோம்:

> நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் சுவனச் சோலைகளை அல்லாஹ் வாக்களித்துள்ளான். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். நிலையான சுவனங்களில் தூய்மையான வசிப்பிடங்களும் உண்டு. ஆயினும், இவையனைத்தையும் விட அல்லாஹ்வின் திருப்தியே மேலானது. அதுவே மாபெரும் வெற்றியாகும். (9:72)

இறைவனின் திருப்தி எல்லா இன்பங்களையும்விட மிக உன்னதமானது, கண்குளிர்ச்சி தரக்கூடியது. ஆனாலும் நாம் ஞானம்மிக்க இறைவனின் வார்த்தைகளுடன் மோசமான முறையில் நடந்துகொள்வதையே நிராகரிக்கிறோம்.

மறுமையில் வழங்கப்படும் கூலியும் தண்டனையும் உடல் ரீதியானதும் ஆன்மா ரீதியானதும் ஆகும் என்பதில் நம்முடைய அறிஞர்கள் ஒருமித்த கருத்து கொண்டுள்ளார்கள். ஏராளமான வசனங்களும் ஹதீஸ்களும் இந்தக் கருத்தையே அழுத்தம்திருத்தமாகக் கூறுகின்றன.

இந்த விசயத்தில் சில நல்ல மனிதர்களும் தவறிழைக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனதின் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு மக்களின் விவகாரங்களில் பொதுவான கட்டளையை வழங்கிவிடுகிறார்கள். இது உகந்த செயலன்று.

ஈசாவும் யஹ்யாவும் மணமுடிக்கவில்லை என்பதை நாம் அறிவோம். ஆனாலும் இரு தூதர்களும் திருமணத்துக்கு எதிராக எந்தக் கருத்தையும் கூறவில்லை. துறவறத்தை வலியுறுத்தவில்லை. ஏனெனில், அவர்கள் வாழ்வை அழிப்பதற்காக வரவில்லை. அவர்கள் திருமணம் முடிக்காமல் இருந்தது அவர்களின் தனிப்பட்ட சூழலின் காரணமாகத்தான்.

இப்னு தைமிய்யா மணமுடிக்காமல்தான் வாழ்ந்தார். அதே போன்று, ஜமாலுத்தீன் ஆஃப்கானியும் மணமுடிக்காதவராகவே இருந்தார். ஒருவருக்கும் அவர்கள் துறவறத்தைப் பரிந்துரைக்கவில்லை.

இன்னும், முஸ்லிம் அறிஞர்களில் சிலர் சைவ உணவு மட்டுமே உண்ணக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அல்லாமா முஹம்மது ஃபரீது வஜ்தீ. இது அவர்களின் இயல்பு. அசைவ உணவு உண்பது ஒன்றும் மார்க்கம் வலியுறுத்தும் கடமைகளில் ஒன்றல்ல. ஆனால், யாரேனும் தம் இயல்பை மார்க்கமாக ஆக்க முயன்றால் நாம் அதனை முழுமையாக எதிர்ப்போம். இந்த மடமைத்தனத்தைத்தான் அபுல் அஃலா மஅர்ரீ செய்தார். அவர் கூறுகிறார்: ‘அறிவிலும் மார்க்கத்திலும் நோயுற்றவனாக நீ ஆகிவிட்டாய். ஆரோக்கியம் குறித்த சரியான விசயங்களை அறிந்துகொள்வதற்காக நீ என்னைச் சந்தி.’

தம்முடைய கவிதையில் கால்நடைகள், பறவைகளின் இறைச்சியைத் தடைசெய்கிறார். இன்னும் ஒருபடி மேலே சென்று தேனையும் தடைசெய்யப்பட்டதாக ஆக்குகிறார்.

இன்னும் சில அறபு இலக்கியவாதிகள், ‘சுவனம் என்பது ஒரு காய்கறிச் சந்தை அல்ல.’ என்று குறிப்பிடுகிறார்கள். அவர்கள் இதன் மூலம் ‘கூலி என்பது ஆன்மாவுக்குத்தான்.’ என்று கூறுகிறார்கள்.

இத்தகைய கருத்துகளால் கவரப்பட்ட மக்களை நம்முடைய வரலாற்றில் நாம் காணவே செய்கிறோம். அவர்கள் இதனை உயர்ந்த கருத்தாக எண்ணுகிறார்கள். இது வடிகட்டிய அறியாமையாகும். நபித்தோழர் அனஸ் இப்னு நள்ர் தம் இறைவனை, தமக்கு வாக்களிக்கப்பட்ட கூலியைக் கண்டார். உஹதுப் போரில் தோல்வியுற்றவர்களின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்து, தனியொருவராக இணைவைப்பாளர்களை நோக்கிச் சென்று போரிட்டார். தம் உடலில் விழுந்த வாள்வீச்சுகளைப் பொறுமையுடன்

தாங்கிக்கொண்டார். 'நான் உஹுது மலையின் பின்னாலிருந்து சுவனத்தின் வாடையை உணர்கிறேன்' என்று கூறியவாறே முன்னோக்கிச் சென்றார்.

மகத்தான இந்த நம்பிக்கையாளர் மூடநம்பிக்கையாளரா? அவரைக் குறித்துதானே இறைவனே இவ்வாறு கூறினான்:

> நம்பிக்கையாளர்களில் இப்படியும் சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார்கள். அவர்களில் சிலர் தம் இலட்சியத்தை அடைந்து விட்டார்கள். சிலர் அதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். (33:23)

தம் கரத்தால் இஸ்லாத்தின் கொடியைப் பற்றிக்கொண்டிருந்த நபித் தோழர் ஜாஃபர். அவரது தோள் புஜங்கள் வெட்டப்பட்ட பிறகே அந்தக் கொடி அவரது கையிலிருந்து கீழே விழுந்தது. உடனே விரைந்து இன்னொரு வீரர் அந்தக் கொடியைப் பற்றிக்கொண்டார்.

அவர் உயிர்த்தியாகம் செய்யும் வேட்கை கொண்டவராக, சுவனத்தின் நறுமணமும் குளிர்ச்சியான அதன் நீரும் நெருக்கமாக உள்ளன என்று கூறியவராக முன்னோக்கிச் சென்றார்.

இந்த மனிதர் உணர்ந்தது வெறுமனே கற்பனையா? அல்லது, அவரது சிந்தனைக் குறைபாட்டின் விளைவா? இப்படித்தான் அவர்கள் வாதிடுவார்களா?

இஸ்லாம் குறித்து பேசக்கூடிய படித்த இளைஞர்களில் பெரும்பாலோர் குர்ஆனையோ நபிமொழிகளையோ அறியாதவர்கள். மௌனமாக இருப்பதே அவர்களுக்குச் சிறந்தது.

தங்கத்தால் ஆன சுவனத்தையும் எரியக்கூடிய நரகத்தையும் விமர்சித்து கிறிஸ்தவ மிஷனரிகள் எழுதிய ஒரு கட்டுரையை வாசித்தேன். இஸ்லாம் விவரிக்கக்கூடிய உடல்ரீதியான இன்பங்களை அந்தக் கட்டுரை மிகக் கடுமையாகச் சாடியது. இவர்கள்தாம் இந்தப் பூமியில் உருவாக்கப்பட்ட கொள்கைகளாலும் வஹீயோடு தொடர்பற்ற தத்துவங்களாலும் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் மனிதச் சமூகத்துக்கு இதுபோன்ற கருத்தின் மூலம் என்ன நன்மைகளை அளித்தார்கள்?

இதன் மூலம் நவீன நாகரிகத்தை மிகைத்துவிட்டார்களா? அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுவிட்டார்களா? பொதுமக்களையும் முக்கியப் பிரமுகர்களையும் இச்சைகளை நசுக்கக்கூடிய வலுவான ஆன்மாக்களைப் பெற்றவர்களாக ஆக்கிவிட்டார்களா? மனித மனதுக்குச்

*சிகிச்சையளிப்பதில் அவர்கள் தவறிழைத்துவிட்டார்கள். அவர்கள் அதன் பூட்டுகளைத் திறக்கும் சாவிகளை அறிந்திருக்கவில்லை. பயனற்ற மதிப்பீடுகள் அவர்களின் உள்ளத்தையும் அறிவையும் ஆக்கிரமித்துவிட்டன. அது அறிவுடையோரை மார்க்கத்தைவிட்டும் தடுக்கக்கூடிய ஒன்றாக ஆகிவிட்டது.*

*மனிதனின் ஆன்மாவையும் உடலையும் ஒத்துக்கொள்ளும் போதனைகளால் மட்டுமே அவனைச் சீர்படுத்த முடியும். இறைத்தூதர்கள் இப்படிப்பட்ட போதனைகளையே கொண்டுவந்தார்கள். மூசா தம்முடைய சமூகத்துக்கு மன்னிப்பு வேண்டியவராகக் கூறுகிறார்:*

*'ஆகவே, நீ எங்களை மன்னித்து எங்கள்மீது இரக்கம் காட்டுவாயாக. நீயே மிகச் சிறந்த மன்னிப்பாளன். எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மையை எழுதிவிடுவாயாக. நாங்கள் உன் பக்கமே மீண்டுவிட்டோம்.'* (7:155,156)

*அதற்கு முன்னர் இப்றாஹீம் தம் இறைவனிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்:*

*'என் இறைவா, எனக்கு மதிநுட்பத்தை வழங்குவாயாக. என்னை நல்லோர்களுடன் சேர்த்துவைப்பாயாக. பிற்காலத் தலைமுறையினரிடையே எனக்கு நற்பெயரை ஏற்படுத்துவாயாக. என்னை அருட்கொடைகள் நிரம்பிய சுவனத்தின் வாரிசுகளில் ஒருவராக ஆக்குவாயாக. என் தந்தையை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக அவர் வழிகெட்டவர்களில் ஒருவராக இருக்கிறார். மனிதர்கள் அனைவரும் உயிர்கொடுத்து எழுப்பப்படும் நாளில் என்னை இழிவுபடுத்திவிடாதே. அந்நாளில் செல்வமோ பிள்ளைகளோ பயனளிக்காது, தூய்மையான உள்ளத்தோடு அல்லாஹ்விடம் வருபவரைத் தவிர. இறையச்சமுடையோருக்குச் சுவனம் அருகில் கொண்டுவரப்படும். வழிகெட்டவர்களுக்கு நரகம் வெளிப்படுத்தப்படும்.'* (26:83-91)

*இந்த அத்தியாயத்தில் சுவனவாசிகள் இரு வகையினராகப் பிரிக்கப்படுகிறார்கள். முதல் வகையினர், நன்மைகளைக் கொண்டு முந்திக் கொண்டவர்கள். இரண்டாவது வகையினர், போதுமான நன்மைகளைக் கொண்டு வெற்றிபெற்றவர்கள். மற்றவர்கள் இடப்பக்கம் உள்ளவர்கள். குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர், இந்த மூன்று வகையினரும் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டவர்கள்தாம் என்று கூறுகிறார்கள்:*

*அவர்களில் சிலர் தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டார்கள். அவர்களில் சிலர் நடுநிலையாளர்களாக இருக்கிறார்கள். அவர்களில்*

சிலர் அல்லாஹ்வின் அருளால் நன்மையின் பக்கம் முந்தக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். (35:32)

இது தவறான கருத்தாகும்.

இந்த அத்தியாயம் மனிதர்கள் அனைவரையும் குறித்து பேசுகிறது. அவர்களில் நம்பிக்கையாளர்கள், நிராகரிப்பாளர்கள் என அனைவரும் உள்ளடங்குவார்கள். ஆனால் மேற்கண்ட வசனம் முஸ்லிம்களில் உள்ள வகையினரைக் குறித்து பேசுகிறது. வசனத்தின் முந்தைய பகுதி இதனைத் தெளிவாக அறிவிக்கிறது. 'பின்னர், நம் அடியார்களில் நாம் தேர்ந்தெடுத்துக்கொண்டோரை அவ்வேதத்துக்குரியவர்களாக ஆக்கினோம்.' இந்த அத்தியாயம் நன்மைகளைக் கொண்டு முந்தியவர்களைக் குறித்தே, 'அவர்களில் பெரும்பாலோர் முன்னோர்களிலிருந்தும் சிலர் பின்னோர்களிலிருந்தும் இருப்பார்கள். (13,14)' என்று குறிப்பிடுகிறது.

முன்னோர்கள் என்பது நபியவர்களுக்கு முன்னால் முந்தைய இறைத் தூதர்களுடன் வாழ்ந்தவர்களைக் குறிக்கும் என்றும் பின்னோர்கள் என்பது முஸ்லிம்களைக் குறிக்கும் என்றும் சிலர் கூறுகிறார்கள். முந்தைய தூதர்களும் சமூகங்களும் எண்ணிக்கையில் அதிகமானவை என்பதால் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.

இங்கு முஹம்மது நபியவர்களின் சமூகமே குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாம் கருதுகிறோம். முன்னோர்கள் என்றால் நேர்வழியில் சென்ற நம்முடையே முன்னோர்களே ஆவர். அவர்கள்தாம் தங்களின் சொல்லாலும் செயலாலும் இந்த உலகத்தின் பல பாகங்களிலும் இஸ்லாத்தைப் பரப்பினார்கள். 'பிந்தையவர்களில் குறைவானவர்கள்.' என்பது பிற்காலத்தில் எதிரிகளும் எதிர்ப்பும் மிகைத்த சூழல்களில் தங்களின் இறையச்சத்தின் மூலம் தனித்துநிற்பவர்களைக் குறிக்கும்.

முந்தைய தூதர்களுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவங்கள் அவர்களின் காலத்துக்கு, அவர்கள் வாழ்ந்த குறிப்பிட்ட இடத்துக்கு உட்பட்டவையாக, அவர்களோடு முடிந்துவிடக்கூடியவையாக இருந்தன.

தவ்றாத்தின் மீது நம்பிக்கை கொண்ட மூசாவின் தோழர்களையும் இன்ஜீலின் மீது நம்பிக்கை கொண்ட ஈசாவின் தோழர்களையும் நாம் மதிக்கிறோம். ஆனாலும் அவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவர்கள். அவர்களின் போதனைகள் மறைந்துவிட்டன. வஹீக்குத் தொடர்பற்ற பல விசயங்கள் அவற்றின் இடங்களை ஆக்கிரமித்துவிட்டன.

முந்திக்கொண்டவர்களின் பண்புகளில் முதன்மையாக நாம் காண்பது இறை நெருக்கம் அல்லது இறைவனின் திருப்தி. ஆகவே கூறப்படுகிறது:

‘முந்தியவர்கள் முந்தியவர்களே! அவர்கள் அருட்கொடைகள் நிறைந்த சுவனங்களில் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக இருப்பார்கள். (10-12)’ ஆகவே, இன்பங்கள் நிரம்பிய ஊர்களில் வசிப்பவர்களின் நிலைகுறித்து நாம் கவனம் செலுத்துவோம்.

இந்த உலகில் அவர்கள் அறிந்துகொண்ட மறைவானவற்றின் மீதான நம்பிக்கை அங்கு வெளிப்படையான நம்பிக்கையாக மாறிவிட்டது. வெறுமையான அந்த நாள்களில் தம் கண்ணோட்டத்தின் மூலமாக அவர்கள் உண்மைப்படுத்திய அல்லாஹ்வின் மகத்துவத்தை இந்த நாள் களில் நேரடியாகக் கண்டுகொண்டார்கள். ஆகவே, அவர்கள் அல்லாஹ் வைப் புகழ்ந்துகொண்டும் அவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டும் இருப்பார்கள். அவர்களின் இந்தத் தொடர்ச்சியான செயல்பாட்டால் களைப்பையோ சிரமத்தையோ அவர்கள் உணர மாட்டார்கள். ‘அல் லாஹ்வே, நீயே தூயவன் என்பதே அங்கு அவர்களின் பிரார்த்தனையாக இருக்கும். அமைதி நிலவட்டும் என்பதே அவர்களின் வாழ்த்தாக இருக் கும். படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவ னாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (10:10)’

அவர்கள் வானவர்களுடன் இணைந்து களைப்படையாமல், இடை விடாமல் அல்லாஹ்வைப் புகழ்ந்துகொண்டிருப்பார்கள். ‘அவர்கள் இரவும் பகலும் சோர்வடையாமல் அவனைப் புகழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். (21:20)’

இந்த உலகில் யார் குர்ஆனோடு வாழ்ந்து, அதனைப் பாதுகாத்து, அழகிய முறையில் ஓதி அதனைப் பிற மனிதர்களுக்கு எடுத்துரைத்தாரோ அவரிடம் மறுமைநாளில் கூறப்படும்: ‘வாசிப்பீராக. நீர் உலகில் ஓதிக் கொண்டிருந்ததைப் போன்று ஓதுவீராக.’ ஆம். அவர் இந்தத் தகுதியின் மூலம் கண்ணியமான வானவர்களுடன் இருப்பவராகிவிடுவார்.

சுவனவாசிகள் நிரந்தரமான நல்லறங்களான திக்ருகளைப் பிரியத் தோடும் ஆர்வத்தோடும் மீண்டும்மீண்டும் உச்சரித்துக்கொண்டிருப் பார்கள். அந்தத் திக்ருகள் என்றும் அழியாதவை. அவை எப்படி அழியும்? சுப்ஹானல்லாஹ், வல்ஹம்துலில்லாஹ், வலாயிலாஹ இல்லல்லாஹ், வல்லாஹு அக்பர் ...?

இந்த உலகில் அவை நம்பிக்கையாளர்களின் நடத்தையை உருவாக்கும் அடித்தளங்களாக இருந்தன. பின்னர் மறுமையில் சுவனவாசிகளின் அடையாளங்களாக அவை மாறிவிட்டன. மற்றவர்கள் என்ன செய்தார் கள்? அவர்கள் பின்தங்கினார்கள். ஆகவே, தடுக்கப்பட்டுவிட்டார்கள்.

*ஒரு சொல் இருக்கிறது, பாதைகளில் கிடக்கும் கற்கள் சோம்பேறி களுக்குத் தடைக்கற்கள்; சுறுசுறுப்பானவர்களுக்கோ அவை படிக்கற் கள். முந்தையவர்கள் அவற்றைக் கண்டு பின்வாங்கிவிடுகிறார்கள். பிந்தையவர்கள் அவற்றின் மீது ஏறிவிடுகிறார்கள். ஆகவேதான் இங்கு சுவனவாசிகளுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ள இன்பங்களைக் குறித்து கூறப்படுகிறது: 'இது அவர்கள் செய்தவற்றுக்கான கூலியாகும். (24)'*

*கண்ணியமானவர் தம் வீட்டுக்கு விருந்தினர் வந்தால் நல்ல முறையில் அவர்களைக் கண்ணியப்படுத்துவார். அவர்களுக்காகத் தம்மிடம் உள்ள வற்றைச் செலவுசெய்வார். சுவனவாசிகள் அல்லாஹ்விடம் விருந்தின ராகச் செல்லும்போது மிக உன்னதமான முறையில் கண்ணியப்படுத்தப் படுவார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச இன்பங்களே இந்தப் பூமியில் அரசர்கள் அனுபவிக்கும் இன்பங்கள் அனைத்தையும்விட மேலானவை.*

*சுவனத்தில் எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த இதயமும் உணர்ந்திடாத இன்பங்கள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். சுவனத்தைக் குறித்து வர்ணிக்கப்படும் வார்த்தைகள் யாவும் அதனை நெருக்கமாக்கி வைக்கும் முகவரிகள்தாம். அங்கு கிடைக்கக் கூடிய உண்மையான இன்பங்கள் நம் கற்பனைக்கு எட்டாதவை.*

*சுவனவாசிகள் சுகபோகங்களில் சொக்கியிருக்கும் சோம்பேறிகளாக இருக்க மாட்டார்கள். அவர்களின் நாவுகள் திக்ருகளை உச்சரித்துக் கொண்டே இருக்கும். அவர்கள் அல்லாஹ்வின் விருந்தினர்களாக இருப்பதால் பாக்கியம்பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனாலும் அவர் கள் இரவும் பகலும் அவர்களுக்கு வழங்கப்படும் இறைவனின் வாழ்த் தாலும் அவனுடன் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் பேசுவதாலும் மிக மகிழ்ச்சியானவர்களாக இருப்பார்கள்.*

*இங்கு சுவனத்தின் வர்ணனையில் இடம்பெற்றுள்ள சில வார்த்தை களை நாம் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.*

*விலையுயர்ந்த பொன்னிழைகளால் நெய்யப்பட்ட இருக்கைகளில் சாய்ந்தவண்ணம் ஒருவரையொருவர் பார்த்தவாறு அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்குப் பணிவிடைசெய்யும் பொருட்டு என்றும் இளமையாக இருக்கும் சிறுவர்கள் அவர்களிடம் சுற்றிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் சுவனத்தில் பால், தேன், நீர், மது ஆகியவற்றைப் பரிமாறிக்கொண்டி ருப்பார்கள். அங்கு கிடைக்கும் மதுவால் தலைவலியோ தலைசுற்றலோ ஏற்படாது. 'அதனால் அவர்களுக்குத் தலைவலியும் வராது, புத்தியும் பேதலிக்காது. (19)'*

சுவனத்தின் வெளிப்படையான அடையாளங்களில் ஒன்று, ஹூறுல் ஈன்கள் என்று அழைக்கப்படும் சுவனக்கன்னியர் ஆவர். அவர்களும் ஆதமின் பிள்ளைகள்தாம். வேறு வடிவில் அவர்கள் ஆக்கப்பட்ட பிறகு அவர்களில் வயதானவர்கள் இளமையானவர்களாக, அழகற்றவர்கள் அழகானவர்களாக மாறிவிடுவார்கள். அல்லது, அவர்கள் சுவன வாசிகளுக்காகவே படைக்கப்பட்ட வசீகரமான விழிகளைக் கொண்ட, கவர்ந்திழுக்கக்கூடிய கன்னிப்பெண்களாவர். இங்கு ஹூறுல் ஈன்கள் என்பவர்கள் ஆண், பெண் இரு வகையினரிலும் இருப்பார்கள். ஆண்கள், பெண்களின் உடலமைப்புகளில் பெரிய அளவில் மாற்றங்கள் நிகழ்ந்து விடும். அது அவர்களைப் பரிபூரணமானவர்களாக ஆக்கக்கூடிய மாற்ற மாகும். அங்கு ஆதமின் பிள்ளைகளுக்குக் கழிவுகள் என்பதே இருக்காது. அல்லாஹ் கூறுவதுபோன்று நம்பிக்கை கொண்ட குடும்பங்கள் அன் பாலும் திருப்தியாலும் இணைக்கப்பட்டிருக்கும்:

> நிலையான சுவனங்களில் அவர்களும் அவர்களின் மூதாதையர், மனைவியர், குழந்தைகள் ஆகியோரில் அதற்குத் தகுதியானவர் களும் நுழைவார்கள். வானவர்கள் ஒவ்வொரு வாசல் வழியாகவும் அவர்களிடம் வருவார்கள். ‘நீங்கள் பொறுமையை மேற்கொண்ட தால் உங்கள்மீது சாந்தி நிலவட்டும். மறுமையின் முடிவு உங்க ளுக்கு எவ்வளவு சிறப்பானது!’ (13:23,24)

உண்மையில் மனித உடல் அற்புதமான படைப்பாக இருந்தாலும் அதற்குத் தொல்லை தரக்கூடிய விசயங்களும் அதனோடு ஒட்டிக்கொண் டுள்ளன. அவையனைத்தும் நீக்கப்பட்டு உன்னதமான, வலுவான, அழகான அமைப்பாக அது மாற்றப்படும்.

இந்த உலகில் நமக்கு விதிக்கப்பட்ட சில சோதனைகளின்போது அதன் பண்புகளை நாம் உணரவே செய்கிறோம்.

திருக்குர்ஆனில் எந்த அத்தியாயமும் இறையச்சமுடையோருக்குக் கிடைக்கும் கூலிகள் அனைத்தையும் முழுமையாகக் கூறவில்லை. ஒவ் வொரு அத்தியாயமும் தாம் சில காட்சிகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சித்திரங்களையும் மட்டுமே நமக்குக் காட்டுகிறது. அவை வாசிப்ப வர்களின் உள்ளத்தில் ஆவலையும் ஆசையையும் தூண்டுகின்றன.

இந்த அத்தியாயத்தில், முந்திக்கொண்டோருக்கும் வலப்புறத்தில் உள்ளோருக்கும் தயார்படுத்தப்பட்டுள்ள இன்பங்களின் ஒரு பகுதி வர்ணிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அவர்களில் பெரும்பாலோர் முதல் வகையினரே. ‘அவர்களில் பெரும்பாலோர் முன்னோர்களிலிருந்தும்

பின்னோர்களிலிருந்தும் இருப்பார்கள். (39,40)' வர்ணனைகளில் வந்துள்ள சில வார்த்தைகளில் இன்பங்களின் வகைகள் வெளிப்படுகின்றன. இலந்தை மரம் இலந்தைப் பழங்களைத் தரக்கூடிய மரமாகும். அதிக தண்ணீரை உறிஞ்சிக் கொண்டுதான் இந்த மரங்கள் வளர்கின்றன. அதனால் இவை பாலைவனங்களில் அரிதாக, மெல்லிய வாடையுடன் காணப்படுகின்றன. அவை எப்போதும் முட்களுடன்தான் காணப்படுகின்றன. ஆனால், சுவனத்தில் உள்ள இலந்தை மரங்களில் முட்கள் இருக்காது.

அடுத்தது, அடுக்கடுக்கான குலைகள் கொண்ட வாழைகள். இது மேற்கத்தியர்களும் மற்றவர்களும் அறிந்துள்ள பழம் என்றும் கூறப்படுகிறது. அடுத்தது, பரந்துவிரிந்த நிழல்கள். அது சூரிய வெப்பத்தால் விலகிவிடாது. 'அவற்றின் கனிகளும் நிழல்களும் என்றென்றும் இருக்கும். நிராகரிப்பாளர்களின் முடிவு நரகமே ஆகும். (13:35)' ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகள் என்பது சுவனத்தின் மாளிகைகளுக்கு அருகில் ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளாகும்.

இந்தப் பூமியில் விளையக்கூடிய மரங்கள் குறிப்பிட்ட மாதங்களில்தான் கனி தரும். ஆண்டின் மீதமுள்ள மாதங்களில் அவை கனி தருவதில்லை. சுவனத்தின் பழங்கள் இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளன: 'அது என்றும் முடிவடையாதது. அதற்கு எவ்வித தடையும் இல்லை. (33)'

அங்கு தம் கணவனை மட்டுமே நேசிக்கக்கூடிய பெண்கள் இருப்பார்கள். அவர்கள் இந்த உலகின் பெண்களாக இருந்தாலும் சரி, சுவனவாசிகளுக்காகப் படைக்கப்பட்டுள்ள ஹூறுல் ஈன்களாக இருந்தாலும் சரி. அவர்கள் சம வயதுடையவர்களாக இருப்பார்கள். இதைத்தான் பின்வரும் வசனம் குறிப்பிடுகிறது: 'மனதை ஈர்க்கக்கூடியவர்களாகவும் சம வயதுடையவர்களாகவும் ஆக்கினோம், வலப்புறத்தில் உள்ளவர்களுக்காக. (37,38)'

இவையனைத்தும் முஹம்மதின் (ஸல்) சமூகத்துக்கு வழங்கப்பட்டுள்ள நற்செய்திகளாகவே நாம் காண்கிறோம். முந்தையவர்களில் தற்காலத்தில் உள்ளவர்கள் குறைவானவர்களாக இருப்பார்கள். ஆனாலும் பிந்தையவர்களில் உள்ள பிரிவினர் மிகப் பெரும் எண்ணிக்கையினராக இருப்பார்கள்.

பின்னர் அத்தியாயம் இடப்பக்கம் உள்ளவர்களைக் குறித்து பேசுகிறது. இறைத்தூதர்களையும் மார்க்கத்தையும் பகைத்த நாத்திகர்கள், பாவிகள், பொய்யர்கள் ஆகியோரே இடப்பக்கம் இருப்பார்கள். அவர்கள் இந்த உலக

வாழ்வில் திருப்தி கொண்டு அதற்குப் பிறகு வரக்கூடிய மறுமை வாழ்வைப் பரிகாசம்செய்தார்கள். இந்த உலகில் தங்களின் தேவைகளைத் தவிர வேறு எதையும் அவர்கள் அறிந்துவைத்திருக்கவில்லை.

அவர்கள் அனுபவிக்கும் வேதனை எத்தகையது என்பதை விவரிக்க பின்வரும் சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன: 'அவர்கள் நெருப்பிலும் கொதிக்கும் நீரிலும் கரும்புகையின் நிழலிலும் இருப்பார்கள். (42,43)' அடர்த்தியான, கருமையான புகை. அதன் நிழலால் எந்தப் பயனும் இருக்காது. இன்னொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது: 'மூன்று கிளைகளுடைய நரகத்தின் பக்கம் செல்லுங்கள். அது நிழலும் தராது, வெப்பத்திலிருந்தும் காக்காது. (77:30,31)'

ஏன் இடப்பக்கம் உள்ளவர்கள் இந்த வேதனைக்கு உரியவர்களானார்கள்? ஏனெனில், அவர்கள் இந்த உலகில் நற்செயல்களைக் கொண்டு தங்களைக் காத்துக்கொள்ளவில்லை. மாறாக, உண்மையில் அவர்கள் நம்பிக்கை கொள்ளவே இல்லை. இன்பங்களை அனுபவிப்பதும் இச்சைகளுக்குப் பின்னால் ஓடுவதும்தான் அவர்களின் ஒரே நோக்கமாக இருந்தது.

இந்த உலகில் நிராகரிப்பாளன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதை அல்லாஹ் வர்ணித்துள்ளான். அவன் இந்த உலகுதான் அனைத்தும் என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

> அவர் தம் குடும்பத்தாரிடம் மகிழ்ச்சியாக இருந்தார். இறைவனின் பக்கம் ஒருபோதும் திரும்ப வேண்டியதில்லை என்றே அவர் எண்ணியிருந்தார். ஏன் இல்லை. அவருடைய இறைவன் அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். (84:13-15)

நிராகரிப்பாளர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட மாட்டோம் என்ற அடிப்படையில்தான் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். இந்தச் சிந்தனைதான் இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஒரு மனிதன் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தாமல் எவ்வித வெட்கமுமின்றிப் பாவங்களில் ஈடுபடுவதற்கு இந்த உணர்வுதான் அடிப்படையான காரணம்.

இதைத்தான் அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறான். இவர்கள் இதற்கு முன்னர் மகிழ்ச்சியானவர்களாக இருந்தார்கள். பெரும் பாவங்களைப் புரிவதில் பிடிவாதமாக இருந்தார்கள்.

> 'நாங்கள் இறந்து மண்ணாகவும் எலும்புகளாகவும் ஆகிவிட்டாலும் மீண்டும் எழுப்பப்படுவோமா? எங்களின் முன்னோர்களுமா?'

என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நீர் கூறும், 'முன்னோர்கள், பின்னோர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒன்றுதிரட்டப்படுவீர்கள்.' (47:50)

மீண்டும் அத்தியாயம் இறை மறுப்பாளர்கள் அனுபவிக்கும் வேதனையை வர்ணிக்கிறது. 'பின்னர், வழிகேடர்களே, நிராகரித்துவிட்டவர்களே, நீங்கள் கள்ளி மரத்திலிருந்து உண்பீர்கள். (51,52)' கள்ளி மரம் பார்ப்பதற்கு அருவருப்பானது, கசப்பானது. அல்லாஹ் அதிலிருந்து நம்மைக் காப்பானாக. அதன் கனிகளை ஒரு மனிதன் உண்டுவிட்டால் அவன் கடுமையான தாகத்துக்கு உட்பட்டுவிடுவான். அப்போது கொதிக்கும் நீர் அவனுக்குக் கொடுக்கப்படும். 'நரகவாசிகளுக்குக் கொதிநீர் குடிப்பதற்காகக் கொடுக்கப்படும். அது அவர்களின் குடல்களைத் துண்டு துண்டாக்கிவிடும். (47:15)' கள்ளி மரத்தின் கனிகளை உண்பதால் நிராகரிப்பாளன் கடுமையான தாகத்துக்கு உட்படுவான், குடல்நோயால் பாதிக்கப்பட்டுக் கடுமையான தாகத்துக்கு உட்பட்ட ஒட்டகம் போன்று.

நரகவாசிகள் கள்ளி மரத்திலிருந்தே தங்களின் வயிறுகளை நிரப்பிக்கொள்வார்கள். அதனால், குடல்நோயால் பாதிக்கப்பட்ட ஒட்டகத்தைப் போன்று கடுமையான தாகத்துக்கு உட்படுவார்கள். ஆனால் அவர்களின் தாகம் தணியாது. 'இதுதான் தீர்ப்புநாளில் அவர்களுக்குரிய விருந்தாகும். (56)'

மனிதனை ஆர்வமூட்டுவதற்காகவும் அச்சமூட்டுவதற்காகவும் அவனைப் பண்படுத்துவதற்காகவுமே நற்கூலியையும் தண்டனையையும் குறித்த செய்திகள் கூறப்படுகின்றன. குறிப்பாக, அறிவும் கலைகளும் ஊடகங்களும் பெருகிவிட்ட இந்தக் காலத்தில் மறுமையை மறக்கடிப்பதற்கும் அதற்காகச் செயல்படுவதிலிருந்து மக்களைத் தடுப்பதற்கும் ஏராளமான முயற்சிகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வெறுமனே ஆர்வமூட்டுவதும் அச்சமூட்டுவதும் போதுமானதல்ல. மனிதன் சிந்திக்கும் பொருட்டு அவனுடைய அறிவை விழிப்படையச் செய்வதற்கான முயற்சிகளும் செய்யப்பட வேண்டும்.

மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதல் உண்மையானது என்பதற்கு இந்த அத்தியாயத்தில் காணப்படும் நான்காவது ஆதாரம் பின்வரும் வசனத்தில் வெளிப்படுகிறது: 'நீங்கள் அருந்துகின்ற நீரைக் கவனித்தீர்களா? அதனை மேகத்திலிருந்து நீங்கள் பொழியச்செய்கிறீர்களா அல்லது நாம் பொழியச்செய்கிறோமா? நாம் நாடினால் அதனை உப்புநீராக ஆக்கிவிடுவோம். பிறகு ஏன் நீங்கள் நன்றி செலுத்துவதில்லை? (68-70)'

தண்ணீர்தான் வாழ்வுக்கும் அது நீடிப்பதற்குமான அடிப்படை. அல்லாஹ் கூறுகிறான்: 'உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் நீரிலிருந்தே உருவாக்கினோம் என்பதை நிராகரிப்பாளர்கள் கவனிக்கவில்லையா? (21:30)' இந்தப் பூமியில் ஐந்தில் நான்கு பகுதிகள் நீரால்தான் ஆனவை. ஆழமான சிந்தனையை வேண்டும் செயல்பாடுகள் அதற்குரியவை. ஏனெனில், காற்று செங்கடலிலிருந்து மேகங்களை இழுத்துக் கொண்டு வந்து நம்முடைய பூமியில் மழையாகப் பொழிவிக்கிறது. பின்னர், பயன்படுத்தப்பட்ட நீர் நாம் அறியாத அதன் வழித்தடங்களில் சென்று கடலை அடைந்துவிடுகிறது. அல்லாஹ் கூறுகிறான்: 'நாம் வானத்திலிருந்து ஓர் அளவோடு மழையைப் பொழிவித்து அதனைப் பூமியில் தேக்கிவைத்துள்ளோம். அதனைப் போக்கிவிடவும் நாம் ஆற்றல் பெற்றோர்தாம். (23:18)'

ஆம். அதனைப் படைத்தவன் அதனைப் போக்கிவிடவும் ஆற்றல் பெற்றவன். 'நாம் நாடினால் அதனை உப்புநீராக ஆக்கிவிடுவோம். பிறகு ஏன் நீங்கள் நன்றி செலுத்துவதில்லை? (70)'

படைப்பதும் அழிப்பதும் உயர்வான அந்த இறை நாட்டமே. தண்ணீர் - இவ்வுலக வாழ்வையும் மரணத்துக்குப் பிறகு வரக்கூடிய வாழ்வையும் இணைக்கும் இயல்பான இணைப்பாக இருக்கிறது - உயர்வான அந்த இறை நாட்டத்துக்குக் கட்டுப்படக்கூடியது. ஹதீஸில் வந்துள்ளது: 'அல்லாஹ் சிறுசிறு தூறல்களாக மழையை இறக்குவான். அதன் மூலம் (அடக்கத் தலங்களில் இறந்தவையாகக் கிடக்கும்) மனிதர்களின் உடல்கள் உயிர்பெற்று எழும்பும்.'

சுவையான நீர் உருவாகும் முறை வானவெளியில் மின்சார செயல்பாடுகளுக்கு மத்தியில் முழுமையடைகிறது. இதுகுறித்து இயற்பியல் அறிஞர்கள் பேசியுள்ளார்கள். அல்லாஹ் ஒருவனே அதனைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்.

ஐந்தாவது ஆதாரம்: 'நீங்கள் எரிக்கின்ற நெருப்பைக் கவனித்தீர்களா? அதற்கான மரத்தை நீங்கள் உருவாக்கினீர்களா அல்லது நாம் உருவாக்கினோமா? நாம் அதனை நினைவூட்டலாகவும் பயணிகளுக்குப் பயனளிக்கக்கூடியதாகவும் ஆக்கியுள்ளோம். (71-73)'

இந்த ஆதாரத்தையும் நவீன அறிவியல் தெளிவுபடுத்தியுள்ளது. நாம் ஆக்ஸிஜனைச் சுவாசித்து கார்பன்டையாக்ஸைடை வெளியிடுகிறோம். இதற்கு மாறாக, தாவரங்கள் கார்பன்டையாக்ஸைடைச் சுவாசித்து ஆக்ஸிஜனை வெளியிடுகின்றன. பசுமையான அவை எரிப்பதற்குத்

*தகுதியானவையாக மாறுவது மிக ஆச்சரியமானது. மரங்களின் பசுமையான வேர்களும் கிளைகளும் இலைகளும் காய்ந்தபின் எரியத்தக்கவையாக மாறிவிடுகின்றன.*

*இவ்வாறு நாம் வாழ்க்கையின் பெருக்கத்தில் மரணத்தைக் காண்கிறோம்.*

*மூலப்பொருள்கள் தனியாக இருந்தாலும் அல்லது சேர்ந்திருந்தாலும் அவை ஆய்வுக்கும் பயன்பாட்டுக்கும் உரியவையாகவே இருக்கின்றன. தனியாக இருக்கும் மூலப்பொருள்கள் சேரும்போது அவற்றுக்கு நேர் மாறான பண்புகளோடு வெளிப்படுகின்றன. உதாரணமாக, நாம் அருந்தக் கூடிய, தாகம் தணிக்கக்கூடிய நீரை எடுத்துக்கொள்ளுங்கள். அது எந்த இரு மூலப்பொருள்கள் சேர்வதால் உருவாகிறதோ அவை எரியும் தன்மையையும் தாகம் தணிக்கும் தன்மையையும் பெற்றிருக்கின்றன.*

*நாம் தோட்டங்களில் பசுமையின், வளர்ச்சியின் அடையாளங்களைக் காண்கிறோம். சிறிது காலத்துக்குப் பிறகு அவை காய்ந்து எரிந்துபோவதன் அடையாளங்களை நாம் காண்பதில்லை. இவ்வாறே எதிரெதிரான தன்மைகள் ஒன்று மற்றொன்றைப் பின்தொடர்கின்றன. இவ்வாறு செய்வது இறைவனுக்கு மிக இலகுவானது.*

> *நீ இரவைப் பகலில் புகுத்துகிறாய். பகலை இரவில் புகுத்துகிறாய். நீ உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளியாக்குகிறாய். உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளியாக்குகிறாய். நீ நாடுவோருக்குக் கணக்கின்றி வழங்குகிறாய்.* (3:27)

*கட்டைகளும் விறகுகளும் மண்ணாக மாற்றமடைகின்றன. மண்ணிலிருந்து மீண்டும் தாவரங்கள் முளைக்கின்றன. அதே போன்று, நாம் உண்ணக்கூடிய தாவரங்கள் நம் உடலில் உயிருள்ள செல்களாக மாற்றமடைகின்றன.*

*உண்மையில் மனிதச் சமூகம் இரண்டு எச்சரிக்கைகளுக்கு முன்னால் இருக்கிறது. ஒன்று விரைவாக வரக்கூடியது. மற்றொன்று தாமதமாக வரக்கூடியது. அது மரணத்துக்கு முன்னால் நிற்கிறது. ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாக அதனைச் சுவைத்தே தீர வேண்டும். பின்னர், அது நிச்சயம் நிகழக்கூடிய மறுமைநாளுக்கு முன்னால் நிற்கும். அந்த நாள் வருவதில் தாமதம் ஏற்பட்டாலும் சரியே. 'அவனே உங்களை மண்ணிலிருந்து படைத்து, பின்னர் ஒரு தவணையை நிர்ணயித்தான். அந்தக் குறிப்பிட்ட தவணையை அவன் மட்டுமே அறிவான். அவ்வாறு இருந்தும் நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?* (6:2)*' 'எங்கள் இறைவா, நீ மக்கள் அனை*

வரையும் ஒருநாள் ஒன்றுதிரட்டுபவனாக இருக்கிறாய். அந்நாள் வருவதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. நிச்சயமாக அல்லாஹ் வாக்குறுதிக்கு மாறுசெய்ய மாட்டான். (3:9)'

மறுமைநாளைக் குறித்து மீண்டும் மீண்டும் கூறப்படுவது சமூகங்களை அச்சுறுத்த வேண்டும் என்பதற்காகவோ மனிதச் சமூகத்தின் வளர்ச்சியை நிறுத்த வேண்டும் என்பதற்காகவோ அல்ல. அது மனிதனின் கர்வத்தை உடைப்பதற்காகவும் அவனது மடமைத்தனத்தைத் தடுப்பதற்காகவும்தான்.

மனிதர்களுக்கு மறுமைநாளைக் குறித்து தொடர்ந்து நினைவூட்டப்பட வேண்டியது அவசியமாகும். இந்த நினைவூட்டல் அவர்களின் இச்சைகளை ஒழுங்குபடுத்தும். அவர்களின் பேராசையைத் தடுக்கும். மனித அறிவு அந்த நாள் நிலைபெற்றே தீரும் என்பதை அறிந்துவிட்டால் அதிகமானதை விட்டுவிட்டு அற்பமானதையும் நிலையானதை விட்டுவிட்டு அழியக்கூடியதையும் தேர்ந்தெடுக்காது. நவீன நாகரிகத்தைப் போன்று மறுவுலகில் கிடைக்கும் கூலியில் ஆர்வமின்றி இருக்காது.

இந்தப் பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள ஆற்றல்களைக் கண்டடைவதில் நவீன அறிவியல் வெற்றிபெற்றிருக்கலாம். ஆனாலும் அதன் பயன் என்ன? வாழ்வின் நோக்கத்தை, இந்தப் பூமியில் மனிதர்களுக்கு வழங்கப்பட்ட மார்க்கத்தை அது இல்லாமல் ஆக்கிவிட்டதா? திருக்குர்ஆன் மனித வாழ்வின் நோக்கமாகக் கூறுகிறது: 'உங்களில் நற்செயல் புரிபவர் யார் என்பதைச் சோதிப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். (67:2)'

மனிதர்களுக்கு வழங்கப்படும் உலகியல் வசதிகளுக்கேற்ப அவர்களுக்கான இறைவனின் சோதனைக் களமும் விசாலமாகிக் கொண்டே செல்லும்.

இந்த அத்தியாயம் ஒரு அறைகூவலோடு நிறைவடைகிறது. அதற்கு முன்னால் படைப்புகள் அனைத்தும் விழிபிதுங்கி நிற்கின்றன. மனிதர்களில் யாராவது மரணத்திலிருந்து தப்பிவிட முடியுமா? அல்லது, மரணிக்கப்போகும் தன் உறவினனை, நண்பனை ஒரு மனிதனால் காப்பாற்ற முடியுமா?

உயிர் தொண்டையை அடையும்போது நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பீர்கள். நாம் உங்களைவிட அவருக்கு மிக அருகில் இருக்கிறோம். ஆயினும், உங்களால் அதனைக் காண முடியாது. நீங்கள்

*கட்டுப்பட்டவர்களாக இல்லையெனில் அந்த உயிரை ஏன் திரும்பக் கொண்டுவருவதில்லை, நீங்கள் உண்மையாளர்களாயின்?* (83-87)

*நிர்ணயிக்கப்பட்ட தவணை முடிந்துவிட்டால் எந்த உயிரியும் மீண்டும் உலகுக்குத் திரும்ப முடியாது. மாறாக, மனிதர்கள் தாங்கள் முற்படுத்திய செயல்களுக்கேற்பப் பல பிரிவுகளாகப் பிரிந்துநிற்பார்கள். அவர்களின் செயல்களுக்கேற்பவே அவர்களுக்கான படித்தரமும் வழங்கப்படும்.*

*ஆயினும், அவர் இறைவனுக்கு நெருக்கமானவராக இருந்தால் அவருக்கு ஓய்வும் சிறந்த உணவும் அருட்கொடைகள் நிறைந்த சுவனமும் உண்டு.* (88,89)

*அவர் வலப்புறத்தில் உள்ளவராக இருந்தால், 'உம்மீது அமைதி உண்டாகட்டும், நீர் வலப்புறத்தில் உள்ளவராக இருக்கிறீர்' என்று கூறப்படும்.* (90,91)

*இது வாழ்க்கை என்னும் போராட்டக் களத்தில் வெற்றிபெற்றவர்களுக்கு வானவர்கள் கூறும் வாழ்த்துச் செய்தியாகும்.*

*'ஆனால், அவர் வழிகெட்ட நிராகரிப்பாளராக இருந்தால் கொதிக்கும் நீரால் விருந்தளிக்கப்பட்டு நரகத்தில் எறியப்படுவார்.* (92-94)*' இவர்கள் தாம் இடப்பக்கத்தில் இருப்பவர்கள்.*

*இவ்வாறு அத்தியாயத்தின் இறுதிப் பகுதி அதன் ஆரம்பப் பகுதியை உண்மைப்படுத்துகிறது. இறுதியில் சுருக்கமாக இடம்பெறுகிறது. மனிதர்கள் தாங்கள் எதிர்கொள்ளப் போகும் விளைவுகளைப் புரிந்துகொண்டார்களா? அவர்கள் புரிந்துகொண்டாலும் அல்லது அலட்சியமாக இருந்தாலும் உண்மை என்றும் மாறப்போவதில்லை. 'நிச்சயமாக இது மிகவும் உறுதியான உண்மையாகும். ஆகவே, நீர் மகத்துவம்மிக்க உம் இறைவனின் பெயரைத் துதிப்பீராக.* (95,96)*'*

❖ ❖ ❖

அத்தியாயம் 57

# அல்ஹதீது

(இரும்பு)

*இது முழுவதுமாக மதீனாவில் அருளப்பட்ட அத்தியாயமாகும். இது அரசையும் பொதுமக்களையும் நோக்கி ஒருசேர உரையாடுகிறது. இஸ்லாமியச் சமூகத்துக்கென்று தனித்தன்மைகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டே அது அறியப்படுகிறது. அது இறைவனுக்காகச் செயல்படக்கூடிய சமூகமாகும். சூரியன் உதிப்பதற்கு முன்னர் தொடங்கி அது மறைந்து, இரவின் சிவப்பு மறையும்வரையிலும் முஸ்லிம்களில் ஆட்சியாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் பள்ளிவாசல்களை நோக்கி விரைகிறார்கள். பாங்கின் ஓசைகள் எல்லாப் பகுதிகளிலும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அவை முஸ்லிம்களைத் தொழுகையை நோக்கி அழைத்துக்கொண்டும் அல்லாஹ்வைப் புகழ்வது, அவனது தகுதிக்கேற்றவாறு அவனைத் தூய்மைப்படுத்துவது ஆகியவற்றை அவர்களுக்கு நினைவூட்டிக்கொண்டும் இருக்கின்றன.*

*இஸ்லாமிய அரசு, 'மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை' என்ற கோஷத்தை முன்னிறுத்தினாலும் அது உலக அளவில் அல்லாஹ் வின் கட்டளைகளைச் செயல்படுத்துவதற்கும் அவனுக்குக் கீழ்ப் படிவதற்கும் பேரார்வம் கொண்டுள்ளது. ஆகவேதான் இந்த அத்தியாயம் இந்த அடையாளத்தோடு தொடங்குகிறது:*

> *வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வைப் புகழ்கின்றன. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கிறான். வானங்கள், பூமியின் ஆட்சியதி காரம் அவனுக்கே உரியது. அவனே வாழ்வும் மரணமும் அளிக்கி றான். அவன் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன்.* (1,2)

*நாம் வாழும் காலகட்டம் அறிவியலின் காலகட்டம் என்று அழைக் கப்படுகிறது. மனிதன் வானவெளியில் செல்வதற்கும் சந்திரனில்*

கால்பதிப்பதற்கும் ஆற்றல்பெற்றுவிட்டான். இப்போது அவன் சூரியக் குடும்பத்தில் உள்ள மற்ற கோள்களுக்கும் செல்ல முடியுமா என்று ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கிறான். சூரியனும் அதன் குடும்பமும் சூரியன்களாலும் நட்சத்திரங்களாலும் நிரம்பிய பிரபஞ்ச வெளியில் மணல் துகள்களைப் போன்று காணப்படுகின்றன. நீளத்திலும் அகலத் திலும் மிகப் பெரிய இந்தப் பிரபஞ்சம் முறையான ஒழுங்குகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அந்த ஒழுங்குகள்தாம் நாம் இழுக்கக் கூடிய, விடக்கூடிய மூச்சிலும் கடல் அலைகளின் உயர்வு தாழ்விலும் கோள்களுக்கு மத்தியில் நிகழக்கூடிய கிரகணங்களிலும் பார்வைகளும் கருவிகளும் அடைய முடியாத தூரங்களிலும் ஆட்சி செலுத்துகின்றன. படைத்துப் பராமரிக்கும் இறைவன் அவை எல்லாவற்றையும் கண் காணித்துக்கொண்டிருக்கிறான். அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தி அவனைப் புகழ்கிறேன்; அவனது படைப்புகளின் எண்ணிக்கை அளவு; அவன் திருப்தியடையும் அளவு; அவனது அர்ஷின் கனமளவு; அவனது வார்த்தையின் மையளவு.

மனிதன் தனக்குத்தானே இவ்வாறெல்லாம் கேட்க மாட்டானா: கோழிதான் அது இடும் முட்டையைப் படைத்ததா? பசுமாடுதான் அதி லிருந்து வெளிப்படும் பாலை உருவாக்கியதா? ஒரு பெண்தான் தான் பெற்றெடுக்கும் குழந்தையைப் படைத்தாளா? விதையை விதைத்த விவசாயிதான் அதனை முளைக்கச்செய்தானா?

இவையனைத்தும் ஒவ்வொரு பொருளையும் படைத்த, மிக உயர்வான ஞானமும் பேராற்றலும்மிக்க இறைவனிடமிருந்து வெளிப்பட்டவை.

> அவனே வானங்களையும் பூமியையும் ஆறு நாள்களில் படைத்தான். பின்னர் அரியணையின் மீது நிலைகொண்டான். பூமியினுள் செல்வதையும் அதிலிருந்து வெளிப்படுவதையும் வானத்திலிருந்து இறங்குவதையும் அதில் ஏறுவதையும் அவன் அறிகிறான். நீங்கள் எங்கிருந்தபோதிலும் அவன் உங்களுடனே இருக்கிறான். நீங்கள் செய்பவற்றை எல்லாம் அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். (4)

முஸ்லிம் சமூகத்தின் பணி அல்லாஹ்வை அறிந்துகொள்வதும் மனிதச் சமூகத்துக்கு அவனை அறிமுகப்படுத்துவதும் அவனை வணங்குவதும் மற்றவர்களும் அவனை வணங்குவதற்காக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் ஆகும். வணக்க வழிபாட்டின் உரிமையைப் பாதுகாப்ப தற்காகவும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, அவர்களைத் தவறான வழியின் பக்கம் இட்டுச்செல்பவர்களைத் தடுப்பதற்காகவும்தான் அது போராடுகிறது. ‘நீங்கள் எங்கள் மார்க்கத்துக்குத் திரும்பிவிட வேண்டும்.

இல்லையெனில் எங்களுடைய ஊரிலிருந்து உங்களை வெளியேற்றி விடுவோம். (14:13)' என்று கூறுபவர்களைக் கண்டால் முஸ்லிம்கள் அவர்களிடம் கூறுவார்கள், 'இந்தப் பூமியில் உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதுபோன்று மற்றவர்களுக்கும் இருக்கிறது. ஒரு மனிதன் தான் விரும்பும் கொள்கையைப் பின்பற்றி வாழ்வதற்கு உரிமை இருக்கிறது. நாங்கள் பலவீனர்களின் உரிமையைப் பெற்றுத்தரும்வரை அவர்களுடன்தான் இருப்போம்.'

முஸ்லிம் சமூகம் அதன் உலகளாவிய தூதுத்துவத்தை எடுத்துரைக்கும் பொருட்டு அதன் பாதையை வரைந்து காட்டியவாறு தொடங்குகிறது. 'அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களைப் பிரதிநிதிகளாக ஆக்கிய செல்வங்களிலிருந்து செலவுசெய்யுங்கள். உங்களில் நம்பிக்கை கொண்டு செலவுசெய்வோருக்குப் பெரும் கூலி இருக்கிறது. (7)'

ஈமானும் இறை வழியில் செலவுசெய்தலும் ஒரு சமூகம் தன் நோக்கத்தை அடைந்து வெற்றிபெறுவதற்கான இரண்டு அடிப்படையான அம்சங்களாகும். பின்னர், சுருக்கமான இந்தக் கட்டளை தெளிவுபடுத்தப்படுகிறது. முஸ்லிம்கள் தங்களின் மார்க்கத்தைப் பற்றிக்கொள்ளவும் மறுமைநாள்வரை அதனடிப்படையில் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் வேண்டும். இந்த விசயத்தில் அவர்களிடமிருந்து எந்தச் சாக்குப்போக்கும் ஏற்றுக்கொள்ளப்படாது. ஒரு தூதர் அவர்களிடம் வந்து அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு சேர்த்துவிட்டார். அவரோடு வஹீயும் முடிந்துவிட்டது. அவர் தம்முடைய சமூகத்தை மனிதர்களுக்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகமாக ஆக்கிவிட்டார். ஆகவே, தங்களின் மார்க்கத்தை விட்டுத் தங்களின் மனஇச்சைப்படி வேறொரு மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அவர்களுக்கு அனுமதி இருக்கிறதா என்ன?

நவீன நாகரிகம் இஸ்லாத்தை விட்டுவிட்டு வேறு எதையாவது பின்பற்றும்படி மக்களிடம் அறிவுறுத்துகிறது. அவர்கள் அறபு தேசியவாதத்தையோ இனவாதத்தையோ வேறு ஏதேனும் ஒரு மதத்தையோ பின்பற்றலாம். அதன் நோக்கம் அவர்கள் குர்ஆனையும் தங்களின் தூதரையும் விட்டுவிட வேண்டும் என்பதுதான்.

நவீன நாகரிகத்தின் இந்தக் கோரிக்கைக்குச் சிலர் பதிலளித்துள்ளார்கள். அவர்கள் இஸ்லாத்தைவிட அதற்கே முன்னுரிமையளிக்கிறார்கள். அல்லாஹ்வை இறைவனாகவும் இஸ்லாத்தை மார்க்கமாகவும் ஏற்றுக் கொண்ட பலரை அவர்கள் வழிகெடுத்து தவறான பாதைக்கு இட்டுச்

சென்றுவிட்டார்கள். துருக்கியர்கள், குர்துகள், பாரசீகர்கள், பர்பர் இன மக்கள், இந்தியர்கள் எனப் பல இனமக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, அவர்களை இஸ்லாத்தைவிட்டுப் பிரித்துக்கொண்டிருக்கிறார்கள். இது தான் சிலை வழிபாட்டின் புதிய வடிவம். அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ்வின் மீது  நம்பிக்கை கொள்ளாமல் இருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? தங்கள் இறைவனின் மீது நம்பிக்கை கொள்ளு மாறு தூதர் உங்களை அழைத்துக்கொண்டிருக்கிறார். அவன் உங்க ளிடம் உறுதிமொழியையும் பெற்றுள்ளான். நீங்கள் நம்பிக்கை யாளர்களாக இருந்தால் அதனை நிறைவேற்றுங்கள். அவனே தன் அடியார்மீது தெளிவான வசனங்களை அருளுகிறான், உங்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு வரு வதற்காக. அல்லாஹ் உங்கள் விசயத்தில் மென்மையாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (8,9)

விசித்திரம் என்னவென்றால், இன்றைய அறபுகள் - அவர்களின் எந்த மொழியைக் குர்ஆன் பாதுகாத்ததோ - உலகின் செல்வம் மிகுந்த சமூகத் தினராக இருக்கிறார்கள். உலகின் பொக்கிஷங்கள் அவர்களின் கைவசம் தான் இருக்கின்றன. பசுமையான அவர்களின் நிலம் நெய்யையும் தேனை யும் கொட்டிக்கொண்டிருக்கிறது. அவர்களின் பாலைவனங்கள் கனி மங்களாலும் பொக்கிஷங்களாலும் நிரம்பியுள்ளன. ஆனால், இவை யனைத்தையும் அவர்கள் தங்களின் மார்க்கத்துக்கு உதவுவதற்காகப் பயன்படுத்தினார்களா அல்லது அவர்களின் மனஇச்சைகள் அவர்களை மிகைத்துவிட்டனவா?

முஸ்லிம்களின் செல்வங்களைக் கொண்டு முஸ்லிம்களை விட மற்ற வர்கள்தாம் பயனடைகிறார்கள். இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையை, வஹீயின் உண்மைகளை நிலைநிறுத்துவது அவர்களின் மீது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ்வின் பாதையில் செலவுசெய்யாமல் இருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? வானங்களும் பூமியும் அல்லாஹ்வுக்கே உரித் தானவை. உங்களில் வெற்றிபெற்ற பிறகு செலவுசெய்வோரும் போர்புரிவோரும் வெற்றிபெறுவதற்கு முன்னால் செலவுசெய்த வர்களுக்கும் போர் புரிந்தவர்களுக்கும் சமமாக மாட்டார்கள். இவர்கள் அவர்களைவிடப் பதவியில் உயர்ந்தவர்கள். அல்லாஹ் அனைவருக்கும் நன்மையையே வாக்களித்துள்ளான். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறியக்கூடியவன். அல்லாஹ்வுக்கு அழ கிய கடனளிப்பவர் யார்? அவன் அதனை அவருக்குப் பன்மடங்காக் கித் தருவான். அவருக்குக் கண்ணியமான கூலியும் உண்டு. (10,11)

செல்வத்தை நல்ல முறையில், ஈமானிய வழியில் பயன்படுத்துவது உறுதியான நம்பிக்கை கொண்ட உண்மையாளர்களின் அடையாளங்களில் ஒன்றாகும். உலக வாழ்வை வழிபடக்கூடியவர்களுக்கும் நயவஞ்சகர் களுக்கும் வேறு வழிமுறை உள்ளது. ஆகவே, மறுமைநாளில் அவர் களிடம் கூறப்படும்:

*இன்று உங்களிடமிருந்தோ நிராகரித்தோரிடமிருந்தோ எவ்வித இழப்பீடும் பெறப்படாது. உங்கள் இருப்பிடம் நரகமாகும். அதுவே உங்களுக்குத் துணையாகும். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும்.* (15)

ஏற்றுக்கொள்ளப்படும் ஈமானின் அடித்தளம் அல்லாஹ்வை அறித லும் தன் சுயத்தை மறுத்தலும் படைப்புகள்மீது கருணை காட்டுவதும் உள்ளத்தின் மென்மையும் ஆகும். ஆனாலும் சிலர் தங்களை நம்பிக் கையாளர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் இறுகிய உள்ளம் கொண்டவர்களாக, சுயநலம்மிக்கவர்களாக இருக்கிறார்கள்.

இத்தகைய வெறுக்கத்தக்க ஈமானுக்கு உதாரணம் அல்லாஹ்வுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறிய யூதர்களாவர். அவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்கள் வாக்குமீறியதால் நாம் அவர்களைச் சபித்து அவர்களின் உள்ளங்களை இறுகச்செய்துவிட்டோம் ... (5:13)'

அவர்களைப் போன்று ஆகிவிட வேண்டாம் என்று அல்லாஹ்வும் தூதரும் நம்மை எச்சரிக்கிறார்கள். ஆனாலும் மார்க்கத்தை மேலோட்ட மாகப் பின்பற்றும் முறை நம்மிடையே பரவிவிட்டது. அவர்கள் ஏதே னும் ஃபிக்ஹு ரீதியான கிளைப் பிரச்சினைகளில் ஒரு கருத்தைப் பற்றிக் கொண்டு சுவனம் தங்களுக்கு மட்டுமே உரியது என்று எண்ணுகிறார்கள். மற்றவர்களை இழிவாகப் பார்க்கிறார்கள். அவர்களுடன் கடும்போக் குடன் நடந்துகொள்கிறார்கள்.

குர்ஆன் அறிவுறுத்துகிறது:

*நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவால் அஞ்சி நடுங்குவதற்கும் அவர்களுக்கு அருளப்பட் டுள்ள சத்தியத்தின் முன் பணிந்துவிடுவதற்கும் நேரம் வரவில் லையா? அவர்கள் முன்னர் வேதம் வழங்கப்பட்டோரைப் போன்று ஆகிவிடக் கூடாது. அவர்களது காலம் நீண்டுவிட்டதால் அவர்களின் உள்ளங்கள் இறுகிவிட்டன ...* (16)

இந்த நோய் தனிமனிதர்களின் செயல்பாடுகளை நாசமாக்கிவிட்டது. இஸ்லாமியச் சமூகத்துக்கும் அது நிறைவேற்ற வேண்டிய பணிக்கும்

குறுக்காக வந்துவிட்டது. பணிவும் கருணையும் அங்கீகாரத்தையும் அன்பையும் உருவாக்குகின்றன. கர்வமும் கடினப் போக்கும் பகைமை யையும் சண்டையையும் உருவாக்குகின்றன.

அத்தியாயம் இந்தச் சமூகத்தின் தனித்தன்மைகளை, அது சுமந்திருக்கும் சத்தியத்தைத் தெளிவுபடுத்தியவாறு செல்கிறது. நம்பிக்கை கொள்ளும் படியும் இறை வழியில் செலவுசெய்யும்படியும் மத்தியப் பகுதியில் மீண்டும் வலியுறுத்துகிறது.

> நிச்சயமாகத் தர்மம் செய்யும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ்வுக்கு அழகிய கடனை அளித்தவர்களுக்கும் பன்மடங் காக்கி வழங்கப்படும். அவர்களுக்குக் கண்ணியமான கூலியும் உண்டு. அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள்தாம் தங்கள் இறைவனிடம் வாய்மை யாளர்களாகவும் சாட்சியாளர்களாகவும் இருக்கிறார்கள். அவர் களுக்கு அவர்களது கூலியும் ஒளியும் உண்டு. (18,19)

இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஷுஹதா என்ற வார்த்தை இறை வழியில் கொல்லப்பட்டவர்களையும் தூதர்களின் அடிச்சுவட்டில் பயணித்து, மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்து, அவர்களுக்கு வஹீயின் போதனைகளைத் தெளிவுபடுத்துபவர்களையும் குறிக்கும்.

‘நாம் ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒரு சாட்சியைக் கொண்டு வரும்போதும் உம்மை இவர்களின் மீது சாட்சியாக ஆக்கும்போதும் நிலைமை என்னவாகும்? (4:41)’ இரண்டு கருத்துகளும் சரியானவையே.

அல்லாஹ்வின் மீது கொள்ளும் உண்மையான ஈமானின் அடை யாளங்களில் ஒன்று உலகைச் சரியான முறையில் அணுகுதலாகும். யார் தாம் இழந்தவற்றுக்காக வருத்தப்பட்டுக் கண் விழித்தவராக இரவைக் கழிப்பாரோ அவருக்கு அதனால் எதுவும் கிடைக்கப்போவதில்லை. நம் காலத்தில் மனிதர்கள் மறுமையை மறந்தவர்களாக வாழ்கிறார்கள். அவர்களை மிகைத்திருக்கும் நவீன நாகரிகம் அதனைவிட்டும் அவர் களைத் திருப்பிவிட்டது. இவ்வுலக விவகாரங்களில் தோல்வியைத் தழுவுவதே மறுமையை நோக்கிய வெற்றிகரமான பயணத்துக்கான வழியாகும் என்று கூறக்கூடிய மதங்கள் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் தோல்வியடைந்துவிட்டன. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதற்கு இந்தப் பிரபஞ்சத்தை குறித்தும் அதன் நியதிகளைக் குறித்தும் சிந்திக்கும்படி கூறும் ஒரு மார்க்கத்தில் இது எப்படிச் சரியான ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படும்?

*இறுதியாக வளைகுடா நாடுகளில் நீர் மேலாண்மை தொடர்பாக ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதில் இஸ்றவேலும் கலந்துகொண்டது. ஏன் தெரியுமா? அவர்கள்தாம் இதில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்கள். நம் முடைய நிபுணத்துவமோ வரம்புக்குட்பட்டதாக இருக்கிறது. செல் வத்தை, பதவியை அளவுகடந்து நேசிப்பதில்தான் நாம் நிபுணர்களாக இருக்கிறோம்!*

*இந்த அத்தியாயம் முஸ்லிம்களை இவ்வாறு எச்சரிக்கிறது. அவர்கள் உலகளாவிய போட்டியின் பங்குதாரர்கள். அதற்காகத் தயார்படுத்திக் கொண்டவர்களைத் தவிர வேறு யாரும் அந்தப் போட்டியில் வெற்றி பெற முடியாது: 'உங்கள் இறைவனின் மன்னிப்பை நோக்கியும் வானம், பூமியின் அளவு விசாலமான சுவனத்தை நோக்கியும் விரையுங்கள். அது அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண் டோருக்காகத் தயார்செய்யப்பட்டுள்ளது... (21)' இது எந்த வகையான போட்டி?*

*நம்பிக்கையாளர்கள் தங்களிடம் உள்ளவற்றை முன்வைத்து தங்களின் மார்க்கத்துக்கு உதவிசெய்கிறார்கள். நிராகரிப்பாளர்கள் தங்களிடம் உள்ளவற்றை முன்வைத்து தங்களின் மார்க்கத்துக்கு உதவிசெய்கிறார்கள். இவ்வாறுதான் இந்தப் பூமியின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் நாடிவிட்டான். 'அல்லாஹ் நாடியிருந்தால் அவனே அவர் களைத் தண்டித்திருப்பான். ஆயினும், அவன் உங்களில் சிலரைச் சிலரைக் கொண்டு சோதிக்கிறான் ... (47:4)'*

*இன்று இஸ்லாத்தை எதிர்க்கும் கூட்டங்களைக் காணும் ஒருவர் ஆச்சரியப்பட்டுப்போவார். பெரும் கடலின் வடக்குப் பகுதியிலிருந்து தெற்குப் பகுதிவரை தவ்ஹீதின் கொடியைச் சுமந்திருக்கும் ஒரு போர்க் கப்பலைக்கூட அவர் காண மாட்டார். ஆனால் அதே சமயம், மற்றவர்கள் போர்க் கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் விமானங்களையும் பெற்றிருப்பதைக் காண்பார்.*

*அல்லாஹ் கூறுகிறான்:*

> *நாம் நம் தூதர்களைச் சான்றுகளுடன் அனுப்பினோம். மனிதர்கள் நீதியில் நிலைத்திருக்கும் பொருட்டு அவர்களுடன் வேதத்தையும் துலாக்கோலையும் (நீதி) அருளினோம். நாம் இரும்பையும் அருளி னோம். அதில் பெரும் வலிமையும் மக்களுக்குப் பயன்களும் உள்ளன. இது ஏனெனில், அல்லாஹ்வைக் காணாமலேயே அவனுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் உதவிபுரிபவர்கள் யார்*

என்பதை அவன் அறிந்துகொள்வதற்காகத்தான். நிச்சயமாக அல்லாஹ் வல்லமைமிக்கவனாகவும் யாவற்றையும் மிகைத்த வனாகவும் இருக்கிறான். (25)

அல்லாஹ் பல தனித்தன்மைகளைக் கொண்ட இரும்பைப் படைத் துள்ளான். அதைக் கொண்டு போர்க் கருவிகளையும் அன்றாடப் பயன் பாட்டுக்கான கருவிகளையும் செய்ய முடியும். நாம் அதன் தனித் தன்மைகளை ஆராய்ந்தோமா? அவற்றைக் கொண்டு நம்முடைய இராணுவத்தைப் பலப்படுத்துவதிலும் நாட்டின் வளர்ச்சியிலும் பயன டைந்தோமா? அல்லாஹ் நமக்குக் காட்டியபின்னரும் நாம் இந்த விசயத்தில் மற்றவர்களையே சார்ந்துள்ளோம். ஒருவேளை நாம் அதைப் பயன்படுத்தினாலும் அதைக் கொண்டு சத்தியத்தைப் பாதுகாப்பதற்கான ஆயுதங்கள் செய்வதற்குப் பதிலாக இறைச்சியைச் சுடுவதற்காக அடுக்கிவைக்கப் பயன்படும் கருவிகளையே செய்கிறோம்.

இந்த உலகின் பொருள்களோடு நாம் வலுவான தொடர்புகொண்டுள் ளோம். ஆனால், மறுமையோடு நம்முடைய தொடர்பு கற்பனையள வில்தான் இருக்கிறது. இது உண்மையாக இருந்தால் நமக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில், இந்த உலகம்குறித்த நம் அறிவுகள் பூஜ்யத்தில் தடுமாறிக்கொண்டிருக்கின்றன.

அதன் நியதிகளில் எதையும் அறியாதவர் எப்படி அதனை ஆட்சிசெய்ய முடியும்?

உலகியல் வசதிகளில் மக்களிடையே காணப்படும் முடியளவு வேறு பாட்டைக்கூட நாம் கண்டுவிடுகிறோம். ஆனால், அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் காணப்படும் பெரிய அளவு வேறுபாட் டைக் கூட நாம் காண்பதில்லை. இன்று முஸ்லிம்கள் கடினமான ஒரு சூழலில் இருக்கிறார்கள். இந்த உலகில் மிகவும் குறைவானவர்களாக இருக்கக்கூடிய யூதர்கள் - சிரியா என்றொரு நாட்டின் மக்கள் தொகையை விடக் குறைவானவர்களாக இருக்கிறார்கள் - உலகின் ஐந்தில் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய இஸ்லாமிய உலகை ஆதிக்கம் செலுத்த விரும் புகிறார்கள். கிறிஸ்தவர்கள், சிலை வழிபாட்டாளர்கள், இன்னபிற கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் ஆகியோர் உலகின் பல பகுதிகளில் அவர்களுக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அத்தியாயம் யாருக்கு அருளப்பட்டதோ அவர்கள் இது கூறுவதை இப் போது உணர்கிறார்களா?

அல்லாஹ்வின் பக்கம் திரும்புமாறும் அவனுடைய தூதரைப் பின்பற்றுமாறும் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தும் இரண்டு வசனங்களோடு

இந்த அத்தியாயம் நிறைவடைகிறது. இந்த மார்க்கத்தின் முன்னோர்கள் இந்தக் குர்ஆனைக் கவனத்தோடு வாசித்து சிந்தித்துப் பார்த்தபோது தாழ்ந்த இடத்திலிருந்து சிகரத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய குறைவான மனிதர்களாக இருந்தார்கள். பின்னர், கடின உழைப்பின் மூலம் பாதையை வகுத்துக்கொண்டு ஒரு கூட்டமாக ஆனார்கள். எண்ணத்தக்க சில ஆண்டுகளுக்குள்ளேயே ஒரு இஸ்லாமிய அரசாக மாறினார்கள். அவர்களுக்கு முன்னால் நூற்றாண்டு களாக நிலைத்திருந்த அரசுகள் எல்லாம் வீழ்ந்தன. வரலாறு மீண்டும் திரும்புவதற்கு எவ்வித தடையும் இல்லை, முஸ்லிம்கள் தங்களின் வேதத்தின் பக்கம் திரும்பும்போது, தங்கள் தூதரின் பாதையில் நடை போடும்போது.

இந்த அத்தியாயத்தில் இறுதியாக அல்லாஹ் கூறுகிறான்:

நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனுடைய தூதரின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவன் தன் அருளிலிருந்து இரு மடங்கு உங்களுக்கு வழங்குவான். உங்களுக்கு ஒளியையும் வழங்குவான். அதன் ஒளியில் நீங்கள் செல்வீர்கள். உங்களை மன்னித்தும் விடுவான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். அது, இதன் மூலம் வேதக்காரர்கள், 'அல்லாஹ்வின் அருளில் தங்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. அவனது அருள் அவனது கரத்தில்தான் உள்ளது. தான் நாடியோருக்கு அவன் அதனை வழங்குகிறான்.' என்பதை அறிந்துகொள்வதற்காகத்தான். அல்லாஹ் பேரருள் புரிபவனாவான். (28,29)

❖ ❖ ❖

அத்தியாயம் 58

# அல்முஜாதலா

(தர்க்கம்செய்தல்)

*இந்த அத்தியாயம் திருக்குர்ஆனின் இருபத்து எட்டாவது பாகத்தின் முதல் அத்தியாயமாகும். இது முழுவதும் மதீனாவில் அருளப்பட்டதாகும். மதீனாவில் இருந்த சமூகம் பலதரப்பட்ட மனிதர்களைக் கொண்டதாக இருந்தது. அங்கு இந்த உலகின் பல பாகங்களிலும் ஈமானியப் பயணக் குழுவை வழிநடத்தும் பொருட்டு வஹீயால் உருவாக்கப்பட்ட நம்பிக் கையாளர்களும் விலகிச் செல்லும் இரவின் வால்பகுதியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த சிலை வழிபாட்டாளர்களும் தங்கள் இனத்தை வழிபடக்கூடிய, தங்களின் மனஇச்சைகளை மற்றவர்களின் மீது திணிக் கக்கூடிய யூதர்களும் தங்களின் நலன்களுக்குப் பின்னால் ஓடக்கூடிய, பல நிறங்களில் வெளிப்படக்கூடிய நயவஞ்சகர்களும் இருந்தார்கள்.*

*இந்த அத்தியாயம் சிறியதாக இருந்தபோதிலும் இவர்கள் அனை வரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. மனைவியரை அன்னையரோடு ஒப்பிடும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அவ்வாறு கூறுவது விவ காரத்து ஆகாது என்று கூறி அதற்கான பரிகாரத்தையும் முன்வைத்தது. இஸ்லாம் குடும்ப விவகாரங்களில் அதிக கவனமெடுத்து அதன் வரம்பு களைத் தெளிவுபடுத்துகிறது. இங்கு அல்லாஹ் கூறுகிறான்: 'இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். நிராகரிப்பாளர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு. (4)'*

*அல்பகறா என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது: 'இவை அல் லாஹ்வின் வரம்புகளாகும். இவற்றை மீறிவிடாதீர்கள். (2:229)' அந்நிசா என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது: 'இவை அல்லாஹ்வின் வரம்பு களாகும். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிவோரை அவன் சுவனச் சோலைகளில் நுழையச்செய்வான். அவற்றில் ஆறுகள்*

ஓடிக்கொண்டிருக்கும். (4:13)’ இங்கு வரம்புகள் என்ற வார்த்தை சில குற்றங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளைக் குறிப்பதல்ல.

திருக்குர்ஆனின் வழிமுறைகளில் ஒன்று, அது சட்டங்களைக் கொள்கையோடு கலந்து கூறுகிறது. ஏனெனில், அதனைப் பின்பற்றுவது ஈமானின் ஓர் அம்சம் என்பதாலும் அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துவதன் ஒரு வடிவம் என்பதாலும்தான். ஆகவே, அதற்குப் பிறகு அவன் கூறுகிறான்:

> வானங்களிலும் பூமியிலும் உள்ள யாவற்றையும் அல்லாஹ் அறிவான் என்பதை நீர் பார்க்கவில்லையா? மூன்று மனிதர்களிடையே இரகசியப் பேச்சு எதுவும் நடப்பதில்லை, அவர்களிடையே நான்காவதாக அல்லாஹ் இல்லாமல். ஐந்து மனிதர்களிடையே இரகசியப் பேச்சு எதுவும் நடப்பதில்லை, அவர்களிடையே ஆறாவதாக அல்லாஹ் இல்லாமல். இதனைவிடக் குறைவாக இருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் அவர்கள் எங்கிருந்தபோதிலும் அவன் அவர்களுடனேயே இருக்கிறான். (7)

அதற்குப் பிறகு அத்தியாயம் யூதர்களின் பக்கம் திரும்புகிறது. அவர்கள் முஸ்லிம்களுக்கு முகமன் கூறினால் அஸ்ஸாமு அலைக்கும் - உங்களுக்கு மரணம் உண்டாகட்டும் - என்று கூறிவந்தார்கள். அவர்கள் சலாம் என்ற வார்த்தையை ஒத்ததாக இருக்கும் சாம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி முஸ்லிம்களைப் பழித்தார்கள். அவர்கள் அழிய வேண்டும் என விரும்பினார்கள். இதனைச் செவியுற்ற அன்னை ஆயிஷா, அவர்களின் நோக்கத்தை அம்பலப்படுத்தினார். அவர்களைக் கண்டித்தார். ஆனால் நபியவர்கள் அதைவிட மென்மையான ஒரு வழிமுறையைப் பின்பற்றினார்கள். இந்த வசனம் அருளப்பட்டது:

> அவர்கள் உம்மிடம் வந்தால் அல்லாஹ் உமக்கு முகமன் கூறாத முறைப்படி முகமன் கூறுகிறார்கள். அவர்கள் தம் உள்ளங்களில், ‘இப்பேச்சுக்காக அல்லாஹ் நம்மை ஏன் தண்டிப்பதில்லை?’ என்று கூறிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு நரகமே போதுமானது. அதில் அவர்கள் நுழைந்தே தீருவார்கள். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். (8)

பின்னர் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு, அவர்கள் தங்களின் சபைகளிலோ தங்கள் எதிரிகளுடன் பேசும்போதோ குரோதத்தை விட்டு விலகியிருக்கும்படியும் இந்த விசயத்தில் யூதர்களைப் போன்று செயல்படாமல் இருக்கும்படியும் கட்டளையிடுகிறான். யூதர்களும் நயவஞ்சகர்களும்

*ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்போது முஸ்லிம்களை நெருக்கடிக்குள் ளாக்குவதற்காகவும் அவர்களுக்குத் தனிமையுணர்வை ஏற்படுத்துவதற் காகவும் இரகசியமாகப் பேசுவதைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் அவர்கள் பணிக்கப்படுகிறார்கள்.*

> *தீய நோக்கங்களுக்காக இரகசியம் பேசுவது ஷைத்தானியச் செய லாகும். அது, அதன் மூலம் அவன் நம்பிக்கையாளர்களைக் கவலை யடையச் செய்வதற்காகத்தான். அல்லாஹ்வின் அனுமதியின்றி அவர்களை அவனால் கவலையடையச் செய்ய முடியாது. நம்பிக்கை யாளர்கள் அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருக்க வேண் டும்.* (10)

*இஸ்லாம் ஒரு மனிதனின் ஈமான், கல்வி ஆகியவற்றுக்கேற்ப அவ னுக்குப் படித்தரத்தை வழங்குகிறது. தொழுகை வரிசையில் நிற்பது குறித்து நபியவர்கள் கூறுகிறார்கள், 'உங்களில் அறிவுடையோர் எனக்கு அருகில் நிற்கட்டும்.' பொதுவான சபைகளைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'உங்களில் நம்பிக்கையாளர்களுக்கும் அறிவு வழங்கப் பட்டோருக்கும் அல்லாஹ் உயர்ந்த பதவிகளை வழங்குவான். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கிறான்.* (11)*'*

*முஸ்லிம்கள் தங்களின் தூதரை அளவுகடந்து நேசிக்கிறார்கள். ஏன் அவர்கள் அவ்வாறு நேசிக்கக் கூடாது? அவர்தானே அவர்களை இருள் களிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவந்தார். அவர்களுக்கு அவர் களின் படைப்பாளனையும் வாழ்வாதாரம் அளிப்பவனையும் அறிமுகப் படுத்தி வைத்தார். அவர்கள் ஒரே வரிசையில் நின்று அவனைப் புகழ் கிறார்கள். இரவிலும் பகலிலும் அவனிடமே நேர்வழியை வேண்டு கிறார்கள். மேலும், அவரது உன்னதமான ஆளுமை நேசிப்பதற்கும் கண்ணியப்படுத்துவதற்கும் தகுதியானது. முழுமையடைந்த மனிதன் எங்கிருந்தாலும் அவன் நேசிக்கப்படத் தகுதியானவன். ஆகவே, அவரைச் சுற்றி அமர்வதற்கும் அவருடன் பேசுவதற்கும் ஒழுங்குமுறைகள் நிர்ண யிக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும். அப்போதுதான் அவரால் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் நேரம் ஒதுக்க முடியும். ஆகவே, இந்த வசனம் அருளப்பட்டது:*

> *நம்பிக்கையாளர்களே, நீங்கள் தூதருடன் தனிமையில் பேசுவதாயின் அவ்வாறு பேசுவதற்கு முன் சிறிது தர்மம்செய்யுங்கள். இது உங்க ளுக்குச் சிறந்ததும் தூய்மையானதும் ஆகும். ஆனால், நீங்கள் எதையும் பெறவில்லையெனில், அல்லாஹ் பெரும் மன்னிப்பா ளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான்.* (12)

இவ்வாறு செய்வது நம்பிக்கையாளனுக்குக் கடினமான ஒன்றாக இருந்தால் அவனுக்கு முன்னால் ஏராளமான நற்செயல்கள் இருக்கின்றன. அவன் தன் இறைவனைத் திருப்திப்படுத்துவதற்குத் தன்னால் இயன்ற செயல்களில் ஈடுபட்டுக்கொள்ளட்டும். தூதருடன் பேசுவதைவிட இது அவனுக்குச் சிறந்ததாக அமையும். பொதுவாகவே பெரிய ஆளுமை களுடன் உரையாடுவது மிகவும் இனிமையான ஒன்றாகும். ஆனாலும் அவர்கள் தங்களின் மார்க்கத்துக்கு உதவிசெய்வது அதைவிட முக்கிய மானதாகும்.

*நீங்கள் உங்களின் இரகசியப் பேச்சுக்கு முன்னால் தர்மங்கள் கொடுக்க வேண்டுமே என்று பயந்துவிட்டீர்களா? அவ்வாறு செய்ய இயலவில்லையெனில் அறிந்துகொள்ளுங்கள், அல்லாஹ் உங்களை மன்னித்துவிட்டான். ஆகவே, தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தையும் அளித்து வாருங்கள்.* (13)

நம்பிக்கையாளர்கள், இணைவைப்பாளர்கள், வேதக்காரர்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் கலந்து வாழும் ஒரு சமூகத்தில் பொருளாதார, இலக்கிய நலன்கள் பின்னிப்பிணைந்து காணப்படும். அங்கு மார்க்கத் தின் அடிப்படையான அம்சங்களும் கடுமையான முறையில் சோத னைக்குள்ளாக்கப்படும். ஒரு மனிதன் தன் உறவினருக்காக, வியாபாரத் துக்காகத் தன் கொள்கையை அல்லது கருத்தைவிட்டு விலகலாம். இதைத் தான் ஒரு கவிஞர் தம் கவிதையில் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்:

> ‘ஒன்று நீ உண்மையாக என் சகோதரனாக இருக்க வேண்டும். நான் உன்னிடமிருந்து என் எடை குறைவதையும் உணர வேண்டும். அல்லது, என்னைவிட்டு விலகி என்னை எதிரியாக ஆக்கிவிடு. நான் உன்னிடமிருந்து தப்புகிறேன். நீ என்னிட மிருந்து தப்பிவிடு.’

நயவஞ்சகம் கொடிய நோயாகும். பொய்சத்தியம் செய்வது நயவஞ் சகர்களுக்கு மிகவும் இலகுவான காரியம். ஆகவே, இந்த வகையினரை வர்ணித்தவாறு அல்லாஹ் கூறுகிறான்:

*அல்லாஹ்வின் கோபத்துக்குள்ளான மக்களுடன் நட்பு கொள்பவர் களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் உங்களைச் சார்ந்தவர்கள் அல்லர், அவர்களைச் சார்ந்தவர்களும் அல்லர். அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வின் மீது பொய்யாகச் சத்தியம் செய்கி றார்கள். அல்லாஹ் அவர்களுக்காகக் கடும் வேதனையைத் தயார் படுத்தி வைத்துள்ளான். நிச்சயமாக அவர்கள் செய்யும் காரியம் மிகவும் கெட்டதாகும்.* (14,15)

*வாழ்க்கையில் குறிப்பிட்ட வழிமுறைக்குப் பழக்கப்பட்டவர் அந்த நிலையில்தான் மரணிப்பார். அதே நிலையிலேயே மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவார். நம் நாட்டில் ஒரு சொல் உண்டு, கிதார் வாசிப்பவன் மரணித்துவிட்டாலும் அவனுடைய விரல்கள் கிதார் வாசித்துக்கொண்டேதான் இருக்கின்றன. அவர் மரணித்தது போன்றே எழுப்பப்படவும் செய்வார். இந்த உலகில் பொய்யனாக இருந்தவன் மறுமையிலும் பொய்யனாக இருக்க முயல்வான். தன் சத்தியம் தன்னைக் காப்பாற்றும் என்று எண்ணி பொய்சத்தியம் செய்வான். 'அல்லாஹ் அவர்கள் அனைவரையும் எழுப்பும் நாளில் உங்களிடம் பொய்யாகச் சத்தியம்செய்வது போன்றே அவனிடமும் சத்தியம்செய்வார்கள். தாங்கள் ஏதோ ஒரு விசயத்தின் மீது இருப்பதாக அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். அறிந்துகொள்ளுங்கள், அவர்கள்தாம் பொய்யர்கள். (18)' 'அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறாகச் செயல்படுபவர்கள்தாம் மிகவும் இழிவானவர்கள். (20)'*

இந்த வகையான குழப்பங்களிலிருந்து விடுபடவும் உண்மையான ஈமானையும் பொய்யான ஈமானையும் வேறுபடுத்தும் பொருட்டும் தங்களின் கொள்கைகளை வெளிப்படையாக அறிவிக்கும் படியும் அவர்களை விட்டு விலகியிருக்கும்படியும் அவர்களோடு கடினமாக நடந்துகொள்ளும்படியும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்குக் கட்டளையிடுகிறான்.

> *அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்ட மக்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறாகச் செயல்படுவோருடன் நட்பு கொள்வதை நீர் காண மாட்டீர். அவர்கள் தம் பெற்றோர்களாயினும் பிள்ளைகளாயினும் சகோதரர்களாயினும் இன்னும் தம் குடும்பத்தினராயினும் சரியே. அல்லாஹ் இத்தகையவர்களின் இதயங்களில் நம்பிக்கையை எழுதி, தன் அருளால் அவர்களைப் பலப்படுத்திவிட்டான் ... (22)*

❖ ❖ ❖

அத்தியாயம் 59

# அல்ஹஷ்ர்

(ஒன்றுகூட்டுதல்)

*‘வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வைப் புகழ்கின்றன. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கிறான். (1)’ இங்கு யூதர்கள் தங்கள் வீடுகளி லிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு அல்லாஹ்வின் புகழ் இடம்பெறு வது அல்அன்ஆம் என்ற அத்தியாயத்தில் அநியாயக்காரர்கள் அழிக் கப்பட்டுப் பூமி தூய்மைப்படுத்தப்பட்டபிறகு இடம்பெறும் அல்லாஹ் வின் புகழைப் போன்றதாகும். ‘ஆகவே, அக்கிரமக்கார மக்கள் அடி யோடு அழிக்கப்பட்டார்கள். படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (6:45)’ பூமி யிலிருந்து அநியாயக்காரர்கள் அகற்றப்படுவது பெரும் அருட் கொடை யாகும். ஒவ்வொரு மனிதனும் தன் உரிமைகளை அனுபவித்து வாழ்வது பெரும் அருட்கொடையாகும். ஒரு மனிதன் அச்சமற்றவனாக, ஆரோக்கியமான உடலைப் பெற்றவனாக, அநியாயக்காரர்களின் ஆதிக் கத்துக்கு உட்படாதவனாகக் காலைப் பொழுதை அடைவது எவ்வளவு மகத்தானது!*

*மதீனாவில் வாழ்ந்த யூதர்கள் தங்களைத் தவ்றாத்தைப் பின்பற்று பவர்கள் என்று கூறிக்கொண்டார்கள். ஆனால் அவர்களே வஹீயைக் கண்ணியப்படுத்தவில்லை; நீதியைப் பரப்பவில்லை; ஓரிறைக் கொள் கைக்கு உதவிசெய்யவில்லை; மறுமைநாளைக் குறித்து எச்சரிக்கவும் இல்லை. இஸ்லாம் வந்தபோது சிலை வழிபாட்டாளர்களை அல்லாஹ் வின் பக்கம் அழைத்தது. அதனால் யூதர்கள் நெருக்கடிக்குள்ளானார்கள். போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்தார்கள். தங்களின் இருப்பிடங்களில் கோட்டைகளை அமைத்துக்கொண்டார்கள். அவற்றை யாராலும் தகர்க்க முடியாது என்று அவர்கள் எண்ணிக்கொண்டார்கள்.*

*அவர்கள் வெளியேறுவார்கள் என்று நீங்கள் நினைத்தும் பார்க்க வில்லை. தங்களின் கோட்டைகள் அல்லாஹ்விடமிருந்து தங் களைக் காப்பாற்றும் என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் அல்லாஹ் அவர்கள் நினைத்துப் பார்க்காத இடத்திலிருந்து அவர் களை வந்தடைந்தான். அவர்களின் உள்ளங்களில் அச்சத்தை ஏற் படுத்திவிட்டான். அவர்கள் தம் கைகளாலும் நம்பிக்கையாளர்க ளின் கைகளாலும் தம் வீடுகளைப் பாழ்படுத்திக்கொண்டார்கள்.*(2)

அவர்கள் மதீனாவில் நீடிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கவே செய்தன. ஆனால், திடீரென அவர்கள் தூதரைக் கொலைசெய்வதற்குத் திட்டம் தீட்டினார்கள். அவர்கள் ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தூதர் உணர்ந்த போது தாம் இருந்த இடத்திலிருந்து மதீனாவை நோக்கித் திரும்பினார். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று முடிவுசெய்தார். *'காரணம், அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்தார்கள். அல்லாஹ்வுக்கு மாறுசெய்பவர் அறிந்துகொள்ளட்டும், அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன்.* (4)' இவ்வாறு அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திரும்பிச் சென்றார்கள்.

இந்த அத்தியாயம் முதல் முறையாக அவர்கள் வெளியேற்றப்பட்ட தைக் குறிப்பிடுகிறது. அவர்கள் விரைவாகவோ தாமதமாகவோ இன் னொரு முறையும் வெளியேற்றப்படுவார்கள். அவர்களுடன் சேர்ந்து நாமும் அதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். முஸ்லிம்களின் அலட்சியத்தால் யூதர்கள் தங்களுக்கென ஒரு நாட்டை அமைத்துக் கொண்டார்கள். அதன் மூலம் அவர்கள் என்ன செய்தார்கள்? அல் லாஹ்வை நினைவுகூர்ந்தார்களா? அல்லது, மறுமைநாளை நம்பக் கூடியதாக நவீன நாகரிகத்தை ஆக்கினார்களா? அவர்கள் முஸ்லிம்களின் பலவீனத்தையும் சோம்பேறித்தனத்தையும் பயன்படுத்திக்கொண்டார் கள். ஐரோப்பியர்கள், அமெரிக்கர்களுடன் இணைந்து வஹீயின் போத னைகளை அழிப்பதற்கும் காளைக் கன்றின் வழிபாட்டை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் தங்களின் வழிகாட்டலின் பக்கம் திரும்பும்போது, தங்கள் இறைவனுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளும்போது மீண்டும் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள். யூதர்கள் எங்கிருந்து வந்தார் களோ அங்கேயே திரும்பிச் செல்வார்கள். நபியவர்கள் பனூ நளீர் குலத்தார் வாழ்ந்த நிலங்களை ஏழை முஹாஜிர்களுக்கு அன்பளிப்பாக அளித்தார்கள். இதன் மூலம் மதீனாவின் இஸ்லாமியச் சமூகத்தில் சம நிலை திரும்பிவந்தது. ஏனெனில், முஹாஜிர்கள் மக்காவில் தங்களின் வீடுகளையும் செல்வங்களையும் விட்டுவிட்டு வந்தவர்கள். அவர்கள்

அல்லாஹ்வுக்காகக் கடுமையான சோதனைகளையும் இழப்புகளையும் தாங்கிக்கொண்டார்கள். ஆனாலும் அன்ஸாரிகள் அவர்களை உபசரித்தார்கள். அவர்களுக்காகத் தங்கள் உள்ளங்களையும் வீடுகளையும் திறந்தார்கள். மிகச் சிறந்த தீர்வாக, நபியவர்கள் யூதர்கள் விட்டுச்சென்றதை முஹாஜிர்களுக்குப் பங்கிட்டு அளித்தார்கள். இதற்கான காரணமாக அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகிறது: 'இவ்வாறு பங்கிடப்பட்டுள்ளது ஏனெனில், உங்கள் செல்வந்தர்களிடையே அது சுற்றிக்கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான். (7)' பின்னர் முஹாஜிர்களின் நிலை தெளிவுபடுத்தப்படுகிறது.

> தங்கள் வீடுகளையும் சொத்துகளையும்விட்டு வெளியேற்றப்பட்ட புலம்பெயர்ந்த ஏழைகளுக்கும் அது உரியதாகும். அவர்கள் இறைவனின் அருளையும் அவனது திருப்தியையும் நாடி அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவிபுரிகிறார்கள். அவர்கள்தாம் உண்மையாளர்கள். (8)

இதன் மூலம், நீதியான அடித்தளங்களின் மூலம் சமூகம் நிலைபெற்றது. அது தம்முடைய பணியை நிறைவேற்றத் தொடங்கியது.

நம்முடைய காலத்தில் இருப்பதுபோன்று நபியவர்களின் காலத்திலும் நயவஞ்சகர்கள் இருந்தார்கள். அவர்கள் யூதர்களுடன் இணைந்து வாழ்வதில் எவ்வித சிரமத்தையும் உணரவில்லை. உண்மையில் இரு சாராருக்கும் எந்த மார்க்கமும் கிடையாது. யூதர்களிடத்தில் மார்க்கம் என்பது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதோ நடத்தையைச் சீர்படுத்துவதோ மனமுவந்து அளிப்பதோ அல்ல. அது பேராசையும் விசித்திரமான கடும்போக்கும் கொண்டது. அறபுகளில் இருந்த நயவஞ்சகர்களும் அல்லாஹ் வஹீயின் மூலம் தங்களின் படித்தரத்தை உயர்த்தும் பொருட்டுத் தங்களிலிருந்தே ஒரு தூதரைத் தேர்ந்தெடுத்துள்ளான் என்பதை உண்மைப்படுத்தவில்லை. அவர்கள் உலக ஆதாயங்களை மட்டுமே விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆகவே, அவர்கள் ஒருவருக்கொருவர் பழகிக்கொள்வதிலும் உதவிசெய்வதிலும் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

> நயவஞ்சகர்களை நீர் பார்க்கவில்லையா? வேதக்காரர்களில் நிராகரிப்பாளர்களாக உள்ள தங்கள் சகோதரர்களிடம் அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் வெளியேற்றப்பட்டால் நாங்களும் உங்களுடன் வெளியேறிவிடுவோம். உங்கள் விவகாரத்தில் நாங்கள் எவருக்கும் கீழ்ப்படிய மாட்டோம். உங்கள்மீது போர் தொடுக்கப்பட்டால் நாங்கள் உங்களுக்கு உதவிபுரிவோம். அவர்கள் பொய்யர்கள் என்பதற்கு அல்லாஹ்வே சாட்சி கூறுகிறான். (11)

*யூதர்கள் மறுமையோடு கொண்ட தொடர்பு மிகமிக பலவீனமானது. அவர்கள் வைத்திருக்கும் பழைய ஏற்பாடு மறுமையில் கிடைக்கும் நற்கூலிகள்குறித்தோ தண்டனைகள் குறித்தோ சுவனம், நரகம் குறித்தோ பேசுவதில்லை. அது கடின உள்ளம் கொண்ட அந்தச் சமூகத்தின் வறண்ட வரலாறாகவே இருக்கிறது. இந்தச் சிந்தனைதான் நவீன நாகரிகத்தையும் ஆக்கிரமித்துள்ளது. இன்றைய தினத்தை மட்டும் வணங்கும்படி, இதற்குப் பின்னால் இருக்கக்கூடியவற்றை மறந்துவிடும்படி பெரும்பாலோரை தூண்டிக்கொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் ஈசாவின் வாழ்க்கையை விட்டு விலகிய பிறகு அவர்களால் இந்தக் கோணலை எதிர்கொள்ள முடியவில்லை. மிகப் பெரிய இந்தத் தீங்கு இந்த உலகம் முழுவதிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*ஆகவே, இந்த அத்தியாயம் மனிதர்களை அல்லாஹ்வை அறிவதன் பக்கம், அவனிடம் உள்ளதைத் தேர்ந்தெடுப்பதன் பக்கம் உந்தித் தள்ளு கிறது. மறுமையை நெருங்கிவரக்கூடிய நாளையாக ஆக்கி, நெருக்க மாக்கிவைக்கிறது.*

> *நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வொரு மனிதனும் தான் நாளைய தினத்துக்காக எதனைச் சேர்த்து வைத் துள்ளான் என்பதைக் கவனிக்கட்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கிறான். அல்லாஹ்வை மறந்துவிட்டவர்களைப் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள். அதனால் அவர்கள் தங்களையே மறக்கும் படி செய்துவிட்டான். அவர்கள்தாம் பாவிகளாவர்.* (18-19)

*அறபுகளுக்கும் யூதர்களுக்கும் மத்தியில் மிகப் பெரிய போர் நிகழும். யூதர்கள் தங்களுக்கு உதவிசெய்யும், இஸ்லாத்தை வெறுக்கும், ஈசா வையோ முஹம்மதையோ அறியாத ஐரோப்பியர்களை ஒருபோதும் இழக்க மாட்டார்கள். ஆனாலும் பதிலளிக்கப்பட வேண்டிய ஒரு கேள்வி இருக்கிறது: முஸ்லிம்கள் எப்போது இஸ்லாத்தில் நுழைவார்கள்? அவர் கள் எப்போது இஸ்லாத்தின் ஆன்மாவைக் கொண்டு தங்களை அலங் கரித்துக்கொள்வார்கள்? அதன் சட்டங்களின் நிழலில் வாழ்வார்கள்? குர்ஆனின் கொடியின் கீழ் எப்போது செல்வார்கள்? அவர்களின் தூதர் பள்ளிவாசலிலிருந்து அவர்களை வழிநடத்தினார். அவர்களைக் கல்வி யறிவு பெற்றவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் ஆக்கினார். அவர்கள் உலகின் மேற்குப் பகுதிகளையும் கிழக்குப் பகுதிகளையும் அடைந்தபோது மக்கள் கூட்டம்கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவினார்கள்.*

> *நாம் இந்தக் குர்ஆனை ஒரு மலையின் மீது இறக்கியிருந்தால் அது இறையச்சத்தால் நடுங்கி பிளந்துவிடுவதைக் கண்டிருப்பீர்.*

மனிதர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இத்தகைய உதாரணங்களை நாம் அவர்களுக்கு விளக்குகிறோம். (21)

இந்த அத்தியாயம் அல்லாஹ்வின் பெயர்களில் இருபது பெயர்களைக் கொண்டு நிறைவடைகிறது. அவை அல்லாஹ்வுடனான தொடர்பின் இயல்பை விவரிக்கின்றன.

மற்ற மதங்கள் மிகைத்திருந்த காலகட்டம் இந்த உலகில் தீய மன இச்சைகளின் ஆதிக்கம் மிகுந்திருந்த காலகட்டமாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் இஸ்லாம் இவ்வுலகில் மனித வாழ்வை மேம்படுத்துவதற்காகப் போராடுகிறது. மறுவுலகில் அல்லாஹ்விடத்தில் அவர்களுக்கு எவ்வித கவலையும் இல்லை.

❖ ❖ ❖

அத்தியாயம் 60

# அல்மும்தஹினா

(சோதித்தல்)

*நம்பிக்கையாளன் இழிவை ஏற்றுக்கொள்ள மாட்டான். அநியாயக் காரனை எதிர்கொள்வதற்காகத் தன் ஆற்றல்கள் அனைத்தையும் அவன் செலவுசெய்வான். அவன் மிகைக்கப்பட்டாலும் எதிர்த்துநிற்பான். இன்று அவன் பொறுத்திருந்தாலும் நாளை அவன் தன் நோக்கத்தை அடைந்தே தீருவான். அல்லாஹ்வின் இந்த வசனமும் இதைத்தான் கூறுகிறது: 'அவர்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் பழிவாங்குவார்கள்.* (42:39)'

*முஸ்லிம்கள் மக்காவின் ஆரம்ப வரலாற்றில் தோல்வியைத் தழுவி னார்கள். அவர்கள் தங்களின் வீடுகளிலிருந்து அநியாயமாக விரட்டி யடிக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் அநியாயத்துக்கு முன்னால் சரணடையவில்லை. தங்கள் எதிரிகளுடன் வலிமிகுந்த போரில் ஈடு பட்டார்கள். பொறுமையாக நிலைத்துநின்றார்கள். இறுதியில் அல் லாஹ்வின் உதவி வந்தது. மனிதர்களில் சிலர் தற்காப்பு யுத்தம் செய்வ தற்குக்கூட அஞ்சுகிறார்கள். அதனைச் சூழலை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாகக் கருதுகிறார்கள். தங்கள் உயிரை அல்லது தங்கள் குடும்பத் தாரின் உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு எதிரிகளுக்கு முன்னால் இழி வடைந்து நிற்பதை ஒரு பொருட்டாக அவர்கள் கருதுவதில்லை. இத் தகையவர்களுக்கு அல்லாஹ் கூறுகிறான்:*

*நம்பிக்கையாளர்களே, எனக்கும் உங்களுக்கும் பகைவர்களாக இருப்பவர்களை நண்பர்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். நீங்கள் அவர்களுடன் நட்பு பாராட்டுகிறீர்கள். ஆனால் அவர்களோ உங்க ளிடம் வந்துள்ள சத்தியத்தை நிராகரித்துவிட்டார்கள் ...* (1)

*யார் உங்கள்மீது ஆதிக்கம் செலுத்த, உங்களையும் உங்களின் மார்க்கத்தையும் இழிவுபடுத்த, உங்களைக் குழப்பத்தில் ஆழ்த்த*

விரும்புகிறார்களோ அவர்களுக்கு நீங்கள் கட்டுப்படுவது தோல்வியின் அடையாளங்களில் ஒன்றாகும்.

அவர்கள் உங்களை வெற்றிகொண்டு விட்டால் உங்களுக்குப் பகைவர்களாக ஆகிவிடுவார்கள். தம் கரங்களாலும் நாவாலும் உங்களுக்குத் தீங்களிப்பார்கள். நீங்களும் நிராகரிப்பாளர்களாக ஆகிவிட வேண்டும் என்று விரும்புவார்கள். (2)

ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு உண்மையாக இருப்பது என்பது அதனை ஏற்றுக்கொண்டவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்வதும் அதனை எதிர்ப்பவர்களிடமிருந்து விலகிவிடுவதும் அவர்களை எதிர்ப்பதும் ஆகும். இப்படித்தான் தூதர்களைப் பின்பற்றியவர்கள் எல்லாக் காலகட்டங்களிலும் நடந்துகொண்டார்கள். ஆகவே, அல்லாஹ் முஸ்லிம்களுக்குக் கூறுகிறான்:

உங்களுக்கு இப்றாஹீமிடத்திலும் அவருடைய தோழர்களிடத்திலும் அழகிய முன்மாதிரி இருக்கிறது. அவர்கள் தம் சமூகத்தாரிடம், ‘உங்களையும் அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குபவற்றையும் விட்டு நாங்கள் விலகிவிட்டோம். நாங்கள் உங்களை நிராகரித்து விட்டோம். அல்லாஹ் ஒருவனையே நீங்கள் நம்பும்வரை உங்களுக்கும் எங்களுக்குமிடையே நிரந்தர பகைமையும் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டன’ என்று கூறினார்கள். (4)

முஸ்லிம்கள் பகைமையை விலைகொடுத்து வாங்கவில்லை. வீம்பாகச் சண்டைக்குச் செல்லவில்லை. அவர்கள் தங்களின் மீது இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்தார்கள். தங்கள் மார்க்கத்தின்படி வாழும் உரிமையைக் கோரினார்கள். கொள்கை ரீதியில் முஸ்லிம்களுக்கும் அவர்களின் எதிரிகளுக்குமான தொடர்பு இவ்வாறு நிர்ணயம்செய்யப்படுகிறது:

யாரெல்லாம் மார்க்க விசயத்தில் உங்களுடன் போரிடவில்லையோ, உங்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றவில்லையோ அவர்களுடன் நீங்கள் நல்ல விதமாகவும் நியாயமாகவும் நடந்துகொள்வதைவிட்டு அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிக்கிறான். அவன் உங்களைத் தடுப்பதெல்லாம் யாரெல்லாம் மார்க்க விசயத்தில் உங்களுடன் போர் புரிந்தார்களோ, உங்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றினார்களோ, உங்களை வெளியேற்றுவதற்கு உதவிசெய்தார்களோ அவர்களுடன் நீங்கள் நட்பு கொள்வதைத்தான். அவர்களிடம் நட்பு கொள்பவர்கள்தாம் அநியாயக்காரர்கள். (8,9)

நாடுகளுக்கு மத்தியிலான ஒப்பந்தங்கள் மீறப்படுவதையும் மனித உரிமைகள் பறிக்கப்படுவதையும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் தாக்கப்படுவதையும் நாம் கண்டுகொண்டிருக்கிறோம். அவர்கள் தங்கள் வீடுகளை விட்டுவிட்டுப் பல ஆண்டுகளாக அகதிகள் முகாம்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதனை ஏற்றுக்கொள்வதிலா கண்ணியம் இருக்கிறது? இதற்கு எதிராகக் கோபம் கொள்வது மதவெறியாகுமா என்ன?

அல்லாஹ் நீதியை விரும்புகிறான். பலவீனமான முஸ்லிம்களை இவ்வாறு அடக்குமுறைக்குள்ளாக்குவதில் எங்கே நீதி இருக்கிறது?

உண்மையில் இந்தச் சூழலை மாற்றுவதற்காக எழுவது அல்லாஹ்வை வணங்குவதும் மனிதர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவதும் மனிதச் சமூகத்தைக் கண்ணியப்படுத்துவதும் ஆகும்.

வல்லரசுகள் தங்களின் நலன்களில் மட்டும்தான் அக்கறை கொண்டுள்ளன. மற்றவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை அவை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. ஆகவேதான் அல்லாஹ்வுக்காக நேசிப்பதும் அல்லாஹ்வுக்காக வெறுப்பதும் ஈமானின் அம்சங்களாகக் கூறப்பட்டுள்ளன. உங்களுக்குக் கிடைக்கும் ஆதாயத்துக்காக நீங்கள் அநியாயக்காரர்களை விரும்பினால் அல்லது உங்களுக்குக் கிடைக்காத ஆதாயத்துக்காக நீங்கள் நீதி செலுத்துபவர்களை வெறுத்தால் உங்களின் ஈமானே சந்தேகத்திற்கிடமானது. இதுபோன்ற உணர்வு போலியான ஈமானின் அடையாளங்களாகும்.

சத்தியத்துக்காகக் கோபம் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தி அத்தியாயம் தொடங்கியதுபோன்றே முடிவடையவும் செய்கிறது.

> நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளான மக்களுடன் நட்பு கொள்ளாதீர்கள். சவக்குழிகளில் வீழ்ந்து கிடக்கும் நிராகரிப்பாளர்கள் நம்பிக்கை இழந்ததைப் போல அவர்கள் மறுமையைப் பற்றி நம்பிக்கை இழந்துவிட்டார்கள். (13)

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது இணைவைப்பாளர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக அநீதியான, விசித்திரமான நிபந்தனைகளை முன்வைத்தார்கள். ‘யார் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு மதீனாவுக்கு வருகிறாரோ அவரை மதீனாவாசிகள் வரவேற்கக் கூடாது. யார் இஸ்லாத்தைத் துறந்துவிட்டு மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி வருகிறாரோ அவருக்கு மக்காவாசிகள் அடைக்கலமளிக்கலாம்.’ நபியவர்கள் அநியாயமான இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால்,

அந்த நிபந்தனைகளின் மூலம் மக்காவாசிகளே பாதிக்கப்பட வேண்டும் என்று அல்லாஹ் நாடிவிட்டான். அவர்களே அவற்றை மீறவும் செய்தார்கள்.

ஆனாலும் மக்காவிலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு வந்தவர்களில் சில பெண்களும் இருந்தார்கள். அவர்கள் எங்கே செல்வார்கள்? மதீனாவில் அவர்களை அனுமதிக்கும்படி வஹீ அருளப்பட்டது. அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது அனுமதிக்கப்பட்டதல்ல.

> நம்பிக்கையாளர்களே, நம்பிக்கை கொண்ட பெண்கள் புலம் பெயர்ந்து உங்களிடம் வந்தால் அவர்களைச் சோதித்துப்பாருங்கள் - அவர்களின் நம்பிக்கையை அல்லாஹ்வே நன்கறிவான் - அவர்கள் நம்பிக்கையாளர்கள்தாம் என்பதை நீங்கள் அறிந்துகொண்டால் அவர்களை நிராகரிப்பாளர்களிடம் திருப்பி அனுப்பிவிடாதீர்கள் ... (10)

அதே போன்று, இணைவைப்பாளர்களின் மனைவியர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு வந்தால் அந்த இணைவைப்பாளர்களுக்கு அளிக்க வேண்டியதை அளித்துவிடுமாறும் முஸ்லிம்கள் பணிக்கப்படுகிறார்கள். அதே போன்று, இஸ்லாத்தைத் துறந்து மக்காவைச் சென்றடைந்த பெண்களும் அங்கு இருக்கத்தான் செய்தார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

> நிராகரிக்கும் பெண்களை மணஉறவில் தடுத்துவைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் அவர்களுக்குச் செலவழித்ததைத் திருப்பிக் கேளுங்கள். அவர்களும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குச் செலவழித்ததைத் திருப்பிக் கேட்கட்டும். இது அல்லாஹ்வின் கட்டளையாகும். அவன் உங்களிடையே தீர்ப்பளிக்கிறான். (10)

நீதிமிக்க இந்தச் செயல்பாடுகள்தாம் மார்க்கத்தின் ஆன்மா ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்கான அடையாளம். விரைவிலேயே மக்காவின் கதவுகள் திறந்துவிட்டன. அங்கு சிலை வழிபாடு அடியோடு தகர்க்கப்பட்டது. தூய ஓரிறைக் கொள்கையின் அடிப்படையில் இஸ்லாமியக் குடும்பங்கள் கட்டமைக்கப்பட்டன.

அதே போன்று, இஸ்லாம் வேதக்காரப் பெண்களில் ஒழுக்கமானவர்களை மணமுடிக்க அனுமதியளிக்கிறது. ஆனால், ஒழுக்கமான பெண்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? நவீன நாகரிகம் ஒழுக்கத்தை அடித்துச்சென்றுவிட்டது.

பின்வரும் ஒப்பந்தத்தோடு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது:

தூதரே, நம்பிக்கை கொண்ட பெண்கள் உம்மிடம் வந்து, 'நாங்கள் அல்லாஹ்வுக்கு எப்பொருளையும் இணையாக்க மாட்டோம், திருட மாட்டோம், விபச்சாரம் செய்ய மாட்டோம், எங்கள் குழந் தைகளைக் கொல்ல மாட்டோம், இட்டுக்கட்டி எந்த அவதூறை யும் கூற மாட்டோம், எந்த ஒரு நல்ல காரியத்திலும் உங்களுக்கு மாறுசெய்ய மாட்டோம்' என்று உறுதிமொழியளித்தால் அவர் களின் உறுதிமொழியை ஏற்றுக்கொள்வீராக. அவர்களுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கோருவீராக. (12)

நபியவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு பெண்களிடம் இந்த உறுதி மொழிகளைப் பெற்றார்கள். இது கையோடு கைவைத்து செய்யப்பட வில்லை. வாய்மொழியாகவே செய்யப்பட்டது.

நவீன நாகரிகத்தின் கதையை வாசிப்பவர் அது பெண்களுக்கும் துறவி களுக்கும் மத்தியில் காணப்படும் முறையற்ற தொடர்பின் மூலம் மார்க் கத்தின் சூழலை முழுவதும் மாசுபடுத்திவிட்டது என்பதை அறிந்து கொள்வார். இரு சாராரின் மூச்சுகளும் ஒன்றுகலக்காத அளவு தூரமாக இருப்பதே அவர்களுக்கு நல்லது. ஆகவேதான் நபியவர்கள் அந்நியப் பெண்களுடன் தொடர்புகொள்வதைக் கடுமையான வரம்புகளுக்கு உட்படுத்தினார்கள். 'இதுதான் உங்களின் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் தூய்மையானது. (33:53)'

❖ ❖ ❖

அத்தியாயம் 61

# அஸ்ஸஃப்

(அணிவகுப்பு)

*மகத்தான மார்க்கங்கள் தம்முடைய உதவிக்கும் பாதுகாப்புக்கும் உண்மையாளர்களையும் தீவிர செயல்பாட்டாளர்களையும் வேண்டி நிற்கின்றன. வாய்ச்சொல் வீரர்களோ போர் கடமையாக்கப்பட்டால் மரணப்படுக்கையில் மயக்கமுற்றவனைப் போன்று பார்க்கும் கோழைகளோ அவற்றுக்குத் தகுதியானவர்கள் அல்ல. அசத்தியவாதிகள் தாங்கள் சரியென நம்பும் கொள்கைகளுக்குத் துணிவுடன் சேவையாற்றுகிறார்கள். சத்தியத்துக்கு உதவிசெய்யக்கூடிய, அதற்காகத் தம் செல்வத்தையும் உயிரையும் அர்ப்பணிக்கக்கூடிய, ஒரே அணியில் நின்று போராடக்கூடிய வலிமையான நம்பிக்கையாளர்களால்தான் அவர்களை மிகைக்க முடியும். அவர்களில் ஒரு வீரர் இறந்துவிட்டால் அவரது இடத்தில் இன்னொரு வீரர் எழுந்துநிற்பார். 'அல்லாஹ் நாடியிருந்தால் அவனே அவர்களைத் தண்டித்திருப்பான். ஆயினும், அவன் உங்களில் சிலரைச் சிலரைக் கொண்டு சோதிக்கிறான். (47:4)'*

*இனிமையான பேச்சுகளும் விண்ணைத் தொடும் கோஷங்களும் நோக்கத்தை அடைவதற்கு உதவாது. ஆகவேதான் இந்தத் தகுதியைப் பெறாத நம்பிக்கையாளர்கள் கண்டிக்கப்படுகிறார்கள். 'நம்பிக்கையாளர்களே, நீங்கள் செய்யாதவற்றை ஏன் சொல்கிறீர்கள்? நீங்கள் செய்யாதவற்றைச் சொல்வது அல்லாஹ்விடம் மிகவும் வெறுப்புக்குரியதாகும். (2,3)'*

*நம்பிக்கையாளன் தன் இறைவனின் திருப்தியை நாடி தன்னை அர்ப்பணிக்கும்போது அவன் இந்தப் பிரபஞ்சத்தில் அல்லாஹ்வின் புகழைப் பறைசாற்றக்கூடிய ஒவ்வொரு பொருளுடனும் ஒத்திசைந்து செல்கிறான். அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாதவன் இந்தப் பிரபஞ்சத்தில் கீழ்ப்படியாத விசித்திரமான படைப்பாக இருக்கிறான். ஆகவேதான் அத்தியாயம்*

இவ்வாறு தொடங்கப்படுகிறது: 'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வைப் புகழ்கின்றன. அவன் யாவற்றையும் மிகைத்தவன்; ஞானம்மிக்கவன். (1)' பின்னர் இந்தக் கண்டிப்பு இடம்பெறுகிறது. அல்லாஹ்வை உண்மைப்படுத்தாத சமூகங்கள்குறித்து கூறப்படுகிறது. அவை அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் பகைத்தன.

அவர்களில் முதன்மையானவர்கள் மூசாவைத் துன்புறுத்திய, அவரைக் களைப்படையச் செய்த யூதர்களாவர். அவர்கள் எதிரிகளுடன் போரிடும் தைரியத்தை இழந்தவர்களாக இருந்தார்கள். விரைவிலேயே தங்களுக்கு அருளப்பட்ட வேதத்தையும் அவர்கள் வீணாக்கினார்கள்.

> மூசா தம் சமூகத்தாரிடம், 'என் சமூகத்தாரே, நான் உங்களின் பக்கம் அனுப்பப்பட்ட தூதராவேன் என்பது தெளிவாகத் தெரிந்தும் என்னை ஏன் துன்புறுத்துகிறீர்கள்?' என்று கூறியதை நினைவு கூருங்கள். அவர்கள் கோணலான வழியை மேற்கொண்டபோது அல்லாஹ்வும் அவர்களின் உள்ளங்களைக் கோணலாக்கிவிட்டான். (5)

எந்தத் தூதரையும் வலுப்படுத்தாமல் கைவிடுவது அவரது போதனைகளில் அவர்களின் நம்பிக்கையின்மையையும் தங்களின் எதிரிகளைச் சந்திப்பதற்கு அவர்கள் பயப்படுகிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

பின்னர் அத்தியாயம் ஈசாவையும் அவருடைய சமூகத்தாரையும் குறிப்பிடுகிறது. ஈசா குறிப்பிட்ட காலகட்டத்துக்கும் இடத்துக்கும் அனுப்பப்பட்ட தூதர்தான் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அவர் வழிதவறிய இஸ்றாயீலின் மக்களின் பக்கம், அவர்களைத் தவ்றாத்தோடு இணைக்கும் பொருட்டு அனுப்பப்பட்ட தூதராவார். அவர் மனரீதியான, சமூக ரீதியான நோய்களுக்குச் சிகிச்சையளித்தார். மனிதச் சமூகம் முழுமைக்கும் வரக்கூடிய பொதுவான தூதுத்துவத்துக்காகப் பாதையைத் தயார்படுத்தினார்.

> 'இஸ்றாயீலின் மக்களே, நான் உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதராவேன். எனக்கு முன்னுள்ள தவ்றாத் என்னும் வேதத்தை உண்மைப்படுத்தக்கூடியவனாகவும் எனக்குப் பின் வரவிருக்கும் அஹமது என்னும் பெயருடைய தூதரைக் குறித்து நற்செய்தி கூறுபவனாகவும் இருக்கிறேன்.' என்று மர்யமின் மகன் ஈசா கூறியதையும் நினைவுகூருங்கள். (6)

நாம் ஈசாவின் சீடர்களால் தொகுக்கப்பட்ட நூல்களை - அதுதான் இன்ஜீல்கள் என்று சொல்லப்படுகிறது - வாசிக்கும்போது கவனம்

*செலுத்துவதற்குரிய சில வார்த்தைகளையும் நாம் அவற்றில் காண்கிறோம். அதில் மத்தேயு இருபத்து நான்காவது வசனத்தில் காண்கிறோம்:*

> *ஏராளமான போலியான தீர்க்கதரிசிகள் தோன்றி பலரை வஞ்சிப்பார்கள். அநியாயம் மிகுதியாவதால் பலருடைய அன்பு தணிந்து போகும். இறுதிவரை நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் உலகெங்கும் உள்ள சகல இனத்தாருக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்.*

*இங்கு சில கேள்விகள் எழுகின்றன: இறுதிவரை நிலைத்திருந்து உலகில் உள்ள மக்கள் அனைவரையும் அழைத்தது யார்? இதில் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகள் முஹம்மதைத்தானே குறிக்கின்றன?*

*யோவான் பதினான்காம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது: 'நீங்கள் என்னை நேசித்தால் என் அறிவுரைகளைக் கடைப்பிடியுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றும் உங்களுடனேயே இருக்கும்படி சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார்.' இதில், 'உங்களைத் தேற்றி ஆறுதல் படுத்தக்கூடியவர்' என்ற வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. அவருக்குப் பின் வரக்கூடியவர் யார்? அவருடைய மார்க்கம் இறுதிவரை நிலைத்திருக்கக்கூடியதாக இருக்கிறது.*

*நான் முஹம்மது நபியைப் பின்பற்றுவதற்கான காரணம், அவருடைய வேதம் என் ஆன்மாவோடு ஒத்திசைந்து செல்கிறது. நான் எனக்குள்ளும் என்னைச் சுற்றியிருக்கும் உலகத்திலும் ஆழ்ந்து கவனம் செலுத்தியபிறகு என் அறிவின் மூலம் அல்லாஹ்வை அறிந்துகொண்டேன். முஹம்மதுக்கு வழங்கப்பட்ட வேதம் அவரது தூதுத்துவத்துக்குச் சான்றாக அமையாது எனில் மனம் எந்த ஒன்றையும் சரிகாணாது, மனிதனுக்கு வழங்கப்பட்ட எந்தத் தூதுத்துவத்தையும் உண்மைப்படுத்த முடியாது. முஹம்மது உண்மையாளர் என்பதைச் சுட்டிக்காட்டும் முன்னறிவிப்புகள் அவற்றுக்குரியவர்களுக்குப் பயனளிக்கலாம். ஆனால், முஹம்மது உண்மையாளர் என்பதற்கு அவரது ஆளுமையும் பரம்பரையும் வேதமும் நடத்தையும் சான்று பகரக்கூடியவையாக இருக்கின்றன.*

> *அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனைவிட மிகப் பெரிய அநியாயக்காரன் யார்? அதுவும் அவன் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படும் நிலையில். இத்தகைய அநியாயக்காரர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட மாட்டான். இவர்கள் அல்லாஹ்வின்*

ஒளியைத் தம் வாய்களால் ஊதி அணைத்துவிட நாடுகிறார்கள். ஆயினும், அல்லாஹ் தன் ஒளியை முழுமைப்படுத்தியே தீரு வான், அது நிராகரிப்பாளர்களுக்கு எவ்வளவு வெறுப்பானதாக இருந்தாலும் சரியே. (7,8)

அல்லாஹ் மனிதர்களுக்கு வழங்கிய அருட்கொடைகளில் மிக உன்னத மானது அறிவாகும். அறிவை நிராகரிக்கும் அல்லது அறிவை மறைக்கும் ஈமானுக்கு எவ்வித மதிப்பும் இல்லை. ஆனாலும் மனிதர்களில் பெரும் பாலோர் அறிவை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டுப் பின்னர் பேசுகிறார்கள். நாம் எப்படி அவர்களிடமிருந்து கேட்க முடியும்?

அத்தியாயம் இரண்டு கண்ணியமான நோக்கங்களைக் கொண்டு நிறைவடைகிறது. அவை, அது எந்த விசயத்தைக் கொண்டு தொடங்கப் பட்டதோ அதனை உண்மைப்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன.

முதலாவது, வாழ்க்கை என்பது ஈமானும் ஜிஹாதுமாகும். 'நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டு, அவனது பாதையில் உங்கள் செல்வங்களாலும் உயிர்களாலும் ஜிஹாது செய்யுங்கள். (11)' இதே கருத்தையே ஷவ்கீ பின்வரும் கவிதையில் வெளிப்படுத்துகிறார்:

> 'வாழ்க்கையில் உம் கொள்கைக்காகப் போராடியவனாக நில்.
> வாழ்க்கை என்பது கொள்கையும் போராட்டமும் ஆகும்'.

இரண்டாவது, அல்லாஹ்வின் மார்க்கத்துக்கு உதவிசெய்வதற்காக, அவனுடைய வாக்கை மேலோங்கச் செய்வதற்காக நம்பிக்கையாளன் தன்னைத் தயார்படுத்திக்கொள்வதாகும். அவன் வாழ்க்கையின் பாதை களில் செவியேற்றவனாகச் செல்கிறான். அல்லாஹ்வின் பக்கம் அழைக் கப்படும் அழைப்பை அவன் செவியேற்றால் விரைந்து அதற்குப் பதில ளிக்கிறான், பாங்கு சொல்பரின் அழைப்புக்கு நாம் பதிலளிப்பதுபோல.

யூதர்கள் ஈசாவின் மீது சந்தேகம் கொண்டு அவருக்கு எதிராகத் திரும் பியபோது அவர் இந்த உதவியையே நம்பினார். அவர் தம் சீடர்களிடம் கேட்டார்:

> 'அல்லாஹ்வுக்காக எனக்கு உதவிசெய்பவர் யார்?' அப்போது அவர்கள் கூறினார்கள், 'நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர் களாவோம் ...' (14)

ஈசாவின் சீடர்களைப் போன்றே முஹம்மதின் தோழர்களும் இருந் தார்கள். அவர்கள் அனைவரும் சத்தியத்துக்காக, அதன் கொடியை

உயர்த்துவதற்காகத் தங்களை அர்ப்பணித்தார்கள். அவர்கள்தாம் ஒரு மார்க்கம் நிலைபெறுவதற்கும் நீடிப்பதற்கும் காரணமானவர்கள். இஸ்லாம், தற்காலத்தில் இந்த வசனத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என வேண்டிநிற்கிறது. 'நம்பிக்கையாளர்களே, நீங்களும் அல்லாஹ்வின் உதவியாளர்களாக ஆகிவிடுங்கள். (14)'

❖ ❖ ❖

அத்தியாயம் 62

# அல்ஜுமுஆ

(வெள்ளிக்கிழமை)

‘வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வைப் புகழ்ந்துகொண்டிருக்கின்றன. அவன் பேரரசன்; மிகவும் தூயவன்; யாவற்றையும் மிகைத்தவன்; ஞானம்மிக்கவன். (1)’ இந்த வசனத்தைக் கொண்டு தொடங்கும், அல்ஜுமுஆ என்று அழைக்கப்படும் இந்த அத்தியாயம் நம்பிக்கையாளர்களைக் கடமையை நிறைவேற்றவும் வெள்ளிக்கிழமையில் நிகழ்த்தப்படும் உரையைச் செவிதாழ்த்திக் கேட்கவும் தூண்டுகிறது. ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்வைப் புகழும்போது முஸ்லிம்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் நடை பெறும் இந்தக் கூட்டு நிகழ்வில் கலந்துகொள்ளாமல் இருக்கக் கூடாது. அவர்கள் பள்ளிவாசல்களை நோக்கி விரைகிறார்கள், முஸ்லிம்களின் அணிகளை வலுப்படுத்தும் பொருட்டு.

வெள்ளிக்கிழமை என்பது நமக்கு வாரத்தின் பெருநாளாகும். அதில் குறிப்பிட்ட ஒரு நேரம் இருக்கிறது. அந்த நேரத்தில் ஓர் அடியான் பிரார்த்தனையைக் கொண்டோ வணக்கத்தைக் கொண்டோ திக்ருகளைக் கொண்டோ அல்லாஹ்வை முன்னோக்கினால் அல்லாஹ் அதனை ஏற்றுக்கொள்வான். அவனுடைய பாவங்களையும் மன்னிப்பான். அந்த நாளில் குளிப்பதும் நறுமணம் பூசுவதும் விரும்பத்தக்கதாகும்.

இந்த அத்தியாயத்தில் ஆரம்பத்தில் இடம்பெற்றுள்ள புகழ்பாடுதல், வியாபாரக் குழுவைக் கண்டவுடன் பள்ளியிலிருந்து விரைந்து வெளி யேறிய மக்களைக் கண்டிக்கும் விதமாக இருக்கிறது.

> அவர்கள் ஏதேனும் வியாபாரத்தையோ வேடிக்கையையோ கண் டால் உம்மை நின்ற நிலையில் அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். நீர் கூறும், ‘அல்லாஹ்விடம் இருப்பது வேடிக்கை,

*வியாபாரத்தைவிடச் சிறந்ததாகும். வாழ்வாதாரம் அளிப்போரில் அல்லாஹ்வே மிகச் சிறந்தவன்.'* (11)

அத்தியாயத்தின் ஆரம்பமும் நடுப்பகுதியும் அறபுகளுக்கு மத்தியிலிருந்து அனுப்பப்பட்ட இறுதித் தூதரின் தூதுத்துவம்குறித்து பேசுகின்றன. அனைவருக்கும் பொதுவான தூதுத்துவத்திலிருந்து வேதக்காரர்கள் திருப்பப்பட்டார்கள். கர்வம், கடும்போக்கு, மடமைத்தனம் ஆகியவற்றின் காரணமாக அவர்களின் மார்க்கம் கடுமையான பாதிப்புக்குள்ளானது. அவர்கள் அதன் மூலம் தங்களைக்கூடச் சீர்திருத்த முடியவில்லை. பிறகு எப்படி அவர்கள் மற்றவர்களைச் சீர்படுத்துவார்கள்? அவர்களின் இயல்பு சிதையாமல் இருந்திருந்தால், அவர்கள் பேராசை கொண்டவர்களாக இல்லாமல் இருந்திருந்தால் சத்தியத்தின் அழைப்புக்கு உடனே பதிலளித்திருப்பார்கள். ஆகவேதான் அல்லாஹ் யூதர்களிலிருந்து இறுதித் தூதரை அனுப்பவில்லை. அதற்காக அறபுகளைத் தெரிவுசெய்தான்.

*அவன்தான் படிப்பறிவற்ற மக்களிடையே ஒரு தூதரை அவர்களிலிருந்தே எழுப்பினான். அவர் அவனது வசனங்களை அவர்களுக்கு எடுத்துரைக்கிறார். அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார். அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் போதிக்கிறார். அவர்களோ இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் வீழ்ந்து கிடந்தார்கள்.* (2)

அறபுகள் இந்த மார்க்கத்தை உலகெங்கும் கொண்டுசேர்த்தார்கள். மற்ற சமூகங்களுடன் ஒன்றுகலந்தார்கள். அல்லது, இந்த வஹீயை மற்றவர்களுக்குக் கொண்டுசேர்க்கும் பாலமாக இருந்தார்கள்.

ஆனால் யூதர்களோ தங்கள் இனத்தையே வழிபட்டார்கள். இறைவனை மறந்தார்கள். தங்கள் மனஇச்சைகளையே நினைவுகூர்ந்தார்கள்.

*தவ்றாத் என்னும் வேதம் வழங்கப்பட்டு, பின்னர் அதன்படி செயல்படாதோரின் உதாரணம் புத்தகங்களைச் சுமக்கும் கழுதையைப் போன்றதாகும். அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கும் மக்களின் உதாரணம் மிக மோசமானதாகும். அல்லாஹ் இத்தகைய அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்ட மாட்டான்.* (5)

இன்றுவரை அவர்கள் மறுமைக்காகச் செயல்படுவதில் மற்ற மக்களைவிட வெகுதூரத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலக வாழ்வை மட்டுமே விரும்பக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் உன்னதமான பணியைத் தவிர மற்ற உலக விவகாரங்களில் அவர்கள் முன்னணியில்தான் இருக்கிறார்கள்.

நீர் கூறும், 'யூதர்களே, மற்ற மக்களைவிட நாங்கள்தாம் அல்லாஹ்வின் அன்புக்குரியவர்கள் என்று நீங்கள் எண்ணுவீர்களாயின் - உங்கள் கூற்றில் உண்மையாளர்களாக இருந்தால் - மரணத்தை விரும்புங்கள்.' அவர்கள் முன்னரே செய்த செயல்களால் அதனை ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். அல்லாஹ் அக்கிரமக்காரர்களை நன்கறிந்தவன். (6,7)

கவலைக்குரிய விசயம் என்னவென்றால், வேதக்காரர்களுக்கு ஏற்பட்ட இந்த நோய் தற்காலத்தில் உள்ள முஸ்லிம்களையும் பாதித்துள்ளது. அவர்கள் வஹீயை மறந்து, அல்லாஹ்வின் மார்க்கத்தோடு தொடர்பற்ற உலகாயதவாத, பிற கோஷங்களை முன்னிறுத்தக்கூடியவர்களாக மாறி விட்டார்கள்.

இந்தச் சமூகத்தை அதன் வேதத்தின் பக்கமும் தூதரின் பக்கமும் மீட்டுக் கொண்டுவரவும் அது அல்லாஹ்வின் மார்க்கத்தைக் கொண்டு மனிதச் சமூகத்தை வழிநடத்த வேண்டும் என்பதற்காகவும்தான் நாம் போராடுகிறோம்.

❖ ❖ ❖

அத்தியாயம் 63

# அல்முனாஃபிகூன்

(நயவஞ்சகர்கள்)

*நயவஞ்சகம் மிக மோசமான பண்பாகும். அது உணர்விலும் நடத்தையிலும் கலந்திருக்கக்கூடியது. இருமுகம் கொண்டவனாக மனிதன் மாறும்போது அது தொடங்குகிறது. இத்தகைய மனிதர்கள் பச்சோந்திகளைப் போன்று சூழலுக்கேற்றவாறு தங்களின் நிறத்தை மாற்றிக் கொள்வார்கள். பொய் கூறுவதும் அதற்காகச் சத்தியம் செய்வதும் நயவஞ்சகர்களின் பண்புகளில் உள்ளவையாகும். அவர்கள் வீசும் காற்றுக்கேற்ப நம்முடன் நெருக்கமாக இருக்கிறார்கள் அல்லது நம்மை விட்டுத் தூரமாகச் செல்கிறார்கள். அவர்களிடம் நிலையான மையமோ குறிப்பிட்ட நிலைப்பாடோ எதுவும் கிடையாது. தங்களின் தனிப்பட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் இங்குமங்கும் தடுமாறித் திரிகிறார்கள்.*

> *நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்தால், 'நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதரே என்று நாங்கள் சாட்சி கூறுகிறோம்!' என்று கூறுவார்கள். நிச்சயமாக நீர் அவனுடைய தூதர் என்பதை அவன் நன்கறிவான். ஆயினும், இந்நயவஞ்சகர்களே பொய்யர்கள் என்று அல்லாஹ் சாட்சி கூறுகிறான்.* (1)

*அவர்களின் நயவஞ்சகம் எல்லா நிலையிலும் மறைவாக இருக்காது. வாழ்வின் அன்றாட நிகழ்வுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களும் அவர்களின் நயவஞ்சகத்தை வெளிப்படுத்தியே தீரும். அவர்கள் தங்களின் நாவுகளின் மூலமாகவோ அல்லது எதிர்பாராமல் நிகழும் ஏதேனும் ஒரு சம்பவத்தை விமர்சனம்செய்வதன் மூலமாகவோ தங்களின் நயவஞ்சகத்தை வெளிப்படுத்தியே தீருவார்கள்.*

*இந்த அத்தியாயம் நயவஞ்சகத்தின் தலைவர்களாக இருந்தவர்களை அம்பலப்படுத்துகிறது. அதனை மறைப்பதற்கு அவர்கள் செய்த முயற்சி*

களையும் பதிவுசெய்கிறது. அவர்கள் தங்களின் தோற்றங்களும் அடையாளங்களும் மிக அழகிய வடிவில் வெளிப்பட வேண்டும் என்றே விரும்புகிறார்கள். ஆனாலும் அவர்களின் பொறாமை அவர்களை மிகைத்துவிடுகிறது. முஹாஜிர்களுக்குத் தீங்களிக்கக்கூடிய, அன்ஸாரிகளை நெருக்கடியில் ஆழ்த்தக்கூடிய விசயங்களைக் கூறிவிடுகிறார்கள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக அவர்களுக்கிடையே தோன்றக்கூடிய சிறுசிறு பிரச்சினைகளை, காழ்ப்புகளைத் தூண்டும் பெரும் குழப்பங்களாக மாற்றிவிடுகிறார்கள்.

> இவர்கள்தாம், 'அல்லாஹ்வின் தூதருடன் இருப்போருக்குச் செலவு செய்யாதீர்கள், அதனால் அவர்கள் பிரிந்துபோகட்டும்.' என்று கூறுபவர்கள். வானங்கள், பூமியின் பொக்கிஷங்கள் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். ஆனாலும் இந்த நயவஞ்சகர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். (7)

தங்களின் செல்வங்களையும் வீடுகளையும் மக்காவில் விட்டுவிட்டு மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து செல்லுமாறு கட்டளையிட்டு அல்லாஹ் முஹாஜிர்களைச் சோதித்தான். அவர்களை நல்ல முறையில் வரவேற்று உபசரிக்குமாறு அவன் அன்ஸாரிகளைச் சோதித்தான். ஆகவேதான் இப்னு உபை அவர்களிடம் கூறினான், 'நாம் மக்காவிலிருந்து வந்தவர்களுடன் இப்படித்தான் நடந்துகொள்கிறோம், உனது நாயைக் கொழுக்கவை. அது உன்னைக் கடிக்கட்டும்.' அன்ஸாரிகளை முஹாஜிர்களுக்கு எதிராகத் தூண்டும் பொருட்டே அவன் இவ்வாறு கூறினான். மேலும் அவன் கூறினான்:

> 'நாங்கள் மதீனாவுக்குத் திரும்பிச் சென்றால் கண்ணியமுள்ள நாங்கள் கேவலமானவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிடுவோம்.' என்றும் அவர்கள் கூறுகிறார்கள். கண்ணியமானது அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் உரியதாகும். ஆயினும், இந்த நயவஞ்சகர்கள் அறிய மாட்டார்கள். (8)

இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் தீங்கை விரும்பும் ஒருவனிடமிருந்து மட்டும்தான் இத்தகைய மோசமான வார்த்தைகள் வெளிப்படும்.

அப்துல்லாஹ் இப்னு உபை இஸ்லாத்தையும் அதன் தூதரையும் கடுமையாக வெறுத்தான். ஏனெனில், நபியவர்கள் மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து வருவதற்கு முன்னால் அவன் மதீனாவாசிகளின் தலைவனாக முடிசூட்டப்பட இருந்தான். நபியவர்களின் வருகையால் அவனது ஆசை

தகர்ந்துவிட்டது. அந்த மூடன் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தால் இந்த உலகில் அவன் விரும்பியதைவிடச் சிறந்த கண்ணியத்தைப் பெற்றிருப்பான். நிராகரிப்பு என்பது எவ்வித அடித்தளமுமற்ற மடமைத்தனமாகும். அவன் தவறிழைத்த சமயத்தில் நபியவர்களிடம் வந்து வருத்தம் தெரிவித்திருந்தால் நபியவர்கள் அவனுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரிக்கை வைத்திருப்பார்கள். அல்லாஹ்வும் அவனை மன்னித்திருப்பான். ஆனாலும் அவன் மறுத்துவிட்டான்.

அழியக்கூடிய இவ்வுலகின் செல்வங்களை விட்டுவிட்டு அல்லாஹ்வையும் அவனிடம் உள்ளவற்றையும் தேர்ந்தெடுக்கும்படி அறிவாளிகளுக்கு அறிவுறுத்தியவாறு அத்தியாயம் நிறைவடைகிறது. 'நம்பிக்கையாளர்களே, உங்களின் செல்வங்களோ பிள்ளைகளோ அல்லாஹ்வின் நினைவைவிட்டு உங்களை அலட்சியத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். அவ்வாறு செய்பவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள். (9)'

❖ ❖ ❖

அத்தியாயம் 64

# அத்தகாபுன்

(நஷ்டப்படுத்துதல்)

*‘வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வைப் புகழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆட்சியதிகாரமும் புகழும் அவனுக்கே உரியன. அவன் ஒவ்வொன்றின் மீதும் பேராற்றலுடையவன். (1)’* இந்தப் பிரபஞ்சம் தன் இறைவனை அறியும். அவனிடமிருந்ததே தான் வந்தேன் என்பதையும் அவனைக் கொண்டே தான் நிலைபெற்றிருக்கிறேன் என்பதையும் அது அறியும். ஆகவே, அது அவனுடைய புகழைப் பறை சாற்றுகிறது; அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறது. ஆனால் மனிதர்களோ வேறு விதமாக இருக்கிறார்கள். அவர்களில் அதிகமானோர் அறிந்துகொண்டே அவனை நிராகரிக்கிறார்கள். அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய மறுக்கிறார்கள். அவனுடைய தூதர்களுக்கு எதிராகப் போர்புரிகிறார்கள். *‘அவன் மனிதனை ஒரு துளி விந்திலிருந்து படைத்தான். அவ்வாறு இருந்தும் மனிதன் வெளிப்படையாகத் தர்க்கிப்பவனாக இருக்கிறான். (16:4)’*

ஆச்சரியமாக இருக்கிறது! மனிதன் எப்படி அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறான்? எப்படி அவனை அறிந்துகொண்டே நிராகரிக்கிறான்? ஒவ்வொரு பொருளிலும் அவன் ஒருவனே என்பதை அறிவிக்கக்கூடிய சான்று இருக்கத்தானே செய்கிறது!

உலகில் உள்ள ஒவ்வொன்றும் அவனைப் புகழ்ந்துகொண்டிருக்கிறது என்று தொடங்கப்பட்டிருக்கும் இந்த அத்தியாயம் அவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும் விசித்திரமான மனிதர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கிறது. *‘அவனே உங்களைப் படைத்தான். உங்களில் சிலர் நிராகரிப்பாளர்களாக இருக்கிறார்கள்; சிலர் நம்பிக்கையாளர்களாக இருக்கிறார்கள். நீங்கள் செய்கின்ற அனைத்தையும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான். (2)’*

அல்லாஹ் உங்களுடைய வடிவங்களைச் சிறந்த முறையில் அமைத்திருக்கிறான். அவன் உங்கள்மீது அருட்கொடைகளைப் பொழிந்திருக்கிறான். நீங்களோ அலட்சியத்திலும் நிராகரிப்பிலும் மூழ்கிக்கிடக்கிறீர்கள். நீங்களோ அவனை மோசமான முறையில் மதிப்பிடுகிறீர்கள். எவ்வளவு பெரிய முரண்பாடு இது! மனிதர்கள் வஹீயை மறுக்கிறார்கள். ஏனெனில், அதனைக் கொண்டுவந்தவர்கள் அவர்களைப் போன்ற மனிதர்களாம். கடந்தகாலங்களில் ஆது, ஸமூது சமூகங்களும் இவ்வாறு தான் கூறின, 'எங்கள் இறைவன் நாடியிருந்தால் வானவர்களை இறக்கியிருப்பான். (41:14)'

ஒரு மனிதனின் சிறப்புகளை ஏற்றுக்கொள்வது மற்ற மனிதனுக்குக் கடினமானது. அவன் தன்னை முன்னிலைப்படுத்தவும் மற்றவர்கள்மீது வரம்புமீறவும் விரும்புகிறான். இந்த விசயத்தில் மூடர்கள்தாம் முன்னணியில் இருக்கிறார்கள். அறிவைத் தங்களுக்குள் பதுக்கிவைத்து மற்றவர்களை இழிவுபடுத்துவதில் அவர்கள் இன்பம் காண்கிறார்கள்.

> இதற்கு முன்னர் நிராகரித்தவர்களின் செய்தி உங்களுக்கு வரவில்லையா? அவர்கள் தங்கள் செயலின் மோசமான விளைவை அனுபவித்தார்கள். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு. இதற்குக் காரணம், அவர்களிடம் அவர்களின் தூதர்கள் தெளிவான ஆதாரங்களைக் கொண்டுவந்தபோதிலும், 'ஒரு மனிதரா எங்களுக்கு வழிகாட்டுவது?' என்று கூறி நிராகரித்து புறக்கணித்துவிட்டதுதான். அல்லாஹ்வும் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. அல்லாஹ் தேவையற்றவனாகவும் புகழுக்குரியவனாகவும் இருக்கிறான். (5,6)

மற்றவர்களை மிகைப்பதும் அவர்களை இழிவுபடுத்துவதும் சிலரது இயல்பில் காணப்படுகிறது. ஆதிக்கம் செலுத்தும் தகுதி சில குறிப்பிட்ட இனத்தாருக்கு மட்டுமே இருக்கிறது என்று அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். ஒருவேளை இறைத்தூதர்களும் சீர்திருத்தவாதிகளும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள திறமைகளைக் கொண்டு ஆதிக்கம் செலுத்த விரும்பியிருந்தால், 'அவர்கள் மற்றவர்களைத் தூண்டிவிட்டார்கள், கர்வம் கொள்ளவும் நிராகரிக்கவும் நிர்ப்பந்தித்துவிட்டார்கள்.' என்றே நாம் கூறியிருப்போம். ஆனால் அவர்களோ மனிதர்களில் மிகவும் பணிவானவர்களாகவும் மென்மையானவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு அறைகூவல் விடுப்பது வெளிப்படையான குற்றமாகும்.

> 'இறந்தபின் தாம் மீண்டும் எழுப்பப்பட மாட்டோம்.' என்று நிராகரிப்பாளர்கள் வாதம்புரிகிறார்கள். நீர் கூறும், 'என் இறைவன் மீது சத்தியமாக, நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள். பின்னர்

நீங்கள் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று உங்களுக்கு அறிவிக் கப்படும்.' இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக எளிதானது. (7)

மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதை மறுப்பது காலம் கால மாக இருந்துவருகின்ற குற்றம்தான். ஆனாலும் தற்காலத்தில் அது வர வேற்பைப் பெற்றுள்ளதைப் போல வேறெந்தக் காலத்திலும் பெற்ற தில்லை. நம்மைச் சூழ்ந்துள்ள நாகரிகம் நமக்கு இவ்வுலக வாழ்வை அலங்கரித்துக் காட்டுகிறது. மறுமையைக் குறித்து பேசுவதை மூடர்களின் பழக்கமாகச் சித்தரிக்கிறது.

யூதர்கள் வேதக்காரர்களையும் இந்த நிராகரிப்பில் ஆழ்த்திவிட்டார்கள். அறபுகளில் உள்ள நாத்திகர்களும் அல்லாஹ்வையும் அவனுடைய சந்திப் பையும் மறக்குமாறு பொதுமக்களைத் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் திருக்குர்ஆனில் விவரிக்கப்படும் மறுமையின் காட்சிகளால் நெருக்கடிக்குள்ளாகிறார்கள். பரவியிருக்கும் இந்த நாத்திகத்தை எதிர் கொள்வதற்கு மார்க்க விவகாரங்கள் நவீன வடிவில் முன்வைக்கப்பட வேண்டியது மிக அவசியமாகிறது.

'ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நாம் அருளியிருக்கும் ஒளியின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். (8)' இங்கு ஒளி என்பது திருக்குர்ஆனைக் குறிக்கும். பல வசனங்களில் திருக்குர்ஆன் ஒளி என்ற வார்த்தையின் மூலம் சுட்டப்படுகிறது. 'ஆனாலும் அதனை நாம் ஒளியாக ஆக்கி நம் அடியார்களில் நாம் நாடியோருக்கு நேர்வழி காட்டுகிறோம். (42:52)'

ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அல்லாஹ்விடமிருந்து மட்டுமே வெளிப்பட்ட வார்த்தைகளைக் கொண்ட வேதம் திருக்குர்ஆனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அது நம்மை வெற்றிபெறச் செய்யும் கொள்கை களை, உறுதியை ஏற்படுத்தும் வலுவான ஆதாரங்களுடன் கொண்டு வந்துள்ளது. அந்தோ, முஸ்லிம்கள் தங்களின் வேதத்துக்குத் தகுதியான வர்களாக மாற வேண்டுமே! அது கூறும் பணிகளைச் செய்ய வேண்டுமே!

'எந்த நாளில் - ஒன்றுகூடும் நாளில் - அவன் உங்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டுவானோ அந்த நாள்தான் வெற்றிதோல்விக்கான நாளாகும். (9)' மீண்டும் எழுப்பப்படுதலைக் குறித்த மனிதர்களின் உணர்வுகள் கொஞ்சம் தெளிவை வேண்டிநிற்கின்றன. சிலர் அந்த நாளில் வருத்தப் பட்டுப் புலம்புவார்கள்: 'என் வாழ்க்கையில் எதையாவது நான் செய்தி ருக்கக் கூடாதா? (89:24)' இன்னும் பலர், தங்களின் நேரங்களைப் பயனற்ற வேலைகளில் வீணாக்கிவிட்டதற்காக, தங்களுக்கு வழங்கப்பட்ட

ஆரோக்கியத்தைக் கொண்டு நன்மைகளில் ஈடுபடாமல் இருந்ததற்காக வருத்தப்படுவார்கள். ஹதீஸில் வந்துள்ளது: 'இரண்டு அருட்கொடை களில் பெரும்பாலான மனிதர்கள் ஏமாந்துவிடுகிறார்கள். ஒன்று ஆரோக்கியம்; இரண்டு ஓய்வு.'

இன்னும் அவர்கள், 'தாங்கள் இன்ன மனிதரை உண்மைப்படுத்தி யிருக்கக் கூடாதா, இன்ன மனிதரைப் பகைத்திருக்கக் கூடாதா!' என்றும் ஏங்குவார்கள். தங்களின் வடிகட்டிய மடமைத்தனத்தால் வெற்றிபெறு வதற்கான பல சந்தர்ப்பங்களை அவர்கள் நழுவ விட்டுவிட்டார்கள். 'தாங்களும் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருந்திருக்கக் கூடாதா என்று நிராகரிப்பாளர்கள் சில சமயம் ஏங்குவார்கள். (15:2)' ஆனால், செயல்படுவதற்கான காலமோ முடிந்துவிட்டது. விசாரணைக்கான காலம் வந்துவிட்டது.

இந்த அத்தியாயம் மதீனாவில் அருளப்பட்டிருப்பதால் முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் ஓர் இஸ்லாமிய அரசை நிலைநிறுத்துவதற்குத் தடை களையும் மூர்க்கமான எதிர்ப்புகளையும் தாங்கிக்கொள்ளும்படி அறி வுறுத்தப்படுகிறார்கள். அவர்களை ஆறுதல்படுத்தும் பொருட்டும் அவர் களின் ஈமானை வலுப்படுத்தும் பொருட்டும் அல்லாஹ் கூறுகிறான்: 'அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்தத் துன்பமும் ஏற்படுவதில்லை. யார் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பாரோ அவரது உள்ளத்துக்கு அவன் வழிகாட்டுகிறான். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருக் கிறான். (11)' தன் மார்க்கத்துக்கு உதவும் பொருட்டுத் தன் நாட்டை விட்டுவிடும்படி ஒரு மனிதனை நிர்ப்பந்திப்பது கடினமான ஒன்றுதான். எல்லா மனிதர்களாலும் இதனைத் தாங்கிக்கொள்ள முடியாது.

அபூதய்யிபு கூறுகிறார்: 'சிரமம் மட்டும் இல்லையெனில் மனிதர்கள் அனைவரும் தலைவர்களாக ஆகிவிடுவார்கள் ...'

புலம்பெயர்வதற்கான அழைப்பைச் சில மனிதர்கள் ஏற்றுக்கொண் டார்கள். பலர் தங்களின் காதுகளைச் செவிடாக்கிக்கொண்டார்கள். தங்களுக்குப் பிரியமானவர்களுடன் வாழ்வதற்காகக் கடமையை மறந் தார்கள். இத்தகைய மனிதர்களைப் பார்த்து அல்லாஹ் கூறினான்: 'நம்பிக் கையாளர்களே, உங்கள் மனைவியரிலும் பிள்ளைகளிலும் சிலர் உங்க ளுக்குப் பகைவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விசயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் அவர்களின் குறைகளைச் சகித்துக் கொண்டு கண்டுகொள்ளாமல் மன்னித்துவிட்டால் நிச்சயமாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (14)'

*உலக வாழ்வின் மீது மோகம் கொள்வது மோசடிக்கான, அழிவுக்கான பாதையாக இருக்கிறது. 'உங்களின் செல்வங்களும் பிள்ளைகளும் ஒரு சோதனையே. அல்லாஹ்விடம்தான் மகத்தான கூலி உள்ளது.* (15)'

*உண்மையில் வழிகேட்டை எதிர்கொள்வதற்கு நம்பிக்கையாளர்கள் மனமுவந்து தங்களை அர்ப்பணிக்க வேண்டியது அவசியமாகிறது. நம் காலத்தில் அசத்தியவாதிகள் யாராலும் தங்களை மிகைக்க முடியாது என்று கருதிக்கொண்டிருந்தாலும் அல்லாஹ்வுக்கு அளித்த வாக்குறுதிகளை உண்மைப்படுத்தக்கூடிய மனிதர்களைக் கண்டு அஞ்சுவதை நாம் பார்த் துக்கொண்டுதான் இருக்கிறோம். திருடர்கள் தைரியமாக முன்னேறக் கூடியவர்களாகவும் காவலர்கள் பயந்து பின்வாங்கிச் செல்பவர்களாகவும் மாறிவிட்டால் மக்களுக்கு எந்தப் பாதுகாப்பும் நம்பிக்கையும் இருக்காது.*

*ஆகவே இந்த அத்தியாயம் செலவுசெய்வதன், போராடுவதன் அவசி யத்தை வலியுறுத்துவதோடு நிறைவடைகிறது.*

> *ஆகவே, உங்களால் முடிந்தவரை அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; செவிதாழ்த்திக் கேளுங்கள்; கீழ்ப்படியுங்கள்; செலவுசெய்யுங்கள். இது உங்களுக்குத்தான் சிறந்தது. தம் உள்ளத்தின் கஞ்சத்தனத்தை விட்டுப் பாதுகாக்கப்பட்டவர்கள்தாம் வெற்றியாளர்கள்.* (16)

❖ ❖ ❖

அத்தியாயம் 65

# அத்தலாக்

(மணமுறிவு)

*இந்த அத்தியாயம் 'மிகச் சிறிய அந்நிசா அத்தியாயம்' என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தை ஆரோக்கியமான அடித்தளத்தின் மீது நிலைநிறுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களை அல்லாஹ் இதில் கூறியுள்ளான். அவை குடும்பத்தில் தோன்றக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அமைகின்றன. ஒரு கருப்பொருளையே சுற்றி வரும் இந்த அத்தியாயத்தின் வழிமுறை ஆழமான சிந்தனையை வேண்டுகிறது. அது வசனங்களுக்கு மத்தியில் உள்ள தொடர்புகளை அறிவிக்கக்கூடியதாகவும் குறிப்பிட்ட உண்மையை வெளிப்படுத்துவதற்காக அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டும் உள்ளது. இந்த அத்தியாயத்தில் ஃபிக்ஹு ரீதியான என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடு என்று எதையும் நான் கைக்கொள்ளவில்லை. முந்தையவர்களின் ஆய்வுகளிலிருந்து இந்த விரிவுரைக்குப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துள்ளேன்.*

*இந்த விசயத்தில் யார் என்னுடன் கருத்துவேறுபாடு கொள்ள விரும்புகிறாரோ அவரை என் கருத்தை ஏற்றுக்கொள்ளுமாறு நான் நிர்ப்பந்திக்க முடியாது.*

*அத்தியாயத்தின் ஆரம்பம் நபியவர்களை விளித்து உரையாடுகிறது. ஏனெனில், அவர்தான் இந்தச் சமூகத்தை வழிநடத்தக்கூடியவர்; வழிகாட்டுவதற்காக நியமிக்கப்பட்ட தலைவர். தூதர் இவ்வாறு விளித்து உரையாடப்படுவது, இந்த விசயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் இது தனிமனித விவகாரம் என்ற நிலையிலிருந்து சமூக விவகாரமாக மாற்றமடைகிறது என்பதையும் காட்டுகிறது.*

*தலாக் என்பது அதைக் கூறிய கணவரையும் கூறப்பட்ட மனைவியையும் தாண்டி இருவரின் குழந்தைகளையும் குடும்பத்தையும் பாதிக்கக்*

கூடியது. ஆகவே, அதனை ஒழுங்குபடுத்தக்கூடிய விதிகள் அவசியம். அவை அநியாயத்தின் வாசல்களைத் திறக்கும் தனிப்பட்ட நாட்டத்தோடு வெளிப்படக்கூடியவையாக இருக்கக் கூடாது.

ஆகவேதான் இறைவன் அதற்குக் குறிப்பிட்ட சமயத்தை நிர்ணயம் செய்கிறான். மாதவிடாய் சமயத்திலோ பிரசவத்தீட்டு ஏற்பட்ட சமயத் திலோ ஒரு பெண் தலாக் சொல்லப்படக் கூடாது. அவள் தூய்மை யடைந்த பிறகு அவளைத் தீண்டாத நிலையில்தான் தலாக் சொல்லப்பட வேண்டும். அதற்கு இரண்டு சாட்சிகள் இருக்க வேண்டும். அவள் தன் கணவனிடமிருந்து தலாக்கின் வார்த்தைகளைச் செவியேற்றுவிட்டால் அவள் தன் கணவனுடன் வீட்டில்தான் இருக்க வேண்டும். அது மண வாழ்வை முடிக்கக்கூடிய வார்த்தை அல்ல. ஆனால், அது அதற்கான எச்சரிக்கையாகும். தலாக்குக்குத் தூண்டிய காரணிகளுடன், மாற்றுவதன் அந்த வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்கவும் முடியும்.

கோபத்தின் காரணிகள் இரண்டு அல்லது மூன்று மாத இடைவெளியில் அன்பின் காரணிகளால் மிகைக்கப்படலாம். இதைத்தான் இந்த வசனம் கூறுகிறது:

> தூதரே, (கூறுவீராக) நீங்கள் பெண்களை விவாகரத்து செய்தால் அவர்கள் தூய்மையாக இருக்கும் காலங்களில் விவாகரத்து செய் யுங்கள். அவர்களின் கால அளவைச் சரியாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுங் கள். அப்பெண்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றா தீர்கள். அவர்களும் வெளியேறக் கூடாது, ஆனால் அவர்கள் வெளிப்படையான மானக்கேட்டைச் செய்தாலே தவிர. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். யார் இவற்றை மீறுகிறாரோ அவர் தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டவராவார். இதற்குப் பின்னர் அல்லாஹ் ஏதேனும் புதிய சூழலை உண்டாக்கக்கூடும் என்பதை நீர் அறிய மாட்டீர். (1)

மறைவானவற்றின் மீதான நம்பிக்கையும் இறையச்சத்தைத் தூண் டும் காரணிகளும் இந்த வசனங்களினூடே சட்டங்களுக்கு மத்தியில் மீண்டும் மீண்டும் வெளிப்படுவதை நான் காண்கிறேன். எந்த அளவுக் கெனில், பிரிவுக்குக் காரணமான குடும்பப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. 'யார் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறாரோ அவருக்கு அல்லாஹ் ஒரு வழியை ஏற்படுத்துவான். (2)'

மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் செலவுசெய்யுமாறும் பாலூட்டுதலி லும் இன்னபிற நிலைகளிலும் செலவுசெய்யுமாறும் திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. இறை வழிகாட்டலிலிருந்து வெளிப்படும் விசயம், இந்தத் தலாக் ஒரு சமூக அவலமாக மாறிவிடக் கூடாது என்றும் முஸ் லிம்கள் தங்களின் ஒழுக்கத்தையும் ஒருவர் மற்றவருடன் கொண்டுள்ள தொடர்புகளையும் இழந்துவிடக் கூடாது என்றும் இறைவன் விரும்பு கிறான்.

இத்தனை வழிகாட்டுதல்களுக்குப் பிறகும் முஸ்லிம்களிடம் காணப் படும் தலாக்கில் கவலைக்குரிய பல விசயங்களும் கலந்துவிட்டன. மார்க்கத்தில் அனுமதியில்லாத தவறான தலாக்கும் அவர்களிடையே அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. அற்ப விசயங்களுக்காகத் தலாக் கைக் கொண்டு சத்தியம்செய்யும் பழக்கமும் அவர்களிடையே பரவி விட்டது. இந்த விசயத்தில் பல விசித்திரமான சம்பவங்களை நாம் ஃபிக்ஹு நூல்களில் காணலாம். இன்றுவரை மேற்கத்தியவர்கள் நம் சமூகத்தில் தலாக் இந்த அளவு மலிந்து காணப்படுவதையும் அதன் வரம்புகள் மீறப்படுவதையும் வெறுப்புடன்தான் பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள். இது இஸ்லாம் ஏற்றுக்கொள்ளாத, மனிதர்களால் உரு வாக்கப்பட்ட வழிகேடு.

ஒரு பெண் கணவனின் வீட்டில் இருந்து கொண்டே தலாக்கின் வார்த் தைகளைச் செவியேற்பது மிகவும் அரிதானது. நபிமொழிகளில் காணப் படுவது போன்று தூய்மையான நிலையில், சாட்சிகளின் முன்னிலையில் தலாக்கின் வார்த்தைகளை ஒரு பெண் கேட்பது மிகவும் அரிதானது.

அற்ப காரணங்களுக்காகக் குடும்பம் பிரிந்துபோவதை வரவேற்கக் கூடிய ஃபுகஹாக்களும் இருக்கவே செய்கிறார்கள்.

இத்தகைய போக்கு இஸ்லாத்துக்குப் பெரும் களங்கமாகவும் அது பரவுவதற்குத் தடையாகவும் வந்துநிற்கிறது. ஆகவே, இந்த அத்தியாயத் தின் அடுத்து வரக்கூடிய பாதியை, முதல் பாதியை முழுமைப்படுத்தக் கூடியதாகவும் தலாக்கின் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என எச்சரிக்கக்கூடியதாகவும் நான் காண்கிறேன்.

பின்வரும் வசனத்தைக் கொண்டு அது தொடங்குகிறது: 'எத்தனையோ ஊர்மக்கள் தங்கள் இறைவனின் கட்டளைக்கும் அவனுடைய தூதர் களுக்கும் மாறுசெய்தார்கள். ஆகவே, நாம் அவர்களைக் கடுமையாக விசாரணைசெய்து மோசமான தண்டனையளித்தோம். அவர்கள் தங்கள் செயலின் விளைவை அனுபவித்தார்கள். (8,9)'

*தலாக்கின் சட்டங்களுடன் வந்துள்ள பின்வரும் வசனத்தையும் வாசிப்பவர் கவனிக்க வேண்டும்: 'இது அல்லாஹ் உங்களுக்கு அருளியுள்ள கட்டளையாகும். யார் அல்லாஹ்வை அஞ்சுவாரோ அவரது பாவங்களை அவன் போக்கிவிடுவான். அவருக்குப் பெரும் கூலியையும் வழங்குவான். (5)' இதற்குப் பிறகு இடம்பெறுகிறது: 'எத்தனையோ ஊர்மக்கள் தங்கள் இறைவனின் கட்டளைக்கும் அவனுடைய தூதர்களுக்கும் மாறாகச் செயல்பட்டார்கள். (8)' வசனங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டுள்ளன. வஹீயையும் நேர்வழியையும் கொண்டு சிறப்பிக்கப்பட்ட ஒரு சமூகம் குடும்ப அமைப்பைச் சிதைத்து, அதனை விளையாட்டான ஒன்றாக ஆக்கிவிடக் கூடாது. அவர்கள் இஸ்லாத்தை மோசமான முறையில் நடைமுறைப்படுத்தி, அழைப்பின் பாதையில் தடைக்கற்களை ஏற்படுத்திவிடக் கூடாது.*

*இறுதியாக, 'அல்லாஹ்வை நாம் அறிந்துகொள்வதற்காகவே அவன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தான், நாம் பின்பற்றுவதற்காகவே வஹீயை அருளினான்' என்று கூறும் வசனத்தோடு அத்தியாயம் நிறைவடைகிறது. இந்தப் பிரபஞ்சம் மௌனமாக அல்லாஹ்வின் இருப்பை அறிவித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு மாறாக வஹீ, சொற்களின் மூலம் அவனை அறிவித்துக் கொண்டும் முஸ்லிம்களுக்குப் பாதையைத் தெளிவுபடுத்திக்கொண்டும் இருக்கிறது. 'ஏழு வானங்களையும் அதைப் போன்று பூமியையும் அல்லாஹ்தான் படைத்தான். அவற்றில் கட்டளை இறங்கிக்கொண்டிருக்கிறது. அது அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையவன் என்பதையும் அல்லாஹ்வின் அறிவு ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்திருக்கிறது என்பதையும் நீங்கள் அறிந்துகொள்வதற்காகத்தான். (12)'*

*நான் தெளிவுபடுத்தியுள்ளதன் அடிப்படையில் இந்த அத்தியாயத்தை மீண்டும் வாசிக்கும்படி நான் ஒவ்வொரு முஸ்லிமையும் அழைக்கிறேன். அது அவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கலாம்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 66

# அத்தஹ்ரீம்

(விலக்குதல்)

*நம்பிக்கையாளர்களின் அன்னையர் இந்தச் சமூகத்தின் பெண்கள் அனைவரையும்விட ஒழுக்கத்திலும் இறையச்சத்திலும் தூய்மையிலும் உயர்ந்தவர்கள். அவர்கள் நபியவர்களுடன் இருந்தார்கள். அவர்களின் பணியை நிறைவேற்றுவதற்கு உதவிசெய்தார்கள். தங்கள் வீடுகளில் ஓதப்பட்ட இறை வசனங்களையும் ஞானம் நிரம்பிய அறிவுரைகளையும் சமூகத்துக்கு எடுத்துரைத்தார்கள். இரண்டு விசயங்களுக்காக அல்லாஹ் அவர்களைக் கண்டித்தான்.*

*ஒன்று, அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நபியவர்களிடம் தங்கள் செலவுக்காக வழங்கப்படும் தொகையை இன்னும் அதிகமாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து அவர்களை நெருக்கடிக்குள்ளாக் கியபோது. பின்னர், அவர்கள் அனைவரும் குறைவானவற்றைப் பெற் றுக்கொண்டு நபியவர்களுடன் இருப்பதற்கே முன்னுரிமையளித்தார்கள்.*

*நபி மிகவும் மென்மையானவராக, அழகிய குணமுடையவராக இருந் தார். இதனால் சில பெண்கள் அவரிடம் வரம்புமீறத் தொடங்கினார்கள். ரோஷம்தான் அதற்கான அடிப்படையான காரணம். அவர்களில் ஒருவர் நபியிடம் கூறினார், 'வழக்கத்துக்கு மாறாக உங்களிடம் வேறு வாடையை உணர்கிறேன்.' நபியவர்கள் கூறினார்கள், 'நான் ஸைனபு தந்த தேனைக் குடித்தேன்.' அதற்கு அந்தப் பெண் கூறினார், 'அந்தத் தேனீக்கள் மோச மான செடிகளிலிருந்து தேன்களைச் சேகரித்திருக்கலாம்.' அப்போது நபியவர்கள் கூறினார்கள், 'அப்படியானால் நான் இனிமேல் தேன் குடிக்க மாட்டேன். இதை யாருக்கும் அறிவித்துவிடாதே.'*

*பின்னர், இந்தச் சம்பவம் புனையப்பட்டது என வெளிப்பட்டது. குறிப்பிட்ட அந்தப் பெண்ணைவிட்டு நபியவர்களை விலக்க வேண்டும்*

என்பதற்காகத் தீட்டப்பட்ட திட்டம் அது. நடந்ததை எண்ணி நபியவர் கள் கோபம் கொண்டார்கள். தங்கள் மனைவியர் அனைவரையும் ஒதுக்கி விட்டார்கள். எந்த அளவுக்கெனில், அவர்கள் அனைவரையும் நபி தலாக்செய்துவிட்டதாகச் செய்தி பரவிவிட்டது. இந்தக் குழப்பத்தைப் போக்கவும் இந்த விசயத்தில் தூதரின் செயலைக் கண்டிக்கவும் அத் தஹ்ரீம் என்ற இந்த அத்தியாயம் அருளப்பட்டது.

> தூதரே, உமது மனைவியரின் திருப்திக்காக அல்லாஹ் உமக்கு அனுமதியளித்துள்ளதை விலக்கிக்கொள்கிறீர்? அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கி றான். அல்லாஹ் உங்களின் சத்தியங்களை (பரிகாரம்செய்து) முறித்துக்கொள்ளும்படி கட்டளையிட்டுள்ளான். (1,2)

அனுமதிக்கப்பட்ட ஒன்றைத் தடைசெய்வது சத்தியத்தைப் போன்ற தாகும் என்றும் சத்தியத்தை முறிப்பதற்கான பரிகாரமே அதற்கான பரிகாரம் என்றும் அறிஞர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் அனுமதித்ததைத் தடை செய்யக்கூடிய உரிமை யாருக்கும் இல்லை. பின்னர் வஹீ சம்பவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள், ‘உமரின் மகள் ஹஃப்ஸாவும் அபூபக்கரின் மகள் ஆயிஷாவும்தாம் நடந்த சம்ப வத்துக்குக் காரணமானவர்கள்.’ பின்வரும் வசனத்தில் இவர்கள்தாம் குறிப்பிடப்படுகிறார்கள்:

> நீங்கள் இருவரும் அல்லாஹ்விடம் மன்னிப்பு கோரி மீண்டு விட்டால் (அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும்). ஏனெனில், உங்களின் உள்ளங்கள் நேர்வழியிலிருந்து விலகிவிட்டன. நீங்கள் இருவரும் தூதருக்கு எதிராகச் செயல்பட்டால் அல்லாஹ் அவரது பாதுகாவலனாக இருக்கிறான். (4)

பின்னர் தூதரின் மனைவியர் அனைவரும் விளித்து உரையாடப்பட்டு உன்னதமான ஒழுக்கத்துடனும் நடுநிலையுடனும் நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்:

> தூதர் உங்கள் அனைவரையும் விவாகரத்து செய்துவிட்டால் அவ ருடைய இறைவன் உங்களுக்குப் பதிலாக உங்களைவிடவும் சிறந்த மனைவியரை அவருக்கு வழங்கிவிடலாம். அவர்கள் கீழ்ப்படிந்த வர்களாக, நம்பிக்கை கொண்டவர்களாக, வணங்கக்கூடியவர் களாக, பாவமன்னிப்பு கோருபவர்களாக, நோன்பு நோற்கக்கூடிய வர்களாக இருப்பார்கள். கன்னியர்களாகவும் கன்னியர் அல்லாத வர்களாகவும் இருப்பார்கள். (5)

தூதரின் இனிமையான, அழகிய பண்புகள் அவருக்குச் சிரமம் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது.

தூதரின் வீடு ரோஷம் கொள்வதற்கோ பொறாமை கொள்வதற்கோ உகந்த இடம் அல்ல. அது வணக்க வழிபாட்டுக்கான இடம், மறுமையை முன்னோக்குவதற்கான, அல்லாஹ்வின் திருப்தியைத் தேடுவதற்கான களம். அத்தியாயத்தின் இறுதியில், தூதரைக் கோபத்திற்குள்ளாக்கியவர்களை எச்சரிக்கும் விதமாக இரு உதாரணங்கள் கூறப்படுகின்றன. நூஹின் மனைவியும் லூத்தின் மனைவியும் தங்களின் கணவர்களின் பணிக்கு உறுதுணையாக இல்லாமல் அவர்களின் எதிரிகளுக்கு உதவி செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்.

> நூஹின் மனைவியையும் லூத்தின் மனைவியையும் அல்லாஹ் நிராகரிப்பவர்களுக்கு உதாரணமாகக் கூறுகிறான். இவ்விருவரும் நம்முடைய நல்லடியார்களின் மனைவியராக இருந்தார்கள். எனினும், அவர்கள் தங்கள் கணவன்மாருக்குத் துரோகம் செய்தார்கள். அப்பெண்களுக்கு அல்லாஹ்விடமிருந்து எந்தப் பயனையும் அந்த நல்லடியார்களால் அளிக்க முடியவில்லை. நரக நெருப்புக்குள் செல்வோருடன் நீங்களும் செல்லுங்கள் என்றே அவ்விரு பெண்களுக்கும் கூறப்பட்டது. (10)

இங்கு துரோகம் என்பது பாலியல்ரீதியான துரோகம் அல்ல. அத்தகைய பண்புகளைக் கொண்டவர்களை அல்லாஹ் தூதர்களாக அனுப்பிய தன் அடியார்களுடன் இணைக்கவில்லை. மாறாக, அது அழைப்புப் பணியில், வாழ்க்கையின் உன்னதமான நோக்கத்தில் அவர்கள் செய்த துரோகத்தைக் குறிக்கிறது.

சாக்ரடீஸின் மனைவி அவரை இழிவாகக் கருதக்கூடியவளாகவும் அவரது தத்துவத்தை மதிக்காதவளாகவும் அவரது வாழ்க்கையை நாசப்படுத்தக்கூடியவளாகவும் இருந்தாள். நூஹ், லூத்தின் மனைவியர் அவர்களின் உறவினர்களுக்கு உதவிசெய்யக்கூடியவர்களாகவும் தம் கணவர்களுக்கு உதவிசெய்யாதவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, அல்லாஹ் அவர்களை நிராகரிப்பாளர்களுடன் ஒரே இருப்பிடத்தில் ஒன்றுசேருபவர்களாக ஆக்கிவிட்டான். ‘நரக நெருப்புக்குள் செல்வோருடன் நீங்களும் செல்லுங்கள் என்றே அவ்விரு பெண்களுக்கும் கூறப்பட்டது. (10)’

ஒவ்வொரு மனிதனும் அவனவன் செய்த செயல்களுக்குத்தான் விசாரணைசெய்யப்படுவான் என்பதை இஸ்லாம் அடிப்படையான ஒரு கொள்கையாக முன்வைக்கிறது. தந்தை மகனுக்கோ மகன் தந்தைக்கோ

கணவன் மனைவிக்கோ மனைவி கணவனுக்கோ பயனளிக்க முடியாது. ஃபிர்அவ்ன் நரகத்தில் நுழைவான். அவனுடைய மனைவியோ சுவனத்தில் நுழைவார்.

அத்தியாயத்தின் ஆரம்பத்துக்கும் இறுதிக்கும் மத்தியில் அல்லாஹ் பொறுப்பாளர்களிடம் தங்கள் வீடுகளைக் கண்காணிக்கும் படியும் அவற்றை நிலையான இன்பங்களுக்கான களமாகவும் கடுமையான வேதனையைத் தடுக்கும் திரையாகவும் ஆக்கிக்கொள்ளும் படியும் வேண்டுகிறான். 'நம்பிக்கையாளர்களே, உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து காத்துக்கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும் கற்களுமே ஆகும். (6)'

பின்னர், மனிதர்களை என்றும் தவறிழைக்காத புனிதர்களாக ஆக்கவில்லை என்பதையும் அவர்கள் தவறிழைத்துவிட்டால் உடனே தங்கள் இறைவனின் பக்கம் திரும்பி மன்னிப்பு கோர வேண்டும் என்பதையும் தங்கள் அனுபவங்களிலிருந்து பயனடைந்து, தவறுகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

> நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்விடம் உண்மையான முறையில் பாவமன்னிப்பு கோரி மீளுங்கள். (8)

உண்மையான முறையில் செய்யப்படும் பாவமன்னிப்புக் கோரிக்கை அல்லாஹ்வை நினைவூட்டி நன்மைசெய்யுமாறும் தீமையிலிருந்து தவிர்ந்திருக்குமாறும் உள்ளத்துக்குக் கட்டளையிடுகிறது.

இங்கு ஒரு விசயத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். சில ஓரியண்டலிஸ்டுகள் முஹம்மது நபியின் வீட்டில் நடந்த இந்தப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இறை வஹீயை மறுக்கிறார்கள். டாக்டர் முஹம்மது ஹுசைன் ஹைகல் தம்முடைய ஒரு புத்தகத்தில் இந்த ஆட்சேபணையைக் குறிப்பிட்டுக் கூறுகிறார், இறைத்தூதர் லூத் தம் மகள்களுடன் உறவு கொண்டார் என்று புனித வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தைவிட இந்தச் சம்பவமா குறிப்பிடத் தகுதியற்ற சம்பவம்?

நாம் கூறுகிறோம், தீர்க்கதரிசிகளில் ஒருவர் தம் மகனுடைய மனைவியுடன் விபச்சாரம்செய்தார் என்று பைபிளில் கூறப்பட்டுள்ள சம்பவம் குறிப்பிடத் தகுதியானதுதானா? ஓரியண்டலிஸ்டுகள் மற்றவர்களுடைய கண்களில் இருக்கும் தூசியைக் காண்கிறார்கள். தங்களின் கண்களில் கிடக்கும் கட்டையைக் காண மறுக்கிறார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 67

# அல்முல்க்

(ஆட்சி)

*இந்த உலகம் இதற்குப் பிறகு வரக்கூடிய உலகத்துக்கான களமாகும். மார்க்கத்தைச் சரியான முறையில் பின்பற்றாதவர்கள் இந்த உண்மையைத் தீவிர செயல்பாட்டைக் கொண்டு, நிரந்தரமான வாழ்வுக்கான தயார்படுத்தலைக் கொண்டு அணுகாமல் துர்ச்சகுனத்தால் எதிர்கொள்கிறார்கள்.*

*நவீன நாகரிகத்தை எதிர்கொள்வதற்கு மறுமையைக் குறித்த நம் நிலைப்பாட்டை நிர்ணயிப்பது மிக அவசியமாகும். இந்த நிர்ணயம் வாழ்க்கையை வாசிப்பதையும் குறிப்பிட்ட காலம் என நிர்ணயிக்கப்பட்ட அதன் நோக்கத்தை அறிந்துகொள்வதையும் நம்மீது கடமையாக்குகிறது.*

*வாழ்க்கையைப் பற்றி எதுவும் வாசிக்காத, அதற்குப் பிறகு வரும் நிரந்தரமான வாழ்க்கைக்காகத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளாத அறிவு நம்பிக்கையாளனின் அறிவாக இருக்க முடியாது. இந்த அத்தியாயம் தெளிவான வார்த்தைகளைக் கொண்டு இதனை அறிவிக்கிறது. ‘உங்களில் நற்செயல் புரிபவர் யார் என்பதைச் சோதிப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். (2)’ ‘அவனே ஏழு வானங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகப் படைத்தான். கருணைமிக்க இறைவனின் படைப்பில் எவ்வித குறைபாட்டையும் நீ காண மாட்டாய். (3)’ ‘நாம் அருகில் உள்ள வானத்தை விளக்குகளால் அலங்கரித்துள்ளோம். (5)’*

*வருத்தத்துக்குரிய விசயம் என்னவென்றால், தற்காலத்தில் இஸ்லாமிய அறிவுலகம் பிரபஞ்சத்தைக் குறித்து, அதன் நியதிகளைக் குறித்து அறியாமையிலும் அவற்றைக் கொண்டு பயனடைவதில் மிகவும் பின்தங்கியும் இருக்கிறது.*

இங்கு அதனோடு இன்னொன்றும் சேர்ந்துவிட்டது. அது இன்பங்களை அனுபவிப்பதிலும் இசை கேட்பதிலும் தன்னை மறந்து மூழ்கிக் கிடக்கிறது. 'சிரி, விளையாடு, உன் பகல்களையும் இரவுகளையும் வாழ்ந்துகழி, கடந்துபோன இன்றைய நாள் திரும்பிவராது. பிறகு ஏன் அதனை வீணாக்குகிறாய்?' இவ்வாறு முஸ்லிம்கள் எல்லா வகையான தோல்விகளையும் ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களும் நிராகரிப்பாளர்கள் நரகத்தில் சென்றடையும் இடத்தைக் கொண்டு மிரட்டப்பட்டால் அதில் எவ்வித ஆச்சரியமும் இருக்காது.

> அதில் ஏதேனும் ஒரு சமூகத்தார் எறியப்படும்போதெல்லாம் அதன் காவலர்கள் அவர்களிடம், 'உங்களிடம் எச்சரிக்கைசெய்பவர்கள் யாரும் வரவில்லையா?' என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள், 'ஆம். எங்களிடம் எச்சரிக்கைசெய்பவர் வந்திருந்தார். ஆயினும் நாங்கள் அவரைப் புறக்கணித்து, அல்லாஹ் எதனையும் அருளவில்லை, நீங்கள் பெரும் வழிகேட்டில் இருக்கிறீர்கள் என்று கூறிவிட்டோம்.' என்று கூறுவார்கள். 'நாங்கள் செவிமடுத்திருந்தால் அல்லது புரிந்துகொண்டிருந்தால் நரகவாசிகளாக ஆகியிருக்க மாட்டோமே!' என்றும் அவர்கள் கூறுவார்கள். (8-10)

நாத்திகனைவிட நம்பிக்கையாளனே வாழ்க்கையைக் குறித்து நன்கறிந்தவனாகவும் பிரபஞ்சத்தைக் குறித்து சிந்திக்கக்கூடியவனாகவும் இருப்பான். ஏனெனில், அவன் அல்லாஹ்வின் மீது கொண்ட நம்பிக்கை, பிரபஞ்சத்தில் காணப்படும் அல்லாஹ்வின் சான்றுகளில் கவனம் செலுத்துவதன் அடிப்படையில் நிறுவப்பட்டதாகும். இன்று கவலைக்குரிய விசயம் என்னவெனில், முஸ்லிம்களை மிகவும் பின்தங்கியவர்களாகக் காண்பதுதான்.

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளுதல் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வதில் ஒன்றாக இருந்தாலும் அதிலும் அறிவு தன் வேலையைச் செய்கிறது. ஆனாலும் மறைவான இந்த நம்பிக்கை உள்ளத்தில் ஏற்படுத்தும் தாக்கம், புலனுணர்வுகள் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட வலிமையானது. ஏனெனில், மனிதன் தன் ஆன்மாவின் மூலம் மறைவான இந்த நம்பிக்கைக்குப் பதிலளிப்பவனாக இருக்கிறான். அவன் அதன் கட்டளைக்குப் பதிலளித்து, மிகச் சுவையான இன்பங்களைக்கூட விட்டுவிடுகிறான். ஆகவே அல்லாஹ் கூறுகிறான்: 'மறைவில் தங்கள் இறைவனை அஞ்சுபவர்களுக்கு மன்னிப்பும் பெரும் கூலியும் உண்டு. (12)'

மறைவானதன் மீது நம்பிக்கை கொள்வதுடன் அவன் வெளியுலகத்திலும் ஆதிக்கம்பெற்றவனாக, பூமியின் பாதைகளைப் பயன்படுத்துவதில்

*திறமையாளனாக இருக்கிறான். ‘அவனே பூமியை உங்களுக்கு வசப் பட்டதாக அமைத்துள்ளான். அதன் பாதைகளில் செல்லுங்கள். அத னுடைய உணவிலிருந்து உண்ணுங்கள். அவனிடமே நீங்கள் மீண்டும் எழுப்பப்படுவீர்கள். (15)’ அவன் இங்குள்ள உணவை உண்டாலும் அவனுடைய எதிர்காலம் இங்கு இல்லை. அது அல்லாஹ்விடத்தில்தான் இருக்கிறது. அவனிடமே நீங்கள் மீண்டும் எழுப்பப்படுவீர்கள்.*

*இந்த அத்தியாயத்தின் முதல் வசனம் அல்லாஹ்வின் கையில்தான் ஆட்சியதிகாரம் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியது. ஏனைய வசனங்கள் அவன் கைவசமே நன்மைகள் அனைத்தும் இருக்கின்றன என்பதையும் பூமி முழுமையும் அவனுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்பதையும் வானங்கள் அவனுடைய வலக்கரத்தில் சுருட்டப்பட்டிருக்கின்றன என்பதையும் அவனுடைய ஆட்சியதிகாரம் எந்தவித ஒப்புமையுமற்றது என்பதையும் அதற்குத் தடையாக யாரும் வந்துவிட முடியாது என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.*

*ஆகவே அவன் நிராகரிப்பாளர்களிடம் கேட்கிறான்:*

> *வானத்தில் இருப்பவன் உங்களைப் பூமியினுள் அமிழ்த்திவிடுவான் என்பதைக் குறித்து நீங்கள் அச்சமற்று இருக்கிறீர்களா? அப்போது அது நடுங்கத் தொடங்கும். வானத்தில் இருப்பவன் உங்கள்மீது கற்களை வீசும் காற்றை அனுப்பிவிடக்கூடும் என்று உங்களுக்கு அச்சம் இல்லையா?* (16,17)

*இங்கு ‘வானத்தில் இருப்பவன்’ என்ற வார்த்தை அல்லாஹ்வையே குறிக்கிறது. அவன் தன்னுடைய அரியணையில் நிலைத்திருந்தாலும் அவனுடைய அறிவும் செவிப்புலனும் பார்வையும் ஒவ்வொன்றையும் சூழ்ந்துள்ளன. ஒவ்வொரு உயிரியையும் அவனே பராமரித்துக்கொண்டும் நிர்வகித்துக்கொண்டும் இருக்கிறான். எந்த ஒன்றும் அவனைவிட்டு மறைவாக இருக்க முடியாது. ஆகவே அவன் கூறுகிறான்: ‘கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியன. நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கே அல்லாஹ்வின் முகம் இருக்கிறது.* (2:115)’

*மேலும் அவன் கூறுகிறான்: ‘வானங்களிலும் பூமியிலும் உள்ள யாவற் றையும் அல்லாஹ் அறிவான் என்பதை நீர் பார்க்கவில்லையா? மூன்று மனிதர்களிடையே இரகசியப் பேச்சு எதுவும் நடப்பதில்லை, அவர் களிடையே நான்காவதாக அல்லாஹ் இல்லாமல். ஐந்து மனிதர்களிடையே இரகசியப் பேச்சு எதுவும் நடப்பதில்லை, அவர்களிடையே ஆறாவதாக அல்லாஹ் இல்லாமல். இதனைவிடக் குறைவாக இருந்தாலும் கூடுதலாக*

*இருந்தாலும் அவர்கள் எங்கிருந்தபோதிலும் அவன் அவர்களுடனேயே இருக்கிறான். (58:7)' மேலும் அவன் கூறுகிறான்: 'நீங்கள் எங்கிருந்த போதிலும் அவன் உங்களுடனேயே இருக்கிறான். (57:4)'*

அல்லாஹ் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. 'அது எப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிறான்? அதனுடைய உண்மைநிலை என்ன?' என்று தேடுவது நம் சக்திக்கு அப்பாற்பட்ட வரம்புமீறிய செயலாகும். நாம் உண்ணும் உணவுக் கவளங்களை எவ்வாறு அல்லாஹ் கண்களாகவும் காதுகளாகவும் மாற்றுகிறான் என்பதை நாம் அறிய மாட்டோம். பிறகு எப்படி அவனுடைய உள்ளமையைக் குறித்து நம்மால் அறிய முடியும்? அல்லாஹ் நம்மைவிட நமக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறான். ஆனாலும் நம்மால் அவனைக் காண முடியாது. இந்த அத்தியாயத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதைப் போன்று அவனிடம் உதவி தேடவும் வாழ்வாதாரம் தேடவும் அவனைத் தவிர மற்றவர்களைப் பூஜ்யங்களாக எண்ணிக்கொள்ளவும் அறிந்து கொண்டால் அதுவே நமக்குப் போதுமானது.

*கருணையாளனைத் தவிர உங்களுக்கு உதவிபுரிவதற்கு உங்களிடம் என்ன படை இருக்கிறது? நிராகரிப்பாளர்கள் ஏமாற்றத்தில் ஆழ்ந்துகிடக்கிறார்கள். தான் அளிக்கும் உணவை அவன் நிறுத்திக் கொண்டால் உங்களுக்கு உணவளிப்பவர் யார்? மாறாக, அவர்கள் வரம்புமீறுவதிலும் சத்தியத்தை விட்டு வெறுத்தோடுவதிலும் வீழ்ந்துவிட்டார்கள். (20,21)*

இந்த அத்தியாயத்தின் இறுதியில், தூதரையும் அவரைப் பின்பற்றிய நம்பிக்கையாளர்களையும் எதிர்க்கும் நிராகரிப்பாளர்களிடம் கேட்கப்படுகிறது, 'நீங்கள் உண்மையைப் புரியாத மூடர்களாக இருந்து அதனோடு மோதினால் அதனால் உங்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? நீங்கள் கூறுவதுபோன்று மற்றவர்கள் உங்களுக்குப் பரிந்துரை செய்யவும் உங்களின் வழிகேட்டைச் சரியெனக் கூறவும் வேண்டுமா?'

*நீர் கூறும், 'அல்லாஹ் என்னையும் என்னுடன் இருப்பவர்களையும் அழித்துவிட்டால் அல்லது எங்கள்மீது இரக்கம் காட்டினால் துன்புறுத்தும் வேதனையிலிருந்து நிராகரிப்பாளர்களைக் காப்பாற்றுபவர் யார்?' நீர் கூறும், 'அவன் அளவிலாக் கருணையாளன். நாங்கள் அவன்மீதே நம்பிக்கை கொண்டுள்ளோம். அவனையே சார்ந்துள்ளோம். தெளிவான வழிகேட்டில் இருப்பவர் யார் என்பதை நீங்கள் மிக விரைவில் அறிந்துகொள்வீர்கள்.' (28,29)*

இறுதியாக, தங்களுக்கு உலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த இறைவனை மறந்துவிட்டு அவற்றில் மூழ்கிக்கிடக்கும் நிராகரிப்பாளர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது: ‘நீர் கேளும், நீங்கள் பருகும் நீர் வற்றிவிட்டால் உங்களுக்குத் தூய்மையான நீரைக் கொண்டுவருபவன் யார் என்று. (30)’

ஒரு செய்தி கூறப்படுகிறது. இறை மறுப்பாளர்களில் ஒருவர் இந்த வசனத்தைச் செவியேற்றபோது, ‘நீங்கள் எங்களிடம் கடப்பாரைகளையும் மம்மட்டிகளையும் எடுத்துவாருங்கள்.’ என்றாராம். அதாவது, கிணற்றை இன்னும் ஆழமாகத் தோண்டி தண்ணீரை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவாம். அல்லாஹ் அவனுடைய கண்ணின் நீரை வற்றச் செய்துவிட்டால் அவன் குருடனாகிவிடுவான். யாராவது அவனுடைய பார்வையைத் திரும்பக் கொண்டுவர முடியுமா? இதுபோன்று கைவிடப்படுவதிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்.

❖ ❖ ❖

அத்தியாயம் 68

# அல்கலம்

(எழுதுகோல்)

*'நூன். எழுதுகோலின் மீதும் அவர்கள் எழுதுபவற்றின் மீதும் சத்திய மாக. (1)' இது மக்கள் அறிதலுக்காகப் பயன்படுத்தும் பொதுவான வழிமுறையைக் குறிக்கிறதா? இருக்கலாம். எழுத்து, அறிதலுக்காகப் பயன்படுத்தப்படும் முக்கியமான வழிமுறையாகும். அல்லது, இது எழுதப்பட்ட குர்ஆனையும் அதில் பதிவுசெய்யப்பட்ட ஞானம்மிக்க அறிவுரைகளையும் குறிக்கலாம். திருக்குர்ஆன் இந்த உலகில் தோன்றிய மிக முக்கியமான வேதமாகும். அது தன் முதல் எழுத்திலிருந்து இறுதி எழுத்துவரை தூய வஹீயை மட்டுமே கொண்ட வேதமாகும். இதன் முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் அசத்தியம் வர முடியாது. இதனை எடுத்துரைப்பதற்காக அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தில் சிந்தனையிலும் கண்ணியத்திலும் நடத்தையிலும் முதன்மையானவனான மனிதனைத் தெரிவுசெய்தான். ஆகவே, இந்த வேதம் குறித்த எதிரிகளின் கூற்று களுக்கு எவ்வித மதிப்பும் இல்லை. 'உமது இறைவனின் அருளால் நீர் பைத்தியக்காரர் அல்லர். நிச்சயமாக உமக்கு என்றும் முடிவுறாத கூலி உள்ளது. நிச்சயமாக நீர் உன்னதமான நற்குணமுடையவராக இருக்கிறீர். (2-4)'*

*இந்த வஹீயின் எதிரிகளை எந்த ஒன்றும் அலங்கரிக்காது. காலம் அவர்களின் வாதங்களையும் நிலைமைகளையும் விரைவில் வெளிப் படுத்திவிடும். அப்படியே ஆனது. நிராகரிப்பாளர்கள் அழிந்துபோனார் கள். இஸ்லாம் மட்டுமே நிலைத்தது.*

*'நாம் தோட்டக்காரர்களைச் சோதனைக்குள்ளாக்கியதைப் போன்று இவர்களையும் சோதனைக்குள்ளாக்கினோம். (17)' இந்த வசனம், மக்கா வின் இணைவைப்பாளர்கள் ஆரம்பத்தில் இஸ்லாத்தை எதிர்ப்பார்கள்*

என்பதையும் பின்னர் அவர்கள் சத்தியத்தை ஒத்துக்கொண்டு இஸ்லாத்தில் பிரவேசிப்பார்கள் என்பதையும் உணர்த்துகிறது. அப்படித்தான் நிகழ்ந்தது. பேராசையின் காரணமாக ஏழைகளின் உரிமைகளை அளிக்க மறுத்த தோட்டத்தின் சொந்தக்காரர்களால் அல்லாஹ் அதன் விளைச்சல்கள் அனைத்தையும் அழித்துவிட்டான். தங்களின் செயல்களை எண்ணி வருந்தியவர்களாக அவர்கள் கூறினார்கள்: 'எங்கள் கேடே! நிச்சயமாக நாங்கள் வரம்புமீறியவர்களாக இருந்தோம். எங்கள் இறைவன் இதற்குப் பதிலாக இதைவிடச் சிறந்த தோட்டத்தை எங்களுக்கு வழங்கக்கூடும். நாங்கள் அவன் பக்கமே திரும்புகிறோம். (31,32)'

யார் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி பாவமன்னிப்பு கோருவாரோ அவரை அல்லாஹ் சிறந்த முறையில் ஏற்றுக்கொள்வான். அல்லாஹ் குறைஷிகளை இஸ்லாத்தைக் கொண்டு கண்ணியப்படுத்தினான். அதற்கு முன்னர் அவர்கள் நிராகரிப்பைக் கொண்டு தங்களைத்தாங்களே இழிவுபடுத்திக்கொண்டிருந்தார்கள்.

தங்களின் வழிகேட்டில் பிடிவாதமாக நிலைத்திருப்பவர்களுக்கு எந்த எதிர்காலமும் இல்லை. 'கீழ்ப்படிந்து நடப்போரை நாம் கீழ்ப்படியாதவர்களைப் போன்று ஆக்கிவிடுவோமா என்ன? உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் எவ்வாறு முடிவெடுக்கிறீர்கள்? (35,36)' நிராகரிப்பாளர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தங்களின் நிலைப்பாட்டுக்கு அறிவுபூர்வமான ஆதாரத்தையோ வேதத்திலிருந்து ஆதாரத்தையோ கொண்டிருந்ததில்லை. ஆகவே, அவர்களைக் கண்டித்தவாறு அல்லாஹ் கூறுகிறான்: 'உங்களிடம் ஏதேனும் வேதம் உள்ளதா, அதில் நீங்கள் படிக்கிறீர்களா, அதில் நீங்கள் விரும்பக்கூடியவை இருக்கின்றனவா? (37,38)' கர்வத்தையும் மூடநம்பிக்கைகளையும் தவிர அவர்களிடம் வேறெந்த ஆதாரமும் இருந்ததில்லை. அவர்கள் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படும்போது தங்களின் செயல்களை நினைத்து வருந்துவார்கள். ஆனால், அந்தச் சமயத்தில் வருந்துவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. 'சத்தியத்தைவிட்டுத் திரை அகற்றப்படும் நாளில் அவர்கள் சிரம்பணிய அழைக்கப்படுவார்கள். அப்போது அவர்களால் சிரம்பணிய முடியாது. (42)'

இந்த விசயத்தில் நிராகரிப்பாளர்களின் எந்த விதமான சாக்குப் போக்கும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவர்கள் சத்தியத்தின் பக்கம் அழைக்கப்பட்டார்கள். ஆனால் பிடிவாதமாக மறுத்துவிட்டார்கள். ஏராளமான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அவர்களோ அவையனைத்தையும் வீணாக்கிவிட்டார்கள். 'ஆகவே, என்னையும் இந்த

*வாக்கைப் புறக்கணிப்போரையும் விட்டுவிடுங்கள். அவர்களே அறியாதவாறு படிப்படியாக நாம் அவர்களைப் பிடிப்போம். (44)'*

*பொறுமையைக் கடைப்பிடிக்கும்படியும் இணைவைப்பாளர்களின் தொல்லைகள் அனைத்தையும் சகித்துக்கொள்ளும்படியும் நபியவர்கள் பணிக்கப்பட்டார்கள். 'ஆகவே, உம் இறைவனின் தீர்ப்பு வரும்வரை பொறுத்துக்கொள்ளும். மீனுடையவரைப் போன்று ஆகிவிடாதீர். (48)' இந்தத் தூதுத்துவத்தைச் சுமந்ததால் துன்பங்களாலும் வலிகளாலும் சூழப்பட்ட கடுமையான இரவுகளைத் தூதர் கடக்க நேர்ந்தது. ஆனாலும் அவர் சத்தியத்தை முழுமையாக எடுத்துரைப்பதற்காக உறுதியாக நின்றார். அதனைப் பாதுகாக்கக்கூடிய ஒரு தலைமுறையிடம் அதனை ஒப்படைத்து விட்டுச் சென்றார். அந்தத் தலைமுறை தன் ஆன்மாவாலும் பலத்தாலும் உலகம் முழுவதும் இந்தத் தூதுத்துவத்தை எடுத்துச்சென்றது.*

*இஸ்லாத்தின் உலகளாவிய தன்மை பல வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்காவின் ஆரம்பக் கட்டத்தில் அருளப்பட்ட வசனங்களிலேயே இது வெளிப்படுத்தப்பட்டுவிட்டது.*

> *இந்த நிராகரிப்பாளர்கள் அறிவுரையைச் செவியுறும்போது தம் பார்வைகளால் உம்மை வீழ்த்திவிடுவதைப் போன்று பார்க்கிறார்கள். 'நிச்சயமாக இவர் ஒரு பைத்தியக்காரர்!' என்றும் கூறுகிறார்கள். இது உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அறிவுரையன்றி வேறில்லை. (51,52)*

*ஆரம்பத்திலேயே முஹம்மது உலகம் முழுமைக்கும் அனுப்பப்பட்ட தூதர் என்று அறியப்பட்டு விட்டார். இந்த அத்தியாயம் மக்காவின் ஆரம்பக் காலகட்டத்தில் அருளப்பட்டதாகும்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 69

# அல்ஹாக்கா

(நிச்சயமானது)

*நிச்சயமாக நிகழக்கூடியது. 'நிச்சயமாக நிகழக்கூடியது எது? நிச்சய மாக நிகழக்கூடியது என்னவென்று உமக்குத் தெரியுமா? (1-3)' நாம் இந்த உலகம் மட்டுமே உண்மையானது என்று எண்ணிக்கொண்டி ருக்கிறோம். மரணத்தின் மூலம் இந்த உலகை நாம் விட்டுவிட்ட பிறகு இந்த எண்ணம் நிலைத்திருக்குமா? நாம் வேறொரு உலகத்தை எதிர் கொள்வோம். அதுதான் நிரந்தரமான உண்மையா? நாம் கேட்கிறோம்: இந்தப் பூமியை வளப்படுத்தியவர்களில் யாரேனும் எஞ்சியிருக்கிறார் களா? அல்லது, மரணம் அனைவரையும் அறுவடைசெய்துவிட்டதா? வந்தவர்கள் அனைவரும் சென்றுவிட்டார்கள். அவர்களில் பெரும்பாலோர் திடீரென மரணத்தால் தூக்கிச்செல்லப்பட்டார்கள். அனைவருக்கும் இன்னொரு நாள் இருக்கிறது. அந்த நாளில் முந்தையவர்கள், பிந்தைய வர்கள் என அனைவரும் சந்திப்பார்கள். அப்போது மனிதர்கள் சத்தியத் தையும் தாங்கள் செய்த செயல்களையும் செய்யாமல் விட்டுவிட்டவற்றை யும் அறிந்துகொள்வார்கள்.*

*பல சமூகங்கள் தம் தூதர்களை நிராகரித்தன. அவற்றில் சில சமூகங்கள் தண்டிக்கப்பட்டன. சில சமூகங்களுக்குத் தண்டனை பிற்படுத்தப்பட்டது. அனைவரின் விவகாரங்களும் ஒருநாள் நிச்சயம் வெளிப்பட்டே தீரும்.*

> *எக்காளம் ஒருமுறை ஊதப்படும்போது, பூமியும் மலைகளும் உயர்த்தப்பட்டு ஒரே தடவையில் தூள்தூளாக்கப்படும்போது, அந்நாளில் நிகழக்கூடியது நிகழ்ந்துவிடும்.* (13-15)

*அது விசாரணைக்கான, கூலி வழங்கப்படுவதற்கான, நல்லவர்களும் தீயவர்களும் வேறுபடுத்தப்படுவதற்கான நேரமாகும். 'யாருடைய பதி வேடு அவரது வலக்கையில் கொடுக்கப்படுமோ அவர், இதோ என்*

பதிவேட்டைப் படியுங்கள். நான் என் விசாரணையை எதிர்கொள்வேன் என்று உறுதியாக எண்ணியிருந்தேன் என்று கூறுவார். (20)' 'யாருடைய பதிவேடு அவரது இடக்கையில் கொடுக்கப்படுமோ அவர், என் பதிவேடு என்னிடம் கொடுக்கப்படாமல் இருக்கக் கூடாதா, என் விசாரணையை நான் அறியாதிருக்க வேண்டுமே என்று கூறுவார். (26)'

தற்காலத்தில் பார்ப்பவற்றை மட்டுமே நம்பும் சிந்தனையே இந்த உலகில் மிகைத்துள்ளது. செல்வங்களைச் சம்பாதிப்பதிலும் இன்பங்களை அனுபவிப்பதிலும் மனிதர்கள் பைத்தியக்காரர்களைப் போன்று போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொழுகையிலும் அர்ப்பணிப்பிலும் அல்லாஹ்வைக் குறித்த விசயத்திலும் அவர்கள் பற்றற்றவர்களாக இருக்கிறார்கள். சமூகங்களில் மீதமிருந்த வஹீ தெளிவான ஈமானாக, நற்செயலாக மாற்றமடையவில்லை. கவலைக்குரிய விசயம், மனவுறுதிமிக்க தூதர்களின் வழிகாட்டுதல்கள் மனிதர்களின் கைகளில் சிக்கி மனவுறுதியைக் குலைக்கும் வழிகாட்டல்களாக மாறிவிட்டன. அவர்களில் சிலர் தங்கம், வெள்ளியின் பெரும் குவியலையே கொண்டிருந்தாலும் ஏழைகளுக்கு உதவுவதில் கஞ்சத்தனம் செய்பவராகவே இருக்கிறார்கள். அவர்களைக் குறித்துதான் கூறப்பட்டது:

*அவனைப் பிடியுங்கள். அவனுக்கு விலங்கை மாட்டுங்கள். பின்னர் அவனை நரகத்தில் தள்ளுங்கள். பின்னர் அவனை எழுபது முழம் நீளமுள்ள சங்கிலியால் பிணையுங்கள். அவன் மகத்துவம்மிக்க அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருந்தான். அவன் ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டவுமில்லை. (30-34)*

மனிதர்களில் பெரும்பாலோரும் வலிமையான நாடுகளும் முஹம்மதைப் பொய்யர் என்றும் அவரது தூதுத்துவம் போலியானது என்றும் எண்ணுகின்றன. நான் கேட்கிறேன்: முஹம்மது தம் தூதுத்துவத்தின் மூலமாக எதைச் சம்பாதித்தார்? அல்லாஹ் ஒருவனே என்றும் அவனை நிச்சயமாக நீங்கள் சந்தித்தே தீர வேண்டும் என்றும் அவர் கூறியது குற்றமா? அவனை அஞ்சுவதுதான் வெற்றிபெறுவதற்கான ஒரே வழி என்று அவர் கூறியது குற்றமா? நான் எனக்குக்கூடப் பலனளிக்கவோ தீங்களிக்கவோ முடியாத ஓர் அடியார் என்று அவர் கூறியது குற்றமா? றுகூஉவிலும் சஜ்தாவிலும் நீண்ட நேரம் இருந்ததும் அநியாயத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தியதும்தான் அவர் செய்த குற்றமா? மனிதர்களுக்கு அல்லாஹ்வைக் குறித்து எடுத்துரைப்பதற்கு முஹம்மதே தகுதியானவர். அவரைப் போன்று ஒருவரும் அல்லாஹ்வின் தூய்மையையும் மகத்துவத்தையும் எடுத்துரைத்திருப்பதை நாம் காணவில்லை.

இதுதான் பின்வரும் வசனங்களில் செய்யப்பட்டுள்ள சத்தியத்தின் இரகசியம்:

*இல்லை. நீங்கள் பார்க்கின்றவற்றின் மீதும் நீங்கள் பார்க்காதவற்றின் மீதும் நான் சத்தியம் செய்கிறேன். நிச்சயமாக இது கண்ணியம் மிக்க ஒரு தூதரின் சொல்லாகும். இது ஒரு கவிஞரின் சொல் அல்ல. நீங்கள் மிகக் குறைவாகவே நம்பிக்கை கொள்கிறீர்கள். இது ஒரு ஜோதிடனின் சொல்லும் அல்ல. மிகக் குறைவாகவே நீங்கள் சிந்திக்கிறீர்கள். இது படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனிடமிருந்து அருளப்பட்டதாகும்.* (38-43)

முஹம்மது இந்த வஹீயைப் புனைந்து கூறியிருந்தால் அவருக்கான தண்டனை மிகக் கடுமையானதாக இருந்திருக்கும்.

*அவர் ஏதேனும் ஒரு விசயத்தை நம்மீது புனைந்துகூறியிருந்தால் நாம் அவரது வலக்கரத்தைப் பிடித்திருப்போம், பின்னர் அவரது நாடி நரம்பைத் துண்டித்திருப்போம். உங்களில் யாரும் இதிலிருந்து நம்மைத் தடுக்க முடியாது.* (44-47)

இந்த உலகம் நிலைத்திருக்கும்வரை உண்மையான ஈமானின் பக்கம் அழைத்தவாறும் மனித உள்ளங்களைத் தூய்மைப்படுத்தியவாறும் தூதரின் உண்மைத் தன்மைக்குச் சான்றாகவும் இந்தக் குர்ஆனும் நிலைத் திருக்கும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 70

# அல்மஆரிஜ்

(ஏறிச்செல்லும் வழிகள்)

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் 'ஏறிச் செல்லும் படிகளின் அதிபதி!' என்று அல்லாஹ் தன்னை வர்ணிக்கிறான். இது வேறொரு அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் வசனத்தைப் போல: 'அவன் உயர்ந்த அந்தஸ்துகளை உடையவன். அரியணையின் அதிபதி. (40:15)' இந்தப் பூமியின் அடிப்பகுதியிலிருந்து வானத்தில் இருக்கக்கூடிய அவனுடைய அரியணைவரையில் உள்ள எல்லாவற்றையும் மனிதர்கள் கடக்க வேண்டுமென்றால் ஐம்பதாயிரம் வருடங்கள்வரை செல்ல வேண்டியிருக்கும். றூஹுல் அமீனும் வானவர்களும் அந்தத் தூரத்தைக் குறிப்பிட்ட காலத்தில் கடந்து விடுகிறார்கள். பல்கீஸின் அரியணை யமனிலிருந்து கண் இமைக்கும் நேரத்தில் ஷாம் தேசத்துக்குக் கொண்டு வரப்பட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இங்கு ஏறிச் செல்லும் படிகளின் அதிபதியாகிய அல்லாஹ்வின் வேதனையை ஒருவன் கேட்டு விட்டான் என்பது அவன் கடினமான ஒன்றைக் கேட்டுவிட்டான் என்று பொருள் தரக்கூடியதல்ல. அவனை அழிப்பது ஒரு கொசுவை அழிப்பதைவிடக் கடினமான ஒன்றல்ல. ஆனாலும் இவ்வாறு வாதிட்டவன் நெருங்கிவரக்கூடிய அல்லது தாமதமாக வரக்கூடிய வேதனையை நம்பாதவன். அவன் மூடனாகவும் நிராகரிப்பாளனாகவும் இருக்கிறான். அவன் விரைவில் இந்த வேதனையைக் காண்பான். 'அந்நாளில் வானம் உருகிய செம்பைப் போல் ஆகிவிடும். மலைகள் கடையப்பட்ட பஞ்சைப் போன்று ஆகிவிடும். எந்த நண்பனும் தன் நண்பனைப் பற்றி விசாரிக்க மாட்டான். (8-10)'*

*அல்லாஹ் மனிதனைக் கீழ்நோக்கி இழுத்துச்செல்லக்கூடிய இச்சைகளுடன் படைத்துள்ளான். அவற்றை எதிர்த்து, சிகரத்தை நோக்கி ஏறி வரும்படி அவன் மனிதனிடம் வேண்டுகிறான். யார் இந்த உலகமே*

எல்லாம் என்று நினைத்துக்கொண்டாரோ அவர் அழிந்துவிடுவார். யார் வஹீயைப் பின்பற்றுவாரோ அவர் வெற்றிபெறுவார். ஈமான் என்பது உயரம் நோக்கிச் செல்லக்கூடிய தூய்மையான ஆற்றல். அது இறைத் திருப்திக்கான வழியைத் தேடிச்செல்கிறது.

நிச்சயமாக மனிதன் பதற்றப்படக்கூடியவனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவனைத் துன்பம் தீண்டிவிட்டால் பதறிவிடுகிறான். அவனுக்கு வசதிவாய்ப்புகள் ஏற்படும்போது கஞ்சத்தனம் செய்யத் தலைப்படுகிறான். ஆயினும் தொழுகையாளிகளைத் தவிர. அவர்கள் தங்கள் தொழுகைகளைத் தவறாது கடைப்பிடிப்பார்கள். அவர்களின் செல்வத்தில் யாசகர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் ஒரு நிர்ணயிக்கப்பட்ட பங்கு உண்டு. அவர்கள் தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொண்டிருப்பார்கள் ... (19-26)

தன் சமூகம் முழுமையின் பாதையில் செல்வதற்கு இன்னும் பழக்கப்படவில்லை என்பதையும் வானத்தின் கதவுகளைத் திறக்கும் நற்பண்புகளை அது பெற்றிருக்கவில்லை என்பதையும் ஒரு நம்பிக்கையாளன் காணும்போது வருத்தப்படவே செய்வான். இங்கு அல்லாஹ் சுவனத்தின் பாதையில் கிடக்கும் தடைக்கற்களை உடைக்க வேண்டும் என்பதையும் அதன் பாதையில் காணப்படும் சிரமங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகிறான். கடுமையான சோதனைகளின் மூலமே மனிதர்களில் சிறந்தவர்கள் அறியப்படுவார்கள். அபூதய்யிபு கூறுகிறார், 'சிரமங்கள் மட்டும் இல்லையெனில் மனிதர்கள் அனைவரும் தலைவர்களாக ஆகிவிடுவார்கள் ...'

இந்த அத்தியாயத்தில் பின்வரும் கேள்வியையும் காண்கிறோம்:

இந்த நிராகரிப்பாளர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் உம்மை நோக்கி ஓடிவருகிறார்களே, வலப்பக்கத்திலிருந்தும் இடப்பக்கத்திலிருந்தும் கூட்டம்கூட்டமாக! இவர்களில் ஒவ்வொருவரும் அருள் நிறைந்த சுவனபதியில் நுழைந்துவிடலாம் என்று பேராசை கொண்டிருக்கின்றனரா? ஒருபோதும் இல்லை. நாம் அவர்கள் அறிந்த பொருளிலிருந்தே அவர்களைப் படைத்துள்ளோம். (36-39)

இணைவைப்பாளர்கள் கூட்டம்கூட்டமாக நபியவர்களைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நபியை நெருங்கினார்கள். ஆனால் அவரை உண்மைப்படுத்தவோ பின்பற்றவோ இல்லை. இதனால் அவர்களின் ஆசை நிறைவேறுமா? ஒருபோதும் இல்லை. அவரைப் பின்பற்றாமல்,

*உளத்தூய்மையுடன் செயல்படாமல், போராடாமல் அவர்கள் ஒருபோதும் சுவனத்தைப் பெற்றுவிட முடியாது. அல்லாஹ் மரணத்தையும் வாழ்வை யும் படைத்தது, நம்மில் சிறந்த முறையில் செயல்படுபவர்கள் யார் என்பதைச் சோதிப்பதற்காகத்தான்.*

*எந்தத் தலைமுறை சத்தியத்தைப் பழிக்கிறதோ அதனை விரைவில் அழிவு சுருட்டிக்கொள்ளும். மண் அதனை மூடிக்கொள்ளும். விதி அதனைவிடச் சிறந்த, தூய்மையான தலைமுறையைக் கொண்டுவரும்.*

> இல்லை. கிழக்கு மற்றும் மேற்குத் திசைகளின் இறைவன்மீது நான் சத்தியம் செய்கிறேன். அவர்களைவிடச் சிறந்தவர்களைக் கொண்டு வருவதற்கு நாம் ஆற்றல்பெற்றுள்ளோம். நாம் இயலாதவர்கள் அல்லர். (40,41)

*இந்த உலகில் சோம்பேறித்தனம் செய்யும் சமூகங்கள் பின்தங்கிவிடும். மறுமையில் தனிமனிதர்களுக்கும் சமூகங்களுக்குமிடையே காணப்படும் வேறுபாடு அவர்களைத் தனித்தனி சமூகங்களாக ஆக்கிவிடும்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 71

# நூஹ்

(ஒரு நபியின் பெயர்)

*நூஹ் நபியுடைய வாழ்க்கையின் அற்புதங்களில் ஒன்று, அவர் தொள் ளாயிரத்து ஐம்பது ஆண்டுகாலம் தம் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார். அவர்களோ பதிலளிக்கவில்லை. நீண்ட இந்தக் காலகட்டம் பல அரசுகள் தோன்றுவதற்கும் வீழ்வதற்கும் நாகரிகங்கள் வளர்வதற்கும் அழிந்து போவதற்கும் போதுமானது. ஆனாலும் நூஹின் சமூகத்தார் தங்களின் வழிகேட்டில் நிலைத்திருந்தார்கள். அல்லாஹ்வின் பக்கம் திரும்பவுமில்லை. அல்லாஹ்வின் பக்கம் திரும்புவது குறித்து சிந்திக்கவு மில்லை. பரந்த அறிவும் மனவுறுதியும் கொண்ட மனிதர் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி அவர்களின் மோசமான நடத்தையையும் பிடிவாதத்தையும் குறித்து முறையிட்டார்.*

> *அவர் கூறினார், 'என் இறைவா, நான் என் சமூகத்தினரை இரவு பகலாக அழைத்தேன். ஆயினும் எனது அழைப்பு அவர்களிடம் வெருண்டோடுதலைத்தான் அதிகரித்தது. நீ அவர்களை மன்னிக்க வேண்டும் என்பதற்காக நான் அவர்களை அழைத்தபோதெல்லாம் அவர்கள் தம் காதுகளில் விரல்களை அடைத்துக்கொண்டு தம் ஆடைகளால் தம்மை மூடிக்கொண்டார்கள். ஆணவம் கொண்டு பிடிவாதமாக நிலைத்திருந்தார்கள்.'* (5-7)

*நிராகரிப்புக்கு ஏதேனும் அறிவுபூர்வமான ஆதாரம் இருக்கிறதா? அதுதான் படைப்புகளைப் படைத்துப் பராமரிக்கும் இறைவனை விட்டு விட்டு அவர்களைக் கற்களை வணங்குமாறு தூண்டுகிறதா?*

*நிராகரிப்பாளர்களின் வழிமுறைகளை நான் ஆராய்ந்துபார்த்தேன். அவர்களிடம் காணப்படும் மனரீதியான நோய்களே அவர்களை அறிந்து கொண்டே மறுக்கத் தூண்டுகின்றன. மகத்தான அவர்களின் இறை வனைவிட்டு அவர்களைத் திருப்பிவிடுகின்றன.*

ஸ்டாலினின் புகழ் பாடியும் இறைவனை மறுத்தும் ஆயிரக்கணக் கான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இறைவனின் இருப்புக்கான சான்றுகள் கடினமான விளையாட்டுப் புதிர்கள் அல்ல. அது உறங்கக்கூடிய அறிவைத் தட்டியெழுப்பி விழிப்படையச் செய்வதுதான். விழித்துக் கொண்ட அறிவு அதற்கான ஆதாரங்களை இயல்பாகவே கண்டு கொள் ளும். ‘அல்லாஹ் ஏழு வானங்களையும் எவ்வாறு அடுக்கடுக்காகப் படைத்துள்ளான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அவற்றில் அவன் சந்திரனை ஒளியாகவும் சூரியனை விளக்காகவும் அமைத்துள்ளான். அல்லாஹ்வே பூமியிலிருந்து உங்களைச் சிறந்த முறையில் உருவாக்கி னான். பின்னர் அவன் உங்களைப் பூமிக்குள் திரும்பக் கொண்டுசெல் வான். அதிலிருந்தே உங்களை வெளிப்படுத்துவான். (15-18)’

நாம் பூமியின் தாவரங்களை உண்ணுகிறோம். அவை எப்படி நம் உடல்களில் சதைகளாகவும் இரத்தமாகவும் மாற்றமடைகின்றன? இந்த மாற்றத்தை நாமா நிகழ்த்துகிறோம்? அல்லது, அனைத்தையும் குறித்து நன்கறிந்த இறைவனா? கோள்களைச் சுற்றச்செய்வது யார்? அல்லாஹ்வா அல்லது வத்து, சுவாஆ போன்ற போலியான கடவுள்களா?

நிராகரிப்பின் மடமைத்தனம் விசித்திரமானது. அதைவிட விசித்திர மானது அவர்களின் கர்வமும் கடினப் போக்கும். ஆகவே, நூஹ் பல நூற்றாண்டுகள் தம் மக்களை அழைத்தபிறகு, அவர்களுக்கு நினைவூட் டிய பிறகு இவ்வாறு பிரார்த்தனை செய்தார்:

> என் இறைவா, நீ இந்த நிராகரிப்பாளர்களில் யாரையும் பூமியில் விட்டுவிடாதே. நீ அவர்களை விட்டுவிட்டால் அவர்கள் உன் அடியார்களை வழிகெடுப்பார்கள். தீயவனையும் நிராகரிப்பாள னையும் தவிர வேறெவனையும் அவர்கள் பெற்றெடுக்க மாட் டார்கள். (26,27)

நிராகரிப்பு காலப்போக்கில் பிழையான சடங்குகளாக மாற்றமடைந்து விடும். ‘யாருடைய செல்வமும் பிள்ளைகளும் அவருக்கு இழப்பைத் தவிர வேறு ஒன்றையும் அதிகப்படுத்தவில்லையோ ... (21)’ மனிதர்களில் இப்படிப்பட்டவர்களோ அல்லது, ‘நாங்கள் செல்வங்களாலும் பிள்ளை களாலும் மிகுந்தவர்கள். ஆகவே, நாங்கள் வேதனைசெய்யப்பட மாட் டோம். (34:35)’ என்று சீர்திருத்தவாதிகளிடம் கூறுபவர்களோ மாற்ற மடைந்துவிடுவார்கள். எல்லாவற்றையும்விட மிக மோசமான துன்பம், நிராகரிப்பாளர்கள் நம்பிக்கையாளர்களின் வாழ்வுரிமையையும் தங்கும் உரிமையையும் பறிப்பதாகும். ‘நிராகரிப்பாளர்கள் தங்கள் தூதர்களிடம் கூறினார்கள், நீங்கள் எங்கள் மார்க்கத்துக்குத் திரும்பிவிட வேண்டும்.

இல்லையெனில் எங்களுடைய ஊரிலிருந்து உங்களை வெளியேற்றி விடுவோம். (14:13)'

வழிகேட்டின் இயல்பு என்னவெனில், அது ஒரே வகையான அணுகு முறையை மட்டும் மேற்கொள்ளாது. தற்காலத்தில் நம்பிக்கையாளர்கள் நாத்திகம், நெருக்கடி, குழப்பம் எனப் பல வகையான சோதனைகளால் சோதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 72

# அல்ஜின்னு

(ஜின் இனம்)

*இந்த அத்தியாயத்தில் கிறிஸ்தவர்களின் கொள்கையை விமர்சிக்கும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் ஈசாவை இறை மகனாகவும் இறைவனுடன் இணைந்த இறைவனாகவும் ஆக்கிக்கொண்டார்கள். அவர்களின் இந்தக் கொள்கை உலகம் முழுவதும் பரவிவிட்டது. அதனை ஏற்றுக்கொண்ட பல தலைமுறைகள் கடந்துவிட்டன. இறுதியில் திருக் குர்ஆன் வந்து மிகக் கடுமையாக அல்லாஹ் ஒருவனே என்பதையும் அவனுக்கு எந்தக் குழந்தையும் இல்லை என்பதையும் அழுத்தம் திருத்தமாகப் பதிவுசெய்தது. கிறிஸ்தவக் கொள்கை ஜின்களையும் அடைந்தது. அவை அதனை ஏற்றுக்கொண்டன. பின்னர் அவை பூமியில் சுற்றிக்கொண்டிருக்கும்போது அதற்கு மாறானவற்றை அறிந்துகொண்டன.*

> *நீர் கூறும், 'ஜின்களில் ஒரு கூட்டம் குர்ஆனைச் செவியுற்று, நாங்கள் அற்புதமான ஒரு குர்ஆனைச் செவியுற்றோம் என்று கூறியதாக எனக்கு இறைவனிடமிருந்து வஹீ அறிவிக்கப்பட்டுள்ளது. அது நேரான வழியைக் காட்டுகிறது. ஆகவே, நாங்கள் அதன் மீது நம்பிக்கை கொண்டோம். நாங்கள் எங்கள் இறைவனுடன் யாரை யும் இணையாக்க மாட்டோம்.'* (1,2)

*ஜின்கள் தாம் செவியுற்றதை விரிவாகத் தேடத் தொடங்கின. அல் லாஹ்வுக்கு மனைவியோ பிள்ளைகளோ இல்லை என்பதை அறிந்து கொண்டன. 'எங்கள் இறைவனின் மகிமை மிகவும் உயர்ந்தது. அவன் மனைவியையோ பிள்ளையையோ ஏற்படுத்திக்கொள்ளவில்லை.* (3)*' உண்மைக்கு மாறாக இவ்வாறு அவர்களுக்குக் கூறியவர் மூடநம்பிக் கையில் மூழ்கியவர் என்றும் அறிந்துகொண்டன. 'நம்மில் மூடன் அல் லாஹ்வைக் குறித்து உண்மைக்கு மாறான விசயங்களைக் கூறிக்*

கொண்டிருந்தான். (4)' பின்னர், அலட்சியமாக இந்த மூடநம்பிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகின்றன. அல்லாஹ்வின் விசயத்தில் யாரும் பொய் கூற மாட்டார்கள் என்று அவர்கள் எண்ணியதே இதற்குக் காரணமாகும். 'மனிதர்களும் ஜின் களும் அல்லாஹ்வின் மீது ஒருபோதும் பொய் கூற மாட்டார்கள் என்றே நாங்கள் எண்ணியிருந்தோம். (5)'

ஆனாலும் மனிதர்களில் சிலர் வீணான இந்தக் கூற்றைச் செவியுற்று பூமியில் அதனைப் பரப்பினார்கள். அதன் மூலம் மனிதர்களில் பெரும் பாலோரை வழிகெடுத்தார்கள். 'மனிதர்களில் உள்ள ஆண்களில் சிலர் சில ஜின்களிடம் பாதுகாப்பு தேடுபவர்களாக இருந்தனர். இதனால் அவர்கள் ஜின்களின் கர்வத்தை அதிகரித்துவிட்டனர். (6)' 'வானத்தின் கதவுகள் மூடப்பட்டுவிட்டன. ஆகவே இனி வஹீ இறங்காது.' என்றும் 'மனிதர்கள் இன்னொரு தூதுத்துவத்தை ஒருபோதும் சுமக்க மாட்டார்கள்.' என்றும் அவர்கள் அனைவரும் கருதினார்கள்.

ஆனால் அல்லாஹ் அறபுகளிலிருந்து இறுதித் தூதரை அனுப்பினான். அவரது தூதுத்துவம் உலகம் முழுவதும் பரவியது. அது அவனுக்குத் தந்தையும் இல்லை, பிள்ளையும் இல்லை என்பதைத் தெளிவாகப் பிரகடனம்செய்தது. இந்தத் தூதுத்துவம் தவறிழைத்தோருக்கு எதிர்பாராத ஒன்றாகவே இருந்தது. 'அல்லாஹ் யாரையும் எழுப்ப மாட்டான் என்று நீங்கள் எண்ணியதைப் போலவே அவர்களும் எண்ணியிருந்தார்கள். (7)'

ஓர் அரசு தவறான ஒரு கொள்கையைத் தமதாக்கிக்கொள்ளும்போது அதற்குப் பக்கபலமாக, அதனைப் பாதுகாக்கக்கூடிய அதிகார அமைப் பையும் ஏற்படுத்திவிடுகிறது. அதன் மூலம் அந்தத் தவறான கொள் கையை மனித உள்ளங்களில் பதியவைத்து விடுகிறது. அது நூற்றாண்டு களாக நிலைக்கும் தவறாக மாறிவிடுகிறது. அன்றைய ரோம அரசுதான் திரித்துவக் கொள்கையைப் பரப்பியது. மக்களை அச்சமூட்டி, ஆர்வமூட்டி இதற்கான வரவேற்பை அவர்களிடம் உண்டாக்கியது. முஹம்மது தமக்கு வழங்கப்பட்ட சத்தியத்தைக் கொண்டு தம் உயிராலும் செல்வத்தாலும் அதற்கு எதிராகப் போராடவில்லையெனில் ரோமர்களின் செய்தி வேறு விதமாக இருந்திருக்கும்.

அல்லாஹ் ஒருவனே என்பதையும் அவனுக்குத் தந்தையோ பிள்ளை களோ இல்லை என்பதையும் ஜின்கள் எப்படி அறிந்துகொண்டன? இந்த வேதத்தை இங்குமங்கும் எடுத்துச்செல்லக்கூடிய அழைப்பாளர்கள் இல்லையா?

இந்தப் பிரபஞ்சத்தில் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதையும் அருளப்படும் வஹீ கடுமையான பாதுகாவலர்களால் பாதுகாக்கப்படு கிறது என்பதையும் ஜின்கள் உணர்ந்துகொண்டன.

நாங்கள் வானத்தை ஆராய்ந்து பார்த்தோம். அது கடுமையான காவலாளிகளாலும் தீச்சுவாலைகளாலும் நிரப்பப்பட்டுள்ளதைக் கண்டோம். நாங்கள் அதன் சில இடங்களில் ஒட்டுக்கேட்பதற்காக அமர்பவர்களாக இருந்தோம். ஆனால், இப்போது யார் கேட்க விரும் பினாலும் அவர் தனக்காகத் தயார் நிலையில் உள்ள ஒரு தீச்சுவாலை யைப் பெறுவார். (8,9)

ஆச்சரியம் என்னவென்றால், வானத்திலிருந்து இறங்கும் வஹீக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அது பூமிக்கு வந்தவுடன் விலக்கப்பட வில்லை. அதன் ஒவ்வொரு எழுத்தும் இராகமும்கூடப் பாதுகாக்கப் பட்ட ஒன்றாகி விட்டது.

ஜின்கள் மனமார இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டன. ‘நாங்கள் நேர்வழியைச் செவியுற்றபோது அதன் மீது நம்பிக்கை கொண்டோம். தம் இறைவன்மீது நம்பிக்கை கொள்பவர் இழப்புக்கோ அநீதிக்கோ அஞ்ச மாட்டார். (13)’ ஜின்களில் ஒரு சாரார் சத்தியத்துக்குக் கட்டுப்பட மறுத்தார்கள் என்பதும் அதனை அவர்கள் எதிர்த்தார்கள் என்பதும் தெரியவருகிறது.

இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆதமின் மக்கள் இவ்வாறு இருக்கவில்லையா? ‘எங்களில் சிலர் கீழ்ப்படிந்தவர்களாகவும் சிலர் வழிதவறியவர்களாகவும் இருக்கிறோம். கீழ்ப்படிந்தவர்கள் நேரான வழியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். வழிதவறியவர்கள் நரகின் எரிபொருளாகத்தான் இருப்பார்கள். (14,15)’

ஒருவர் என்னிடம் கேட்டார், ‘நீங்கள் ஜின்களில் யாரையேனும் அறிவீர்களா?’ நான் அவரது கேள்வியின் நோக்கத்தைப் புரிந்துகொண் டேன். நான் கூறினேன், ‘நான் அவர்களில் யாரையும் காணவில்லை.’ அவர் கேட்டார், ‘நீங்கள் பார்க்காததை எப்படி உண்மைப்படுத்துகிறீர்கள்?’ நான் கூறினேன், ‘ஒவ்வொரு படைப்பையும் நான் காண்பதில்லையே. கிருமிகளை அவற்றின் மிகச் சிறிய அளவின் காரணமாகக் காண முடி யாதே? நட்சத்திரங்களை அவற்றின் தூரங்களின் காரணமாகக் காண முடியாதே?’

ஜின்களைக் குறித்து குர்ஆன் கூறுகிறது: ‘அவனும் அவனது கூட் டாளிகளும் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்

களைப் பார்க்க முடியாது. (7:27)' பல ஒளி ஆண்டுகள் தூரங்களைக் கொண்டு இந்தப் பிரபஞ்சத்தில் மனிதன் மட்டும்தான் இருக்கிறான் என்று கூறுவது சாத்தியமற்ற ஒன்றாகும்.

நான் ஒரு புத்தகத்தில் கூறினேன், ஆயிரம் அடுக்குகள் கொண்ட ஒரு பெரும் கோட்டையைக் கட்டுபவர் அடித்தளத்தில் மட்டும்தான் வசிக்க வேண்டும், மற்றவற்றைச் சும்மா விட்டுவிட வேண்டும் என்பதில்லை. பிறகு ஏன் அதனைக் கட்டினார்?

நான் மனிதர்களையும் ஜின்களையும் வானவர்களையும் படைத்த அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன். 'உமது இறைவனின் படைகளை அவன் மட்டுமே அறிவான். (74:31)'

அத்தியாயம் இங்கு சிந்திப்பதற்கு உகந்த ஒரு உண்மையை நிறுவு கிறது. அல்லாஹ்வை அறிவது மட்டும் போதுமானதல்ல. மாறாக, மகிழ்ச்சியிலும் கவலையிலும் அவனுக்குச் செய்ய வேண்டிய கடமை களைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும்.

மனிதர்களில் சிலர் அல்லாஹ்வின் பக்கம் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். அவனுடைய அருட்கொடைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால், அவனை விட்டு மெய்மறதியில் ஆழ்த்தும் விசயங்களில் மூழ்கி விடுகிறார்கள். தங்களுக்காக மட்டுமே உயிர் வாழ்கிறார்கள். இந்த வகையான மக்களே பெரும்பான்மையினராக இருப்பதை நான் பார்த் துள்ளேன். மாறாக, ஓர் இடத்தில் நிராகரிப்பு பரவுவதற்கு, வஹீயைப் பெற்றிருந்தும் அதற்காகத் தங்களை அர்ப்பணிக்காமல், அதற்குச் செய்ய வேண்டிய உரிமைகளைச் செய்யாமல் இருக்கும் மக்கள்தாம் காரண மாவர். இவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்கள் நேர் வழியில் நிலைத்திருந்தால் நாம் அவர்களுக்குத் தாராளமாகத் தண்ணீர் புகட்டுவோம், அதன் மூலம் அவர்களைச் சோதிப்பதற்காக. யார் தம் இறைவனின் நினைவைப் புறக்கணிக்கிறாரோ அவரைக் கடுமையான வேதனையில் அவன் ஆழ்த்திவிடுவான். (16,17)' மோசமான புறக்கணிப்பு என்பது அல்லாஹ்வின் அருட்கொடைகளை அனுபவித்துக்கொண்டு அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைவிட்டு விலகியிருப்பதாகும்.

இந்த அத்தியாயத்தின் இறுதிப் பகுதி, தூதர் எடுத்துரைத்துவிட்டார் என்பதற்குச் சாட்சியாக இருக்கிறது.

நீர் கூறும், 'நான் என் இறைவனை மட்டுமே வணங்குகிறேன். அவனுடன் வேறு யாரையும் இணையாக்க மாட்டேன்.' நீர் கூறும், 'நான் உங்களுக்கு ஏதேனும் நன்மையோ தீமையோ செய்ய சக்தி

*பெற மாட்டேன்.' நீர் கூறும், 'அல்லாஹ்விடமிருந்து என்னை யாரும் காப்பாற்ற முடியாது. அவனைத் தவிர வேறெந்த புகலிடத்தையும் என்னால் பெற முடியாது.'* (20-22)

*தற்காலத்தில் தங்களால் பாவிகளுக்குப் பாமன்னிப்பைப் பெற்றுத்தர முடியும் என்றும் நிரந்தரமான வீட்டின் சாவி தங்கள் கைவசமே இருக்கிறது என்றும் வாதிடக்கூடிய மதகுருக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அல்லாஹ்வைக் குறித்த அறியாமையின், அவனுடன் கொண்டுள்ள மோசமான தொடர்பின் விளைவுதான் இந்த வாதங்கள். ஆனால், இறுதித் தூதரான முஹம்மது எந்தச் சமயத்திலும் அப்படிச் சொன்னவர் அல்ல.*

*நீர் கூறும், 'உங்களுக்கு எச்சரிக்கப்படுவது சமீபத்தில் உள்ளதா அல்லது என் இறைவன் அதற்கு நீண்ட தவணையை நிர்ணயித்துள்ளானா என்பதை நான் அறிய மாட்டேன்.' அவனே மறைவானவற்றை அறிந்தவன். தான் மறைவாக வைத்திருப்பவற்றை யாருக்கும் அவன் வெளிப்படுத்துவதில்லை.* (25,26)

*அவர் ஒரே இறைவனான அல்லாஹ்வின் அடியார். இணைவைப்பையும் மூடநம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராடுகிறார். தூய தவ்ஹீதைக் கொண்டு இந்த உலகை நிரப்புகிறார். அவரைப் பின்பற்றக்கூடியவர்களின் குரல்கள் இந்த உலகில் எல்லாப் பகுதிகளிலும் இரவிலும் பகலிலும் ஒரு நிமிடம்கூட விடாமல் 'அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் ... அவனைத் தவிர வணக்கத்துக்குரிய வேறு இறைவன் இல்லை' என ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.*

❖ ❖ ❖

அத்தியாயம் 73

# அல்முஸம்மில்

(போர்வை போர்த்தியிருப்பவர்)

*அல்அன்ஆம் என்ற அத்தியாயத்தில் நபியவர்களின் வாழ்க்கையை வரைந்துகாட்டும் ஒரு வசனம் இடம்பெற்றுள்ளது. 'நீர் கூறும், என் தொழுகையும் என் தியாகமும் என் வாழ்வும் என் மரணமும் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியவையாகும். அவனுக்கு யாரும் கூட்டாளி இல்லை. இவ்வாறே நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். நான் கீழ்ப்படிவோரில் முதன்மையானவன் ஆவேன். (6:162,163)' சிலருடைய வாழ்க்கையில் சத்தியமும் அசத்தியமும் தீவிரமும் விளையாட்டும் உழைப்பும் ஓய்வும் கலந்திருந்தாலும் கண்ணியமான இந்த மனிதரின் வாழ்க்கை முழுவதும் இடைவிடாத பணிகளாலும் களைப்பாலும் நிரம்பியுள்ளது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் தூதுத்துவப் பணியை நிறைவேற்றும் பொறுப்பு அவருக்கு வழங்கப்படவில்லை. மாறாக, மறுமைநாள்வரை வரக்கூடிய மனிதச் சமூகத்தின் பாதையை மாற்றக்கூடிய ஒரு தலைமுறையை உருவாக்கும் பொறுப்பும் வழிகேட்டின் இருள்களை அகற்றும், சத்தியத்தின் ஒளியை ஏற்றும் பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவர் இந்த உலகில் கழித்த அறுபது வருடங்களில் குறிப்பிட்ட காலகட்டத்தின் சீர்திருத்தம் மட்டும் நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, காலத்தையும் இடத்தையும் தாண்டி இறுதிநாள்வரை தூய தவ்ஹீதின் பாதுகாப்பும் அதனைப் பாதுகாக்கும் மனிதர்களை உருவாக்குவதுமாக இருந்தது.*

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் தூதருக்கு இந்த நோக்கம் குறித்து உணர்த்தப்பட்டுள்ளது. 'போர்த்திக் கொண்டிருப்பவரே, இரவில் சிறிது நேரம் தவிர்த்து நின்று தொழுவீராக. பாதி இரவு அல்லது அதைவிடச் சிறிது குறைத்துக் கொள்வீராக அல்லது அதைவிட அதிகமாக்கிக் கொள்வீராக. குர்ஆனை நிறுத்தி, நிதானமாக ஓதுவீராக. (1-4)' ஓய்வாகத்*

தூங்கும் காலகட்டம் முடிந்துவிட்டது. 'நாம் உம்மீது ஒரு பாரமான விசயத்தைச் சுமத்தப்போகிறோம். (5)' அது சிரமமான பணிகளாலும் கடுமையான போராட்டத்தாலும் நிரம்பியது. அவர் இரவுத் தொழுகை யிலிருந்து விடுபட்டவுடன் பகலில் இந்த மார்க்கத்தை எடுத்துரைப்ப தற்கும் எதிரிகளுடன் போராடுவதற்கும் முகம்கொடுக்க வேண்டும். அல்லாஹ்வைத் தவிர அவருக்கு வேறெந்த உதவியாளரும் இல்லை. அவர் அவன் பக்கம் திரும்பி தனக்குத் தேவையானதை அவனிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். அவனையே பொறுப்பாளராக ஆக்கிக் கொள்ள வேண்டும். எதிரிகளால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்களை எதிர்நோக்கியிருக்கும் விசாரணை கடுமையானது. 'நம்மிடம் அவர்களுக்கு விலங்குகளும் நெருப்பும் தொண்டையில் சிக்கிக்கொள்ளும் உணவும் துன்புறுத்தும் வேதனையும் இருக்கிறது. (12,13)' இது எப்போது நிகழும்? 'அந்த நாளில் பூமியும் மலைகளும் ஆட்டம்காணும். மலைகள் சரிந்து மணற்குவியலாக ஆகிவிடும். (14)' பூமி தன்னுடைய மேட்டுப் பகுதிகள், பள்ளமான பகுதிகள், நிலப்பகுதிகள், நீர்ப்பகுதிகள் என அனைத்தோடும் ஆட்டம் காணும், பலவீனமான மனிதன் தனக்கு ஏற்படும் பெரும் துன்பத்தைக் கண்டு நடுநடுங்குவதுபோல. உண்மையில் இந்தக் காட்சி அச்சத்தையும் பதற்றத்தையும் தூண்டக்கூடியது. ஆனாலும் மனிதர்கள் அலட்சியமாக விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

முஹம்மது மனிதர்களில் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுபவராக, அவனுடைய சந்திப்பின் நெருக்கத்தை மிக அதிகமாக உணர்பவராக இருந்தார். அவரைச் சுற்றியிருந்த தலைமுறை அவரையே முன்மாதிரி யாகக் கொண்டு அவருடைய வழிமுறையில் வாழ்ந்தது. ஆகவே, அவருடன் சேர்ந்து அவர்களும் இந்தப் பூமியில் பரவியுள்ள வழிகேட்டை எதிர்கொள்ளும் பொருட்டு இரவில் எழுந்து தொழுததில் எந்த ஆச்சரிய மும் இல்லை. ஆனாலும் அல்லாஹ் இந்தச் சமூகத்தின் மீது கருணை காட்டும் பொருட்டுத் தூதருக்கு மட்டுமே இரவுத் தொழுகையைக் கடமையாக்கினான். நம்பிக்கையாளர்கள் பகலில் நிறைவேற்றும் கடமை களே அவர்களுக்குப் போதுமானது.

> அல்லாஹ்வே இரவையும் பகலையும் கணக்கிட்டுள்ளான். உங்க ளால் அதனைச் சரியாகக் கணக்கிட்டுக்கொள்ள முடியாது என்பதை அவன் அறிவான். ஆகவே, உங்கள்மீது அவன் கருணைபுரிந்துள் ளான். ஆகவே, குர்ஆனிலிருந்து உங்களுக்கு இலகுவானதை ஓதிக்கொள்ளுங்கள். (20)

*இது ஒரேயடியாக விட்டுவிடுவதற்கான பொதுவான அனுமதி அல்ல. மாறாக, வேறு பல பணிகளிலும் ஈடுபடுவதற்காக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 'உங்களில் நோயாளியாக இருப்பவர்களையும் அல்லாஹ்வின் அருளைத் தேடி பூமியில் பயணம்செய்பவர்களையும் அல்லாஹ்வின் பாதையில் போர்புரிபவர்களையும் அவன் அறிந்துள்ளான். (20)' இந்தச் சமூகத்தைப் பாதுகாப்பதற்கும் அது தன்னுடைய பணியை நிறைவேற்றுவதற்கும் பொருளாதார ரீதியான, இராணுவ ரீதியான போராட்டம் மிகமிக அவசியமாகும். சத்தியத்தின் எதிரிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சிறு ஓட்டை கிடைத்துவிட்டாலும் அதன் வழியே அவர்கள் ஊடுருவி வந்துவிடுவார்கள். இங்கிருந்துதான் சத்தியத்துக்கும் சத்தியவாதிகளுக்கும் சோதனை ஆரம்பமாகிறது.*

❖ ❖ ❖

அத்தியாயம் 74

# அல்முத்தஸ்ஸிர்

(போர்த்தியிருப்பவர்)

*இது அல்முஸம்மில் என்ற அத்தியாயத்துக்கு முன்னர் அருளப்பட்ட அத்தியாயமாகும். இது திருக்குர்ஆனில் முதன்முதலாக அருளப்பட்ட அத்தியாயம் என்றும் கூறப்படுகிறது. இது சரியான கருத்து அல்ல. சிறிது காலம் வஹீ தடைபட்டபிறகு, அதனை எதிர்நோக்கி தூதர் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்த சமயத்துக்குப் பிறகு முதன்முதலாக அருளப்பட்ட அத்தியாயமாகும். இதன் ஆரம்ப வசனங்களில் அல்லாஹ் தூதரிடம் விரும்பும் பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

1. *'போர்வையைப் போர்த்திக்கொண்டிருப்பவரே, எழுந்து எச்சரிக்கைசெய்வீராக. (1,2)' இணைவைப்பாளர்கள் தங்களின் சிலை வழிபாட்டில் நிலைத்திருந்தால் அவர்களுக்குக் கிடைக்கப் போகும் தண்டனையைக் கூறி அவர்களை அச்சமூட்டுவீராக.*

2. *'உமது இறைவனைப் பெருமைப்படுத்துவீராக. (3)' கண்ணியமான, உன்னதமான பண்புகளை அவனுடன் இணைத்து அவனைப் பெருமைப்படுத்துவீராக. தக்பீரைக் கொண்டுதான் பாங்கும் தொழுகைகள் அனைத்தும் போராட்டக்களமும் தொடங்குகிறது. அது இஸ்லாத்தின் அடையாளமாகும்.*

3. *'உமது ஆடையைத் தூய்மையாக வைப்பீராக. (4)' இங்கு தூய்மை என்பது உடல் தூய்மையையும் ஆடைத் தூய்மையையும் ஒருசேர குறிக்கும். தூய்மை இஸ்லாம் விரும்பும் பண்புகளில் ஒன்றாகும்.*

4. *'அசுத்தத்தை விட்டுவிடுவீராக. (5)' அருவருப்பான, அசுத்தமான எல்லாவற்றையும் விட்டு விலகியிருப்பீராக.*

5. ‘உதவிசெய்து விட்டு அதற்குரிய பலனை அதிகமாக எதிர்பார்க் காதீர். (6)’ கொடுக்க வேண்டியதைக் கொடு. அதன் மூலம் கிருபை பாராட்டாதீர்.

6. ‘உம் இறைவனின் திருப்தியையே நாடுவீராக. உமது இறைவ னுக்காகப் பொறுமையை மேற்கொள்வீராக. (7)’ அல்லாஹ்வுக் காகத் துன்பங்கள் அனைத்தையும் பொறுத்துக்கொள்வீராக.

விசாரணைசெய்யப்படும் நாளைக் கொண்டு இணைவைப்பாளர்களை அச்சமூட்டியபிறகு அவர்களில் இந்த அழைப்பை மிகக் கடுமையாக எதிர்த்த, இதனைச் சூனியம் என்று வர்ணித்த ஒரு தலைவனைக் குறித்து கூறப்படுகிறது. அவன் செல்வமும் பதவியும் பெற்ற மனிதனாக இருந் தான். அவன் பொருளாதாரத்திலும் இலக்கியத்திலும் பெற்றிருந்த அந் தஸ்தால் வஹீது - தனித்துவமானவன் - என்ற பட்டப் பெயரைக் கொண்டு அழைக்கப்பட்டான். ‘நான் படைத்த வஹீது (என்ற அந்த மனிதனை) என்னிடமே விட்டுவிடும். நான் அவனுக்கு ஏராளமான செல்வங்களை யும் கூடவே இருக்கக்கூடிய ஆண்மக்களையும் வழங்கினேன். (11-13)’ இந்தத் தலைவன் இவ்வாறு இழிவுபடுத்தப்படுவது இவனுக்குப் பின்னால் இருக்கக்கூடிய அனைவரையும் குறிக்கும். ‘நான் அவனை அதிவிரைவில் நரகத்தில் வீசியெறிவேன். நரகம் என்னவென்று உமக்குத் தெரியுமா? அது இருக்கவும் விடாது; விட்டுவிடவும் செய்யாது. அது சருமத்தைக் கரித்து விடக்கூடியது. அதில் பத்தொன்பது வானவர்கள் இருக்கிறார்கள். (26-30)’

பின்னர் திருக்குர்ஆன் இவ்வுலக வாழ்க்கையில் மிக வெளிப்படையாக இருக்கும் பொருள்களின் பக்கம் திரும்புகிறது. இரவையும் அது பின் னோக்கிச் செல்வதையும் பகலையும் அது பிரகாசமடைவதையும் தீய வர்களிலிருந்து நல்லவர்களை வேறுபடுத்தும் பல்வேறு பொறுப்புகளால் மனிதன் சோதிக்கப்படுவதையும் குறிப்பிடுகிறது.

ஒருபோதும் இல்லை. சந்திரனின் மீதும் திரும்பிச்செல்லும் இரவின் மீதும் பிரகாசமாகும் அதிகாலையின் மீதும் சத்தியமாக. நிச்சயமாக நரகம் பெரும் விவகாரங்களில் ஒன்றாகும். அது மனிதர்களை எச்சரிக்கக்கூடியது. உங்களில் முன்னோக்கியோ பின்னோக்கியோ செல்ல விரும்புபவர்களை எச்சரிக்கக்கூடியது. (32-37)

முன்னோக்கிச் செல்லுதலும் பின்னோக்கிச் செல்லுதலும் சுறுசுறுப் புடனும் இயலாமையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. அது குருட்டுத் தனமான பங்கீடுகள் அல்ல. ஆகவே, அதற்குப் பிறகு கூறப்படுகிறது:

ஒவ்வொரு மனிதனும் தன் செயல்களுக்குப் பிணையாக உள்ளான். ஆயினும், வலப்புறத்தில் இருப்போரைத் தவிர. அவர்கள் சுவனச்

> சோலைகளில் இருப்பார்கள். அவர்கள் குற்றவாளிகளிடம் கேட்டுக்கொண்டிருப்பார்கள், 'உங்களை எது நரகுக்குக் கொண்டு வந்தது?' அவர்கள் கூறுவார்கள், 'நாங்கள் தொழுபவர்களாக இருக்கவில்லை. ஏழைகளுக்கு உணவளிக்கவுமில்லை ...' (38-44)

நீங்கள் எவற்றை விதைத்தீர்களோ அவற்றையே அறுவடைசெய்கி றீர்கள். தவறான பாதை நேர்வழியின் இலக்கின் பக்கம் உங்களைக் கொண்டுசேர்க்காது. 'பரிந்துரைசெய்வோரின் பரிந்துரை அவர்களுக்கு எவ்வித பயனையும் அளிக்காது. (48)'

ஆயினும், ஏன் இணைவைப்பாளர்கள் பிடிவாதமான இந்த எதிர்ப்பின் பக்கம் அடைக்கலம் புகுந்தார்கள்? அவர்கள் இந்த அளவா இஸ்லாத்தை வெறுத்தார்கள்?

ஆம். கர்வம்தான் காரணம். அவர்களில் ஒவ்வொருவரும் தன்மீது வானவர் இறங்கி, 'நான் இன்ன மனிதருக்கு அனுப்பப்பட்ட அல்லாஹ் வின் தூதர்.' என்று சொல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறாரா? முஹம் மதுக்கு மட்டுமே அருளப்பட்ட வஹீயை அவர்கள் நிராகரிக்கிறார்கள்.

> அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் அறிவுரையைவிட்டும் முகம் திருப்பிக்கொள்கிறார்களே! அவர்கள் சிங்கத்தைக் கண்டு மிரண்டோடும் காட்டுக் கழுதைகளைப் போல் இருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தனக்குத் திறந்த புத்தகங்கள் கொடுக் கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். (49-52)

தன்னைத்தானே உயர்வாக எண்ணுவது சத்தியத்தை மறைக்கவும் சத்தியவாதிகளை வெறுக்கவும் காரணமாக அமைந்துவிடுகிறது. அல்லாஹ்வும் அவனுடைய சான்றுகளும் அருட்கொடைகளும் உரி மைகளும் அவர்களுக்கு நினைவூட்டப்படுதலே அவர்களுக்குப் போது மானது. யார் நேரான வழியில் செல்வாரோ அவர் வெற்றிபெறுவார். யார் ஏமாற்றுகிறாரோ அவர் தோல்வியடைவார். 'அவ்வாறன்று. இது ஓர் அறிவுரையாகும். ஆகவே, விரும்புகிறவர் அறிவுரைபெற்றுக்கொள் ளட்டும். (54,55)'

❖ ❖ ❖

அத்தியாயம் 75

# அல்கியாமா

(மறுமைநாள்)

*நம்பிக்கையாளன் ஒரு தவறுசெய்துவிட்டால் அது அவன்மீது துரு வாகப் படிந்துவிடுகிறது. அவன் தன்னைக் கனமானவனாக உணர்கிறான். பூமி விசாலமாக இருந்தபோதிலும் அவனுக்கு நெருக்கடிமிகுந்ததாக இருக்கும். ஏனெனில் ஈமான் உன்னதத்தின் பக்கம் மனிதனைக் கொண்டு செல்கிறது. இழிவானவற்றைவிட்டும் அவனைத் தடுக்கிறது. தன்னிட மிருந்து வெளிப்பட்ட தவறுக்காகத் தன்னைத்தானே பழிப்பவர் தவ றுக்கு அடிமையாக மாட்டார். விரைவாகவே அவர் தூய்மையின் பக்கம் திரும்பிவிடுகிறார். அல்லாஹ் நிந்தனை செய்யும் உள்ளத்தைக் கொண்டு சத்தியம் செய்கிறான். அதில் காணப்படும் ஈமானே நிந்தனைசெய்யத் தூண்டுகிறது. அல்லாஹ்வை அறியாத, அவனுடைய சந்திப்பை எதிர் பார்க்காத சமூகங்களும் மனிதர்களும் இழிவானவற்றை ஒரு பொருட் டாகக் கருத மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் விசாரணை நாளைப் பயப்படவில்லை. அவர்களின் பார்வையில் விசாரணைநாள் ஒரு வெற்று நம்பிக்கை.*

*ஸகாவீ கூறுகிறார், 'நான் உணராதவற்றுக்காக உணர்ந்தவற்றை மாற்ற மாட்டேன்.'*

*அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதி இந்த நிலைகளைச் சுட்டுகிறது.*

*இல்லை. நான் மறுமைநாளின் மீது சத்தியம் செய்கிறேன். இல்லை. நிந்தனைசெய்யும் உள்ளத்தின் மீதும் சத்தியம்செய்கிறேன். நாம் அவனது எலும்புகளை ஒன்றுதிரட்ட மாட்டோம் என்று மனிதன் எண்ணுகிறானா? ஏன் இல்லை. நாம் அவனது விரலின் நுனி யைக்கூடச் சரிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளோம்.* (1-4)

இந்த உடல்களைப் படைத்த இறைவன், அவற்றின் விரல்களின் நுனிகளில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான ரேகைகளுடன் அவற்றை மீண்டும் ஒருமுறை படைப்பதற்கு ஆற்றல்பெற்றவன். இந்தப் பூமியில் எந்த இரு மனிதர்களின் விரல் ரேகைகளும் ஒன்றுபோல இருக்காது.

மனிதர்கள் தாங்கள் செய்த செயல்களின் விளைவுகளை அனுபவிப்பதற்காக மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். 'அந்த நாளில் அவன் செய்த செயல்களும் செய்யாமல் விட்டவையும் மனிதனுக்கு எடுத்துக்காட்டப்படும். (13)' முந்தையவர்களிடமும் பிந்தையவர்களிடமும் காணப்பட்ட குறைபாடு, கூலி கொடுக்கப்படும் நாளைக் குறித்த அவர்களின் உணர்வு செத்துப்போனதாக அல்லது மிகவும் பலவீனமானதாக இருந்ததையே காட்டுகிறது. அவர்கள் விளங்கியிருந்தால் வேறு வகையான நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பார்கள்.

அந்த நாளிலும் அதற்கு முந்தைய நாளிலும் அதனையடுத்தும் நிகழும் நிகழ்வுகள் இந்த அத்தியாயத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இந்த வர்ணனைகளுக்கு மத்தியில், வஹீயை விரைவாகப் பெறுவதற்கு முயற்சிசெய்த நபியவர்களுக்கான அறிவுரையும் இடம்பெற்றுள்ளது. அவர்கள் விரைவாகப் பெற முயன்றது புரிந்துகொள்ளக்கூடியதுதான். வானத்தின் வஹீயை அருளப்பட்டவாறே, ஒரு எழுத்துகூட மாறாமல் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட ஒரு மனிதர் விரைவாக அதனைப் பெற முயலத்தானே செய்வார்.

ஆயினும் அல்லாஹ் அவரைத் திருப்திப்படுத்தினான். 'அதனை ஒன்றுசேர்ப்பதும் ஓதும்படி செய்வதும் நமது பொறுப்பாகும். ஆகவே, நாம் அதனை ஓதிக்காட்டினால் அதனைப் பின்தொடர்வீராக. அதனைத் தெளிவுபடுத்துவதும் நமது பொறுப்பே ஆகும். (17-19)' இந்த இறைவாக்குறுதியின் மூலம் குர்ஆன் முழுமையும் நம்மை வந்தடைந்தது.

கூலி கொடுக்கப்படும் நாளுக்கு முன்னர் இன்னொரு முடிவும் இருக்கிறது. அதிலிருந்து எந்த மனிதனும் தப்பிக்க முடியாது. அதுதான் மரணம். ஏன் மனிதர்கள் அதனைவிட்டுப் பொடுபோக்காக இருக்கிறார்கள்?

> ஆயினும், உயிர் தொண்டையை அடைந்துவிடும்போது, 'மந்திரித்து ஊதுபவர் யாரேனும் இருக்கிறார்களா?' என்று கேட்கப்படும். இது பிரியும் நேரம் என்பதை அவன் உணர்ந்துகொள்வான். கெண்டைக்காலுடன் கெண்டைக்கால் பின்னிக்கொள்ளும். இது உன் இறைவனின் பக்கம் செல்ல வேண்டிய நாளாகும். (26-30)

வாழ்க்கையின் போதை அந்த அறுதியான முடிவைக் குறித்து சிந்திக்கவிடாமல் மனிதனைத் தடுத்துவிட்டது. ஏன் இந்தக் குருட்டுத்தனம்?

‘தான் வெறுமனே விட்டுவிடப்படுவான் என்று மனிதன் எண்ணிக் கொண்டானா? (36)’ இந்த வாழ்க்கையை அளித்தவன் நோக்கமின்றி, வீணாக அளிக்கவில்லை. நிச்சயமாக மனிதர்கள் ஒருநாள் தங்களின் படைப்பாளனுக்கு முன்னால் நின்றே தீர வேண்டும். அவன் இந்த உலகில் அவர்கள் செய்த செயல்களைக் குறித்து விசாரணைசெய்வான். அவன் இந்த உலகை மறுவுலகுக்கான களமாக ஆக்கிக்கொண்டானா? விசித்திரம் என்னவென்றால், இதுவரை மனித வரலாற்றில் இல்லாத அளவு அறிவியல் பெரும் வளர்ச்சியடைந்துவிட்டது. ஆனாலும் மனிதன் அல்லாஹ்வைக் குறித்து அறிந்துகொள்வதில், அவனுடைய சந்திப்புக்காகத் தயாராவதில் பலவீனமானவனாகவே இருக்கிறான்.

❖ ❖ ❖

அத்தியாயம் 76

# அல்இன்சான்

(மனிதன்)

*ஒரு பயணக்குழு ஓர் அடக்கத் தலத்தைக் கடந்துசென்றது. அதில் இருந்த ஒருவர் தம் தோழரிடம் கேட்டார், 'இந்த மண்ணறைகள் நமக்கு என்ன சொல்கின்றன என்று உமக்குத் தெரிகிறதா?' 'அவை என்ன சொல்கின்றன?' என்று அவரும் திருப்பிக்கேட்டார். முதலாமவர் கூறினார், 'நாங்கள் இருந்ததுபோன்றே நீங்கள் இருக்கிறீர்கள். நாங்கள் இருப்பது போன்றே நீங்களும் இருப்பீர்கள்.' என்று அது கூறுகிறது.*

*நான் எனக்குள் கேட்டுக்கொண்டேன், 'நூறு வருடங்களுக்கு முன்னால் நான் எப்படி இருந்தேன்? நான் வாழக்கூடிய இந்தத் தலைமுறை அப்போது இருந்ததா? பின்வரும் வசனத்தைவிடச் சிறந்த பதிலை நான் பெற வில்லை: 'மனிதனின் மீது ஒரு காலகட்டம் செல்லவில்லையா? அப் போது அவன் குறிப்பிடத்தக்க ஒரு பொருளாக இருக்கவில்லை. (1)'*

*நாம் குறிப்பிடத்தக்க ஒரு பொருளாக இருக்கவில்லை. பின்னர் அல்லாஹ்தான் நம்மைப் படைத்தான். நாம் செவியேற்கிறோம், பார்க்கி றோம். பின்னர் அவன் பக்கமே நாம் திரும்பிச் செல்ல வேண்டும். ஆனால், எந்த வடிவில் திரும்பிச்செல்வோம்?*

*அல்லாஹ் இந்த அத்தியாயத்தில் கூறுகிறான்:*

*நாம் நிராகரிப்பாளர்களுக்குச் சங்கிலிகளையும் விலங்குகளையும் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பையும் தயார்படுத்தி வைத்துள் ளோம். (4)*

*மேலும் அவன் கூறுகிறான்:*

*நல்லோர்கள் குவளைகளில் கற்பூரம் கலந்த பானம் அருந்துவார்கள். அது அல்லாஹ்வின் அடியார்கள் அருந்துகின்ற ஓர் ஊற்றாகும். அதை ஓடைகளாக ஓடச்செய்வார்கள். (5,6)*

இந்த அத்தியாயத்தில் நிராகரிப்பாளர்கள் அனுபவிக்கும் வேதனை சுருக்கமாக வர்ணிக்கப்படும் அதே சமயம் நம்பிக்கையாளர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் அருட்கொடைகளும் வர்ணிக்கப்படுகின்றன. 'நீர் எங்கே பார்த்தாலும் அங்கே அருட்கொடைகளையும் அரசாட்சியையும் காண்பீர். (20)' பின்னர், அவர்களுக்கு நினைவூட்டும் விதமாகக் கூறப் படுகிறது: 'நிச்சயமாக இதுதான் உங்களுக்குரிய கூலியாகும். உங்களின் முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. (22)'

இந்த அத்தியாயத்தின் மறுபாதி, இறுதி தூதுத்துவம்குறித்தும் மனித வாழ்வில் அதன் பங்களிப்பு குறித்தும் பேசுகிறது. மனிதனின் ஒழுக்கத் தில் சூழலின் தாக்கம் அளப்பரியது. அதனை நம்மால் மறுக்க முடியாது. சமூகத்தின் முன்னோக்கு திசையை மாற்றுவதற்குத் தூதர் சக்திபெற்றார், வஹீயைக் கொண்டு வெறுமையாக இருந்த உள்ளங்களை வளப்படுத்தி னார், ஆம், அவர் ஒரு சமூகத்தை உருவாக்கினார். அது உறுதியாக நின்று நேர்வழியின் பக்கம் மக்களை அழைக்கிறது. ஆகவே, அவருக்குக் கூறப்படுகிறது:

> நாம் உம்மீது இந்தக் குர்ஆனைச் சிறிதுசிறிதாக அருளினோம். ஆகவே, உம் இறைவனின் கட்டளைப்படி பொறுமையை மேற் கொள்வீராக. அவர்களில் பாவிக்கோ நன்றிகெட்டவனுக்கோ கட்டுப்படாதீர். (23,24)

தொடர்ந்து அல்லாஹ்வை நினைவூட்டிக்கொண்டே இருப்பது என்பது பகலின் முற்பகுதியையும் அதன் இறுதிப் பகுதியையும் உள்ளடக்கிய தாகும். 'உமது இறைவனின் பெயரைக் காலையும் மாலையும் நினைவு கூர்வீராக. (25)' அதே போன்று, அது இரவு நேரத்தையும் உள்ளடக்கிய தாகும். 'இரவிலும் அவனுக்குச் சிரம்பணிவீராக. இரவில் நீண்ட நேரம் அவனைப் புகழ்வீராக. (26)'

திருக்குர்ஆன் தூதரின் காலகட்டத்திலும் அதற்கு முன்னரும் பின்ன ரும் இருந்த, இருக்கின்ற மனிதர்களின் இயல்புகளை வர்ணிக்கிறது. 'இவர்கள் விரைவில் கிடைக்கக்கூடியதை விரும்புகிறார்கள். தங்களுக்குப் பின்னால் வரக்கூடிய ஒரு கனமான நாளை விட்டுவிடுகிறார்கள். (27)' வாழ்க்கையின் போதையில், அதன் இன்பங்களைத் தேடுவதில் மனி தர்கள் தங்களின் நேரான வழியைத் தொலைத்துவிடுகிறார்கள். தற் காலத்தில் மறுமையை நினைவுகூர்வது தடைசெய்யப்பட்ட ஒன்றாகி விட்டது. மரணத்தைக் கொண்டு அறிவுறுத்துவது அயர்ச்சியை உரு வாக்கும் அறிவுரையாகி விட்டது.

*நான் துறவறத்தையோ செயல்பாடின்றி முடங்கிக்கிடப்பதையோ விரும்பவில்லை. ஆனால், அலட்சியத்தையும் மீறிவரும் இச்சைக்கு முன்னால் மனிதனின் சிந்தனை தோல்வியடைவதையும் நான் வெறுக்கிறேன்.*

*மனிதர்கள் தாங்கள் எங்கிருந்து வந்தோம், எங்கு செல்லவிருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 'இது ஓர் அறிவுரையாகும். ஆகவே, விரும்புகிறவர் தம் இறைவனின் பக்கம் செல்லும் பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும். (29)' நேர்வழியை விரும்பக்கூடியவர்களுக்கு அல்லாஹ் நேர்வழியை அளிக்கிறான். அவர்களுக்கு முன்னால் இருக்கும் தடைகளை நீக்குகிறான். ஆனால், அல்லாஹ்வை மறந்தவர்கள் அவனுடைய சான்றுகளைக் காணாத குருடர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வரம்புமீறலில் தட்டழிந்துகொண்டிருக்கிறார்கள். 'அவன் தான் நாடுவோரைத் தன் அருளில் நுழையச்செய்கிறான். அக்கிரமக்காரர்களுக்கு அவன் துன்புறுத்தும் வேதனையைத் தயார்படுத்தி வைத்துள்ளான். (31)'*

❖ ❖ ❖

அத்தியாயம் 77

# அல்முர்சலாத்

(அனுப்பப்படுபவை)

*அனுப்பப்படுகின்ற காற்றுகளின் மீது சத்தியமாக, அந்தக் காற்றுகள் புயல் வேகத்தில் வீசுகின்றன; மேகங்களைப் பரப்பிவிடுகின்றன; விவகாரங்களைப் பிரித்துவிடுகின்றன; இறை வஹீயைக் கொண்டு சேர்க்கின்றன, மன்னிப்புக்காக அல்லது எச்சரிப்பதற்காக.* (1-6)

*இவையனைத்தும் நமக்கு வானிலை அறிக்கையை அறிவிக்கும் காற்றுகளின் பண்புகளாகும். இந்த அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதி அத்தாரியாத் என்ற அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதியை ஒத்துள்ளது. காற்று மனித வாழ்வின் அடிப்படையான ஒன்றாகும். அது வீசாமல் அமைதியாக இருக்கும் காற்றாக அல்லது தென்றல் காற்றாக அல்லது கடுமையாக வீசும் புயலாக இருக்கலாம்.*

*நான் சுவாசிக்கும் காற்றைக் குறித்து எனக்குநானே கேட்டிருக்கிறேன். இந்தக் காற்று கெய்ரோவில்தான் இருக்குமா? அல்லது, உலகின் கிழக்குக்கும் மேற்குக்கும் மத்தியில் இடம்பெயர்ந்து கொண்டே இருக்குமா? அதன் நிரந்தரமான இயக்கத்தின் மூலம் வேறு பகுதிக்குச் சென்றுகொண்டே இருக்குமா? நான் கிழக்கு ஆசியாவிலிருந்து தேநீரை அருந்துகிறேன். இந்தியப் பெருங்கடலிலிருந்து இழுத்துக் கொண்டு வரப்பட்ட நைல் நதியின் நீரைப் பருகுகிறேன். அல்லாஹ்வின் அருட்கொடைகளைக் குறித்து நான் சிந்திக்கும்போது இந்தப் பிரபஞ்சம் முழுமையும் எனக்குப் பணிவிடைசெய்வதில் பங்குபெற்றுள்ளது என்பதை உணர்கிறேன். ஆனாலும், ‘மனிதனுக்குக் கேடுதான்! அவன் எப்படி நன்றிகெட்டவனாக இருக்கிறான்?!* (80:17)’

*சூழல் அமைதியாக இருக்கும்போது காற்று மென்மையாக வீசுவதை உணர்கிறேன். சில பகுதிகளில் காற்று கடுமையாக வீசும்போது மரங்*

களைப் பிடுங்கி எறிந்துவிடுகிறது. வாகனங்களைத் தூக்கி வீசிவிடுகிறது. அது மேகங்களை, அல்லாஹ் நாடிய இடத்தில் மழையைப் பொழி விப்பதற்காக இங்குமங்கும் கொண்டுசெல்கிறது. பின்வரும் வசனங் களைக் கவனியுங்கள்: ‘இறை வஹீயைக் கொண்டுசேர்க்கின்றன, மன்னிப்புக்காக அல்லது எச்சரிப்பதற்காக. (5,6)’ இங்கு பயன்படுத்தப் பட்டுள்ள அத்திக்ர் என்ற வார்த்தை திருக்குர்ஆனைக் குறிக்கிறது. காற்றுதான் கடல் அலைகளின் சப்தத்தை நமக்கு ஒலிபரப்பும் ஊடக மாகும். வஹீயைச் செவியேற்பவர்களில் அதனைக் கொண்டு பயனடை பவரும் அதனைப் புறக்கணிப்போரும் இருக்கிறார்கள். அது நேர்வழி யடைந்தோருக்கு மன்னிப்பாகவும் வழிகேடர்களுக்கு எச்சரிக்கையாக வும் அமைகிறது.

குர்ஆன் விரிவுரையாளர்களில் பெரும்பாலோர் கடைசியாக வந்துள்ள இந்த இரு வசனங்களில் வானவர்களின் பண்புகள் எடுத்துரைக்கப்பட் டுள்ளன என்று கூறுகிறார்கள். ஆகவே, அவர்கள் முதல் மூன்று வச னத்திலிருந்து அடுத்த இரண்டு வசனங்ளைப் பிரித்தே பொருள் கொள் கிறார்கள். ஏனெனில், காற்று ஒலிபரப்பு ஊடகமாக இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆயினும் இந்த விசயம் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அறிவியல் உண்மையாகிவிட்டது. அல்லாஹ் காற்று களையும் அவற்றின் பண்புகளையும் கொண்டு மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதும் ஈமான் மற்றும் நிராகரிப்பு அவற்றுக்கான விளை வைப் பெற்றுத்தரும் என்பதும் உண்மை என்பதைச் சத்தியமிட்டுக் கூறுகிறான். பின்னர், மறுமைநாளின் பண்புகள் குறிப்பிடப்படுகின்றன.

> நட்சத்திரங்கள் ஒளியிழந்துவிடும்போது, வானம் பிளக்கப்படும் போது, மலைகள் தூள்தூளாக்கப்படும்போது, தூதர்கள் குறிப் பிட்ட நேரத்தில் ஒன்றுகூட்டப்படும்போது, அவர்கள் எந்த நாளுக் காகப் பிற்படுத்தப்பட்டார்கள்? தீர்ப்புநாளுக்காகவே. தீர்ப்புநாள் என்ன வென்று உமக்குத் தெரியுமா? (8-14)

ஓர் ஒழுங்குடன் இணைக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சம் சீர்குலைந்து விடும். மீண்டும் அது புதியதொரு வடிவில் தன்னுடைய அமைப்பைப் பெற்றுக்கொள்ளும். இவ்வுலக வாழ்வில், தாழ்ந்தவர்கள் உயர்த்தப் பட்டுக்கொண்டும் இறைத்தூதர்கள் இழிவுபடுத்தப்பட்டுக் கொண்டும் இருந்தார்கள். ஆனால் மறுமையிலோ உண்மையாளன் பொய்ப்படுத் தப்பட மாட்டான்; பொய்யன் கண்ணியப்படுத்தப்பட மாட்டான்.

இந்த அத்தியாயத்தில் பின்வரும் வசனம் மீண்டும் மீண்டும் இடம் பெறுவதைக் காண்கிறோம்: ‘அந்நாளில் நிராகரிப்போருக்குக் கேடுதான். (15)’

இறைவனின் எச்சரிக்கைக்குப் பிறகு, பிரபஞ்சத்தில் காணப்படும் சான்றுக்குப் பிறகு, வரலாற்றுப் படித்தரத்துக்குப் பிறகு, மனிதச் சமூகத்துக்கான அறிவுரைக்குப் பிறகு என பத்து முறை இந்த வசனம் இடம்பெற்றுள்ளது. முந்தையவர்கள் பெற்ற அதே தண்டனையைப் பிந்தையவர்களும் இந்த உலகில் பெற்றே தீருவார்கள் என்று நிராகரிப்பாளர்களை அச்சுறுத்தியபிறகு இந்த வசனம் ஆரம்பமாக இடம்பெறுகிறது.

பின்னர், பெரும் படைப்பாளனைக் குறித்த கேள்வி இடம்பெறுகிறது. அவன்தான் ஒன்றுமில்லாமையிலிருந்து மனிதனைப் படைத்தான். இந்தப் படைப்பு எப்படித் தொடங்கியது?

பூக்களால் பரப்பப்பட்ட, விலையுயர்ந்த பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்ட பாதையில் அவனுடைய படைப்பு தொடங்கவில்லை. மனிதக் கழிவு வெளியேறும் இடத்திலிருந்து வெளிப்படும் அற்பமான நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான். ‘நாம் உங்களை அற்பமான நீரிலிருந்து படைக்கவில்லையா? பின்னர் அதனை ஓர் பாதுகாப்பான இடத்தில் வைத்தோம், ஒரு குறிப்பிட்ட காலம்வரை. (20-22)’ இந்த இடத்திலிருந்துதான் மனிதர்கள் உருவாகிறார்கள், அவர்களில் உள்ள அறிவாளிகளும் மூடர்களும். ஆச்சரியமான திறமைகளைக் கொண்ட மனிதன் உருவாகிறான். அவனைப் படைத்தது யார்? மனிதர்கள் என்ன நிகழ்கிறது என்பதைப் பார்க்க மட்டுமே செய்கிறார்கள். ஆகவே அல்லாஹ் கூறுகிறான்: ‘பின்னர் நாமே நிர்ணயித்தோம். நிர்ணயம் செய்வோரில் நாமே மிகச் சிறந்தவர். (23)’

ஆம். அவனே மிகச் சிறந்த முறையில் நிர்ணயிப்பவன். அஸ்ஸாஃப்பாத் என்ற அத்தியாயத்தில் அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறுகிறான்: ‘நூஹ் நம்மிடம் பிரார்த்தித்தார். மிகச் சிறந்த முறையில் நாம் அவருக்குப் பதிலளித்தோம். (37:75)’

ஆம். அவன் மிகச் சிறந்த முறையில் பதிலளிக்கக்கூடியவன். இப்படிப்பட்ட கொடையாளனின் கண்ணியத்தை அளவிடவே முடியாது. ஒரு நம்பிக்கையாளன் ஐந்து வேளை தொழுகைகளில் நின்றவாறும் றுகூஉ செய்தவாறும் சிரம்பணிந்தவாறும் அல்லாஹ்வின் புகழைப் பாடிக் கொண்டே இருக்கிறான்.

பின்னர் அல்லாஹ் கூறுகிறான்: ‘நாம் பூமியை உயிருள்ளவர்களையும் இறந்தவர்களையும் அணைத்துக்கொள்ளக்கூடியதாக ஆக்கவில்லையா? (25,26)’ வசனங்கள் உயிருள்ளவர்களையும் இறந்தவர்களையும் பூமியோடு இணைக்கும் பூமியின் ஈர்ப்புத் தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.

*ஒவ்வொரு பொருளும் அதனோடு ஒட்டிக்கொள்கிறது. வானவெளியில் பயணிக்கக்கூடியவர்கள் பல மைல்களுக்கு அப்பாலிருந்து பூமியைப் பார்க்கும்போது யார் அதனை அதனுடைய இடத்தில் தடுத்து வைத் திருக்கிறார் என்ற கேள்வி அவர்களுக்கு எழவே செய்யும்.*

*அவர்களுடன் நானும் கேட்கிறேன், 'யார் நீரைப் பூமியின் மேல்பகுதி யில் தடுத்துவைத்திருப்பது? இந்தப் பூமியின் ஐந்தில் நான்கு பகுதி தண்ணீரால்தானே ஆனது. ஏன் அது வானவெளியில் கொட்டுவதில்லை?' ஏனெனில், பூமியை ஒவ்வொரு துளி நீரையும் ஈர்த்துக்கொள்ளக்கூடியதாக ஆக்கியுள்ளான். நிலத்திலும் நீரிலும் இந்த அற்புதத்தை நிகழ்த்துபவன் யார்? 'நாம் அதில் உயர்ந்த மலைகளை ஏற்படுத்தியுள்ளோம். உங்களுக்குச் சுவையான நீரைப் புகட்டினோம். (27)'*

*பின்னர் அத்தியாயம் மறுமைநாளில் கூலி கொடுக்கப்படும் காட்சிகளை எடுத்துரைக்கிறது. நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்களும் அடையும் விளைவுகளை வர்ணிக்கிறது. இந்தப் பூமியில் வாழ்ந்த படைப்புகள் அனைத்தும் அங்கு ஒன்றுதிரட்டப்படும். 'இது தீர்ப்புநாளாகும். நாம் உங்களையும் முன்சென்றோரையும் ஒன்றுதிரட்டியுள்ளோம். உங்களால் எனக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்ய முடியுமெனில் சூழ்ச்சிசெய்யுங்கள். அந்நாளில் நிராகரிப்போருக்குக் கேடுதான். (38-40)'*

*அவர்கள் திடீரெனச் சத்தியத்தைக் காண்பார்கள். மறுமைநாள் அவர்கள் எதிர்பாராத வகையில் திடீரென அவர்களைத் தாக்கிவிடும். முணுமுணுப் பைத் தவிர வேறு ஒன்றையும் அவர்கள் செவியேற்க மாட்டார்கள்.*

*பின்வரும் வசனத்தோடு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது: 'இதற் குப் பின் அவர்கள் எந்த விசயத்தின் மீது நம்பிக்கை கொள்ளப்போகி றார்கள்? (50)' இதைவிட நேரான வழியைக் காட்டும் ஒரு வேதம் இனி வரப்போகிறதா என்ன? அதில் இந்த வேதத்தில் வந்துள்ளதைவிடச் சிறந்த முறையில் அல்லாஹ்வைப் பற்றியும் அவனுடைய உரிமைகளைப் பற்றி யும் எடுத்துரைக்க முடியுமா?*

*இதைவிடச் சிறந்த முறையில் அல்லாஹ்வைக் குறித்து வேறெந்த மனிதனிடமிருந்தாவது நாம் செவியேற்றுள்ளோமா?*

*முஹம்மது தமக்கு அருளப்பட்டுள்ள இந்த வேதத்தின் மூலம் உண் மைக்கு நியாயம்செய்தார். பொய்களை அகற்றினார். அசத்தியத்தை ஆட்டம்காணச் செய்தார். 'இதற்குப் பின் அவர்கள் எந்த விசயத்தின் மீது நம்பிக்கை கொள்ளப்போகிறார்கள்? (50)'*

❖ ❖ ❖

அத்தியாயம் 78

# அந்நபா

(செய்தி)

*ஒரு சமூகத்தில் யாரேனும் தம்மை நபி என வாதிட்டால் அவர்கள் அந்த மனிதரின் சொல்லையும் ஆளுமையையும் ஆராய வேண்டும். பின்னர், அவருக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ தீர்ப்பளிக்க வேண் டும். நாம் கேட்கிறோம்: 'முஹம்மது எதைக் கொண்டுவந்தார்?' அவர் அல்லாஹ் உண்மையானவன் என்று நமக்கு எடுத்துரைத்து அவனது இருப்புக்கான, பரிபூரணத்துக்கான ஆதாரங்களை நமக்குக் காட்டினார். அவரைப் போன்று யாருமே இவ்வளவு தெளிவாகவும் பரிபூரணமாகவும் கூறவில்லை. அந்த அல்லாஹ் ஒருவனே. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனிடம் கையேந்தி நிற்கக்கூடிய அவனுடைய படைப்புகளே. எந்த வானவரும் மனிதரும் ஜின்னும் இதற்கு விதி விலக்காக இருக்க முடியாது. 'ஆகவே, அணுவளவு நன்மைசெய்தி ருந்தாலும் அதனை அவர் கண்டுகொள்வார். அணுவளவு தீமை செய் திருந்தாலும் அதனையும் அவர் கண்டுகொள்வார். (99:7,8)'*

*நான் ஏன் முஹம்மதை நிராகரிக்க வேண்டும்? அவர் கூறியதைவிடச் சிறந்த ஒன்றை யாராவது கூறியிருப்பார்களானால் நான் அவரையே பின்பற்றியிருப்பேன்.*

*இந்த அத்தியாயம் இணைவைப்பாளர்களிடம் கூறுகிறது: வாருங்கள், முஹம்மதின் அழைப்பு உங்களுக்குத் திருப்தியளிக்கவில்லையெனில் வானங்கள், பூமியின் படைப்பைக் குறித்து ஏன் நீங்கள் சிந்திப்பதில்லை? 'நாம் பூமியை விரிப்பாகவும் மலைகளை முளைகளாகவும் ஆக்கவில் லையா? நாம் உங்களை இணைகளாகப் படைத்தோம். (6-8)'*

*நாம் இப்போது ஹிஜ்ரீ பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இருக்கிறோம். நமக்கு*

முன்னால் பல மார்க்கங்கள் இருக்கின்றன. அவற்றை ஆராய வேண்டியதும் சிறந்தவற்றைத் தெரிவுசெய்ய வேண்டியதும்தான் நம்முடைய பொறுப்பு. நான் கூறுகிறேன், நான் முஹம்மதின் வேதத்தையும் சுன்னாஹ்வையும் தவிர்த்து எந்த ஒன்றுக்கும் முன்னுரிமையளிக்க மாட்டேன். அல்லது, வேறொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், அவரது மார்க்கம் முந்தைய வஹீயையும் பிந்தைய வஹீயையும் ஒன்றுசேர்த்துள்ளது என்று அவர் கூறும்போது நான் அவரை உண்மைப் படுத்துகிறேன். அதற்கு மாறாக இருப்பதெல்லாம் மனிதர்களின் கூற்றுகள்தாம்; வானத்தின் வஹீ அல்ல. 'உமக்கு முன் வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டதுதான் உமக்கும் கூறப்படுகிறது. (41:43)' அதாவது, நான் முஹம்மதைப் பின்பற்றும்போது அவருடன் மூசாவையும் ஈசாவையும் நூஹையும் இப்றாஹீமையும் பின்பற்றுகிறேன்.

இந்த அத்தியாயம் தனித்துவமான நான்கு பகுதிகளால் ஆனது.

முதல் பகுதி, பிரபஞ்சத்தையும் மனிதர்களையும் குறித்த வர்ணனையைக் கொண்டது. அது பின்வரும் வசனங்கள்வரை நீள்கிறது: 'நாம் கார்மேகங்களிலிருந்து பெருமழையைப் பொழியச்செய்கிறோம். அதன் மூலம் தானியங்களையும் தாவரங்களையும் அடர்ந்த தோட்டங்களையும் நாம் வெளிப்படுத்துவதற்காக. (14-16)'

இரண்டாவது பகுதி, கணக்கு கேட்கப்படும் நாளைச் சுருக்கமாக வர்ணிக்கிறது. 'நிச்சயமாகத் தீர்ப்புநாள் ஒரு குறிப்பிட்ட நேரமாக இருக்கிறது. எக்காளம் ஊதப்படும் நாளில் நீங்கள் கூட்டம்கூட்டமாக வருவீர்கள். (17,18)' விரைவாகக் கிடைக்கக்கூடியதை மனிதர்கள் விரும்புவதைத் தடுக்கவே திருக்குர்ஆனில் அதிகமாக மறுமையைக் குறித்து கூறப்படுகிறது.

மூன்றாவது பகுதி, குற்றவாளிகளுக்காகக் காத்திருக்கும் தண்டனையை வர்ணிக்கிறது. 'நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அது வரம்புமீறியோரின் இருப்பிடமாகும். அதில் அவர்கள் பல யுகங்கள் வீழ்ந்துகிடப்பார்கள். (21-23)'

நான்காவது பகுதி, நம்பிக்கையாளர்களுக்காகக் காத்திருக்கும் இன்பங்களை வர்ணிக்கிறது. 'நிச்சயமாக இறையச்சமுடையோருக்கு வெற்றி கிடைக்கும். தோட்டங்களும் திராட்சைகளும் சம வயதுடைய கன்னிப் பெண்களும் ... உண்டு. (31-33)'

ஆன்ம ரீதியான கூலியும் உண்மையாகும். அப்போது நம்பிக்கையாளர்களின் முகங்கள் மலர்ந்திருக்கும். அவர்கள் வானவர்களுடன் அல்

லாஹ்வைப் புகழ்ந்தவாறு, அவனைப் பெருமைப்படுத்தியவாறு இருப் பார்கள். அவர்கள் மலர்கள் சூழ்ந்த தோட்டங்களில் தங்களுக்கு விருப் பமான கன்னிகளுடன் இருப்பார்கள். ஈர்க்கக்கூடிய இந்த வர்ணனை களுக்குப் பிறகு அறிவுடையோரிடம் கூறப்படுகிறது, 'அந்த நாள் உண் மையானதாகும். ஆகவே, விரும்புகிறவர் தம் இறைவனின் பக்கம் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளட்டும். (39)'

யார் இறையச்சத்தைக் கொண்டு தம்மைத் தயார்படுத்திக்கொண்டாரோ அவர் வெற்றிபெறுவார். யார் அலட்சியமாக வாழ்ந்தாரோ அவர் தோல் வியடைவார். அவர் அல்லாஹ்வுக்கு முன்னால் வெறுங்கையோடு நிற்பார். செயல்படுவதற்கான வாய்ப்புகளோ கடந்துவிடும்.

> நாம் உங்களை நெருங்கிவரும் வேதனையைக் குறித்து எச்சரித்து விட்டோம். மனிதன் தன் கரங்கள் முற்படுத்தியவற்றைக் காணும் நாளில் நிராகரித்தவனோ, 'அந்தோ, நான் மண்ணாக இருந்திருக்கக் கூடாதா!' என்று புலம்புவான். (40)

இறுதியில், முஹம்மதைக் குறித்து கேட்போரிடம் நாம் கேட்கிறோம்: 'முஹம்மது இந்த விளக்கத்தின் மூலம் தமக்காக எதைச் சம்பாதித்தார்?'

அவர் மனிதர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்குத் தம்மையே அர்ப்பணித்தார் என்பதுதான் அவர் செய்த குற்றமா? அவர் குழப்பவாதி களையும் அநியாயக்காரர்களையும் எதிர்த்து நின்றார் என்பதுதான் அவர் செய்த குற்றமா?

❖ ❖ ❖

அத்தியாயம் 79

# அந்நாஸியாத்

(கழற்றுபவர்கள்)

*இழுத்துச் செல்லக்கூடியவற்றின் மீதும் மெதுவாகச் செல்ப வற்றின் மீதும் சத்தியமாக, நீந்துகின்றவற்றின் மீதும் முந்திச் செல்ப வற்றின் மீதும் ... சத்தியமாக.* (1-5)

*இவையனைத்தும் வானவெளியில் சுற்றக்கூடிய நட்சத்திரங்களைக் கொண்டு செய்யப்பட்ட சத்தியங்கள் என்ற கருத்தையே நான் தெரிவு செய்கிறேன். அவை எந்த விளக்குமின்றித் தமக்கான வழியை அமைத் துக் கொள்கின்றன; நிற்காமல் விரைந்துசெல்கின்றன; தம்முடைய வழியை அறிந்துகொள்கின்றன. பின்னர், இந்தப் பிரபஞ்சத்தின் முடி வுடன் அவற்றுக்கான தவணை வந்துவிட்டால் அவை அழிந்துவிடு கின்றன. அது எப்போது நிகழும்? 'எந்த நாளில் நடுங்கவைக்கக் கூடியது நடுங்கவைத்துவிடுமோ, அதன் பின்னர் வர வேண்டிய ஒன்றும் வந்து விடுமோ ...* (6,7)'

*அந்தப் பெரும் பூகம்பத்தில் ஒவ்வொன்றும் தன்னுடைய சமநிலையை இழந்துவிடும். உள்ளங்கள் நடுநடுங்கியவையாக, பார்வைகள் கோண லானவையாக இருக்கும்.*

*இந்த எச்சரிக்கையைச் செவியுற்ற இணைவைப்பாளர்கள், 'நாம் முந்தைய நிலைக்கு மீண்டும் திரும்புவோமா என்று கேட்கிறார்கள்.* (10)'

*நாம் வந்த வழியே திரும்பிச்சென்றுவிடுவோமா? மீண்டும் ஒருமுறை நமக்கு வாழ்க்கை அளிக்கப்படுமா? இப்படித்தானே தூதர் கூறினார். அது எப்போது நிகழும்? நாம் இறந்து மண்ணோடு மண்ணாக ஆன பிறகா? 'அப்படியானால் அது பேரிழப்புக்குரிய மீட்சியாகத்தான் இருக்கும்.* (12)'

*அப்படித் திரும்பிச்செல்வதால் நமக்கு எந்த நன்மையும் இல்லை. ஏனெனில், நாம் அதனை உண்மைப்படுத்தவுமில்லை; அதற்காகத் தயாராகவுமில்லை.*

*'ஆனால் அதுவோ ஓர் உரத்த அதட்டல்தான். திடீரென அவர்கள் வெட்டவெளியில் இருப்பார்கள். (13,14)' அது ஒன்றுதிரட்டப்படும், கூலி வழங்கப்படும் நேரம். 'கருப்பைகள் வெளியேற்றுகின்றன, பூமி அவற்றை விழுங்கிவிடுகிறது, காலத்தைத் தவிர வேறு ஒன்றும் நம்மை அழிக்காது.' என்று கூறும் தற்கால மெய்யியலாளர்களைப் பின்பற்றுபவர்கள் அன்றைய பாலைவன இணைவைப்பாளர்களைவிடச் சிறந்தவர்கள் அல்ல.*

*அவர்கள் தங்களை உயிர்பெற்றவர்களாகக் காணும்போது அவர்களின் நிலைப்பாடு எப்படி இருக்கும்?*

*அடுத்து, குற்றவாளிகளில், தலைவர்களில் ஒருவனாக இருந்த ஃபிர் அவ்னைக் குறித்து அத்தியாயம் பேசுகிறது. உண்மையில் ஃபிர்அவ் னிய்யத் என்பது ஒரு பொதுவான நோயாகும். சத்தியத்தை மறுப்பதும் மக்களை இழிவாகக் கருதுவதும்தான் அதன் அடிப்படை.*

*ஆட்சியாளர்களிலும் நிர்வாகிகளிலும் நடிகர்களிலும் மதகுருக்களிலும் ஃபிர்அவ்ன்கள் காணப்படலாம்.*

*தன்னையே உயர்வாக எண்ணும் மனிதன் அநியாயம் இழைக்கும் கர்வியாகவே வாழ்கிறான். அவன் சத்தியத்தைச் சத்தியம் என்றும் அசத்தி யத்தை அசத்தியம் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டான். நரகம் தனக்குத் தேவையான எரிபொருளை இவர்களிலிருந்தே பெற்றுக்கொள்ளும்.*

*திருக்குர்ஆன் மனிதர்களை விளித்து உரையாடுகிறது. ஏன் உங்களுக்கு இந்தக் கர்வம்? எதற்காக அல்லாஹ்வின் பாதையைவிட்டு மக்களைத் தடுக்கிறீர்கள்? 'உங்களைப் படைப்பது அதிகச் சிரமமானதா அல்லது வானத்தையா? அவன்தான் அதனைப் படைத்தான். அதன் முகட்டை உயர்த்தி அதனை ஒழுங்குபடுத்தினான். (27,28)'*

*மற்ற படைப்புகளுடன் ஒப்பிடும்போது மனிதன் பலவீனமானவன். வரம்புமீறுவதற்கும் மனஇச்சைப்படி செயல்படுவதற்கும் அவனுக்கு எந்த உரிமையும் இல்லை. மாறாக, அவன் அல்லாஹ்வை அஞ்ச வேண் டும்; தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் பிரபஞ்சத் தில் அவன் தெரிவுசெய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறான் எனில் அவன் தனது அதிகாரத்தை அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துவதற்கும் அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.*

*அத்தியாயம் தொடங்கியதுபோன்றே, மனிதன் இவ்வுலக வாழ்வை மறுமை வாழ்வுக்கான களமாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுதல், கூலி வழங்கப்படுதல் ஆகியவற்றின் பக்கம் மீண்டும் திரும்புகிறது. 'ஆகவே, அந்தப் பேரமளி வந்துவிட்டால், அந்நாளில் மனிதன் தான் செய்ததையெல்லாம் நினைத்துப்பார்ப்பான். பார்ப்பவர்களுக்கு முன்னால் நரகம் வெளிப்படுத்தப்படும். (34-36)' அந்த நாளில் மனிதர்கள் இரு வகையினராக இருப்பார்கள். ஒரு வகையினர் தங்களின் மனஇச்சைகளுக்கு அடிமையானவர்கள். மற்றொரு வகையினர் அல்லாஹ்வுக்கு அடிமையாக இருந்து அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றியவர்கள்.*

> *யார் வரம்புமீறி இவ்வுலக வாழ்வைத் தேர்ந்தெடுத்துக்கொண் டாரோ அவரது இருப்பிடம் நரகமாகும். யார் தம் இறைவனின் முன்னே நிற்பது குறித்து அஞ்சி, மனதைத் தீய இச்சைகளைவிட்டும் தடுத்துக்கொண்டாரோ அவரது இருப்பிடம் சுவனமாகும். (37-41)*

*அவர்கள் பரிகாசமாக மறுமைநாளைக் குறித்து கேட்கிறார்கள். 'அவர் கள் மறுமைநாளைக் குறித்து அது எப்போது நிகழும் என்று உம்மிடம் கேட்கிறார்கள். அதனைக் குறிப்பிட்டு நீர் என்ன செய்வீர்? அதனைப் பற்றிய முடிவு உம் இறைவனிடமே உள்ளது. (42-44)'*

*அல்லாஹ் மட்டுமே அது எப்போது நிகழும் என்பதை அறிவான். அதற்காக எந்த முன்னேற்பாடும் செய்யாமல் அதைக் குறித்து அறிவதால் உங்களுக்கு என்ன பயன் ஏற்பட்டுவிடப்போகிறது? இரண்டு வாழ்வுக் கும் மத்தியில் மரணம் மெல்லிய கோடாக இருக்கிறது. அவனைச் சந்திக்கும் நாளில் இவ்வுலகின் மதிப்பை நாம் அறிந்துகொள்வோம். 'அவர்கள் அதனைக் காணும் நாளில் ஒரு மாலையோ அதன் காலையோ தவிர உலகில் அவர்கள் தங்கியிருக்கவில்லை என்றே அவர்களுக்குத் தோன்றும். (46)'*

❖ ❖ ❖

அத்தியாயம் 80

# அபச

(கடுகடுத்தார்)

*ஒரு சமயம் நபியவர்கள் குறைஷித் தலைவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களைப் பின்பற்றி பலரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்கள். அப்போது அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் என்ற கண் தெரியாத தோழர் நபியவர்களிடம் வழிகாட்டல் வேண்டியவராக, பேசுவதற்காக வந்தார். இதனால் நபியவர்கள் நெருக்கடியை உணர்ந்தார்கள். அவர்களின் முகம் சுருங்கிவிட்டது. அவரின் பக்கம் கவனம் செலுத்தாமல் குறைஷித் தலைவர்களுடன் பேசுவதில் மும்முரமாக ஈடுபட்டார்கள். அப்போது அல்லாஹ் இந்த அத்தியாயத்தை அருளினான்.*

> *அந்தப் பார்வை இழந்தவர் தம்மிடம் வந்ததற்காக அவர் கடுகடுத்தார்; அலட்சியம்செய்தார். உமக்கு என்ன தெரியும்? அவர் தூய்மையடையக்கூடும் அல்லது அவர் அறிவுரைபெறலாம்; அந்த அறிவுரை அவருக்குப் பயனளிக்கலாம்.* (1-4)

*நபியவர்கள் இந்தக் கண்டிப்பைக் காதுகொடுத்துக் கேட்டார்கள். இதற்குப் பிறகு அப்துல்லாஹ் வரும்போதெல்லாம் அவரைச் சிறந்த முறையில் வரவேற்றார்கள். அவர்கள் அவரிடம் இவ்வாறு கூறுபவர்களாக இருந்தார்கள்: 'யார் விசயத்தில் என் இறைவன் என்னைக் கண்டித்தானோ அவரது வரவு நல்வரவாகட்டும்.' நபியவர்கள் மதீனாவை விட்டு வெளியே சென்றால் அவரைத்தான் பொறுப்பாளராக நியமித்துவிட்டுச் செல்வார்கள்.*

*பின்னர் அத்தியாயம் இறை அழைப்பின் இயல்பைத் தெளிவுபடுத்தியவாறு செல்கிறது. அது செவியேற்கப்பட வேண்டிய வசனங்களாகும் அல்லது அது படிக்கப்பட வேண்டிய குர்ஆனாகும். கண்ணியம்மிக்க*

*வானவர்கள் அதனை எடுத்துரைக்கிறார்கள். இந்த அழைப்பு யாரிடம் வந்ததோ அவர் அதனைக் குறித்து சிந்திக்க வேண்டும்; அல்லாஹ்வின் பக்கம் விரைந்தோட வேண்டும்; அவனுடைய சந்திப்புக்காகத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால், மனிதர்களில் பெரும்பாலோர் இப்படித்தான் இருக்கிறார்களா?*

*இப்படிப்பட்ட அடைக்கப்பட்ட மூளையைக் கொண்ட மனிதனையும் நீங்கள் காணலாம். அவன் பூமியில் தன் இரு கால்களையும் மிதித்தவாறு செல்கிறான். ஆனால், தான் எங்கிருந்து இந்தப் பூமிக்கு வந்தேன் என்று அவனுக்குத் தெரியாது. அவனது படைப்பு ஒருதுளி நீரிலிருந்து ஆரம்ப மானது. பின்னர், அவன் வளர்ச்சியடைந்து முழு மனிதனாக மாற்ற மடைந்தான். இந்தப் பிரபஞ்சத்தில் அவனை வெளிப்படுத்தியவன் யார்? இந்த வடிவத்தை அவனுக்கு வழங்கியவன் யார்?*

*அவன் எப்படி தன் இறைவனை, அவன் அளித்த அருட்கொடைகளை மறந்தான்.*

> *அவனை அல்லாஹ் எந்தப் பொருளிலிருந்து படைத்திருக்கிறான்? ஒருதுளி விந்திலிருந்து அவனைப் படைத்து அவனது விதியை நிர்ண யித்தான். அவனது பாதையை எளிதாக்கினான். பின்னர், அவனை மரணிக்கச்செய்து அடக்கத் தலத்தில் கொண்டுசேர்க்கிறான். பின்னர், அவன் நாடும்போது மீண்டும் உயிர்பெறச் செய்வான்.* (18-22)

*ஆனால் மனிதன் இவையனைத்தையும்விட்டு அலட்சியமாக இருக்கி றான். தன் நோக்கங்களை அடையவும் தன் ஆசைகளை நிறைவேற்றவும் மட்டுமே அவன் சிந்திக்கிறான்.*

*அவன் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறை வேற்றினானா? ‘ஆயினும் மனிதன் அல்லாஹ் விதித்த கட்டளைகளை நிறைவேற்றவில்லை.* (23)*’ ஒவ்வொரு காலகட்டத்திலும் இணைவைப் பாளர்கள், நிராகரிப்பாளர்கள் ஆகியோருடனான விவாதம் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதல், கூலி கொடுக்கப்படுதல் ஆகியவற்றைச் சுற்றியே சுழல்கிறது. தங்களின் நிகழ்காலத்தைத் தவிர வேறு எதையும் அவர்கள் நம்புவதில்லை. திருக்குர்ஆன் மீண்டும் உயிர்கொடுத்து எழுப் பப்படுவதற்கான ஆதாரங்களில் ஒன்றை இங்கு குறிப்பிடுகிறது, மனி தர்கள் தங்கள் இறைவனை அறிந்துகொண்டு அதற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும் பொருட்டு.*

> *மனிதன் தன் உணவைக் கவனித்துப்பார்க்கட்டும். நாமே நன்கு மழை பொழியச்செய்தோம். பின்னர், பூமியை நன்கு பிளந்தோம்.*

உங்களுக்கும் உங்கள் கால்நடைகளுக்கும் வாழ்வாதாரப் பொருள் களாக அமையும் பொருட்டு அதில் தானியங்களையும் திராட்சை களையும் காய்கறிகளையும் ஆலிவ், பேரீச்சை மரங்களையும் அடர்ந்த தோட்டங்களையும் கனிகளையும் தீவனங்களையும் முளைக்கச்செய்தோம். (24-30)

இந்தக் கதிர்களும் மலர்களும் எப்படிப் படைக்கப்பட்டன? அவற்றில் இனிப்பும் மணமும் சுவைகளும் எப்படிப் பங்கிடப்பட்டன? அவற்றை மண்ணிலிருந்தும் கழிவுகளிலிருந்தும் உருவாக்கியவன் மனித உடல் களை மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புவான். பின்னர், ஒவ்வொரு மனிதனும் தான் முற்படுத்தியவற்றை எதிர்கொள்வான்.

'ஆகவே, காதைச் செவிடாக்கும் பயங்கர ஓசை ஏற்படும்போது, அந்நாளில் மனிதன் தன் சகோதரனைவிட்டும் தன் தாயைவிட்டும் தன் தந்தையைவிட்டும் தன் மனைவியைவிட்டும் தன் மக்களைவிட்டும் வெருண்டோடுவான். அந்நாளில் அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஏற் படும் கவலை அவர்களை வேறு எவரின் பக்கமும் கவனம் செலுத்த விடாது. (33-37)' மனிதர்கள் தங்களுக்கு விரைவாகக் கிடைக்கும் தேவை களில் மூழ்கியதால் சுவனத்தையும் நரகத்தையும்விட்டு, நன்மையையும் தீமையையும் விட்டு மறைக்கப்பட்டுவிட்டார்கள். 'சில முகங்கள் அந்த நாளில் பிரகாசித்துக்கொண்டிருக்கும். சிரித்துக்கொண்டும் மகிழ்வுடனும் இருக்கும். அந்த நாளில் சில முகங்களின் மீது புழுதி படிந்திருக்கும். அவற்றின் மீது கருமை படர்ந்திருக்கும். (38-41)'

கவலைக்குரிய விசயம், நம் காலத்தில் அறிவியல் அதன் இடத்தைத் தேடுகிறது. ஆனால், அதற்குப் பின்னால் இருக்கும் ஆற்றலைக் கண்டு கொள்ள மறுக்கிறது. ஆகவே, மறுமையைக் குறித்து பேசுவதைத் தேவை யற்ற ஒன்றாகக் கருதுகிறது. அதற்கு அது எந்த முக்கியத்துவமும் அளிப்ப தில்லை.

❖ ❖ ❖

அத்தியாயம் 81

# அத்தக்வீர்

(சுருட்டுதல்)

*இந்த அத்தியாயம் மறுமைநாளை ஒட்டி நிகழக்கூடிய பன்னிரண்டு நிகழ்வுகளைக் கொண்டு ஆரம்பமாகிறது. மனிதர்கள் அனைவரும் விசாரணைக்காகத் தங்கள் இறைவனின் பக்கம் திரும்புவார்கள்.*

1. ‘*சூரியன் சுருட்டப்படும்போது.* (1)’ *அது தன் ஒளியை நிறுத்தி விடும். இருள் பரவிவிடும்.*

2. ‘*நட்சத்திரங்கள் ஒளியிழந்துவிடும்போது.* (2)’ *அவை விழுந்து விடும். அவற்றின் சீரமைப்பு குலைந்துவிடும்.*

3. ‘*மலைகள் நடத்திச்செல்லப்படும்போது.* (3)’ *அவை தூள்தூளாக உடைக்கப்பட்டுவிடும்.*

4. ‘*பத்துமாத நிறைகர்ப்ப ஒட்டகங்கள் கவனிப்பாரற்று விடப் படும்போது.* (4)’ *மேகங்கள் வறண்டுவிடும். மழை தடுக்கப் பட்டுவிடும்.*

5. ‘*வனவிலங்குகள் ஒன்றுதிரளும்போது.* (5)’ *அவை தூரமான இடங்களிலிருந்து ஒன்றுதிரட்டப்படும்.*

6. ‘*கடல்கள் கொளுத்தப்படும்போது.* (6)’ *அவற்றின் கரைகளில் பொங்கிவழியும். அவை மனிதர்களையும் விலங்குகளையும் விரட்டிச்செல்லும்.*

7. ‘*ஒவ்வொரு வகையான மக்களும் ஒன்றிணைக்கப்படும்போது.* (7)’ *உடல்களைவிட்டுப் பிரிந்திருந்த ஆன்மாக்கள் மீண்டும் ஒன்றுசேர்க்கப்படும்.*

8. ‘உயிருடன் புதைக்கப்பட்ட சிறுமியிடம், அவள் எந்தக் குற்றத்துக்காகக் கொல்லப்பட்டாள் என்று கேட்கப்படும்போது. (8-9)’ மனிதர்கள் செய்த குற்றங்களுக்கான விசாரணை தொடங்குகிறது.

9. ‘பதிவேடுகள் விரிக்கப்படும்போது. (10)’ ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பதிவேட்டைக் காண்பான்.

10. ‘வானம் திறந்துவிடும்போது. (11)’ அதன் அடையாளங்கள் அனைத்தும் அழிந்துவிடும்.

11. ‘நரகம் கொழுந்துவிட்டு எரிக்கப்படும்போது. (12)’ குற்றவாளிகளை வரவேற்கும் பொருட்டு.

12. ‘சொர்க்கம் அருகே கொண்டுவரப்படும்போது. (13)’ நல்லவர்களுக்கு அதன் இன்பங்கள் அருகில் கொண்டுவரப்படும்.

‘ஒவ்வொரு மனிதனும் தான் கொண்டுவந்ததை அறிந்துகொள்வான். (14)’ இந்த வசனங்கள் மறுமை நிலைபெறுவதற்கு முன்னால் நிகழும் நிகழ்வுகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றன. மனிதர்கள் அவர்களின் இருப்பிடங்களில் ஒன்றுசேர்க்கப்படுவார்கள்.

சூரிய குடும்பத்தில் உள்ள நட்சத்திரங்களைவிட இந்தப் பூமி மிகவும் சிறியது என்பதையும் சூரியனும் அதன் குடும்பமும் இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் சாதாரண பொருள்கள்தான் என்பதையும் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். அவ்வாறு இருந்தும் பூமி, அர்ஷை சுமப்பவர்கள் யாருக்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கோருவார்களோ அத்தகைய மக்களையும் கொண்டுள்ளது. அவர்கள் இறைவனின் அருட்கொடைகளால் சூழப்பட்ட மக்கள். ஆனாலும் அல்லாஹ்வுடனான மனிதனின் தொடர்பு ஆட்டம் காணக்கூடியதாகவும் அவனுடைய செயல்பாடு நன்றிகெட்டத்தனமாகவும் உள்ளது.

இந்த அத்தியாயத்தில், குர்ஆன் உண்மையான வேதம் என்பதற்கும் முஹம்மது மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் அல்லாஹ்விடமிருந்து அவர்களிடம் வந்த அருட்கொடையாகவும் இருக்கிறார் என்பதற்கும் தன் கட்டளையால் வசப்படுத்தப்பட்டுள்ள நட்சத்திரங்களைக் கொண்டு அல்லாஹ் சத்தியம்செய்கிறான்:

பின்னே விலகிச்செல்பவற்றின் மீதும் மறைந்துசெல்லக்கூடிய நட்சத்திரங்களின் மீதும் விடைபெற்றுச் செல்லும் இரவின் மீதும் உதயமாகும் காலைப் பொழுதின் மீதும் நான் சத்தியம்செய்கிறேன்.

உண்மையில் இது கண்ணியம்மிக்க தூதர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட வாக்காகும். (15-19)

வஹீயின் மகத்துவம் பிரபஞ்சத்தின் மகத்துவத்தால் சத்தியமிட்டுக் கூறப்பட்டுள்ளது. இரண்டும் அல்லாஹ்வை அறிவிக்கக்கூடிய சான்று களாகும். ஒன்று மௌனமான சான்று. மற்றொன்று பேசக்கூடிய சான்று.

இந்தக் குர்ஆன் மட்டுமே பூமிக்கும் மற்ற கோள்களுக்கும் மத்தியில், அவற்றுக்கும் அவற்றின் மகத்தான படைப்பாளனுக்கும் மத்தியில் காணப் படும் ஆழமான தொடர்பை உணர்த்தக்கூடிய ஒரே வேதமாகும்.

அத்தியாயம் ஜிப்ரீலைக் குறித்தும் பேசுகிறது. அவர் அல்லாஹ்வுக்கு நெருக்கமான, நம்பிக்கைக்குரிய வானவர் என்பதைத் தெளிவுபடுத்து கிறது. 'அவர் வலிமைமிக்கவர்; அரியணையுடையவனிடம் உயர்மதிப்பு பெற்றவர். அங்கு அவரது கட்டளை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவர் நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கிறார். (20,21)' அவர்தான் முஹம்மது பெற்ற வஹீயைச் சுமந்துகொண்டு வந்தார். நபி அது கூறும் பண்புகளால் தம்மை அலங்கரித்துக்கொண்டார். அதனைக் கொண்டு நிராகரிப்பா ளர்களையும் வழிகேடர்களையும் எதிர்த்துப் போராடினார். அதனைக் கொண்டே உலகின் கிழக்குப் பகுதிகளையும் மேற்குப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஓர் அரசை நிறுவினார்.

இந்த அத்தியாயம் ஆரம்பத்தில் அருளப்பட்ட அத்தியாயமாக இருந் தாலும் இஸ்லாத்தின் உலகளாவிய தன்மையை நிறுவுகிறது. மக்காவில் அதனை நிராகரித்த சிறு கூட்டம் அதற்குத் தடையாக இருந்தது. 'ஆகவே, நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? இதுவோ உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அறிவுரையே ஆகும். இது உங்களில் நேர்வழியில் நடக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் உரியது. (26-28)'

அடியான்மீது கடமை நல்ல விதைகளை விதைப்பது. விரைவில் அல்லாஹ் அவன் விதைத்ததை முளைக்கச்செய்வான். ஆப்பிள் விதைத்த இடத்தில் வெங்காயத்தை அவன் முளைக்கச்செய்ய மாட்டான்.

❖ ❖ ❖

அத்தியாயம் 82

# அல்இன்ஃபிதார்

(பிளந்துவிடுதல்)

*இந்த உலக வாழ்க்கையினூடே மனிதனுக்குக் கூறப்படுகிறது: 'நீ உனக்கு மேலே பார். கருணைமிக்க இறைவனின் படைப்பில் எவ்வித குறைபாட்டையும் நீ காண மாட்டாய். (67:3)' அதில் எவ்வித குறைபாடும் பிளவும் இல்லை. வானம் முழுமையாக இணைக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. நட்சத்திரங்கள் நிற்காமல் சீராக இயங்கிக்கொண்டிருக்கின்றன.*

*ஆனால், மறுமை நிலைபெறும்போது ஒவ்வொரு பொருளும் மாறி விடும். 'வானம் பிளந்துவிடும்போது, நட்சத்திரங்கள் உதிர்ந்து விடும் போது, கடல்கள் பொங்கிவழியும்போது, அடக்கத் தலங்கள் திறக்கப் படும்போது, ஒவ்வொரு மனிதனும் தான் முன்னர் செய்தவற்றையும் செய்யாமல் விட்டவற்றையும் அறிந்துகொள்வான். (1-5)'*

*பிரபஞ்சம் பிளவுகளால் நிரம்பிவிடும். நட்சத்திரங்கள் உதிர்ந்துவிடும். கடல்கள் கரைகளைக் கடந்து பொங்கிவழியும். அடக்கத் தலங்களில் உள்ளவர்கள் வெளியேறுவதற்காகத் தயாராக இருப்பார்கள். அவர்கள் நெருக்கடியையும் பதற்றத்தையும் உணர்வார்கள்.*

*இங்கு நாம் கவலையில் ஆழ்த்தும் ஒரு கண்டிப்பைச் செவியுறுகிறோம்.*

> *மனிதனே, கொடையாளனான உன் இறைவனைக் குறித்து உன்னை ஏமாற்றியது எது? அவனே உன்னைப் படைத்து, உன் உறுப்புகளைச் சீராக்கி, உன்னைப் பொருத்தமாக அமைத்தான். அவன் நாடிய வடிவத்தில் உன்னை ஒருங்கிணைத்து உண்டாக்கினான். (6-8)*

*கடந்துவிட்ட நேற்றைய தினத்தில் நீ என்ன செய்தாய்? நிரந்தரமான எதிர்காலத்துக்காக நீ எதை முற்படுத்தியிருக்கிறாய்?*

*சத்தியத்தின் அறிவுரைகளைப் பின்பற்றுவது மனிதனுக்கு மிக இலகு வானதாகும். ஆனாலும் அவன் தன் மனஇச்சைகளின் பக்கமே விரை கிறான். ஜிஹாதோ தொழுகையோ அவனுக்குக் கடமையாக்கப்பட் டால் பின்வாங்கவும் சோம்பேறித்தனம் செய்யவும் செய்கிறான்.*

*மறுமை வாழ்க்கை அவனுக்கு முன்னால் எதிர்பாராத துன்பமாக வந்துநிற்கும். 'எனினும் நீங்கள் தீர்ப்புநாளை மறுக்கிறீர்கள். நிச்சயமாக உங்கள்மீது கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கண்ணியமான எழுத்தர்கள். நீங்கள் செய்வதையெல்லாம் அவர்கள் அறிவார்கள். (9-12)' பதிவுசெய்யக்கூடிய வானவர்கள் தங்களின் பதி வேடுகளில் எல்லாவற்றையும் பதிவுசெய்கிறார்கள். அப்போது மனிதன் எவ்வித கூடுதல்குறைவுமின்றித் தான் செய்த செயல்களையும் செய் யாமல் விட்டவற்றையும் காண்பான். பின்னர், படைப்புகள் அனைத்தும் தங்களுக்குத் தயார்செய்யப்பட்டுள்ள இருப்பிடங்களை நோக்கிச் செல் லும். 'நிச்சயமாக நல்லவர்கள் சுவன இன்பத்தில் திளைத்திருப்பார்கள். தீயவர்கள் நரகத்தில்தான் இருப்பார்கள். (13,14)'*

❖ ❖ ❖

அத்தியாயம் 83

# அல்முதஃப்பிஃபீன்

(குறைவுசெய்தல்)

*அல்இன்ஃபிதார் என்ற அத்தியாயத்துக்குப் பிறகு இடம்பெறும் இந்த அத்தியாயம் அதனை முழுமைப்படுத்தக்கூடியதாகவும் செயலுக்கும் கூலிக்குமான தொடர்பைத் தெளிவுபடுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. செயலுக்கும் கூலிக்கும் மத்தியிலான தொடர்பைப் பிரிப்பது சாத்திய மற்றதாகும். முஸ்லிம்கள் பலவீனமாக இருந்த காலத்தில்தான் அவர் களின் பார்வை இதனோடு முரண்பட்டது. மனிதர்களில் தங்களின் தேவைகளை மட்டுமே உணரும் அகந்தையுடையோர் இருக்கவே செய் கிறார்கள். தங்களின் கோரிக்கை தவறானதாக இருந்தாலும் அதனை நிறைவேற்றியே தீர வேண்டும் என்று விரும்பும் அவர்கள் மற்றவர் களின் கோரிக்கை சரியாக இருந்தாலும் அதனை நிறைவேற்ற மாட்டார் கள். இத்தகைய மனிதர்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் காணப்படத் தான் செய்கிறார்கள். தங்கள் ஆசைகளைத் தவிர வேறு எதையும் அறியாத மிருகங்கள் அவர்கள்.*

*அதன் ஒரு வடிவம்தான் அளவையில் மோசடிசெய்வது. அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்கள் மக்களிடம் அளந்து வாங்கும்போது நிறைவாக வாங்குகிறார்கள். ஆனால், மற்றவர்களுக்கு அளந்தோ நிறுத்தோ கொடுக் கும்போது குறைத்துவிடுகிறார்கள். (2,3)'*

*இத்தகைய நடத்தை வாழ்க்கையின் பல்வேறு விவகாரங்களில் வெளிப் படுகிறது.*

*அதே போன்று, இப்படியும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் வைத்திருக்கும் பொருள்களுக்குப் பெரும் மதிப்பை அளிக்கிறார்கள். ஆனால், மற்றவர்களின் பொருள்களுக்கு எந்த மதிப்பும் அளிக்க மாட்டார்கள். எந்த விதமான சரியான நிலைப்பாடுமின்றி வெறுமனே*

சுயநலனை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட இத்தகைய முரண்பாடான, அநியாயமான உணர்வுகள் மனித வாழ்க்கையின் ஒழுங்குக்கு முரணானவை.

மறுமையை நம்பாதோருக்கு அவர்களின் செயல்களை நாம் அழகாக்கிக் காட்டியுள்ளோம். ஆகவே அவர்கள் தடுமாறித் திரிகிறார்கள். அவர்களுக்கு மோசமான தண்டனை உண்டு. அவர்கள் தாம் மறுமையில் பெரும் இழப்புக்குரியவர்கள். (27:4,5)

அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையும் மறுமையின் மீதான நம்பிக்கையும் இதுபோன்ற இழிவான பண்புகளை விட்டு மனிதனைத் தடுக்கிறது. அது கரங்களை வரம்புமீறாமல், இச்சைகளை எல்லைமீறாமல், உள்ளங்களை அநியாயம் இழைக்காமல் கட்டுக்குள் வைத்திருக்கிறது. ஆகவே அல்லாஹ் கூறுகிறான்: 'ஒரு மாபெரும் நாளில் அவர்கள் எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா? அந்நாளில் மனிதர்கள் அனைவரும் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனுக்கு முன்னால் நிற்பார்கள். (4-6)'

மனிதர்களின் எதிர்காலம் இறைவனிடத்தில் அவர்களின் நாவிலிருந்து வார்த்தை தவறுவதைக் கொண்டோ பாதையில் அவர்களுக்கு ஏற்படும் சறுக்கல்களைக் கொண்டோ நிர்ணயிக்கப்படாது. அது வரையறுக்கப்பட்ட வழிமுறைகளின் மூலம், கட்டுப்படுத்தப்பட்ட பழக்கங்களின் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. நம்பிக்கையாளன் தவறிழைக்கலாம். அதிலிருந்து அவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளலாம். இழிவான வாழ்க்கைக்காகத் திட்டமிடப்பட்ட வழிமுறைதான் அவனை அழிவில் ஆழ்த்திவிடும். ஹதீஸில் கூறப்பட்டுள்ளது: 'ஓர் அடியான் தவறு செய்தால் அவனுடைய உள்ளத்தில் ஒரு கரும்புள்ளி விழுந்துவிடுகிறது. அவன் அதிலிருந்து வெளியேறி பாவமன்னிப்பு கோரிவிட்டால் அவனுடைய உள்ளம் தூய்மையாகி விடுகிறது. அவன் மீண்டும் மீண்டும் தவறு செய்தால் அந்தக் கரும்புள்ளிகள் அவனுடைய உள்ளத்தை மிகைத்து விடுகின்றன.' இதைத்தான் அல்லாஹ் உள்ளங்களில் படியும் துரு என்று கூறுகிறான். 'அவ்வாறன்று! மாறாக, அவர்களது செயல்கள் அவர்களின் உள்ளங்களில் துருவாகப் படிந்துவிட்டன. நிச்சயமாக அவர்கள் அந்நாளில் தம் இறைவனைவிட்டும் மறைக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் நரகத்தில் நுழைவார்கள். (14-16)' ஹசன் அல்பஸ்ரீ கூறுகிறார், 'இவை அடுத்தடுத்து செய்யப்படும் பாவங்களாகும். இதனால் உள்ளம் குருடாகி மரணமடைந்துவிடுகிறது.'

கீழ்மைகளில் உழல்பவர்கள் புழுப்பூச்சிகளைப் போன்றே வாழ்கிறார்கள். வானத்தின் கதவுகள் அவர்களுக்குத் திறக்கப்படாது. அவர்கள்

உன்னதத்தை அடைய முயலவில்லை. பிறகு எப்படி உயர்வடைவார்கள்? 'நிச்சயமாகப் பாவிகளின் பதிவேடு சிஜ்ஜீனில் இருக்கும். சிஜ்ஜீன் என்னவென்று உமக்குத் தெரியுமா? அது ஒரு எழுதப்பட்ட பதிவேடாகும். மறுப்போருக்கு அந்நாளில் கேடுதான். (7-10)'

யார் இறையச்சத்தையும் தூய்மையையும் கடைப்பிடிக்கும் பொருட்டுச் சிரமங்களைத் தாங்கிக் கொள்கிறார்களோ, யார் சத்தியத்துக்கு உதவிசெய்து அதனால் ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டார்களோ அவர்களின் நிலை வேறு விதமாக இருக்கும்.

> அவ்வாறில்லை. நிச்சயமாக நல்லோர்களின் பதிவேடு இல்லிய்யீனில் இருக்கும். இல்லிய்யீன் என்னவென்று உமக்குத் தெரியுமா? அது எழுதப்பட்ட ஒரு பதிவேடாகும். நெருக்கமான வானவர்கள் அதனைப் பாதுகாக்கிறார்கள். நிச்சயமாக நல்லவர்கள் பேரின்பத்தில் இருப்பார்கள். அவர்கள் இருக்கைகளில் சாய்ந்தவர்களாகப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்களின் முகங்களில் இன்பத்தின் பொலிவை நீர் கண்டுகொள்வீர். (18-24)

ஆரம்பத்தில் இருந்த முஜாஹிதுகள் உண்மையின் ஒளியால், கொள்கையின் கண்ணியத்தால் தங்களை அலங்கரித்துக் கொண்டார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக, போதுமான ஆயுதங்களைப் பெறாதவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அல்லாஹ் இந்தப் பிரகாசமான முடிவை வெகுமதியாக வழங்கினான். பரிகாசத்தையும் துன்பங்களையும் பொறுத்துக்கொண்டதன் காரணமாக உண்மையான இருக்கையையும் முத்திரையிடப்பட்ட உயர்வகை பானத்தையும் அவர்களுக்கு வழங்கினான்.

> நிச்சயமாகக் குற்றவாளிகள் நம்பிக்கையாளர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அவர்களைக் கடந்து செல்லும்போது கண்களால் சாடை காட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பும்போது பரிகாசம் செய்தவர்களாகத் திரும்புகிறார்கள். (29-31)

இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட காட்சியை நாம் காணலாம். இறைமறுப்பாளர்கள் நம்பிக்கையாளர்களைப் பார்த்து பரிகாசம்செய்கிறார்கள். தங்களின் சபைகளில் அவர்களைப் பற்றிக் குறை கூறுகிறார்கள்.

முன்னர் இந்த நம்பிக்கையாளர்கள் சுதந்திரமான அறிவையும் உயர்ந்த உள்ளத்தையும் கொண்ட தலைமுறையினராக இருந்தார்கள். அவர்கள் போர்க்களங்களிலும் வியாபாரச் சந்தைகளிலும் சுலைமானிடம் இருந்த

*ஜின்களைப் போன்று இருந்தார்கள். சோதனைக்குப் பிறகு அல்லாஹ் அவர்களுக்கு உதவிசெய்தபோது அவர்கள் நாகரிகத்தாலும் பொலிவாலும் உலகை நிரப்பினார்கள்.*

*பின்னர் வந்த முஸ்லிம்கள் தங்கள் தந்தையரின் பிரபல்யத்தில் வாழும் பெரும் ஆளுமைகளின் பிள்ளைகளைப் போன்று ஆகிவிட்டார்கள். அவர்கள் இஸ்லாத்தைக் கொண்டு தங்களைத் தூய்மைப்படுத்தவும் இல்லை. அதனைக் கொண்டு உயரவும் இல்லை.*

*உண்மையில் உளப்பூர்வமான அழைப்பாளர்கள் இரு புறங்களிலிருந்தும் போரிடுகிறார்கள். அவர்கள் எந்தப் புறத்திலிருந்து வெளிப்படுகிறார்களோ அது அவர்கள் முன்னோக்கிச் செல்லும் இலக்கைவிடக் கண்ணியமானதாக இருக்காது.*

❖ ❖ ❖

அத்தியாயம் 84

# அல்இன்ஷிகாக்

(பிளந்துவிடுதல்)

‘வானம் பிளந்துவிடும்போது, அது தன் இறைவனின் கட்டளைக்கு அடிபணியும். இதுதான் அதற்கு ஏற்றதாகும். (1,2)’ நாம் நமக்கு மேல் இருக்கும் வானத்தை நீலமான முகடாகக் காண்கிறோம். அதன் அடுக்கு கள் குறித்தோ அதில் வசிப்பவர்கள்குறித்தோ அங்குள்ள வாழ்க்கையின் இயல்புகுறித்தோ நமக்கு எதுவும் தெரியாது. அல்லாஹ் நமக்கு அறி விக்கிறான், அந்த வானம் விரைவில் பிளந்துவிடும். அவன் அறிவிக்கும் செய்தி உண்மையாகும். மறுமை நிலைபெறுவதற்கு முன்னர் அது வெளிப் படும். அதே போன்று, பூமியும் தனக்குள் இருக்கும் விலைமதிப்பு மிக்க, மட்டமான அனைத்தையும் வெளித்தள்ளிவிடும். படைப்பின் ஆரம் பத்தில் வானத்திடமும் பூமியிடமும் கூறப்பட்டது: ‘நீங்கள் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் வந்துவிடுங்கள். அவையிரண்டும் நாங்கள் விரும்பியே வந்துவிட்டோம் என்று கூறின. (41:11)’

பிரபஞ்சம் அழியும்போது வானமும் பூமியும் அவனுடைய நாட்டத் துக்குக் கட்டுப்படும். அந்த இரண்டைக் குறித்தும் அல்லாஹ் கூறு கிறான்: ‘அது தன் இறைவனின் கட்டளைக்கு அடிபணியும். இதுதான் அதற்கு ஏற்றதாகும். (2)’ கட்டுப்படுவதைத் தவிர அதற்கு வேறு வழி என்ன இருக்கிறது?

‘மனிதனே, நீ கடும் முயற்சிசெய்து உன் இறைவனின் பக்கம் சென்று கொண்டிருக்கிறாய். ஆகவே, நீ அவனைச் சந்திப்பாய். (6)’ இந்த உலகம் செயற்களமாகவும் கடுமையான சோதனைக் களமாகவும் இருக்கிறது. மனிதன் இரண்டு வழிகளில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டும்.

உனக்கு முன்னால் இரண்டு வழிகள் இருக்கின்றன. எந்த வழியை நீ தெரிவுசெய்கிறாய்? இரண்டு வழிகளும் வெவ்வேறானவை. ஒன்று நேரான வழி. மற்றொன்று கோணலான வழி.

*யாருடைய பதிவேடு அவரது வலக்கையில் கொடுக்கப்படுமோ அவர் எளிதான முறையில் விசாரிக்கப்படுவார். தம் குடும்பத் தாரிடம் மகிழ்ச்சியுடன் திரும்பிச்செல்வார். ஆனால், யாருடைய பதிவேடு அவரது முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்படுமோ அவர் மரணத்தை அழைப்பார். நரகில் நுழைவார்.* (7-12)

*இங்கு முதுகுக்குப் பின்னால் என்பது தன் முதுகுக்குப் பின்னாலி ருந்து இடக்கையால் அவன் பெறுவதைக் குறிக்கும். இறைவன் அவனுடைய முகத்தைப் பார்ப்பதைக்கூட வெறுப்பான். இவ்வுலகில் அவன் இறைவனின் இருப்பையே நிராகரித்துக்கொண்டிருந்தான், அல்லவா? அழியக்கூடியவற்றைத் தவிர வேறு எதையும் அவன் அறிந்திருக்கவில்லை. 'ஏன் இல்லை. அவருடைய இறைவன் அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.* (15)*' அவரது செயல்கள் அனைத்தையும் அறிந்துகொண்டிருந்தான்.*

*இந்த அத்தியாயத்தில் அந்திநேர செம்மையைக் கொண்டு சத்தியம் செய்யப்பட்டுள்ளது. 'இரவின் மீதும் அது உள்ளடக்கியவற்றின் மீதும் முழுமையடையும் நிலவின் மீதும் நான் சத்தியம்செய்கிறேன். நிச்சய மாக நீங்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்ல வேண்டி யுள்ளது.* (17-19)*' அஸருக்குப் பிறகு சூரியனின் மறைவை அறிவிக்கக் கூடியதுதான் அந்திநேர செம்மையாகும்.*

*இதுகுறித்து எனக்கு ஒரு புரிதல் வெளிப்பட்டுள்ளது. அது சரியாக இருந்தால் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அது தவறாக இருந்தால் அது என்னையே சாரும். நான் அல்லாஹ்விடம் அதற்காக மன்னிப்பு கோருகிறேன். இங்கு அந்திநேர செம்மை என்பது முஸ்லிம்களின் வர லாற்றில் காணப்படும் கடினம், இலகு, தோல்வி, உதவி ஆகியவற்றைக் குறிக்கிறது என்று கருதுகிறேன்.*

*திர்மிதீயில் அபூசயீது அல்ஃகுத்ரீ அறிவிக்கும் பின்வரும் ஹதீஸைப் படித்துக்கொண்டிருக்கும்போது எனக்கு இந்த எண்ணம் தோன்றியது: 'அல்லாஹ்வின் தூதர் எங்களுக்கு அஸர் தொழுகையை நடத்தினார்கள். பின்னர் எழுந்து உரையாற்றினார்கள். மறுமைநாள்வரை வரக்கூடிய எந்தச் செய்தியையும் விடாமல் எங்களுக்கு அறிவித்தார்கள். அதனை மனனம்செய்தவர் மனனம்செய்துகொண்டார். மறந்தவர் மறந்துவிட்டார்.'*

*அந்த உரையில் அவர்கள் கூறியது: 'இந்த உலகம் பசுமையானதும் இனிமையானதும் ஆகும். இங்கு அல்லாஹ் உங்களைப் பிரதிநிதிகளாக ஆக்கியுள்ளான், நீங்கள் எப்படிச் செயல்படுகிறீர்கள் என்பதை அவன்*

*பார்ப்பதற்காக.' பின்னர் நபியவர்கள் கூறினார்கள், 'மனிதர்கள் மீதான அச்சம் எந்த மனிதனையும் சத்தியத்தைக் கூறவிடாமல் - அதனை அறிந் தால் - தடுக்க வேண்டாம்.' நபியவர்கள் தொடர்ந்து உரையாற்றினார் கள். அபூசயீது அல்ஃகுத்ரீ கூறுகிறார், 'நாங்கள் சூரியனை நோக்கித் திரும்பினோம். அப்போது பகல் இன்னும் முடிவடையாமல் இருந்தது.' நபியவர்கள் கூறினார்கள், 'உங்களின் இந்த நாளில் மீதமுள்ள பகலைப் போலத்தான் இந்த உலகில் நாள்கள் உங்களுக்கு மீதமிருக்கின்றன.'*

*குறைவான இந்தக் காலகட்டம்தான் நம்முடைய வரலாறு. எத்தனை அரசுகள் வெளிப்பட்டுள்ளன, இன்னும் எத்தனை மீதமிருக்கின்றன! நாம் இந்த உலகத்தின் முடிவுத் தறுவாயில் இருக்கிறோம். இங்கு ஒரு முக்கியமான கேள்வி இருக்கிறது: நாம் நம்முடைய தூதுத்துவப் பணியை நிறைவேற்றிவிட்டோமா? நம்மைவிட மனிதர்களுக்கு நீதி வழங்கினோமா? நாம் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். நாம் படிப்பினைபெற்றோமா? 'அவர்களுக்கு என்னவாயிற்று? நம்பிக்கை கொள்வதில்லையே! அவர் களிடம் குர்ஆன் எடுத்துரைக்கப்பட்டால் அவர்கள் இறைவனுக்குச் சிரம்பணிவதில்லையே! மாறாக, நிராகரிப்பாளர்கள் மறுக்கிறார்கள்.* (20,21)' *முஸ்லிம்கள் தங்களின் வேதம்குறித்தே கேள்வி கேட்கப்படு வார்கள். ஏன் அவர்கள் அதனைக் கொண்டு எழவில்லை? அதனை அழகிய வடிவில் மக்களிடம் எடுத்துரைக்கவில்லை?*

❖ ❖ ❖

அத்தியாயம் 85

# அல்புறூஜ்

(கோள்கள்)

*‘கோள்களுடைய வானத்தின் மீதும் வாக்களிக்கப்பட்ட அந்த நாளின் மீதும் சத்தியமாக. (1-2)’ அது விசாரணை நாளாகும். ‘சாட்சிகள் மீதும் சாட்சி கூறப்படுவோர்மீதும் சத்தியமாக. (3)’ அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் தூதர்களும் மனிதர்களின் மீது சாட்சிகளாக இருக்கிறார்கள்.*

*‘அகழ்வாசிகள் அழிக்கப்பட்டார்கள். (4)’ அவர்கள் சபிக்கப்பட்டார்கள். அழிக்கப்பட்டார்கள். அது நெருப்பால் நிரப்பப்பட்ட பெரும் குழியாக இருந்தது. முஸ்லிம்களை எரிப்பதற்காக அதில் அவர்கள் போட்டார்கள். மனித வரலாற்றில் சத்தியத்துக்காக உயிர் நீத்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அநியாயக்காரர்களின் அடக்குமுறைக்கு ஓர் எல்லை கிடையாது.*

*நான் அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்த சில மனிதர்களைப் பார்த்து அவர்கள் இந்த முடிவை அடைவதற்காகவே படைக்கப்பட்டார்கள் என்பதை அறிந்துகொண்டேன். அவர்கள் அசத்தியத்தையும் அசத்திய வாதிகளையும் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. சத்தியத்துக்காகத் தங்களின் உயிரைக்கூட இழப்பதற்கு அவர்கள் தயங்குவதில்லை. அவர்களில் ஒருவர் மரணமடைவதற்கு முன்னால் இவ்வாறு உரையாற்றுவதை நான் செவியேற்றேன்: ‘சத்தியத்துக்காக உயிர் துறப்பது நிலைத்திருப்பதாகும்.’ அரை நூற்றாண்டுக்கு முன்னால், ஃபலஸ்தீன் போர்க்களத்துக்குச் செல்வதற்கு முன்னால் சில இளைஞர்கள் என்னிடம் வந்து பிரியா விடைபெற்றார்கள். அவர்கள் சென்றார்கள். ஆனால் திரும்பி வரவில்லை. அவர்களின் வீரம் விடைபெற்றுச் செல்பவனின், தங்கியிருப்பவனின் பேச்சாக இருந்தது.*

*ஒரு துறவியிடம் இருந்த சிறுவனின் செய்தியைப் படித்தேன். ஈமானைப் பரப்புவதற்காக அவன் மிகச் சிறந்த வீரத்தை வெளிப்படுத்தினான்.*

அவன் கொல்லப்பட வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தன்னைக் கடவுள் என்று அழைத்துக்கொண்ட அரசன் தண்டனையை நிறைவேற்று வதற்காகச் சில மனிதர்களுடன் அவனை அனுப்பினான். அந்தச் சிறுவன் அரசனிடம் திரும்பிவந்து, 'உன்னுடைய ஆள்களிடமிருந்து என் இறைவன் என்னைக் காப்பாற்றிவிட்டான்' என்று கூறினான். அரசன் வேறு சிலருடன் அவனை அனுப்பினான். அவர்களிடமிருந்தும் அவன் தப்பி வந்து விட்டான். மீண்டும் மீண்டும் செய்த அரசனின் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. பின்னர் சிறுவன் அரசனிடம் கேட்டான், 'நீ என்னைக் கொல்ல விரும்புகிறாயா?' அதற்கு அவன், 'ஆம்.' என்று கூறினான். அதற்கு அந்தச் சிறுவன், 'இந்த நகரவாசிகளை ஒன்றுகூட்டு. அவர்களுக்கு முன்னால் என்னைத் தூக்கிலிடு. இந்தச் சிறுவனுடைய இறைவனின் பெயரைக் கொண்டு என்று அம்பை விடுவதற்கு முன்னால் கூறு' என் றான். அரசனும் அவ்வாறே அந்தச் சிறுவனைக் கொலைசெய்தான். அவனுடன் தன்னைக் கடவுள் என வாதிட்டுக்கொண்டிருந்த அரசனின் மூடநம்பிக்கையும் அழிந்துபோனது. தன் வாதத்தைத் தானே தகர்த்து விட்டேன் என்பதை மூடன் அறிந்துகொண்டான். வரலாற்று ஆய்வாளர் கள் கூறுகிறார்கள், 'நம்பிக்கையாளர்களை எரிப்பதற்காக ஒரு பெரும் அகழி தோண்டப்பட்டது.' 'அதில் கொழுந்துவிட்டு எரியும் எரிபொருளின் நெருப்பு இருந்தது. அதன் மீது அவர்கள் அமர்ந்து நம்பிக்கையாளர் களுக்குத் தாம் செய்துகொண்டிருந்த செயல்களைப் பார்த்துக் கொண்டி ருந்தார்கள். யாவற்றையும் மிகைத்தவனும் புகழுக்குரியவனுமாகிய அல்லாஹ்வின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டார்கள் என்பதற்காகவே இவர்கள் அவர்களைப் பகைத்தார்கள். (5-8)'

அல்லாஹ்வின் பாதையில் எத்தனையோ மனிதர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் மறுமையின் வீட்டைச் சம்பாதித்து விட் டார்கள். மக்காவில் இருக்கின்ற குழப்பவாதிகள் தங்களின் குற்றச் செயல்களை விட்டுவிடும் பொருட்டு அல்லாஹ் அவர்களை எச்சரிக் கிறான். 'யாரெல்லாம் நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களை யும் துன்புறுத்தி, பின்னர் பாவமன்னிப்பு கோரவில்லையோ அவர்களுக்கு நரக வேதனையும் சுட்டெரிக்கும் தண்டனையும் உண்டு. (10)'

செயலுக்கேற்பவே கூலி வழங்கப்படும். பின்னர் அத்தியாயம் மகத் துவம்மிக்க, பரிபூரணமான பண்புகளைக் குறிப்பிடுகிறது, அஞ்சுபவர் கள் அஞ்சிக்கொள்வதற்காகவும் பாவமன்னிப்பு கோருபவர்கள் பாவ மன்னிப்பு கோருவதற்காகவும். 'நிச்சயமாக உம் இறைவனின் பிடி கடுமையானது. அவனே படைப்பை ஆரம்பம்செய்கிறான். அவனே மீண்டும் படைப்பான். அவன் பெரும் மன்னிப்பாளன்; அன்பாளன்; உயர்வான அரியணையின் அதிபதி. (12-15)'

*அல்லாஹ்வின் இந்தப் பண்புகள் நினைவூட்டப்படுவதுடன் முந்தைய அநியாயக்காரர்களுடன் அவன் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதைப் பற்றிய சுருக்கமான குறிப்பும் இடம்பெறுகிறது. அவன் அவர்களுக்குச் சிறிது காலம் அவகாசமளித்தான். பின்னர் யாவற்றையும் மிகைத்தவன், வல்லமைமிக்கவனின் பிடியாக அவர்களைப் பிடித்துக்கொண்டான். 'இவ்வுலகில் நாம் அவர்கள்மீது சாபத்தைத் தொடரச் செய்தோம். மறுமைநாளில் அவர்கள் அருவருப்பானவர்களாக இருப்பார்கள்.* (28:42)' *இங்கு அநியாயக்காரர்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள படைகள் என்ற வார்த்தை கவனத்துக்குரியது. 'ஃபிர்அவ்ன் மற்றும் ஸமூதுடைய படைகளைப் பற்றிய செய்தி உம்மிடம் வந்ததா?* (17,18)' *அநியாயக்காரர்களின் ஆட்சி, ஈமானும் நம்பிக்கையாளர்களும் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்படும் ஆட்சியாக இருக்கிறது. இராணுவ வலிமையுடன் கூடிய அது மார்க்கத்துக்குப் பெரிய அளவில் தீங்கினை ஏற்படுத்தக்கூடியது.*

❖ ❖ ❖

அத்தியாயம் 86

# அத்தாரிக்

(விடிவெள்ளி)

*வானத்தின் மீதும் இரவில் தோன்றக்கூடியதன் மீதும் சத்தியமாக. இரவில் தோன்றக்கூடியது என்னவென்று உமக்குத் தெரியுமா? அது மின்னும் நட்சத்திரம்.* (1,2)

*வானத்தில் பூமியைப் போன்று நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவை எவ்வித ஒளியும் இல்லாமல் இருள் சூழ்ந்தவையாக இருக்கின்றன. அதில் சூரியனைப் போன்று பிரகாசிக்கக்கூடிய நட்சத்திரங்களும் இருக்கின்றன. 'அத்தாரிக்' அவற்றுள் ஒன்றாக இருக்கலாம். அது சூரியன் மறைந்தவுடன் வெளிப்படுவதால் அறபுகள் அதற்கு 'சாட்சி கூறக்கூடியது' என்று பெயரிட்டிருந்தார்கள். இது மின்னக்கூடிய, வழிகாட்டக்கூடிய நட்சத்திரக் கூட்டங்களையும் குறிக்கலாம். அதனைக் கொண்டு சத்தியம் செய்த பிறகு அல்லாஹ் கூறுகிறான்: 'கண்காணிப்பாளர் இல்லாத எந்த உயிரும் இல்லை. (4)' ஒவ்வொரு மனிதனுக்கும் அவனிடமிருந்து வெளிப்படும் செயல்கள் அனைத்தையும் கணக்கிடக்கூடிய பாதுகாவலர்களை நிர்ணயிப்பது மாபெரும் படைப்பாளனுக்கு ஒன்றும் இயலாத காரியம் அல்ல.*

*'மனிதன் தான் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்பதைக் கவனித்துப் பார்க்கட்டும். குதித்து வெளிப்படும் நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான். அது முதுகெலும்புக்கும் நெஞ்செலும்புக்கும் இடையிலிருந்து வெளியாகிறது. (5-7)' மனிதப் படைப்பின் விவரங்கள் உயிரியலில் விளக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன. கருவின் வளர்ச்சி குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற சில மேற்கத்திய அறிஞர்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள படைப்பின் நுணுக்கமான நிலைகளை அறிந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நான் அறிந்தேன். எந்த வேதத்திலும் இதுபோன்று அறியப்படவில்லை.*

*நரம்பு மண்டலத்தோடு இணைக்கப்பட்ட சுரப்பிகளால் கண்காணிக் கப்படக்கூடிய சிறுநீர்க் குழாயிலிருந்து வெளிப்படும் விந்திலிருந்து தான் மனிதப் படைப்பு ஆரம்பமாகிறது என்பதை அறிஞர்களும் பொது மக்களும் அறிந்துவைத்துள்ளார்கள்.*

*இங்கிருந்துதான் ஆரம்பம்! ஆனாலும் மனிதன் தன்னுடைய இருப் பைப் பெற்றபிறகு எதிலிருந்து படைக்கப்படுகிறான்? இந்தப் பூமி வெளிப்படுத்தும் உணவிலிருந்து. அவன் உண்ணும் உணவுகள் அல்லது பருகும் பானங்கள் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் இழுத்துக் கொண்டு வரப்படும் மேகங்களால் நீர் பாய்ச்சப்பட்டு வளர்க்கப்பட்ட தாவரங் களிலிருந்தும் மரங்களிலிருந்தும் வெளிப்படுபவை.*

*மனிதனின் சதை, எலும்பு, முடி என ஒவ்வொரு பகுதியும் இந்தப் பூமியின் பல்வேறு பாகங்களிலிருந்து பெறப்பட்டவை.*

*ஆனாலும் மனிதன் நன்றிகெட்டவனாக இருக்கிறான். அவன் எப்படி யிருந்தாலும் கடினமான விசாரணையின் பக்கம் திரும்பியே தீர வேண் டும். 'எந்த நாளில் மறைவான விசயங்கள் சோதனைக்குள்ளாக்கப் படுமோ அப்போது மனிதனிடம் எந்த வலிமையும் இருக்காது. எந்த உதவியாளனும் இருக்க மாட்டான். (9,10)'*

*அத்தியாயம் பேராற்றல்மிக்கவனின் ஆற்றலை எடுத்துரைத்தவாறு செல்கிறது. நிலம் உழப்படுகிறது. வானம் மழை தருகிறது. தானியங் களும் பழங்களும் அறுவடைசெய்யப்படுகின்றன.*

*பிறக்கும்போது இரண்டு கிலோ அல்லது மூன்று கிலோவாக இருந்த ஆதமின் மகன் பெரும் எடை கொண்டவனாக மாறிவிடுகிறான். தாவரங் களையும் பயிர்களையும் சிந்திக்கக்கூடிய மூளையாக ஆக்கியது யார்? தாவரங்களையும் விலங்குகளையும் மனித உடல்களாக ஆக்கியது யார்? அல்லாஹ்வைத் தவிர வேறு யார்?*

*அவன் ஒன்றுமில்லாமையிலிருந்து, முன்மாதிரியின்றிப் படைப்பு களைப் படைக்கிறான்.*

*முந்தையவர்கள், பிந்தையவர்களில் அறபுகளில் இருக்கின்ற நிராகரிப் பாளர்களைவிட இழிவானவர்களை நான் காணவில்லை.*

*நிச்சயமாக இது தீர்க்கமான சொல்லாகும். இது கேலிக்குரிய சொல் அல்ல. அவர்கள் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். நானும் திட்டம் தீட்டுகிறேன். ஆகவே, நிராகரிப்பாளர்களுக்கு நீர் அவகாச மளிப்பீராக. சொற்ப காலம் அவர்களை விட்டுவிடுவீராக. (13-17)*

❖ ❖ ❖

அத்தியாயம் 87

# அல்அஃலா

(மேலானவன்)

*மிக உயர்வான உமது இறைவனின் பெயரைப் போற்றுவீராக. அவனே படைத்துச் செம்மையாக்கினான். அவனே விதியை நிர்ண யித்து வழிகாட்டினான்.* (1-3)

இங்கு 'உயர்வான' என்பது உயர்வான இடம் அல்ல. அது உயர்ந்த படித்தரத்தைக் குறிக்கிறது. உயர்வு என்ற வார்த்தையின் மூலம் நம் இறைவனின் உன்னதமான கண்ணியத்தையே நாம் வர்ணிக்கிறோம், மடமைத்தனத்தால் ஃபிர்அவ்ன் கூறிய உயர்ந்த இடம் அல்ல. அவன் கூறினான்: 'ஹாமானே, நான் மூசாவின் இறைவனை எட்டிப்பார்ப்ப தற்காகக் களிமண்ணைச் சுட்டு ஒரு உயர்ந்த கட்டடத்தை எனக்காக எழுப்பு ... (28:38)' விண்வெளிக்குச் சென்ற ரஷ்யாவின் தூதன் மடத் தனமாக, 'நான் அங்கு இறைவனைத் தேடினேன். ஆனால் இறைவனை அங்கு காணவில்லை' என்று கூறியதுபோன்றும் அல்ல.

ஒவ்வொரு முஸ்லிமும் மீண்டும்மீண்டும் அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்து இந்த அத்தியாயத்தின் முதல் வசனத்துக்குப் பதிலளித்தவாறு, 'சுப்ஹான றப்பியல் அஃலா - பரிசுத்தமான என் இறைவன் மிக உயர் வானவன்!' என்று கூறுகிறான்.

கருணை மிக்க இறைவன் அரியணையின் மீது நிலைபெற்று விட் டான். அவனுடைய அரியணை படைப்புகள் அனைத்தையும்விட மிக விசாலமானது. ஆனால், காலம் மற்றும் இடத்தின் விவகாரங்கள், பொருள்களின் தனித்தன்மைகள் வேறு வகையான இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. அவை மிகப் பெரியவனும் மிக உயர்ந்தவனுமாகிய அல்லாஹ்வுக்கு உகந்தவை அல்ல.

நீங்கள் ஒரு மனிதரிடம் 'அந்த மனிதரைக் குறித்து அறிவீர்களா?' என்று கேட்டால், 'நான் அவரைச் சந்தித்திருக்கிறேன். அவருடைய அறிவு முதிர்ச்சியும் கண்ணியமும் என்னைக் கவர்ந்துவிட்டது.' என்று அவர் உங்களுக்குப் பதிலளிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

மனிதர்களாகிய நாம், 'அல்லாஹ் உன்னதமான கண்ணியத்தை உடையவன்' என்பதை அறிந்திருக்கிறோம். அவனது ஒளியில் சிறு துளி அவனது உன்னதத்தின் ஒரு பகுதியை நமக்கு வெளிப்படுத்திவிடுகிறது. நம் அறிவு அதனைக் கண்டு வியப்படைகிறது. நாம் அணுவின் இரகசியங்களை அறிவதில் தடுமாறிக்கொண்டிருக்கிறோம். நம்மைவிட்டு மிகவும் தூரமாக இருக்கின்ற மறைவான உலகைக் குறித்து நாம் எவ்வாறு அறிய முடியும்? அதனை ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்தவன் மகத்துவம்மிக்கவன். 'அவர்கள் கூறுவதை விட்டும் அல்லாஹ் மிகத் தூய்மையானவன். (17:43)'

அவன் படைத்தான். பின்னர் செம்மையாக்கினான். ஒவ்வொரு பொருளையும் சிறந்த முறையில் படைத்தான். அவற்றுக்கென ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தினான். அவை அவற்றை மீறாது. அறிவியலாளர்கள் கூறுகிறார்கள், 'நீரின் அளவு குறைவதுமில்லை, கூடுவதுமில்லை. மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், பல்வேறு உயிரினங்கள் ஆகியன நீர் அருந்துகின்றன. ஆனாலும் இந்தப் பெரும் அளவிலான நீர் மீண்டும் கடலைச் சேர்ந்து, பின்னர் ஆவியாகி, மேகங்களாகி மழையாகப் பொழிகிறது. அது குறைவதுமில்லை, கூடுவதுமில்லை.' 'அவனே மேய்ச்சல் பயிர்களையும் வெளியாக்கினான். பின்னர் அவற்றைக் கருத்த, உலர்ந்த குப்பைக் கூளங்களாக்கினான். (4,5)' அதன் பசுமை கருப்பாக மாற்றமடைகிறது. பின்னர், மீண்டும் திரும்பி பசுமையாகிறது. பின்னர், மீண்டும் அது கருப்பாகிறது. இவ்வுலகம் நிலைத்திருக்கும்வரை இவ்வாறு நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

'நாம் உமக்கு ஓதிக்காட்டுவோம். ஆகவே நீர் மறக்க மாட்டீர். (6)' முஹம்மதே, நிம்மதியாக இரும். உம்மைத் தேர்ந்தெடுத்தவன் உம்முடைய பணியை நிறைவேற்றுவதற்கு உமக்கு உதவிசெய்வான். அவன் நிரந்தரமான வேதத்தை உமக்கு அருளியுள்ளான். தூய மார்க்கத்தைக் கொண்டு உம்மை அனுப்பியுள்ளான். 'நாம் உம்மை எளிதான வழியில் அழைத்துச் செல்வோம். அறிவுரை பயனளிக்குமாயின் அறிவுரை வழங்குவீராக. (8,9)' எடுத்துரைப்பது மட்டுமே உம்முடைய பொறுப்பு. யார் நேர்வழியடைகிறாரோ அவர் உம்மைப் பின்பற்றுவார். யார் மடத்தனத்தைத் தேர்ந்தெடுக்கிறாரோ அவர் உம்மை விட்டுவிடுவார். 'ஆனால்,

துர்பாக்கியசாலியோ அதிலிருந்து விலகிக்கொள்வான். அவன் பெரும் நெருப்பில் வீழ்வான். (11,12)'

மனிதனால் உயர்ந்து கண்ணியமடையவும் முடியும். தாழ்ந்து இழிவடையவும் முடியும். செல்வத்திலோ பதவியிலோ அவனுடைய வெற்றி இல்லை. தன் இறைவனை அறிந்து கொண்டே மறுத்துவிட்டு இவ்வுலகைச் சம்பாதிப்பதால் அவனுக்கு என்ன மதிப்பு ஏற்பட்டு விடப் போகிறது? 'தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டவர் வெற்றியடைந்து விட்டார். அவர் தம் இறைவனின் பெயரை நினைவுகூர்ந்து தொழுகையை நிறைவேற்றியவராவார். (14,15)' கவலைக்குரிய விசயம், விரைவாகக் கிடைக்கக்கூடிய இன்பங்கள் மனிதர்களைக் கவர்ந்திழுக்கின்றன. ஆனால், அவர்கள் நாளையின் தேவைகளை விட்டு அலட்சியமாக இருக்கிறார்கள். ஹசன் அல்பஸ்ரீ கூறுகிறார், 'மரணத்தைவிடத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட உண்மையை நான் காணவில்லை.' அது எந்தக் கதவையும் விட்டுவிடாமல் தட்டிவிட்டது. ஆனாலும் அவர்கள் அது இளைஞனையோ முதியவனையோ பறித்துச்செல்லாததைப் போன்று நடந்துகொள்கிறார்கள். 'ஆனால், நீங்கள் இவ்வுலக வாழ்வுக்கே முன்னுரிமையளிக்கிறீர்கள். மறுமையே சிறந்ததும் நிலையானதும் ஆகும். (16,17)'

❖ ❖ ❖

அத்தியாயம் 88

# அல்காஷியா

(மூடிக்கொள்வது)

*'மூடிக்கொள்ளக்கூடியதன் செய்தி உமக்கு வந்ததா? (1)' இது மறுமை நாளின் பெயர்களில் ஒன்று. ஏனெனில், இது சிந்தனைகளை மூடிக் கொள்ளும். மனிதர்களைப் பலவீனப்படுத்திவிடும். அத்தியாயம் அச்ச மூட்டும் பொருட்டும் ஆர்வமூட்டும் பொருட்டும் எச்சரிக்கையையும் வாக்குறுதியையும் கொண்டு தொடங்குகிறது. பின்னர், மனித அறிவை அன்றைய அறபுச் சூழலில் பரவியிருந்த அம்சங்களைக் குறித்து சிந்திக்கத் தூண்டுகிறது. ஒட்டகத்தின் பக்கம், மலைகளின் பக்கம், விசாலமான வானவெளியின் பக்கம் கவனத்தைத் திருப்பி அவற்றி லிருந்து 'அல்லாஹ் ஒருவனே வணக்கத்துக்குத் தகுதியானவன்!' என்பதை நிறுவுகிறது.*

*மனிதர்களிடையே முஸ்லிம் சமூகத்தின் நோக்கத்தை நிர்ணயித்த வாறு அத்தியாயம் நிறைவடைகிறது. அறிவுறுத்துவதும் நினைவூட்டு வதுமே அவர்களின் பணி. மனிதர்கள் தாங்கள் படைக்கப்பட்ட நோக் கத்தை மறந்துவிட்டால் முஸ்லிம்கள் எழுந்து இறை மறுப்புக்கும் குற்றங்களுக்கும் மனிதர்களின் அலட்சியத்துக்கும் எதிராகப் போர்செய்து தங்களின் கடமையை நிறைவேற்ற வேண்டும்.*

*இந்தப் பாதையில், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிரந்தரமான இந்த வேதம் உதவியாக இருக்கும். ஆனால் அவர்களோ இந்த வேதத்தை விட்டுவிட்டார்கள்.*

*அத்தியாயத்தின் ஆரம்பத்தில் வந்துள்ள எச்சரிக்கை, தீயவர்களை அவர்களுக்குக் கவலையைத் தூண்டும் பண்புகளால் வர்ணிக்கிறது. 'அந்த நாளில் சில முகங்கள் இழிவடைந்திருக்கும். அவை உழைத்தவையாக, களைத்துப்போனவையாக இருக்கும். (2,3)' அவை சூடான நீரையும் எவ்வித பயனுமற்ற உணவையும் உண்டு களைத்துப் போனவையாக இருக்கும். இறையச்சமுடையோர் நல்ல நிலையில் இருப்பார்கள். 'அந்த*

நாளில் சில முகங்கள் பொலிவுற்றிருக்கும். தம் உழைப்புக்காகத் திருப்தியடைந்திருக்கும். அவை உன்னதமான சுவனச் சோலையில் இருக்கும். (8-10)'

அறிவுடையோர் அறியாதவற்றைக் குறித்து சிந்தித்துத் தெளிவு பெற்றுக்கொள்வர். 'ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது, வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் பார்க்க வேண்டாமா? (17,18)'

இங்கு 'எவ்வாறு' என்ற வார்த்தை, மனித அறிவு இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளவற்றை ஆராய்ச்சிசெய்து கண்டுபிடிப்பதற்கு விடப்பட்ட அழைப் பாகும்.

திருக்குர்ஆனின் மெய்யியலை விட்டுவிட்டுக் கிரேக்க மெய்யியலில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட நம் முன்னோர்களை நான் கண்டிக்கிறேன். அவர்களில் இந்த ஓட்டையை அடைத்தவர்கள் இருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு.

பின்வரும் வசனத்தில் நாம் சிறிது நேரம் கவனம் செலுத்துவோம்: 'ஆகவே, நீர் நினைவூட்டுவீராக. நீர் நினைவூட்டக்கூடியவர் மட்டுமே. நீர் அவர்களின் கண்காணிப்பாளர் அல்ல. (21,22)' முஸ்லிம்கள் மக்களை அடிமைப்படுத்தி காலனித்துவ நாடுகளை நிறுவுமாறு பணிக்கப்படவில்லை. அவர்கள் மனித அறிவை விடுவிக்கக்கூடிய, மனிதனைப் பரிபூரணத்தின் பக்கம் வழிநடத்திச் செல்லக்கூடிய ஒரு பெரும் அரசை நிறுவுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அரசு ஓர் இனத்தை முன்னிறுத்தக்கூடியதாக, அதன் பரம்பரைப் பெருமையை நிலைநிறுத்தக்கூடியதாக இருக்கக் கூடாது. அது அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்வதற்கான கண்ணியமான ஒரு வடிவமாகும். நாம் புரிந்துகொண்டோமா என்ன?

நிராகரிக்கும் அரசுகள் தம்முடைய இச்சைகளைப் பாதுகாக்கவும் அநியாயத்தைப் பரப்பவும் ஒழுக்கத்துக்கும் தூய்மைக்கும் எதிராகப் போர் தொடுத்துக்கொண்டிருக்கின்றன. நம்பிக்கையாளர்கள் தூய்மையை, ஒழுக்கத்தை, நீதியை, ஈமானிய அழைப்பைப் பாதுகாக்கக் கூடிய அரசை நிறுவ வேண்டியது மிகமிக அவசியமாகும். அதற்காகக் கால அளவு நீண்டுகொண்டே சென்றாலும் அல்லது குறைவாக இருந்தாலும் சரியே. அல்லாஹ்வின் பக்கமே அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. 'நிச்சயமாக அவர்கள் நம் பக்கமே திரும்பி வரவேண்டியுள்ளது. பின்னர் அவர்களை விசாரணைசெய்வது நம் பொறுப்பே ஆகும் (25,26).'

❖ ❖ ❖

அத்தியாயம் 89

# அல்ஃபஜ்ர்

(அதிகாலை)

*‘வைகறையின் மீது சத்தியமாக. (1)’ விலகிச்செல்லும் இருளுடன் தோன்றிவரும் வெளிச்சத்தைக் கொண்டு சத்தியம்செய்யப்படுகிறது. இத்தோடு இன்னும் சில சத்தியங்களும் செய்யப்படுகின்றன. ‘பத்து இரவுகளின் மீது சத்தியமாக. (2)’ குர்ஆன் விரிவுரையாளர்களில் பெரும் பாலோர் இது துல்ஹஜ்ஜின் முதல் பத்து நாள்களைக் குறிக்கிறது என்று கூறுகிறார்கள். அறஃபாவுடைய நாளும் பலியிடுதலுக்குரிய நாளும் அதன் இறுதியாக வருகின்றன. இந்தக் காலகட்டத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்றும் வசதியைப் பெற்றவர்கள் மக்காவுக்குச் செல்கிறார்கள். உலகின் பல பாகங்களிலிருந்தும் பழமையான அந்த வீட்டை நோக்கி வரக்கூடிய அவர்களின் தல்பியா சப்தம் அங்கு கேட்கப்படுகிறது.*

*‘இரட்டை மற்றும் ஒற்றையின் மீதும் செல்கின்ற இரவின் மீதும் சத்தியமாக. (3,4)’ காலத்தைக் கொண்டு செய்யப்படும் இந்தச் சத்தியம் அதற்கு முந்தைய சத்தியங்களோடு இணைக்கப்பட்டுள்ளது. காலம் பிரபஞ்சத்தின் இரகசியங்களில் ஒன்றாகும். அதன் அடையாளங்கள் அறியப்படுகின்றன. அதன் உண்மைநிலை அறியப்படாது.*

*எதற்காக இந்தச் சத்தியங்கள் செய்யப்படுகின்றன? பதில் மறைந்தி ருக்கிறது. இவற்றுக்குப் பின் வரக்கூடிய வசனங்கள் அதனை அறிவிக் கின்றன. அது இதுதான், ‘அல்லாஹ் இந்த மார்க்கத்துக்கு உதவிசெய்து உம்முடைய கொடியை உயர்த்தியே தீருவான். நிராகரிப்பையும் நிரா கரிப்பாளர்களையும் அவன் கைவிட்டே தீருவான், அவர்கள் எவ்வளவு பலம் பொருந்தியவர்களாக இருந்தாலும் சரியே.’ நம் காலத்தில் இருக்கும் நிராகரிப்பாளர்கள் முந்தைய நிராகரிப்பாளர்களைவிடச் சிறந்தவர்கள் அல்ல.*

உம் இறைவன் ஆது சமூகத்துடனும் தூண்களுடைய இறம் வாசிகளுடனும் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவர்களைப் போன்று எந்தச் சமூகமும் நாடுகளில் படைக்கப்பட்டிருக்கவில்லை. பள்ளத்தாக்கில் பாறை களைக் குடைந்த ஸமூது சமூகத்துடனும் ஆணிகளுடைய ஃபிர்அவ் னுடனும். (6-10)

முந்தையவர்கள் விண்வெளிக்குச் செல்லாதவர்களாக, அறிவியலில் கரைகாணாதவர்களாக இருந்தாலும் திறமையான பொறியாளர்களாக இருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த அடையாளங்கள் இதனை அறிவிக் கின்றன. முஹம்மதை நிராகரித்த அறபுகளிடம் அல்லாஹ் கூறினான்:

பூமியில் அவர்கள் சுற்றித் திரிந்து அவர்களுக்கு முன் இருந்தவர் களின் கதி என்னவாயிற்று என்பதைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் இவர்களைவிடப் பலம்மிக்கவர்களாக இருந்தார்கள். அவர்கள் பூமியைப் பண்படுத்தி, இவர்கள் செழிப்பாக்கியதைவிட அதிகமாகச் செழிப்பாக்கினார்கள். (30:9)

ஆனாலும் அவர்களின் வரம்புமீறல் அவர்களை அழிவின் பக்கம் கொண்டுசேர்த்தது. அவர்கள் விதியை மிகைக்க முயன்றபோது, சத்தி யத்தை எதிர்த்து நின்றபோது, ‘உமது இறைவன் அவர்களின் மீது வேத னையின் சாட்டையை வீசினான். நிச்சயமாக உம் இறைவன் கண் காணித்துக்கொண்டிருக்கிறான். (13,14)’

அத்தியாயத்தின் நடுப்பகுதியில் மனிதனின் மோசமான இயல்புகுறித்து பேசப்படுகிறது. அவர்கள் இன்றைய தினத்தைக் கொண்டு ஏமாந்து விடுகிறார்கள். அதற்கு முந்தியதையும் பிந்தியதையும் மறந்துவிடுகி றார்கள். அல்லாஹ் மனிதர்களிடையே நாள்களை மாறி மாறி வரச் செய்கிறான் என்பதை அவர்கள் அறிவதில்லை.

‘ஒருநாள் எங்களுக்குப் பாதகமானது. ஒருநாள் எங்களுக்குச் சாதக மானது. ஒருநாள் நாங்கள் துன்பமடைகிறோம். ஒருநாள் நாங்கள் மகிழ்ச்சி யடைகிறோம்.’

மனிதர்களில் பெரும்பாலோர் இன்றைய நாளைக் கொண்டு ஏமாந்து விடுகிறார்கள். அவர்களுக்கான சோதனை இலாபத்தையும் இழப்பையும் உள்ளடக்கியது என்பதை அவர்கள் அறிவதில்லை.

மனிதனை அவனுடைய இறைவன் கண்ணியப்படுத்தி அருட் கொடைகளையும் வழங்கி சோதிக்கும்போது, ‘என் இறைவன்

*என்னைக் கண்ணியப்படுத்தினான்.' என்று அவன் கூறுகிறான். ஆனால், அவனது வாழ்க்கை வசதிகளைக் குறைத்து அவனைச் சோதிக்கும்போது, 'என் இறைவன் என்னை இழிவுபடுத்தி விட்டான்.' என்று அவன் கூறுகிறான். அவ்வாறன்று ...* (15-17)

*இந்தப் பங்கீட்டின் இரகசியத்தை இறைவன் மட்டுமே அறிவான். அது முன்னுரிமையளிக்கப்படுவதை அல்லது விரட்டப்படுவதை அறிவிக்கவில்லை. அல்லாஹ் செல்வத்தைக் கொண்டும் ஏழ்மையைக் கொண்டும் வெற்றியைக் கொண்டும் தோல்வியைக் கொண்டும் மனிதர்களைச் சோதிக்கிறான். மகிழ்ச்சி அவனுடைய திருப்தியின் அடையாளம் அல்ல. துன்பம் அவனுடைய கோபத்தின் அடையாளம் அல்ல. இந்தப் பங்கீட்டின் மூலம் அல்லாஹ் மனிதர்களைச் சோதிக்கிறான். இதன் அடிப்படையில் மறுமைநாளில் படித்தரங்கள் நிர்ணயிக்கப்படும். முடிவு இறையச்சத்துக்கே சாதகமாக அமையும்.*

*அல்லாஹ் செல்வந்தனுக்கு அவன் இவ்வாறு பெருமையடிப்பதற்காகச் செல்வத்தை வழங்குவதில்லை: 'நான் உன்னைவிட அதிக செல்வமுடையவன், ஆள்பலம்மிக்கவன்.* (18:34)*' மற்றவர்களும் அதில் பங்கு பெற வேண்டும், அவன் அந்தச் செல்வத்தைக் கொண்டு தேவையுடையோரின், ஏழைகளின் துன்பங்களைப் போக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் செல்வந்தனுக்கு அளிக்கிறான். அவன் யாருக்கேனும் செல்வத்தை அளிக்கவில்லையெனில் அவர் தமக்குக் கிடைக்காததை எண்ணி வருத்தப்படுவதற்காகவோ பொறாமைப்படுவதற்காகவோ அல்ல. மாறாக, அவர் பொறுமையையும் தூய்மையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.*

*படைப்பின் ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ் மனிதர்களுக்கு வழங்கும் வாழ்வாதாரத்தில் வேறுபாடுகளை ஏற்படுத்திவிட்டான், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக. ஆகவே அவன் இந்த வேறுபாடுகள் நிகழ்ந்தபிறகு கூறுகிறான்:*

*அவ்வாறன்று! நீங்கள் அநாதையை மதிப்பதுமில்லை; ஏழைகளுக்கு உணவளிக்குமாறு தூண்டுவதுமில்லை. வாரிசு சொத்துகளை நீங்களே முழுமையாக விழுங்கிவிடுகிறீர்கள். செல்வத்தின் மீது அளவுகடந்த மோகம் கொண்டுள்ளீர்கள்.* (17-20)

*உணவுக்காகவே பல போர்கள் ஏற்பட்டுள்ளன. மனிதர்கள் அனைவரும் அதன் பக்கம் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். சுயநலத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் கஞ்சத்தனத்துக்கும் கொடைக்கும் மத்தியில் போர்*

நடந்திருக்கிறது. நான் மிகவும் கவலையோடு கூறுவேன், மார்க்கத்தின் அறிவுரைகள் மிருக இச்சைகளால் மிகைக்கப்பட்டுவிட்டன. பின்னர் தான் சோஷலிச தத்துவம் வெளிப்பட்டது. அல்லாஹ்வின் இந்தப் பங்கீட்டை அநியாயம் என வர்ணித்தது. என்ன நிகழ்ந்தது? நீண்ட காலம் அதன் நிழலில் வாழ்ந்த ஒரு மனிதன் கூறுவதைப் பாருங்கள்: 'நான் அதற்காக அழுத நாள்கள் இருந்தன. நான் அதற்கு மாறானவனாக மாறியபோது அதற்கு எதிராக அழுதேன்.'

நான் எனக்குநானே கேட்டுக்கொண்டேன், வழிதவறி தடுமாறித்திரியும் இந்த மனிதர்களுக்காக முஸ்லிம்கள் என்ன அளித்தார்கள்? எதுவும் இல்லை. அவர்கள் இஸ்லாத்தின் முகத்தை மூடி அதன் இயல்பைச் சிதைத்தார்கள். நான் இஸ்லாமியப் பூமியில் சுதந்திரமானவர்களைக் காண்கிறேன். அவர்கள் பிற நாடுகளில் கண்ணியத்தைத் தேடுகிறார்கள். தங்களின் நாடுகளில் தொலைந்துவிட்ட நீதியை அங்கு அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மறுமைநாளை எதிர்பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் மீதமிருக்கவில்லை.

> அவ்வாறன்று, பூமி நொறுக்கப்பட்டுத் தூள்தூளாக்கப்படும்போது! வானவர்கள் அணிவகுத்து நிற்க உமது இறைவன் வருகை தருவான். அந்த நாளில் நரகம் கொண்டுவரப்படும். அந்த நாளில்தான் மனிதன் புரிந்துகொள்வான். அப்போது ஏற்படும் புரிதலால் அவனுக்கு என்ன பயன்? 'என் வாழ்க்கையில் ஏதாவது செய்திருக்கக் கூடாதா!' என்று அவன் வருத்தப்பட்டுப் புலம்புவான். (21-24)

அவன் வருத்தப்பட்டுக் கதறுவான். ஆனால் அதுவே கதறுவது பயனளிக்காத நாளாகும்.

அல்லாஹ்வின் அடியார்களில் உள்ள நல்லவர்களுக்கு அந்த நாளில் நற்செய்தி வழங்கப்படும். வெற்றியால் அவர்களின் முகங்கள் மலர்ந்திருக்கும். சயீது இப்னு ஜுபைர் அறிவிக்கும் அறிவிப்பொன்று தபரீயில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது:

> ஒரு மனிதர் வந்து நபியவர்களிடம் இந்த வசனத்தை ஓதிக்காட்டினார், 'அமைதியடைந்த ஆன்மாவே, உன் இறைவனின் பக்கம் செல். நீ அவனைக் கொண்டு திருப்தியடைந்தாய். அவனும் உன்னைக் குறித்து திருப்தியடைந்தான். (27,28)' இதனைச் செவியுற்ற அபூபக்கர், 'என்னவொரு அருமையான வசனம்!' என்றார். நபியவர்கள் அவரிடம் கூறினார்கள், 'நீர் மரணிக்கும் சமயத்தில் வானவர் வந்து இந்த வசனத்தைக் கூறுவார்.'

*அபூபக்கர் நேர்வழியில் நடந்த கலீஃபாக்களில் முதலானவர். ஆனாலும் திருக்குர்ஆனில் உள்ள இந்த வசனம் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு முஸ்லிமுக்கும் பொதுவானது. அவன் சுவனத்தில் நுழைவதற்காக அழகிய வார்த்தை அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். அவன் இறைவனின் புகழ்பாடுவதில் கலந்துகொள்வான். அல்லாஹ் தன் அருளால் நம்மையும் அவர்களில் உள்ளவர்களாக ஆக்குவானாக.*

❖ ❖ ❖

அத்தியாயம் 90

# அல்பலது

(நகரம்)

*'இந்த நகரின் மீது நான் சத்தியம்செய்கிறேன். (1)' மக்கா நகரத்தின் மீது சத்தியம்செய்கிறேன். 'நீர் இந்த நகரில் தங்கியுள்ளீர். (2)' அகப்பார்வை யோடும் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தவாறும் நீர் அங்கு தங்கியுள்ளீர். மக்கா நகரம் புனிதப்படுத்தப்பட்டு, அங்குள்ள விலங்கு களும் தாவரங்களும் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் முஹம்மதுக்கு எதி ராக வரம்புமீறுவது மக்காவாசிகளால் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகக் கருதப்பட்டது.*

*ஏன் இந்த முரண்பாடு இந்த நகரத்தில் நிகழ்கிறது? ஏனெனில், இங்கு புதிய தலைமுறையைக் கட்டியெழுப்புவதற்காகத் தவ்ஹீதின் பக்கம் விடுக்கப்பட்ட அழைப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் செய் யப்பட்ட பிரார்த்தனைக்கு அல்லாஹ் அளித்த பதிலாகும். இப்றாஹீமும் இஸ்மாஈலும் அப்போது பிரார்த்தனை செய்தார்கள்: 'எங்கள் இறைவா, அவர்களுக்கு உன் வசனங்களை எடுத்துரைத்து, வேதத்தையும் ஞானத் தையும் கற்றுக்கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக்கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களுக்கு அனுப்புவாயாக. (2:129)' ஆகவே நாம், 'தந்தையின் மீதும் அவருடைய மகனின் மீதும் சத்தியமாக. (3)' என்ற வசனத்துக்குத் தந்தை என்பது இப்றாஹீமையும் மகன் என்பது அவரது சந்ததியில் வந்த முஹம்மதையும் குறிக்கும் என்று விரிவுரையளிக்கிறோம்.*

*'நாம் மனிதனைக் கஷ்டத்தில் படைத்துள்ளோம். (4)' மனித இனம் ஏராளமான பொறுப்புகளைச் சுமக்கிறது. அது தன் இச்சைகளை நிறை வேற்றுவதற்குத் தடையாக இருக்கின்ற ஷரீஆ என்னும் கடிவாளத்தை யும் சுமக்கிறது. ஆனாலும் மனிதன் நிராகரிக்கிறான். மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவதை மறுக்கிறான். ஏன்? அவனை மீண்டும்*

உயிர்கொடுத்து எழுப்புவதற்கு அல்லாஹ் ஆற்றல் பெற்றவன், இல்லையா? ‘அவன்மீது எவரும் ஆதிக்கம் செலுத்த முடியாது என்று அவன் எண்ணுகிறானா? (5)’ இது வேறொரு அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் வசனத்தைப் போல: ‘நாம் அவனது எலும்புகளை ஒன்று திரட்ட மாட்டோம் என்று மனிதன் எண்ணுகிறானா? (75:3)’

தான் செலவுசெய்யும் செல்வத்தைக் கொண்டு மனிதன் ஏமாந்து விடுகிறான். ‘ஏராளமான செல்வத்தை வாரி இறைத்து விட்டேன் என்று அவன் கூறுகிறான். (6)’ பெரும்பாலும் செல்வத்தைக் கொண்டு பெருமையடிப்பது அறபுகளின் இயல்பாக இருந்திருக்கிறது. கவிஞர் அன்தறா கூறுகிறார்:

> ‘நான் போதையில் ஆழ்ந்துவிட்டால் என் செல்வங்களை வாரிவாரி வழங்குகிறேன். என் மானமோ காயப்படாதபடி பரிபூரணமாகவே இருக்கிறது. நான் போதையிலிருந்து விழித்து விட்டாலும் என் கொடையைக் குறைப்பதில்லை, என் கண்ணியத்தை நீர் அறிந்தவாறு.’

ஒரு மனிதன் தன் இறைவனை ஈமானின், நன்மையின் ஆடைகளின்றி நிர்வாணமாகச் சந்திக்கும்போது இவற்றால் அவனுக்கு என்ன பயன் ஏற்படும்? ‘தன்னை யாரும் பார்க்கவில்லை என்று அவன் எண்ணுகிறானா? (7)’ அல்லாஹ் ஒவ்வொரு மனிதனிடமும் அவன் எங்கிருந்து சம்பாதித்தான், எப்படிச் செலவுசெய்தான் என்ற கேள்விகளைக் கேட்டே தீருவான்.

பின்னர் அல்லாஹ் அடியானுக்கு வழங்கப்பட்டுள்ள நன்றி செலுத்தப்பட வேண்டிய அருட்கொடைகளை அவனுக்கு நினைவூட்டுகிறான். ‘நாம் அவனுக்கு இரு கண்களையும் ஒரு நாவையும் இரு உதடுகளையும் வழங்கவில்லையா? இன்னும் நாம் அவனுக்கு (நன்மை, தீமையின்) இரு வழிகளையும் காட்டினோம். (8-10)’ நிராகரிப்பு, குருட்டுத்தனமாகப் பின்பற்றுதல் ஆகியவற்றைவிட்டு மனிதன் ஏன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு, அவன் பக்கம் இட்டுச் செல்லும் வழியைத் தெரிவுசெய்யவில்லை? அதற்காக அவன் என்ன செய்ய வேண்டும்? ‘கணவாய் என்றால் என்னவென்று உமக்குத் தெரியுமா? அது ஓர் அடிமையை விடுதலைசெய்வதாகும். அல்லது, பசி நிறைந்த நாள்களில் உணவளிப்பதாகும், உறவினரான அநாதைக்கோ வறுமையில் உழலும் ஏழைக்கோ. (12-16)’ அத்தியாயம் இங்கு ஈமானை அதனுடைய கண்ணியமான அடையாளங்களுடன் இணைத்தே குறிப்பிடுகிறது. ஈமான் என்பது வெறுமனே உச்சரிக்கப்படும் வார்த்தை அல்ல. அது

அர்ப்பணிப்பும் கொடையும் புத்திசாலித்தனமும் சிகரமும் ஆகும். நம்பிக்கையாளர்கள் மனிதச் சமூகத்தின் முன்மாதிரிகளாவர். ‘பின்னர் யாரெல்லாம் நம்பிக்கை கொண்டு பொறுமையை மேற்கொள்ளவும் இரக்கம் காட்டவும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுகிறார்களோ அவர்களில் உள்ளவராக அவர் இருப்பார். அவர்கள்தாம் பாக்கியசாலிகள். (17-18)’ பொறுமையைக் கொண்டும் கருணையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசித்துக்கொள்வது பரிபூரணமானவர்களின் அடையாளங்களில் ஒன்றாகும்.

நம்பிக்கையாளர்கள் சோம்பேறிகளோ இழிவானவர்களோ அல்ல. அவர்கள் மரணிக்கும்வரை நன்மையின் பாதையில் சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர்கள். அது அவர்களை உயர்ந்த சுவனத்தின் பக்கம் கொண்டு சேர்க்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் சுறுசுறுப்பு, முந்திக் கொண்டு செயல்படும் திறன், அல்லாஹ் அளிக்கும் பாக்கியம் ஆகியவற்றுக்கேற்பச் சுவனத்தில் படித்தரங்களைப் பெறுவார்கள்.

பாவங்களில் மூழ்கி இருளைக் காதலித்தவர்கள் வேறு வகையான விளைவைப் பெறுவார்கள். ‘நம் வசனங்களை நிராகரித்தவர்கள்தாம் துர்பாக்கியசாலிகள். அவர்களின் மீது நெருப்பு படர்ந்திருக்கும். (19,20)’

இந்த அத்தியாயம், அறபுகளுக்கு அனுப்பப்பட்ட தூதர்கள் அறபுலகில் முழு வெற்றியடையவில்லை என்பதையும் இறுதியில் முஹம்மது வந்து அறபுலகை இஸ்லாத்தின் தூதை உலகெங்கும் கொண்டுசெல்லும் தகுதி படைத்ததாக ஆக்கினார் என்பதையும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

❖ ❖ ❖

அத்தியாயம் 91

# அஷ்ஷம்ஸ்

(சூரியன்)

*'சூரியன் மீதும் அதன் ஒளி மீதும் அதனைத் தொடர்ந்து வரும் சந்திரன்மீதும் சத்தியமாக.* (1,2)*' நான் வானத்தில் சூரியனைப் பார்க்கும்போது அது கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாவதாக எண்ணுகிறேன். இதுகுறித்த அறிவியலாளர்களின் கூற்றுகளை நினைத்துப்பார்க்கிறேன்: அது நம் பூமியைவிட ஒன்றரை மில்லியன் மடங்கு பெரியது. அது நம் பூமியிலிருந்து நூறு மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதனை ஒன்பது கோள்கள் சுற்றிவருகின்றன. அவற்றில், கோடிக் கணக்கான மக்களைக் கொண்ட நம் பூமியும் ஒன்று. இந்தச் சூரியனும் அதனைப் பின்தொடர்ந்து செல்லக்கூடியவையும் எண்ண முடியாத மற்ற சூரியன்களுக்கு மத்தியில் இருக்கின்றன. ஏராளமாக இருக்கின்ற இந்த வட்டப்பாதைகள் விசாலமான இந்தப் பிரபஞ்சத்தின் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பகுதியில் இருக்கின்றன. அதன் தூரத்தை அறிய முடியாது.*

*இந்தப் பிரபஞ்சத்தின் விசாலத்தை எண்ணி நான் வியப்படைகிறேன். இதன் படைப்பாளன் எவ்வளவு மகத்தானவனாக இருப்பான்! 'கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியன. நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. அவன் விசாலமானவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான்.* (2:115)*'*

*அற்பமான இந்தப் பூமியில்தான் ஆதமின் பிள்ளைகளுக்குத் தெரிவு செய்யும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் நம்பிக்கை கொண்டோர் நம்பிக்கை கொண்டுவிட்டார்கள். நிராகரித்தோர் நிராகரித்து விட்டார்கள். அர்ஷைச் சுமப்பவர்களும் வானங்களில் வசிப்பவர்களும் அவர்களுக்காகப் பாவமன்னிப்பு கோருகிறார்கள்.*

- ❖ *அரியணையைச் சுமப்பவர்களும் அதனைச் சூழ உள்ளவர்களும் தம் இறைவனின் புகழைப் போற்றுகிறார்கள். அவன்மீது*

நம்பிக்கை கொண்டு, நம்பிக்கையாளர்களுக்காக மன்னிப்பு கோருகிறார்கள் ... (40:7)

❖ வானங்கள் அவர்களுக்கு மேலிருந்து வெடித்துவிடவும் கூடும். வானவர்கள் தம் இறைவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். பூமியில் உள்ளவர்களுக்காக மன்னிப்பு கோருகிறார்கள். (42:5)

இந்த அத்தியாயமும் இதைப் போன்ற அத்தியாயங்களும் சிறியவையாக இருந்தாலும் சுருக்கமான பல அறிவுரைகளையும் கருத்துகளையும் உள்ளடக்கியுள்ளன. ஆனாலும் அவை போதுமானவை. ஆகவேதான், ஐந்து வேளை தொழுகைகளில் இதுபோன்ற அத்தியாயங்கள் ஆன்மாவுக்கான உணவாக அமையும் பொருட்டு மீண்டும் மீண்டும் ஓதப்படுகின்றன.

அல்லாஹ் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் ஏழு முறை சத்தியமிட்டுக் கூறுகிறான், யார் தம் மனதைத் தூய்மைப்படுத்திக் கொண்டாரோ அவர் வெற்றிபெறுவார். யார் தம் மனஇச்சையைப் பின்பற்றுவாரோ, பூமியே நிரந்தரமானது என்று எண்ணுவாரோ அவர் தோல்வியடைந்து விடுவார். இழிவும் அலட்சியமும்தானே மக்களை அழிக்கின்றன. ஸமூது சமூகம் வரம்புமீறி பாவங்களில் ஈடுபட்டது. விளைவு என்ன ஆனது? கால்களால் மிதிக்கப்படும் வைக்கோல்களாக ஆகிப் போனது.

❖ ❖ ❖

அத்தியாயம் 92

# அல்லைல்

(இரவு)

‘படர்ந்துவிடும் இரவின் மீதும் பிரகாசிக்கின்ற பகலின் மீதும்... சத்தியமாக. (1,2)’ இரவின் இருள் உலகத்தை மூடுகிறது. பகலின் வெளிச்சம் அதனை வெளிப்படுத்துகிறது. இரவு, பகல் மாறிமாறி வருவதுடன் மக்கள் தங்களின் வாழ்நாள்களைக் கழிக்கிறார்கள். தங்களின் எதிர்காலத்தைத் தயார்படுத்துகிறார்கள். இறுதியில் அவர்கள் சுவனத்துக்கோ நரகத்துக்கோ செல்லலாம். நற்செயல்கள் ஒரு மனிதனுக்குப் பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்துகின்றன. தீய செயல்பாடுகள் அவனை மோசமான முடிவின் பக்கம் இட்டுச்சென்று விடுகின்றன.

> ஆகவே யார் பிறருக்கு வழங்கி, இறையச்சத்துடன் நடந்து, நன்மையை உண்மையென ஏற்றுக்கொண்டாரோ அவருக்கு இலகுவான வழியில் செல்வதை நாம் எளிதாக்குவோம். ஆனால், யார் கஞ்சத்தனம் செய்து, அலட்சியமாக இருந்து நன்மையானவற்றை நிராகரித்தாரோ அவருக்குக் கடினமான வழியில் செல்வதை நாம் எளிதாக்குவோம். (5-10)

முஸ்லிம் சமூகத்தில் வலிமை குன்றிய தலைமுறைகளும் வெளிப்பட்டன. அவர்கள் செயல்படாமல் சோம்பேறித்தனமாக முடங்கிக் கிடப்பதையே தேர்வுசெய்தார்கள். அதனால் தங்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் ஒருசேர இழந்தார்கள். காரணம், விதியை மடத்தனமாகப் புரிந்துகொண்டதுதான். தங்களின் இயலாமைக்கும் தோல்விக்கும் விதியைக் காரணம் காட்டினார்கள்.

தர்மம்செய்தல், உண்மையாக இருத்தல், இறையச்சத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றுடன் அல்லாஹ்வின் திருப்திக்காகவே செயல்படுவதும் மிகமிக அவசியமாகும். இது சற்றுக் கடினமான விசயம்தான்.

மனிதர்களில் பெரும்பாலோர் செல்வத்தையும் பதவியையும் வழிபடு கிறார்கள். அவர்களின் செயல்பாடுகள் அனைத்தும் தேவைகளைப் பெறுதல், கண்ணியத்தை அடைதல் ஆகியவற்றையே மையமாகக் கொண்டுள்ளன. பெரும்பாலோர் தங்களைக் காட்டிக்கொள்வதற் காகவே செயல்படுவதாகவும் இறைவனுக்காகச் செயல்படுதல் மிக அரிதாகவே காணப்படுவதாகவும் எனக்குத் தோன்றுகிறது.

> அவர் தூய்மையடையும் பொருட்டுத் தம் செல்வத்தை வழங்கு கிறார். கைம்மாறுசெய்யும் அளவுக்கு யாருக்கும் அவர் நன்றிக் கடன்படவில்லை, ஆனாலும் மேலான தம் இறைவனின் திருப்தி யைப் பெறுவதற்காகவே. வெகுவிரைவில் அவர் திருப்தியடை வார். (18-21)

மனிதனின் செயல்பாடுகள் உலக மோகத்தைவிட்டு நீங்கி மறுமைக் காகவே இருக்குமானால் அவன் பெரும்பாலான குழப்பங்களிலிருந்து விடுபட்டுவிடுவான். கடுமையான போர்களும் பிரிவினைகளும் எரிய முடியாமல் அணைந்துவிடும். சீரற்ற அணிகள் மிகுந்த சீரமைப்புடன் இயங்க ஆரம்பித்துவிடும். நாங்கள் அல்லாஹ்விடம் கேட்பது, அவன் விரும்புகின்றவற்றின் பக்கம் நம்மை அவன் கொண்டு செல்ல வேண்டும் என்பதைத்தான்.

❖ ❖ ❖

அத்தியாயம் 93

# அள்ளுஹா

(முற்பகல்)

*பல வசனங்களில் திருக்குர்ஆன் 'ஒளி' என்ற வார்த்தையால் வர்ணிக் கப்பட்டுள்ளது. 'ஆகவே அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நாம் அருளியிருக்கும் ஒளியின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். (64:8)' 'ஆயினும், நாம் அதனை ஒளியாக்கி நம் அடியார்களில் நாம் நாடியோருக்கு நேர்வழி காட்டுகிறோம். (42:52)'*

*சந்தேகமேயின்றி உன்னதமான வஹீ முஹம்மதின் உள்ளத்தில் ஒளியாக இருந்தது. அந்த ஒளியுடன்தான் அவர் இறுதிவரை இருந்தார். ஓரிரு முறை இயல்பான காரணங்களுக்காக வஹீ சற்றுத் தாமதமாகி யது. வஹீயின் ஆரம்பக் கட்டத்தில் இப்படி நிகழ்ந்ததுண்டு. இது முஹம்மதின் இறைவன் அவரை வெறுத்தான் என்பதன் அடையாளமா? இப்படித்தான் இந்த மார்க்கத்தின் எதிரிகள் வாதிட்டார்கள். ஆகவே இந்த அத்தியாயம் அருளப்பட்டது. 'ஒளிமிக்க காலைப் பொழுதின் மீதும் இருண்ட இரவின் மீதும் சத்தியமாக. உம் இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை; வெறுக்கவுமில்லை. (1-3)'*

*இந்த இரண்டு சத்தியங்களிலும் வஹீ அருளப்பட்ட நேரமும் அது நிறுத்தப்பட்ட நேரமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஓய்வு என்பது வஹீயைப் பெறுவதற்கு மிகமிக அவசியம். ஏனெனில், வஹீயைப் பெறுவது சிரமமான ஒன்றாகும். இங்கு விட்டு விடுவதற்கோ வெறுப்புக்கோ எந்த வாய்ப்பும் இல்லை. 'மறுமையே இம்மையைவிட உமக்குச் சிறந்ததாகும். (4)'*

*ஆரம்பக் கட்டத்தில் நபியவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய சில மனிதர்களை இந்த வஹீயின் அடிப்படையில் பண்படுத்தினார்கள். பின்னர், இஸ்லாமிய அழைப்பின் வட்டம் விரிவடைந்து ஒரு சமூகத்தை*

உருவாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்தச் சமூகம்தான் மறுமை நாள்வரை வரக்கூடிய சமூகத்துக்கு அடிப்படையானது. இந்தக் கால கட்டத்தில் நபியவர்கள் அதிகமான வஹீயையும் கடுமையான சிரமங் களையும் எதிர்கொண்டார்கள். விளைவாக, பொதுவான வரலாற்றை மாற்றி வேறொரு நாகரிகத்தை உருவாக்கினார்கள். இவற்றையெல்லாம் நிகழ்த்திய வேதம் இஸ்லாத்தின் மகத்துவத்துக்குச் சான்றளித்தவாறு நமக்கு முன்னால்தான் இருக்கிறது.

'விரைவில் உம் இறைவன் உமக்கு வழங்குவான். அப்போது நீர் திருப்தியடைவீர். (5)' இங்கு வழங்குதல் என்பது எதைக் குறிக்கிறது?

நிராகரிப்புடனான போரினிடையே நபியவர்கள் இறந்தார்கள். பள்ளி வாசலோடு ஒட்டியிருந்த அறையிலேயே அவர்கள் அடக்கம் செய்யப் பட்டார்கள். தாம் வகுத்துக்கொடுத்த பாதையில் முன்னேறிச் செல்லக் கூடியவர்களை விட்டுவிட்டுச் சென்றார்கள். அவர்களில் பெரும்பாலோர் தூய தவ்ஹீதிலும் இறையச்சத்திலும் நிலைத்திருந்தவாறே அல்லாஹ்வை அடைந்தார்கள்.

இதற்கு முன்னர் அல்லாஹ் மூசாவிடம் கூறினான்: 'நீர் என் கண் காணிப்பில் வளர வேண்டும் என்பதற்காக. (20:39)' முஹம்மதுக்கு அல்லாஹ் தூதுத்துவப் பெரும் பொறுப்பை வழங்கியபிறகு கூறினான்:

> உம் இறைவனின் தீர்ப்பை எதிர்பார்த்திருப்பீராக. நிச்சயமாக நீர் நம் கண்காணிப்பில் இருக்கிறீர். (52:48)

தான் தேர்வுசெய்யும் தூதர்களைப் பண்படுத்தும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான். பின்னர், அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் கடினமான நிகழ்வுகளைக் கொண்டு அவர்களைத் தூய்மைப்படுத்து கிறான். அவர்கள் அதற்குத் தகுதியானவர்கள்தாம்.

> அவன் உம்மை அநாதையாகக் கண்டு புகலிடமளிக்கவில்லையா? உம்மைத் தேடல் கொண்டவராகக் கண்டான். ஆகவே உமக்கு வழிகாட்டினான். உம்மைத் தேவையுடையவராகக் கண்டான். ஆகவே உம்மைத் தேவையற்றவராக ஆக்கினான். (6-8)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ழளால் என்ற வார்த்தைச் சத்தியத்துக் கான தேடலைக் குறிக்கும். முஹம்மதும் தூதர்கள் அனைவரும் வழி கேட்டைவிட்டுத் தூய்மையானவர்கள். சில நூல்களில் அவர்களின் விசயத்தில் வழிகேடு என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பது வெறும் புனைவேயன்றி வேறில்லை.

பின்னர் அல்லாஹ் அவரை மனிதர்களைவிட்டுத் தேவையற்றவராக ஆக்கிவிட்டான். அவர் தேவைகளுக்காகக் கையேந்துபவராக வாழ வில்லை. ஆனாலும் அவர் செல்வந்தராகவும் இருக்கவில்லை. அல்லாஹ் அவர்மீது பொழிந்த முந்தைய, பிந்தைய அருட்கொடைகளை நினை வூட்டிய பிறகு அவரிடம் அவன் கூறுகிறான்: 'ஆகவே, நீர் அநாதை களுடன் கடுமையாக நடந்துகொள்ளாதீர்; யாசிப்பவரை விரட்டாதீர்; உம் இறைவனின் அருட்கொடைகளை எடுத்துரைப்பீராக. (9-11)' அருட்கொடைகளை எடுத்துரைக்கும் முறை வேறொரு அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. 'நீர் நினைவூட்டிக்கொண்டே இருப்பீராக. உம் இறை வனின் அருளால் நீர் ஜோதிடரும் அல்லர்; பைத்தியக்காரரும் அல்லர். (52:29)' நீர் இந்த மார்க்கத்தை எடுத்துரைப்பதற்காகவும் மனிதர்களை எல்லா விதமான அடிமைத் தளைகளிலிருந்து விடுவிப்பதற்காகவும் தேர்வுசெய்யப்பட்டுள்ளீர். ஆகவே, நீர் எடுத்துரைப்பீராக. நீர் ஜோதிடரோ பைத்தியக்காரரோ அல்லர். 'நீர் எச்சரிக்கைசெய்பவர்தாம். அல்லாஹ்வே அனைத்துக்கும் பொறுப்பாளனாக இருக்கிறான். (11:12)'

❖ ❖ ❖

அத்தியாயம் 94

# அஷ்ஷர்ஹ்

(விரிவடையச் செய்தல்)

*இந்த அத்தியாயம் அள்ளுஹா என்ற அத்தியாயத்தின் தொடர்ச்சியாகும். எந்தக் கேள்வியைக் கொண்டு இந்த அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளதோ அது முந்தைய அத்தியாயத்தில் தொடர்ச்சியாக வந்த கேள்விகளை முழுமைப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. உள்ளத்தை விரிவாக்குதல் என்பது அல்லாஹ் தூதருக்கு அளித்த ஞானத்தையும் ஒழுக்கத்தையும் கொண்டு முழுமையடைந்தது. வேறொரு அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் வசனம் இந்தப் பொருளையே உணர்த்துகிறது:*

*அல்லாஹ் உமக்கு வேதத்தையும் ஞானத்தையும் அருளியுள்ளான். நீர் அறிந்திராதவற்றையும் அவன் உமக்குக் கற்றுக்கொடுத்துள்ளான். அல்லாஹ் உம்மீது பேரருள் புரிந்துள்ளான்.* (4:113)

*நபியவர்கள் இருள் படிந்த ஒரு சூழலில் வளர்ந்தார். மாறாக, அப்போது உலகம் முழுமையும் நேர்வழியை இழந்து சிலை வழிபாடு என்னும் அசுத்தத்தால் களங்கப்படுத்தப்பட்டிருந்தது. சத்தியத்தைத் தேடக்கூடியவர் எதன் மீது நம்பிக்கை வைப்பார்? எங்கிருந்து அதனைப் பெறுவார்? அச்சமயத்தில்தான் அல்லாஹ் முஹம்மதைத் தேர்ந்தெடுத்து அருள் புரிந்தான். 'நாம் உமது உள்ளத்தை உமக்காக விரிவாக்கவில்லையா? உமது சுமையை உம்மை விட்டும் இறக்கினோம். அது உமது முதுகை முறித்துக்கொண்டிருந்தது.* (1-3)'

*முஹம்மது கொண்டுவந்த மார்க்கம் எவ்வித முரண்பாடும் மூடநம்பிக்கையும் சிலை வழிபாடும் கலக்காத தூய தவ்ஹீதாகும்.*

*நீங்கள் கேட்கலாம், ஏன் முஹம்மதின் தூதுத்துவத்துக்கான சான்று தவ்ஹீதின் சான்றோடு இணைக்கப்பட்டுள்ளது?*

முஹம்மது கற்றுக்கொடுத்த தவ்ஹீதைத்தான் தூதர்கள் அனைவரும் அறிமுகப்படுத்தினார்கள். அவர்கள் அதைத் தவிர வேறு எதையும் எடுத்துரைக்கவில்லை. முஹம்மது வழியாக அது மீண்டும் வந்திருப்பது அதன் மூலம் பாதுகாக்கப்பட்டது என்பதை உணர்த்தக்கூடியதாகும். ஆகவே ஹஸ்ஸான் இப்னு ஸாபித் கூறுகிறார்: 'இறைவன் தன் பெயரை முஹம்மதின் பெயரோடு இணைத்துள்ளான், பாங்கு சொல்பவர் ஐந்து வேளையிலும் நான் சாட்சி சொல்கிறேன் என்று கூறும்போது.'

இதுதான் இந்த வசனத்தின் பொருள்: 'உமக்காக உம் புகழை மேலோங்கச் செய்தோம். (4)' ஐரோப்பாவில் மக்கள் முஹம்மதை நிராகரிக்கிறார்களே. அவரைப் பொய்யர் என்று தூற்றுகிறார்களே. அல்லாஹ்வை நிராரித்து, 'கோள்கள் எல்லாம் தாமாகவே சுற்றிக்கொண்டிருக்கின்றன, நரம்புகளில் இரத்தம் தாமாகவே ஓடிக்கொண்டிருக்கிறது' என்று கூறுபவர்களிடத்தில் வேறென்ன எதிர்பார்க்க முடியும்? அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுவது படைப்புகளின் மீது இட்டுக்கட்டுவதைவிடப் பெரிய பாவமாகும். ஆகவே அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:

> அவர்கள் கூறுவது உம்மை வருத்தமடையச் செய்கிறது என்பதை நாம் அறிவோம். அவர்கள் உம்மை மறுக்கவில்லை. மாறாக, இந்த அக்கிரமக்காரர்கள் அல்லாஹ்வின் சான்றுகளைத்தான் மறுக்கிறார்கள். (6:33)

அல்லாஹ் தன் தூதருக்கு நிராகரிப்பாளர்களால் எவ்வளவுதான் துன்பங்கள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி கட்டளையிடுகிறான். எதிர்காலம் சத்தியத்துக்கும் சத்தியவாதிகளுக்குமே உரியது. 'ஆகவே, சிரமத்துடன் இலகுவும் இருக்கிறது. நிச்சயமாகச் சிரமத்துடன் இலகுவும் இருக்கிறது. (5,6)'

இந்த வாக்கிய அமைப்பு, இலகு அதிக எண்ணிக்கையுடையது என்பதையும் சிரமம் தனித்தது என்பதையும் காட்டுகிறது. ஆகவேதான் கூறப்படுகிறது, இரண்டு இலகுவான விசயங்களை ஒரு கடினம் மிகைக்க முடியாது. மீண்டும் நபியவர்கள் ஜிஹாதைத் தொடரும்படியும் அல்லாஹ்வை முன்னோக்கும்படியும் கட்டளையிடப்படுகிறார்கள். கடமையை நிறைவேற்றிவிட்டால் பிற கடமைகளைச் செய்வதற்காக எழும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள். செயல்படாமல் இருப்பதற்கு எந்த இடமும் இல்லை. 'ஆகவே, நீர் (பணியிலிருந்து) விடுபட்டதும் முயற்சி செய்வீராக. உம் இறைவனின் பக்கம் கவனம் செலுத்துவீராக. (7,8)' முஹம்மது கொண்டுவந்த மார்க்கம் ஒரு செய்தியை அறிவித்தால் அது உண்மையாகும்; ஆட்சி செலுத்தினால் அதுவே நீதியாகும். உலகம் -

அதிலும் குறிப்பாகத் தற்காலத்தில் - இந்த உண்மையையும் நீதியை யுமே வேண்டிநிற்கிறது. அசத்தியமும் அநியாயமும் சத்தியத்தையும் நீதியையும் விரட்டிக்கொண்டிருக்கின்றன. ‘உம் இறைவனின் வார்த் தைகள் முழுவதும் உண்மையானதும் நீதியானதும் ஆகும். அவனது வார்த்தைகளை மாற்றுபவர் யாரும் இல்லை. அவன் செவியேற்பவ னாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (6:116)’

இறுதித் தூதரைத் தங்களின் வழிகாட்டியாகக் கொண்ட அழைப் பாளர்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 95

# அத்தீன்

(அத்தி)

*'அத்தியின் மீதும் ஆலிவ் மரத்தின் மீதும் சீனாய் மலையின் மீதும் அமைதியான இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக. (1-3)' அல்லாஹ் மனிதனை அழகிய வடிவில் படைத்துள்ளான் என்பதற்கு அடுத்தடுத்து நான்கு சத்தியங்கள் செய்யப்படுகின்றன. அத்தியும் ஆலிவும் அறியப் பட்ட பழங்கள்தாம். சில அறிஞர்கள் கூறுகிறார்கள், அல்லாஹ் இந்தப் பழத்தைக் கொண்டு சத்தியம்செய்ய நாடிவிட்டான். அவன் வேறு ஏதா வது பழத்தைக் கொண்டு சத்தியம்செய்திருந்தாலும் அது சரியாக இருந்திருக்கும். பூமியில் விளையக்கூடிய ஒவ்வொன்றும் அவனுடைய சான்றுதான். மண்ணிலிருந்து இனிப்பான, நல்ல மணமுடைய, அழகான நிறமுடைய பழங்களோ தானியங்களோ வெளிப்படுவது எவ்வளவு மகத்தான சான்றுகள். சேறு நிறைந்த கருப்பு மண்ணிலிருந்து சுவையான இந்தப் பழங்களை வெளிப்படுத்தியது யார்? அவன்தான் அல்லாஹ்.*

*ஆய்வாளர்கள், முந்தைய ஷரீஅத்துகள் அருளப்பட்ட இடங்களைக் கொண்டு இங்கு சத்தியம் செய்யப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். இப்னு அப்பாஸிடமிருந்து அறிவிக்கப்படும் பின்வரும் அறிவிப்பு இதனை வலுப்படுத்துகிறது: அத்தி என்பது வெள்ளப் பிரளயத்துக்குப் பிறகு நூஹ் (அலை) அவர்களின் கப்பல் நின்ற இடத்தில் கட்டப்பட்ட பள்ளிவாச லாகும். ஸைத்தூன் என்பது கஅபாவைக் கட்டியபிறகு இப்றாஹீம் நபி கட்டிய அக்ஸா பள்ளிவாசலாகும். சீனாய் மலை என்பது மூசாவுக்காக அல்லாஹ் வெளிப்பட்ட இடமாகும். அமைதியான இந்த நகரம் என்பது இஸ்லாத்தின் இடமான மக்காவாகும்.*

*மனிதன் அழகிய வடிவில் படைக்கப்பட்டுள்ளான் என்பதற்காக இந்தச் சத்தியங்கள் செய்யப்பட்டுள்ளன. இங்கு அழகிய வடிவம் என்பது அழகிய உடலமைப்பையோ வலுவான உடலமைப்பையோ*

குறிக்கக்கூடியதல்ல. மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள கண்ணியம் இது வல்ல. ஹதீஸில் கூறப்பட்டுள்ளது: 'நிச்சயமாக அல்லாஹ் உங்களின் உடல்களையோ வடிவங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, அவன் உங்களின் உள்ளங்களைத்தான் பார்க்கிறான்.' ஆதமின் மக்களில் சிலருக்கு அழகிய தோற்றமோ வலிமையான உடலமைப்போ வழங்கப்பட்டி ருக்கலாம். ஆனால், அவர்களின் முதலாவது தனித்தன்மை, திறமையான அறிவும் சீரான இயல்பும்தான். இதுவே அவர்களின் இறுதியான தனித் தன்மையாகவும் இருக்கலாம்.

அவனுக்குள் அல்லாஹ்வின் ஆன்மா ஊதப்பட்டதால் அவன் முக்கி யத்துவம் வாய்ந்த ஒரு படைப்பாக ஆகிவிட்டான். அவன் படைக்கப் பட்டுள்ள முதல் வடிவத்தில் அவன் தவ்ஹீதைக் கொண்டு, நேர்வழி யைக் கொண்டுதான் பிறந்திருக்கிறான் என்பதற்கான குறிப்பு உள்ளது. பின்னர் மோசமான சூழலால் கொஞ்சம் கொஞ்சமாக நேரான வழியை விட்டு விலகிச்சென்றான். தான் உன்னதமான படைப்பு என்பதையே மறந்துபோனான்.

> முழு மனதுடன் உம் முகத்தை நேரான மார்க்கத்தின் பக்கம் திருப் பிக்கொள்ளும். அல்லாஹ் மனிதர்களுக்காகப் படைத்த இயற்கை அமைப்பில் நிலைத்திருங்கள். அல்லாஹ்வின் படைப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. இதுவே நேரான மார்க்கம். ஆயினும், மனிதர் களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (30:30)

மனிதர்கள் தங்களின் இறைவனை மறந்து, தங்களின் இயல்பைச் சிதைக்கும்போது உள்ளங்கள் நடுநடுங்கக்கூடிய கொடும் பாவங்களில் ஈடுபடுகிறார்கள். ஏன் ஒரு பெண் குழந்தை உயிரோடு புதைக்கப்படு கிறாள்? எதற்காகக் கணவன் இறந்தவுடன் மனைவியும் உடன்கட்டை ஏற்றப்படுகிறாள்? ஏன் சில மனிதர்கள் சத்தியத்தை மறைக்கிறார்கள்? ஏன் கஞ்சன் கஞ்சத்தனம் செய்கிறான், அவனுக்கு அவ்வாறு செய்வதற்கு அவசியம் இல்லாமல் இருந்தும்? நாம் ஏன் நம்மைப் படைத்த இறை வனை மறுக்கிறோம்? இவையனைத்தும் மனிதனை மிகவும் இழிவான வனாக ஆக்கிவிட்டன. அவன் அல்லாஹ் அமைத்த இயற்கை அமைப்பை விட்டு வெகுதூரமாகிக்கொண்டே செல்கிறான்.

இறையச்சமும் நேர்மையும் பாதுகாக்கப்பட்டால்தான் அழகிய இயல்பு நிலைத்திருக்கும். ஈமான் என்னும் நதி வறண்டுவிட்டால் அது வீணாகி விடும். பின்வரும் வசனம் இதைத்தான் கூறுகிறது: 'பின்னர் அவனைத் தாழ்ந்தவர்களில் மிகவும் தாழ்ந்தவனாக ஆக்கினோம். ஆனாலும் நம் பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தவர்களைத் தவிர. அவர்களுக்கு

*என்றும் முடிவுறாத நற்கூலி உண்டு. ஆகவே மனிதனே, நீ எதைக் கொண்டு தீர்ப்புநாளை மறுக்கிறாய்? அல்லாஹ் தீர்ப்பளிப்போரில் எல்லாம் மிகச் சிறந்த தீர்ப்பளிப்பாளன், இல்லையா?* (5-8)'

*ஏன் சிலர் இஸ்லாத்தை நிராகரிக்கிறார்கள்? அதற்கு எதிராகப் போரிடுகிறார்கள்? எந்தச் சிந்தனை அவர்களை இப்படியெல்லாம் செய்யத் தூண்டுகிறது? சமூகங்கள் ஞானம் நிரம்பியவனின் ஞானத்தை விட்டுவிட்டு எந்த நன்மையையும் தராத கோணலான வழிகளைப் பின்பற்றத் தொடங்கிவிட்டன.*

*ஹதீஸில் வந்துள்ளது, உங்களில் யாராவது இந்த அத்தியாயத்தை ஓதினால் இறுதியில், 'அல்லாஹ் தீர்ப்பளிப்போரில் எல்லாம் மிகச் சிறந்த தீர்ப்பளிப்பாளன், இல்லையா?' என்ற வசனத்தை அடையும்போது, 'நான் இதற்காகச் சாட்சி கூறுவோரில் ஒருவராக இருக்கிறேன்' என்று கூறிக் கொள்ளட்டும்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 96

# அல்அலக்

(இரத்தக்கட்டி)

*நபியவர்கள் அவ்வப்போது ஹிறா குகைக்குச் சென்று அங்கு அறியாமைக் காலத்தின் அழுத்தங்களைவிட்டு விலகி தனிமையில் தங்குபவர்களாக, இந்தப் பிரபஞ்சத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திப்பவர்களாக, இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பாளனை உணர்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் சிலைகளையும் சிலை வழிபாட்டையும் மிக இழிவானவையாகக் கருதிக்கொண்டிருந்தார்கள். அவற்றுக்காகச் செய்யப்படும் சடங்குகளை அவர்கள் வெறுத்தார்கள். ஆயினும், இதைவிட அதிகமாக அவர்கள் வேறு எதையும் அறிந்திருக்கவில்லை. ஒருநாள் திடீரென ஆச்சரியமான சப்தத்தைச் செவியுற்றார்கள். 'நீர் படிப்பீராக!' அவர் கூறினார், 'எனக்கு படிக்கத் தெரியாது.' மீண்டும்மீண்டும் அந்தச் சப்தம் வர நபியவர்களும் மீண்டும்மீண்டும் அவ்வாறே பதிலளித்தார்கள். பின்னர் இறுதிவரை செவியுற்றார்கள்.*

*படைத்த உம் இறைவனின் பெயரால் படிப்பீராக. அவன் மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். படிப்பீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக்கொடுத்தான்.* (1-5)

*இந்த ஐந்து வசனங்கள்தாம் நபியவர்களுக்கு முதன் முதலாக அருளப்பட்ட வஹீயாகும். பின்னர் அத்தியாயத்தின் மீதமுள்ள பகுதிகள் அருளப்பட்டன.*

*இரத்தக் கட்டியிலிருந்து மனிதனைப் படைத்தவன் எழுத, படிக்கத் தெரியாத ஒருவரை அறிஞராக மாற்றவும் ஆற்றலுடையவன். முஹம்மது அதற்கு முன்னால் எந்த வஹீயையும் மார்க்கத்தையும் குறித்து அறிந்த*

தில்லை. திடீரென அவர் இந்த வஹீயை எதிர்கொண்டார். அல்லாஹ் தம்மைத் தேர்ந்தெடுத்துள்ளான் என்பதை அவர் உறுதியாக அறிந்த போது இதற்கு முன்னர் இப்றாஹீமும் மூசாவும் செய்தது போன்று புதியதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கினார். அவரது வாழ்க்கையை, வேதத்தை, போராட்டத்தை ஆராய்ச்சிசெய்யக்கூடிய உளப்பூர்வமான ஆய்வாளர், முஹம்மது யாரும் அடையாத உச்சியை அடைந்துவிட்டார் என்பதையும் இந்த உலகம் அவரைப் போல ஒரு வழிகாட்டியைக் கண்டதே இல்லை என்பதையும் உறுதியாக அறிந்து கொள்வார்.

சிறிது காலம் இடைவெளிக்குப் பிறகு இந்த வசனங்கள் அருளப் பட்டன: 'இருந்த போதிலும் மனிதன் வரம்புமீறுகிறான், தன்னைத் தேவையற்றவன் என்று அவன் கருதியதால். நிச்சயமாக உமது இறை வனிடமே திரும்ப வேண்டியுள்ளது. (6-8)' தேவை மனிதனை இழிவு படுத்துகிறது. ஆனாலும் அவன் தேவையற்றவனாக ஆகிவிட்டால் கர்வம் கொள்ளத் தொடங்குகிறான். இழிவடையாமல், கர்வம் கொள்ளாமல் நடுநிலையாக நடப்பதே அவனுக்கு உகந்தது. ஆயினும், மனிதர்களில் பெரும்பாலோர் செல்வந்தர்களாக ஆகிவிட்டால் மற்றவர்களை இழி வாகக் கருதவும் சத்தியத்துக்கு எதிராக வரம்புமீறவும் தொடங்கி விடு கிறார்கள். இவர்கள் மறுமையில் விசாரணையை எதிர்கொண்டே தீர வேண்டும்.

அத்தியாயம் இறைவனின் சான்றுகளை நிராகரிக்கக்கூடிய, தொழு கையையும் தூய்மையையும்விட்டு மற்றவர்களைத் தடுக்கக்கூடிய நிரா கரிப்பாளனைக் குறித்து பேசுகிறது. 'ஓர் அடியார் தொழும்போது அவரைத் தடுப்பவனை நீர் பார்த்தீரா? நீர் என்ன நினைக்கிறீர், அவர் நேர்வழியில் இருந்தாலுமா? அல்லது, இறையச்சத்தைக் கட்டளையிட்டாலுமா? (9-12)'

அல்முத்தஸ்ஸிர் என்ற அத்தியாயத்தில் மேலதிகமான பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

> 'உங்களை எந்த விசயம் நரகத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தது?' அவர்கள் கூறுவார்கள், 'நாங்கள் தொழுபவர்களாக இருக்கவில்லை. ஏழைகளுக்கு உணவளிக்கவுமில்லை. மாறாக, வீணாக விவாதம் புரிவோருடன் இணைந்து விவாதத்தில் மூழ்கிக்கிடந்தோம். நாங்கள் தீர்ப்புநாளை மறுத்துக்கொண்டிருந்தோம்.' (74:42-46)

இந்த அடிப்படையில்தான் முஹம்மதுக்கும் அவருடைய பகைவர் களுக்கும் மத்தியில் மக்காவில் கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்கள்

மோதல் நிகழ்ந்தது. இந்த மோதல் மறுமைநாள்வரை நீடிக்கும். ஏனெனில், நிராகரிப்பாளர்களில் பெரும்பாலோர் தொழுகையையும் ஸகாத்தையும் நிராகரிப்பவர்கள். அவர்கள் அல்லாஹ்வின் இருப்பில், அவனுடைய சந்திப்பில், அவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில் தர்க்கித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விசயத்தில் அவர்களின் கோபமெல்லாம் இஸ்லாத்தின் மீதுதான் இருக்கிறது. ஏனெனில், இஸ்லாம் கட்டுப்படுதல் விசயத்தில் எவ்வித சமரசத்தையும் ஏற்றுக்கொள்ளாது. 'அவன் சத்தியத்தை நிராகரித்துப் புறக்கணித்தால் அவனைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பது அவனுக்குத் தெரியாதா? (13,14)'

இரு பிரிவினர்களுக்கு மத்தியில் நிச்சயமாகப் போர் நிகழ்ந்தே தீரும். ஒரு பிரிவினர் ஹலால், ஹறாம் சட்டங்களோடு, சத்தியத்தோடு, கடமைகளோடு இணைந்தவர்கள். இன்னொரு பிரிவினர் தங்களைத் தாங்களே தலைவர்களாகக் காண்பவர்கள். தங்களுக்கு அறிவுரை கூறும் உரிமை ஒருவருக்கும் இல்லை என்று கருதக்கூடியவர்கள்.

'அவ்வாறன்று! அவன் விலகிக்கொள்ளவில்லையெனில் அவனது நெற்றி முடியைப் பிடித்திழுப்போம். (15)' அவன் அந்தப் பிடியிலிருந்து தப்பியோட முடியாது.

'பாவம்செய்த, பொய்யுரைத்த அந்த நெற்றியை. (16)' மக்காவின் தலைவர்கள் இந்த அறைகூவலைச் செவியுற்றார்கள். ஆனாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

❖ ❖ ❖

அத்தியாயம் 97

# அல்கத்ர்

(கண்ணியம்மிக்க இரவு)

*திருக்குர்ஆன் கண்ணியம்மிக்க ஓர் இரவில் அருளப்படத் தொடங்கியது. முஸ்லிம்கள் லைலத்துல் கத்ர் என்ற பெயரால் அதனை அறிகிறார்கள். இந்த இரவு எந்த இரவு என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. பெரும்பாலோர் அது ரமளானின் கடைசிப் பத்தில் ஓர் இரவு என்று கருதுகிறார்கள். சந்திர வருட கணக்கின்படி சந்திரனின் உதிப்பும் மறைவும் வேறுவேறானதாக இருப்பதால் யார் அந்த இரவின் மூன்றாவது பகுதியில் எழுந்து தொழ விரும்புகிறார்களோ அவர்களுக்காக அதனைக் குறிப்பிட்ட நேரம் என்று நிர்ணயித்துச் சொல்வது கடினமானது.*

*குர்ஆன் அருளப்பட்ட இரவு வணக்க வழிபாட்டுக்கும் பிரார்த்தனைக்கும் உகந்தது என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. ஏனெனில், இந்தக் குர்ஆனைக் கொண்டுதான் வஹீ நிறைவடைந்துள்ளது; அருட்கொடைகள் முழுமையடைந்துள்ளன. அறபுகள் அதன் தூதுத்துவத்தை ஏற்றுக்கொண்டு, அதனைப் பரப்பும் பொறுப்பை ஏற்படுத்துக்கொண்ட பிறகுதான் அவர்கள் வரலாற்றில் இடம்பெற்றார்கள்.*

*இந்த இரவு ஏராளமான நன்மைகளைக் கொண்டது என்று பின்வரும் வசனத்திலிருந்து தெரியவருகிறது:*

அ. *கண்ணியம் மிக்க இரவு என்னவென்று உமக்குத் தெரியுமா? கண்ணியம் மிக்க இரவு ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்ததாகும்.* (2,3)

ஆ. *வானவர்களும் ஜிப்ரீலும் தங்கள் இறைவனின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு எல்லாக் காரியங்களுடன் இறங்குகிறார்கள்.* (4)

*இந்த வசனம் அத்துஃகான் என்ற அத்தியாயத்தில் இடம்பெற்ற பின்வரும் வசனத்தைப் போல: 'ஞானம் நிரம்பிய எல்லா விவகாரங்களும் நம் கட்டளையால் அன்று இரவு உறுதிசெய்யப்படுகின்றன. நாம் தூதர்களை அனுப்புவோராக இருந்தோம். அது உம் இறைவனின் அருளாகும். (44:4-6)' இந்தக் குர்ஆன் மனிதச் சமூகத்துக்கு அவசியமான வழிகாட்டல்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. அதன் வசனங்களால் மட்டுமே மனித அறிவைத் திருப்திப்படுத்த முடியும். அதன் தெளிவைக் கொண்டு மட்டுமே மனித அறிவு உறுதியைப் பெற முடியும்.*

*பொருள்களின் சிறப்புகள் அவற்றின் எதிர்மறைகளால் அறியப்படுகின்றன. திருக்குர்ஆனையும் இன்னபிற வேதங்கள் என்று சொல்லப்படுபவற்றையும் ஒரு வாசகன் ஒப்பிட்டுப்பார்த்தால் அவன் கூறுவான், 'இது அல்லாஹ்வைக் குறித்து அறிவிக்கக்கூடிய, அவன்மீதான அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய எவ்வளவு மகத்தான வேதம்!'*

*திருக்குர்ஆன் அருளப்பட்ட இரவு அமைதி நிரம்பிய இரவாகும். இந்த அமைதிதான் முஸ்லிம்களாகிய நம்முடைய இலட்சியம். மாறாக, ஓரிறைக் கொள்கையைப் பின்பற்றுவோருக்கு இடமளிக்க இணைவைப்பாளர்கள் மறுக்கும்போது என்ன செய்வது என்றே நாங்கள் கேட்கிறோம்?*

> *நிராகரிப்பாளர்கள் தங்கள் தூதர்களிடம், 'நீங்கள் எங்கள் மார்க்கத்துக்குத் திரும்பிவிட வேண்டும். இல்லையெனில் எங்களின் ஊரிலிருந்து உங்களை வெளியேற்றிவிடுவோம்.' என்று கூறினார்கள்.* (14:13)

❖ ❖ ❖

அத்தியாயம் 98

# அல்பய்யினா

(தெளிவான ஆதாரம்)

*இந்த அத்தியாயம் பொதுவான வரலாற்றை விவரிக்கிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் உலக வரைபடத்தைப் பார்ப்பவர் வடக்கு ஆப் பிரிக்காவும் மேற்கு ஆசியாவும் கிறிஸ்தவர்களால் நிரம்பியிருந்ததையும் ரோமானியர் அவற்றை ஆட்சிசெய்ததையும் காண்பார். அவற்றுக்கு அப்பால் இந்தியா, சீனா போன்ற இணைவைப்பாளர்களால் நிரம்பிய விசாலமான பூமி இருந்தது.*

*கிபி ஏழாம் நூற்றாண்டில் உலக வரைபடம் மாறியது. மேற்குப் பகுதி கள், நைல் நதிக்கரைகள், ஷாம், யமன் ஆகிய நாடுகள் இஸ்லாத்தால் வெற்றிகொள்ளப்பட்டன. இரண்டு பெரும் கண்டங்களிலும் பாங்கின் ஒலிகள் உயர்ந்தன.*

*உண்மையாகவே கிறிஸ்தவத்தைப் பின்பற்றியவர்கள் இஸ்லாத்தை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் முஹம்மதின் தூதுத்துவத் தில் தங்கள் வேதங்களில் கூறப்பட்டதைக் கண்டார்கள். அல்இஸ்றா என்ற அத்தியாயத்தில் இஸ்லாம் இதனைப் படம்பிடித்துக் காட்டுகிறது:*

> *இதற்கு முன்னர் அறிவு வழங்கப்பட்டோரிடம் இது எடுத்துரைக் கப்பட்டால் அவர்கள் சிரம்பணிந்தவர்களாக முகங்குப்புற விழு வார்கள். 'எங்கள் இறைவன் தூய்மையானவன். எங்கள் இறை வனின் வாக்குறுதி நிறைவேறியே தீரும்.' என்றும் அவர்கள் கூறு வார்கள். அவர்கள் அழுதவாறே முகங்குப்புற விழுகிறார்கள். குர்ஆன் அவர்களின் பணிவை இன்னும் அதிகரித்துவிடுகிறது.* (17:106-109)

*அதே போன்று, அர்றஃது என்ற அத்தியாயத்தில் வந்துள்ளது:*

நாம் யாருக்கு வேதத்தை வழங்கியுள்ளோமோ அவர்கள் உமக்கு அருளப்பட்டுள்ளதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்கள். வேதங்களில் சிலவற்றை நிராகரிக்கக்கூடியவர்களும் அந்தக் குழுக்களில் இருக்கிறார்கள். நீர் கூறும், 'அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என்றும் அவனுக்கு இணைகளை ஏற்படுத்தக் கூடாது என்றும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். அவன் பக்கம் நான் அழைக்கிறேன். அவனிடமே திரும்ப வேண்டும்.' (13:36)

அல்அன்கபூத் என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது:

இவ்வாறே நாம் உம்மீது வேதத்தை அருளினோம். யாருக்கெல்லாம் நாம் வேதம் வழங்கியுள்ளோமோ அவர்கள் இதன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். உங்களிலும்கூடச் சிலர் இதன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். (29:47)

இங்கு 'உங்களில்' என்பது அறபுகளில் உள்ள இணைவைப்பாளர்களைக் குறிக்கும்.

கிறிஸ்தவ நாடுகளில் இஸ்லாத்தின் பரவல் மிக அதிகமாக இருந்தது என்பதை வரலாறு எடுத்துரைக்கிறது. அதன் பிறகு இஸ்லாம் அங்கு பரவாததற்கான காரணம் சில உள்ளார்ந்த சூழல்களே ஆகும். இது அவற்றைக் குறித்து பேசுவதற்கான இடம் அல்ல.

கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதைப் போன்றே நெருப்பு வணங்கிகளும் புத்தர்களும் சிலை வழிபாட்டாளர்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். இது எப்படி நிகழ்ந்தது? இதுதான் திருக்குர்ஆனின் தாக்கம்.

வேதக்காரர்களிலும் இணைவைப்பாளர்களிலும் உள்ள நிராகரிப்பாளர்கள் தங்களிடம் தெளிவான ஆதாரம் வரும்வரை - தங்களின் கொள்கைகளிலிருந்து - விலகுபவர்கள் அல்லர். அல்லாஹ்விடமிருந்து ஒரு தூதர் தூய்மையான வேத நூல்களை ஓதிக் காண்பிக்க வேண்டும். அதில் சரியான சட்டதிட்டங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். (1-3)

இஸ்லாத்தை இயல்பாகவும் சிந்தனையாகவும் நாகரிகமாகவும் தூய்மையாகவும் முன்வைப்பவர்கள் இருந்தால் வரலாற்றை மீண்டும் திருப்புவதற்கு இஸ்லாம் ஆற்றலுடையதுதான். ஆனால், இந்தப் பண்புகள் இன்றைய முஸ்லிம்களிடத்தில் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இருந்தபோதிலும் மனிதர்களில் சத்தியத்தை அறிந்தோரும் இருக்கிறார்கள்.

ஆனாலும் அவர்களின் நலன்களும் ஆசைகளும் அதனை மிகைத்து விடுகின்றன.

முந்தைய, பிந்தைய வேதக்காரர்களில் உலக ஆதாயத்துக்காகத் தங்களின் மார்க்கத்தை விற்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இறைத்தூதர்களைக் கொலைசெய்துள்ளார்கள். சிலர் சீர்திருத்தவாதிகளைச் சித்திரவதைக்குள்ளாக்கியிருக்கிறார்கள். நாம் மதத்தை வைத்து பிழைப்பு நடத்துவோரின் வரலாற்றைக் காணும்போது பெரும் துன்பத்தையே காண்கிறோம்.

> வேதக்காரர்கள் தங்களிடம் தெளிவான ஆதாரம் வந்தபின்னரே பிளவுபட்டார்கள். 'மார்க்கத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கி முழு நம்பிக்கையுடையவர்களாக அவனுக்கு வழிபட வேண்டும். தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தையும் அளிக்க வேண்டும்.' என்றுதான் அவர்கள் பணிக்கப்பட்டார்கள். இதுதான் சரியான மார்க்கமாகும். (4,5)

அறிவின் வெளிச்சம் உள்ளத்தின் வெளிச்சத்தையும் கொண்டுவரும் என்பது நிச்சயமானதல்ல என்பதும் தெரியவருகிறது. அல்லாஹ் சிந்திக்க இயலாதோரை மன்னிக்கலாம். ஆனால், மனஇச்சையால் மிகைக்கப்பட்ட அறிவுடையோரை அவன் மன்னிக்க மாட்டான்.

மார்க்கத்தின் சடங்குகளைப் பாதுகாக்கக்கூடியவர்களில் சிலர் கஞ்சத்தனத்தாலும் எல்லைமீறும் சுயநலத்தாலும் அடிமைப்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம். அல்லாஹ் மனிதர்களின் இரகசியங்களையும் நன்கறிந்தவன். 'சீர்திருத்தம் செய்வோரையும் குழப்பம் உண்டாக்குவோரையும் அல்லாஹ் நன்கறிவான். (2:220)' அவன் இந்த அத்தியாயத்தில் கூறுகிறான்:

> நிச்சயமாக வேதக்காரர்களிலும் இணைவைப்பாளர்களிலும் உள்ள நிராகரிப்பாளர்கள் நரக நெருப்பில் நிரந்தரமாக வீழ்ந்துகிடப்பார்கள். இவர்கள்தாம் படைப்புகளில் மிகவும் கெட்டவர்கள். (6)

அல்லாஹ் யாருக்காவது அநீதி இழைத்துவிடுவான் என்று நான் நம்பவில்லை. இது சாத்தியமற்றது. நான் அஞ்சுவது, அல்லாஹ் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுவானோ, தன் அருளை நிறுத்திக்கொள்வானோ என்றுதான். ஆனால் இதுவும் அகற்றப்பட வேண்டிய, தேவையற்ற அச்சம்தான். ஏனெனில், அல்லாஹ் பாவங்களை மன்னிக்கக்கூடியவன், பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியவன். அழியக்கூடியவனைத் தவிர வேறு யாரும் அல்லாஹ்வின் விசயத்தில் நிராசையடைய மாட்டார்கள்.

*நற்செயல் புரிகின்ற நம்பிக்கையாளர்களுக்கு அழகிய வாக்குறுதியைக் கொண்டு அத்தியாயம் நிறைவடைகிறது. ஆனால் ஒரு நிபந்தனை, அவர்கள் அல்லாஹ்வுக்காகப் பொறுமையைக் கடைப்பிடிப்பவர் களாகவும் அவனுடைய அச்சத்தால் தங்களை அலங்கரித்துக் கொள்ப வர்களாகவும் இருக்க வேண்டும்.*

*நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தவர்கள்தாம் படைப்புகளில் மிகவும் சிறந்தவர்கள். அவர்களின் கூலி அவர்களுடைய இறைவ னிடம் நிலையான சுவனங்களாகும். அவற்றில் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப் பார்கள். அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தியடைந்தான். அவர்களும் அவனைக் குறித்து திருப்தியடைந்தார்கள். இவை யார் தம் இறைவனுக்கு அஞ்சினாரோ அவருக்கே உரியவையாகும்.* (7,8)

*இதற்கு முன்னர் உலகை மாற்றிய தலைமுறை திருக்குர்ஆனின் உயி ருள்ள உதாரணமாக இருந்தது. அது ஒரு ஊருக்குள் நுழைந்தால் விரைந்து அங்கு நீதியையும் கருணையையும் நிலைநாட்டியது. அதன் அரவணைப் பில் பலவீனர்கள் கண்ணியத்தையும் பலத்தையும் பெற்றார்கள்.*

*ஆனால் இன்றோ இஸ்லாமிய நாடுகள் வேறு மாதிரியாக இருக்கின்றன.*

❖ ❖ ❖

அத்தியாயம் 99

# அஸ்ஸில்ஸால்

(நிலநடுக்கம்)

*மறுமைநாள் நிகழ்வதற்கு முன்னால் பெரும்பெரும் பூகம்பங்கள் இந்தப் பூமியில் ஏற்படும். அவை எல்லாக் கண்டங்களில் உள்ள மனிதர்கள் அனைவரையும் ஆட்கொண்டுவிடும். பூகம்பத்தின் பாதிப்பு அதன் கால அளவுக்கும் கடுமைக்கும் ஏற்ப மாறக்கூடியது. சில நிமிட நேரங்கள் தொடர்ந்து நீடிக்கும் பூகம்பம் தலைநகரங்களைத் தகர்த்துவிடும்; ஊர்களை வெறும் மணற்குவியலாக ஆக்கிவிடும். அரை நிமிடம் மட்டுமே நீடித்த ஒரு பூகம்பத்தை நான் கண்டிருக்கிறேன். அது அறிவைச் சிதறடித்துவிட்டது. மனிதர்களைத் திசை தெரியாமல் ஓடவைத்துவிட்டது. பூகம்பத்தோடு எரிமலை வெடிப்பும் இணைந்துவிட்டால் வேதனை பன்மடங்காகிவிடும். 'பூமி பலமாக உலுக்கப்படும்போது, அது தன் சுமைகளை வெளியேற்றிவிடும். அதற்கு என்ன நேர்ந்தது என்று மனிதன் கேட்பான். (1-3)'*

*அதற்கு என்ன நிகழ்ந்தது? அது நம்மிடம் எதை நாடுகிறது? 'அந்த நாளில் அது தன் செய்திகளை அறிவிக்கும். ஏனெனில், உம் இறைவன் அதற்கு இவ்வாறே கட்டளையிடுவான். (4,5)' அந்த நாளில், அதுதான் வாக்களிக்கப்பட்ட நாள் என்பதையும் விசாரணைக்கான நேரம் நெருங்கிவிட்டது என்பதையும் மனிதர்கள் உணர்ந்துவிடுவார்கள். 'அந்த நாளில் மனிதர்கள் தங்களின் செயல்களைக் காண்பதற்காகத் தனித்தனியாக வருவார்கள். (6)'*

*அந்த நாளில் அவர்களின் இந்த உணர்வே மிகைத்திருக்கும்:*

> *ஒவ்வொரு மனிதனும் தான் செய்த நன்மைகளையும் தீமைகளையும் தன் கண்ணெதிரில் காணும் நாளில் தனக்கும் அந்த நாளுக்கும் இடையே மிகத் தூரமான இடைவெளி இருக்கக் கூடாதா என்று விரும்புவான். (3:30)*

*அணுவளவு செயலுக்கும் அந்தக் கடினமான நாளில் விசாரணையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.*

*ஹதீஸில் வந்துள்ளது. நபியவர்களிடம் சிறிய கழுதைக்கான ஸகாத் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள், 'அல்லாஹ் அதுகுறித்து தனித்துவமான, இரத்தினச்சுருக்கமான இந்த வசனத்தைத் தவிர வேறு எதையும் அருளவில்லை' என்று கூறினார்கள்: 'யார் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அதனை அவர் கண்டுகொள்வார். யார் அணுவளவு தீமைசெய்திருந்தாலும் அதனையும் அவர் கண்டுகொள்வார். (7,8)'*

❖ ❖ ❖

அத்தியாயம் 100

# அல்ஆதியாத்

(வேகமாக ஓடக்கூடியவை)

*ஜிஹாது, கொள்கையையும் உண்மையையும் நாடுகளையும் புனிதங்களையும் பாதுகாக்கும். அது பலவீனமான எதிர்ப்பைக் கண்டால் அதனை மிகைத்து தன் நோக்கத்தை அடைந்துவிடுகிறது. அசத்தியம் அதிகாரத்தின் வழியே தன் சடங்குகளைச் சமூகங்களின் மீது திணிப்பதை நான் கண்டிருக்கிறேன்.*

*குகையில் தஞ்சமடைந்த இளைஞர்களின் கூற்றை நான் அடிக்கடி நினைவுகூர்கிறேன். அவர்களில் சிலர் சிலரிடம் கூறினார்கள்: 'அவர்கள் உங்களை அறிந்துகொண்டால் உங்களைக் கல்லால் அடித்துக் கொன்றுவிடுவார்கள் அல்லது பலவந்தமாக உங்களை தங்களின் மார்க்கத்துக்குத் திருப்பிவிடுவார்கள். அவ்வாறு நடந்துவிட்டால் ஒருபோதும் நீங்கள் வெற்றிபெற மாட்டீர்கள். (18:20)'*

*இதன் காரணமாக அல்லாஹ் ஜிஹாதின் ஆயுதங்களைக் கொண்டு சத்தியம்செய்கிறான்.*

> *மூச்சிரைக்க வேகமாக ஓடுகின்ற குதிரைகள்மீது சத்தியமாக. அவை குளம்புகளிலிருந்து தீப்பொறியை எழுப்பக்கூடியவை; அதிகாலைப் பொழுதில் தாக்குதல் நடத்தக்கூடியவை; அதனால் புழுதியைக் கிளப்பக்கூடியவை; படைகளுக்கு மத்தியில் ஊடுருவிச் செல்லக் கூடியவை. நிச்சயமாக மனிதன் தன் இறைவனுக்கு நன்றிகெட்டவனாக இருக்கிறான். (1-6)*

*படைவீரர்களுடன் குதிரைகள் வேகமாக ஓடும்போது மூச்சிரைக்கும். அவற்றின் குளம்புகள் தரையோடு வேகமாக உரசுவதால் தீப்பொறிகள் தெறிக்கும். அவற்றின் மீது இருக்கும் மனிதர்கள் தாக்குதல் தொடுப்ப*

*தற்காக அல்லது தங்களைக் காத்துக்கொள்வதற்காக மரணத்தை முன் னோக்குகிறார்கள். அப்போது அசத்தியவாதிகள் தாங்கள் செய்தவற்றால் ஏற்பட்ட பாதிப்பை அறிந்துகொள்கிறார்கள். அதற்கான விலையாகத் தங்கள் உயிரையே இழக்கிறார்கள்.*

*சில சமயங்களில் ஜிஹாது கிருமிகளை அழிக்கப் பயன்படும் திரவத் தைப் போன்று செயல்படுகிறது; பயிர்களையும் மடுக்களையும் பாது காக்கிறது.*

*உண்மையில் இந்தக் காலத்தில்தான் போர்வீரர்களும் ஆளுமைகளும் அதிகம் தேவைப்படுகிறார்கள். நன்றிகெட்டவர்களும் அநியாயக்காரர் களும் நல்ல கொள்கைகளையும் நற்பண்புகளையும் அழிக்கவும் பொய் யையும் அநியாயத்தையும் பரப்பவும் விரும்புகிறார்கள். 'நிச்சயமாக மனிதன் தன் இறைவனுக்கு நன்றிகெட்டவனாக இருக்கிறான். அவனே அதற்குச் சாட்சியாகவும் இருக்கிறான். (6,7)'*

*மறுமை தற்காலத்தில் மறுக்கப்பட்டதைப் போன்று வேறெந்தக் காலத்திலும் மறுக்கப்பட்டதாகவோ தற்காலத்தில் இந்த உலகம் வழி படப்படுவதைப் போன்று வேறெந்தக் காலத்திலும் வழிபடப்பட்ட தாகவோ நான் கருதவில்லை.*

> *அவன் அடக்கத் தலங்களிலிருந்து எழுப்பப்பட்டு, உள்ளங்களில் உள்ளவை எல்லாம் வெளிப்படுத்தப்படும் நேரத்தை அறிந்து கொள்ளவில்லையா? நிச்சயமாக அந்நாளில் அவர்களின் இறைவன் அவர்களைப் பற்றி நன்கறிந்தவன். (10,11)*

❖ ❖ ❖

அத்தியாயம் 101

# அல்காரிஆ

(திடுக்கிடச் செய்யும் நிகழ்வு)

*மறுமைநாள் நிகழ்வதற்குச் சற்று முன்னர் மனிதர்கள் தங்கள் வீடுகளிலோ வேலைகளிலோ இருக்கும்போது அச்சுறுத்தக்கூடிய சப்தம் ஒன்று வரும். அது விழித்திருப்பவர்களைப் பதற்றத்தில் ஆழ்த்திவிடும். உறங்கக் கூடியவனை விழிப்பில் ஆழ்த்திவிடும். அனைவரும் பேராபத்து தங்களைச் சூழ்ந்துள்ளதாக உணர்வார்கள். 'அழைப்பவர் மிக அருகிலிருந்து அழைக்கும் நாளைச் செவிமடுத்துக்கொள்ளுங்கள். அந்த நாளில் மனிதர்கள் உறுதியாகப் பேரொலியைக் கேட்பார்கள். அதுதான் வெளிப்படும் நாளாகும். (50:41,42)' அது மணியின் ஓசையா? காதுகளைக் கிழிக்கும் பேரொலியா?*

> *அது திடுக்கிடச் செய்யும் நிகழ்வு. திடுக்கிடச் செய்யும் நிகழ்வு என்றால் என்ன? திடுக்கிடச் செய்யும் நிகழ்வு என்னவென்று உமக்குத் தெரியுமா? அந்த நாளில் மனிதர்கள் ஈசல்களைப் போன்று சிதறுண்டு கிடப்பார்கள். மலைகள் கொட்டப்பட்ட பஞ்சைப் போன்று ஆகிவிடும்.* (1-5)

*மலைகள் தங்களின் உறுதித்தன்மையை இழந்து, கொட்டப்பட்ட பஞ்சைப் போன்று கிடக்கும்.*

*மனிதர்கள் ஈசல்களைப் போன்று சிதறிக்கிடப்பார்கள். யாரும் யாரையும் பார்க்க மாட்டார்கள். ஒவ்வொருவனும் தன் எதிர்காலத்தையே தேடிக்கொண்டிருப்பான். தன் இருப்பிடம் எங்கே என்று அறிய விரும்புவான். நிச்சயமாக நீ கடந்துபோன நாள்களில் உன் எதிர்காலத்தை உருவாக்கிவிட்டாய். 'ஆகவே யாருடைய எடைத்தட்டு கனமாக இருக்குமோ அவர் மனதுக்குப் பிடித்தமான வாழ்வைப் பெறுவார். (6,7)' இங்கு எடைத்தட்டு என்பது நன்மைகள் நிறுக்கப்படும் எடைத்தட்டாகும்.*

அவனுடைய நன்மை குறைவாகவும் தீமை அதிகமாகவும் இருந்தால், ‘யாருடைய எடைத்தட்டு இலேசாக இருக்குமோ அவரது இருப்பிடம் படுகுழியாகும். (8,9)’ இங்கு அறபியில் பயன்படுத்தப்பட்டுள்ள ‘உம்’ என்ற வார்த்தை, மகனுடைய கவலையைக் குறிப்பதற்கு அறபுகள் பயன்படுத்தும் சொல்லாடலாகும். மகனுடைய மகிழ்ச்சியையும் கவ லையையும் அறபுகள் தாயோடு தொடர்புபடுத்தி குறிப்பிடுவார்கள். ஒரு கிராமப்புற அறபி, ‘அல்லாஹ் இப்றாஹீமைத் தன் நண்பனாக ஆக்கிக் கொண்டான். (4:125)’ என்ற வசனத்தைச் செவியுற்றபோது கூறினார், ‘இப்றாஹீமுடைய தாயின் கண்கள் குளிர்ச்சியடைந்துவிட்டன’. இங்கு ஹாவியா என்பது நரகமாகும். ‘அது என்னவென்று உமக்குத் தெரியுமா? அது கொழுந்துவிட்டு எரியும் நெருப்பாகும். (10,11)’

❖ ❖ ❖

அத்தியாயம் 102

# அத்தகாஸுர்

(அதிகமதிகம் தேடுவது)

*‘அதிகப்படுத்திக்கொள்ளும் பேராசை உங்களை அலட்சியத்தில் ஆழ்த்திவிட்டது, நீங்கள் அடக்கத் தலங்களைச் சென்றடையும்வரை (அதே நிலையிலேயே நீடிப்பீர்கள்). (1,2)’* சிலைகளை வணங்கும் இணை வைப்பாளர்கள் விளித்து உரையாடப்படுகிறார்கள். தங்களின் தேவைகளை மட்டுமே நிறைவேற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்ட அனைவரையும் இது குறிக்கும். நாம் மனிதர்களின் நிலைகளைக் கவனித்துப் பார்க்கும்போது மறுமையைக் குறித்து அவர்கள் எதுவும் சிந்திப்பதில்லை என்பதை அறிய முடிகிறது. மறுமையைக் குறித்தான பேச்சு முக்கியத்துவமற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது. அவர்கள் இவ்வுலகத் தேவைகளுக்குப் பின்னால் ஓடுகிறார்கள் என்பது மட்டுமல்ல. மாறாக, அந்த விசயத்தில் போட்டிபோட்டுக்கொண்டு ஒருவர் மற்றவரை முந்த முயன்றுகொண்டிருக்கிறார்கள். மரணிக்கும்வரை இந்தப் போட்டியிலிருந்து அவர்களால் விடுபட முடியாது.

*‘அடக்கத் தலங்களைச் சந்திக்கும்வரை!’* இங்கு சந்தித்தல் என்ற வார்த்தை, அடக்கத் தலம் இறுதி இருப்பிடம் அல்ல என்பதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து விசாரணைக்காக அவர்கள் வெளிப்பட்டே தீர வேண்டும்.

> *எக்காளம் ஊதப்பட்டதும் உடனே அவர்கள் அடக்கத் தலங்களிலிருந்து வெளிப்பட்டுத் தம் இறைவனிடம் விரைவார்கள். ‘அந்தோ, எங்கள் துர்பாக்கியமே! எங்களின் அடக்கத் தலங்களிலிருந்து எங்களை எழுப்பியது யார்?’ என்று அவர்கள் கேட்பார்கள். இதுதான் அளவிலாக் கருணையாளன் அளித்த வாக்குறுதி. தூதர்கள் உண்மையையே கூறினார்கள்.* (36:51,52)

அடக்கத் தலம் அதற்கு அடுத்த உலகத்துக்கும் முந்தைய உலகத் துக்கும் மத்தியில் உள்ள பாலமாகும்.

'அவ்வாறன்று, நீங்கள் விரைவில் அறிந்துகொள்வீர்கள்! அவ்வாறன்று, நீங்கள் விரைவில் அறிந்துகொள்வீர்கள்! (3,4)' திடீரென அவர்கள் நிரந்தரமான வீட்டை கண்ணால் காணும்போது அறிந்துகொள்வார்கள். பின்னர் இவ்வுலக வாழ்க்கையை வழிபடக்கூடியவர்களிடம் கூறப்படு கிறது: 'அவ்வாறன்று! உறுதியாக நீங்கள் அறிந்துகொள்வீர்களாயின் நிச்சயமாக நீங்கள் நரகத்தைக் காண்பீர்கள். (5,6)' நீங்கள் தூதர்களை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக இருந்திருந்தால் உங்களின் முடிவு வேறு மாதிரியாக இருந்திருக்கும். நீங்கள் நரக வேதனையைவிட்டும் பாதுகாக்கப்பட்டிருப்பீர்கள். ஒரு மனிதன் ஒரு பேரீச்சம் பழத்தின் சிறு துண்டைக் கொண்டுகூடத் தன்னை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனாலும் அவன் அவ்வாறு செய்யாமல் கூலி கொடுக் கப்படும் நாளில் நரகத்தில் நுழைபவனாக இருக்கிறான். 'அதனைக் கண்கூடாகக் காண்பீர்கள். (7)'

'பின்னர், அந்நாளில் அருட்கொடைகளைப் பற்றிக் கட்டாயம் விசா ரிக்கப்படுவீர்கள். (8)' மனிதர்கள் அனுபவித்த, நன்றி செலுத்தாத ஒவ் வொரு அருட்கொடையைக் குறித்தும் மறுமைநாளில் அவர்களிடம் விசாரிக்கப்படும். அப்போது நிராகரிப்பாளர்களிடம் கூறப்படும்: 'நீங்கள் உங்களுக்குக் கிடைத்த நல்லவற்றையெல்லாம் வீணடித்து, அவற்றின் மூலம் உலகில் அனுபவித்துவிட்டீர்கள். (46:20)'

அதிகமதிகம் பெற்றும் அனுபவித்தும் என்ன பயன்? அவர்கள் இழி வான வேதனைக்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்கிறார்கள். 'ஏனெனில், நீங்கள் பூமியில் நியாயமின்றிப் பெருமையடித்துக் கொண் டும் பூரிப்படைந்துகொண்டும் இருந்தீர்கள். (40:75)'

❖ ❖ ❖

அத்தியாயம் 103

# அல்அஸ்ர்

(காலம்)

*‘காலத்தின் மீது சத்தியமாக. நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். (1,2)’ ‘ஒருவர் இன்ன காலத்தில் வாழ்ந்தார்’ என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. காலத்துக்குத் தனித்துவமான அடையாளம் இருக்கிறது. அதைக் கொண்டு மனிதர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். நபித்தோழர்களின் காலகட்டம், அணுவின் காலகட்டம், விண்வெளியின் காலகட்டம் எனப் பல விசயங்கள் காலத்தோடு இணைக்கப்பட்டு அழைக்கப்படுகின்றன. ஒரே காலகட்டத்தில் வாழ்பவர்கள் பழக்க வழக்கங்களிலும் வாழ்க்கை முறைகளிலும் ஒன்றுபோலவே இருந்தாலும் தங்களின் நடத்தைக்கேற்ப, வழிமுறைகளுக்கேற்பச் சேருமிடங்கள் மற்றும் பெறக்கூடிய கூலிகளின் அடிப்படையில் வேறுபட்டுள்ளார்கள். ஒரே நிறுவனத்தில் பணியாற்றக்கூடிய இரு மனிதர்களில் ஒருவர் சுவனத்துக்கும் ஒருவர் நரகத்துக்கும் செல்கிறார், தங்களின் பண்புகளிலும் நம்பிக்கையிலும் காணப்பட்ட வேறுபாட்டின் காரணமாக. மனஇச்சைகளுக்குப் பின்னால் ஓடுவது இழப்பின் பக்கம் கொண்டுசேர்க்கும். பெரும்பான்மை தவறானதாக, சிறுபான்மை சரியானதாக இருக்கலாம். அசத்தியம் பெரும்பான்மையாக இருந்தாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. சத்தியம் சிறுபான்மையாக இருந்தாலும் அதனால் எந்த இழப்பும் ஏற்படப்போவதில்லை.*

*சிறிய இந்த அத்தியாயம் காலம், இடத்தைத் தாண்டி மனிதச் செயல்பாட்டின் விளைவுகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது. அல்லாஹ்வின் தொடர்பற்று இருப்பவர்கள் நரகத்தின் எரிபொருளாகத்தான் இருப்பார்கள். ஈமானைக் கொண்டும் உண்மையைக் கொண்டும் நேர்மையைக் கொண்டும் தங்களை அலங்கரித்துக் கொண்டவர்கள் வாழ்க்கைக் களத்தில் வெற்றிபெறுவார்கள்.*

இந்த நான்கு பண்புகளும் தனித்துவமானவை. மனிதன் மீது கால கட்டம் கடந்துசெல்லலாம். ஆனால், இந்தப் பண்புகளைப் பெற்ற வர்களுக்கு அல்லாஹ் நற்செய்தியை வழங்கிவிடுகிறான். 'ஆயினும், நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்து ஒருவருக்கொருவர் சத்தி யத்தைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்களே அவர்களைத் தவிர. (3)'

நபித்தோழர்கள் இந்த அத்தியாயத்தைத் தங்களின் சந்திப்புக்கான ஓர் அடையாளமாக ஆக்கியிருந்தார்கள். ஹதீஸில் வந்துள்ளது, 'நபித் தோழர் களில் இருவர் சந்தித்துக் கொண்டால் ஒருவர் மற்றவருக்கு அல் அஸ்ர் அத்தியாயத்தை ஓதிக்காட்டாமல் பிரிய மாட்டார்.' இமாம் ஷாஃபிஈ கூறுகிறார், 'மக்களுக்கு வேறு எதுவும் அருளப்படாமல் இந்த அத்தியாயம் மட்டும் அருளப்பட்டிருந்தாலும் அதுவே அவர்களுக்குப் போதுமானது.'

சிலர், 'சத்தியம் கசப்பானது. அதில் நிலைத்திருப்பது ஒடுக்கப்படு வதற்கான வழியைத் திறக்கும்.' என்றும் 'ஈமான் என்பது பழமைவாதம்' என்றும் கூறுகிறார்கள். நம்பிக்கையாளர்கள் களத்தில் வெல்வதற்கு உறுதியோடு நிலைத்திருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 104

# அல்ஹுமஸா

(புறங்கூறுதல்)

*நம்பிக்கையாளர்களுக்கு எதிராகக் குற்றவாளிகள் தொடுத்த போர்களில் பரிகாசமும் இழிவுபடுத்துதலும் ஒன்றாகும். 'குற்றவாளிகள் நம்பிக்கையாளர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அவர்களைக் கடந்துசெல்லும்போது கண்களால் சாடை காட்டிக் கொண்டிருந்தார்கள். (83:29,30)' இறுதிக் காலகட்டத்தில் இந்தப் போர்கள் திட்டமிட்டு வகுக்கப்பட்டன. அவற்றுக்கெனத் தனித்துவமான புத்தகங்களும் எழுதப்பட்டன.*

*வஹீ அருளப்பட்ட சமயத்தில் மக்காவில் இருந்த செல்வந்தர்கள் கேளிக்கை அரங்குகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தார்கள். அவற்றில் முஸ்லிம்களைக் குறைகூறிக் கொண்டும் புறம்பேசிக் கொண்டும் இருந்தார்கள். அப்போது இந்த அத்தியாயம் அருளப்பட்டது: 'குறைகூறிப் புறம்பேசித் திரியும் ஒவ்வொருவருக்கும் கேடுதான். அவன் செல்வத்தைச் சேகரித்து அதை எண்ணி எண்ணி வைக்கிறான். அவனது செல்வம் எப்போதும் அவனிடமே இருக்கும் என்று எண்ணுகிறான். (1-3)'*

*குறைகூறுதல், புறம்பேசுதல் நாவின் மூலமாக அல்லது சைகையின் மூலமாக நிகழலாம். கண்ஜாடையின் மூலமாகவும் நிகழலாம். சில பத்திரிகைகளில் இடம்பெறும் கேலிச்சித்திரங்களும் இந்த வகையில் அடங்கும்.*

*இப்படிப் பரிகாசம்செய்யக்கூடிய அசத்தியவாதிகள் செல்வத்தின் நிழலில் சுகபோகமாக வாழக்கூடியவர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் கேடுதான் உண்டாகும். அல்லாஹ் இப்படிப்பட்டவனைக் குறித்து கூறுகிறான்: 'அவ்வாறில்லை. நசுக்கப்படுகின்ற இடத்தில் அவன் எறியப்படுவான். நசுக்கப்படும் இடம் என்ன*

வென்று உமக்குத் தெரியுமா? அது கொழுந்துவிட்டு எரியும் அல்லாஹ்வின் நெருப்பாகும். அது இதயங்கள்வரை எட்டிப்பார்க்கும். அது அவர்களை மூடியிருக்கும். உயரமான தூண்களில் அவர்கள் கட்டப்பட்டிருப்பார்கள். (4-9)'

❖ ❖ ❖

அத்தியாயம் 105

# அல்ஃபீல்

(யானை)

*ஹபஷிகள் கஅபாவைத் தகர்ப்பதற்காக, அங்கு நடைபெறும் வணக்க வழிபாட்டைத் தடுப்பதற்காகப் படையெடுத்து வந்தார்கள். தங்கள் வீடுகளிலிருந்து அல்லாஹ் கூறியதுபோன்று வெளிப்பட்டு வந்தார்கள். 'ஆணவத்துடனும் பிற மக்களுக்குக் காட்டுவதற்காகவும் தம் வீடுகளி லிருந்து புறப்பட்டு அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களைத் தடுத்துக்கொண்டிருப்பவர்களைப் போன்று ... (8:47)'*

*தங்களின் படைகளோடு யானைப் படையையும் சேர்த்துக்கொண்டார் கள். அவர்களை எதிர்க்க முடியாது என்பதை மக்காவாசிகள் உணர்ந்து கொண்டார்கள். இறையில்லத்தை விட்டுவிட்டு மலை உச்சிகளில் தஞ்ச மடைந்தார்கள்.*

*ஹபஷாவின் கிறிஸ்தவர்கள் கஅபாவைத் தகர்க்கும் விசயத்தில் தவறிழைத்தார்கள். அவர்கள் தங்கள் சர்ச்சுகளில் சடங்குகள் நடத்து வதுபோன்று அறபுகளும் தங்களின் கஅபாவில் சடங்குகள் நிறைவேற்று வதற்கு அவர்கள் விட்டிருந்தால் அதனால் அவர்களுக்கு என்ன இழப்பு ஏற்பட்டிருக்கும்?*

*இந்த விசயத்தில் ஹபஷிகள் கூறும் எந்தக் காரணமும் ஏற்றுக்கொள் ளப்பட மாட்டாது.*

*இந்தப் போர் மோசமான விளைவைச் சந்தித்தது. பறவைக் கூட்டங்கள் கற்களைக் கொண்டு அவர்களைத் தாக்கின. குர்ஆனிலிருந்து, அந்தக் கற்கள் லூத்தின் சமூகத்தாருக்கு எறியப்பட்டதுபோன்ற ஒரு வகையான கற்கள் என்பது தெரியவருகிறது. அந்தக் கற்கள் லூத்தின் சமூகத்தார் வாழ்ந்த நகரத்தைத் தலைகீழாகப் புரட்டிவிட்டன.*

*வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள், 'இந்தக் கற்கள் தாக்க வந்தவர்களை அழித்தன. அவர்களின் தலைவனான அப்றஹா காயம்பட்டு ஸன்ஆவுக்குத் திரும்பும் வழியில் மரணமடைந்தான்.'*

*இதுகுறித்து அல்லாஹ் கூறுகிறான்:*

*யானைப் படையினரை உம் இறைவன் என்ன செய்தான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவர்களின் சூழ்ச்சியை அவன் முறியடிக்கவில்லையா? அவர்களின் மீது பறவைகளைக் கூட்டம் கூட்டமாக அனுப்பினான். அவை அவர்களின் மீது சுடப்பட்ட களிமண் கற்களை எறிந்தன.* (1-4)

*அறிவிப்பாளர்கள் கூறுகிறார்கள், இறுதித் தூதர் இந்த ஆண்டில்தான் பிறந்தார். அல்லாஹ் மக்காவைப் பாதுகாத்து அமைதியான நகரமாக அதனை ஆக்கினான். அது, மக்காவிலிருந்து உலகின் பல்வேறு திசைகள்வரை இஸ்லாம் வெளிப்படுவதற்கான முன்னேற்பாடாக இருந்தது. அடுத்த அத்தியாயமும் இதனையே சுட்டிக்காட்டுகிறது.*

❖ ❖ ❖

அத்தியாயம் 106

# குறைஷ்

(குறைஷிக் குலம்)

*குறைஷிகள் பழக்கப்பட்டுவிட வேண்டும் என்பதற்காக. (அதாவது) குளிர்கால, கோடைக்காலப் பயணங்களில் அவர்கள் பழக்கப்பட்டுவிட வேண்டும் என்பதற்காக.* (1,2)

*ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் மத்தியில் அறபுத் தீபகற்பம் அமைந்துள்ளது. அவர்கள் இரு கண்டங்களுக்கு மத்தியில் வியாபாரம் செய்யும் சமூகமாக இருந்தார்கள். அவர்கள் ரோம், ஷாம், வட இந்தியா ஆகிய பகுதிகளோடு வியாபாரத் தொடர்பு வைத்திருந்தார்கள். அவர்களின் வியாபாரக் குழுக்கள் இவர்களுக்கும் அவர்களுக்கும் மத்தியில்தான் சுற்றிக்கொண்டிருந்தன.*

*அவர்கள் பயனடையும்படி இந்த அமைப்பை ஏற்படுத்திய அல்லாஹ் இதனைக் கொண்டு அறபுகளிடம் கிருபை பாராட்டுகிறான்.*

*ஆகவே, அவர்கள் இந்த இல்லத்தின் இறைவனையே வணங்கட்டும். அவனே அவர்களுக்குப் பசியின்போது உணவளித்தான்; பயத்திலிருந்து அபயமளித்தான்.* (3,4)

*இந்த வார்த்தைகள் அங்கு அமைதியும் அச்சமற்ற சூழலும் இருந்ததை உணர்த்துகின்றன. இந்த இரண்டும் அரசியல் சுதந்திரத்துக்கும் உணவுப் பொருள்களின் பெருக்கத்துக்கும் இலகுவான கொடுக்கல் வாங்கலுக்கும் மிக அவசியமான கூறுகளாகும். இவைதான் பொருளாதாரச் சுதந்திரத்துக்கான அடித்தளங்களாகவும் இருக்கின்றன.*

*நாம் ஒரு விசயத்தை உறுதியாகக் கூற முடியும். இதன் மூலம் அறபுகள் மற்றவர்களைவிட ஆளுமைமிக்கவர்களாகவும் சுதந்திரமானவர்களாக*

வும் இருந்தார்கள். இதனால்தான் இந்தத் தூதுத்துவத்துக்காக அறபுகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சில அறிஞர்கள் இந்த அத்தியாயத்தை அல்ஃபீல் அத்தியாயத்தின் தொடர்ச்சியாக எண்ணுகிறார்கள். அவையிரண்டையும் ஒரே அத்தியாய மாகக் கருதுகிறார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 107

# அல்மாஊன்

(அற்பப் பொருள்கள்)

*தீர்ப்புநாளை மறுப்பவனை நீர் பார்த்தீரா? அவன்தான் அநாதை களை விரட்டுகிறான். அவன் ஏழைக்கு உணவளிக்கத் தூண்டு வதுமில்லை.* (1-3)

இந்த மார்க்கத்துக்குச் சொந்தக்காரர்கள் மற்றவர்களின் தேவைகளை அறிந்துகொள்கிறார்கள். அவற்றை நிறைவேற்றுவதில் விரைந்து செயல் படுகிறார்கள். இந்த மார்க்கம் பலவீனமானவருடன் அவரைப் பலப் படுத்தும்வரை, ஏழையான மனிதருடன் அவரைத் தன்னிறைவான மனிதராக மாற்றும்வரை, அனாதையான சிறுவனுடன் அவன் பெரிய வனாகும் வரை உடன் இருக்கிறது. மார்க்கத்தின் பக்கம் தங்களை இணைத்துக் கொண்ட சிலர் இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் சோம்பேறித்தனம் செய்தார்கள். விளைவாக, அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நிராகரித்து தத்துவங்கள் தோன்றின. அவற்றுள் இறுதியானது கம்யூனிசம்.

உலகின் பாதி நாடுகளை அது ஆட்சி செய்ய ஆற்றல் பெற்றிருந்தது அல்லது மீதமுள்ள பாதி நாடுகளிலும் தாக்கம் செலுத்தும் வலிமையைப் பெற்றிருந்தது. மார்க்கத்துக்குச் சொந்தக்காரர்கள், குறிப்பாக முஸ்லிம் கள், தங்கள் மார்க்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தால், மிகச் சிறந்த முறையில் அவர்கள் செயல்பட்டிருந்தால் இந்த நாத்திகம் வெளிப்பட்டி ருக்காது.

ஈமான் என்பது கொடைத்தன்மையின் உடன்பிறந்ததுதான். சுயநல மும் கடும்போக்கும் இணைவைப்பின் உடன்பிறந்தவையாகும். அல் லாஹ் கூறுகிறான், 'தீர்ப்புநாளை மறுப்பவனை நீர் பார்த்தீரா? அவன் தான் அநாதைகளை விரட்டுகிறான். அவன் ஏழைக்கு உணவளிக்கத்

தூண்டுவதுமில்லை. (107:1-3)' இந்த அத்தியாயம் வடிவ ரீதியான வணக்க வழிபாட்டை மறுக்கிறது. தொழுகையைக் கடைப்பிடிப்பதைப் போல, உள்ளச்சத்துடன் அதனை நிறைவேற்றுவதைப் போலத் தேவையுடையோருக்கு உதவிசெய்வதும் ஈமானுக்கான நிபந்தனை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. தேவையுடையோருக்கு அற்பப் பொருளைக்கூட வழங்காதவர்களை அது எச்சரிக்கிறது.

❖ ❖ ❖

அத்தியாயம் 108

# அல்கவ்ஸர்

## (மிகுந்த நற்பேறுகள்)

*நான் இந்த அத்தியாயத்தைப் படிக்கும்போது அது ஒரு வரிக்கு அதிக மானதாக இருப்பதாக உணர்வதில்லை. அது விரைவாகக் கூறப்பட்ட நற்செய்தியாக உணர்கிறேன். நபியின் ஆண்பிள்ளைகள் அனைவரும் மரணமடைந்துவிட்டார்கள் என்பது அறியப்பட்ட ஒன்றுதான். பெண் பிள்ளைகளைத் தவிர வேறு யாரும் மீதமிருக்கவில்லை.*

*ஜாஹிலிய்யக் காலத்தில் இது ஒரு குறைபாடாகக் கருதப்பட்டது. ஏனெனில், ஆண்பிள்ளைதான் தந்தையின் பக்கம் தன்னை இணைப் பான் என்றும் தந்தையின் புகழை உயர்த்துவான் என்றும் கருதப்பட்டது. மூடர்கள் ஆண்பிள்ளையைப் பெறாதவர்களை வேரறுந்தவர்கள் என்று அழைத்தார்கள்.*

*இந்த அத்தியாயம் இறங்கி, அல்லாஹ் தன் தூதருக்கு விசாலமான கொடையை வழங்கியுள்ளான் என்பதையும் அவரைப் போன்று மனி தர்களில் யாரும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்தியது. அவருடைய உள்ளத்தில் அவன் குர்ஆனை அருளியுள்ளான். அவரை உலக மக்கள் அனைவருக்குமான தூதராகத் தேர்ந்தெடுத்துள்ளான். பூமியில் உள்ள வர்களும் வானத்தில் உள்ளவர்களும் அவரது பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கிறார்கள். அவரது பெயர் உச்சரிக்கப்படாமல் பூமியில் ஒரு மணி நேரம்கூடக் கடப்பதில்லை என்று நான் கருதுகிறேன். வான வர்களோ மனிதர்களோ அவர்மீது ஸலவாத் சொல்லிக் கொண்டே இருக் கிறார்கள்.*

*முஹம்மது அல்லாஹ்வின் படைப்புகளில் அவனுடைய அருளாலும் கண்ணியத்தாலும் மிக மேன்மையானவர். அவர் ஆதமின் மக்களுக்குத் தலைவராக இருக்கிறார்; முன்னோர்களுக்கும் பின்னோர்களுக்கும் வழி காட்டியாக இருக்கிறார்.*

'நாம் உமக்கு ஏராளமான நன்மைகளை வழங்கியுள்ளோம். ஆகவே, உம் இறைவனுக்காகத் தொழுது பலி கொடுப்பீராக. (1,2)' இங்கு தொழுகை என்பது பெருநாள் தொழுகையைக் குறிக்கிறது. தொழுகைக்குப் பிறகே பலிப்பிராணிகள் அறுக்கப்பட்டு ஏழைகளுக்கு பங்கிடப்படுகின்றன. பலிப்பிராணிகளில் ஒட்டகம் ஒன்றாகும்.

பின்னர் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்: 'நிச்சயமாக உம் பகைவனே வேரறுந்தவன். (3)' உம்மை வெறுப்பவன்தான் எந்த அடையாளமும் புகழும் அற்றவன். ஆனால் நீரோ அர்ஷைச் சுற்றித் தங்கள் இறைவனைப் புகழ்ந்துகொண்டிருக்கும் வானவர்களுடன் பங்குபெறுகிறீர். நீர் அல்லாஹ்வின் கண்ணியத்தைப் போற்றுகிறீர். அல்லாஹ் உம்மைப் புகழக்கூடியவராக ஆக்கியுள்ளான். உம்மைத் தவிர வேறு யாரும் இந்த நிலையை அடைய முடியாது.

❖ ❖ ❖

அத்தியாயம் 109

# அல்காஃபிறூன்

(நிராகரிப்பாளர்கள்)

*'நீர் கூறும், நிராகரிப்பாளர்களே, நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்க மாட்டேன். நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். (1-3)'* இங்கு நிறுவப்படும் கருத்து வேறொரு அத்தியாயத்திலும் நிறுவப்படுகிறது:

> *வேதம் வழங்கப்பட்டோரிடம் நீர் அனைத்து விதமான ஆதாரங் களைக் கொண்டுவந்தாலும் அவர்கள் உமது கிப்லாவை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நீரும் அவர்களின் கிப்லாவை பின்பற்று பவராக இல்லை. அவர்களிலேயே ஒருவர் மற்றவருடைய கிப் லாவை ஏற்றுக்கொள்பவராக இல்லை.* (2:145)

இந்த உலகில் காணப்படும் கொள்கைகள் அனைத்தையும் ஒன்றி ணைப்பது சாத்தியமற்ற ஒன்றாகும். பல மதங்களை, கொள்கைகளை ஒத்துக்கொண்டு மதிநுட்பத்தோடு செயல்படுவதுதான் நமக்குச் சிறந்தது.

திருக்குர்ஆன் ஹூது என்ற அத்தியாயத்தில் மனித வரலாற்றையும் நம்பிக்கையாளர்களுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் மத்தியிலான மோத லையும் சுருக்கமாக எடுத்துரைத்தபிறகு கூறுகிறது:

அ. *உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான். அவர்கள் எப்போதும் முரண் பட்டுக் கொண்டே இருப்பார்கள்.* (11:118)

ஆ. *ஆயினும், உம் இறைவன் கருணைபுரிந்தவர்களைத் தவிர.* (11:119)

முஸ்லிம்களாகிய நாங்கள் பிற மதங்களை, கொள்கைகளை அழிப்ப தற்கு முயல மாட்டோம். இஸ்லாம் குழப்பத்தையும் வரம்புமீறலையும்

தடுப்பதற்காக மட்டுமே போர்புரிந்தது என்பதில் ஆய்வாளர்கள் ஒரு மித்த கருத்து கொண்டுள்ளார்கள். கொள்கையைத் திணிப்பதற்காகச் செய்யப்படும் போர் ஷைத்தான்களின் தூண்டுதல்களில் ஒன்றாகும். அதனால் காழ்ப்பையும் வெறுப்பையும் தவிர வேறெந்த விளைவும் ஏற்படப்போவதில்லை. ஆகவேதான் இந்த அத்தியாயத்தில் மீண்டும் கூறப்பட்டுள்ளது: ‘நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவன் அல்லன். நான் வணங்குபவனை நீங்கள் வணங்கப் போவதில்லை. உங்களுக்கு உங்கள் மார்க்கம்; எனக்கு எனது மார்க்கம். (109:4-6)’ இந்த அத்தியாயம் பிற நாடுகளுடனான நம்முடைய தொடர்புக்கு அடிப் படையாகும். நாம் பல மதங்களின் இருப்பை ஏற்றுக்கொள்கிறோம். அழகிய விவாதத்துக்கும் சாந்தமான உரையாடலுக்குமான களத்தை ஏற்படுத்தவே நாம் விரும்புகிறோம்.

ஆனாலும் சில நாடுகள் இஸ்லாத்துக்கு எதிராகக் கடுமையான வெறுப் பைக் கொண்டுள்ளன என்பதையும் நான் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

ஆகவே இந்தத் தீய உணர்வுகள் மறையும்வரை ஒப்பந்தம் நிறை வேறாது என்பதைத் தெளிவாக அறிவிக்க வேண்டியதும் அவசியமாகும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் பரப்பவும் தன் சட்டங்களைச் செயல்படுத்தவும் இஸ்லாத்துக்குப் பரிபூரணமான உரிமை வழங்கப்பட வேண்டும்.

ஆக்கிரமிப்பாளர்கள் இதனைப் புரிந்துகொள்வார்களா?

❖ ❖ ❖

அத்தியாயம் 110

# அந்நஸ்ர்

(உதவி)

*அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வரும்போது, அவனுடைய மார்க்கத்தில் கூட்டம்கூட்டமாக மக்கள் நுழைவதை நீர் காண்பீர்.* (1,2)

*இது நபியவர்களின் இறுதிக் காலகட்டத்தில் அருளப்பட்ட அத்தியாயமாகும். இந்த அத்தியாயத்திலிருந்து நபியவர்களின் மரணம் நெருங்கிவிட்டது - இப்படித்தான் புத்திசாலிகளான நபித்தோழர்கள் புரிந்துகொண்டார்கள் - என்பது தெரியவருகிறது. இந்த உலகத்தை விட்டு நீங்கள் விடைபெற்றுச் செல்லப்போகிறீர்கள் என்பதையும் அதற்காகத் தஸ்பீஹ், பாவமன்னிப்புக் கோரிக்கை ஆகியவற்றைக் கொண்டு தயார்படுத்திக்கொள்ளும்படியும் நபியவர்களுக்கு அது உணர்த்துகிறது.*

*சிலைகள் தகர்க்கப்பட்டுச் சிலை வழிபாட்டாளர்களின் அதிகாரம் அகற்றப்பட்டபிறகு உதவி வந்தது. இந்தப் பிரபஞ்சம் இரவும் பகலும் அல்லாஹ் ஒருவனே என்று முழங்குபவர்களின் முழக்கத்தால் நிரம்பியது. வணங்கப்பட்ட சிலைகள் பாதையைச் சீரமைப்பதற்கும் கட்டடம் கட்டுவதற்கும் பயன்படுத்தப்படத் தொடங்கின.*

*அசத்தியத்தை அழித்து, அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்து முஹம்மது தம்முடைய பணியைச் சிறந்த முறையில் நிறைவேற்றினார். தம்முடைய நீண்ட நெடிய போராட்டத்துக்காக அவர் தம் இறைவனிடம் கூலி பெறுவதுதான் மிச்சமிருக்கிறது. யாரும் களைப்படையாத அளவு களைப்படைந்துவிட்டார். தம் கால்கள் வீங்கும் அளவுக்கு இரவில் எழுந்து தொழுது தம் இறைவனிடம் உரையாடினார். தம் சமூகத்துக்காகப் போர்க் கவசத்தை அணிந்து காயமுறவும் செய்தார். மனிதர்கள் அவரை இழிவுபடுத்தியது அவரைக் கவலையில் ஆழ்த்தியது. பின்னர்*

கூறினார், ‘அல்லாஹ்வே, நீ என்மீது எந்தக் கோபமும் கொள்ளவில்லை யெனில் நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன்.’

அந்த வெற்றியை அவர் அனுபவிக்கும் பொருட்டு அவருடைய வாழ்நாள் ஏன் அதிகமாக இருந்திருக்கக் கூடாது என்று நீங்கள் கேட்கலாம்.

இந்த உலகத்தில் உயர்வை விரும்புபவன்தான் வெற்றியைக் கொண்டு அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பான். அவர் தம்முடைய இறுதிக் காலத்தில் தம் வீட்டாருக்காக யூத வியாபாரியிடமிருந்து உணவுப் பொருளை வேண்டினார். ஆனால் அந்த யூதனோ அடமானமின்றி எதை யும் தர மாட்டேன் என்று கூறிவிட்டான். அந்தச் சமயத்தில் நபியவர்கள் ஆட்சியின் உச்சத்தில் இருந்தார்கள். அவரது படைக்கு முன்னால் பெரும் அதிகாரங்கள் எல்லாம் மண்டியிட்டுக் கிடந்தன. ரோமானிய அரசு அறபுத் தீபகற்பத்தில் தன் அதிகாரத்தை இழந்திருந்தது. யூதக் குடி யிருப்புகள் அனைத்தும் நபியவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தன.

நபியவர்கள் தம்மைப் பின்பற்றும் செல்வந்தர்களில் ஒருவரிடம் தம் உணவுக்கான தொகையைக் கூறியிருந்தால் அவர் வழங்கியிருப்பார். அவர் இதனை இவ்வுலக, மறுவுலக கண்ணியமாகக் கருதியிருப்பார். ஆனால், தூதர் அப்படிச் செய்யவில்லை. அந்த யூதனிடம் கூறினார்கள், ‘பூமியிலும் வானத்திலும் நான் நம்பிக்கைக்குரியவன். நீ விரும்பும் அடமானத்தைப் பெற்றுக்கொள்.’ தம்முடைய போர்க் கவசத்தை அவனிடம் அளித்தார்கள். நபியவர்கள் இறந்தபோது அவர்களின் போர்க் கவசம் ஒரு வேளை உணவுக்காக ஒரு யூதனிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது.

இந்த உலகத்தின் மக்களிடமிருந்து முஹம்மது எதைப் பெற்றார்?

பின்னர் வஹீ வந்து, இங்கு இருப்பது அல்லது அல்லாஹ்விடம் செல்வது, இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு நபியவர்களுக்குக் கட்டளையிட்டது. அவர்கள் உயர்ந்தோனிடம் செல்வதையே விரும்பி னார்கள்.

முஹம்மது தம் இறைவனைச் சந்தித்தார். அவனுடைய தோழமையில் இன்பம் கொண்டார். இப்போது அவர் முந்தைய தூதர்களுடனும் நெருக்க மான வானவர்களுடனும் இருப்பார். ‘வலிமைமிக்க அரசனுக்கு அருகில், சத்தியத்தின் இருக்கையில் அவர்கள் அமர்ந்திருப்பார்கள். (54:55)’

❖ ❖ ❖

அத்தியாயம் 111

# தப்பத்

(கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு)

*அபூலஹபின் கைகள் முறிந்துவிடட்டும்; அவனும் நாசமாகட்டும். அவனது செல்வமோ அவன் சம்பாதித்தவையோ அவனுக்குப் பயனளிக்கவில்லை. (1,2)*

*இது அபூலஹபுக்கு விடப்பட்ட சாபமாகும். அல்லாஹ் இந்த சாபத் துக்குப் பதிலளித்தான். அவனுடைய பெரும் செல்வமோ பதவியோ அவனுக்கு எந்தப் பயனையும் அளிக்கவில்லை.*

*அபூலஹபு நபியவர்களின் தந்தையின் உடன்பிறந்த சகோதரனாக இருந்தான். ஆனாலும் அவன் நபியவர்களுக்கு அதிகம் தீங்கிழைப்ப வனாக, அவர்களை நிராகரிப்பவனாக இருந்தான். அறிவிப்பாளர்கள் கூறுகிறார்கள்: 'நபியவர்கள் ஸஃபா மலையின் மீது ஏறினார்கள். பஹர் குடும்பத்தாரே, அதீ குடும்பத்தாரே, என்று அழைத்தார்கள். அனைவரும் ஒன்றுதிரண்டார்கள். வராதவர்கள் செய்தியை அறிந்துகொண்டு வருவ தற்காகத் தங்களின் பிரதிநிதியை அனுப்பிவைத்தார்கள். அபூலஹபும் குறைஷிகளும் வந்தார்கள். அப்போது நபியவர்கள் கூறினார்கள், நான் இந்தப் பள்ளத்தாக்குக்குப் பின்னாலிருந்து உங்களைத் தாக்குவதற்காக ஒரு படை வருகிறது என்று கூறினால் நீங்கள் நம்புவீர்களா? அவர்கள் கூறினார்கள், ஆம் நாங்கள் நம்புவோம். உங்களிடமிருந்து உண்மையைத் தவிர வேறு எதையும் நாங்கள் கண்டதில்லை. பின்னர் நபியவர்கள் கூறினார்கள், நான் உங்களுக்கு முன்னால் கடுமையான வேதனையைக் குறித்து எச்சரிப்பவனாக இருக்கிறேன். அல்லாஹ் என்னைத் தூதராக அனுப்பியுள்ளான். அப்போது அபூலஹபு கூறினான், இந்த நாள் முழுவதும் உமக்கு அழிவு ஏற்படட்டும். இதற்காகவா எம்மை அழைத்தீர்?'*

*அப்போதுதான் இந்த அத்தியாயம் அருளப்பட்டது.*

*அவன் கற்களைக் கொண்டு நபியவர்களின் மீது எறிந்தான். அதனால் நபியவர்களின் தோள்புஜத்திலிருந்து இரத்தம் வழிந்தது என்றும் ஓர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்தி சரியானதாக இருந்தாலும் அதற்கு மாறாக இருந்தாலும் அபூலஹபு நபியவர்களுடன் மிகக் கடுமை யாக நடந்துகொண்டவன். மரணிக்கும்வரை அவன் இவ்வாறுதான் இருந்தான்.*

*பகைமையைத் தன் பிள்ளைகள்வரை அவன் பரப்பினான். நபியவர் களின் பெண்மக்களை மணமுடித்துக்கொண்ட தன் மகன்களை விவா கரத்து செய்யச் செய்தான்.*

*அவனுடைய மனைவியும் நபியவர்களிடம் பகைமை பாராட்டினாள். துர்க்குணம் கொண்ட மோசமான பெண்ணாக அவள் இருந்தாள். நபி யவர்களுக்கு எதிராக வரம்புமீறிப் பேசினாள். நபியவர்கள் அவளது வீட்டைக் கடந்துசெல்லும்போதெல்லாம் திட்டக்கூடியவளாக இருந்தாள்.*

*அபூலஹபின் மனைவி அபூசுஃப்யானின் சகோதரியாவாள்.*

*இஸ்லாத்தின் ஆரம்பக் கட்டத்தில் இந்த அத்தியாயம் அருளப்பட்டது. ‘அபூலஹபின் கைகள் முறிந்துவிடட்டும்; அவனும் நாசமாகட்டும். (1)’ இந்த அத்தியாயத்தைப் பொய்ப்படுத்துவதற்கு அவன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் போதும் என்றிருந்தது. ஆனால், இறுதிவரை இந்த மார்க்கத்தின் எதிரியாகவே நிலைத்திருந்து செத்தான். அவன் விசயத்தில் இந்த வசனம் உண்மையாகியது:*

> *வெகுவிரைவில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் அவன் விழு வான். தலையில் விறகைச் சுமந்துதிரியும் அவனுடைய மனைவியும். அவளது கழுத்திலே முறுக்கேற்றப்பட்ட கயிறுதான் இருக்கும். (3-5)*

*பெரிய குடும்பத்துப் பெண் விறகுகளைச் சுமக்க மாட்டாள். இங்கு விறகு சுமத்தல் என்பது பகைமைத் தீயை மூட்டுவதற்காக அவள் செய்த காரியங்களைக் குறிக்கும். கோள்மூட்டக்கூடியவர்களும் குழப்பம் ஏற் படுத்துவோரும் இவ்வாறே செயல்படுகிறார்கள்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 112

# அல்இஃக்லாஸ்

(தூய ஓரிறைக் கொள்கை)

*படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவன் ஒருவனே. அவன் இருவரோ மூவரோ அல்ல. அவனுக்கு மனைவியோ பிள்ளையோ கிடையாது. அவன் தன் பக்கம் இணைத்துள்ள உயர்வான பண்புகள் அவனைத் தவிர மற்றவற்றைப் பூஜ்யமாக ஆக்கிவிடுகின்றன. அவற்றைக் குறித்து பேசுவதையும் வீணான ஒன்றாக ஆக்கிவிடுகின்றன. அல்லாஹ் கூறுகிறான், 'இரு தெய்வங்களை ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள். அவன் ஒரே இறைவன்தான். ஆகவே, நீங்கள் என்னையே அஞ்சுங்கள்.* (16:51)' *'கடவுள் மூவர் என்று கூறுவதைவிட்டும் விலகிக்கொள்ளுங்கள். இதுவே உங்களுக்குச் சிறந்ததாகும். அல்லாஹ்தான் ஒரே இறைவன். அவன் தனக்கு மகனை ஏற்படுத்திக்கொள்வதைவிட்டும் பரிசுத்தமானவன்.* (4:171)'

*தவ்ஹீதுதான் இஸ்லாத்தின் ஆன்மா, குர்ஆனின் கருப்பொருள். அல்லாஹ் தன் பக்கம் இணைத்துள்ள பண்புகள் அவனைத் தவிர மற்ற யாவரையும் பலனளிக்கவோ தீங்களிக்கவோ சக்தியற்ற அடிமைகளாக ஆக்கிவிடுகின்றன. ஏன் அவை அறைகூவலை ஏற்றுக்கொள்ளவில்லை?*

*தவ்ஹீதை நிலைநிறுத்துவதற்கு நாம் இதற்கு முன்னர் சுட்டிக் காட்டிய அறிவுபூர்வமான ஆதாரங்களையே இப்போதும் சுட்டிக்காட்டு கிறோம்.*

> *அல்லாஹ் எந்த மகனையும் தனக்கென ஏற்படுத்திக்கொள்ள வில்லை. அவனுடன் வேறெந்த இறைவனும் இல்லை. அவ்வாறு இருந்திருந்தால் ஒவ்வொரு இறைவனும் தான் படைத்தவற்றைச் சேர்த்துக்கொண்டு ஒருவருக்கொருவர் தாக்குதல் நடத்தியிருப் பார்கள். அவர்கள் கூறுவதிலிருந்து அல்லாஹ் தூய்மையானவன்.*

அவன் வெளிப்படையானவற்றையும் மறைவானவற்றையும் அறியக் கூடியவன். அவர்களின் இணைவைப்பைவிட்டும் அவன் மிக உயர்ந்தவன். (23:91,92)

வேறொரு அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு தெய்வங்கள் இருந்திருந்தால் அவை அழிந்தே போயிருக்கும். அவர்கள் கூறுவதைவிட்டும் அர்ஷின் அதிபதியாகிய அல்லாஹ் மிகவும் தூய்மையானவன். அவனது செயல்குறித்து அவன் விசாரிக்கப்பட மாட்டான். ஆயினும் அவர்களே விசாரிக்கப்படுவார்கள். (21:22,23)

திரித்துவத்தைக் கொள்கையாகக் கொண்டவர்கள் இறைவன் மூவர் என்று கூறுகிறார்கள். உண்மையில் அவன் ஒரே இறைவன் என்று அவர்கள் கூறினாலும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். அவர்களுக்கு மத்தியில் எந்த முரண்பாடும் கிடையாதாம்!

சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தைக் குறித்து அவர்கள் என்ன கூறுகிறார்கள்? அனைவருமா சிலுவையில் அறையப்பட்டார்கள்? சிறிது காலம்வரை இறைவன் காணாமல்போய்விட்டானா? மகன் சிலுவையில் அறையப்பட்டான் எனில் நிச்சயமாக அவன் இறைவனாக இருக்க முடியாது.

மனிதர்கள் தாங்கள் விரும்பிய கொள்கைகளைத் தேர்ந்தெடுக்கலாம். நாம் ஒருவரின் நம்பிக்கையையும் தடுக்கவில்லை. ஆயினும், நாங்கள் எங்கள் வேதத்துடனும் கொள்கையுடனும் நியாயமாக நடந்துகொள்கிறோம். நாங்கள் எல்லாப் புறங்களிலிருந்தும் அவதூறுகளை எதிர்கொண்ட வண்ணம் இருக்கிறோம்.

இந்த அத்தியாயம் ஒரே வரியில் கூறிவிடுகிறது: 'நீர் கூறும், அல்லாஹ், அவன் ஏகன். அல்லாஹ் தேவையற்றவன். அவனுக்குச் சந்ததியாக யாரும் இல்லை; அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (112:1-4)' இது குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்குச் சமமாகும். ஏனெனில், இது நம்முடைய கொள்கையைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது.

அல்லாஹ், அவனைப் போன்று எதுவும் இல்லை. அவனுக்கு இணையாக யாரும் இல்லை. அவனுக்குத் தந்தையோ மகனோ இருப்பது சாத்தியமற்றது. அவன் தேவையற்றவன். வானங்களில் உள்ளவர்களும் பூமியில் உள்ளவர்களும் அவனையே நாடி நிற்கிறார்கள். அவனைத் தவிர மற்றவர்களிடம் என்ன அதிகாரம் இருக்கிறது?

*இந்த உலகத்தின் ஒழுங்கமைப்பு பல கடவுள்களை ஏற்றுக்கொள் ளாது. சூரியனுக்கு ஒரு கடவுள், சந்திரனுக்கு ஒரு கடவுள், பூமிக்கு ஒரு கடவுள், மனிதர்களுக்கு ஒரு கடவுள், தாவரங்களுக்கு ஒரு கடவுள், ஆப்பிரிக்காவில் இருப்பவர்களுக்கு ஒரு கடவுள், ஐரோப்பியர்களுக்கு ஒரு கடவுள் இருப்பதாக எண்ணுவது வடிகட்டிய மடமைத்தனமாகும். இந்த உலகத்தின் அமைப்பு ஒரே நாட்டத்தால், ஒரே ஆற்றலால் கட்டுப் படுத்தப்படுகிறது. உயிரினங்களின் வயிற்றுப் பகுதிகளை ஆட்சிசெய் பவன்தான் ஆகாயத்தில் உள்ள கோள்களையும் ஆட்சிசெய்கிறான். அவன் விதைகளை முளைக்கச்செய்பவன். அவனே நம் உலகில் வெளிச்சத்தை ஏற்படுத்துகிறான்.*

*நாம் சிந்தனைசெய்த பிறகு இவ்வாறு கூறுவதைத் தவிர வேறு எதையும் விரும்ப மாட்டோம்: ‘அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனுக்கு யாதொரு கூட்டாளியும் இல்லை. ஆட்சியதிகார மும் புகழும் அவனுக்கே உரியன. அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுடையவன்.’*

❖ ❖ ❖

அத்தியாயம் 113

# அல்ஃபலக்

(அதிகாலை)

*நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன். அவன் தன்னிடம் பிரார்த்திப்பவர்களுக்குப் பதிலளிப்பான். தன்னிடம் பாதுகாவல் கோரு பவர்களுக்குப் பாதுகாவலளிப்பான். இறுதியாக வந்துள்ள இந்த இரண்டு அத்தியாயங்களும் பல வகையான தீங்குகளிலிருந்து நாம் எவ்வாறு பாதுகாவல் தேட வேண்டும் என்பதை நமக்குக் கற்றுத் தருகிறது. ஏனெனில், வாழ்க்கை தீங்குகளால் சூழப்பட்டது. அல்லாஹ் கூறுகிறான்: 'நன்மையையும் தீமையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். (21:35)' 'அவர்கள் மீள வேண்டும் என்பதற்காக நாம் அவர்களை நல்ல வற்றாலும் தீயவற்றாலும் சோதித்தோம். (7:168)' அல்ஃபலக், அந்நாஸ் என்ற இரண்டு அத்தியாயங்களும் மனிதர்களைப் பாதுகாக்கும் வலிமை யான கோட்டைகளாக இருக்கின்றன.*

*அல்ஃபலக் என்பது அதிகாலையை அல்லது இருளைக் கிழித்துக் கொண்டு வரக்கூடிய வெளிச்சமாகும். கிருமிகள், கொடிய விலங்குகள், மனிதர்கள் எனத் தீங்கின் மூலங்கள் ஏராளமானவை.*

'இருள் படர்ந்துவிடும்போது.' *இரவு வந்துவிட்டால் இருள் படர்ந்து விடுகிறது. திருட்டும் விபச்சாரமும் அநியாயமும் கொலையும் செய்வ தற்கு உகந்த நேரமாகவே இரவு இருந்துவருகிறது.*

*முடிச்சுகளில் மந்திரித்து ஊதுபவர்கள் சூனியக்காரப் பெண்கள் என்று கூறப்படுகிறது. சில அறிஞர்கள் சூனியம் உண்மை என்று கூறுகிறார்கள். மனித, ஜின்னு இனத்தில் உள்ள ஷைத்தான்கள் அதில் ஈடுபடுகிறார்கள். பாதுகாவல் தேடுவது அதனை முறித்துவிடும்.*

இப்னு கஸ்ம், 'சூனியம் உண்மை இல்லை. *சிஹ்ர் என்ற வார்த்தை* பொய்யையும் பித்தலாட்டத்தையுமே குறிக்கும்' என்கிறார். இந்த

விசயத்தில் பொதுமக்களிடத்தில் ஏராளமான மூடநம்பிக்கைகள் இருக்கின்றன. அவற்றைவிட்டு எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடப்பட வேண்டிய தீங்குகளில் பொறாமையும் ஒன்றாகும். அது அருட்கொடைகள் அழிய வேண்டும் என்ற ஆசையின் அடிப்படையில் நிலைபெறுகின்ற மோசமான பண்பாகும். பொறாமை மனிதர்களிடையே பரவியுள்ள மோசமான கிருமியாகும்.

கண்திருஷ்டிக்கும் பொறாமை என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அது நன்மையை நோக்கி வீசப்படும் விஷம் தடவிய பார்வையாகும். இந்த விசயத்தில் மக்கள் உண்மைகளோடு ஏராளமான பொய்களையும் கலந்துவிட்டார்கள். பாதுகாவல் தேடுவதால் நம்பிக்கையாளன் மற்றவர்களால் ஏற்படும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படுகிறான்.

❖ ❖ ❖

அத்தியாயம் 114

# அந்நாஸ்

(மனிதர்கள்)

*நீர் கூறும், 'மனிதர்களின் இறைவனிடம், மனிதர்களின் அரசனிடம், மனிதர்களின் வணக்கத்துக்குரியவனிடம் பாதுகாவல் தேடுகிறேன்.'* (1-3)

*இந்த அத்தியாயத்தில் மனித, ஜின்னு வர்க்கத்தில் உள்ள ஷைத்தான்களைவிட்டும், அவர்கள் உள்ளங்களில் ஏற்படுத்தும் ஊசலாட்டங்களைவிட்டும் பாதுகாவல் தேடப்பட்டுள்ளது. ஜின்கள் இந்த விசயத்தில் எப்படிச் செயல்படுகின்றன என்பதை நாம் அறிய மாட்டோம். ஆனாலும் அவை நம்மிடம் கோருவதையும் நம் ஆர்வம் அதன் பக்கம் செல்வதையும் உணர்கிறோம். ஆகவே, நாம் நம்மைப் படைத்த அதிபதியிடம் நம்மைப் பாதுகாக்கும்படி கோருகிறோம். அல்லாஹ்வின் பண்புகள் இங்கு மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டிருப்பது நம் தேவையை ஒத்துக்கொள்வதையும் பேராற்றலுடையவனின் பக்கம் அடைக்கலம் தேடுவதையும் குறிக்கிறது.*

*'மறைந்துகொண்டு ஊசலாட்டங்களை ஏற்படுத்துபவனின் தீங்கிலிருந்து.* (4)' *தீங்கிழைக்கும் பொருட்டு மறைந்து வருகிறான். சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து ஊசலாட்டங்களை ஏற்படுத்துகிறான். அவனிடமிருந்து எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.*

*அல்லாஹ் வேறொரு இடத்தில் கூறுகிறான்:*

*இவ்வாறே நாம் கேடுகெட்ட மனிதர்களையும் ஜின்களையும் ஒவ்வொரு தூதருக்கும் பகைவர்களாக ஆக்கினோம். அவர்கள் ஒருவர் மற்றவரை ஏமாற்றுவதற்காக வஞ்சகமான பேச்சுகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.* (6:113)

*மனித இச்சை என்பது செயலில் அவன் உணரும் இன்பத்தையும் ஜின்னுடைய இச்சை என்பது வழிகெடுப்பதில் அதற்கு இருக்கும் ஆர் வத்தையும் குறிக்கும் என்பது தெரியவருகிறது. இவ்வாறு அவர்கள் ஒருவர் மற்றவரைக் கொண்டு பயனடைகிறார்கள்.*

*ஷைத்தான்களுக்கு நம்மீது எந்த அதிகாரமும் இல்லை. ஏமாற்றுதல், வழிதவறச் செய்தல் தவிர வேறு எதற்கும் அவை சக்திபெற மாட்டா. யார் அவற்றின் ஊசலாட்டங்களுக்குப் பதிலளித்துவிடுகிறாரோ அவ ருக்கு எந்தச் சாக்குப்போக்கும் கிடையாது. அதுவும் குறிப்பாக, இந்த எச்சரிக்கைக்குப் பிறகு.*

*இந்த அத்தியாயம் மனதின் ஊசலாட்டங்களால் ஏற்படும் ஆபத்து குறித்தும் அதிலிருந்து விடுபட வேண்டிய அவசியம்குறித்தும் பேசுகிறது. அல்லாஹ்வை நினைவுகூரக்கூடிய, அவனுக்காகப் பொறுமையைக் கடைப்பிடிக்கக்கூடிய நம்பிக்கையாளன் தன் மனதில் ஷைத்தான் ஏற் படுத்தும் ஊசலாட்டங்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றவனாக வாழ் கிறான்.*

❖ ❖ ❖

ஷெய்க் முஹம்மது அல்கஸ்ஸாலி எகிப்தின் அல் புஹைராவில் ஹிஜ்ரி 1335 துல்ஹிஜ்ஜா ஐந்தில் (22 செப்டம்பர் 1917) பிறந்து, ஷவ்வால் 19, 1416 இல் (9 மார்ச் 1996) இறையடி சேர்ந்தார். மக்காவின் உம்ம் அல் குரா பல்கலைக்கழகம், கதார் பல்கலைக்கழகம், அல்ஜீரியாவின் அல் அமீர் அப்த் அல் காதிர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்பித்தார். தமது அந்திம காலத்தில் கெய்ரோவில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் அறிவியல் குழுமத்துத் தலைவராக அரும் பணியாற்றினார். ஷெய்க் அல்கஸ்ஸாலியின் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களுள் ஏராளமானவை பல்வேறு மொழிகளில் வெளியாகியுள்ளன. எகிப்திய குடியரசின் அதி மேதகு கௌரவ விருது (1988), மன்னர் பைசல் விருது(1989), பாகிஸ்தானின் அரச கௌரவ விருது முதலியவற்றால் அவர் கௌரவிக்கப் பட்டார்.

Published by
Fuzin Texts

ISBN 978-955-8398-68-5

9789558398685

INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT